உடையார்

பாகம்-2



பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்

உடையார்

(இரண்டாம் பாகம்)

பாலகுமாரன்

மின்னூலாக்கம் : செல்லா

விசா பப்ளிகேஷன்ஸ்
புதிய எண்: 16. பழைய எண் : 55
வெங்கட்நாராயணா ரோடு,
தி. நகர், சென்னை - 600 017
Phone : 434 2899 - 432 7696
Fax - 91-44-4341559

முதற் பதிப்பு ஜூலை, 2002
இரண்டாம் பதிப்பு ஜனவரி, 2005
மூன்றாம் பதிப்பு ஜனவரி, 2007
நான்காம் பதிப்பு ஆகஸ்ட், 2008
ஐந்தாம் பதிப்பு டிசம்பர், 2009

உரிமை ஆசிரியருக்கு

மாமன்னன் இராஜராஜ சோழரின் வரலாறு

விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

UDAIYAAR - PART-II (HISTORY OF CHOLAS)

By : BALAKUMARAN

Forth Edition	August, 2008
Fifth Edition	December, 2009
No of Pages	464
Size	Demy
Paper used	Natural Shade 70 G.S.M. Maplitho
Price	235

Available at :
VISA PUBLICATIONS
55/16, Venkatnarayana Road,
T. Nagar, Chennai - 600 017.
Phone : 24342899, 24327696
thirumagal_thirupathi@yahoo.co.in.

Available at :
THIRUMAGALNILAYAM
55/16, Venkatnarayana Road,
T. Nagar, Chennai - 600 017.
Phone : 24342899, 24327696
Fax : 91-44-24341559

Laser Typeset By Sivaa Graphics, Chennai - 26. Ph 9282152070
Printed by Udayam Offsets, Chennai , Ph 28454808

உடையார் இரண்டாம் பாகத்திற்கான

முன்னுரை

இனிய ஸ்நேகிதங்களுக்கு,

வணக்கம்.

லாழிய நலம்.

சோறுடைத்த சோழநாட்டில் பிறந்தவர்களுக்கெல்லாமே பெரிய கோயில் என்று அழைக்கப்படும் பிரகதீஸ்வரர் கோவில் மீதும், அதைக்கட்டிய மாமன்னன் உடையார் ஸ்ரீ ராஜராஜத் தேவர் மீதும் மிகப்பெரிய மரியாதை இருக்கும். அடிமனதி லிருந்து காதல் பொங்கும். சோழநாட்டில் பிறந்தவர்களுக்கே என்றில்லை, யாரெல்லாம் சரித்திரத்தின் ரசிகர்களோ அவர்களுக்கெல்லாம் பிரமிப்பு ஊட்டக்கூடிய விஷயம்தான் ஸ்ரீ ராஜராஜ தேவரின் சாதனை.

கோயில் கட்டியது மட்டுமல்ல. அவர் நடத்திய அரக பற்றியும், அவர் காலம் பற்றியும் மிகத் தெளிவான தகவல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. சேரர்களைப் பற்றியோ, பாண்டியர்களைப் பற்றியோ கிடைத்த தகவலைவிட ஆயிரம் வருடங்களுக்கு முன்பு நம் மண்ணில் மாவீரனாகத் திகழ்ந்த இந்த மன்னரைப் பற்றிய தகவல்கள் அதிகம் இருக்கின்றன. எவ்வளவு தூரம் எல்லைகளை விஸ்தரித்தார் என்பது வெகு எளிதாகவே தெரியவருகிறது. இவர் மீதும், இவர் கட்டிய கோயில் மீதும் ஆவல் கொண்டு பல சரித்திரப் பேராசிரியர்கள் இவரைப் பற்றி அறிவதிலேயே தங்கள் வாழ்நாளை செல விட்டிருக்கிறார்கள். மறுபடி மறுபடி இவரை யோசித்து கிறங்கிப்போய் உட்கார்ந்திருக்கிறார்கள். அந்தக் கிறக்கத்தில் சிறிதளவு எனக்கும் ஏற்பட்டது.

மிகச்சிறிய லயதிலேயே பிரகதீஸ்வரர் கோயில் அருகே போய் நின்றபோது உடம்பெல்லாம் ஒரு விநோதமான உணர்வு ஏற்பட்டது. முற்பிறவி, பல ஜென்மங்கள் எடுக்கின்ற வாழ்க்கை என்றெல்லாம் அறியும் முன்னரே அத்தகைய ஒரு உணர்வுக்கு நான் ஆட்பட்டேன். இது என்னுடைய இடம். நான் வாழ்ந்த பூமி, நான் இருந்த இடம். என்னை மக்கள் மதித்த இடம் என்றெல்லாம் நான் நினைத்து நெகிழ்ந்திருக்கிறேன்.

உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவரின் லட்சோப லட்சம் வீரர்களில் நானும் ஒருவனாக இருந்திருக்கிறேன். அவரின் அந்தரங்க அதிகாரியாக பணியாற்றியிருக்கிறேன். அந்தண வீரனாக குறுக்கே பூணூலும்; இடுப்பிலே லாளுமாக நின்றிருக் கிறேன். நான் நின்ற இடம் இது. அமர்ந்த இடம் இது என்றெல்லாம் ஒரு பிரமையில் மூழ்கிப் போயிருக்கிறேன். என் வயது ஒத்த சிறுவர்கள் பிரஹதீஸ்வரர் கோயில் ஓடிப்பிடித்து விளையாட நல்ல இடம் என்று நினைத்துக் கொண்டிருக்கையில் நான் இரண்டாம் நுழைவாயிலில் நின்று அந்த விமானத்தையே வியப்போடு பார்த்துக்கொண்டிருப்பேன். இங்கு மிக ஆச்சரிய மான ஒரு விஷயம். அந்த நந்தி என்னைக் கவரவேயில்லை. பிற்பாடு அந்த நந்திக்கும் ஸ்ரீராஜராஜ தேவருக்கும் எந்த சம்மந்தமில்லையென்று தெரிந்து கொண்டேன்.

சேனாதிபதி கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர் பற்றியும், வல்லவரையர் லந்தியத்தேவருடைய பெயர் பொறித்த கல்வெட்டு எங்கிருக்கிறது என்பதையும் நானாகவே கண்டு பிடித்தேன். பித்து பிடித்தது போல் கோயிலை சுற்றிச்சுற்றி வந்திருக்கிறேன்.

பிரம்மராயரின் ஊரான அமண்குடி என்கிற அம்மன்குடிக்கு பலமுறைபோய் வந்திருக்கிறேன். இன்றளவும் அந்த அம்மன்குடி மகாகாளி எங்கள் வீட்டு கூடத்திலே வீற்றிருக்கிறாள். மிகமிக லட்சணமான அந்த சிலையின் படம் என் வீட்டில் இருக்கிறது.

பெரியகோயில் மட்டுமல்ல அமண்குடியும், கருந்தட்டாங் குடியும், கீழ்ப்பழுவூரும், மேலப்பழுவூரும், பட்டிஸ்லரத்து துர்க்கை வீற்றிருக்கின்ற பழையாரை தெருக்களும் சோழன் மேடும், உடையார் குடியும், ராஜேந்திரசோழன் அகமும் நான் பலமுறை சுற்றிலந்த இடம். என்னுடைய இடம், நான் வாழ்ந்த பூமி என்று ஒரு குதூகலத்தோடு வலம்வந்த ஊர்கள் இவை.

இதைப் படிக்கின்ற வாசகர்களுக்கு லேசாக சிரிப்பு இருக்கலாம். பாலகுமாரன் சற்று கிறுக்குப் பிடித்தவன். அதீத கற்பனை வளம் உள்ளவன் என்று கேலி இருக்கலாம். ஆனால், என்னைப்போல, என்னைவிட அதிகம் படித்த அனுபலம்மிக்க சில நண்பர்களும் இதேவித பிரமையில் இருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

என்னுடைய நெருங்கிய நண்பரான திரு. சுந்தர் பரத்வாஜ் அடுக்குமாடி கட்டுமானத் தொழிலில் மிக உயர்ந்த நிலையில் இருப்பவர். பலகோடி ரூபாய் மதிப்புள்ள கட்டிடங்களை நிர்மாணிப்பதில் வல்லவர். கல்வெட்டாய்வாளரான திரு. ராஜவேலு வைதீக பிராமணரான கோவிந்து பிரபல ஜோஸியர் வித்யாதரன் என்று சில நண்பர்கள் எனக்கு உண்டு. அவர்களும் இம்மாதிரியாக தாங்கள் வாழ்ந்த பூமி என்பதாய் அந்தத் தஞ்சை தரணினய, குடந்தை மண்ணை நேசிக்கிறவர்கள்.

விமானத்தைப் பார்த்துவிட்டு இரண்டு னகயும் விரித்து என் அப்பா... என் அப்பா என்று அழுத நண்பரை எனக்குத் தெரியும். அருகேயிருந்தவர்கள் கடவுள் பக்தி என நினைத்துக் கொண்டார்கள்.

இல்லை. அது அரசபக்தி. ஸ்ரீராஜராஜ தேவர்மீது உண்டான காதல்.

இந்த நண்பர்களோடு பலமுறை நான் சோழதேசத்தை கற்றி வந்திருக்கிறேன். மேற்பார்வைக்கு அது கோயில் கோயிலாகப் போகின்ற சிவபக்தியாகத் தெரியும். ஆனால், எங்களுடைய தேடல் எல்லாம் மாமன்னர் ஸ்ரீ ராஜராஜ தேவர் நடமாடிய இடங்கள்.

இந்த முயற்சிக்கு அடிநாதமாய் அஸ்திவாரமாக பேராசிரியர் கல்சி எழுதிய பொன்னியின் செல்வன் இருந்தது. ஆனால், அதையும் தாண்டி ஸ்ரீ நீலகண்ட சாஸ்திரிகளும், திரு. சதாசிவ பண்டாரத்தாரையும், ஸ்ரீ எஸ்.ஆர். பாலகப்பிர மணியனையும் நாங்கள் முழுவதும் படித்து டாக்டர் சேதுராமன் அவர்கள் எழுதிய கட்டுரைகளை விவாதித்து திருச்சிராப் பள்ளியைச் சேர்ந்த கண்மருத்துவர் டாக்டர் கலைக்கோவன் அவர்களின் கட்டுரைகளைப் படித்து, அரியலூர் சரித்திரப் பேராசிரியர் திரு. தியாகராஜன் அவர்கள் ஆய்வுகளை தெரிந்துகொண்டு மாமன்னர் ஸ்ரீ ராஜராஜ தேவர் பற்றிய ஞானத்தை விரிவுபடுத்திக் கொண்டோம்.

நானாவது கதையெழுத வேண்டும் என்கிற கட்டாயத்தில் இருக்கிறவன், அந்த நண்பர்கள் வெறும் ஸ்ரீ ராஜராஜ தேவர் காதலினால் மட்டுமே அவரைப்பற்றி தெரிந்துகொள்ள ஆவலுற்றார்கள். அதை எப்படிக் கதையாக எழுதவேண்டும் என்பதை அவர்கள் எனக்காக விவாதித்தார்கள்.

சரித்திரச் சான்றின் அடிப்படையில் லேசான கற்பனை யோடு கதையை நகர்த்திப் போவதே சரித்திர ஆசிரியர்களின் லழக்கம். இப்படி இருந்திருக்கக்கூடும் என்ற ஒரு அனுமானத்தை வைத்துக் கொண்டு நேரில் பார்த்ததுபோல் சம்பவங்களைச் சொல்வதே எங்களைப் போன்றவர்களின் பணி. சரித்திரத்தைக் குழைத்து மக்களுக்கு மிக எளிதான உணலாகக் கொடுக்கும் ஒரு வழிமுறை இது.

ஆதித்த கரிகாலனை யார் கொன்றார்கள் என்று சரித்திரப் பேராசிரியர்களால் உறுதிப்படுத்த முடியவில்லை. அதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. சான்று இல்லாமல் அவர்கள் எந்த முடிவுக்கும் லருவதில்லை. அந்த இடத்தை எடுத்துக்கொண்டு யாரால், எப்படி, இந்தக் கொலை நிகழ்ந்திருக்கக்கூடும் அதற்கு அந்த சூழ்நிலை என்னலாக அமைந்திருக்கும் என்று கற்பனை செய்வது எழுத்தாளர்களாகிய எங்களுடைய உரிமை.

ஆதித்தகரிகாலன் கொலையில் உத்தமசோழருக்கு பங்கு உண்டு என்றும் சொல்லலாம். இல்லை என்றும் சொல்லலாம். கண்டராதித்தன் மனைவி செம்பியன்மாதேவிக்கு பங்கு உண்டு என்றும் சொல்லலாம். இல்லை என்றும் சொல்லலாம்.

வெறுமே சரித்திர நிகழ்வுகளை கல்லெட்டில் கிடைத்தது மட்டும் சொன்னால் சுவாரசியமாக இராது என்று, ஒரு நிலைப்பாடு எடுத்துக்கொண்டு அந்த அரசியல் சூழ்நிலையை திரும்பத்திரும்ப யோசித்து விலாதித்து இந்த உடையார் நாவல் படைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு உள்ளுணர்வாக நான் வாழ்ந்த பூமி என்கிற பிரமை உதவி செய்திருக்கிறது. இதை பிரமை என்றுதான் சொல்ல லேண்டும். ஏனெனில், நான் வாழ்ந்ததற் கான சரித்திரச் சான்றுகள் கல்வெட்டுகள் எதுவும் இல்லை. ஆனால், மிக பலமாக, கனவிலும் நனவிலும் இந்த எண்ணம் என்னை துரத்துவதை நான் உணர்ந்திருக்கிறேன். அறியாத பருலத்தில் மட்டுமல்ல. அறிந்து தெளிந்து மாமன்னர் ஸ்ரீ ராஜராஜ தேவரை நன்கு தெரிந்தபிறகு கூட இந்த பிரகதீஸ்லர கோயில் வெட்டவெளிக்குள் நுழைகிறபோது மிகப்பெரிய சிலிர்ப்பு ஏற்படும். கனமான மன அழுத்தம் உள்ளே நடக்கும். சோகம் கவ்விக் கொள்ளும்.

இது எல்லா சரித்திர இடத்திலும் நிகழ வேண்டுமல்லலா.

இவ்லை. மதுரை கோவிலிலோ, நாயக்கர் மஹாலிலோ, செஞ்சியிலோ, செயின்ட்-ஜார்ஜ் கோட்டையிலோ,

திருச்சியிலோ, ராமேஸ்வரத்திலோ ஏற்பட்டதேயில்லை. இங்கு மட்டும் ஏன் ஏற்படுகிறது என்ற காரணத்தை என்னால் சரிவர விளக்கமுடியவில்லை. ஒரு ஊகமாகத்தான் இந்த மண்ணில் நான் பிறந்திருக்கக்கூடும் என்று சொல்கிறேன்.

மாமன்னர் உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவரை எரியூட்டிய மண்டபம் நினைவுச்சின்னமாக பாதுகாக்கப்பட்டு பிறகு இயற்கை சீற்றத்தால் இடிந்து விழுந்தபோது பல நாட்கள் உபவாசமிருந்து இராசேந்திர சோழனின் தளபதி ஒருவன் அதை மறுபடியும். நிர்மாணித்திருக்கிறான். அந்தத் தூண் ஒன்றை பார்க்க நேர்ந்தது. அதைத் தழுவிக்கொள்ளத்தான் ஆசை ஏற்பட்டது. என் ஐயனே நீ இத்தூண் அருகேதான் சிதையில் அடுக்கப் பட்டாயா என்று துக்கம் பொங்கியது. பலமுறை பலமணிநேரம் அந்தத் தூணை தடவித்தடவி நானும் நண்பர்களும் இருந்தோம். அந்த ஊருக்கு உடையாளூர் என்று பெயர். இன்னமும் ஸ்ரீ ராஜராஜசோழன் நினைவாக இருக்கின்ற சிவலிங்கம் ஒன்று வாழைத்தோப்பில் சாய்ந்து கிடக்கிறது. இவையிரண்டும் பால்குளத்தம்மன் கோயில் (அமண்குடி) அருகில் உள்ளன.

ஸ்ரீ ராஜராஜத்தேவரின் இரண்டாவது மகள் மாதேவடிகள் பற்றிய கல்வெட்டுள்ள கோவிலும் சிதைந்து போயிருக்கிறது. உள்ளே புகமுடியாதபடி கற்றி புதர்கள் மண்டி யிருக்கின்றன.

ஸ்ரீ ராஜராஜத் தேவருக்காக அவரது மகன் ஸ்ரீ ராஜேந்திரத்தேவர் திலதர்ப்பணம் செய்த இடத்தில், திருவலஞ்சுழி கோயிலில் நாங்கள் வெகுநேரம் அமைதியாக அமர்ந்திருப்போம்.

தன் சிற்றன்னை பஞ்சலன்மாதேவிக்கு மட்டும் ஏன் பள்ளிப்படை எழுப்பினார் ஸ்ரீ ராஜேந்திர தேவர் என்கிற கேள்வி இன்னொரு புதினம் தரும்.

எனக்குத் தெரிந்தவரை உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவர் எங்கெல்லாம் நின்றாரோ, அங்கெல்லாம் நானும் நின்றிருக் கிறேன். எப்பொழுதும் நின்றிருக்கிறேன். இப்பொழுதும் போய் பார்த்து வந்துவிட்டேன் என்று ஒரு எண்ணம் தோன்றுவதுண்டு.

மற்ற கதைகள் எழுதுவதைவிட, இந்த நாவல் எழுதுகிற பொழுது மிகப்பெரிய குதூகலத்தை நான் அடைந்தேன். கதை

எழுதத் துவங்கிய காலத்திலேயே இப்படியொரு ஒரு நாவல் எழுத வேண்டுமென்ற ஒரு எண்ணம் எனக்குள் தோன்றி விட்டது. நல்லதற்கு, கெட்டதற்கெல்லாம் தஞ்சைத் தரணி போகையில் நான் இந்த இடங்களுக்கு சென்றிருக்கிறேன். இதுபற்றியே அதிகம் சிந்தித்திருக்கிறேன். கிட்டத்தட்ட என் இருபத்தைந்து வயதில் ஆரம்பித்து இந்த ஐம்பத்தாறு வயதுவரை முப்பத்தியோரு வருடங்கள் இதற்காக உழைத்திருக்கிறேன்.

மதிப்பிற்குரிய நீலகண்ட சாஸ்திரியார், சதாசிவ பண்டாரத்தார், பேராசிரியர் கல்கி என்று பல ஞானியர் களுடைய வழிகாட்டலும், டாக்டர் நாகசாமி, டாக்டர் கலைக்கோவன், பேராசிரியர் தியாகராஜன் போன்றவர்களின் வழிகாட்டிலும் இந்த எழுத்துக்கு உதவி செய்தன. நண்பர் குடவாயில் பாலசுப்ரமணியம் அவர்கள் இண்டு இடுக்கு விடாமல் தஞ்சைத் தரணியில் பல கோவிவ்களை எனக்குச் கட்டிக்காட்டினார். டாக்டர் நாகசாமி எழுதிய நிசும்ப சூதனியைப்பற்றி அவரே எனக்கு அழைத்துப் போய் விளக்கினார். இது எங்கிருந்திருக்கக்கூடும். எப்படியிருந்திருக்கக் கூடும் என்றெல்லாம் விவாதித்தார்.

ஆயிரம்தளி என்ற இடத்திற்கு அழைத்துப்போனார். தஞ்சையை ஒட்டிய பல்வேறு கோயில்களுக்கு நான் குடவாயில் திரு. பாலசுப்ரமண்யத்தோடு போயிருக்கிறேன்.

மறைந்த கால நிபுண மேதை டாக்டர். சேதுராமருடைய புத்தகங்களும் ஓரிரு முறை அவரோடு பேசியதும் கூட எனக்கு இந்த நாவல் எழுத உதவியிருக்கின்றன.

இந்த நாவலை எழுத ஆரம்பிக்கிறேன் என்றதும் மிகுந்த குதூகலத்தோடு என்னை உற்சாகப்படுத்தி, அடிப்படையான விஷயங்களை தொகுத்துக்கொடுத்து, எனக்காகவே பல புத்தகங்களை படித்து மனதிவ் இருத்திக்கொண்டு என்னோடு விவாதித்த என்னுடைய நண்பர் பேசிட்டி ப்ரமோடர்ஸ் உரிமையாளர் திரு. கந்தர் பரத்வாஜ் அவர்களுக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். அவர் குடும்பமும், என் குடும்பமும் பின்னிப் பிணைந்தவை. இதுவும் ஜென்மாந்திரத்து பந்தம்.

கண் மருத்துவர் சரித்திர ஆய்வாளர் டாக்டர் கலைக்கோவன் அவர்கள் தொடர்ந்து இதயம் பேசுகிறதில் வெளியான இந்தக் கதையைப் படித்துவிட்டு அதிலுள்ள

குறைகளை சுட்டிக்காட்டுவார். புத்தகமாக வரும்போது அந்தக் குறைகளை நான் நீக்கி சரி செய்திருக்கிறேன்.

இரண்டு பாகம் எழுதியும் இந்த உடையார் நாவல் முடிய வில்லை. கோயிலின் அஸ்திவாரமே இன்னும் ஆரம்பிக்கப் படவில்லை. இன்னும் இரண்டு பாகங்கள் எழுதக்கூடிய அளவுக்கு விஷயங்கள் இருக்கின்றன.

இதயம் பேசுகிறது என்று திரு. மணியன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு சரவணா ஸ்டோர்ஸ் என்று திரு. செல்வரத்தினம் அவர்களால் பெயர் மாற்றப்பட்ட இந்த வாரப் பத்திரிகை கிட்டத்தட்ட நூறு அத்தியாயங்களுக்கு மேலாக இந்தத் தொடரை வெளியிட்டது. இது மிகப்பெரிய விஷயம்.

நான் இன்னொரு நூற்றுப்பத்து அத்தியாயங்கள் எழுதப் போகிறேன் என்றபோது அவர்கள் சற்று சங்கடப்பட்டார்கள். அவர்கள் சங்கடம் நீக்குவதற்காக நானாகவே விலகிக் கொண்டேன். ஒட்டு மொத்தமாக எழுதிக் கொள்கிறேன். கவலை வேண்டாம் என்று விடைபெற்றுக் கொண்டேன். வாரப் பத்திரிகைக்கு இருநூற்று இருபது அத்தியாயத்தில் ஒரு நாவல் எழுதுவது என்பது மிகச் கமையான விஷயம்தான். இடம் கொடுத்தவரையில் திரு. செல்வரத்தினம் அவர்களுக்கும் சரவணா ஸ்டோர்ஸ் ஆசிரியர் குழு அவர்களுக்கும் குறிப்பாக அப்பொழுது ஆசிரியராக இருந்த திரு. முருகன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். வாராவாரம் எழுத வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாமல் முழுவீச்சோடு எழுதப் போகிறேன். கதை மனசில் இருக்கிறது. நிறைய படித்து விஷயங்களை மனதில் தேக்கிக் கொண்டாகி விட்டது. ஒரு நல்ல விவாதமும் நடந்து முடிந்துவிட்டது.

தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் முற்றிலும் கட்டப்பட வில்லை. தொன்னூறு சதவீதம் மட்டுமே முடிந்த நிலையில் மீதம் பத்து சதவீதம் நிறைவு பெறாமல் குடமுழுக்கு ஏன் செய்யப்பட்டது என்று நண்பர்களாகக்கூடி விவாதம் செய்து கொண்டிருக்கிறோம். விவாதத்தின் பெரும்பகுதி முடிந்து விட்டது. இதுதான் காரணமாக இருக்கக்கூடும் என்று ஒரு அனுமானமும் ஏற்பட்டுவிட்டது. நான் உட்கார்ந்து எழுத வேண்டும் வெகுசீக்கிரம் எழுதுவேன். மூன்று நான்கு பாகங்கள் திருமகள் நிலையத்தாரால் தனியாக வெளியிடப்படும்.

எங்கள் ஐயன் சேனாபதி மும்முடிச்சோழ பிரம்மராயர் கிருஷ்ணன் ராமன் நினைவாகவும், உடையார் ஸ்ரீ ராஜராஜத்

தேவரின் புகழ் சொல்லும்படியாகவும் இந்தப் படைப்பு இருக்கும்.

இவ்வளவு பெரிய தொடர்கதையை யார் படித்திருப் பார்கள் என்று நான் சற்று கவலையோடு இருக்க பல வாசக உள்ளங்கள் இதைத் தொடர்ந்து படிப்பதாகச் சொல்லி என்னை உற்சாகமூட்டின. என்னை விவாதத்திற்கு இழுத்தன.

இந்த நாவல் பற்றி புரிந்துகொள்ளாமல் ஏன் உடையார் என்று எழுதினீர்கள். அது ஒரு ஜாதியின் பெயரல்வலா என்று கேட்ட பேராசிரியரும் உண்டு. அதிகாரிச்சி என்ற தமிழ் வார்த்தை தவறு என்று சொன்னவரும் உண்டு. அதிகாரிச்சி என்ற வார்த்தை சோழ தேசத்திவ் அன்று புழங்கிய வார்த்தை. அதற்கு கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன.

என் எழுத்தை எனக்குள்ளிருந்து வழி நடத்துகிற என் குருநாதர் திருலண்ணாமலை மகான் யோகிராம்சுரத்குமார் அவர்களின் ஆசியோடுதான் இந்நாலலை எழுதத் துவங்கினேன். என்னுள் நிலைத்த அந்தச் கடரொளிக்கு என் பணிவான லணக்கங்கள் நெடுஞ்சாண் கிடையான நமஸ்காரங்கள்.

சிந்தையை மென்மேலும் புதுப்பித்து நல்ல வழிகாட்டி வருகின்ற அந்த சூட்சும தெய்வத்திற்கு என்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன். அதுவே என்னை இயக்கிக் கொண்டிருக் கிறது.

இந்தப் புதிமை படித்துவிட்டு ஏதும் தோன்றினால் எனக்கு தயவுசெய்து எழுதுங்கள். வாசகரும், எழுத்தாளரும் அபிப்ராயங்கள் பரிமாறிக்கொள்வது இலக்கியத்திற்கு நல்லது.

என்றென்றும் அன்புடன்,

பாலகுமாரன்

80/4, வாரன்சாலை
மயிலாப்பூர்.
சென்னை – 600004.
23-May-2002.

உடையார்

(இரண்டாம் பாகம்)

61

கோதுமை உடைந்த நிறத்தில் ஸ்ரீ குந்தவை தேவி பிராட்டி, வல்லவரையரின்- வந்தியத்தேவரின் மனைவி, சோழ மன்னன் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் தமக்கையார், இளவரசர் ஸ்ரீ இராஜேந்திரரின் அத்தையார், அன்னிய தேசத்து வீரர்களுக்கு நடுவே வந்து அமர்ந்து கொண்டதும், அந்தப் பாண்டிய தேசத்து வீரர்கள் திகைத்துப் போனார்கள்.

நல்ல உயரம். உயரத்தை இன்னும் அதிகரித்துக் காட்ட வேண்டும் என்று கொண்டையை உயரத் தூக்கிப் போட்டிருந்த கெட்டிக்காரத்தனம். தோளில் எந்நேரமும் சால்வை போர்த்திக் கொண்டு நடமாடுகின்ற புத்திசாலிதனம். ஆண்கள் எவ்விதமாக வும் பார்த்துவிடக் கூடாதென்று கழுத்திலிருந்து இடுப்புவரை நன்கு மறைத்துக் கொண்டு, அதன் மீது கெட்டியான தங்க நகைகளைப் போட்டுக் கொண்டு, வளையல்களை எதிரே உள்ளவர்கள் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கல் வளையலும், பல்லேறு கொடி வளையல்களும் போட்டு, அவை களை ஆட்டிக் கொண்டே பேசுகின்ற நளினம். நிதானமாக கனமான குரலில் விசாரிப்பு. கட்டளைகளைச் சொல்லுகின்ற சூட்சுமம்.

ஒரு இடத்திற்கு வரும்போது மிகப் பெரிய ஆரவார மில்லாமல் வெகு சில வீரர்களுடன் குறிப்பாய் இடுப்பில் கத்தி ஏந்திய பெண் வீரர்களுடன் வருகின்ற புதுமை போன்றவற்றால் குந்தவைப் பிராட்டி மக்களிடையே அதிகம் பேசப்பட்டார்.

அவர் வந்து அமர்ந்ததும் பாண்டிய வீரர்கள் திகைத்து எழுந்து நின்றார்கள். வெட்கத்தால் தவித்தார்கள். பின்னடைந் தார்கள். முகம் திருப்பிக் கொண்டார்கள். இந்த இடத்தில்

எதற்கு நிற்பானேன் என்று இரண்டு பேர் நழுவியும் நகர்ந்தார்கள். போனவர்களை வலுக்கட்டயமாகக் கொண்டு வந்து தன் எதிரே குந்தவைப் பிராட்டி நிற்க னவத்தார்.

"ஏன் என்னைக் கண்டதும் நகர்ந்து போகிறீர்கள்" என்று கேட்டார்.

அவர்கள் அதிகம் உளறினார்கள். அந்த இடம் சிரிப்பாயிற்று.

பாண்டிய வீரர்களின் சங்கடம் என்ன என்று குந்தவைப் பிராட்டிக்குத் தெரிந்திருந்தது. பெண்களோடு பாண்டிய வீரர் களுக்குப் பேசிப் பழக்கமில்லை. அவர்களெல்லாம் வெறுமே வீட்டிற்குள் குரல் கொடுத்துப் பேசுகிறவர்கள். அங்கிருந்து குரல் வரும். அதைக் கேட்டு எதிரொலிக்கிறவர்கள். இப்படி நேருக்கு நேர் உட்கார்ந்து அன்னியப்பெண்களோடு பேசி அவர் களுக்குப் பழக்கமில்லை. அதுவும் அழகான பெண்களோடு பேசிப் பழக்கமில்லை. பாண்டிய வீரர்களின் குழப்பத்தைப் புரிந்து கொண்டு குந்தவைப் பிராட்டி அதை மெல்ல நீக்கினார்.

"யார், என்ன தொழில் செய்கிறீர்கள். எல்லோருமே வேளாளர்களா. வேறு தொழில் செய்கிறவரும் இருக்கிறீர்களா. பாண்டிய தேசத்தில் எப்படி பயிர் விளைகிறது. வைகையில் எப்பொழுதெல்லாம் வெள்ளம் வரும். வெள்ளச் சேதம் அதிகம் இருக்குமா" என்றெல்லாம் கேட்டார்.

"சரி; பூஜையை ஆரம்பியுங்கள். நானும் கலந்து கொள் கிறேன்" என்று சொன்னார்.

பூஜை முடியும் வரை அமைதியாக இருந்தார். பாண்டிய வீரர்களுக்கு இந்த மரியாதை மிகப் பெரிய நெகிழ்ச்சியைக் கொடுத்தது.

"யார் இந்தச் சிலையை நிறுவியது. யார் இப்படி வழிபாடு செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டது." குந்தவைப் பிராட்டி யார் குறிப்பாக வினவ, நாற்பது வயது கடந்த ஒரு பாண்டிய வீரன் மெல்ல முன்னேறி வணங்கினான்.

"நான் வைணவ சம்பிரதாயப்படி திருச்சின்னங்கள் இட்டு தீட்சை வாங்கியிருக்கிறேன். என் தோளில் சங்கும் சக்கரமும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. நான் பூஜை செய்வதற்குத் தகுதி உடையவன். பூஜை செய்துதான் உணவு உண்ணுவேன் என்று சத்தியம் செய்தவன். அந்தச் சத்தியமெல்லாம் மீறிப் போய்

விட்டது. படையெடுப்பில் சிறைப்படுத்தியபோது இந்தச் சத்தியம் கடைப்பிடிக்க முடியாமல், மானசீகமாய் பூஜையை நடத்தி உணவு எடுத்துக் கொண்டிருந்தேன். உங்கள் மருமகனார் ஸ்ரீ இராஜேந்திர சோழர் பெரும் மனம் வைத்து எங்களுக்கு நந்த லனம் அமைத்து சிலையும் நிறுவ இடம் கொடுத்தார்" என்று பணிவாகக் கூறினான்.

"இல்லை. இது இராஜேந்திர சோழனுடைய அன்பினால் ஏற்பட்டது அல்ல. உங்களுடைய மானசீக பூஜையின் லலுவினால் ஏற்பட்டது. மனத்திற்குள் இடையறாது நீங்கள் பூஜை செய்ய, வெளியே சோழ மண்டலத்தில் பூஜை நடத்து என்று ஸ்ரீமன் நாராயணன் உங்களைப் பணித்து விட்டான். இந்த இடம் மிக அழகாக இருக்கிறது. துளசியால் அல்ல. சிலையால் அல்ல. உங்களைப் போன்ற பக்தர்களுடைய இடையறாத நாம ஜபத்தால் இந்த இடம் மிக ஒளிர்வாய் இருக்கிறது. நீங்கள் இங்கேயே தங்கி விடுகிறீர்களா..." என்று கூர்மையாக அவனைப் பார்த்தபடி கேட்டார்.

அந்த நாற்பது வயது வீரன் விவரம் தெரியாமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"இந்த இடத்தில் மிகப் பெரிய கற்றளி அமைத்து நல்ல கற்சிலை எழுப்பி ஒரு விண்ணகரம் கட்டுவோம். வாஸ்து சாஸ்திரப்படியும், வைணவ சம்பிரதாயப்படியும் அங்கங்கே சந்நிதிகள் அமைப்போம். இதற்கு என்ன செலவானாலும் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

நான சைவ சமயத்தைச் சேர்ந்தவளாக இருந்தாலும், வைணவ சம்பிரதாயங்கள் மீது எனக்குக் காதல் உண்டு. கண்ண னின் கதைகள் மீது எனக்குப் பிடித்தம் உண்டு. ஆழ்வார்களின் சரிதங்களையும், சில பிரபந்தங்களையும் கேள்விப்பட்டிருக் கிறேன்.

சோழ சாம்ராஜ்யத்தில் விண்ணகரம் அதிகமில்லை. நீங்கள் பாதுகாப்பதாக இருந்தால், நீங்கள் பராமரிப்பதாக இருந் தால் இந்த விண்ணகரம் உடனடியாக எழுப்புகின்ற வேவை களைத் தருகின்றேன். நீங்களே முதன்மையாக இருந்து இந்த விண்ணகரத்தைக் கவனித்துக் கொள்ள வேண்டும். உங்கள் பரம்பரையினர் இந்த விண்ணகரத்தைப் பாதுகாக்க வேண்டும். உங்களால் இயலுமா... அல்லது பாண்டிய தேசம் போக வேண்டுமா" – குந்தவைப் பிராட்டி மிருதுவாகக் கேட்டார்.

அந்தப் பாண்டிய வீரன் தலை தூக்கினான். அவன் கண்களில் நீர் கோர்த்தது. மெல்ல முன்னேறி குந்தவைப் பிராட்டியின் முன்பு வணங்கினான். குந்தவைப் பிராட்டி வேண்டாமென்று மறுத்தாலும். நெற்றியில் நிலம் பதிய சிறிது நேரம் வணங்கினான். அழுதான். எழுந்தான்.

"நான் பாண்டிய தேசம் போக விரும்புகின்றேன். மதுரையிலிருந்து மூன்று நாட்கள் நடந்தாவ்தான் என்னுடைய கிராமத்திற்குப் போக முடியும். அங்கு போய் அங்கு வாழும் என் குவமக்களில் நல்லவர்களைத் தேர்ந்தெடுத்து என் மனைவியையும், இரண்டு மகன்களையும் என் கூடவே கூட்டி வந்து, இந்த இடத்தில் குடியேற விரும்புகின்றேன். நான் வந்து சேர்ந்ததும் இங்கு நீங்கள் சொன்னபடி விண்ணகரம் கட்டி விடலாம். பிறகு சோழ தேசத்தையே என்னுடைய தேசமாக நான் மாற்றிக் கொள்ள விரும்புகின்றேன்.

பாண்டியன் என்கிற பட்டத்தைத் துறந்து வெறும் வைஷ்ணவனாக இருக்கவே நான் விரும்புகிறேன். பாண்டிய தேசத்தில் விண்ணகரம் அமைப்பதும், வைஷ்ணவ சம்பிரதாயத்தைக் கடைப்பிடிப்பதும் மிக எளிதாக நடைபெற முடியும். சைவர்கள் மிகுந்த இந்த இடத்தில் ஒரு விண்ணகரம் கட்டித் தருகிறேன் என்று நான் சமைத்த ஒரு மண்பொம்மைக்கு மரியாதை கொடுத்திருக்கிறீர்கள். எங்கள் அனைவரையும் உயர்த்தி வைத்திருக்கிறீர்கள். நாங்கள் ஒல்வொருவராக பாண்டிய தேசம் போய் வர அனுமதிக்க லேண்டும். வந்த எங்கள் குடும்பத்தாருக்கு நீங்கள் அடைக்கலம் தர வேண்டும். எங்களைச் சோழ மக்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பிறகு இந்த விண்ணகரத்தைக் கண்ணும் கருத்துமாகக் காப்பேன். இந்த விண்ணகரம் உங்கள் பெயர் சொல்லும். குந்தவை நாச்சியார் விண்ணகரம் என்று அழைக்கப்படும்."

"எதற்கு என் பெயர்..."

"உங்கள் பெயர் இருப்பதுதான் நல்லதம்மா..."

"ஏன்..."

"ஒரு பாண்டிய தேசத்துப் போர் வீரன் சோழ தேசத்தில் வந்து விண்ணகரம் அமைப்பதா என்று யாரும் கேட்பதற்கு முன்பு அந்த விண்ணகரத்தின் பெயர் கேட்பார்கள் அல்லவா. அந்த விண்ணகரத்திற்குக் குந்தவை நாச்சியார் விண்ணகரம்

என்று பெயர் வைத்து விட்டால் அடுத்த பேச்க எழவே எழாதல்லவா... சோழ குலக்கொடி குந்தவை நாச்சியாரே இதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிற பொழுது எதிர்க்க இங்கு எவருக்கும் துணிவு வராதல்லவா. அப்படி எவரும் எதிர்க்காத பட்சத்தில் இந்தக் கோயில் மிகச் சிறப்பாக வளர்ந்து விடும் அல்லவா. பெருமாள் பெயர் இருப்பதைவிட உங்கள் பெயர் இருப்பது நல்லதம்மா..." – அந்தப் பாண்டிய வீரன் சொன்னதும் வளையல்கள் ஒலிக்க குந்தவை நாச்சி கைதட்டினார்.

"நீ சேர தேசமோ?"

"ஆமாம் அம்மா. சேர தேசத்திற்கும், பாண்டிய தேசத்திற்கும் உள்ள எல்லையில் பிறந்தவன். ஆனால் என்னுடைய எல்லை பாண்டிய தேசத்தில் வருகிறது. சேரதேசத்து மக்களின் பழக்க வழக்கங்கள் எங்களில் உண்டு..."

"பேச்சிலிருந்து தெரிகிறது. பழக்கவழக்கங்களும் அனத உறுதிப்படுத்துகின்றன. பாண்டிய தேசத்து வீரர்கள் இவ்வளவு சூட்சுமமாகப் பேசமாட்டார்கள். நல்லது. நீங்கள் இப்போதே இந்தக் கணமே விடுதலை பெற்றவர் ஆவீர்கள். உங்களுக்குச் சிறிதளவு பணமும், குத்தீட்டியும், ஒரு விடுதலைப் பத்திரமும் கொடுக்கச் சொல்கிறேன். பாண்டிய தேசம் போய் உங்கள் குடும்பத்தாரை அழைத்து வாருங்கள். இங்கு குடியேறுங்கள்.

சோழர்கள் மோசமானவர்கள் அல்ல என்று பாண்டிய மக்களுக்குச் சொல்லுங்கள். யுத்தம் நடந்தாலும் யுத்தத்திற்குப் பிறகு மிக மரியானதயாக மனித நேயத்துடன் நடத்துகிறார்கள் என்று அந்த மக்களுக்குச் சொல்லுங்கள். சைவம் எங்களுக்கு உயிர் போன்றது. ஆனால் வைணவத்தை ஒருக்காலும் நாங்கள் வெறுக்கவில்லையென்று உங்கள் மக்களிடம் சொல்லுங்கள்.

நீங்கள் மட்டும் போகிறீர்களா. துணைக்கு உங்களில் எவரையேனும் அழைத்துக் கொள்கிறீர்களா. உங்களைத் தவிர இன்னொரு நபருக்கு விடுதலைப் பத்திரம் கொடுக்க நான் ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்ல, அந்த நாற்பது வயது பாண்டிய வீரன் தனது தம்பியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

உடனடியாக அங்கேயே விடுதலைப் பத்திரம் எழுதி குந்தவை நாச்சியாரின் முத்திரையும், ராஜேந்திர சோழனின் முத்திரையும் வைக்கப்பட்டது. இரண்டு குத்தீட்டிகளும், உடை

வாட்களும் அவர்களுக்குத் தரப்பட்டன. சிறிய உணவு மூட்டையும், பொற்காசுகளும் வழங்கப்பட்டன.

அவர்கள் குந்தவை தேவியை வலம் வந்தார்கள். நமஸ்கரித்தார்கள். ஒரு துளசிக் கன்றை எடுத்துக் கொண்டார்கள்.

"எதற்கு இது" - குந்தவை துளசிக்கன்றைப் பார்த்து வியந்தார்.

"இது சோழ தேசத்துச் செடி. அங்கு போய் என் இராமத்தில் நட்டு, இதை நன்கு வளர்த்து, இதிலிருந்து விதைகள் எடுத்து மிகப் பெரிய நந்தவனம் அமைக்கக் கட்டளையிடுவேன்..."

"நந்தவனம் அமைத்து என்ன செய்வீர்கள்..."

"அங்கு என் மகனையோ, மகளையோ ஒரு விண்ணகரம் அமைக்கச் செய்வேன்..."

"ஆஹா... அருமையான விஷயம். அங்கும் விண்ணகரம் அமைப்பது நன்றாக இருக்கும்."

"அந்த விண்ணகரத்துக்கும் குந்தவை நாச்சியார் விண்ணகரம் என்று நாங்கள் பெயர் சூட்டுவோம். ராஜராஜன் வாசல் என்று அந்தக் கோயில் வாசலுக்கு நாங்கள் பெயர் வைப்போம்."

"என்ன திடீரென்று இப்படிப் பேசுகிறீர்கள்" - அந்தப் பாண்டிய வீரன் பேச்சுக்குக் குந்தவைதேவி படபடத்தார்.

"எங்களை விடுவித்து எங்களை மரியாதை செய்த உங்களுக்கு இந்தப் பாண்டிய வீரனின் பதில் மரியாதை.

நமக்குள் இருந்த சண்டை ஓய்ந்து விட்டது. நம்முடைய வழக்கமான தொழில்களைக் கவனிக்க வேண்டும். பாண்டிய நாட்டை சோழ நாடு ஜெயித்தது. ஆனால் வன்மம் போய் விட்டது. எக்கும் சோழர்கள் மீது எந்தக் காழ்ப்பும் இல்லை. சோழர்கள் நாகரிகமிக்கவர்கள். தமிழ் வளர்ப்பவர்கள். சைவம் வளர்ப்பவர்கள். இறைத் தொண்டில் சிறந்தவர்கள். மக்களை மிக மரியாதையாக நடத்துபவர்கள்.

பாசன வசதிகளைப் பாண்டிய தேசத்தை விட அதிகமாக உழவர்களுக்குச் செய்து கொடுப்பவர்கள். எனவே, சோழ தேசத்தின் நாகரிகத்தைப் பாண்டிய தேசத்திற்குக் கொண்டு போகின்ற கடமை எனக்கிருக்கிறது. ஒரு நாகரிகத்தைக் கொண்டு போவது போல நான் இந்த துளசிச் செடியைக் கொண்டு போவேன். உங்களைப் பற்றி பாண்டிய மக்களிடம்

பேசுவேன். இராஜேந்திர சோழரைப் பற்றியும், உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரைப் பற்றியும் பேசுவேன்" என்று கைகட்டிச் சொன்னான்.

குந்தலை எழுந்து வந்து தன் வலது கையை எடுத்து அவன் தோளில் வைத்தார். அந்தப் பாண்டிய தேசத்துப் போர்வீரன் கண்களை மூடிக்கொண்டான்.

62

குந்தவை தேவியார் மிருதுவான கீழ் குரலில், "சகோதரனே" என்று அழைத்தாள். அந்தப் போர்வீரன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. கைகூப்பினான். அவனையே ஆதூரத்துடன் பார்த்தாள்.

மெல்ல குலுங்கிக் குலுங்கி அந்த ஒரு விளிப்புக்கு அழத் துவங்கினான். மறுபடியும் குந்தவை தேவி குரல் கொடுத்தாள்.

"என் உடன்பிறவாச் சகோதரரே. உங்கள் பேச்க என்னை நெகிழ வைக்கிறது. பாண்டிய வீரர்கள் முரடர்கள். எந்தப் பேச்சுக்கும் கட்டுப்படாதவர்கள் என்கிற என்னுடைய மயக்கத்தை நீங்கள் ஒரே வீச்சில் துடைத்துவிட்டீர்கள்.

நீங்கள் செய்கின்ற காரியம் மகத்தானது. ஒருவர் வழிபட்ட தலத்தை நாம் பெருந்தலமாக மாற்ற வேண்டும் என்கிற எண்ணத்தில்தான் நான் உங்களுக்கு விண்ணகரம் கட்டிக் கொடுக்க அனுமதி அளித்தேன். வகை செய்தேன். ஆனால் உங்களிடத்திலும் ஒரு விண்ணகரம் அமைக்க வேண்டும்; அந்த விண்ணகரத்தில் சோழர்களுடைய தாக்கம் இருக்க வேண்டும் என்று எண்ணினீர்களே. பதில் நன்றி செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களே... அது மிகச் சந்தோஷமாக இருக்கிறது.

இதுதான் நாம் செய்ய வேண்டியது. இந்தத் தலைமுறை செய்ய வேண்டியது.

போர் முடிந்துவிட்டது. இனி நம்மிடையே போரில்லை. எந்தச் சண்டையுமிவ்வை. நம்முடைய கலாச்சாரங்கள், நம் முடைய பழக்க வழக்கங்கள் ஒன்றாகக் கலக்கப்பட வேண்டும். நாம் பரஸ்பரம் ஒருவரையொருவர் மதிக்க வேண்டும். நீங்கள்

இன்றே போகலாம். வெறுமே நடந்து போவதற்குப் பதில் உங்களுக்குக் குதிரைகள் கொடுக்க ஏற்பாடுகள் செய்கிறேன்."

இராஜேந்திர சோழரின் சேனாதிபதியை அழைத்து நல்ல குதிரைகள் கொடுக்கும்படியாகவும், கமை கமந்துபோக மட்டக் குதிரை கொடுக்கும்படியாகவும், இங்கிருந்து பாண்டிய தேசத்திற்கு எடுத்துப் போவதற்கு விதை நெல்லும், அடிக்கரும்பும், சில மூலிகைச் செடிகளும், ஒரு வில்வ மரமும் தந்து உதவினாள். நினறய பொற்காககள் கொடுத்தாள்.

அவர்கள் அன்று மாலையே பயணப்பட்டார்கள்.

குணசீலன் சகலமும் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரண்டு பேரும் நந்தவனம் விட்டுப்போக, கைது செய்யப் பட்ட பெரும் படையிலிருந்து இரண்டு சாளுக்கிய வீரர்கள் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

"பாண்டிய வீரர்களோடு உங்களுக்கென்ன வேவை" - குணசீலன் கேட்டான்.

"தெரியவிவ்வை. எந்த சம்பிரதாயம் என்று கேட்டார்கள். வைணவ சம்பிராதயம் என்று சொன்னேன். நீங்கள் போய் பாண்டிய வீரர்களோடு சேர்ந்து கொள்ளுங்கள் என்று எங்களை அனுப்பி இருக்கிறார்கள்."

இங்கு எது கோயில் என்று கேட்டு, துளசி நந்தவனத் திற்குள் புகுந்து அவர்கள் கைகூப்பி மண்பொம்மைக்கு எதிரே பாடத் துவங்கினார்கள்.

ஒரு சாளுக்கிய வீரன் முதுகிவ் சவுக்கடி பட்ட தழும்புகள் அதிகம் இருந்தன. குணசீலன் அவர்களைப் பரிதாபமாகப் பார்த்தான். அன்று இரவு அவர்கள் அந்த நந்தவனத்தில் படுத்துத் தூங்கினார்கள்.

"குந்தவைப் பிராட்டியார் வைணவத்தின் மீது இத்தனை பிரியத்துடன் இருக்கிறாரே... இது ஆச்சரியமாக இல்லை" என்று ஒருவன் கேட்க, குணசீலன் பதில் சொன்னான்.

"நரி வாலாட்டுகிறதென்றால் அதற்கு நட்பு என்று பெயரல்ல. ஒரு ராஜதந்திரம். தான் பாண்டிய வீரர்கள் மீது கருணையோடு இருப்பதாகக் காட்டிக் கொள்ளுகின்ற ராஜதந்திரம். நாம் சோழதேசத்தின் மீது இருக்கிற கோபத்தை மறந்துவிட வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றார்கள்.

எதனாலேயோ நம்மை மகிழ்விக்க இடையறாது முயற்சி செய்கிறார்கள். வீரர்களைத் தப்ப விட்டதும் இப்படித்தான்.

பாண்டிய வீரர்களைத் தப்ப விடுகிறார்களே தவிர, சாளுக்கிய வீரர்களை ஒரு போதும் தப்ப அனுமதித்ததில்லை. அடித்து நொறுக்குகிறார்கள். சிறிய தவறுக்குக் கூட மிகப்பெரிய தண்டனை கொடுக்கிறார்கள். உணவில்லாமல் பட்டினி போட வைக்கிறார்கள். சாளுக்கிய வீரர்களுக்கு ஒருவிதமான தண்டனையும், பாண்டிய வீரர்களுக்கு ஒருவிதமான தண்டனையும் கொடுத்து நம்மிடையே பிளவு ஏற்படுத்தி விட்டார்கள்.

சவுக்கு ஓங்கி சோழன் வரும் போதே 'நான் பாண்டிய வீரன்' என்று ஒருவன் கத்தத் துவங்கிவிட்டால் சவுக்கு கீழிறங்கி விடுகிறது. இப்படியாக பாண்டிய வீரர்கள் ஒரு பக்கமும், சாளுக்கிய வீரர்கள் ஒரு பக்கமும் நகர்ந்து விட்டார்கள்.

கைதிகள் என்கிற நம்முடைய ஒற்றுமை இப்பொழுது காணாமல் போய்விட்டது. பாண்டியக் கைதி, சாளுக்கியக் கைதி என்று பிரிவு வந்துவிட்டது.

நமக்குள்ளும் அவ்வப்போது அடிதடி ரகளையும் ஏற்படுகின்றன. பாண்டிய வீரனின் சோற்றைச் சாளுக்கிய வீரன் திருட, அதற்கு மிகப்பெரிய சண்டையும் கலவரமும் ஏற்பட்டது.

அவர்கள் அந்தக் கலவரத்தை அடக்காமல் அடித்துக் கொள்ளுங்கள் என்பதாய் நின்றார்கள். பாண்டிய வீரனிடம் பிரம்பு கொடுத்தார்கள். அவன் சாளுக்கிய வீரனைச் சக்கையாக அடித்து நொறுக்கி விட்டான். இதனாலும் காழ்ப்பு அதிகமாகி விட்டது.

சோழ வீரர்களின் ஒவ்வொரு அசைவும் தந்திரம் நிரம்பியது. ஒவ்வொரு அணுகுமுறையும் அர்த்தம் செறிந்தது. வெறுமே அவர்கள் எதுவும் செய்வது இல்லை. நம்மிடம் அவர்கள் பிரியம் காட்டுகிறார்கள் என்றால் ஏதோ காரணம் இருக்கிறது. நம் வைணவ சம்பிரதாயத்தை அவர்கள் வணங்குகிறார்கள் என்றால், அதற்கும் நிச்சயம் காரணம் ஏதோ இருக்கும்."

"இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும்."

"இங்கிருந்து நம்மைத் தஞ்சைக்கு அழைத்துப் போகப் போகிறார்கள். தஞ்சைக்குப் போகிற வரையில் நாம் அடங்கி மௌனமாக இருக்க வேண்டும். தஞ்சையிலிருந்து திரிச்சிரபுரம்

போய், திரிச்சிரபுரத்திலிருந்து மதுரைக்குப் போய் விடலாம். அல்லது தஞ்சையினுடைய கடற்கரைக்குப் போய் படகேறி, வடக்குப் பக்கத்திலிருந்து காற்று வீச தெற்கு நோக்கிப் பயணப்பட்டு விடலாம். தொண்டித்துறைமுகத்திற்குப் போய் இறங்கலாம்."

"தப்பிப்பது மட்டும்தான் நம் வேலையா..."

"வேறு எதற்காக கைதியானாய். கைதியாவது செத்து மடிவதற்குத்தானா. இவ்வை. எப்படியும் தப்பித்துப் போக வேண்டும். நம்முடைய ஆபத்துதவி படைகளோடு மறுபடியும் சேர்ந்து கொள்ள வேண்டும். பாண்டிய குலக்கொழுந்தைத் தேடிக் கண்டுபிடித்து அரசனாக்க வேண்டும். காடுகளில் வசித்தாவது மறுபடியும் சோழப்படைகளை எதிர்த்து மதுரையை மீட்க வேண்டும். மீன் கொடியை, பாண்டிய தேசம் முழுவதும் பறக்கவிட வேண்டும்" – குணசீலன் ஆத்திரத்தோடு பேசினான்.

"பிறகு சோழ தேசத்தின் மீது படையெடுத்து அங்கும் மீன்கொடியை நாட்ட வேண்டுமா."

"அப்படியும் ஒரு கனவு உண்டு. அதுவும் நடக்கத்தான் போகிறது. சோழம் மட்டுமே கடைசி வரையில் இந்த பூமியை ஆட்சி செய்கிற விதமாக அமைந்து விடாது. சோழர்கள் ஒரு காலகட்டத்தில் அழிவார்கள். அப்பொழுது பாண்டிய தேசம் தலை தூக்கும். மிக நிச்சயமாய் சோழ தேசத்தில் மீன்கொடி பறக்கும்."

அன்று காலையில் அந்த சாளுக்கிய வீரர்கள் காணாமல் போனார்கள். எங்கே என்று தேடியபோது, சோழ உபசேனாதிபதி தலைமையில் ஒரு சிறிய சோழப்படையும் உள்ளே நுழைந்தது. குணசீலனை இழுத்துக் கொண்டுபோய் சங்கிலி போட்டு பிரம்பால் அடித்தது.

"சோழ தேசத்தில் மீன் கொடி பறக்க வேண்டுமா. அப்படி ஒரு நாள் வரவேண்டுமா. வந்துவிடும் என்று நினைக்கிறாயா. எவ்வளவு மோசமான கனவு. உன் கனவுக்குக் காரணம் உன் உடம்புத் திமிர். உன் உடம்புத் திமிரைக் குறைத்தால் உனக்குக் கனவுகள் இல்லாமல் போகும்."

சரமாரியாய் அடித்தார்கள். அப்பொழுதுதான் அந்தச் சாளுக்கிய வீரர்கள் சாளுக்கிய வீரர்களே அல்ல; சோழ தேசத்து

ஒற்றர்கள் என்பதை குணசீலன் புரிந்து கொண்டான். **அடிவாங்கினான். தனியே உட்கார்ந்து அழுதான்.**

குணசீலனின் வலது புஜத்தில் வாய் பிளந்த ஒரு புலிச் சின்னம் முத்திரையிடப்பட்டது. லெங்கவத்தில் லார்த்த அச்னச நெருப்பில் லாட்டி அது தகதகக்கிற பொழுது அப்படியே எடுத்து தோளில் வைத்து அழுத்தினார்கள். தோலைப் பொசுக்கினார்கள். புவ்லிச்சின்னம் தழும்பாய் அவன் உடம்பில் ஏறியது.

குணசீலன் வேதனைப்பட்டான்.

இந்தப் புலிச்சின்னத்திற்கு அபாயகரமான கைதி என்று அர்த்தம். அவனை கவனத்துடன் பாதுகாக்க வேண்டும் என்பது பொருள்.

குணசீலன் அன்றிலிருந்து பிறரோடு பேசுவனத நிறுத்தினான். தனியே இருக்கப் பழகினான்.

நந்தவனத்திலிருந்து பிடுங்கி சோழ வீரர்கள் அவனை முன் அணிக்குக் கொண்டு வந்தார்கள். தஞ்சையை நோக்கி நகர்ந்த முதற்குழுவில் அவனையும் சேர்த்தார்கள். கழுத்தில் இரும்புக் கம்பி வளையம் மாட்டினார்கள். வளையத்தைக் கழட்ட முடியாது. அதேநேரம் சட்டென்று அந்த வளையத்தில் ஒரு கொக்கி மாட்டி அவனை ஒரு மிருகம் போல இழுத்துக் கொண்டு போகவாம். நாய்க்குப் பட்டி கட்டியிருப்பது போவ, எருமைக்குக் கயிறு கட்டியிருப்பதுபோல குணசீலன் கழுத்தில் நிரந்தரமாய் ஒரு இரும்பு வளையம் இருந்தது. அந்த இரும்பு வளையமும் அவன் அபாயகரமான கைதி என்பதைச் சுட்டிக் காட்டியது.

சோழதேசத்து அதிகாரிகளின் கெட்டிக்காரத்தனத்தாவ் தொண்டை நாடு, நடு நாடு போன்றவைகள்கூட மிகச் சிறப்பாக இருந்தன. சாலைகள் நன்கு பராமரிக்கப்பட்டன.

மழை பெய்து ஓய்ந்த பிறகு அந்த கிராமத்திலிருந்து போர் வீரர்கள் கிளம்பி சாலையைச் சரி செய்தார்கள். பெண்களின் துணையோடு அங்கங்கே ஏற்பட்ட குழிகளை மண்போட்டு அடைத்து தேரும், குதிரையும், யானையும் போக லழி ஏற் படுத்திக் கொடுத்தார்கள். குறுக்கே விழுந்த மரங்களை வெட்டினார்கள். புதர்களை நீக்கினார்கள். கரடு முரடாக இருந்த இடங்களில் ஆற்று மணல் கொண்டு வந்து பரப்பினார்

கள். நடுநாடின் எல்லை முடியும்போது, கற்பாறைகள் மிகுந்த திருலக்கரை கிராமத்தை அவர்கள் தாண்டினார்கள்.

அங்கு பெரும்பாறைகளை உடைத்து யானை போட்டு இழுத்துக் கொண்டிருந்தார்கள். அங்குள்ள சிற்பிகள் ஆட்கள் வேண்டும் என்று கேட்டதும், லலிவுமிக்க கைதிகள் இருநூறு பேரை அந்தச் சிற்பிகளுக்கு உபதளபதிகள் தானமாகக் கொடுத்தார்கள்.

திருவக்கரையிலிருந்து நடந்து சகடப் பெருவழியாக அவர்கள் தஞ்சையை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். கொள்ளிடக்கரை வரும் பொழுதுதான் காவிரியின் சிறப்பும், காவிரி கொண்டு வந்து அடிக்கும் வண்டல் மண்ணில் சிறப்பும் புரிந்தது.

கரையோரத்தில் வளரும் செடிகளைப் பிடுங்கி, வயலுக்குக் கொண்டு போய் அங்கு வெட்டிப்போட்டு, பசுந் தழையை உரமாக்கி, அங்குள்ள வண்டல் மண்ணை வண்டி களில் எடுத்துப்போய், வயல்களில் சாய்த்து பிறகு நாற்றுநட வெகு சீக்கிரம் நெற்கதிர்கள் பிடித்துக் கொள்கின்றனவாம். மறுநாள் மாலை கொள்ளிடக்கரை தாண்டி தெற்குப் பக்கம் கரையேறியபொழுது, வளமான தஞ்சை மண்ணுக்குள் நுழைகிறோம் என்கிற ஆதங்கம் குணசீலனுக்கு அதிகமிருந்தது.

கரையேறி காவிரித்தாய்க்கு வணக்கம் சொன்னான். இப்படி ஒரு நதி என் தேசத்திலும் இருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டான்.

எல்லாப் பெண்களும் சேலை அணிந்திருந்தார்கள். சேலைக்குக் கரைவேறு நெய்யப்பட்டிருந்தது. எல்லாப் பெண் களிடமும் தங்க நகைகள் இருந்தன. தங்கக் காப்புகள் இருந்தன. காதுகளில் தங்க ஓலைகள் இருந்தன. சோழப் பையன்கள் பலசாலிகளாக இடுப்பில் கோமணத்துடன், தலையில் சுற்றிக் கட்டிய நாலு முழ வேட்டியுடன் அலைந்தார்கள். அரசர் வருவதைப் பார்த்ததும், வேட்டியை உதறி இடுப்பில் அணிந்து கொண்டு, கைகளை மார்பின் குறுக்கே கட்டி நின்று கொண் டார்கள். கால்களை அகட்டி நின்றார்கள்.

ஆடுகள் கொழுத்துக் கிடந்தன. நிறைய குட்டிகள் ஆட்டு மந்தைகளில் தென்பட்டன. சாவா, மூவா, பேராடுகள் என்கிற மந்தை பல காணப்பட்டன. பசுக் கூட்டங்களிலும் மடி பெருத்த பல பசுக்கள் இருந்தன.

கிராமங்கள் சுத்தமாக இருந்தன. பல வீடுகளில் சோழக் கொடிகள் பறந்தன. அதிகாரிகள் உள்ள வீடு என்று அந்தக் கொடிகள் தெரிவித்தன. அந்தக் கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கும் இடையே செம்மையாய் பாதை போடப்பட்டு நடுவே இளைப்பாற பந்தல் போடப்பட்டிருந்தது.

அந்தணர் குடியிருப்புகளில் வெள்ளைக் கொடிகள் பறந்தன. வாசனையான உணவு தயாரிக்கப்படுவது பசு நெய்யின் நறுமணத்தின் மூலம் தெரிந்தது. அந்தணர்கள் வரிசையாக வந்து பூரண கலசம் கொண்டு வந்து உபதளபதிகளை வாழ்த்தி அவர்கள் மீது தெளித்தார்கள்.

மந்திர ஜபம் செய்த ஜலத்தை உபதளபதிகளுக்கு லழங்கினார்கள். பாண்டிய வீரர்களுக்கும் மந்திர ஜபம் வேண்டுமா என்று அந்தணர்கள் கேட்டார்கள். சில பாண்டிய வீரர்கள் வாங்கிக் கொள்ள, சிலர் மறுக்க, "எல்லாம் ஒன்று தானய்யா" என்று கேலி செய்தார்கள்.

அந்தணர்ப் பெண்கள் மிக அழகாக இருந்தார்கள். அவர்களுடைய இயல்பான அழகுக்கு மேல் மை தீட்டி, கன்னங்களில் மஞ்சள் பூசி, உதட்டில் சாயம் எழுதி, முத்து மாலைகள் அணிந்து, எவர்மீதும் படாமல் ஜாக்கிரதையாக நடந்து வந்தார்கள். கிணுகிணுவென்று மூக்கில் நீர் கோர்த்த குரலில் பேசினார்கள். அவர்களுடைய தலைமுடிகள் முதுகுக்குக் கீழ்வரை தொங்கின.

தஞ்சையை அடைய சிறிது தூரமே இருக்கும் என்கிற பொழுது, குணசீலன் கழுத்து வளையத்தில் அவர்கள் சங்கிலி மாட்டினார்கள்.

குணசீலன் வேதனையில் தவித்துப் போனான்.

63

குடந்தைக்குள் நுழைந்த போதுதான் குணசீலனுக்கு உண்மையான தஞ்சையின் வளம் தெரிந்தது. பாண்டிய தேசத்தில் எங்கு போனாலும் மலை ஒன்று எதிரே நின்று கண்ணைத் திரையிட்டு மறைக்கும். ஆனால் சோழதேசத்தில் கண்ணுக்கெட்டிய வரையில் பெரும் நிலப்பரப்பு காணக்

கிடைக்கிறது. வெகுதூரத்திற்கு பச்சைக் கம்பளம் விரித்தாற் போல வயல்வெளிகள் இருக்கின்றன. அந்த வயல்வெளிகள் இன்னொரு வயல்வெளியில்தான் முடிகின்றன. இடையே மலையின் குறுக்கீடோ, காடுகளின் குறுக்கீடோ இல்லவே இல்லை.

காவிரி பாய்கின்ற இடத்தின் இரண்டு பக்கமும் நெல்லின் நறுமணம், பச்சைப் புல்லின் வாசனை, அழுகிய தாலர நீர் கவந்த சேற்றின் வீச்சம் மூக்கை ஆழமாய் நெருடின.

வயல்களுக்கு நடுலே நான்கு யானைகள் போகக்கூடிய மிகப்பெரிய பாதை இருந்தது. பாதைகள் கெட்டியாய் எத்தனை முறை தேர் போனாலும் பழுது படாததாய் இருந்தன. பாதைகளின் ஓரம் குளிர்வான, குட்டையான மரங்கள் வளர்க்கப் பட்டிருந்தன. லயல் நடுலேயும் திட்டுகள் இருந்தன. அந்தத் திட்டுகளில் மரம் நட்டு குடிசை போட்டு உட்கார்ந்திருந்தார்கள்.

நதியிலிருந்து தள்ளியிருக்கும் வயல்களில் கிணறுகள் வெட்டி ஏற்றம் இறைத்துக் கொண்டிருந்தார்கள். ஏற்றப்பாட்டு தொலைதூரத்தில் இருந்து கேட்டுக் கொண்டிருந்தது.

ஒரு கிராமத்தில் நுழைந்தவுடனே மரவேலை செய்பவர்களின், செங்கற் கொல்லர்களின், கம்மாளர்களின் குடிசைகள் வந்தன. பிறகு வேளாளர்களின் வீடுகள் வந்தன. பிறகு சில இடங்களில் அந்தணர்கள் வசிக்கும் இடங்களைத் தாண்ட வேண்டியிருந்தது. எல்லா கிராமங்களிலும் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் தனலக்கொன்றாய் கோவில்கள் இருந்தன. எல்லைக் காளியும், யாரோ இறந்ததற்கான நடுகற்களும் ஊர் எல்லையில் நடப்பட்டிருந்தன.

படை நுழைகிறபொழுது உபதளபதிகளை கிராமத்து அதிகாரிகள் முன்வந்து வணங்கி வரவேற்றார்கள். மிகப்பெரிய பானைகளில் கத்தமான நீர் னவத்தார்கள். உபதளபதிகளுக்கு மோர் கொடுத்தார்கள்.

குடந்தை மிகப் பெரிய நகரமாக இருந்தது. ஓடுகள் வைத்த பெரிய நாலுகட்டு, எட்டுகட்டு வீடுகள் இருந்தன. கடைத் தெருக்களில் நிறைய ஜனங்கள் இருந்தார்கள். அநேகமாய் எல்லோரும் முழுவதுமாய் உடுத்திக் கொண்டிருந்தார்கள்.

பாண்டியதேசம் போல் – சிறிய துண்டுகளும் அல்லது வெறும் கோமணத்தோடும் அலையும் ஆண்களைச் சோழதேசத்

தில் பார்க்கலே முடியவில்லை. முழங்காவ் வரை வேட்டி கட்டி, மேலே துணிபோர்த்தி, தலைக்குத் தலைப்பாகை லைத்து எல்லா ஆண்களும் மூன்று உடைகளோடு இருந்தார்கள்.

பெண்கள் இடுப்பில் பாவாடை கட்டிக் கொண்டிருந்தார்கள். அதன் மீது லெள்ளியிவோ, தங்கத்திவோ அணிகலன் போட்டு இறுக்கி இருந்தார்கள். கால்களில் கொலுசு, தண்டை எல்லாம் போட்டு பெரிதாய் சப்திக்க நடந்து வந்தார்கள். மார்பில் துணி போட்டு மறைத்திருந்தார்கள். ஆனால் மறைப்பதில் அதிக கவனம் செலுத்தாமல் சில சமயம் நெகிழவும் விட்டிருந்தார்கள்.

சோழப் பெண்களுக்கு பெரிய ஆகிருதி இல்லை. அநேகமாய் பல பெண்கள் சிறிய ஆகிருதியாய், மிகுந்த சுறுசுறுப்பாய், அதிக தலைமுடியும், பளபளப்பான கண்களும், கூர்மையான மூக்கும், கீச்சுக் குரலுமாய் இருந்தார்கள்.

கோதுமை உடைத்த நிறம், கோதுமை நிறம், சற்று மாந்தளிர் நிறம் என்று மூன்று வகையாக இருந்தார்கள்.

பாண்டிய தேசத்து அட்டைக்கருப்பு மிகச் சிலராகவே கண்ணுக்குப் பட்டது. அப்படி இருப்பவனைக் கரியன் என்று அழைத்தார்கள்.

சில அரச குடும்பத்தினர்கள் மிக வெள்ளையான தோலும், சிகப்பான அதரமும், சற்று பழுப்பான தலைமுடியும், நீலக் கண்களும் கொண்டு விளங்கினார்கள். அவர்களைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. இப்படியொரு தோல் உனக்கு எங்கிருந்து வந்தது என்று வியக்க வைத்தது. சில தாசிகளை அந்த நிறத்தில் பார்த்த பொழுது திகைப்பு பன்மடங்காயிற்று.

அந்த நிறம் தனக்கு வாய்த்தது தன்னால்தான் என்று நினைப்போடு அந்த தாசி முன்னும், பின்னும் அலைந்தாள். வந்த படைவீரர்கள் பார்க்க லேண்டுமென்பதற்காகவே லாசலில் வந்து நின்றாள். நின்றதில் ஒயில் காட்டினாள். படைகளைப் பார்த்து கலவரப்பட்டதுபோல் நடித்தாள். மறுபடியும் உள்ளே ஓடினாள். மறுபடியும் வெளியே வந்தாள். அனைவரையும் அதிசயத்தோடு குணசீலன் பார்த்துக் கொண்டிருந்தான்.

காவிரியைத் தாண்டி தென் கரையில் இறங்கினார்கள். வளையமாக சோழ வீரர்களை நிற்கவைத்து நடுவே கைதிகளை உட்கார லைத்தார்கள். குளிக்கிறீர்களா என்று கைதிகளைக் கேட்டார்கள்.

"எங்கள் காவிரி இருக்கிறது. குளித்து பாபத்தைப் போக்கிக் கொள்ளுங்கள்" என்று சொல்லி சிரித்தார்கள். கரையோரமாய் காவல் இருந்தார்கள்.

குணசீவன் குளிக்க இறங்கினான். காவிரியில் கால் வைத்தான். நதியில் கையில் ஜலமெடுத்து நதிக்கே நீர் வார்த்தான். அந்தப் புண்ணிய நதிக்கு வணக்கம் சொன்னான்.

"உன் சிறப்புகளைப் பற்றி என் மூதாதையர் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அகத்தியரின் கமண்டலத்தின் வழியாய் வந்த நீரல்வலா. சோழ தேசத்தின் செழிப்புக்குக் காரணமல்லவா. காவிரித்தாயே... உன்னை வணங்குகின்றேன். இந்த தேசத்தில் காலடி எடுத்து வைத்திருக்கிறேன். உன் மடியில் நடக்கத் துவங்கியிருக்கிறேன். என்னை கவனமாகப் பார்த்துக் கொள். என்னைச் சிதைக்காமல் என் தேசத்திற்குப் போவதற்கு உதவி செய்.

பகைவனுடைய ஊராக இருந்தாலும் நதிக்கும், எனக்கும் எந்தப் பகைமையும் இல்லை. ஊர் மண்ணுக்கும் எனக்கும் எந்தப் பகைமையும் இல்லை. இன்றில்லாது என்றேனும் ஒருநாள் என் குலக் குழந்தைகள் உன்னைக் கைப்பற்றி உன் நதியில் சுதந்திரபுருஷனாகக் குளிக்கின்ற ஒரு தருணம் வரட்டும். நான் இப்பொழுது அடிமையாக குளித்தாலும், உன் அன்பனாகக் குளிக்கிறேன். என்னை ஆசிர்வதிப்பாயாக" என்று கைகூப்பி வணங்கி நீரில் மூழ்கினான். நீச்சல் அடித்தான்.

மூன்று உபதளபதிகள் கைதிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதில் ஒரு உபதளபதி குணசீலனைச் சுட்டிக் காட்ட, மற்றவர்களும் அவனைப் பார்க்க ஆரம்பித்தார்கள். மற்ற கைதிகள் தடேர், தடேர் என்று விழ, குணசீலன் மட்டும் காவிரியைக் கும்பிட்டு கிழக்குப் பக்கமாய் பார்த்து முழுக்கு போடுவது கவனித்தார்கள்.

"நல்ல குடும்பத்தைச் சார்ந்தவனாக இருப்பான் போலிருக்கிறது. படித்தவன். எழுதத் தெரிந்தவன் என்று நினைக்கிறேன்."

"கவிதைகள் சொல்கிறான். ஆனால் மிகக் கோபக்காரன். பாண்டிய தேசத்து வெறி அதிகமாக உள்ளவன். அதனால்தான் கழுத்திற்கு வளையம் போட்டிருக்கிறேன்" என்று உபதளபதி சொல்ல, "படிக்காதவனுக்கே பாண்டிய தேசத்தைப் பற்றி வெறி இருக்கிற பொழுது, படித்த இவனுக்கு இருக்காதா. இவனை

அதிகம் துன்புறுத்தாதே, மிரட்டாதே. இவனால் நமக்கு உபயோகம் அதிகம் இருக்கிறது. இவனை வைத்துக் கொண்டு மற்ற வீரர்களை வழிக்குக் கொண்டு வருவது கவபம். பாண்டிய தேசத்து மற்ற கைதிகளுக்கு நாம் பேசுவதே புரியவில்லை. அவர்கள் காது கொடுத்து எதையும் கேட்பதில்வை. ஆனால் இவன் வேறுகுணம் உடையவனாக இருக்கின்றான். இவனோடு சுமுகமாக இருப்பது நல்லது. மற்ற வீரர்களை வழிக்குக் கொண்டுவர இவன் மிகவும் உதவுவான் என்பது என் எண்ணம்."

அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே காவிரியின் நீள, அகலங்களை குணசீலன் அளக்க ஆரம்பித்து விட்டான். எதிர்போட்டு நீந்தினான். மறுகரைக்குப் போனான். அங்கிருந்து உதைத்து மறுபடியும் இந்தக் கரைக்கு வந்தான். மீண்டும் மீண்டும் முங்கிக் குளித்தான்.

ஒரு உபதளபதி அவன் குதிரைக்குப் போய் அங்கிருந்து ஒரு வேட்டியை உருவி கரையில் இறங்கி, "குணசீலா" என்று கூவினான். குணசீலன் அருகே வர, அவன் மீது வேட்டியைத் தூக்கிப் போட்டான்.

"எதற்கய்யா" – குணசீலன் கேட்க, "தஞ்சையில் வெறும் இடுப்புத் துண்டோடு இருப்பது நாகரிகமாகக் கருதப்படமாட்டாது. எனவே வேட்டி உடுத்திக் கொள். உன் துணியை வேட்டிமீது இறுக்கக் கட்டி கொள்" என்று உத்தரவாகச் சொன்னான்.

குணசீலன் நன்றியாகத் தலையசைத்தான். அந்த வேட்டியை நீரில் முக்கிப் பிழிந்து உதறி உலர்த்தினான். அருகிலுள்ள மரக்கிளையில் போட்டு மறுபடியும் நீந்தினான்.

இரண்டு நாழிகை நீச்சலுக்குப் பிறகு சோழ வீரர்கள் உத்தரவிட, பாண்டிய வீரர்கள் கரையேறினார்கள்.

புளியும், காய்கறிகளும் கலந்து ஒரு குழம்பு தயார் செய்ய, சோறு தனியே கொதித்துக் கொண்டிருந்தது. கஞ்சியை வடித்து மாடுகளுக்குக் கொண்டு போய் ஆற வைத்துக் கொடுத்தார்கள். பிறகு பெரிய பாய்களில் சோற்றைக் கவிழ்த்தார்கள். ஆற வைத்தார்கள். பெரிய இலைகளில் சோற்றைப் போட்டு அதன் மீது காய்கறிக் குழம்பை ஊற்றினார்கள். புளியின் வாசம், மிளகின் நெடி தூக்கவாக இருந்தது. வெறும் சோற்றை உண்டபோதே

நாக்கில் ருசி தாங்காமல் நீர் அதிகம் எழுந்தது. சோற்றின் மணம் மூக்கின் உள்ளே போய் நுரையீரல் வரை குத்தியது.

குணசீலன் பசியோடு உணவை வேகமாகச் சாப்பிட்டான். குழம்பில் பிரட்டி இரண்டு, மூன்று கவளங்கள் லேசாக அரைத்து விழுங்கினான். புரைக்கேறியது. இருமினான். நீர்க்கு வளையைக் கொண்டுவந்து அருகே வைத்தார்கள். நீர் குடித்தான். சிறிது நேரம் சோற்றையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கு அவன் வீடு ஞாபகம் வந்தது. இந்த மாதிரி ஒரு உணவை என் வீட்டில் எவரும் சாப்பிட்டதில்லை. கம்போ, சோளமோ, மரவள்ளிக்கிழங்கோதான் பகாலமும் உணவாக இருந்திருக்கிறது. வெறும் காய்களும், கனிகளும்தான் உண்டு வாழ்ந்திருக்கிறார்கள். நல்ல அரிசிச் சோறு எப்போதாவது கிடைக்கும். அதுவும் நான்கு விரல் அளவுதான் கிடைக்கும். முகர்ந்து, முகர்ந்து பார்த்துவிட்டு அதை வாயில் போட்டு வெகு நேரம் ஊறவைத்து பிறகு மென்று சாப்பிடுவார்கள். இப்படி ஒரு தாமரை இலை நிறைய சோறுபோட்டு, காய்கறிக் குழம்பு ஊற்ற பார்த்ததேயில்லை.

அந்த மலைப்பகுதியில் நெல் விளையாது. எங்கோ விளைந்த நெல் வந்தாலும் குணசீலன் வீட்டில் உள்ளோருக்குக் கிடைக்காது. குறிப்பாக குணசீலனின் அம்மாவெவ்வாம் இவை நிறைய நெல்சோறு சாப்பிட்டதே இல்லை. நாகரீகமாய் நாலைந்து உடைகளோடு வாழ்ந்ததே இல்லை. இடையறாத போர்களின் காரணமாக அவள் வாழ்க்கை சிக்கலாகியிருந்தது. அவள் ககங்கள் பறிக்கப்பட்டிருந்தன. ஆனாலும் அதற்கு நடுவேயும் அவள் பாடல்கள் பாடிக்கொண்டும், கவிதைகள் சொல்லிக்கொண்டும், பழமொழிகள் பேசிக்கொண்டும் விடுகதைகள் பரிமாறிக்கொண்டும் வாழ்ந்தாள்.

குழந்தைகளுக்கு முடிந்த அளவு போஷாக்கான உணவுகளை அளித்தாள். அடிச்சா அடிக்கணும். கொஞ்கனா கொஞ்சணும் என்று வீரமுட்டினாள். நீதிபோதனை பகர்ந்தாள்.

அம்மாவின் ஞாபகம் தூக்கலாக வந்தபோது அக்காவின் ஞாபகமும், தங்கையின் ஞாபகமும் லந்ததன. அவர்களும் அம்மாவைப் போல் தங்கள் சுகங்களைத் தியாகம் செய்தலர்கள். அக்கா, அவள் புருஷனோடு இரண்டு வருடம் தான் குடித்தனம் நடத்தினாள். பிறகு போர் வந்துவிட புருஷன் எங்கிருக்கிறான்.

என்று தவித்தாள். விரல்கள் வெட்டுப்பட்ட நிலையில் புருஷன் வர, அவனுக்கு சிகிச்சை செய்து மூன்று லருடம் காப்பாற்றினாள். நடமாட முடிந்ததும் மறுபடியும் புருஷனைப் போருக்கு அழைத்துப் போய்விட்டார்கள். பிறகு அவன் லரவேயில்லை. அவன் இருக்கிறானா இல்லையா என்று தெரியவே இல்லை.

அவன் சாளுக்கியப் படையில் சேர்ந்துவிட்டதாக யாரோ சொன்னார்கள். ஆனால் அப்படி இருக்காது என்று குணசீலனுக்குத் தோன்றியது. அவன் சேரதேசத்தின் எல்லைக்குப் போயிருக்கவேண்டும். சேரப் பெண்கள் மீது அவனுக்கு விருப்பம் அதிகம். ஒருலேளை கருப்பாய், குண்டாய் இருக்கின்ற குணசீலனின் அக்காவை உதறிவிட்டு அங்கே போயிருக்கக் கூடும்.

குணசீலனின் அப்பா தெற்கே கோடிக்கரை போய், அங்கேயிருந்து படகு ஏறி கிங்களத்தீவுக்குப் போய்விட்டதாக செய்தி உண்டு.

பாண்டிய நாட்டில் பல வீரர்கள் வெளியே குடியேறத் தான் ஆசைப்பட்டார்கள். சொந்த மண்ணைவிட்டு பிரிந்து போய் ஏக்கத்தோடுதான் லசித்தார்கள்.

64

திருவிழாக்கள் மதுரையில் கொண்டாடப்பட்டது போல பாண்டிய தேசத்தின் எல்லையோர கிராமங்களில் கொண்டாடப்படவில்லை. ஒரு ஊருக்கும் இன்னொரு ஊருக்கும் அரை நாள், ஒரு நாள் பயணம் இருந்தது. வழியே அடர்த்தியான லனங்கள் இருந்தன. யானைகள் மறித்தன. புலிகள் பாய்ந்தன. இரவு நிறைய பாம்புகள் நகர்ந்தன. எனவே, ஊர்விட்டு ஊர்போவது என்பது இருபது பேர் சேர்ந்தாலொழிய இல்லையென்றாயிற்று.

குணசீலனைப்போல இளைஞனாக இருப்பவர்கள் மட்டுமே துணிந்து ஊர்விட்டு வெளியே வருவார்கள். பெண்கள் வந்ததேயில்லை. அப்படி வராத பெண்கள் லளர்த்த குழந்தைகள் கடுமையாகவும், எப்பொழுதும் கோபமாகவும் இருந்தார்

கள். அப்படிப்பட்ட நிலையெல்வாம் பார்க்கும்பொழுது இந்தக் குடந்தை மக்கள் மிக வித்தியாசமாகத் தெரிந்தார்கள்.

உயிரோடு வாழ வேண்டும். திரும்பவும் பாண்டிய தேசம் போக வேண்டும். குறிப்பாய் கிராமத்திற்குப் போக வேண்டும். அங்குள்ள மக்களிடம் போய் இப்படியெல்லாம் மக்கள் வாழ் கிறார்கள் என்று சொல்லவேண்டும். அவர்கள் மனோநிவையை மாற்றவேண்டும். ஒரு ஊருக்கும், இன்னொரு ஊருக்கும் இடையே தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். மதுரைக்கருகே உள்ள ஊரில் போய் குடிபெயர வேண்டும். வெறும் காடுகளில் வெறும் இலை கட்டிக் கொண்டு உடை யின்றித் திரிவதால் எந்த லாபமும் இல்லை.

உலகம் எவ்வளவு முன்னேறி இருக்கிறது. எவ்வளவு வசதி யாக மக்கள் வாழ்கிறார்கள் என்று நாம்தான் போய் சொல்ல வேண்டும். இங்கு இந்தச் சோழ தேசத்தை அணு அணுவாக அனுபவித்து, பிறகு சோழ வீரர்களிடம் விடைபெற்றுக் கொண்டு பாண்டிய தேசம் போக வேண்டும்.

இப்போதைக்கு பாண்டியர்கள் சோழ தேசத்தின் மீது படையெடுக்க முடியாது. முழங்காவை முறித்துப் போட்டு விட்டார்கள். படைகளைக் கலைந்து விட்டார்கள். மக்களின் மனத்தை மாற்றி விட்டார்கள். நான்கு பேர் மதுரையில் கூடிப் பேசினால் என்ன என்று கேட்டார்கள். தலைவர்களைப் பிரித்து மூலைக்கொன்றாய் அனுப்பி விட்டார்கள். வம்புக்கு வராத அந்தணர்களை அங்கங்கே குடியேற்றி விட்டார்கள். அந்தணர்கள் மூலம் சமாதானம் பரப்பி வருகிறார்கள். இதை மீறி பாண்டியர்கள் ஒன்றாகி போர் புரிவது என்பது இப்போதைக்கு இல்லை.

இன்னும் மூன்று தலைமுறைக்குப் பிறகு ஏற்படலாம். அப்போது அதற்குண்டான வலுவைப் பாண்டியர்கள் பெற வேண்டுமெனில் இப்பொழுதே ஆரம்பிக்க வேண்டும். பாண்டியர்களையும் நாகரிகமாக மாற்ற வேண்டும். மதுரை என்கிற சிறிய ஊர் மட்டும் நாகரிகமாக இருந்து புண்ணிய மில்லை. பாண்டிய தேசம் முழுவதும், எழுதவும், படிக்கவும் தெரிந்த மக்கள் அதிகம் இருக்க வேண்டும்.

சோழ தேசத்தில் எங்கு பார்த்தாலும் குதிரைகள் இருக் கின்றன. எல்லோரிடமும் குதிரைகள் இருக்கின்றன. துணி துவைக்கிற தொழிலாளிகூட மூன்று கோவேறுக் கழுதை

களையும், ஒரு மட்டக் குதிரையையும் வைத்துக் கொண்டு ஆற்றில் இறங்குகின்றான். பாண்டிய தேசத்தில் இவன் கிராமத்தில் கிராமத்துத் தலைவரிடம் கூட இந்த மாதிரி மட்டக் குதிரை இல்லை. அப்படியொரு மட்டக் குதிரை இருந்தால் அதைச் சுற்றிச் சுற்றி பல பேர் வந்து பார்ப்பார்கள்.

உணவு முடித்த பிறகு சிறிது நேரம் ஓய்வு கொடுத்தார்கள். குணசீலன் அயர்ந்து தூங்கினான். அவன் தூங்கும்போதும் அவனை யாரோ உற்று பார்ப்பதுபோல் ஒரு உணர்ச்சியை அடைந்தான். ஆனாலும் உதறிவிட்டு தூக்கம் முக்கியம் என்று தூங்கினான். எழுந்து மறுபடியும் காவிரியில் முகம் கழுவிக் கொண்டான்.

கரை ஓரமாய் போய் துளசி பார்த்து இரண்டு துளசி தளம் பறித்து காவிரிக்குப் போட்டுவிட்டு, ஒன்றை காதில் சொருகிக் கொண்டான்.

படை கிளம்பப் போகிறது என்று தெரிந்ததும் முதல் வரிசையில் போய் நின்றான். "சங்கிலி மாட்டலாம்." என்று உபதளபதியிடம் கேட்டான்.

உபதளபதி உற்று குணசீலனைப் பார்த்தான்.

"வேண்டாம். உனக்குச் சங்கிலி தேவையில்லை."

"ஏன். சோழ எல்லைக்கு வந்ததும் மாட்டினீர்களே..."

"இல்லை குணசீலா... உனக்குக் காவிரி பிடித்திருக்கிறது. சோழ தேசம் பிடித்திருக்கிறது. நீ தப்பித்து எங்கும் போக மாட்டாய் என்ற நம்பிக்கை இருக்கிறது. இன்று முழுவதும் உன்னைச் சங்கிலி இல்லாமல் விடுவதற்கு நான் விரும்புகிறேன்...

"அப்படியென்றால் இதையும் எடுத்து விடுங்களேன்." – கழுத்து வளையத்தைக் காட்டி உபதளபதியிடம் குணசீலன் கேட்டான்.

"அதை எடுக்க எனக்கு அதிகாரம் இல்லை. ஆனால் நீ நடந்து கொள்வதைப் பார்த்தால் விரைவில் எடுத்து விடுவார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது."

"இப்பொழுது எங்கே போகப் போகிறோம்..." என்று உபதளபதியைப் பார்த்து குணசீலன் கேட்டான்.

"பழையாறைக்கு... அங்கு வீரர்கள் வேண்டுமா என்று கேட்டு அந்த அரண்மனையில் வீரர்களைத் தேர்ந்தெடுத்த பிறகு போவோம்..."

"பனழயாறைதான் சோழர்களின் தலைநகரமா...?"

"இல்லை. தஞ்சைதான் தலைநகரம்..."

"அப்பொழுது பழையாறை...?"

இதற்கு முன்பு தலைநகரமாக இருந்தது என்று சொவ் கிறார்கள். சோழ மன்னர்களுடைய பூமி இது. பரம்பரை பரம் பரையாக சோழர்கள் அங்கிருந்து தான் தேசத்தை ஆட்சி செய்தார்கள். மிகப் பெரிய கோட்டையும், மிக அழகான தெருக்களும், வீடுகளும் கொண்ட நகரம். பாடசாவைகளும், நடன சாலைகளும் அதிகம் இருக்கும். மிக மிகச் செழிப்பான ஊர். இந்தா இதை வைத்துக் கொள்." மெல்லிய மூங்கில் பிரம்பை உபதளபதி குணசீலனிடம் தூக்கிப் போட்டான்.

ஒரு கைதிக்கு ஆயுதம் கொடுப்பது அதுவே முதல் தடவை. குணசீலன் அந்த மூங்கில் கழியை வாங்கிக் கொண்டு சிரித்தான்.

"என் மீது உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை வந்து விட்டதா." என்று சிரிப்போடு கேட்டான்.

"நம்பிக்கை எனக்கு வரவில்னவ. என் அதிகாரிகளுக்கு வந்திருக்கிறது..."

"யார் உங்கள் அதிகாரிகள்...?"

"அதிகம் கேட்காதே குணசீலா, உனக்குத் தெரிய வரும் போது சகலமும் தெரிவிப்பார்கள். இப்போதைக்கு அமைதியாய் இந்த ஊர்வலத்தை நடத்தி வா. பாண்டிய வீரர்களை உன் தலைமையில் இயக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். உன்னைப் பல அதிகாரிகள் கவனித்து வருகிறார்கள். எனவே நிதானமாக நடந்து கொள்." என்று அடிக்குரலில் சொன்னான்.

பழையாறை நோக்கி கைதிகளின் ஊர்வலம் நகர்ந்தது.

மிகப்பெரிய வயல்வெளி. வயல்வெளிக்கு நடுவே மிகப் பெரிய கோட்டை. ஒரு சில மரங்களைத் தவிர வடக்குப் பக்கம் எல்வா மரங்களையும் எரித்து விட்டார்கள். எதிரிகள் யாரும் ஒளிந்து, ஒளிந்து கோட்டைக்கருகே வந்துவிடக் கூடாதென்று மிகத் தெளிவாக இருந்திருக்கிறார்கள். வடக்குப் பக்கமே மூன்று பாதைகள் கோட்டையை நோக்கிப் போயின. இன்னொரு

பாதை ஊர் நோக்கிப் போயிற்று. கோட்டையை நோக்கிப் போகும் நடுப்பாதையில் ஊர்வலம் நகர்ந்தது.

கோட்டை நல்ல கற்கோட்டை. மண் குழப்பி கெட்டிப் படுத்தப்பட்டிருந்தது. உயரே காவல் வீரர்கள் இருந்தார்கள். ஊர்வலம் பார்த்ததும் எக்காளம் ஊதினார்கள். முரசுகள் முழங்கினார்கள். கோட்டையின் விளிம்பின் மீது ஆண்களும், பெண்களுமாய் ஏறி நின்று கைதிகளின் வருகையைப் பார்த்தார்கள். பாதை வளைந்து கோட்டைவாசல் நோக்கி போயிற்று. அந்தப் பாதையிலிருந்து கோட்டை வாசலுக்குப் போகும் முன் ஊரினுடைய கிழக்குக் கோடிக்குப் போய் அங்கிருந்து மேற்கு நோக்கித் திரும்பி கோட்டை வாசலை நோக்கி கைதிகள் நடக்கத் துவங்கினார்கள்.

கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டன. கோட்டைக்கு வெளியே சிறிய அகழி இருந்தது. அந்த அகழியில் காவிரியின் கிளைவாய்க்கால் நீர் கலந்து நகர்ந்தது. மரப்பாலம் தாண்டி உள்ளே நுழைந்ததும் மிகப் பெரிய திடல். கோட்டையைச் சுற்றிப் பல வீடுகள். அந்த வீடுகளில் போர் வீரர்கள். அந்த வீடுகளுக்கு நடுவே திடமாய், உயரமாய் ஓடுகள் வேய்ந்த இரண்டடுக்கு அரண்மனை தெரிந்தது.

மாளிகை அற்புதமானதல்ல. ஆனால் பழைமையானது. உறுதியானது. பல பேர் வாழ்ந்து, வளர்ந்தது என்பது தெளிவாகத் தெரிந்தது. அழகாக சுண்ணம் பூசி, மரப்பலகைகளுக்கு வர்ணம் பூசி அங்கங்கே மாவிலைத் தோரணம் கட்டி, லாசலில் வேப்ப மாலைகள் அணிவித்து, வழிபாடாய் சில காய்களைத் தொங்கவிட்டிருந்தார்கள். பூசணியில் முகம் எழுதி இருந்தார்கள். கருப்புக் கயிறுகளைத் தொங்க விட்டிருந்தார்கள். கோட்டையின் எல்லா திக்கிலும் இடுப்பு உயரத்திற்கு தேவதைகள் சிலைகளை நட்டு இருந்தார்கள்.

கோட்டைக்குள் இருந்த அத்தனை பேரும் மூன்று துணி உடுத்துகின்ற உயர்மரபினராக இருந்தார்கள். குதிரையை, யானையை கலனித்துக் கொள்பவர் மட்டும் இடுப்பில் இறுக்கிய அரைத் துண்டும், தலையில் அரைத் துண்டுமாய் காட்சியளித்தார்கள்.

அரண்மனைக்கெதிரே முதல் பகுதி கைதிகள் நிற்க வைக்கப்பட்டார்கள். அந்தக் கைதிகளிலிருந்துதான் அந்த அரண்மனை அதிகாரி தேர்ந்தெடுத்துக் கொள்ளப் போகிறார்.

குணசீலன் முதல் வரிசையில் கைகட்டி நின்றான். அவன் கழுத்து வளையம் ஆடிக் கொண்டிருந்தது.

அரண்மனையிலிருந்து வெளியே ஒரு மனிதர் வந்தார். நடுத்தர உயரம். முதுமையைத் தொடும் வயது. மிக நறுவிசாக. வேட்டியை மிக அழகாகக் கட்டியிருந்தார். தோளில் நீலநிறச் சால்வை சுற்றி வழித்திருந்தது. தலைப்பாகை இல்லாமல் காதுகளில் குண்டலமும், கைகளில் வளையமும், புஜங்களில் கேயூரமும், கழுத்திலே முத்துமாலையும், நவரத்தினக் கண்டிகையு மாய் வெளியே வந்தார். நடந்து வந்தார்.

முகத்தில் ஒரு அழகு இருந்தது. பிடரிபோல் சுருண்டு வளர்ந்திருந்த முடி அவர் அசைய, தானும் அசைந்து ஒரு அழகைக் கொடுத்தது. கண்களில் படிப்பு தீட்சண்யம் இருந்தது. ஆனால் இவர் சோழ மக்களைப்போல அத்தனை கோதுமை நிறமாக இல்லை. சற்று பழுப்பாக இருந்தார். கருப்பை விட சற்று அதிகமான நிறமாக இருந்தார். இன்னும் சற்று நேரம் இவரைத் தாயின் கருப்பையில் வேக விட்டிருந்தால் கருப்பாகப் பிறந்திருப்பார் என்று தோன்றியது. அவருடைய நிறத்தினால் உதடு சிவப்பு அதிகமாகத் தென்பட்டது. சோழ தேசத்தில் பல பேர் வெற்றிலைக் காவிப் பற்களுடன் இருக்க, இவர் பற்கள் லெள்ளை வெளேர் என்று இருந்தன.

நெற்றியில் திருநீறு பூசியிருந்தார். பூஜை முடித்து வருபவர்போல அவர் விரல்களுக்கிடையே ஒரு பூ இருந்தது. அருகே வந்து உபதளபதிகள் கும்பிடுவதற்கு முன் கையெடுத்து வணங்கினார். உபதளபதிகள் சட்டென்று வாள் உருவி அவர் முன்பு மண்டியிட்டார்கள். அவர், மண்டியிட்ட உபதளபதி களின் அருகே போய் தோள் தட்டிக் கொடுத்தார். எழுப்பினார். ஆதரவாக அணைத்துக் கொண்டார்.

யார் இது. இவர் நடவடிக்கைகள் மிக உயர்ந்தவனாக இருக்கின்றனவே. கண்களில் உண்மையான சந்தோஷமும், நட்பும் மிளிருகிறதே. அரசர் என்றால் கோபமாகவும், முறைப் பாகவும், எல்லோரும் பயந்து நடுங்கும் வண்ணம் கத்துபவராக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை உடைத்தெறிந்து இனிமை யாக இருத்தலே அரசரின் குணம் என்பதுபோல் காட்டியிருக் கிறாரே. யார் இவர்... அரசரா. வேறு ஏதேனும் இளவரசரா. ராஜராஜர் இப்படி இருப்பாரா. இது ராஜராஜர் என்றால் இவருக்குக் காட்டும் மரியாதை சற்றுக் குறைவாகத் தெரிகிறதே.

இராஜராஜரைப் பற்றி பேசுகிறபொழுதே பரவசமாகிறவர்கள் இங்கு சாதாரணமாக நிற்பதைப் பார்த்தால் இது இராஜராஜர் இல்லை என்று தோன்றுகிறது. ஏதோ ஒரு திரைச்சீலையில் பார்த்த இராஜராஜர் உருவம்போல் இது இல்லையெனில் இது யார் என்று தெரிந்து கொள்ள முடியவில்லையே.

உபதளபதிகள் விலகிப் போனார்கள். அவருக்கருகே போய் நின்று கை கூப்பி தங்கள் பெயரைச் சொல்லிக் கொண்டார்கள். அவரும் அவர்களின் பெயரைத் தாண்டி பல விஷயங்களை விசாரித்தார்.

காஞ்சிபுரம் பற்றி மிக அக்கறையாகக் கேட்டார். வழி நெடுக உள்ள கிராமங்களின் பெயர்களையும் கேட்டு எப்படி இருக்கிறது என்று வினவினார். அவர்களும், அவர் கேட்பதற்கு முன்பு பல்வேறு பதில்கள் சொன்னார்கள்.

திருவக்கரையில் எத்தனை ஆட்கள் விட்டோம் என்று கணக்குப் படித்தார்கள். இங்கு அடிமைகளாய் யாரேனும் வேண்டுமா என்று கேட்டார்கள். அப்படிக் கேட்கக் கூடாது என்று அவர் எச்சரித்தார்.

“கைதிகளுக்குப் பூரண கதந்திரம் கொடுக்கப்பட்டதா. விடுவிக்கப்பட்டார்களா.” என்று மறுபடியும் வினவினார்.

அவ்விதம் கைதிகளிடம் பேசியது அவர்களுக்கு விளக்கப்பட்டது.

“அப்படிப் போனவர்கள் போக மீதி உள்ளவர்களைத் தானே அழைத்து வந்திருக்கிறீர்கள்...

“ஆமாம்...

“பிறகு எதற்காக வளையம் மாட்டி இருக்கிறீர்கள்... என்று குணசீலனைப் பார்த்துச் சுட்டிக்காட்டிப் பேசினார்.

“அந்த இளைஞன் சற்று வேகமானவன்...

“அப்படியா. என்ன செய்தான்...

“இதுவரை எதுவும் செய்யவில்லை...

“பிறகு ஏன் வளையம் மாட்டியிருக்கிருக்கிறீர்கள்...

“அவனுக்கு வித்தை தெரியும். பாண்டிய தேசத்தின் உபதளபதியாய் இருந்தவன். அதனால்தான் ஒரு பாதுகாப்பிற்காக வளையம் போட்டிருக்கிறோம்...

"என்ன பாதுகாப்பு. அவனுக்குத் தான் விடுதலை கொடுத்து விட்டோமே...

"இல்லை. நாம் வெட்டிக் கொன்றது அவன் கண் முன்னே இருக்கிறது. எனவே, பதிலுக்கு நம்மை ஏதேனும் செய்து விடக் கூடும் என்ற பயத்தில் அவனுக்கு வளையம் போடப்பட்டிருக் கிறது. இரவு நேரத்தில் எழுந்து சோழ வீரர்களைத் தாக்கி விடுவானோ என்ற அச்சத்தில் அலனைப் பூட்டி வைப்பதும் உண்டு...

"இது என்ன முட்டாள்தனம்."

அந்த மனிதர் அவனை நோக்கி லந்தார். அலன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். அருகே வந்து நின்று அவனைப் பார்த்துச் சிரித்தார். குணசீலன் தன்னையறியாமல் கைகூப்பினான்.

65

"என் பெயர் குணசீலன், பாண்டிய தேசத்து ஒற்றர் படையைச் சேர்ந்த உபதளபதி. வாள் பிடித்த பன்னிரெண் டாவது வயதிலிருந்து இதுவரை பலநூறு போர்கள் பார்த்து விட்டேன். இதுவரை எந்தப் போரிலும் ஜெயித்ததில்லை.

பாண்டிய தேசத்திற்குப் போ என்று விடுதலையைப் பிச்சையாகப் போட்டார்கள்.

எனக்கு விடுதலையைப் பிச்சையாக எடுக்க விருப்ப மில்லை."

"பிறகு...

"சன்மானமாக வாங்கிக் கொள்ளத்தான் விருப்பம்...

எதிரே உள்ளவர்கள் விழிகள் உயர்ந்தன.

"உனக்குச் சன்மானம் கொடுப்பார்கள் என்று எப்படி நம்புகிறாய்."

"சோழர்கள் நாகரிகமானவர்கள். சோழ தேசத்திற்கு உதவி செய்தால் சோழர்கள் பதிலுக்கு உதவி செய்வார்கள் என்று எனக்குத் தெரியும்."

"அப்படியா, சோழ தேசம் உன் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறாயா..."

"எப்போது, யாரால், எதற்கு உதவி தேவைப்படும் என்று சொல்வ முடியாது. வாழ்க்கை மிகப் பெரிது. சிறு துரும்பும் பல்குத்த உதவும். என்னாலும் உங்களுக்கு உதவி இருக்கக்கூடும். எனவே, அவ்விதமான உதவிகள் ஏதேனும் செய்துவிட்டு உங்களிடமிருந்து சன்மானமாய் விடுதலையை வாங்கிக் கொண்டு, மறுபடியும் ஒற்றர்படையிவ் சேர்ந்து உங்களை எதிர்ப்பதுதான் என் எண்ணமே தவிர, நீங்கள் பிச்சையாகப் போடும் விடுதலைனய வாங்கிக்கொண்டு என்னாவ் பாண்டிய தேசத்திற்குள் நுழைய முடியாது. நுழைந்தாவ் அங்கு ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்."

"இந்த வளையம் உனக்குச் சிரமமாக இல்லையா..."

"சிரமமாக இவ்வை. வேதனையாக இருக்கிறது."

"இதோ நான் எடுத்து விடுகிறேன்." – அவர் கை நீட்ட, அவன் பளிச்சென்று அவர் கையை உறுதியாகப் பற்றிக் கொண்டான்.

"தயவு செய்து இந்த குணசீலனுக்குப் பிச்சை போடாதீர்கள். சன்மானமாகக் கொடுங்கள்." என்று முறைப்பாகச் சொன்னான்.

சோழ வீரர்கள் பளிச்சென்று வாட்களை உருவிக் கொண்டு அவருக்கருகே ஓடி வந்தார்கள். அவர் அவர்களைக் கையமர்த்தினார்.

"சரி" என்று சொன்னார்.

அவன் வளையத்தில் கை லைத்து அவனைக் கழுத்தோடு இழுத்து ஒருபுறம் தள்ளினார். வீரர்கள் கூட்டத்துக்கு நடுவே நகர்ந்து, ஒவ்வொருவராய் மேல் துண்டால் அடித்து தனியே போகச் சொன்னார். நாற்பத்தியொரு பேர் கொண்ட சிறிய கூட்டம் தனியே நகர்த்தப்பட்டது. அதில் அத்தனை பேருமே பாண்டிய வீரர்களாக இருந்தார்கள். அவனுடைய உயரம் உள்ளவர்களாகவே இருந்தார்கள்.

"எனக்கு இலர்கள் போதும், மற்றவர்களை நீ அழைத்துக் கொண்டு தஞ்சை போய்விடலாம். மாமன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் இவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்.

விரைவாக தஞ்சையை அடைவதற்கு ஏற்பாடுகள் செய்." என்று உபதளபதியில் முதல்வனாக இருக்கிறவனிடம் பேசினார்.

அவன் குனிந்து அவர் லார்த்தைகளை ஏற்றுக் கொண்டான்.

"உன் பெயர் என்ன சொன்னாய்...

"குணசீலன். பாண்டிய நாட்டு ஒற்றர் படையின் உபதளபதி."

"என் பெயர் என்னவென்று தெரியுமா..."

"தெரியாது."

"தெரிந்து கொள்ள விருப்பம் உண்டா?"

"அது உங்கள் விருப்பம்."

அவர் திரும்பி ஒரு வீரனைப் பார்க்க, அவன் உரத்த குரலில் 'வல்லனரயர் வந்தியத் தேவர் வாழ்க, வாழ்க. சோழக் குவக்கோடி குந்தவைதேவியாரின் காதல் நாயகர் வாழ்க, வாழ்க. சோழப் பெரும்படையின் பெருந்தனம், தளபதி வந்தியத்தேவ மகாராசர் வாழ்க, வாழ்க.' என்று கூறினான்.

குணசீவன் விழி உயர்த்தினான். மறுபடியும் நாலடி முன்னேறி அவர் எதிரே நின்று கை கூப்பினான். மண்டியிட முற்படும்போது அவர் தடுத்து நிறுத்தினார்.

"குளித்து உணலெடுத்துக் கொண்டீர்களா குணசீலன்."

"ஆயிற்று..."

"உங்களிடம் இருப்பது இந்த ஒரேயொரு உடைதானா..."

"ஆமாம்...

"யாரங்கே. இவருக்கு இரண்டு உடைகள் கொடு." என்று கட்டளையிட, உள்ளே ஓடிப்போய் ஒரு தாதி உடை கொண்டு வந்தாள்.

மஞ்சள் பழுப்பு நிறத்திவ் இரண்டு துணிகள் அவனுக்குக் கொடுக்கப்பட்டன. இடுப்பில் ஒன்றைக் கட்டிக்கொண்டு, பழைய துணியை அவிழ்த்துச் சுருட்டி னவத்துக் கொண்டான். இன்னொன்றை உதறி மடித்து தனலயில் முண்டாசாகக் கட்டிக் கொண்டான். இடுப்புக் கோமணம் காவிரி நீரிவ் நனைத்தது, மெல்லச் சிவ்லென்று இருந்தது. மனமும் குளுமையாக இருந்தது.

அவர் முன்பு நின்று மறுபடியும் வணங்கினான். அதற்குள் அவர் யாரையோ ஓலை எழுதச் சொல்லி கையில் வைத்திருந்தார்.

"இந்தா, இது அடையாள ஓலை. இன்றிலிருந்து நீ என்னுடைய சேவகன். எனக்கு உதவி செய்ய உன்னை நியமித்திருக்கிறேன். இந்தச் சிறிய படை உன் தலைமையில் இயங்கும். நாம் இப்பொழுதே தஞ்சையை நோக்கிப் போகிறோம்."

"நம்முடைய வேலை என்ன..." குணசீலன் கேட்க, "அது பிற்பாடு சொல்லப்படும். சோழ தேசத்தை நன்றாக அனுப வித்துப் பார்த்துக் கொண்டு லா..."

அவர் குதிரை ஏறி உட்கார்ந்து கொண்டார். அவனுக்கும் ஒரு குதிரை தரப்பட்டது.

அந்த நாற்பத்தோரு வீரர்களுக்கும் மூங்கில் பிரம்புகளும் தரப்பட்டன. அவர்கள் அதை வாங்கி வளைத்து காற்றில் வீசி சந்தோஷமாய் பயிற்சி செய்தார்கள்.

"எதற்கு இது." என்று ரகசியமாய் குணசீலனிடம் கேட்டார்கள். குணசீலன் உதடு பிதுக்கினான்.

அங்குள்ள வீரர்களுக்கு உள்ளேயிருந்து கடகட பானகம் வழங்கப்பட்டது. மூங்கில்களைச் கவரோரம் சார்த்திவிட்டு வீரர்கள் பானகம் குடித்தார்கள். ஏப்பம் விட்டார்கள்.

"அவரவர் ஊன்றுகோல்களை எடுத்துக் கொண்டு தஞ்சையை நோக்கி நகரவும்." என்று ஒரு வீரன் கட்டளையிட, "ஊன்றுகோலா." – குணசீலன் திகைத்தான்.

பளு தூக்கும்போது ஊன்றி நடப்பதற்குத்தான் அந்தக் கோல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று அப்போதைக்கு அங்கு எலருக்கும் தெரியவில்லை.

இரண்டிரண்டு பேராக நின்று கொண்டு வரிசையாக வர வேண்டும். அரை மூங்கில் கழி தூரம் இடைவெளி ஒருவருக் கொருவர் இருக்க வேண்டும்.

"ஹா" என்று அதட்டலாய் சோழ உபதளபதி குரல் கொடுத்ததும், அந்த வரிசை சொன்ன திசையை நோக்கி ஓட வேண்டும். கல்லோ, முள்ளோ, ஆறோ, சேறோ – படைவீரர்கள் என்பவர்கள் எதற்கும் நிற்காமல் ஓடுவார்கள். ஓடுகிறபொழுது ஹெள, ஹெள என்று இரைப்பார்கள். அந்த இரைச்சலை ஒரு

தாளகதிக்குக் கொண்டு லருவார்கள். அந்த இரைச்சல் சோர்வடைவதைச் சற்று குறைக்கும். உள்ளே காற்று போய் வெளியே வருவதைச் சீராக்கும் நெடுந்தூரம் அப்படி கத்தியபடி ஓட முடியும்.

ஓடும்பொழுது முள் குத்தி விட்டால், ஓடுவது நிற்காமல் கால் தூக்கி குத்திய முள்ளில் படேர் என்று மூங்கிலால் அடித்துக் கொள்வார்கள். முள் உள்ளங்காலுக்கு உள்ளே போய் விடும். அப்படி பல முட்கள் னதத்து கால்கள் மரத்துப்போன பிறகு தான் ஓடுலது எளிதாகும். மேல் தோனலவிட உள்ளங்கால் கன்னங்கரேல் என்று இருக்கும். நிறைய தடிப்புகளும் காய்ப்புகளும் இருக்கும். முள்ளுக்குப் பயப்படுகிறவன் பயணத்திற்கு ஆகமாட்டான்.

ஆனால், சோழ வீரர்களின் உபதளபதிகளுக்குச் செருப்பு கொடுக்கப்பட்டிருந்தன. அந்தச் செருப்புகளை வார் கோர்த்து முழங்கால் வரை இறுக்கப் பின்னி காலோடு இணைத்துக் கொண்டார்கள். வெகுதூரம் போகும்போது, அந்தத் தோல் கயிற்றை எடுத்துவிட்டு வெறும் பாதரட்சைகளாகப் புயன் படுத்தினார்கள். அரண்மனைகளில் உலாவும்போது வாசலில் பாதரட்சைனயக் கழற்றிவிட்டுப் போனார்கள்.

பாதரட்சைகள் போட்டுக் கொண்டிருப்பதாலேயே உபதளபதிகளின் குதிரைகளின் சேணங்கள் பெரிதாக இருந்தன.

இதென்ன கால் னலக்கவா, தலை வைக்கவா என்று பாண்டிய வீரர்கள் கேலி செய்கிறபொழுது 'நான் கால் வைக்க; நீ தலை வைக்க' என்று சோழ வீரர்கள் பதில் சொன்னார்கள்.

கடல் கடந்து லெகு தொலைவிலிருந்து அரபு தேசத்தி லிருந்து குதிரைகள் லந்தன. அந்தக் குதினரகளைச் சோழர்கள் நன்கு பராமரித்து வந்தார்கள்.

அந்த அரபியர்கள் கேட்டுக் கொண்டபடி முன்னில்லாத கடிவாளமும் மிருதுவான இருக்கையும், கூரிய முனனகள் இல்லாத சேணமும் குதினரகளுக்கு அணிவித்தார்கள். நான்கு கால்களிலும் லாடம் அடித்தார்கள். முரட்டுக் குதினரகளுக்கு கண்களில் பட்டைப் போட்டார்கள். கம்பும், சோளமும் கொள்ளும் கலந்து போட்டார்கள். பசிக்க வேண்டுமென்பதற் காகச் சிறிதளவு சாராயம் கொடுத்தார்கள். உடம்பெல்லாம் விளக்கெண்ணெய் தடவி, பிறகு குளிப்பாட்டினார்கள்.

அங்கங்கே குதிரைகள் பராமரிக்கப்படுவதை வியப்போடு பார்த்தபடி குணசீலன் போனான்.

தஞ்சையை நெருங்கும்போது தொலைவே பெரும் புகை தெரிந்தது.

"என்ன சமையலாகிறதா...?"

ஒரு பாண்டிய வீரன் கேட்க, சோழ வீரர்கள் சிரித்தார்கள்.

"இல்லை. அது கண்ணாம்புக் காளவாய்." என்று சொன்னார்கள்.

"எதற்காக கண்ணாம்பு..."

"வீடுகளுக்கு வெள்ளையடிக்க, காரையோடு சேர்க்க." என்று பதில் சொன்னார்கள்.

"இவ்வளவு புகை வருகிறதே. அத்தனை கண்ணாம்பு தேவைப்படுமா."

"தெரியவில்லை. ஒருவேளை கோயில் கட்டும் பணி ஆரம்பித்து விட்டதோ என்னமோ. அதற்காக இருக்கலாம்... என்று ஒரு உபதளபதி பதில் சொன்னான்.

காவிரியை நெருங்கும்போது வேறு பக்கத்திலிருந்து ஒரு பாதை வந்தது. தஞ்சாவூரை நோக்கிப் போகும் பாதையோடு அது இணைந்து கொண்டது. அந்தப் பாதை முழுவதும் வண்டிகள் போன தடங்கள் தெரிந்தன. சக்கரங்கள் ஆழப்பதிந்திருப்பது தெரிந்தன. இதுவரை மிருதுவாக இருந்த மண்பாதை இப்பொழுது கடினமாக மாறிற்று.

வண்டித் தடங்களின் பள்ளங்கள் அதிகமிருந்தன. கவனமாகக் கால் வைத்து நடக்க வேண்டியிருந்தது. மிகவும் பள்ளமான இடங்களில் மணலைக் கொட்டிச் சரி செய்திருந்தார்கள்.

வந்தியத் தேவர் கீழே இறங்கி அந்தப் பாதையைப் பார்த்து விட்டு மறுபடியும் குதிரையில் ஏறிக்கொண்டார்.

அருகிலிருந்தவர்களிடம் ஏதோ பேசினார்.

ஆயிரம் வீடுகள் கொண்ட கிராமங்கள் இருந்தன. கிராமங்களிலிருந்து மந்திர சப்தம் கேட்டது. கோயில் மணி அசைவது தெரிந்தது. குழந்தைகள் கற்றிச் கற்றி வந்தார்கள்.

பெரிய மரங்களை அறுத்து தெருவின் ஓரத்தில் அடுக்கி வைத்திருந்தார்கள். அந்த மரங்கள் உருளாதிருக்க மூங்கில்களை பூமியில் ஊன்றி தடுப்பாகப் போட்டிருந்தார்கள்.

பெரிய கொட்டகைகள் போட்டு மரவேலைகள் நடந்து கொண்டிருப்பது சுத்தியல் சப்தத்தில் தெரிந்தது.

சற்று இளைப்பார நேரம் கிடைத்த போது, குணசீலன் ஓடிப்போய் அந்தக் கொட்டகைகளுக்குள் எட்டிப் பார்த்தான்.

இருபது, முப்பது தச்சர்கள் மரத்தில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். பெரிய உத்திரங்கள் இழைத்துக் கொண்டிருந்தார்கள். மரத்திற்கு ஆப்பு கொடுத்து பெரிய பலகைகளாக நீண்ட வாளால் அறுத்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த வேலை நடக்கும் கொட்டகைக்குப் பின்னே இன்னொரு கொட்டகையில் அவர்களுக்குச் சோறு தயாராகிக் கொண்டிருந்தது. அதைப் பெண்கள் மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"எதற்காக இந்த வேலை. எதற்காக இந்த உத்திரங்கள்." என்று குணசீலன் கேட்டான்.

"கோயிலுக்காகச் செய்கிறார்கள்."

"கோயில் மரத்தாலா செய்யப்படும்." என்று மறுபடியும் கேட்க, "தெரியாது." என்று பதில் சொன்னார்கள்.

"சிற்பங்கள் செய்கிறவர்கள் தஞ்சையில் அதிகமென்று கேள்விப்பட்டிருக்கிறேனே. இங்கு யாருமில்லையா."

"இன்னும் உள்ளே போக வேண்டும்... பதில் சொல்லி விட்டு வேலை செய்யத் துவங்கினார்கள்.

சிறிது நேரம் நின்று பார்த்துவிட்டு குணசீலன் படையோடு கலந்து கொண்டான்.

அவன் வந்து கலந்து கொள்ளதை வந்தியத்தேவர் பார்த்தார். மெல்லச் சிரித்தார். மறுபடியும் தஞ்சை நோக்கி குதிரை செலுத்தினார்.

66

சிறிது நேர இளைப்பாறலுக்குப் பிறகு அந்தப் படை தஞ்சையை நோக்கி ஓடத் துவங்கியது.

தஞ்சைக்குள் யாரும் சோம்பித் திரிவதேயில்லை. எல்லோருக்கும் வேலை இருக்கிறது.

பெண்கள், குழந்தைகள் உட்பட எல்லோரும் ஏதோ ஒரு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

வயல் லேலை மட்டுமேதான் மதுரையில் பிரதானமாக இருக்கும். மற்ற வேலைகள் நிதானமாகத்தான் ஆகும்.

ஆனால் இங்கோ பேசக்கூட நேரமில்லாதவர்கள் என்பதாய் எல்லோரும் மும்முரமாக இருக்கிறார்கள்.

இது ஆச்சரியமாக இருக்கிறது. யாரும் அடக்கப்பட்ட தாகத் தெரியவில்லை. கையில் சவுக்கு வைத்துக் கொண்டு எவரும் திரியவில்லை. ஆனாலும் வேலை வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது.

சிற்பிகளைப் பார்ப்பதற்கு இன்னும் உள்ளே போக வேண்டுமாம். இதுவரை சிற்பிகளைப் பார்த்ததே இல்லை. ஒரு சிற்பம் எப்படிச் செதுக்கப்படுகிறது என்று கவனித்ததே இல்லை. பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது.

சுண்ணாம்புக் காளவாய்க்கு அருகே நடந்து வந்து விட்டது நெடியிலிருந்து தெரிந்தது. புகை பெரிய கூண்டினால் மேலே தள்ளப்பட்டாலும் காற்றின் அழுத்தத்தால் சகல பக்கமும் பறந்தது. மூக்கை அரித்தது. பலமுறை குணசீலன் தும்மினான்.

அது வெறும் சுண்ணாம்பு இல்லை. சாந்துக் கலவையாம். அகலமான மரத்தொட்டிகளில் அதை அள்ளிப் போட்டுக் கொண்டு மாட்டு வண்டிகளில் மாட்டி தெற்கு நோக்கி ஓடினார்கள்.

அந்த வண்டியை யாரும் தடை செய்யாதிருந்தார்கள்.

சிறிய குட்டையான மாடுகள் அந்த வண்டிகளை வேகமாக இழுத்துச் சென்றன.

வழியில் அந்த சாந்துக் கலவை சிந்திச் சிந்தி சாலை முழுவதும் ஒரு வெண்மை பரவியிலிருந்தது. அதே சமயம் அந்த சிந்திய சாந்துகளைச் சில கிழவிகள் போட்டி போட்டுக் கொண்டு எடுத்துக் கொண்டார்கள். வேறு எங்கேயோ போய்ச் சேமித் தார்கள். அந்தச் சாந்துக் கலவை இடத்திலும் பலநூறு ஆட்கள் வேலை செய்தார்கள். ஒரே கூச்சலும், குழப்பமுமாக இருந்தது.

அங்கேயும் அவர்களுக்கு உணவு தயாராகிக் கொண்டிருந்தது.

சாந்துக் கவவையைத் தாண்டி உள்ளே போக பெரிய அகழி. அகழிக்கு மறுபக்கம் குணசீலனைச் சேர்ந்தவர்கள் நிற்க வைக்கப்பட்டார்கள்.

உள்ளே நகரம் தெரிந்தது. காரையால் செய்யப்பட்ட உயர்ந்த கட்டடங்கள் தெரிந்தன.

மரப்பாலம் இறக்கப்பட்டது.

அவர்கள் ஒவ்வொருவரும் உற்றுப் பார்த்து உள்ளே அனுப்பப்பட்டார்கள். குணசீலன் தாண்டும்போது அவனை ஒருவர் தடுத்து நிறுத்தினார்.

"யார்ர் நீ..."

"பாண்டிய தேச உபதளபதி. ஒற்றர் படையில் இருந்திருக் கிறேன்." என்று வழக்கம்போலச் சொன்னான்.

"நான் யார் தெரியுமா." என்று பதிலுக்கு அந்த ஆள் கேட்டார்.

"தெரியும். நீங்கள் பிரம்மராயரின் ஆள். பிரம்மராயரின் ஒற்றர் படையைச் சேர்ந்தவர். உங்களுக்குப் பெயர் வைணவ தாசன்."

"நீ எங்கு பிடிபட்டாய் குணசீலா..."

வைணவதாசன் சாதாரணமாகக் கேட்டார்.

அந்த மனிதருக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். மெல்ல மீசை நரைத்துப் போயிருந்தது. இளம் தொந்தி இருந்தது. ஆனால் கண்கள் கூர்மையாக இருந்தன. பரபரப்பாக நாலா பக்கமும் அலைந்தன. ஆளை எடை போடுவதே வாழ்க்கை என்பதுபோல அவர் உற்றுப் பார்த்துக் கொண்டே பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

சட்டென்று பேச்சின் திசை மாற்றி அப்பொழுது ஏற்படும் பாவங்களை வேகமாகக் குறித்துக் கொண்டிருந்தார். ஒற்றர் படையைச் சேர்ந்தவர் என்பதை அவரிடம் சிறிது நேரம் பேசினாலும் கண்டுபிடித்து விடவாம்.

"என்னைக் காஞ்சியில் கைது செய்தார்கள். நான் காஞ்சி யில் இருக்கிறேன் என்பதை மதுரைப் படையெடுப்பில் தெரிந்து கொண்டார்கள்."

"எப்பொழுது கைது செய்தார்கள்."

"நான் கைது செய்யப்பட்டு மூன்று வருடங்களுக்கும் மேலாயிற்று."

"மூன்று வருடமும் சோழ தேசத்திலேயே இருந்தாயா."

"ஆமாம். திருவொற்றியூரில் குடி வைத்திருந்தார்கள். ஆனால் இப்பொழுதுதான் தஞ்சையை நோக்கி வரவழைத்திருக்கிறார்கள்."

"நல்லது குணசீலா. மதுரைக்குப் போகச் சொல்லியிருப்பார்களே."

"ஆமாம். நான் போக விரும்பவில்லை."

"ஏன்...

"மதுரையில் ஒன்றுமில்லை. எல்லாமும் கலைந்து போக அங்கே இருப்பதும் ஒன்றுதான். இங்கே இருப்பதும் ஒன்றுதான். சோழர் ஆட்சி அங்கு நடக்கிறதால் நான் இங்கேயே இருக்க விருப்பப்படுகிறேன்."

"இங்கே ஒரு முக்கியமான வேலையை மன்னர் துவங்கியிருக்கிறார் என்பது தெரியுமா."

"ஆமாம். கோயில் கட்டுகிறார் என்று சொல்கிறார்கள்."

"அந்தக் கோயில் வேலையில் கவந்து கொள்ள விரும்புகிறாயா குணசீலா."

"எந்த வேலையாக இருந்தாலும் கலந்து கொள்ள விரும்புகின்றேன்..."

"வந்தியத் தேவருடைய ஆளாக உன்னை யார் சேர்த்தார்கள்."

"அவரே என்னைப் பார்த்து, அருகே அழைத்து, என் பெயர் கேட்டு சேர்த்துக் கொண்டார்."

"நல்வது. நீ மதுரையின் ஒற்றர் படையைச் சேர்ந்தவன். மிகத் திறமைசாலி. உன்னை மற்ற வீரர்களை நடத்துவதைப் போல இங்குள்ள சோழ வீரர்கள் நடத்தமாட்டார்கள். நடத்தக் கூடாது என்பதற்காக இப்பொழுது ஒரு கேயூரம் அணிவிக்கிறோம். இரும்பினாலான இந்தக் கேயூரத்தை அதாவது தோள் வளையத்தை உன் கையில் அணிந்து கொள்ளலாம். உன் புஜத்திலே இந்தக் கேயூரம் இருக்கும் பொழுது உனக்கு அதிகாரிகளல்லாது வேறு எவராலும் தண்டனை தாப்படமாட்டாது.

எங்கே கோயில் கட்டுகிறார்களோ - அந்த இடத்துக்கு அருகே உனக்குக் குடியிருப்பு தரப்படும். இப்பொழுது குடியிருப்பு மேலே தென்னை ஓலை வேய்ந்ததாக இருக்கும். மண் சுவர் நிரம்பியதாக இருக்கும். அதற்கு அருகிலேயே காரைச்சுவர் எழுப்பப்பட்டு அதில் உங்களைக் குடிவைக்கப்போகிறார்கள். அந்தப் பணியும் விரைவாகத் துலங்கி விட்டது. முழு மனதாய் உன்னைக் கோயில் பணியில் ஈடுபடுத்திக்கொள். கோயில் பணி என்று வந்துவிட்டால் சேரர், சோழர், பாண்டியர் என்று எந்தப் பிரிவும் இல்லை.

இது சிவன் வேலை. அப்படி உன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று சோழ அதிகாரிகளும், மன்னர்களும் எதிர்பார்க்கிறார்கள். வந்தியத்தேவர் உன்னால் அவ்விதம் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளமுடியும் என்பதை உன் முகம் வைத்துப் பார்த்து விட்டு, உன்னைத் தன் படையில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்."

அந்த அதிகாரி அவனையே பார்த்துக் கொண்டு, அவன் தோளில் கை வைத்து மெல்ல கோட்டைக்குள் நடத்திச் சென்றார்.

"ஒரு வகையில் நீ பாக்கியசாலி. இங்குள்ள அதிகாரிகளிலேயே மிகவும் கருணை வாய்ந்தவர், இதமானலர், இனிமையானவர், மக்களுடைய பிரச்சினையை மிக எளிதிலே புரிந்து கொள்ளக்கூடியவருமான வந்தியத் தேவரிடம் வேலையில் சேர்ந்திருக்கிறாய். இங்கு இவரிடம் வேலை செய்ய முடியாவிட்டால் இந்தச் சோழ நாட்டில் வேறெங்கேயும் உன்னால் ஒரு நாள் கூட வேலை செய்ய முடியாது என்பதைப் புரிந்துகொள்.

கோபமே வராத அதிகாரி வந்தியத்தேவர். வந்தியத் தேவரைவிட மிகக் குளுமையானவர் குந்தலைப் பிராட்டியார். இந்த இரண்டு பேரிடமும் நேரடித் தொடர்பு உனக்கு ஏற்பட்டு விட்டால், மிக உன்னதமான இடத்திற்கு உன்னைக் கொண்டு வந்து விடுவார்கள். பாண்டிய தேசத்தையே மறந்துபோய் சோழ தேசத்திலேயே கலந்து கறைந்து போய் விடுவாய் என்பது திண்ணம்.

சோழ தேசம் இரண்டு கைகளையும் விரித்து ஒரு மிகச் சிறந்த வீரனை, பண்பாளனை, ஒரு தமிழ் மகனை வரவேற்கிறது. வா... வா குணசீலா... சோழ தேசத்திற்கு வா." என்று கை

விரித்து அவன் புஜங்கள் பற்றி அவனை இழுத்துத் தன்னோடு அணைத்துக் கொண்டார்.

குணசீலனும் அணைத்துக் கொண்டான்.

உள்ளுக்குள்ளே படபடக்கும் பாண்டிய தேசத்தின் மீன் கொடியும், பாண்டிய தேசத்தின் அரியாசனமும், மணிக்கிரீடமும், உடைவாளும், மதுரைக் கோயிலும், மீனாட்சி அம்மன் சந்நிதியும், வைகை ஆறும், அந்தக் கறுப்பு நிற மக்களும், மலைகளும் காடும் தோன்றின.

'என் மண்ணை, என் தேசத்தை நான் எப்படி மறக்க முடியும். நான் இங்கு இருப்பதே எங்களைப் பலப்படுத்திக் கொள்வதற்கு. எனக்கு இங்கே பயிற்சி இருக்கிறது. இந்தப் பயிற்சியை முடித்துக் கொண்டு நான் பாண்டிய தேசம் போவேன். அங்குள்ள இளைஞர்களுக்கு சோழ தேசத்தின் நாகரிகம் பற்றிச் சொல்லித் தருவேன். சோழ தேசத்தின் போர்க்கலை பற்றிப் பாடம் புகட்டுவேன். சோழ தேசத்தை என்றேனும் ஒரு நாள் நீங்கள் அடித்து நொறுக்க வேண்டுமென்று ஆவேசமூட்டிவிட்ட பிறகே மரணமடைவேன்.' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

அதிகாரியை அதிகம் தொடாமல் மிருதுவாகத் தொட்டுத் தழுவி மெல்ல மெல்ல விலகி நின்றான். கைகூப்பி குனிந்து வணங்கினான்.

"நீங்கள் சொல்வது போல என் தேசம் மறந்து சிவன் வேவையாகவே இருக்க நான் விரும்புகின்றேன். சிவனுக்கென்று உழைக்க நான் தயாராக இருக்கின்றேன். ஒரு நல்ல வைணவப் பாடலை வைஷ்ணவ திரிதண்ட சந்நியாசிகள் பாடுவது கேட்டிருக்கிறேன்.

தெரியேன் பாலகனாய் பல தீமைகள் செய்துவிட்டேன். பெரியேன் ஆயின பின் பிறர்க்கே உழைத்து ஏழையானேன். கரிசேர் பூம்பொழில் சூழ் கன மாமலை வேங்கடவா அரியே வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே.

அரசர்களுக்கும், அதிகாரிகளுக்கும் உழைத்தது போதும். இறைவனுக்கு உழைக்க விரும்புகின்றேன்." – அடிக்குரலில் நிதானமாக குணசீலன் பேச, வைணவதாசன் மனம் குழைந்தார். அவனைத் தட்டிக் கொடுத்தார். கையில் மீன் வளையம் மாட்டிவிட்டார். புஜத்திலிருந்து அது அழகாகப் பொருத்தி நின்றது.

ஒரு வீரனை அழைத்து, "இவனை லந்தியத்தேலர் இல்லத்துக்கு அழைத்துப் போ. அங்கு அலரிடம் பேசிய பிறகு இவன் தன் இருப்பிடத்திற்குப் போகட்டும், இரண்டு மூன்று நாட்கள் வேலை ஒன்றுமில்லை. சும்மா தஞ்சையைச் சுற்றிக் கொண்டிரு. உணவுக்கும், மற்ற விஷயங்களுக்கும் லந்தியத்தேவர் காக கொடுப்பார்.

எங்கு வேண்டுமானாலும் சுதந்திரமாகப் போகலாம். எவரிடம் லேண்டுமானாலும் பேசலாம். ஆனால் பண்போடும், அன்போடும் பேசுவது உனக்கு நல்லது கொடுக்கும். வீண் விலாதங்களில் ஒருபோதும் சிக்கிக்கொள்ளாதே. சில சமயம் சில சோழ வீரர்கள் அத்து மீறினால் அமைதியாக இரு. அவர்கள் அத்து மீறுகிறார்கள் என்று தெரிந்தால், சோழ அதிகாரிகள் சோழ வீரர்களை மிகக் கடுமையாகத் தண்டிப்பார்கள், அப்படி சோழ அதிகாரிகள் தண்டிக்காது போனால், நீ வந்தியத் தேவரிடம் இது பற்றிக் குறை கூறலாம். அவர் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்.

எல்லா பேதங்களையும் மறந்து ஒன்றாக உழைக்க லேண்டும் என்பது தான் இங்குள்ள அதிகாரிகளின் விருப்பம்..."

அந்தச் சோழ வீரனும், குணசீலனும் துரித நடையாய் ஊருக்குள் நுழைந்தார்கள். கோட்டையைத் தாண்டி முதல் சுற்றுத் தெருவைக் கடந்து, ஒரு தெருவின் மூலம் உள்ளாலை எனச் சொல்லப்படும் அதிகாரிகளும், அரச அலுலலகங்களும், அரண்மனையும் இருக்கிற இடத்திற்குப் போக, குணசீலன் திகைத்துப் போனான்.

இவ்லளவு நெருக்கமாக மாட மாளிகைகள் கட்டப் பட்டதை அவன் பார்த்ததேயில்லை. நான்கு தெருக்கள் மிக நெருக்கமாய் மூன்று அடுக்கு மாடங்களோடும், பெரிய தூண் களோடு, மிக வனப்பாய் வண்ணம் தீட்டப்பட்டு - சுவர்களில் சித்திரம் எழுதப்பட்டு, அற்புதமான முகப்புகள் கொண்ட பெரும் கதவுகள் கொண்ட காரை வீடுகள் காணப்பட்டன.

ஒவ்வொரு வீட்டு வாசலிலும் காவலுக்கு ஆண்களோ, பெண்களோ தடியேந்தி உடைவாள் தரித்து நின்றிருந்தார்கள். அப்படி ஆட்கள் நிற்கின்ற வீடுகளெல்லாம் அதிகாரிகளின் வீடுகள் என்று சோழ வீரன் தெரிவித்தான்.

நாலு வீடுகள் தாண்டியதும் ஒரு சந்து இருந்தது. இரண்டு குதிரைகள் போகின்ற அகலமாக அது காணப்பட்டது. கெட்டி

யாக பாறைக் கற்கள் பதித்து குதிரைகள் போகும்போது வழுக்காமல் இருக்கும்படி போடப்பட்ட பாதையாக இது இருந்தது.

"இப்படி ஏன் இடைவெளி விட்டிருக்கிறார்கள்." என்று கேட்க, "பின்பக்கம் போக வேண்டுமென்றால் அவ்வது அடுத்த தெருவுக்குப் போக வேண்டுமென்றால் வீதிகளைச் சுற்றிக் கொண்டு போக வேண்டி வந்துவிடும். மாட வீதிகளைச் சுற்றிக் கொண்டு தேர்களோ, யானைகளோ போகலாம். ஆனால் மக்கள் ஒவ்வொரு முறையும் அப்படிப் போவது கடினமல்லவா. ஆகவே நடந்து போகிறவர்கள், குதிரையிவ் போகிறவர்கள் சீக்கிரம் தெருவிற்குப் போவதற்காக உள்ளாலைகளிலிருந்து வெளியே போவதற்காக – அதாவது புறம்படிக்குப் போவதற்காக உண்டான இடம் இது..."

"புறம்படி என்றால் என்ன?"

"கோட்டையைத் தாண்டி இருக்கின்ற திடவ். அங்கு அமைந்திருக்கிற தற்காலிக குடிசைகள். தற்காலிக தங்க வைப்புச் சத்திரங்கள். புறம்படியில் உண்டானவை. யானைகளும், வெளியூரிலிருந்து வருகின்றவர்களுடைய வண்டிகளும், கிராமத்திலிருந்து வருகிறவர்களுடைய மாடுகளும் அங்கு கட்டப்படும்.

உள்ளாவையை அதிகம் அசிங்கப்படுத்தக்கூடாது என்பதற்காக மிக கவனமாக ஆட்களை உள்ளே அனுமதிப்பார்கள். அவசியமில்லாதவரை உள்ளாவைகளுக்கு அனுப்பவே மாட்டார்கள். சோழ தேசத்துக் கிராம மக்களே உள்ளாலைகளுக்கு வருவது என்பதே இயவாத காரியம்.

விசேஷக் காலங்களிவ் மன்னர் பார்க்க ஆசைப்பட்டால், அதிகாரிகளைச் சந்திக்க வேண்டுமென்று கிராம மக்கள் விரும்பினால் பலத்த பரிசோதனைக்குப் பிறகு புறம்படியிலிருந்து உள்ளாலைகளுக்கு அனுப்பப்படுவார்கள். உள்ளே வந்து வியந்து பார்ப்பார்கள்."

"இவ்வளவு பாதுகாப்பாக உள்ளாலை இருக்க வேண்டிய அவசியமென்ன..."

"இடையறாது போர் நடந்திருக்கிறது. பாண்டிய தேசத்தை, சேர தேசத்தை, சாளுக்கியர்களை, ஈழ தேசத்தை நாங்கள் அடக்கி ஆண்டிருக்கிறோம். எதிரிகள் எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் தாக்கலாம் அல்லவா. இது

அரண்மனைக்கு முன்னே இருக்கிற தெருவல்லவா. எனவே, அரண்மனையை அடைவதற்கு முன்பு கட்டுக்காவல் பலமாக இருப்பது போல, புறம்படியிலேயே நாங்கள் தணிக்கை செய்து உள்ளாலையில் அனுமதிக்கிறோம்.

உள்ளாலையைத் தாண்டி நீங்கள் அரண்மனைக்குப் போக வேண்டுமென்றால் இன்னும் அதிகமான கட்டுக் காவலும், கண்காணிப்பும் இருக்கும்."

"இப்பொழுது நாம் எங்கே போகிறோம்."

"அரண்மனைக்குள் போகிறோம்."

அவன் தெற்கு மாடவீதியை நோக்கி நடந்து அங்கிருந்து மேற்கே ஒரு பெரும்பாதையில் திரும்பினான்.

67

நான்கு பாதைகள் ஒன்றாய் போகக்கூடிய பாதையாக தரையெல்லாம் பாறைகள் பதித்து உறுதியாக இருந்த பாதையாக அது இருந்தது. பாறைகளுக்கு நடுவே சாந்து பூசி சமன் செய்திருந்தார்கள்.

தேர் ஓடும்போது சத்தமின்றி ஓடியது. மாட்டு வண்டிகள் லேசான அசைவோடு உள்ளே போயின.

அரண்மனை வாசலில் அவன் குணசீலனை நிற்க வைத்தான்.

"இவன் வந்தியத்தேவரின் ஆள். மதுரையைச் சேர்ந்தவன். இவனுக்கு கேயூரமாக மீன் சின்னம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வந்தியத்தேவரின் வீட்டை இவனுக்குக் காண்பிக்க வேண்டும்."

அவனிடம் சொல்லிவிட்டு அந்த வீரன் பின்வாங்கி விடை பெற்றுக் கொண்டு போனான்.

குணசீலனை அந்த அரண்மனை வாசலில் நிற்க வைத்தார்கள்.

உள்ளே மிகப் பிரம்மாண்டமான கற்கோட்டை தெரிந்தது. பெரிய வாசலை அடைத்து சிறிய வாசலைத் திறந்து வைத்து அதன் வழியே வருவோர், போவோரைக் கண்காணித்து அனுப்பிக் கொண்டிருந்தார்கள். கூடைகளைச் சோதித்தார்கள்.

மாட்டு வண்டிகளிலுள்ள சாமான்களை இறக்கிப் பார்த்து பிறகு பற்றி அனுப்பினார்கள். அப்படி இறக்கவும், ஏற்றவும் ஆட்கள் வைத்திருந்தார்கள்.

அப்படி அரண்மனை வாயிலில் காவல் காக்கும் வீரர்கள் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவராக நரைத்த கிழவர்களாக, அதேசமயம் கண்டிப்பானவர்களாக இருந்தார்கள்.

புறம்படியிலுள்ள வீரர்கள் இளமையாக இருக்க, உள்ளாலைக்கு வந்ததும் அங்குள்ள காலவ் வீரர்கள் மத்திய வயதில் இருக்க, அரண்மனை வாசலில் உள்ளவர்கள் லயதானவர்களாக இருந்தார்கள்.

இளம் வீரர்களை வெய்யிலிவ் நிற்க வைத்தும், மத்திமமான வீரர்களைத் தெருக்களில் உவா வர வைத்தும், வயதான வீரர்களை நிழவாக உட்கார வைத்தும் சோழர்கள் பிரித்திருக்கிறார்கள் என்று தெரிந்தது.

ஒவ்வொரு செயலிலும் சோழர்களுடைய நேர்த்தியைக் கண்டு குணசீவன் வியந்தான். யோசனையற்று இவர்கள் எதையுமே செய்வதிவ்லை என்பதைப் புரிந்து கொண்டான்.

இரட்டை மாட்டு வண்டியில் உணவு வந்தது. பானை இறக்கப்பட்டது. பெரிய தட்டு இன்னொரு தட்டால் மூடி கொண்டு வரப்பட்டது. வீரர்கள் கோட்டை வாசலுக்குள் உள்ளேயிருந்த அறைக்குள் போய் அங்கிருந்து தங்களுடைய தட்டுகளையும், குவளைகளையும் கொண்டு வந்தார்கள்.

தட்டிலிருந்து சுடச்சுட அரிசி சாதம் எடுத்து கரண்டிகளால் வீரர்களின் தட்டுகளில் போடப்பட்டன. கறியும், மீனும் கவந்த குழம்பு சோற்றின் மீது ஊற்றப்பட்டது. துவையல் போவ ஏதோ ஒன்றைக் கூடவே போட்டார்கள். குலனைகளிவ் கஞ்சியும், மோரும் கலந்து ஊற்றினார்கள். கடித்துக் கொள்ள வெல்வம் ஒன்று ஆளுக்கொரு கட்டி கொடுத்தார்கள். கூடுதவாக லெல்லம் லாங்க அவர்களிடையே போட்டியிருந்தது.

வீரர்கள் சரிபாதியாய் பிரிந்து நான்கு பேர் சாப்பிடப் போனார்கள். இன்னும் நான்கு பேர் உணவுகளை அறைக்குள் கொண்டு போய் வைத்தார்கள். கோட்டை வாசலிலுள்ள சரிந்த கீற்றுக் கொட்டனகயிவ் தரையில் உட்கார்ந்து, அங்குள்ள சிறிய மேடைகளிவ் தட்டு வைத்து, கை கழுவி, முகம் கழுவி லயதான வீரர்கள் உண்ணத் துவங்கினார்கள்.

கறியைப் பல்லால் கடித்து இழுத்து உறிஞ்சி சுவைத்து உண்டார்கள்.

குணசீலனுக்குப் பசித்தது. அரிசியின் நறுமணம் மூக்கைத் துளைத்தது. ஆனாலும் முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாது அமைதியாக நின்றிருந்தான்.

உணவு முடித்ததும் நீர்மோர் குடித்தார்கள் நீர்மோர் குடிப்பதற்குத் துவையல் தொட்டுக் கொண்டார்கள். பெரிதாக ஏப்பம் விட்டு எழுந்தார்கள். மறுபடியும் முகம் துடைத்துக் கொண்டார்கள். வெற்றிலையும் பாக்கும் இடித்து லாய்க்குள் அடக்கிக் கொண்டார்கள். மற்றவர்கள் போகலாம் என்று சொல்லி காவலுக்கு உண்ட களைப்போடு நின்றார்கள். மற்ற வீரர்கள் வேகமாகச் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

"என்ன எதற்கு நின்று கொண்டிருக்கிறாய்...

"வந்தியத்தேலரின் இல்லத்திற்குப் போக வேண்டும்."

"ஆள் அனுப்பியிருக்கிறோம். வந்தியத்தேவர் கூப்பிட்டால் போகலாம். கூப்பிடும் வரை இங்கேயே இருக்க வேண்டியது தான். உணவெடுத்துக் கொண்டாயா..."

"இல்லை."

"முட்டாளே. சொல்லக்கூடாதா. உணவு லண்டி போய் விட்டதே...

"உணவு லண்டி எனக்காக வந்திருக்கிறது என்பது எனக்குத் தெரியாது."

"ஐயா, யாரங்கே. இவன் சாப்பிடவில்லையாம். உணவு வண்டி போய்விட்டது. யாரேனும் இவனுக்கு உணவு கொடுங்கள்."

வீரர்கள் திகைத்து நின்றார்கள்.

ஒரு வீரன் மெல்ல தட்டை அவனிடம் நீட்டினான். 'மிக வும் பசிக்கிறது என்றால் இந்த உணவை எடுத்துக் கொள்ளலாம்' என்று சொன்னான்.

குணசீலனுக்குச் சட்டென்று உள்ளே நெகிழ்ந்தது.

"அல்வளவு பசிக்கவில்லை. வந்தியத்தேவர் பார்த்துவிட்டு நான் உணவெடுத்துக் கொள்கிறேன்."

"நிச்சயம்தானா...

"நிச்சயம்...

"நாங்கள் உணவு சாப்பிடும்போது நீ இருந்து உனக்கு உணவு கொடுக்கவில்லையென்றால் வந்தியத்தேவர் என்னைக் கோபித்துக் கொள்வார். அதனால் சொல்கிறேன். பசிக்கிறதென்றால் இந்த உணவை எடுத்துக்கொள். நான் உணவுக்கு ஆள் அனுப்பி வாங்கிக் கொள்ளுவேன்...

"இல்லை ஐயா, இதற்கு நடுவே வந்தியத்தேவர் அழைப்பு வந்து விட்டால் நான் பாதி உணவில் எழுந்திருக்க வேண்டும். மொத்த உணவையும் நீங்களே சாப்பிடுங்கள். நான் காத்திருக்கிறேன்."

"சரி, முன் பசிக்கு சற்று நீர் மோராவது குடி." அவன் குலண்ணையை அவனிடம் நீட்டினான்.

உள்ளங்கையில் துவையலை வைத்தான். இஞ்சியும், ஏதோ கீரையும், சுண்ணடைக்காயும் பிரண்டையும் கவந்த துவையல் அது. புளிப்பு, காரம் எல்லாம் இருந்தது. ஒரு உருண்டை விழுந்ததும் உள்ளுக்குள் சுள்ளென்று எரிந்தது.

லேகமாய் நீர் மோர் குடிக்க, வயிற்றில் கரைந்தது.

"நல்ல துவையல் அது. வெகு தூரம் நடந்து வந்திருக்கிறாய் அல்லவா. இரவு வயிறு மிகவும் சுத்தமாகும். பயந்து விடாதே" என்று அந்த வீரன் சொன்னான். "நான் சாப்பிடப் போகட்டுமா." என்று கேட்டான்.

"நல்லபடியாய் சாப்பிடப் போங்கள்." என்று குணசீலன் கைகூப்ப, அவன் தட்டை எடுத்துக் கொண்டு கிற்றுக் கொட்டை கைக்குப் போனான். உட் கார்ந்து சாப்பிடத் துவங்கினான்.

எல்லோரையும் கிழவராகப் போட்டு விடவில்லை. எட்டுக் கிழவர்களுக்கு நடுவே ஒன்பதாவதாக ஒரு இளைஞனைப் போட்டிருக்கிறார்கள். சட்டென்று எங்கேனும் ஓட வேண்டுமோ, எதற்கேனும் வேகமாகச் செயலாற்ற வேண்டுமோ அப்பொழுது இந்த இளைஞன் செயலாற்றுவான் என்பதற்காக இவனைத் துணையாக்கி இருக்கிறார்கள். அந்த இளைஞன் கிழவர்களைப் போல் அள்ளி அடித்துக் கொண்டு சாப்பிடாமல் மிக நாசூக்காக விரல் நுனியால் சோறெடுத்து மெல்லப் பிசைந்து அமைதியாகச் சாப்பிட்டான். அதிகம் சத்தமில்லாமல் எலும்புகளை உறிஞ்சினான். ஒரு கிழவரைக் கூப்பிட்டு பெரிய துண்டு மீனை அவருக்குக் கொடுத்தான்.

அவர்கள் பேசிச் சிரித்தபடி சாப்பிட்டார்கள்.

வந்தியத்தேவர் அவனை வரச் சொன்னதாய் ஆள் வந்து நின்றது.

வயிறு மோரினால் குளிர்ந்திருந்தது. அவன் அந்த வீரனிடம் கைகூப்பி, "நான் உள்ளே போகிறேன்." என்று சொல்லி அரண்மனைக்குள் நுழைந்தான்.

அங்கு அவனை அழைத்துப் போகக் காத்திருந்த வீரனோடு சேர்ந்து கொண்டான்.

அந்த வீரன் மத்திம வயது உடையவன்.

"பாண்டிய தேசத்து ஒற்றானமே நீ..."

"ஆமாம்...

"பெயரென்ன..."

"குணசீலன்..."

"வா என்னோடு..."

அமைதியாக அவன் முன் நடக்க, அவன் பின்னே குணசீலன் கோலூன்றி நடந்து போனான்.

மற்ற வீரர்களிடம் வேலோ வில்லோ இருந்தது. இங்குள்ள வீரனிடம் வெறும் கத்தி மட்டுமே இருந்தது. நெஞ்சுக்கருகே ஒரு கட்டாரியை சொருகி இருந்தான். அவனுடைய ஆடைகள் பொலிவு உடையதாய் சரிகை இழைகள் கலந்தவையாய், தோள் ஓரங்களில் முத்துக்கள் பதிந்தவையாய் இருந்தன. அதிகாரியாக இருப்பான் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான். ஆனால் தன்னைப் பற்றி எதுவும் சொல்லத் தயாராக இல்லாத ஒரு முகத்தோடு நடப்பது தெரிந்தது. குணசீவனுக்கும் பேசப் பிடிக்கவில்லை.

உள்ளே நுழைந்து வலப்பக்கம் திரும்பி ஒரு மகிழ மரத்தடியின் மேடையில் எதிரே உள்ள வாசலுக்கு அழைத்துப் போனான். அந்த வாசல் தாண்டி மிகப் பெரிய முற்றம் இருந்தது. அந்த முற்றம் தாண்டி தனித்த ஒரு கட்டடத்திற்குப் பக்கம் நின்றான்.

"இதுவே வந்தியத்தேவரின் வீடு. குந்தவைப் பிராட்டி யாரும் வந்தியத் தேவரும் உள்ளே இருக்கிறார்கள். உன்னை அழைத்துப் போக ஒரு அதிகாரிச்சி இங்கே வருவார். உன்னைப் பற்றிய விவரங்கள் அவரிடம் வந்தியத்தேவர் சொல்லியிருப்பார்

உள்ளே போய் வந்தியத்தேவரை பார்க்கலாம். அதிகாரிச்சி வரும் வரை வெளியே காத்திரு."

அவன் குணசீலனை வாசலில் நிற்க வைத்து விட்டுப் போனான்.

அந்த வாசலிலும் காவல் இருந்தது. அவர்கள் பேசுவதை அந்தக் காவல் ஆள் கேட்டிருந்தான்.

குணசீலனைப் பார்த்து உட்காரும்படி சைகை செய்தான். வாசலுக்கு ஒட்டியிருந்த மேடையில் குணசீலன் உட்கார்ந்து கொண்டான்.

வீட்டு வாசலில் மிகப் பெரிய வேப்ப மரம் காற்றில் ஆடிக் கொண்டிருந்தது. அந்த வேப்ப மரத்திற்கருகே சூலங்கள் நடப்பட்டிருந்தன. மிகக் குளுமையான நிழலை அந்த வேப்ப மரம் கொடுத்துக் கொண்டிருந்தது.

அதிகாரிச்சி என்று பதவி வகிக்கும் பெண்களைப் பார்க்கப் பார்க்க குணசீலனுக்கு வியப்பாக இருந்தது.

அந்தப் பெண்களின் நடையும், கண்களில் காட்டிய அதிகாரமும், கைகள் வீசிய தோரணையும், தொண்டைக் குழியிலிருந்து வரும் பிளிறலான குரலும், அதட்டலும், சீற்றமும் சட்டென்று முகம் மாறி வருக, வருக என்று வரவேற்கின்ற பாங்கும் சற்று கலவரப்பட வைத்தன.

ஒரு பெண்ணால் இப்படியெல்லாம் நடந்து கொள்ள முடியுமா. பாண்டிய தேசத்தில் அரசி கூட இவ்விதம் நடந்து கொள்வதில்லையே. அரசியாயினும் கூட இவ்வளவு அதட்டலும், சீற்றமும் இல்லையே. இவர்களிடம் இருப்பதற்கு என்ன காரணம். இந்த நிர்வாகத்தை ஒழுங்கு செய்ய முடியுமா. அத்துமீறி ஒருவன் உள்ளே நுழைந்தால் அவனை எப்படி இந்த அதிகாரிச்சி தடுத்து நிறுத்துவாள். அப்பொழுது யாராவது இரண்டு வீரர்களை ஏவுவாளோ. ஏவலுக்கு அடிதடிக்கு ஆள் வைத்துக் கொண்டு வெறும் அதட்டலை மட்டும்தான் வைத்திருக்கிறாளோ என்று சந்தேகித்தான்.

யாரோ ஒரு ஆளை இரண்டு காவலர்கள் தரதரவென்று இழுத்து வந்தார்கள். இழுத்து வரப்பட்டவனுக்கு இருபது வயது இருக்கும். சாளுக்கிய தேசத்துப் பையன் என்பது முகபாவத்தி லேயே தெரிந்தது. பெரிய உதடுகள், குறுகிய கண்கள். சிவந்த

நிறம்.. செம்பட்டைத் தலை. கழுத்தில் உத்திராட்சைக் கொட்டை கட்டியிருந்தான்.

"என்ன" என்று அதட்டலாக அந்த அதிகாரிச்சி அவர்களைக் கைகாட்டி நிறுத்தி பேசினாள்.

"பெண்கள் குளிப்பதை ஓனலத்தடுக்கு வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அடித்து இழுத்துக் கொண்டு வந்தோம்." என்று காவலர்கள் சொன்னார்கள்.

"குளித்துக் கொண்டிருந்தது யார்." அதிகாரிச்சி உடனடியாக விசாரித்தாள்.

"உபசேனாதிபதியின் அகத்து வேலைக்காரி."

"அந்த வேலைக்காரிக்கு இவன் பார்த்தது தெரியுமா."

"இவ்வை. தெரிவதற்கு நியாயம் இல்வை. குளியலனற வாசல் வேறு திசையாகவும் இவன் பார்த்த திசை வேறு திசை யாகவும் இருந்தது."

"உபசேனாதிபதியின் கொல்லைப்புறத்திற்கு இவன் போன விதம் எப்படி என்று விசாரித்தீர்களா?"

"விசாரித்தோம். சுவரேறிக் குதித்து நுழைந்திருக்கிறான்."

"குளிப்பதைப் பார்ப்பதற்காக நுழைந்திருக்கிறான் என்றால் வேலைக்காரி குளிக்கும் நேரம் இவனுக்குத் தெரியும் என்றல்லவா ஆகிறது."

"இருக்கலாம்."

"ஒருவேளை வேலைக்காரி தான் இந்நேரத்தில் குளிப்பேன் என்று சொல்லியிருக்காமோ."

"இருக்கலாம்...

"விசாரித்தீர்களா?"

"இல்வை."

"நான் விசாரிக்கிறேன்." அதிகாரிச்சி முன் வந்தாள்.

அவன் தானடையைப் பிடித்துத் தூக்கிப் பார்த்தாள். தலை முடியை வருடினாள்.

"காலாகாலத்தில் எனக்குத் திருமணம் ஆகியிருந்தாவ் உன்னைப்போல மகன் இருப்பான். நான் உன்னை மகனாக நினைக்கிறேன். ஒரு பெண் குளிப்பதைப் பார்ப்பது தவறல்லவா? சாளுக்கிய தேசத்தில் பெண்கள் எல்லோரும்

குளத்தில் நிர்வாணமாகக் குளிக்க ஆண்கள் எல்லோரும் கரையில் உட்கார்ந்து கொண்டு வேடிக்கை பார்ப்பீர்களா. அப்படி ஒரு நாகரிகம் உங்கள் ஊரில் உண்டா?"

வேகமாக அந்த இளைஞன் இல்லையென தலையசைத்தான்.

"பிறகு. நீ பார்க்கத் துணிந்திருக்கிறாயே என்ன காரணம்."

சாளுக்கிய வீரன் மௌனமாக இருந்தான்.

68

எந்தக் கேள்வியும் கேட்கத் தேவையில்லை என்று அங்குள்ளோர் எல்லோருக்கும் தெரிந்தது. ஒரு இளைஞனின் மன அவசம் என்பது புரிந்தது. எல்லா காலங்களிலும் எல்லா தேசங்களிலும் உண்டான விடலை விளையாட்டு என்பது தெரிந்தது. ஆனால் விசாரிக்காதும் விடக்கூடாது.

"வந்து பார்க்கும்படி உனக்கு அழைப்பு விடப்பட்டதா." – அதிகாரிச்சி விசாரித்தாள்.

அந்தச் சாளுக்கிய வீரன் கண்கள் லேசாக மிரண்டன. பிறகு அமைதியாயின.

இல்லையென்று தலையசைத்தான்.

"உனக்குத் திருமணம் ஆகிவிட்டதா."

"இல்லை..."

"உடற்பசியின் உந்துதல் தாங்காமல் இவ்விதம் செய்து விட்டாய் என்று எடுத்துக் கொள்ளலாமா..."

இதற்கும் அந்த இளைஞன் பேசாதிருந்தான்.

"நீ செய்தது மிகப்பெரிய குற்றமென்று நான் நினைக்க வில்லை. உலகத்திலுள்ள எல்லா இளைஞர்களுக்கும் இது குறித்த ஆசை இருக்கும். ஆனால் இன்னொரு முறை இவ்விதம் செய்யாதே.

இந்த சோழதேசம் நாகரிகமான தேசம். பெண்களை மரியாதையாக நடத்துகின்ற தேசம். உனக்கு அந்த வேலைக் காரியின் மீது ஈடுபாடு இருப்பின் அதை வெளிப்படையாகச் சொல். நேரடியாய் போய் பேக. அதைவிட்டு இப்படி

திருட்டுத்தனமாய் ஒளிந்திருந்து ஓலை இடுக்கு வழியாய் உடம்பு பார்ப்பதென்பது எவருக்கும் லாபமில்லாத விஷயம்."

அதிகாரிச்சி சொல்ல, "ஹா" என்று அவட்சியமாக ஒரு குரல் அந்த சாளுக்கிய வீரனிடமிருந்து வந்தது. அதிகாரிச்சி கடுமையானாள். கூர்மையானாள். அவனை உறுத்துப் பார்த்தாள்.

"ஏன் - எதற்காக அவ்விதம் குரல் கொடுக்கிறாய்."

"நான் இங்கே பிடிபட்ட வீரன். சோழ தேசத்திற்கு அடிமையாக வந்தவன். நான் யாரிடம் போய் என் மனதைச் சொல்வது. எவரிடம் போய் என் விருப்பத்தைத் தெரிவிப்பது. தெரிவித்தால் எவர் கேட்பார்கள்.

இங்கு மூட்டை தூக்கவும், வீடு பெருக்கவும், கவரிலுள்ள ஓட்டடைகளை எடுக்கவும்தான் உபயோகப்படுத்திக் கொள் கிறார்களே தவிர என் மனம் என்ன விரும்புகிறது என்பதை எலரும் கேட்பதில்லை. எனவே நானும் சொல்லதில்லை. ஆனாலும் பெண்களைப் பார்த்தால் பரவசமாகின்ற நினைப்பை என்னால் அடக்க முடியவில்லை."

"குறிப்பாய் இந்த வீட்டுச் கவரேறி இந்த வீட்டுப் பெண்ணைப் பார்ப்பதற்கு ஏதேனும் காரணம் உண்டா?"

அதிகாரிச்சி கை கட்டிக் கொண்டு அவனையே பார்த்தாள். குணசீலன் அவளையே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

"உண்டு."

"என்ன அது?"

"அவள் மிகவும் வாளிப்பானவள். அந்த வாளிப்பு எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. இவ்வளவு அழகான உடம்பா. கருப்பாக இருந்தாலும் இத்தனை கட்டுமஸ்தாக பெண்களால் இருக்க முடியுமா என்று வியப்பு இருந்தது. சாளுக்கிய தேசத்துப் பெண்கள் சிகப்பாக இருந்தாலும் ஒல்லியாகத்தான் இருப்பார்கள். அவர்களுக்கு உடம்பின் அங்கங்கள் மிகச் சிறியவைாகத்தான் இருக்கும். இவ்வளவு பருத்த தனமுள்ள, உரமுள்ள பெண்ணை நான் இதுவரை பார்த்ததே இல்லை.

தெருவில் போகும்போதெல்லாம் அவளைப் பின் தொடர்ந்து போவேன். அவள் எங்கு நின்றாலும் அவளுக்கு அருகே நிற்பேன். அவள் என்னைப் பார்க்கமாட்டாளா என்று

ஆசைப்படுவேன். அவள் பார்த்துவிட்டு அலட்சியமாகப் போவாள். இன்று யாரோ கூப்பிட்டபோது, குளித்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனாள்.

நான் அவர்கள் வீட்டுச் சுவரருகே காத்திருந்தேன். அவள் வந்தது தெரிந்ததும் சுவரேறிக் குதித்து ஓலைத் தடுப்பு வழியே அவள் அழகைப் பார்த்தேன்."

"இது தவறு இளைஞனே. இந்த ஆசை உன்னைக் கொலை முயற்சியில் அல்வது பெரும் திருட்டில் கொண்டு போய் விட்டு விடும். உன்னுடைய ஆலலாதிகள் எனக்குப் புரிகிறது. ஆனாலும் உபதளபதியின் வீட்டுச் சுவரேறிக் குதித்தது பெண்ணுக்காக என்றில்லாமல் உபதளதியைக் கொலை செய்வதற்காக நீ குதித்தாய் என்று குற்றம் சாட்டப்பட்டால் யாரும் எதுவும் செய்ய முடியாது. எனவே இன்னொரு முறை இந்தத் தவறு செய்யாமல் இருக்க லேண்டும். எனலே மன்னிப்புக் கேட்டுவிட்டு வெளியே போ..."

அந்த இளைஞன் தயங்கினான். பல் கடித்தான். அவன் உதடுகள் துடித்தன. கைகள் இறுகின. மூச்க சீறலாய் வெளிவந்தது.

"ஏன் வேகமாக மூச்க விட்டாய், மன்னிப்புக் கேள் என்றும் சோழதேசத்தில் கேட்பீர்கள் போலிருக்கிறது. எதற்காக புதர் ஓரம் மலஜலம் கழித்தாய். சோழ தேசத்தை அழுக்காக்கி விட்டீர்கள் என்று கூவுவீர்கள் போலிருக்கிறது. ஒரு பெண்ணின் வாளிப்பைப் பார்த்ததற்காக நான் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்பது பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது." என்று சற்று சீற்றத்துடன் சொன்னான்.

அதிகாரிச்சி முன்னேறினாள்.

பளிச்சென்று அவன் தொண்டையைப் பிடித்தாள். அழுத்தி உலுக்கினாள். ஓங்கி அறைந்தாள். அவன் நிலை குலைந்தான். கவரோரம் சாய்ந்து கொண்டான்.

"அந்தப் பெண் உன் தங்கையாக இருந்தாவ் என்ன செய்வாய்." என்று அதிகாரிச்சி அவன் தலையை கவரோடு வைத்து அழுத்திய வண்ணம் கேட்டாள்.

"அது உன் தாயாக இருந்தால் எத்தனை பேரை வேடிக்கை பார்க்க அனுமதிப்பாய். நீ செய்தது தவறு என்பதை தெளிவாகச் சொன்ன பிறகும், மன்னிப்புக் கேட்க மாட்டேன் என்று

அடம்பிடித்தால் அது அயோக்கியத்தனம். சோழ தேசத்தில் உனக்குச் சில சுதந்திரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அத்துமீறினால்கூட கேட்பார் இல்லையென நினைத்துக் கொண்டிருக்கிறாய். அது தவிர, உன்னுடைய அசைவு சிறிது தவறானாலும் சோழ தேசத்தில் மிக பயங்கரமாக விசாரிக்கப்படும். மிகப் பலமாக தண்டிக்கப்படுவாய். இலனுக்கு ஆறு கசையடிகள் கொடுத்து வெளியே அனுப்புங்கள்." அதிகாரிச்சி உத்தரவிட்டாள்.

அவனை முற்றத்திற்கு இழுத்துப் போனார்கள்.

ஒரு வீரன் அலன் பின்பக்கம் கைகளை இழுத்துக் கயிறால் கட்டி நிறுத்தினான். இரண்டு வீரர்களும் அங்குள்ள வீரர்களிடம் சவுக்கு கேட்டு வாங்கிக் கொண்டார்கள்.

சவுக்கு சொடுக்கும் சத்தம் கேட்டு அக்கம் பக்கம் நடந்து போனவர்கள் நின்று லேடிக்கை பார்த்தார்கள். அந்த இளைஞன் நடு முற்றத்தில் இருக்க மாறி மாறி ஆளுக்கு மூன்று முறை சவுக்கால் வீசி அவனை விளாசினார்கள்.

சிகப்பாய் மெல்லிய ரத்தக்கோடுகள் தெரிந்து, பிறகு அதிலிருந்து ரத்தம் ஊற்றெடுத்து உடம்பில் வழியத் தொடங்கியது. அதிகாரிச்சி உள்ளே யாருக்கோ குரல் கொடுக்க ஒரு நீர்ப்பானையோடு ஒரு பெண் ஓடி வந்தாள்.

அவன் அழத் துவங்கியிருந்தான். அலனை தோள் பிடித்து ஒரு ஆள் உட்கார வைக்க அவன் தலையில் நீர் கொட்டினார்கள். நீரின் குளுமையில் உடம்பு நனைந்ததும் ரத்தம் லழிவது நின்றது. ஒரு துணியால் ஒரு வீரன் அவன் ஈரத்தைத் துடைத்தான்.

வைத்தியர்போல் யாரோ ஒருலர் வந்து அவனுடைய காயங்களில் வேகமாக மருந்து தடவினார். அணில் வாலால் செய்யப்பட்ட தூரிகையை மருந்தில் குழைத்து மடமடலென்று அவன் காயம் முழுவதும் தடவினார். அவன் கைக்கட்டுகளை அவிழ்த்து விட்டார்கள். போ என்று சொன்னார்கள். அவன் தலைகுனிந்த வண்ணம் முற்றம் விட்டு வீரர்கள் பின் தொடர வெளியே போனாள்.

"இனி அவன் உள்ளாலையில் இருக்க வேண்டாம். புறம் படிக்கு அனுப்பி விடுங்கள்." என்று பின்னாலிருந்து அதிகாரிச்சி உரத்த குரல் கொடுத்தாள்.

சோழ வீரர்கள் சரி என்று தலையை ஆட்டிவிட்டு அவனை நடத்தி, அழைத்துப் போனார்கள்.

அந்தப் பெண்ணின் வேகத்தையும், விவேகத்தையும் பார்த்து குணசீலன் லேசாகப் பரவசமானான்.

சோழத் தளபதிகள் அங்கங்கே படையெடுத்துப் போய்விட, வெகு காலம் எல்லையிலேயே சுற்றிக் கொண்டிருக்க, அரசியல் நிர்வாகத்தையும், வீட்டு நிர்வாகத்தையும், அரசாங்கச் சக்கரத்தையும் இம்மாதிரி கெட்டிக்காரப் பெண்கள் நிர்வாகம் செய்தார்கள். நிர்வாகம் செய்து பழக்கப்பட்டு நல்ல நிலைக்கு வந்திருக்கிறார்கள். தெளிவாக யோசிக்க அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டு விட்டது.

"யார் நீ..."

அந்த அதிகாரிச்சியின் அதட்டல் இப்பொழுது குணசீலனை நோக்கிப் பாய்ந்தது.

"என்னை வந்தியத்தேவர் தேர்வு செய்து தஞ்சைக்கு அழைத்து வந்தார். வந்தியத்தேவர் அரண்மனைக்குச் சோழ வீரர்கள் கூட்டி வந்தார்கள். நான் வந்தியத்தேவருக்காகக் காத்திருக்கிறேன்."

"உள்ளே சொல்லப்பட்டு விட்டதா."

"எனக்கு அது தெரியாது."

"எப்படித் தெரியாமல் இருக்கலாம். உன் வருகை உள்ளே சொல்லப்பட்டு விட்டதா என்பது தெரிந்தால்தானே நீ இங்கு இருப்பதற்கு அர்த்தமாகும். இவ்வையெனில் வேவு பார்க்க வந்திருக்கிறாய் என்று நினைத்துக் கொள்ள முடியாதா."

"உங்களை வேவு பார்த்து என்ன செய்வது. யாரிடம் போய் தகவல் சொல்வது. தகலவ் சொல்வதற்கு யார் இருக்கிறார்கள். குமரியிலிருந்து வேங்கடம் வரை எல்லோரையும் அடித்து புலிக்கொடி நாட்டி விட்டீர்கள். உங்களை எதற்கு நான் வேவு பார்க்க வேண்டும்."

"சரி. நீ யார்"

"குணசீவன். பாண்டிய நாட்டு வீரன். ஒற்றர்படை உபதளபதி."

"நீ வருலாய் என்று எனக்குச் சொல்லப்பட்டது."

அவள் கேயூரம் சுட்டிக்காட்டி எப்பொழுது கொடுத்தார்கள் என்று கேட்டாள். அவன் புறம்படியில் தரப்பட்டது என்று பதில் சொன்னான்.

"பாண்டிய நாட்டின் எந்தப் பகுதியிலிருந்து வருகிறாய். வைகை நதியா அல்லது வேறிடமா..."

அவன் தன் சேரதேசத்து எல்லைப் பகுதியைச் சொன்னான். மலை நாட்டைச் சேர்ந்தவன் என்பதை விவரித்தான்.

"லந்தியத்தேவர் சிவபூஜை செய்து கொண்டிருக்கிறார். சற்று நேரத்தில் முடிந்துவிடும். லா. இங்கு உட்கார். திருமணமாகி விட்டதா."

"இல்லை. ஏன்."

"உன்னனப் பார்த்தால் இருபத்தைந்து அகவைக்கு மேலும் தெரிகிறதே."

"ஆமாம். போர் போர் என்று அலைந்து பல்வேறு திக்கிற்கும் நகர்ந்து திருமணம் பற்றிய சிந்தனையே மறந்து விட்டது."

"எனக்குப் புரிகிறது. விடுதலை கொடுத்தும் ஏன் போகாமல் இருக்கிறாய். பாண்டிய தேசத்திற்குப் போகலாம் என்று சோழ வீரர்கள் சொல்லியிருப்பார்களே."

"சொன்னார்கள். நான் போகவில்லை."

"என்ன காரணம்?"

"ராஜராஜசோழர் மிகப்பெரிய கோயில் ஒன்றைக் கட்டுகிறார் என்றும், அந்தக் கோயில் பணிக்கு ஆட்கள் தேவை என்றும் சொல்லப்பட்டது. நான் சிவனுக்குப் பிரியமானவன். அவனுக்கு ஏதேனும் செய்ய விரும்பினேன். கோயில் கட்டுலதில் ஈடுபட வேண்டுமென்பது என் ஆசை."

"அவ்வளவுதானா."

"இல்லை. இதற்கு மேலும் உண்டு."

"என்ன."

"பாண்டிய தேசத்தினுடைய நாகரிகம் வேறு விதமானது. சோழ தேசத்தின் நாகரிகத்தை நான் கற்று உணர்ந்து, இங்கு உண்ணுகின்ற உணவு போலவும், உடை போலவும் பேச்சு

போலவும், நடத்தை போலவும், பாண்டிய தேசத்தில் கொண்டு போய் சொல்வதற்கு இருக்கிறேன்.

சோழ தேசத்தை நன்கு தெரிந்து கொள்ளதற்காக இங்கு தங்க விரும்புகின்றேன். வேறெங்கேனும் இருப்பதைவிட சோழ தேசத்தைப் புரிந்து கொள்ள தஞ்சையில் இருப்பதுதான் சிறந்தது என்று சொன்னார்கள். ஆகவே திருவொற்றியூரிலிருந்து தஞ்சை வரை நாங்கள் கோயில் பணிக்காக நடத்தி அழைத்து வரப் பட்டோம். இப்பொழுதுகூட எங்கே கோயில் பணி நடக்கிறது என்று தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறது. வந்தியத்தேவர் பார்த்துப் பேசி அனுமதித்து விட்டால் நான் கோயில் பணி செய்யும் இடத்திலேயே, அதற்கு அருகிலேயே குடிசை போட்டுக் கொண்டு அமர்ந்து விடுவேன்."

"லந்தியத்தேவர் உன்னைக் கோயில் பணிக்கு அனுப்பப் போலதில்லை."

"பிறகு."

"தனக்கு அந்தரங்க ஆளாக வைத்துக் கொள்ளப் போகிறார். எங்கெல்லாம் லந்தியத்தேவர் இருக்கிறாரோ – அங் கெல்லாம் நீ இருக்க வேண்டும்."

"அடைப்பக்காரனா..."

"முட்டாள். சோழ தேசத்தின் ஒரு போர் வீரனை லெறும் வெற்றிலைப் பாக்கு மடித்துக் கொடுப்பவனாக யாருமே நடத்த மாட்டார்கள். சோழ தேசத்தின் அடிநாதமே மனிதர்களை மதிப்பது. போரோ, போரற்ற காலமோ மனிதர்களுடைய புத்தியை, யோக்கியதையை, திறமையை மதிப்பது. குறைகளைப் பெரிதுபடுத்தாமல் இருப்பது.

சற்று முன் இங்கு லந்து தண்டிக்கப்பட்டானே... அதே இளைஞன் பாண்டிய தேசத்தில் வேறொருவர் மனைவி குளிக்க, அல்லது வேறு ஒரு பெண் குளிக்க எட்டிப் பார்த்தான் என்றால் என்ன ஆகும்."

"சிரச்சேதம் செய்திருப்பார்கள்."

"இங்கு செய்யப்படவில்லை. ஏன்..."

"எனக்கும் அது புரியாத புதிராகத்தான் இருக்கிறது."

"இருபது வயது இளைஞன், கைது செய்யப்பட்டு இங்கு லந்திருக்கிறான். அவன் காமத்திற்கு என்ன வழி. எது வடிகால்.

அவன் வாளிப்பான பெண்ணைப் பார்த்தபோது உயிரையும் திருணமாக மதித்து சுவர் ஏறிக் குதித்து வேடிக்கை பார்த்திருக் கிறான் என்றால் அவன் உடம்பு அவஸ்தை எவ்வளவு பெரியது. அதற்குப் போய் தண்டனை வழங்க வேண்டுமா. எச்சரித்து விட்டு விட்டோம். இது இயல்பு என்று எங்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது."

"விட்டு விட்டால் மறுபடியும் வேறு இடம் போய் வேடிக்கை பார்க்க மாட்டானா. வேறெங்கேனும் ஒரு பெண்ணைத் தனியிடத்தில் கைப்பற்றி இழுத்துக் கட்டித் தழுவ மாட்டானா."

குணசீலன் அதிகாரிச்சியிடம் கேட்டான். அவளோடு சல்லாபிப்பது அவனுக்குப் பிடித்திருந்தது. உள்ளே ஒரு மன இறுக்கத்தைத் தளர்த்தியது.

69

"அப்படிச் செய்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் அந்தச் சவுக்கடிகள். ஒரு எச்சரிக்கை. சவுக்கடி மட்டுமல்ல; உடனடியாக அதற்கு உதவியும் செய்யப்பட்டது. வைத்தியம் பார்க்கப்பட்டது என்பதையும் நீ புரிந்து கொள்ள வேண்டும். தஞ்சை நகரம் முழுவதும் உன்னைப் போன்ற, அவனைப் போன்ற வீரர்கள் ஆயிரமாயிரமாய் நிறைந்து கொண்டிருக் கிறார்கள். அவர்கள் வேலைக்காரிகளையும், அரசிகளையும், அரசியின் தோழிகளையும் வாயைப் பிளந்த வண்ணம் வேடிக்கை பார்க்கிறார்கள். கண்களில் காமம் ததும்ப ஏதேனும் பேசுகிறார்கள். அவர்களுடைய இந்த மனநோக்கைத் திசை திருப்ப மாமன்னர் உடையார் ஸ்ரீ ராஜராஜத் தேவர் வேறு வழி செய்திருக்கிறார்.

தஞ்சை முழுவதும் தளிச்சேரிப் பெண்களைக் கொண்டு வந்து நிரப்பியிருக்கிறார். நாளை அல்லது நாளை மறுநாளி லிருந்து தளிச்சேரிப் பெண்கள் வீதி ஓரங்களில் ஆட்டம் பாட்டங்களில் ஈடுபடுவார்கள். போராலும், போரில் கைது செய்யப்பட்டதாலும், அடிமையாக அழைத்து வரப்பட்டதாலும் மன அவஸ்தைக்கு உள்ளான அந்த வீரர்களுக்கு இந்த ஆட்டமும் பாட்டமும் சுகம் தரும். அமைதி ஏற்படுத்தும்.

உனக்கு அம்மாதிரியான பெண்களைப் பார்க்க வேண்டுமென்று ஆசை வரவில்லை?"

"இல்லை..."

"ஏன்..."

"நான் உங்களுக்கருகே உங்களைப் பார்த்தபடி இருக்க விரும்புகிறேன்."

சட்டென்று அந்த அதிகாரிச்சியின் முகத்தில் மாறுதல் ஏற்பட்டது.

"ஏன்... என்னை எதற்காகப் பார்க்க வேண்டுமென்று நினைக்கிறாய்?"

"எனக்கு அழகான பெண்ணை விட திறமையான பெண்ணிடுதான் காதல் ஏற்படும். நீங்கள் பேசியதும், உத்தரவிட்டதும், தீர்ப்பு சொன்னதும் எனக்கு வியப்பைக் கொடுக்கின்றன. கெட்டிக்காரப் பெண்களைத்தான் என்னால் நேசிக்க முடிகிறது."

அந்த அதிகாரிச்சி வாய்விட்டுச் சிரித்தாள்.

"என்ன... என்னை நேசிக்கிறாயா?"

"அது போன்ற ஒரு உணர்வு. ஒரு வியப்பு கலந்த உணர்வு உங்களை அதிகம் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆசை ஏற்படுகிறது. உங்களோடு பழக வேண்டும். உங்களிடம் பல கேள்விகள் கேட்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

நீங்கள் யாருக்குப் பிறந்தீர்கள். எப்படி வளர்ந்தீர்கள். ஏன் அதிகாரிச்சியாக மாறினீர்கள். உங்களுக்குத் திருமணம் ஆகி விட்டதா. உங்கள் கணவர் யார். உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?" என்று கேட்கக் கேட்க அதிகாரிச்சி இடி முழக்கம்போல் வாய்விட்டுச் சிரித்தாள்.

அவனுக்கு அருகே லந்தாள். தோளில் கை லைத்தாள்.

"எனக்கும் உன்னைப் பிடித்திருக்கிறது. உன்னுடைய ஆவல் உண்மையாக இருக்கிறது. சோழ தேசத்தைத் தெரிந்து கொண்டுதான் பாண்டிய தேசத்திற்குப் போகப் போகிறேன் என்கிற உன்னுடைய எண்ணம், கவவை நியாயமானது. உன்னுடைய உண்மையான நாட்டுப்பற்றை நான் புரிந்து கொள்ளுகிறேன்.

நீயும், நானும் தமிழ் பேசுகிறவர்கள். தமிழ் வளர்த்த சங்கம் உடையது மதுரை. தமிழுக்கு உரமிட்டது தஞ்சை. நமக்குள் பேதமோ, அடிதடி ரகளையோ தேவையற்றது. பாண்டியர்களுக்கும், சோழர்களுக்கும் நடுவே பல போர்கள் தவிர்க்கப் பட்டிருக்கலாம். பல உயிர்கள் பலியாவதை நிறுத்தியிருக்கலாம். ஏனோ விதி அவ்விதம் செய்யவில்லை. இனிமேலாவது அவ்விதப் பிரிவுகள் இல்லாமல் நாம் ஒற்றுமையாக இருக்க விரும்ப வேண்டும்.

சோழர்கள் பாண்டிய தேசத்தை ஆட்சி செய்வதை விரும்பவே இல்லை. அதனால்தான் அங்குள்ள சோழப் பிரதிநிதிக்கு சோழ பாண்டியன் என்று பெயர் வைத்திருக்கிறார் உடையார் ஸ்ரீ இராஜராஜர். அதிகாரிகளெல்லாம் பாண்டியர்களாகவே இருக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார். அப்படியே இருந்தும் வருகிறார்கள்.

ஒருவேளை நீ பாண்டிய தேசத்தில் இருந்தால் நீயும் அங்கொரு நல்ல அதிகாரியாக இருந்திருப்பாய்."

வாய்விட்டு இப்பொழுது குணசீலன் சிரித்தான்.

"அங்கு போய் வெறும் அதிகாரியாக இருப்பதில் என்ன லாபம். அதிகாரம் முழுவதும் சோழர்கள் கையில் இருக்கிறது. அங்கு வெறும் பொம்மையாக இருப்பதைக் காட்டிலும் இங்கு அடிமையாகச் கற்றிக்கொண்டிருப்பது நல்லது என்று தோன்றியது.

என்னுடைய முதல் ஈர்ப்பு கோயில். அடுத்த ஈர்ப்பு சோழ தேசத்தின் நிர்வாகம். அதற்கடுத்த ஈர்ப்பு சோழ தேசத்தின் பெண்கள். அதற்கடுத்த ஈர்ப்பு..." பேசாமல் மெல்ல குணசீலன் நிறுத்தினான்.

"சொல் நான்காவது ஈர்ப்பு என்ன..."

"வல்லவரையர் வந்தியத்தேவர். இவரைச் சந்திக்க வேண்டுமென்று நான் மிகவும் ஆசைப்பட்டேன். விதி என்னை அவருக்கருகே வந்து சேர்த்து விட்டது. என்னைப் பார்த்ததும் வந்தியத்தேவர் நெருங்கி வந்து, தலையைத் தடவினார். எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது."

"அப்படியென்ன வந்தியத்தேவரின் மீது காதல்?"

அதிகாரிச்சி கைகட்டிக்கொண்டு இடது புஜத்தை சுவரில் சாய்த்துக் கொண்டு சற்று கோணலாக நின்றபடி குணசீலனைப் பார்த்துக் கேட்டாள்.

அந்த ஓயில், அவளின் வடிவமைப்பு குணசீலனுக்குப் பிடித்திருந்தது. உடம்பு தாண்டி முகத்தில் ஒரு துறுதுறுப்பும், கண்களில் ஒரு ஒளி வீச்சும் இருப்பதை குணசீலன் உணர்ந்தான். அவளோடு பேச ஆசைப்பட்டான்.

"வந்தியத்தேவர் நடுநாடு தாண்டி தொண்டை மண்டலத்தின் ஆரம்பத்தில் இருக்கின்ற ஒரு தேசத்தின் தலைவர். திருவல்லம் என்கிற ஊரில் அரச பரம்பரையில் வந்தவர். அவர் இளவரசர் கூட அல்ல, அரசரின் மூன்றாவது மனைவிக்கு மகனாகப் பிறந்தவர். பிறகு திருவல்லத்தில் எந்தப் பதவியும் கிடைக்காது என்று தெரிந்து தஞ்சையை நோக்கித் தனியாகப் பயணப்பட்டலர். எலிக்குத் தவையாக இருப்பதைவிட சிங்கத்திற்கு வாலாக இருக்கவாம் என்று நினைத்து அவர் தஞ்சையை நோக்கி வந்திருக்கக் கூடும்.

ஒரு அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளைஞனை இந்தத் தஞ்சை நாடி பிடித்துப் பார்த்திருக்கும். உலுக்கி என்ன என்று விசாரித்திருக்கும். அவருக்கு உண்மையிலேயே உரமுள்ளதா என்று பரிட்சித்துப் பார்த்திருக்கும். அத்தனை பரீட்சையிலும் தேறி எல்லாச் சோதனைகளையும் தாண்டி, சோழர்களின் குலக்கொடியான குந்தலையைக் கைப்பிடித்தது அவருடைய ஜாதக விசேஷம். புத்திக் கூர்மை. திறமை.

ஆனால் இங்கும் பிரச்சனை இருக்கிறது. சோழக் குலக் கொடியை மணந்துவிட்டு, சோழர்கள் கொண்டாடுகின்ற குந்தவை தேவிக்குக் கணவனாக வந்துவிட்டு அப்படி கணவனாக இருக்கிறபொழுதே சோழ தேசத்திற்கு வெறும் அதிகாரியாகவும் இருக்க வேண்டும். இப்பொழுது அவர் அரசரல்லர். இளவரசர் அல்வர். பெருந்தனம் என்று அழைக்கப் படும் ஒரு அதிகாரி. படைத்தளபதி.

உடையார் ஸ்ரீ இராஜராஜருக்கு இணையாகவோ, இளவரசர் இராஜேந்திரருக்கு இணையாகவோ, அல்லது பிரம்மராயருக்கு அருகில் அமரவோ கூட முடியாதபடி இன்னும் ஒருபடி கீழ் இருக்க லேண்டியவர். அப்படி இருப்பதற்குச் சம்மதித்து சோழ தேசத்திவ் தன்னைக் கரைத்துக் கொண்டு சோழ தேசத்திற்காக தன்னுடைய வாழ்நாளையும், புத்திக்கூர்மையையும், உடல் வலிமையையும், மனத்துணிவையும் சமர்ப்பணம் செய்திருக்கிறார் ஒரு பெண்ணைக்கு நல்ல கணவனாகவும் வாழ்கிறார். நல்ல அதிகாரியாகவும் இருக்கிறார்.

எனக்கு தேசத்தைப் பிரித்து பங்கு போட்டு ஒரு அரியாசனமும், ஒரு பீடமும் தா என்று சொல்லவில்லை. மன முவந்து உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருடைய தலைமையை ஏற்று இராஜேந்திர சோழரின் தலைமையை ஏற்று ஒரு அதிகாரி யாக மட்டும் பணிபுரிகிறார் என்றால் அவர் மனம் எத்தனை விசாலமானது. அலருடைய தெளிவு எத்தனை உயர்வானது.

அவர் பெருந்தனம் எனப்படும் அதிகாரிதான். ஆனாலும் அவரைப் போர்வீரர்கள் அரசரைப்போல் பார்க்கிறார்கள். பெரியலர்கள் அவரை வணங்கித் துதிக்கிறார்கள். நல்லவர்கள் எல்லாம் கைகட்டி நிற்கிறார்கள். ஊர் மக்கள் அவரைப் பார்த்த வுடன் மேல் துண்டை வீசி அவர் பெயர் சொல்லி வாழ்த்து கிறார்கள். பெண்கள் குலவையிடுகிறார்கள். குழந்தைகள் அவருக்கு அருகே போய் வியப்போடு பார்க்கின்றன."

"அப்படியானால் இதற்கு என்ன அர்த்தம்?" அந்த அதிகாரிச்சி முகம் அசைக்காது கேட்டாள்.

"அவர் அதிகாரத்தால் சோழ மக்களின் இடத்தைப் பிடிக்கவில்லை. அவருக்குப் பதவி தேவையில்லை. பண்பால், அன்பால், நல்ல குணத்தால் சோழ மக்களை வந்தியத்தேவர் கட்டிப் போட்டிருக்கிறார்.

மன்னரைக் கண்டு பயப்படும் ஜனங்கள் வந்தியத்தேவரை நெருக்கமாக நின்று பார்க்கின்றன. குந்தவை தேவியாரிடமும் வந்தியத்தேவரிடமும் தங்கள் குறைகளைப் பயமின்றி சொல்லலாம் என்று நினைத்திருக்கிறார்கள்.

இது மிகச் சாமர்த்தியமான விஷயம். அதீத புத்திசாலித் தனம். சோழ தேசத்தை ஆட்சி செய்வது உடையார் ஸ்ரீ இராஜ ராஜத்தேவர் அல்ல. பிரம்மராயரும் அல்ல. லந்தியத்தேவரும், குந்தவை பிராட்டியாரும் என்பதுதான் என்னுடைய எண்ணம். போகப்போக இதை நான் தெளிவாகப் புரிந்து கொள்வேன் என்று நினைக்கிறேன்." உரத்த குரலில் மனம் விட்டு குணசீலன் அதிகாரிச்சியிடம் பேச, பின்னால் இருந்து கைதட்டும் மெல்லிய சத்தம் கேட்டது.

குணசீலன் திரும்பினான்.

அங்கே குந்தவை தேவியார் நின்று கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் இடுப்பில் கை வைத்தபடி முகத்தில்

புன்னகையோடு வந்தியத்தேலர் குணசீலனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

குந்தலை நாச்சியாரின் அந்தரங்க அதிகாரிகள்தான் கைதட்டினார்கள் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

எஜமானன் இருக்கும்பொழுதே மற்றவர்களைப் பாராட்டுவது என்பது வேறு எந்த தேசத்திலும், வேறு எந்த ஊழியரும் செய்ய முடியாது. ஆனால் சோழ தேசத்தில் செய்ய முடியும்.

எஜமானரைப் பாராட்ட முடியும். ஏன் என்னைப் பாராட்டவில்லை என்று எஜமானரைக் கேட்க முடியும். எஜமானர் முன்னே இன்னொருவரைப் புகழ்ந்துரைக்க முடியும்.

வந்தியத்தேவரைத் தாண்டிக் கொண்டு குந்தவை நாச்சியார் முன்னேறி வந்தார். குணசீலன் வியப்போடு பார்த்தான்.

இதுவும் பாண்டிய தேசத்தில் நடக்காது. புருஷன் இருக்க, பெண்கள் முன்னே வந்து ஒருநாளும் பேச மாட்டார்கள். அப்படிப் பேசினால் அது ஏதோ ஆபத்தான, மோசமான நேரமாகத்தான் இருக்கும். ஒரு சபைபோல கூடியிருக்கும் இடத்தில் புருஷனைத் தாண்டி பெண்கள் ஒருபோதும் வந்ததே இல்லை. வர முயற்சித்ததும் இல்லை. இங்கே குந்தவை நாச்சியார் மிக அழகாக நடந்து தன் வவது கையால் புருஷன் தோளைப் பற்றி சற்று நகர்ந்திவிட்டு முன்னேறி குணசீலனை ஊடுருவிப் பார்த்தார்.

"நீ தைரியமாகப் பேசியது சந்தோஷம். உன்னுடைய அனுமானத்தை லெளியே சொன்னதில் விவேகமிருக்கிறது. ஆனால், நண்பனே... தஞ்சையின் ஒவ்லொரு அங்குலத்தையும் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் ஆட்சி செய்கிறாரே தவிர, வேறு எவரும் இங்கே தலைமை ஏற்க மனதாலும் துணிவதிவ்லை. இங்கு ஒவ்வொரு செயலும் அவரின் ஆணையோடும், அனுமதியோடும்தான் நடந்து கொண்டிருக்கின்றனலே தவிர, தான் தோன்றியாய் இங்கு ஒருலரும் நகருலதில்லை.

சோழ மண்டலத்தை உண்மையாய் ஆட்சி செய்வது வந்தியத்தேவரும் குந்தலை நாச்சியாரும் என்று நீ பேகிறது சிரிப்பாய் இருக்கிறது. என் புருஷன் அலருக்கு உதவி. என் புருஷன் அலருடைய பெருந்தனம். என் புருஷன் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேலரின் சேனாபதி. ஒரு குறிப்பிட்ட படைக்குத்

தலைவர். ஒரு எல்லையைக் கண்ணும் கருத்துமாய் காக்கிறவர். நான் குடும்ப நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்கிறேன். என்னைப் போன்று பட்டமகிஷி உலகமாதேவியும், இன்னும் சிலரும் குடும்பத்தை நிர்வகிக்கிறார்கள். மன்னரைக் கலனித்துக் கொள்ளத் தனியாக ஆட்கள் இருக்கிறார்கள்.

சோழதேசம் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து அதே நேரம் ஒற்றுமையாய் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேலரின் தலைமையின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கிறது. உடையார்தான் இந்தச் சோழ தேசம் என்கிற பெரிய தேரின் அச்க. அவர் இன்றி இந்தத் தேர் நகர முடியாது. சக்கரமோ, ஏர்க்காலோ, கொடிமரமோ, தொங்கும் மணிகளோ தான்தான் என்று சொல்லிக் கொள்ள முடியாது.

கடவுளின் அருள் என்ற குதிரைகள் இழுக்க, இந்தச் சோழ தேசம் வெற்றியை நோக்கிப் பயணப்பட்டுக்கொண்டிருக்கிறது. இங்கு பேசியதை லெளியில் சொல்ல வேண்டாம். இப்படி இனிமேல் பேச வேண்டாம். நீ புகழ லேண்டுமென்றால் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரை மட்டுமே புகழ்ந்து பேசினால் போதும். அதுவும் அலசியமில்லை. அமைதியாய் நடந்து கொண் டால் போதும். உன் ஆற்றலை லெளிக்காட்டினால் போதும். அதிகம் பேசுகிற பொழுது சந்தேகம் வரவாய்ப்பிருக்கிறது." என்று முகத்தைக் கூர்மையாக வைத்துக் கொண்டு சொன்னார்.

வந்தியத்தேவர் இடைமறித்தார். மனைவியைத் தாண்டி முன் பக்கம் வந்தார். அலனை ஊடுருவிப் பார்த்தார்.

70

"இல்லை. நீ யார் என்று குந்தவை நாச்சியாருக்குத் தெரிய வில்லை. உன்னை இரு தினங்களாக ஊன்றிப் பார்த்துத்தான் வருகிறேன். உன்னைப் பார்த்தால் பொய் சொல்பலனாகத் தெரியவில்லை. நீ இப்பொழுது சொன்னதும்கூட உன் மனத்தி லிருந்து வெளிப்பட்ட லார்த்தைகள்தான் என்பதைப் புரிந்து கொள்கிறேன். ஆனாலும் மனத்திலுள்ள எல்லாவற்றையும் லெளிப்படுத்துலது நல்லதல்ல. தொடர்ந்து பாராட்டிப் பேசினால் வந்தியத்தேவர் அருகே வந்து வேவைக்கு லைத்துக் கொள்வார் என்று எவரும் நினைத்து விடக்கூடும். அல்லது

வந்தியத்தேவர் தன்னைப் புகழ்வதை விரும்புகிறார் என்பதை எண்ணிவிடக்கூடும்.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருக்கு மக்களைச் சந்திக்கின்ற அவகாசம் குறைவு. ஆபத்துதவிப் படைகள் அவரை அப்படி சந்திப்பதற்கு அடிக்கடி அனுமதிப்பதும் இல்லை. தேர்ந்தெடுத்த சிலரை மட்டுமே அவருக்கு அருகே அனுப்புகிறார்கள். பாதுகாப்பு கருதி அப்படி நடந்து கொள்ளுகிறார்கள். எனவே, மக்களோடு கலந்து பழகுவதற்கு அவர் அதிகாரிகளை அதிகம் வற்புறுத்துகிறார். செய்தி உங்களுக்கு லந்ததா அல்லது செய்தி நடந்த இடத்திற்கு நீங்கள் போனீர்களா என்று உடனே கேள்வி கேட்கிறார்.

பாம்புகள் அதிகமிருக்கிறது ஒரு கிராமத்தில் என்று சொன்னவுடன், 'பார்த்துவிட்டுச் சொல்கிறீர்களா; கேட்டு விட்டுச் சொல்கிறீர்களா' என்று கேட்கிறார். மௌனமாக இருக்க, பார்த்துவிட்டுச் சொல்லுங்கள் என்று அனுப்புகிறார். பார்த்துவிட்டு வந்த அதிகாரி சொல்லவே முடியாமல் திகைத்துப் போயிருந்தார்.

இப்பொழுது தெரிகிறதா விஷயத்தின் கனம் என்ன என்று... என்ன செய்ய வேண்டும் என்று ஒரு முடிவுக்கு இப்பொழுது வந்திருப்பீர்கள். விஷயத்தையும், என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்பதையும் சொல்லுங்கள்' என்று சொல்கிறார்.

அலருக்கு நாங்கள் கண்களாக இருக்கிறோம். கரங்களாக இருக்கிறோம். வாயாக இருக்கிறோம். எங்களுக்கென்று எந்தவித உணர்வும், புத்தியும் இல்லை. நாங்கள் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரைப் பிரதிபலிக்கிறோம். இப்படி இருந்தால் தான் ஒரு தேசம் சௌகரியமாக இருக்க முடியும். ஒற்றர்படைத் தலைவனே, இன்னொன்று இங்கு சொல்வவா. இப்படிப்பட்ட விஷயம் பாண்டிய தேசத்தில் இல்லாததால்தான் பாண்டிய தேசம் தோற்றுப் போனது. பெரும் அவஸ்தைக்குள்ளானது.

பேச வேண்டியவனைப் பேச அனுமதிப்பதில்லை. எப்படிப் பேச வேண்டும் என்று சொல்லிக் கொடுப்பதுமிவ்வவ. இடையறாது ஒருவர் மீது ஒருவர் சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அதுதான் அங்கே அரசியல் அபத்தங்கள் நடக்கக்

காரணமாகி விட்டன. அரசாங்கம் பலவீனமாக இருந்தால் அந்நியரின் வருகை எளிதாகும்.

எனவே, ஒட்டு மொத்தமாய் இதை யோசித்து இன்றி லிருந்து அதிகம் பேசாமல் செயலில் ஈடுபடு. உணவெடுத்துக் கொண்டாயா."

"இல்லை..."

"ஏன். கோட்டைக்கு இந்நேரம் உணவு வந்திருக்க வேண்டுமே. வரவில்லையா."

"ஐயா, வந்தது. உணவு வரும் நேரத்தில் இவர் மௌனமாக இருந்து விட்டார். இவர் உணவு எடுத்துக் கொண்டு விட்டார் என்று வீரர்கள் கம்மா இருந்து விட்டார்கள். உணவு வண்டி போன பிறகு சாப்பிடவில்லை என்று சொன்னார். சரி; வேறு ஏதேனும் ஏற்பாடு பண்ணலாம் என்று நினைத்துக் கொண் டிருந்தபோது இங்கிருந்து அழைப்பு வந்து விட்டது."

"அதிபுத்திசாலிகளே... என்ன இது. வந்த ஒரு விருந்தினரை இப்படித்தான் பட்டினி போடுவதா... அவர் எதிரே உருட்டி உருட்டித் தின்றீர்களா. என்ன கேவலமான புத்தியடா உங்களுக்கு..." லேசான கோபத்துடன் வந்தியத்தேவர் வீரர் களைத் திட்டிவிட்டு குந்தவையை நோக்கித் திரும்பினார்.

"விடுங்கள்... நான் ஏற்பாடு செய்கிறேன். யாரது..." குந்தவை நாச்சியார் பரபரத்தார்.

அவர் குரல் கொடுக்க முதன் முதலில் வெளியே வந்த அதிகாரிச்சி ஓடி வந்தாள்.

"இவருக்கு உணவு கொடுக்க ஏற்பாடு செய். தம்பி... உணவு உண்டு தயாராயிரு. உன்னை நான் கோயில் பக்கம் கூட்டிக் கொண்டு போகிறேன்."

– வந்தியத்தேவர் சொல்லிவிட்டு அடுத்துக் காத்திருக்கும் ஜனங்களோடு பேசத் துவங்கினார்.

அதிகாரிச்சி அவனை அரண்மனைக்குள் கூட்டிக் கொண்டு போனாள். அரண்மனை குளுமையாக இருந்தது.

பின்பக்கம் சமையலறையில் அவனைத் தனி மனையில் உட்கார வைத்து, எதிரே வாழை இலை போட்டாள்.

வாழை இலையில் முதன் முதலில் உள்ளங்கை அகல அதிரசங்கள் வைக்கப்பட்டன.

குணசீலன் நிமிர்ந்து அந்த அதிகாரிச்சியைப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறீர்கள். தஞ்சையில் முதன் முதலில் உணவு உண்ண ஆரம்பித்திருக்கிறீர்கள். அது இனிப்போடு ஆரம்பிக்கட்டும் என்று அதிரசம் வைத்திருக்கிறேன்."

"உங்கள் பெயரென்ன அம்மா" – குணசீலன் வினவினான்.

"அம்மா என்றெல்லாம் அழைக்க வேண்டாம். என் பெயர் முத்தான பொன் நங்கை. பொன் நங்கை என்று கூப்பிடுவார்கள். பொன்னு என்றும் அழைப்பார்கள்."

"நன்றி பொன்நங்கை." – கை கூப்பினான்.

பொன் நங்கைக்கு அந்தக் கை கூப்பவ் பிடித்திருந்தது.

முத்தான பொன் நங்கையின் தந்தை சோழ தேசத்துப் பெருந்தனத்தின் நேர் உதவியாளராக இருந்தார். முத்தான பொன் நங்கையின் தாய் அந்தப் பெருந்தனத்தின் வீட்டில் உள்பகுதி நிர்வாகத்னதக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

எல்லோரும் சோழதேசத்து அதிகாரியின் வீட்டிவ் வேலைக்குப் போய்விட, விடியலிலேயே எழுந்து சமையல் வேலை முடித்து தாய்க்கும் தந்தைக்கும் பரிமாறி, தங்கைகளுக்கு உதவி செய்து, தம்பிகளைச் சோறிட்டுப் பாதுகாத்து மிகச் சிறு வயதிலேயே குடும்பப் பொறுப்பு முழுவதும் அவளுக்கு வந்து சேர்ந்தது.

இளம் வயதில் குடும்பப் பொறுப்பு எடுத்துக் கொண்டதால், பருவ வயது வந்ததும் அதே வேலையை மிகவும் நேர்த்தியாகவும், நறுவிசாகவும் செய்ய அவள் கற்றுக் கொண்டாள். வீட்டில் அம்மாவுக்கு முடியாமல் போயிற்று. அம்மாவைத் தன் வீட்டுக்கு அருகிலேயே உள்ள குந்தவைப் பிராட்டி ஆதுரச் சாலையில் கொண்டு போய்ச் சேர்த்தாள். அந்த ஆதுரச் சாலை பல படுக்கைகள் கொண்டது. வைத்தியத்தில் கைதேர்ந்த பலர் அங்கு இருந்தனர்.

அம்மாவின் இடுப்பு வலிக்கும், மூட்டு வலிக்கும் எண்ணெய் தேய்த்து உருவிவிடச் சொன்னார்கள். இதை அக்கறையோடு ஒருவர் செய்தால் விரைவில் குணம் என்று சொன்னார்கள். எனவே, அந்த வேலையை முத்தான பொன்நங்கையே தன் தாய்க்குச் செய்தாள். இடுப்பிலிருந்து கால் விரவ் நுனி வரையில் எண்ணெய்ப் போட்டு உருவி, சுடுநீர் எடுத்து மெவ்ல பொறுக்கின்ற சூட்டில் தடவி, மறுபடியும்

குளிர்ந்த நீரால் கழுவி பத்துப் போட்டுப் படுக்க வைக்கிற பொழுது வெகுசில நாட்களிலேயே நல்ல குணம் தெரிந்தது.

ஆதுரச் சாலையில் சிறிய சிறிய மேடைகளைக் கட்டிலைப் போல் கட்டி, அதில் நோயாளிகளைப் படுக்க வைத்திருப் பார்கள். அடுத்த மேடையில் வேறொரு பெண்மணி படுத்துக் கொண்டிருந்தாள்.

அவள் கைகூப்பி, 'எனக்கும் காலில் உருவிவிடேன்' என்று முத்தான பொன் நங்கையைப் பார்த்துக் கெஞ்சினாள்.

முத்தான பொன் நங்கை சிறிதும் தயங்காமல் அவள் முழங்காலுக்குக் கீழே உள்ள ஆடு தசைகளை எண்ணெய் தடவி உருவிவிட்டாள். அவளுக்கும் குணமாயிற்று.

ஆதுரச் சாலையில் சேர்ந்து விடுகிறாயா என்று வைத்தியர் கேட்க, முத்தான பொன் நங்கை மறுத்து விட்டாள். தன் தம்பிகளையும், தங்கைகளையும் பராமரிக்க வேண்டும் என்று சொன்னாள்.

அம்மாவுக்கு அடுத்தபடி படுத்துக் கொண்டிருந்த பெண்மணி குந்தவையின் அரண்மனையில் இருப்பவள். குந்தவைப் பிராட்டியாருக்கு முத்தான பொன் நங்கையின் கைவண்ணம் சொல்லப்பட்டது.

வல்லவரையர் வந்தியத் தேவருக்கும் குதிரையின் சேணம் இறுக்கி கணுக்கால் முறுக்கி இருந்தது. முத்தான பொன் நங்கைக்கு உருவி விடத் தெரியுமென்றவுடன், வீரர்களை அனுப்பி முத்தான பொன் நங்கையை அழைத்து வரச் செய்தார்.

மருத்துவர்கள் அவளுக்கு எப்படி உருவ வேண்டும் என்று ஆலோசனை கொடுத்தார்கள். மருந்து அனுப்பினார்கள்.

கொல்லைப்புறத்திற்குப் போய் அடுப்பேற்றி மடமட வென்று எண்ணெயைச் சூடாக்கி, பற்று அரைத்த மாவுகளைப் பாத்திரத்தில் வரிசையாக வைத்துக் கொண்டு, கடுநீரும், குளிர்நீரும் ஏற்பாடு செய்து கொண்டு, வந்தியத்தேவரை வரச் சொல்லி ஆள் அனுப்பி – வந்தியத்தேவர் விந்தி விந்தி வந்ததும் அவரைக் கைத்தாங்கலாய்ப் பிடித்து உட்கார வைத்து காலைப் பரிசோதித்து, எண்ணெயை விட்டு விரல்களால் வேகமாக வருடி, தசைகளை நகர்த்தி, நரம்புகளைத் தட்டிக் கொடுத்து, முழங்காலிலிருந்து கணுக்கால் வரையிலும் ரத்த ஓட்டத்தை அதிகரித்து, கால் விரல்களை இழுத்துச் சொடுக்கெடுத்து

நரம்புகளைத் தளர விட்டு பக்குவமாய் உருவி கடுநீரும், குளிர்நீரும் மாறி மாறி ஊற்றிப் பற்றுப் போட்டு அவனைத் தூக்கிக் கொண்டு போய் உணவு கொடுத்துத் தூங்க வைத்தாள். அவர் எழுந்தபோது வலி முற்றிலும் குறைந்து விட்டது. அசைத்தால் மட்டுமே லேசாக வலி இருந்தது. அசைய வேண்டாம் என்று சொல்லி, மறுநாளும் போய் அதே விதமாய் வைத்தியம் செய்ய, குந்தவைப் பிராட்டி அவளை அணைத்துக் கொண்டாள்.

"என்ன வேண்டும்." என்று கேட்டாள்.

"வீடு ஒழுகுகிறது தாயே. இரண்டு தங்கைகள். ஒரு தம்பி. தாயும், தந்தையும் வேலைக்குப் போய் விடுவதால் இதைச் சரி செய்ய எங்களால் முடியவே இல்லை. யாரேனும் ஆட்களை அனுப்பிச் சரி செய்தால் நன்றாக இருக்கும்."

"ஆனால் கட்டடக் கலைஞர்கள் வந்து பார்த்துவிட்டு, 'இந்த வீடு சரி செய்ய முடியாது. இடித்து மொத்தமுமாகக் கட்ட வேண்டும்' என்று சொல்லி விட்டார்கள்..." என்றாள் முத்தான பொன் நங்கை.

குந்தவை தேவி அவர்களைத் தங்கள் அரண்மனை வளாகத்திலுள்ள வசதியான தனி வீட்டில் தங்க வைத்தாள்.

"முத்தான பொன்நங்கை... நீ எனக்கும், என் அரண்மனைத் தோழிகளுக்கும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுகின்ற பொறுப்பை எடுத்துக் கொள். உள்ளாலைக்கு வந்து விட்டதால் உன் தங்ககளும், தம்பியும் பத்திரமாக இருப்பார்கள். அவர்களை நமது சேடிகள் பார்த்துக் கொள்வார்கள். எனவே எந்தக் கவலையும் உனக்கு இல்லை." என்று சொல்ல, அவர்கள் வீடு அரண்மனைக்குள் மாறிற்று.

அவள் உள்ளே நுழைந்த வேளை – போர் துவங்க சோழப் படைகள் வடதேசம் நோக்கிப் போயின. வந்தியத்தேவரும் பெரும்படையோடு சாளுக்கிய தேசம் நோக்கி நகர்ந்தார்.

அந்தப் போரில் நல்ல செய்திகளும், கெட்ட செய்திகளும் வெளியிலிருந்து அரண்மனைக்கு வரும். அதற்கேற்றபடி அரண் மனை மாறும்.

ஆண்கள் வெளியே போய்விட்டதால், சோழ தேசத்தின் நிர்வாகம் முழுவதும் அரண்மனைப் பெண்களிடம் வந்து

சேர்ந்தது. குறிப்பாய்- குந்தவைப் பிராட்டியார் தஞ்சை அரண் மனையைச் செம்மையாய்ப் பாதுகாத்து வந்தார்.

இரவு நேரம் ரோந்துகளுக்கு அவரே பல்வக்கிவ் ஏறி பயணம் செய்வார். குந்தவைப் பிராட்டியின் தந்திரம் முழுவதும் முத்தான பொன் நங்கைக்கும் வந்தது.

முன்னே திரையிட்ட பல்வக்கு, ஆட்களால் சுமக்கப்பட்டு குந்தவை தேவியாரின் பெயர் சொல்லி கட்டியக்காரர்கள் முழங்க முன்னே போகும். ஆனால் அதற்குள்ளே சேடிகள் மட்டுமே இருப்பார்கள். குந்தவைப் பிராட்டியார் இடுப்பில் கூடையுடன் சாதாரண வேலைக்காரி போல வேடமணிந்து, பல்லக்கு போன சிறிது நேரத்தில் பின் தொடருவார்கள்.

பல்லக்குக்கு மக்கள் எழுந்து நிற்பதையும், போன பிறகு என்ன பேசுகிறார்கள் என்பதையும் கேட்பார். பேசியவர்களை மனத்தில் குறித்து கொள்வார். நாட்டு நடப்பை அறிந்து கொள்வார்.

ஆண்கள் பலரும் படையெடுப்புக்குச் சென்று விட்டால், அதீத கவனத்துடன் கோட்டையையும், நகரத்தையும் பாது காத்து லந்தார். பல்வேறு தந்திரங்களை உபயோகப்படுத்தினார்.

முத்தான பொன்நங்கைக்குக் குந்தவைப் பிராட்டியாருக்கு அருகே லேலை கிடைத்ததால் வாழ்க்கையை, உலகத்தை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் அதிகம் கிடைத்தது. இயல்பி லேயே காவிரித் தண்ணீர் குடித்து முகத்தெளிவும், புத்திகூர்மை யும் அதிகமாக இருந்த அந்தப் பெண்ணுக்கு- தாயும், தகப்பனும் ஒற்றுமையாய் இருந்து அரலணைத்த அந்தப் பெண்ணுக்குக் குந்தவைப் பிராட்டியாரின் நிழல் மேலும் சாதுர்யங்களைக் கொடுத்தது.

"அரண்மனைக்குள்ளே என் பகுதி முழுவதையும் உன் பொறுப்பில் கொடுத்துவிட்டுப் போகிறேன். உன்னால் பாது காக்க முடியுமா..." குந்தவைப் பிராட்டியார் கேட்டபோது மிக லேகமாக முடியும் என்று சொன்னாள்.

வல்லத்து இளவரசர் வந்தியத்தேவரைத் திருமணம் செய்ததால், தஞ்சையிலிருந்து வல்லத்திற்கு அடிக்கடி போக வேண்டிய அவசியம் குந்தவைப் பிராட்டிக்கு இருந்தது.

கணவனின் மனம் குளிரவும், கணவரின் உறவினர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதாலும், வல்லத்திற்குப் போய் சிறிது

நாட்கள் குடியிருந்து அந்தப் பகுதியை மேம்படுத்த வேண்டிய ஆசையும் அவருக்கு ஏற்பட்டது. அந்நேரம் தஞ்சையில் அவர் வசித்த அரண்மனைப் பகுதியைச் கத்தமாகவும், சீராகவும் வைத்துக் கொள்ள அவருக்கு நல்ல நிர்வாகி தேவைப்பட்டது.

சோழ தேசத்தின் மற்ற பகுதிகளுக்கு விஜயம் செய்கிற பொழுது, முத்தான பொன் நங்கையிடம் அரண்மனையைக் கொடுத்துவிட்டு வந்து பார்க்கும்பொழுது, தான் வைத் திருந்ததைவிட நேர்த்தியாக அரண்மனை பராமரிக்கப்பட்டிருப் பதைப் பார்த்து வியந்தார்.

முத்தான பொன் நங்கைக்கு அதிகாரிச்சி என்று பட்டம் கொடுத்து, சோழ தேசத்தில் எவரையும் கைது செய்யவும், சிறையில் அடைக்கவும், இறுதி விசாரணை நடக்கும் வரை காவலில் வைக்கவும், பண்டாரத்திலிருந்து ஆயிரம் கழஞ்சுகள் வரை பொருள் எடுக்கவும், படை வீரர்கள் திரட்டவும், அவசியமெனில் போர் செய்யக் கட்டளையிடவும், அரண்மனை யைச் செப்பனிடவும், கோட்டை வாசலை எப்பொழுது வேண்டுமானாலும் திறக்கவும், மூடவும் அவர் அனுமதி வழங்கினார்.

மற்ற சேனாதிபதிகள் இது அதிகமென்று முணுமுணுத் தார்கள். ஆனால் முத்தான பொன் நங்கை தனக்குக் கொடுத்த அதிகாரத்தை எந்த விதமாகவும் துஷ்பிரயோகம் செய்யவில்லை. மாறாய் – அரசியல் சாமர்த்தியத்தோடு நடந்து கொண்டாள்.

71

முத்தான பொன் நங்கையின் சாமர்த்தியம் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வரை போக, அவள் அதிகாரத்திற்குக் கூடுதலான அங்கீகாரம் கிடைத்தது. உபதளபதிகளும், தளபதி களும், சேனாதிபதிகளும், மந்திரிமார்களும் முத்தான பொன் நங்கையைக் கண்டால் விசாரிக்காமல் போக மாட்டார்கள். குந்தவைப் பிராட்டிக்கு என்ன தகவல் வேண்டுமென்றாலும், குந்தவைப் பிராட்டியிடமிருந்து என்ன தகவல் வேண்டுமென்றா லும் முத்தான பொன்நங்கை பெயரே முதலில் நினைவுக்கு வரும்.

பொன்நங்கை திருமணம் செய்து கொள்ளவில்லை. தனக்கு கிடைத்திருக்கின்ற மிக உயர்ந்த இந்தப் பதவியைப் பார்த்து, அவள் தன் பொறுப்புகளுடைய கனத்தை உணர்ந்தாள். இந்நேரத்தில் தான் திருமணம் செய்து கொண்டால் தன் புருஷனுக்கு அடிபணிய முடியாத, தலையாட்ட முடியாத நேரங்கள் ஏற்படும் என்று கருதினாள். குந்தவைப் பிராட்டியார் வற்புறுத்திய போதும், 'நான் இப்பொழுதல்ல; சிறிது நாட்கள் கழித்து திருமணம் செய்து கொள்கிறேன்.' என்று தள்ளி லைத்தாள்.

இருபத்து மூன்று அகவை வரை திருமணமாகாத பெண்கள் சோழ தேசத்தில் மெல்ல மெல்லத் தோன்றினார்கள். நிர்லாகம் நல்லபடியாய் நடக்க வேண்டுமென்றால் திருமணம் ஒரு இடைஞ்சல் என்று உணர்ந்து கொண்டார்கள். திருமண மற்று வாழ்வது என்பது குறித்து யோசிக்கத் துவங்கினார்கள்.

சோழ தேசத்தில் வேறொரு பெண்கள் கூட்டம் தங்கள் தோள்பட்டையில் சூல இலச்சினை இட்டு தேவரடியாராக மாற்றிக் கொள்கின்ற லழக்கம் இருந்து வந்தது. அந்த தேவரடி யார்கள் நித்திய கன்னிகள். அவர்களுக்குத் திருமணம் என்பது இல்லை. அவர்கள் ஒருபோதும் விதலைகளாக மாட்டார்கள்.

கோவில்களைப் பராமரிப்பது என்கிற விஷயத்தில் இலர்கள் மிக மும்முரமாய் ஈடுபட்டார்கள். தங்களுக்குப் பிடித்த ஆடவனோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார்கள். 'எந்த அதிகாரமும் நீ செலுத்த முடியாது. இது ஒரு நட்பு. சுகத்திற்காக ஒரு ஸ்நேகிதம்.' என்பதாய் தெளிலாய்ச் சொன்னார்கள்.

தாளவாத்தியக்காரர்களோடோ, பாடகர்களோடோ அவ்லது இம்மாதிரி தேவரடியார்களின் நலன்களைக் கவனிக் கும் அதிகாரிகளோடோ அலர்கள் ஸ்நேகமாக இருந்தார்கள்.

போருக்குப் போகாத அந்தணர்களின் மனைவிமார்கள் ஒருபக்கம்; முத்தான பொன் நங்கை போல வயது முதிர்ந்தும் திருமணம் செய்து கொள்ளாத அதிகாரிச்சிகள் ஒருபக்கம்; சூல இலச்சினை, இட்டு, தன்னை பதியிலார் என்று அறிவித்துக் கொண்டு பாட்டும், நடனமும், இறைவழிபாடுமாய் வாழ்ந்து கொண்டிருக்கிற தேவரடியார் ஒரு பக்கம் என்று பெருகிவர, மறவர்கள் வீட்டுக் குலப்பெண்களிடம் இது தாக்கத்தை ஏற்படுத்தியது.

பதின்மூன்று வயதில் திருமணமாகி, பதினான்கு வயதில் விதவையாகி, இனி எஞ்சிய வாழ்க்கையை என்ன செய்வது என்று தெரியாமல் உயிரற்று வெயிலில் கிடக்கும் நாற்றைப் போல அந்த வீட்டுப் பெண்கள் கருகிக் கிடக்க, அவர் களிடையே மெல்லிய கசப்பு எழுந்தது. அதிகாரிச்சிகளாக அவர்களை நியமிக்கலாம் என்ற எண்ணமும் வந்தது. அப்படி நியமிக்க வேண்டுமென்றால் அவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

இரண்டு தலைமுறைக்கு முன்னால் ஏற்பட்ட இந்த மாற்றத்தால் இந்தத் தலைமுறைப் பெண்கள் எழுதவும், படிக்கவும் கற்றார்கள். படிப்பு வெகு நிச்சயம் பெண்களுக்கு என்பதாக சோழ தேசத்தில் முடிவாயிற்று.

கணவனை இழந்த போர்வீரர்களின் மனைவிக்கு நன்செய் நிவம் அரசாங்கத்திலிருந்து தரப்பட்டது. வரியிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டது. எப்பொழுது அதிகாரிகள் லந்தாலும், அரசர் வந்தாலும் அவர்களைச் சென்று விசாரிப்பது ஒரு வழக்கமாக இருந்தது.

சோழதேசம் இன்று இப்படிச் சிறப்புற வாழ்வதற்காக தன் இன்னுயிரைக் கொடுத்தவன் மனைவியல்வவா. அந்தக் குடும்ப மல்லவா என்று அவர்களை நேரே சந்தித்துக் கைகூப்புவது வழக்கமாக இருந்தது. மங்கலமான வீட்டு விசேஷ விஷயங்களில் ஒதுக்கப்பட்டாலும், அரசாங்க விஷயங்களில் அவர்கள் முக்கியத்துவம் பெற்றார்கள்.

மிகப் பெரியதாய் கோயில் எழுப்பப் போகிறோம் என்று அரசாங்கம் சொன்னதும் அம்மாதிரியான பெண்களுக்கு லெகு நிச்சயம் நல்ல வேலை கிடைக்குமென்று சொல்லப்பட்டது. தஞ்சை நோக்கி அவர்களும் லரத் துவங்கினார்கள். எல்லோ ரோடும் சகஜமாய் கலந்து பேசத் துவங்கினார்கள்.

கிராமத்துப் பெண்களாயிருப்பினும் தஞ்சை நகரத்து நாகரிகத்தை பின்பற்றத் துவங்கினார்கள். நல்ல உடையும், நல்ல உணவும், நகைகளும் அவர்களுக்கும் உரித்தாயின.

சிற்பிகளுக்காகவும், நடனமாதர்களுக்காகவும் மிகப் பெரிய பொது சமையல் அறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த சமையவ் அறையை நிர்வகிக்கும் பொறுப்பு அவர்களிடம் தரப்பட்டது. அலர்களுடைய கையிருப்பாய் கூடை கூடையாய்

செந்நெல்லும், மற்ற பருப்பு வகைகளும், மாமிச உணவிற்கான வழிமுறைகளும் செய்து தரப்பட்டன.

உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் கோயில் கட்டத் துவங்கியதிலிருந்து மிகப் பெரிய சமூக மாற்றம் சோழ தேசத்தைச் சுற்றியுள்ள நகரங்களிலும், கிராமங்களிலும் ஏற்படத் துவங்கியது.

இரவு நேரங்களில் ஒரு ஆணும், பெண்ணும் எங்கேனும் திண்ணையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தால் மக்கள் பதட்டமாவதில்லை. என்ன ரகசிய உறவா என்று கேள்வி கேட்பதில்லை. அது அதிகாரிச்சியாகவும் அவளின் கீழ் வேலை செய்யும் கிப்பந்தியாகவும் இருக்கலாம். அல்லது ஒரு அதிகாரியும், அதிகாரிச்சியாகவும் இருக்கலாம். அல்லது ஒரு அதிகாரிச்சியும் அவளை நேசிக்கின்ற புருஷனாகவும் இருக்கலாம்.

எனவே ஒரு ஆணும், பெண்ணும் சந்தித்துக் கொண்டால் அது ஒரு நாணமற்ற செய்கை என்பது முற்றிலும் மறைந்துபோய் சந்தித்துத்தான் ஆகவேண்டும்; சந்தித்தால் பேசித்தான் ஆகவேண்டும்; பேசினால்தான் மற்ற காரியங்கள் செவ்வனே நடைபெறும் என்ற பழக்கம் ஏற்பட்டது.

முத்தான பொன்நங்கையை அந்தணர்கள் கூட எழுந்து கைகூப்பி வரவேற்றனர். வணங்கினர். தாகசாந்திக்கு அவர்கள் கையாலேயே நீர் கொண்டு வந்து கொடுத்தனர். அவர்கள் வீட்டுப் பெண்கள் முத்தான பொன் நங்கையைக் கூடத்திற்கு அழைத்துப் போய் உட்கார வைத்து இவை போட்டு பரிமாறி உணவு கொடுத்தார்கள்.

முத்தான பொன்நங்கை மனம் வைத்தால் நிலம் கிடைக்கும். வீடு கிடைக்கும். பொற்கழஞ்சுகள் கிடைக்கும். வெளியே போய்வர அனுமதி கிடைக்கும். ஆதுரச் சாலையில் தனி இடம் கிடைக்கும் என்பதாலும் இந்த உபசரிப்புகள் நடந்தன.

இருபது வருடத்திற்கு முன்பு குந்தவையால் தஞ்சையில் நிர்மாணிக்கப்பட்ட ஆதுரச்சாலை போல சோழதேசத்தின் பல பாகங்களில் ஆதுரச்சாலைகள் பலதும் நிறுவப்பட்டன. குறிப்பாய் மகப்பேறு விஷயங்களைக் கவனிக்கவும ஓடுகள் வேய்ந்த கல்கவர் உள்ள தனிவீடுகள் வாங்கப்பட்டு, ஒவ்வொரு ஆதுரச்சாலைக்கும் பண்டகசாலை நிறுவப்பட்டு, அந்தப்

பண்டக சாலையில் மருந்துகள் சேகரிக்கப்பட்டு, வைத்தியரும், அறுவை சிகிச்சை நிபுணரும் நியமிக்கப்பட்டு, எந்த நேரம் அழைத்தாலும் நிச்சயம் போகவேண்டும் என்ற நிர்பந்தமும் அவர்களுக்கு வைக்கப்பட்டது.

எவ்லா மக்களுக்கும், எல்லா நேரமும் மருத்துவ உதவி என்பது சோழ தேசத்தின் அடிநாதமாயிற்று. அது சிறப்பாகவும் செயல்பட்டது. மக்களின் ஆரோக்கியம் மட்டுமல்லாமல், மகளிரின் ஆரோக்கியம் குறித்து சோழதேசம் கவலைப்பட்டது. இத்தகைய விதிமுறை மாற்றங்களால் பெண்களின் வாழ்க்கை முன்னேறியது.

முத்தான பொன்நங்கை ஒட்டுமொத்தமாய் இவையெல்லாம் சிந்தித்தபடி உணவு உண்டு கொண்டிருந்த பாண்டிய தேசத்தின் ஒற்றர்படை உபதளபதியை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள். குணசீலனும் இந்தக் கொள்கையை வியந்து நினைத்துக் கொண்டிருந்தான்.

ஒரு பெண்ணை எதிரே நிற்கவைத்து, சோறு பரிமாற வைத்து மற்றவரெல்லாம் வெளியே போய்விடுகின்ற நிகழ்ச்சி பாண்டிய தேசத்தில் நிகழவே நிகழாது.

அன்னியருக்குப் பெண்கள் பரிமாறவே மாட்டார்கள். ஆண்கள்தான் பரிமாறுலார்கள். பெண்கள் உள்ளிருந்து சமைத்தப் பொருட்களைக் கொண்டு லந்து ஆண்களிடம் கொடுக்க, ஆண்கள்தான் விருந்தோம்பவ் செய்வார்கள். நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே பெண்களின் மூலம் விருந்தோம்பல் நடைபெறும்.

இந்தப் பெண்கள் முன்னேற்றத்தை எப்படி நடத்துவது என்ற சிந்தனையோடு குணசீலன் உண்டு முடித்தான்.

"ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை குணசீலரே." என்று முத்தான பொன்நங்கை கேட்டாள்.

"போர்தானம்மா காரணம். எல்லைப்புறங்களிலேயே வாழ்க்கை கழிந்து விட்டது. எவ்வைப்புறங்களிலிருந்து படை யெடுத்து போருக்குப் போக எப்பொழுது வருவோம்; எங்கே இருப்போம் என்ற வெளிச்சமான சூழ்நிவையே ஏற்படவிவ்லை. சூழ்நிலை வெளிச்சமிவ்லாத பொழுது, யாரோ ஒரு பெண்ணைத் திருமணம் செய்து, எங்கேயோ அவளை

வாழவைத்து நான் இங்கே மனத்தில் சுமையோடு அலைவது தேவையற்றது என்று கருதி திருமணத்தைத் தவிர்த்துவிட்டேன்."

"உறவினர்கள் வற்புறுத்தவில்லையா."

"அநியாயத்திற்கு வற்புறுத்தினார்கள்- வாள் உருவி வெட்டி வீழ்த்தி விடுவேன் என்றதும்தான் அடங்கினார்கள்."

"திருமணம் செய்யாதது சிரமமாக இல்லையா."

"சில சமயங்களில் இரவில் தனிமை வாட்டும். யாரோ ஒரு பெண்ணோடு பாடிக் கொண்டோ, பேசிக் கொண்டோ இருக்கலாமே என்று தோன்றும். அப்படி இருக்க முடியவில்லை என்கிறபோது உள்ளுக்குள் கற்பனைகள் தோன்றும். அந்தக் கற்பனைகள் அதீதமாகும்போது ச்சே... இன்னும் எத்தனை நாளைக்கு இப்படிக் கற்பனை செய்து கொண்டிருப்போம். சரி என்று தலையசைத்து வரலாமா என்ற எண்ணம் எழும். ஆனால் அடக்கிக் கொள்வேன். போர் ஓயட்டும் என்று நினைத்துக் கொள்வேன். போர் ஓய்ந்துவிட்டது. ஆனால் இப்பொழுதும் திருமணம் செய்ய இயலாது."

"ஏன்..."

"அடிமையாய் இருப்பவன் திருமணம் செய்தால் அவன் மனைவியும் அடிமையல்லவா. விடுதலையாய் இருக்கிற ஒரு பெண்ணைத் திருமணம் செய்து என்னைப்போல் அவளையும் அடிமையாக்க வேண்டுமா. எனவே திருமணம் செய்யாமல் இருப்பதே சிறப்பு என்று கருதுகிறேன்."

"உடல் உணர்வுகளுக்கு என்ன பதில் சொல்வீர்கள்."

"இதுவரை ஒரு கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறேன். எப்போதாகிலும் இது கட்டுப்பாட்டை மீறலாம். மீறுகிறபோது பணம் கொடுத்து பொது மகளிரை நாட வேண்டும். அல்லது முற்றிலும் இறை எண்ணத்தை வளர்த்து நான் துறவி என்று தீர்மானித்து விட வேண்டும். நைஷ்டிக பிரம்மச்சாரியாய் இடையறாது இறை நினைப்பு உடையவனாய் மாற்றிக் கொள்ள வேண்டும்."

"நொந்துபோய் பேசுகிறீரோ."

"வேறு எப்படிப் பேச முடியும்."

"இந்த அடிமை வாழ்க்கை, சோழ தேசம் உங்களுக்குப் பிடிக்கவில்லையா."

"அப்படி எண்ணமல்ல. சோழ தேசம் வெகு நிச்சயமாய் பாண்டிய தேசத்னதவிட மலர்ச்சியாய் இருக்கிறது. சோழ தேசத்தில் ஒவ்வொரு விஷயமும் ஆச்சரியமாய் இருக்கிறது. ஆறு பனை உயரமுள்ள கோயில் கட்டப் போகிறார் சோழ மன்னர் என்று தெரிந்ததுமே என் உற்சாகம் எல்லை கடந்து விட்டது. ஒரு உபதளபதிதான் கோயிலின் மாதிரியைப் பார்த்ததாகவும், அது இங்ஙனம் இருக்குமென்று படம் வரைந்து காட்டிய பொழுது நான் பிரமித்துப் போனேன். என் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தமிருப்பதாக அப்பொழுது ஒரு எண்ணம் வந்துவிட்டது.

பாண்டிய தேசம் போகின்ற நினைப்பை அறவே அறுத்து விட்டேன். திருமணம் என்கிற விஷயத்தையும் மனத்திலிருந்து நீக்கிவிட்டேன். இறைவனுக்கு மிக உயரமான ஒரு கோயில் ஒன்றை ஒரு தனி மனிதர் எழுப்புகிறார். அவருக்கு உதவி செய்வதைவிட வாழ்க்கையில் மிகப் பெரிய லட்சியம் என்ன இருக்க முடியும் என்று முடிவுக்கு வந்துவிட்டேன்."

"ஆனால் நீங்கள் வைணவர் அல்லவா."

"என்ன வைணவம். என்ன சைவம். எல்வாம் ஒன்றே. எல்லாம் பேரொளியே. வைணவமும், சைவமும் நாம் வகுத்த வழிகள். அதுவொரு வழி; இதுவொரு வழி. எல்லா லழியும் நல்ல கதிக்கு இட்டுச் செல்வத்தான் முயற்சிக்கின்றன. நடக்கத்தான் நமக்குத் தெம்பு இருக்க வேண்டும்."

"குணசீலரே... மிகத் தெளிவாகவும், அமைதியாகவும் பேசுகின்ற ஒரு பாண்டிய வீரனை முதன் முதலில் பார்க்கிறேன். இது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது."

"அனுபவமம்மா... ஏழு வருடங்களாயிற்று என் கிராமமும், என் கிராமத்து மக்களையும் பார்த்து. தினம் தினம் புதிய உலகம். தினம் தினம் புதிய மனிதர்கள். இடையறாத திகைப்பில் ஆழ்பவன் என்னைப் போல்தான் பேசுவான்.

"குணசீலரே... இந்தச் சோழ தேசத்தில் உமக்கு எப்போது சிக்கல் ஏற்பட்டாலும் என்னிடம் ஒரு தகலல் தெரிவியுங்கள். முத்தான பொன் நங்கைக்கு இந்தச் செய்தியைச் சொல்லுங்கள் என்று யார் மூலமாவது ஓலை கொடுத்தனுப்புங்கள். உங்கள் பிரச்சினையை என்னால் தீர்க்க முடியும்."– கனிவோடு பொன்நங்கை கூறினாள்.

"அம்மா... என் மீது ஏன் இத்தனை கரிசனம்."- வியப்போடு குணசீலன் கேட்டான்.

72

வியப்பில் நின்ற குணசீவனுக்கு அருகே மூச்சுக் காற்றுப்படும் தொலைவில் அதிகாரிச்சி முத்தான பொன்நங்கை வந்து நின்றாள்.

"இது ஒருவகை விருந்தோம்பல் நண்பரே. ஊர்விட்டு, உறவினர்விட்டு, போர் என்ற பெயரால் ஒரு ஆண் தவித்துக் கிடப்பதை என்னால் உணரமுடிகிறது. உடைவாளும், கேயூர மும், கழுத்தில் பொற்பதக்கமும், காலில் வீரக்கழலுமாய் திரிந்து வந்த நீங்கள் இடுப்பில் ஒரேயொரு துண்டுடன் அடிமையாக இருக்கிறீர்கள். இவ்விதம் சோழதேசத்து ஆண் இருந்தாவ் என் மனம் என்ன பாடுபடும். நீங்களும் தமிழ் பேசி, நானும் தமிழ் பேசி ஒருவரையொருவர் புரிந்து கொண்டாலும் எல்லைகளை வகுத்துக் கொண்டு, சேரன் என்றும், சோழன் என்றும், பாண்டியன் என்றும் பிளவுபட்டிருக்கிறோம். இது தேவையற்றது என்று நான் நினைக்கிறேன்.

மேலைச் சாளுக்கியன் உள்ளே வருவதை பாண்டியர் களும், சோழர்களும் கைகோர்த்துத் தடுத்தால் நம்முடைய வாழ்க்கை முறைகள் இன்னும் மேம்படும். ஏன் இந்தப் பிரிவு என்கிற வேதனை என்னுள் அடிக்கடி எழுவதுண்டு. நீங்கள் பாண்டிய தேசத்து ஒற்றர்படை உபதளபதி என்பதை மறந்து விட்டு உங்களோடு பழக விரும்புகின்றேன். சோழதேசத்தை நீங்கள் அவ்விதமே அனுபவிக்க வேண்டும் என்று விரும்பு கின்றேன்."

"நீங்கள் சொல்வது உண்மை. பாண்டிய தேசத்தையும், சோழ தேசத்தையும் எல்லைகளைத் தகர்த்து ஒன்றாக்கி விட வேண்டும். ஒரே நாகரிகமாக மாற்றிவிட வேண்டும். இதற்கு முன்பே சில சோழ மன்னர்கள் முயற்கித்திருக்கிறார்கள்.

உடையார் ஸ்ரீ இராஜராஜ சோழர் வெகுவேகமாக இதை முயற்சி செய்கிறார். இப்பொழுது தன் ஆளுடையைப் பரப்பிவரும் இளவரசர் இராஜேந்திரர் இதை நிறைவேற்றுவதில்

மும்முரமாக இருக்கிறார். பாண்டிய வீரர்களுக்கு விடுதலை வேண்டுமென்றால் பாண்டிய தேசம் போய்க் கொள்ளலாம் என்று அவர் சொன்னதெல்லாம், இணையாக நடத்த வேண்டும் என்ற ஆர்வத்தினால்தான் என்பதைத் தெரிந்து கொள்கிறேன். பாண்டியர்களோடு பகைமை பாராட்ட வேண்டாம் என்கிற ஒரு காரணத்தினால்தான் என்பதாகப் புரிந்து கொள்கிறேன்.

ஆனால், 'உன்னைக் கோவில் இருக்குமிடத்திற்கு அனுப்ப மாட்டோம்; லந்தியத்தேவருக்கு அருகே இருக்கின்ற வேலையாகத்தான் இருக்கும்' என்று சொல்லப்பட்டதே... இது உண்மையா...''

"வல்லவரையர் வந்தியத்தேவர் கோவில் கட்டும் இடத்தில் இல்லாமல் வேறு எங்கு இருப்பார். குந்தவைப் பிராட்டியார் தான் அரண்மனையில் இல்லாதபோது தனக்குப் பதிலாக என்னை நியமித்துவிட்டுப் போவது போல வல்லவரையர் வந்தியத்தேவர் உம்மை நியமித்துவிட்டுப் போகலாம்."

"ஹ... சிரிப்பாக இருக்கிறது."

"ஏன்?"

"சோழதேசத்தில் இல்லாத கெட்டிக்கார ஆண்களா. அவர்களையெல்லாம் விட்டுவிட்டு வல்லலரையர் வந்தியத் தேலர் ஒரு பாண்டிய தேசத்து ஒற்றர்படையின் உபதளபதியைத் தனக்கு அந்தரங்கமாக வைத்துக் கொள்வாரா...

"இந்தப் பிரிவு பார்க்கக் கூடாது என்பதில் லந்தியத் தேவரும் மிக முக்கியமானதாக இருக்கிறார். உங்களைப் போன்றவருக்கு உயர்ந்த பதவியைக் கொடுத்து நல்ல நிலையில் வைத்துக் கொண்டால், ஒருவேளை இங்கு பாண்டிய வீரர்கள் ஏதேனும் மனம் கசந்து கலகத்தில் ஈடுபட்டால் அவர்களைச் சமாதானம் செய்ய வேண்டுமல்லவா."

"ஆம்... பல் குத்த உதவும் குச்சி என்று சொல்லுங்கள்."

"ஏன் இவ்விதம் இளக்காரமாகப் பேசுகிறீர்கள்... தகுதி இருப்பின் உம்மைப் போன்ற பல்வேறு பாண்டிய வீரர்களை நல்ல இடத்திலே, நல்ல நிலையிலே அதிகாரம் செலுத்தும் வண்ணம் சோழ அரச குடும்பத்தினர் செய்வார்கள். அதனால் தான் சோழதேசத்தின் மீது அதிகம் காழ்ப்பு இருப்பவர்களை நீங்கள் பாண்டிய தேசம் நோக்கிப் போய்விடுங்கள் என்று விடுதலையும் கொடுத்தார்கள்."

"எனக்குச் சோழதேசத்தின் மீது காழ்ப்பு இல்லை என்று எண்ணுகிறீர்களா."

"உங்களுக்குக் காழ்ப்பு இருக்கிறதா."

முத்தான பொன்நங்கை லேகமாகக் கேட்டாள்.

"இருக்கிறது தாயே...

"என் தேசம் உங்கள் தேசம்போல இல்லையே என்கிற காழ்ப்பு; என் வீட்டுப் பெண்கள் உங்களைப்போல் இல்லையே என்கிற ஏக்கம். உங்கள் வீட்டுக் குழந்தைகள்போல எங்கள் குழந்தைகளுக்குப் படிப்பு தரச்சொல்ல, ஏடு எழுத, பாட்டுப் பாட, கற்பிக்க ஆள் இல்லையே என்கிற வருத்தம்.

ஆதுரச் சாலைகள் என்று ஒவ்வொரு கிராமத்திலும் வெள்ளைக் கொடி பறக்கிறதே; மதுரையில் ஒரு ஆதுரச்சாலை கூட இல்லையே என்கிற துக்கம்.

நீங்கள் சொன்னதுபோல நானும் தமிழ் பேகிறேன். நீங்களும் தமிழ் பேகிறீர்கள். சங்கம் வளர்த்த மிகப் பெரிய நாகரிகம் கொண்ட அந்த மதுரை இப்போது பல்வேறு அன்னியர்களின் வருகையால் சிதைந்து, சீரழிந்து கிடக்கிறது.

சோழமன்னர்கள் மெல்ல மெல்லச் சரி செய்து கொண்டு வருகிறார்கள் என்றாலும், பாண்டியர்களுடைய இயல்பு மெல்ல மறைந்து வருகிறது. மதுரை அடிமைப்பட்டுக் கிடக்கிறது என்கிற எண்ணமே எனக்குப் பெரும் துக்கத்தைத் தருகிறது.

நான் சோழ வீரனாக என்னை மாற்றிக் கொள்ள இயலாது. என்னை எத்தனை செங்கல் போட்டுத் தேய்த்தாலும் அடியில் நான் பாண்டியனாகத்தான் இருக்கிறேன். பாண்டிய தேசம் போக வேண்டும் என்கிற ஏக்கம் என்னை விட்டு நெல்முனையளவும் போகவில்லை."

முத்தான பொன்நங்கைக்கு உள்ளே சட்டென்று ஒரு துக்கம் பரவியது.

"எனக்குப் புரிகிறது குணசீலரே....

மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

குணசீலன் அலளைக் கூர்ந்து பார்த்தான்.

எதற்காக தான் பாண்டிய தேசம் போவது இலளுக்குத் துக்கத்தைக் கொடுக்கிறது என்று யோசித்தான். அதிகம் இவள்

மீது ஈடுபாடு கொள்ளுவதாய்க் காட்டக்கூடாது என்று தீர்மானித்தான்.

ஈடுபாடு வரும் என்பது அவனுக்குத் தெரிந்தது.

உண்டு முடித்து மேல்துணியை உடம்பு கற்றிப் போட்டுக் கொண்டு வாசலில் வந்து திண்ணையில் அமர, குந்தவை தேவியார் சாப்பிடுவதற்கு வேறுபக்கம் நுழைகிறார் என்பது தெரிந்தது.

மெல்ல வெய்யில் சரிந்து மாலைக் காற்று திசை திரும்பியது.

அரண்மனையின் வேறொரு பகுதியில் பண்டக சாலை அதிகாரிகளுடன் விவாதித்துக் கொண்டிருந்த வல்லவரையர் வந்தியத்தேவர் அரண்மனை திரும்பினார்.

முகம் கழுவிக் கொண்டார். லேறு உடை மாற்றிக் கொண்டார். புனுகும், சந்தனமும் கவந்த கலவையைத் தடவிக் கொண்டார்.

குந்தவைப் பிராட்டியாருக்குக் குரல் கொடுத்தார்.

சில நிமிடங்களிவ் தாம்பூல வாயுடன் குந்தவைப் பிராட்டியார் வந்தார். பின்னால் வந்த முத்தான பொன் நங்கையும் தாம்பூலம் தரித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

"உங்களுக்கு லேண்டுமா..." என்று வெற்றிலையையும், பாக்குக் கொட்டையையும் குணசீலனிடம் குந்தவைப் பிராட்டியாரின் எதிரிலேயே முத்தான பொன்நங்கை நீட்ட, அதை இரண்டு கைகளாலும் குணசீலன் வாங்கிக் கொண்டான். இடுப்பில் சொருகிக் கொண்டான்.

"குணசீலரே... நாம் இப்பொழுது கோவில் கட்டும் இடம் நோக்கிப் போகப் போகிறோம். இருபது நாட்களுக்கு எனக்கு அருகிலேயே இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். உங்களை நான் தேடிக் கொண்டிருக்க முடியாது. நான் எங்கு போனாலும் என்னைப் பின்தொடருலது என்பதை வைத்துக் கொள்ளுங்கள்...." என்று லந்தியத்தேவர் சொல்ல, சரி என்று குணசீலன் தலையாட்டினான்.

அலனுக்குக் குதிரை தரப்பட்டது.

முத்தான பொன்நங்கை ஒரு குதிரையை ஓடவிட்டுத் தாவி ஏறிக் கொண்டாள்.

அவள் ஏறிக்கொண்ட விதம் தனக்குக் கர்ட்டப்படுலதற் காகச் செய்யப்பட்டது என்பதாய் குணசீலனுக்குத் தோன்றியது. தானும் குதிரையில் வித்தை செய்யத் தெரிந்தவன் என்பதைக் காட்டப் பரபரத்தான்.

ஆனால், அடக்கமாக இருந்தான். தன் குதிரையை வந்தியத்தேவருக்குப் பின்னால் நிற்க வைத்துக் கொண்டான்.

ஒரு சிறியபடை – வந்தியத்தேவரின் தலைமையில், குந்தவைப் பிராட்டி அவருக்கு இணையாக வர, தஞ்சாவூர் அரண்மனையிலிருந்து கோவில் கட்டுகின்ற இடம் நோக்கிப் போயிற்று.

தஞ்சை என்கிற நகரம் எவ்வளவு செழிப்பானது என்பதைப் பார்த்து குணசீலன் ஆடிப் போனான். கட்டடக் கலையின் உச்சகட்டம் தஞ்சை நகரம் என்பதைத் தெளிவாய்ப் புரிந்து கொண்டான்.

ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் வெளியே வந்து வல்லவரையர் வந்தியத்தேவருக்கு வணக்கம் சொல்வதும், கையசைப்பதும், ஓடிவந்து அவர் காலைத் தொடுவதுமாய் இருந்தார்கள்.

குழந்தைகள் அருகே வந்து அவர்கள் மீது மலர்களை வீசினார்கள். பெண்கள் கையசைத்தார்கள். ஆண்கள் உருவிய வாளை எடுத்து தங்கள் இடக்கையில் உள்ள கவசத்தின் மீது 'படீர் படீர்' என்று அடித்து, 'சோழம்... சோழம்...'' என்று கூவினார்கள்.

ஒரு அரசருக்குரிய அத்தனை மரியாதையும் வல்லவரையர் வந்தியத் தேவருக்கும், குந்தவைப் பிராட்டிக்கும் கிடைத்தது.

கோவிலை நெருங்கியபோது, பெரும் பாறைகள் பதினாறு சக்கரங்கள் கொண்ட பார வண்டியில் வைக்கப்பட்டு மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தன. யானைகளாலும், மனிதர் களாலும் நகர்த்தப்பட்டுக் கொண்டிருந்தன. தொலைவிலுள்ள கிராமங்களிலிருந்து ஒரு பார வண்டியில் கயிறுகள் சேகரித்துக் கொண்டு லந்திருந்தார்கள்.

தேக்குமரத்தில் ஆப்புகள் அடித்து ஒரு லண்டி முழுவதும் ஆப்புகளாக நிறைந்திருந்தன. சாரம் கட்டுவதற்குப் பலகைகள் வேண்டுமென்று ஒரு இடத்தில் பலகைகள் அறுத்துக் கொண்டிருந்தார்கள்.

பெரிய பாறைகள் தூண்களாய்ச் செதுக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

அதை வியப்போடு பார்த்த வண்ணம் போனான் குணசீலன்.

என்ன கணக்கு இது. எப்படி இந்தப் பாறைக்குள் இந்தத் தூண் இருக்கிறது என்பதை அவன் கண்டுபிடித்தான். ஒரு சிறிய மயிரிழை கூட வித்தியாசம் இல்லாமல், தவறு நேராமல் எப்படி உளியைக் கொண்டு இந்தப் பாறையைச் செதுக்க முடிகிறது.

இறங்கி பாறை செதுக்குகின்ற அந்த லாலிபலை தழுவிக் கொள்ள வேண்டுமென்று குணசீலனுக்கு மனம் பரபரத்தது.

குணசீலனை முத்தான பொன் நங்கை கவனித்துக் கொண்டே வந்தாள்.

கோவில் கட்டும் திடலுக்குள் போனார்கள். அங்கு காவல் பலமாக இருந்தது.

வந்தியத் தேவரையும், குந்தவைப் பிராட்டியையும் வேல் கம்பு விலக்கி உள்ளே அனுமதித்தார்கள். பிறகு உள்ளே நுழைகிற எல்லோரையும் உற்று உற்றுப் பார்த்தார்கள். உபதளபதிகளை முகமன் கூறி லரவேற்றார்கள்.

குணசீலன் வந்தபோது, தடுத்து ஓரமாக நகர்த்தினார்கள். முத்தான பொன்நங்கை ஏதோ சொல்ல முயற்சித்த போது, அமைதி என்று அவளை முன்னே அனுப்பினார்கள்.

அவர்கள் அரசரின் அந்தரங்கக் காவலர்கள். விசாரிக் காமல் யாரையும் நெருங்கவிடமாட்டார்கள்.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் தொலைவில் இருக்கிறார். அங்கே ஒரு கூட்டம் இருக்கிறது. அந்தக் கூட்டத்திற்கு நடுநாயகமாக நின்று ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார் என்பது தெரிந்து குணசீலன் பரவசமானான். அந்தக் கூட்டத்தையே எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் நடவடிக்கைகளை அரசரின் அந்தரங்க ஆட்கள் கவனித்துக் கொண்டிருந்தார்கள். மனிதர்களைக் கவனிக்க அவர்களுக்குத் தெரியும். மனிதர்களின் மனங்களைப் படிக்க அவர்கள் பழக்கப்பட்டிருந்தார்கள்.

சோழவீரர்கள் அவனைக் கூட்டத்திலிருந்து விலக்கி ஒரு குடிசை ஓரமாய் அமைக்கப் போனார்கள். குடிசைக்கு உள்ளே

அழுத்தி அனுப்பினார்கள். அங்கே இருக்கின்ற இரண்டு முரட்டு வீரர்கள் அவனைப் பிடித்து ஒரு முக்காலியில் உட்கார வைத்தார்கள். அவன் கையில் மண்சட்டியைக் கொடுத்தார்கள். உள்ளுக்குள்ளே புளித்த கள் நாற்றம் வீசியது.

அவன் திகைத்தான்.

"குடி." என்று மிரட்டினார்கள்.

"எதற்கு" என்று கேட்டான்.

"குடி." என்று அவன் முகவாயில் கையை வைத்து அழுத்தினார்கள். அவன் தலைமுடியைப் பின்னுக்குப் பிடித்து இழுத்தார்கள்.

"எதற்காகக் குடிக்கச் சொல்லுகிறீர்கள்." என்று கேட்டான்.

"நீ யாரென்று எங்களுக்குத் தெரிய வேண்டும். உன் எண்ணம் என்ன என்பது எங்களுக்குப் புரியவேண்டும்." என்று சொன்னார்கள்.

"என்னைக் கேளுங்கள் – சொல்கிறேன்." என்று குணசீலன் பதில் சொன்னான்.

அவர்கள் அதற்குக் காத்திராமல் அவன் தலைமுடியைப் பிடித்து புளித்த கள்ளை அவன் வாயில் ஊற்றினார்கள். குடிக்கும்வரை விடாது தலையை நிமிர்த்தியே வைத்திருந்தார்கள்.

காரமாகவும், புளிப்பாகவும், மூக்கின் வழியாகவும், தொண்டையின் வழியாகவும் புளித்த கள் அவனுக்குள் புகுந்தது.

அவனைத் தளரவிட்டார்கள். எழுப்பி வெளியே கொண்டு போய்த் தள்ளினார்கள். வெளியே இருந்த வீரர்கள் மறுபடியும் அவனைப் பிடித்துக் கொண்டு ஒரு கற்பாறைக்கருகே உட்கார வைத்தார்கள். காவலுக்கு வேறு இரண்டு வீரர்களை வைத்து விட்டு, மறுபடியும் கூட்டத்திற்கு நடுவே நின்று கொண்டார்கள்.

குணசீலனுக்குத் தலைகற்றத் துவங்கியது. வயிற்றின் வழியே வேகமாய் கள் இறங்குவது தெரிந்தது. இறங்கிய கள் மெல்ல எல்லாப் பகுதிகளிலும் ரத்தத்தோடு கலந்து போவது தெரிந்தது.

தன் மீது சந்தேகப்பட்டு, தான் அதிகம் பேச வேண்டும். உண்மை பேசவேண்டும். அதையும் வேகமாகப் பேசவேண்டும் என்பதற்காகப் புளித்த கள்ளைக் கொடுத்திருக்கிறார்கள்.

இதில் சில மூலிகை இலைகளைப் போட்டு ஊற லைத்திருப்பார்கள். எது மனதில் இருப்பினும் அது வெளியில் வந்துவிடும். அதை வாய்விட்டுச் சொல்லும்படியாக நேரிடும். எவரேனும் பேச்சுக் கொடுத்துத் தூண்டிவிட்டால் மனதில் இருக்கும் அத்தனையும் லெளியே வார்த்தையாக இறைத்து விட நேரிடும். இந்த முறை பாண்டிய நாட்டிலும் கையாளப் பட்டிருக்கிறது.

திருடினாயா, இல்லையா என்று சொல்வதற்காக இந்த மாதிரி மது லகைகளைக் கைதிகளுக்குக் கொடுப்பது வழக்கம். ஆனால் இங்கு தனக்குக் கொடுத்து விட்டார்களே என்று குணசீலன் வேதனைப்பட்டான்.

புத்தினய நேராக னவத்திருக்க முயற்சி செய்தான். ஆனால் புத்தி அலைந்தது. வெவ்வேறு விதமாக யோசித்தது. அமைதியாக இரு என்று புத்தியின் ஒரு பக்கம் கட்டளையிட்டாலும் அவன் மனது அலன் தேசத்தை நோக்கிப் பறந்தது.

'எங்கள் ஊரைப் பாழ்செய்துவிட்டு இங்கே கோவில் கட்டுகிறாயேடா... மகாபாவி' என்று ஒரு புத்தி சொல்ல, 'வேண்டாம்... இப்படிச் சொல்லாதே... இது தவறு' என்று இன்னொரு புத்தி எச்சரித்தது.

ஆனாலும் மறுபடியும் அதே வார்த்தை வந்தது.

"எங்கள் ஊரில் இப்படி ஒரு கோவில் வேண்டுமேயடா... அதற்கு நான் என்ன செய்யவேண்டும். உனக்கு எவ்வளவு பணம் தரவேண்டும் சொல். நான் தருகிறேன். எங்கள் ஊரில் சிவனுக்கு ஒரு கோவில் கட்டடா." என்று அவன் எழுந்து நின்றான்.

வீரர்கள் அலனைத் தள்ளி நின்று பார்த்தார்கள். அவனை வைத்து விட்டுப் போன வீரர்கள் மறுபடியும் வந்தார்கள்.

மெல்ல அவன் முகத்தைச் சவுக்கால் நிமிர்த்தினார்கள்.

"என்ன பேகிறாய்." என்று கேட்டார்கள்.

"எங்கள் ஊரில் இப்படி ஒரு கோவில் கட்ட வேண்டுமடா பாவிகளா." என்று சொன்னான்.

"யாரைப் பாவிகளா என்று சொல்லுகிறாய்."

"சோழர்களைத்தான்." என்று அவன் பதில் சொன்னான்.

73

சோழ வீரர்கள் அலன் கழுத்தில் வளையம் மாட்டினார்கள். கழுத்தில் மாட்டப்பட்ட வளையத்திலிருந்து இரண்டு சங்கிலிகள் தொங்கின. அந்தச் சங்கிலிகளைக் கையில் விலங்கிட்டு அந்த விலங்கோடு பிணைத்தார்கள்.

குணசீலன் மறுபடியும் கைதியானான்.

ஆனால் சாதாரண கைதியல்ல. சோழ தேசத்தை எதிர்த்து உளறுகின்ற ஒரு கைதியாக மாறினான்.

"வந்தியத் தேவர் ஆள் தேர்ந்தெடுக்கிற லட்சணம் பார்த்தாயா..."

ஒரு வீரன் இன்னொரு வீரனிடம் சொல்ல, அந்த வீரன் நகர்ந்து போய் பிரம்மராயரிடம் இதைப் பற்றி தெரிவிக்க விழைந்தான்.

அதற்குள் குணசீலனுக்குப் போதை உச்சத்தில் போய் விட்டது.

"ராஜராஜா..." என்று உரக்கக் கத்தினான்.

கூட்டத்தில் பலபேர் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள். பல் கடித்தார்கள்.

ஒரு போர்வீரன் அவன் முதுகில் சவுக்கால் அடித்தான்.

கால்... அரைக்கால் நாழிகைக்கும் குறைவான பொழுதில் குணசீலன் தன்னை மறந்து நின்றான். ஆனாலும் அவன் அடி மனதிலும் ஒரு எச்சரிக்கை உணர்வு இடைவிடாது தோன்றிக் கொண்டிருந்தது.

'இது வேண்டாம். இது வேண்டாம். உன்னை மீறிப் பேசாதே. உன்னை மீறி ஆடாதே. உடம்பு நடுங்குலதைச் சரி செய்து கொள். அழுத்தமாக நில். அழுத்தமாகப் பேக. இந்த உலகத்தில் நீ கொண்டு வந்தது எதுவுமில்லை. கொண்டு போகப் போலது எதுவுமில்லை. இது சேரன். இது சோழன். இது பாண்டியன் என்று பிரித்துக் கொண்டு வெட்டி வீழ்த்திக் கொண்டிருக்கிற முட்டாள்தனத்தை நிறுத்து.

மொழியாலும், மதத்தாலும் ஒன்றுபட்டு இருக்கும் நாம் எதற்காகப் பிள்வுபட்டு நிற்க லேண்டும். ஏன் எல்லைகளை லகுத்துக் கொண்டு அறுத்துக் கொள்ள வேண்டும். நாலு பனை

உயரத்திற்குச் சிவனுக்குக் கோயில் கட்டப் போகிறான் என்றால் அவன் சளுக்கியனாக இருந்தாலும் நமஸ்கரிக்கவாமே.'

உள் மனம் கூவிற்று.

'இல்லை. எப்படிக் கொள்ளையடித்தார்கள் சண்டாளப் பாவிகள். ஊருக்குள் லட்சோப லட்சம் வீரர்கள் காவிரி நதி தினச திரும்பிப் பாய்வது போல மதுரைத் தெருக்களிலே திரிந்தார்களே. போகிற இடங்களிலெல்லாம் வீட்டுக்குள் புகுந்தார்களே. அத்தனை பெண்டுகளையும் வெளியே இழுத்து வந்து நின்றார்களே. கொடு என்று சவுக்கால் அடித்து தங்கம் வாங்கினார்களே. கோயில்களைத் தவிர மற்ற எல்லா இடங்களி லும் சவுக்கடிகளையும், கொலைகளையும் நிகழ்த்தினார்களே... எப்படி இவர்களை மன்னிக்க முடியும்.

தென் திசையில் ஒரு தேசத்திற்குப் பாண்டிய குலாசினி நாடு என்று பெயர் வைத்தார்களே. பாண்டிய குலத்தை நாசம் செய்ய முடியுமா. அந்த லேரை இலர்கள் அறுத்துவிட முடியுமா. என்ன அயோக்கியத்தனம் இது.

ஏன் புலம்புகிறாய். தவறு அலர் மீது அல்ல. உன் மீது. இதோ– இந்த இராஜராஜனைப்போல ஒரு அற்புதமான மனிதன் உங்களிடையே இருந்திருந்தால் நீங்கள் இந்நேரம் சோழ தேசத்தை நோக்கிப் படையெடுத்திருப்பீர்கள் அல்லவா. சோழ தேசத்திலிருக்கிற ஒவ்வொரு வீடு நோக்கியும், நீங்களும் பாய்ந்திருப்பீர்கள் அல்லவா. எடு, எடு என்று கழுத்தில், காதில் இருந்த நகைகளையெல்லாம் பிய்த்திருப்பீர்கள் அல்லலா. சோழ தேசத்துப் பெண்களை வீட்டு வேலைக்காரியாகவும், காமக் கிழத்திகளாகவும் னலத்திருப்பீர்கள் அல்லவா.

இவர்கள் எங்கே நியாயமான போர் செய்தார்கள். தூங்கிக் கொண்டிருந்த வீரபாண்டியரின் தலையைக் கொய்து எறிந்தலன் ஆதித்த கரிகாலனல்லவா.

அதுதான் ஆள் வைத்துக் கொன்று விட்டீர்களே. ஆபத்துதவிகளை அந்தணர்களாகச் சேர்த்து, அந்தணர்களை சோழ தேசத்திற்கு அனுப்பி நைச்சியமாகப் பேசி, இரவோடு இரவாக, திருட்டுத் தனமாக மடக்கி நெஞ்சில் வேல் எறிந்து கொன்று விட்டீர்களே ஆதித்த கரிகாலனை... அதற்குக் கைமாறாக பதினாறு லருடம் ஏரிக்கரைப் பாசனத்தை, வீர நாராயணன் ஏரிக்கரையிலிருக்கிற கிராமத்தை அவர்கள் எப்படி

அனுபவித்தார்கள். பாண்டிய நாட்டுக்கு என்ன சேவை யெல்லாம் செய்தார்கள்.

மதுராந்தகன் என்கிற உத்தம சோழரைக் கையில் போட்டுக் கொண்டு அவர்கள் பாண்டிய தேசத்துக்குச் செய்த உதவிகள் சாதாரணமானதா.

இல்லல. நீ அரசியல் பேகிறாய். அங்கு ஒரு கெடுதல் என்றால் இங்கு ஒரு கெடுதல். அங்கு ஒரு நல்லது என்றால் இங்கு ஒரு நல்லது. இப்படித்தான் வாழ்க்கை போய்க் கொண் டிருக்கிறது. இதிலிருந்து விடுபட்டு பாண்டிய தேசத்திற்கும், சோழ தேசத்திற்கும், சேர தேசத்திற்கும் உண்மையான ஒரு நட்பு ஏற்பட லேண்டுமென்று வேண்டிக்கொள். அதற்குப் பாடுபடு.

எப்படி முடியும். பாண்டிய தேசத்து முரட்டு இளைஞர் களைப் பார்த்தால் சோழர்களுக்கு வாய்விட்டுச் சிரிக்கத் தோன்றுகிறது. சோழ தேசத்து இளைஞர்களின் திமிரையும், அறிவையும் பார்த்தால் பாண்டிய தேசத்து வெண்மையான இளைஞர்களுக்குக் கோபம் வருகிறது.

மதுரையில் வாழ்ந்து, லளர்ந்த இளைஞனைக் கூட இவர்கள் கிராமத்தான் என்றுதான் அழைக்கிறார்கள்.

அங்குதான் பிரச்சினை ஆரம்பிக்கிறது. மதுரை தேசத்துப் பெண்களைப் பார்க்கும்போது சோழ இளைஞர்களுக்கு கறுப்பி என்றுதான் அழைக்கத் தோன்றுகிறது. இவர்கள் மாநிறத்தைக் கொண்டாட, மற்றவரைக் கறுப்பி என்று அலட்டுகிறார்கள். அவர்களுடைய வெண்மையான மனதை இழிவுபடுத்த தங்கள் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

தவறு எங்கிருக்கிறது என்று உனக்குப் புரிந்து விட்ட தல்லவா குணசீலா. நீ சிறிது காலம் இங்கு அமைதியாக வாழ்ந்து, இந்தக் கெட்டிக்காரத்தனங்களையெல்லாம் அங்கு பரப்பு. இங்கு வாழ்ந்த நல்ல நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு அங்கு எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடு.

பாண்டிய இளைஞர்களுக்குப் படிப்பில்லை. படிப்பு முக்கியம் என்பதை அவர்கள் நினைப்பதேயில்லை. வெகு நிச்சயமாய் தமிழும், லடமொழியும் படிக்க வேண்டும் என்று அவர்களை வற்புறுத்த வேண்டும். எல்லா இளைஞர்களும் தமிழ் படிக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். அரசாங்க

வேலைகள் செய்வோர் வடமொழியும் படிக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும்.

படிப்பிலிருந்து வரும் நாகரிகம் தான் பலம். பாண்டிய தேசத்தின் வெய்யில் கருதி இளைஞர்கள் கோமணம் தவிர வேறு உடுத்துவதே இல்லை. இதைச் கட்டிக் காட்ட வேண்டும். இடுப்பில் ஒரு துணியும், மேலே ஒரு துணியும், தலைப்பாகையும் அணிந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த வேண்டும்.

ஆனால், சோழ தேசம் செழிப்பாக இருக்கிறது. காஞ்சி புரத்துத் துணிகள் மொத்தமும் சோழ தேசத்தில் வந்து இறங்கு கின்றன. விற்பனையாகின்றன. வாங்கக்கூடிய வளமை சோழ தேசத்தில் இருக்கிறது. ஆனால் பாண்டிய இளைஞனுக்கு இல்லையே. மூன்றாவது கோமணமே அவனுக்கு மிகப் பெரிய விஷயம்.'

மதுவின் போதையில் நாலாபக்கமும் விதம் விதமாக யோசித்துக் கொண்டிருந்தான். உடம்பு கிடுகிடுத்து ஆடியது.

சோழ அதிகாரி ஒருவர் அருகே வந்தார்.

"குணசீலா... சொல். ராஜராஜரை என்ன செய்யத் திட்டமிட்டிருக்கிறாய்."

அவர் கேட்டதும், யோசிப்பு மொத்தமும் வழுக்கிக் கொண்டு எங்கோ மறைந்தது. இந்தக் கேள்விக்கு உடனடியாகப் பதில் சொல்ல வேண்டுமென்ற எண்ணம் ஓங்கியது. எத்தனை வேகமாய் உள் மனம் அதைத் தடுத்து முயற்சித்தும் முடிய வில்லை.

"ராஜராஜரைப் பார்த்தால் வணங்க வேண்டுமய்யா. கால் தொட்டு வணங்க வேண்டும்."

"பொய் சொல்கிறாய். நீங்களெல்லாம் ராஜராஜரைக் கண்டால் மிகுந்த வெறுப்போடு இருக்கிறவர்கள்."

"ஒரு காலத்தில் வெறுப்பு இருந்தது. இப்பொழுது இல்லை. ஏழு பனை உயரத்திற்கு சிவனுக்குத் கோயில் எழுப்பப் போகிறார். எப்படி... எப்படி... என்று யோசித்தேன். இங்கு குவித் திருக்கும் பாறைகளைப் பார்த்தால் இராஜராஜர் செய்து விடுவார் என்று தோன்றியது."

"சரி... சொல். ராஜராஜரை எப்படிக் கொலை செய்யத் திட்டமிட்டிருக்கிறீர்கள்."

"அப்படி எண்ணம் ஏதுமில்லை."

"ராஜராஜர் மீது வெறுப்பில்லையா."

"இருந்தது. இப்பொழுது இல்லை."

"சோழ மக்கள் மீது வெறுப்பில்லையா."

"இருந்தது. இப்பொழுது இல்லை."

"எங்கே போயிற்று அந்த வெறுப்பு."

"சோழ மக்களின் நாகரிகம் பாண்டிய தேசத்திற்கு எடுத்துப் போகப்பட வேண்டும்."

"எப்படி... கூடையில் வைத்தா... அல்லது லெறும் கையில் அள்ளிக் கொண்டுப் போகப் போகிறாயா."

கேள்விக்கு சுற்றியுள்ளவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

குணசீலன் லேசாக கோபமானான்.

-"நாகரிகம் என்பது பொருள் போல் அல்ல ஐயா. அது ஒரு உணர்வு. உங்களோடு வாழ்ந்து அந்த உணர்வைப் பெற்று, அந்த உணர்வை எடுத்துக் கொண்டு நான் பாண்டிய தேசம் போகப் போகிறேன்."

"பாண்டிய தேசம் நீ போகக்கூடாது என்று சிறை வைத்து விட்டால்...

"தப்பித்துப் போவேன்..."

"எப்படித் தப்பிப்பாய்."

"இந்தச் சங்கிலிகளை அறுத்து எறிந்துவிட்டுத் தப்பித்துப் போவேன்."

"உன்னால் இந்தச் சங்கிலிகளை அறுத்து எறிய முடியுமா?"

"நிச்சயம் முடியும்."

"செய், பார்க்கலாம்."

அந்தச் சோழ வீரன் தேவையில்லாமல் குணசீலனை வெறுப்பேற்றினான். குணசீலனுக்கு தான் என்ன செய்கிறோம் என்று புரியவில்லை.

முழு பலத்தோடு கழுத்தைப் பின் பக்கம் தள்ளி கைகளை முன்னுக்கு அழுத்தி மிக வேகமாய் அந்தச் சங்கிலிகளை இழுக்கத் துவங்கினான்.

ஜனங்கள் அவன் முயற்சியைச் சுற்றி வந்து பார்க்கத் துலங்கினார்கள். கூட்டம் இடம் மாறி வேறு இடத்தில் ஒரு கூட்டம் சேர்வதை இராஜராஜர் கவனித்தார்.

"என்ன அது?" என்று கேட்டார்.

"ஒரு வீரனுக்குப் போதையேற்றி உண்மை வரவனழக் கிறார்கள்." என்று சொன்னதும் சட்டென்று நகர்ந்து அந்த இடம் நோக்கி நகர்ந்து வந்தார்.

தான் மேலே போர்த்திக் கொண்டிருந்த பச்சைப் போர்லையை உருவி தனக்கு அருகே வந்த வந்தியத்தேவர் மீது போர்த்தி முன்னே நடந்து போகும்படி செய்துவிட்டு, கூட்டத்திலிருந்து வேகமாகக் கவைந்து குனிந்து ஓடிப்போய் சுற்றிக் கொண்டு அந்த இடத்தின் பின்பக்கத்தை அடைந்தார்.

குணசீலனின் வலது பக்கம் மூன்று வீரர்களுக்கு நடுவே நின்று கொண்டார்.

குணசீவன் முழபலத்தோடு சங்கிலியை அறுக்க முயற்சி செய்து கொண்டிருந்தான். கூட்டம் அவனை உற்சாகப் படுத்தியது. "அப்படித்தான் இழு... இழு... நீ மதயானை. உன்னால் முடியும்... இழு... நீ பாண்டிய தேசம் உயர்வானது என்று சோழர் களுக்குச் சொல்... இழு." என்று பல வீரர்கள் கூச்சலிட்டார்கள். வேண்டுமென்றே அவனை வெறியேற்றினார்கள்.

அவன் கழுத்திலிருந்து ரத்தம் கசிய ஆரம்பித்தது. கைகள் நெறியத் துவங்கின. முகம் சிவந்து புடைத்திருந்தது. முழு பலத் தோடு மறுபடியும் அலன் முயற்சி செய்ய, சங்கிலி பட்டென்று அறுந்தது.

குணசீலன் போதையுடன் தள்ளாடினான். "வெற்றி... வெற்றி... வெற்றி... என்று சொன்னான்.

"என்ன வெற்றி பெற்று விட்டாய். சங்கிலி அறுத்ததில் வெற்றி என்ன..."

"இந்தச் சங்கிலி அறுபட்டால் பாண்டிய தேசம் மறுபடியும் கிளர்ந்து எழும் என்று அர்த்தம். அப்படி ஒரு சகுனம் ஏற்படும் என்று நினைத்துக் கொண்டுதான் அறுத்தேன். இனத அறுக்க முடிந்தது. பாண்டிய தேசம் மறுபடியும் வெற்றி பெறும்."

ஒரு வீரன் முன்னேறி அவன் முகத்தில் பட்டென்று அடித் தான். குணசீலன் அடி வாங்கி பின்னடைந்தான். மற்ற வீரர்களும் கை ஓங்கினார்கள்.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் முன்னேறி அடிகள் விழாதவாறு அவனைத் தடுத்து நிறுத்தினார். கூட்டத்தை விலக்கினார். அவர் மீது வந்தியத்தேவர் பச்சைப் போர்வையைப் போர்த்த, கூட்டம் சரசர என விலகி வட்டமாயிற்று.

தள்ளாடி நின்ற குணசீவன் வலக்கையால் கழுத்து ரத்தத்தைத் துடைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நிமிர்ந்தபோது அவன் எதிரே உடையார் ஸ்ரீ ராஜ ராஜத்தேவர் நின்றிருந்தார்.

-"யார் நீங்கள்?"

-ஆச்சரியத்தோடு கேட்டான்.

"என்னை இராஜராஜன் என்று அழைப்பார்கள்."

"நீங்கள் சோழ மாமன்னர் இராஜராஜரா." -தயங்கியபடி குணசீலன் கேட்டான்.

"ஆமாம். சோழ மண்டலத்தை ஆட்சி செய்யும் பொறுப்பை மக்கள் என்னிடம் கொடுத்திருக்கிறார்கள்."

"உடையாரா..."

"ஆமாம். உடையார்."

கூட்டம் அதற்குள் நெறியத் துவங்கியது.

கட்டியக்காரன் உரத்த குரலில் இராஜராஜர் புகழை பலமாகப் பேச, எக்காளங்கள் ஊதப்பட்டன.

"திருமகள் போல பெருநிறைச் செல்வியும் தனக்கே உரிமை பூண்டு மெனக்கெட காந்தளூர் சாலை கலமறுத்தருள கங்கபாடியும் வெங்கொடு நாடும்..." என்று நீண்டதாக அவர் வெற்றிப் பட்டியல் சொல்லப்பட்டது.

அந்தக் கட்டியக்காரன் வெற்றிப் பட்டியல் சொல்லி முடித்த பிறகு வீரர்கள் வாளை உருவி 'சோழம்... சோழம்... சோழம்... என்று கேடயத்தில் ஓங்கி அடிக்கத் தொடங்கினார்கள்.

கட்டியக்காரனின் உரத்த குரலாலும், சோழம்... சோழம் என்று கேடயத்தில் அடித்த சத்தம் தாங்காமலும் குணசீலன் காது பொத்திக் கொண்டான்.

பொத்திக்கொண்ட கைகளை மெல்ல முன்னே கொண்டு வந்து ராஜராஜரை நோக்கிக் கூப்பினான்.

அவன் பெயர் என்ன. அவன் யார் என்று சோழப்படை வீரர்களால் உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவருக்குக் காதோரம் சொல்லப்பட்டது.

"எதற்காகச் சங்கிலி மாட்டியிருக்கிறீர்கள்."

"போதை மிகுந்த கள் கொடுத்தோம். போதையில் ஏதேனும் செய்துவிடக்கூடாது என்பதற்கு எச்சரிக்கையாக சங்கிலி மாட்டினோம்."

"எதற்காக போதை மருந்தைக் கொடுத்தீர்கள்."

"இவர் ஒற்றர்படைத் தலைவர் என்று எங்களுக்குச் சொல்லப்பட்டிருந்தது. இவர் வருகையும் நாங்கள் அறிந்திருந்தோம். இவர் மனோநிலை எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்காக, இவர் உள்மனம் வெளியேறி இவர் உண்மை பேச வேண்டும் என்பதற்காக போதை மருந்தைக் கொடுத்தோம்."

"என்ன பேசினார்."

"சோழ நாகரிகத்தை உள்ளங்கையில் எடுத்து பாண்டிய நாட்டில் தெளிக்கப் போகிறாராம். அதற்காகவே சோழர்களோடு கவந்து பழகப் போகிறாராம்."

சட்டென்று திரும்பி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் குணசீவனை ஆதரவோடு பார்த்தார்.

"எது சோழ நாகரிகம்?" என்று வந்தியத்தேவரை நோக்கிக் கேட்டார் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர்.

74

சோழ வீரர்கள் அமைதியாக இருந்தார்கள்.

"எது சோழ நாகரிகம்?" என்று வந்தியத்தேவரை நோக்கிக் கேட்டார் உடையார் ஸ்ரீராஜராஜத்தேவர்.

வந்தியத்தேவர் அந்தக் கேள்வி வேறு எதற்கோ போடுகின்ற கொக்கி என்பதை புரிந்து கொண்டு மௌனமாகத் தலையாட்டினார்.

"ஏன் யாரும் பதில் சொல்லாமல் இருக்கிறீர்கள். உபதளபதி, நீ சொல். எது சோழ நாகரிகம்?"

"நன்கு உண்ணல். போர் செய்தல்... என்று அந்த உபதளபதி ஆரம்பிக்கும்போது கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது.

அது இல்லை என்பதுபோல் தலையாட்டியது.

"அக்கா நீங்கள் சொல்லுங்கள். எது சோழ நாகரிகம்?"

"வேதவழி நிற்பதுதான் சோழ நாகரிகம். வேதம் என்ன சொல்கின்றதோ அதுதான் சோழ நாகரிகம்."

"அக்கா... நான் இன்னொரு கேள்வி கேட்க வேண்டுமா... லேதம் என்ன சொல்லுகிறது என்று கேட்டால் அதற்குப் பிறகு தான் விளக்கம் சொல்வீர்களா."

குந்தலைப் பிராட்டியார் ஏதோ பேச ஆரம்பித்தபோது, உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேலர் அவரைக் கைகாட்டி பேசா, திருங்கள் என்று சைகை செய்தார்.

"குணசீலரே உம்மைக் கேட்கிறேன். எது சோழ நாகரிகம்? எதை இங்கிருந்து எடுத்துக் கொண்டு போய் பாண்டிய தேசத்தில் தெளிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்."

"சோழ தேசம் முழுவதும் நிரம்பிய இறையாண்மையை நான் எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்று நினைக் கிறேன். சோழதேசம் ஒன்றுபட்ட ஒரு சைவ தேசமாக விளங்கு கிறது. வைணவத் தலங்கள் இருந்தாலும் சைவமே அதிகமாக இருக்கிறது.

ஒரு நாகரிகம் மதத்தால் ஒன்றுபடுவது நல்லது. அது வெகு வேகமாக வளர்ச்சியை அடையும். மதத்தால் ஒரு தேசம் பிரிந் தால் அந்தப் பிரிவு உள்ளுக்குள்ளே மிகப்பெரிய கலவரத்தை ஏற்படுத்திவிடும். பாண்டிய தேசத்தில் லைணவ சம்பிரதாயங் களும் இருக்கின்றன. சைவ சம்பிரதாயங்களும் இருக்கின்றன.

இது பாண்டிய தேசத்தின் பலவீனம்.

பாண்டிய தேசத்தின் தெற்குப் பகுதியில் வைணவ சம்பிர தாயம் நிரம்பியிருக்க, அங்குள்ள வீரர்கள் மதுரைக்கு வந்தால் மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் நுழைவதேயில்லை. மீனாட்சி அம்மன் கோயிலில் நுழைகின்ற சைவர்கள் லைணவ தலங்களுக்குள் போவதில்லை.

பாண்டிய தேசம் அடிப்படையில் இரண்டாகப் பிளவு பட்டிருக்கிறது. சோழ தேசத்தில் இந்தப் பிளவு இல்லை.

அதனால்தான் அவர்களால் அடியோடு புத்த மதத்தையும், ஜைன மதத்தையும் விரட்ட முடிந்தது.

சைவ மதம் ஓங்காரமானது, உத்வேகமானது. லெறியானது. வைணவ மதத்தின் சிங்காரங்கள் சைவ மதத்தில் இல்லை. வீர சைவர்கள் அதிகமிருக்கும் சோழ தேசத்தில் வீரர்கள் வெறியோடு அலைகிறார்கள். வெற்றிக்குப் பாடுபடு கிறார்கள். இறப்பு பற்றி கவலைப்படாமல் போரில் வேகமாக இறங்குகிறார்கள். அதே நேரம் இந்த சைவ மதம் அவர்களை எளிமையாகவும் வைத்திருக்கிறது."

"எப்படி குணசீலரே." -உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேலர் கூர்மையாகக் கேட்டார்.

நெல் விழுந்தாலும் எதிரொலிக்கின்ற நிசப்தம் அங்கு நிலவியது.

"அதற்குக் காரணம் திருத்தொண்டர் புராணம். ஸைவ மதத்திலுள்ள தொண்டர்கள் சற்றும் சுயநலம் இல்லாதவர்கள். இந்தச் சுயநலமில்லாது சைவ மதத்திற்காக, சிவனுக்காக உழைக் கின்ற கதைகள் இங்கு ஏராளம் இருக்கின்றன."

"உதாரணமாக... தன் மகள் திருமணத்தில் தன் மகளுக்கு அழகாக தலைபின்னி தாழம்பூ வைத்து மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட கூந்தலை மழித்து, எதிரே வந்து கேட்ட சிவனடியாருக்கு ஒரு சைவன் கொடுக்க முடியுமென்றால் இதைவிட உயர்ந்த ஒரு தியாகம் இருக்க முடியுமா? 'நீ எது கேட்டாலும் கொடுப்பீரோ' என்று கேட்க, தன் மனைவியை யாராவது வாரி வழங்க முடியுமா... தன் பிள்ளையை நறுக்கி, வந்த சிவனடியாருக்குக் கறியமுது செய்து படைக்க முடியுமா. அருகே உட்கார்ந்து தானும் உண்ண முடியுமா?

தன்னுடைய நண்பர் சிவலோகம் அடைகிறார் என்று கேட்டதும் அரசனாக இருப்பவன், அரச போகத்தை அனுபவித்தவன், அரச பதவி தந்த வெற்றி மமதைகளைப் பரிபூரணமாகக் கொண்டவன், தன்னுடைய உடலை உகுத்து தானும் தன்னுடைய சிலனடியான் நண்பருக்குப் பின்னே போகிறான் என்றால் இதைவிட உத்தமமான அரசன் இந்த தேசத்தில் இருக்க முடியுமா? அரசனுக்கே இந்த உலகத்தின் மீது பற்று இல்லையெனில் வேறு எவருக்கு இருக்கும்.

இம்மாதிரி கதைகளைச் சிவனெறிச் செல்வர்கள் இடையறாது சோழ தேசத்தில் பரப்பி இந்தச் செல்வம், இந்த ஆளுமை இவையெல்லாம் நிலையற்றது என்று சொல்ல, இவர்கள் தாமரை இலைத் தண்ணீராக இருந்து இது பற்றி பெரும் கோஷங்கள் ஏதுமில்லாமல் வெற்றி பெற்று, வெற்றி பெற்றதை அனுபவிக்கிறபோதும் இறையாண்மையோடு இருக்கிறார்கள்.

இந்த இறையாண்மைதான் சோழ தேசத்தின் நாகரிகம்.."

"அப்பா... இரண்டு கைகளாலும் தன் முகத்தை குந்தவைப் பிராட்டியார் பொத்திக் கொண்டார். கைகளை எடுத்துவிட்டு குணசீலனை நோக்கிக் கைகூப்பி தலை வணங்கினார்.

வந்தியத்தேவர் கண்கள் கலங்கியிருந்தன. முன்னேறி அந்த இளைஞன் தலையைத் தடவி 'வாழ்க' என்று சொன்னார்.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் உறைந்து போயிருந்தார். அவர் கண்கள் சிவந்திருந்தன. உதடுகளில் லேசான நடுக்கம் இருந்தன. முகம் இடதும், வலதும் திரும்பி ஆடிற்று. கை கால்கள் பரபரத்தன. அவர் மெல்ல முன்னேறினார். குணசீலனை உற்றுப் பார்த்தார்.

அவன் கழுத்து வளையத்தில் கை வைத்து முழு பலத்தோடு அதை நிமிர்த்தினார். இடைவெளி ஏற்படுத்தினார். அந்த வளையத்தை கழுத்திலிருந்து விடுவித்து வெளியே எறிந்தார். மருந்து போடுங்கள் என்று கை உயர்த்திக் கட்டளை யிட்டார்.

சோழ வீரர்களில் நான்கு பேர்கள் பாய்ந்து குணசீலன் கழுத்துப் புண்ணுக்கு மருந்து போட்டார்கள். இரண்டு கைகளாலும் குணசீலன் தோளைக் கெட்டியாக ராஜராஜர் பற்றிக்கொண்டார்.

"நீ பாண்டிய தேசத்தவனாக இருந்தாலும் உன் பண்பினால், தெளிவான பேச்சினாவ், உயர்ந்த சிந்தனையினால் என் மனதிவ் மிகப்பெரிய இடத்தைப் பெற்றுவிட்டாய். உன் முகம், உன் பேச்சு, உன்குரவ் இனி எனக்கு மறக்கவே மறக்காது."

தன்னுடைய பச்சை நிற மேல் சால்வையை எடுத்தார். வீசினார். அவன்மீது சுற்றிப் போர்த்தினார். களிம்புகள் மீது அந்தச் சால்வை படர்ந்து அழகாக அமர்ந்து கொண்டது.

"குணசீலரே... இப்பொழுதே இங்கே உமக்கு விடுதலை அளிக்கிறேன். நீர் பாண்டிய தேசம் போகலாம். நீர் இனிமேலும் அடிமை இல்லை."

"ஐயா, நான் பாண்டியதேசம் போகத்தான் போகிறேன். ஆனால் இப்பொழுது அல்ல; நீங்கள் கட்டுகிற இந்தக் கோயிலைப் பார்த்துவிட்டு, உங்களோடு பேசிப் பழகிவிட்டு பாண்டியதேசம் போவேன். இதே போல் இல்லாவிடினும், இதுபோல ஒரு சிறிய கோயில் கற்றளி நான் பாண்டிய தேசத்தில் எழுப்ப வேண்டுமென்ற ஆசையுடையவனாக இருக்கிறேன்."

"நல்லது. சிவனருளால் அது நிறைவேறட்டும். இங்கிருந்து இந்த கோயில் கட்டும் கலையைக் கற்க வேண்டுமென்று ஆசைப் படுவது மிகுந்த சந்தோஷத்தை அளிக்கிறது. நல்லது. எங்கு தங்கியிருக்கிறீர்கள்."

"தெரியவில்லை ஐயா. வந்தியத்தேவர் இல்லத்திற்கு வந்திருக்கிறேன்."

"அதாவது அரண்மனைக்குள் இருக்கிறீர்களா?"

"நான் எங்கு இருக்கிறேன் என்று எனக்குத் தெரிய வில்லை."

"இவர் எங்கிருத்தல் நலம்" – உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் திரும்பி தன்னுடைய அந்தரங்கப் படையை நோக்கி வினவினார்.

"அதை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்." என்றான் ஒரு படைத்தளபதி.

"இலரை நான் அடிக்கடி சந்திக்க வேண்டுமே."

"அதற்கும் ஏற்பாடு செய்கிறோம்."

"இவர் அரண்மனைக்குள் தங்கலாமா..."

"வேண்டாமென்பதே எங்கள் அபிப்பிராயம்."

"எங்கு தங்க வைக்கப் போகிறீர்கள். அதைச் சொல்லுங்கள்."

"தேலரடியார்கள் தங்கி இருக்கின்ற இடத்திற்கு ஒரு வீடு காலியாக இருக்கிறது. அந்த இடத்தில் இவரைத் தங்க லைக்கலாம் என்றிருக்கிறோம்."

"இவருக்கு அதில் பிடித்தமா என்று கேட்டுக் கொள்ளுங்கள்."

"நான் சிற்பிகளுக்கு நடுவே இருக்க விரும்புகின்றேன்." ணசீலன் பேசினான்.

"அது உங்களுக்கு நல்லது. வந்தியத்தேவரே... இவரைச் சிற்பிகளுக்கு நடுவே நல்ல வீடு பார்த்துக் குடியிருக்க வையுங்கள். சிற்பித் தலைவரிடம் இந்தப் பாண்டிய தேசத்து வீரர் என்னுடைய நண்பர் என்று அறிமுகப்படுத்துங்கள். குணசீலரே... எப்பொழுது நான் கோயில் கட்டும் தளத்திற்கு வந்தாலும் அங்கு வந்து என் எதிரே நின்று நீங்கள் பார்க்க முயற்சிக்கலாம். உங்களை எவரும் தடுக்க மாட்டார்கள். என் அந்தரங்க வீரர்கள் அனைவருக்கும் இதுவொரு கட்டளை. குணசீலரைத் தடுக்க வேண்டாம்."

"ஆனால் வழக்கமான சோதனைகள் நடைபெறும், ஸ்ரீ உடையார் அலர்களே."

"செய்து கொள்ளுங்கள்." -இராஜராஜர் அவர்களுக்கு அனுமதி கொடுத்தார்.

சிவ சமயம் இராஜராஜரின் அந்தரங்க ஒற்றர்கள் இராஜராஜரின் பேச்சைக் கேட்காமல் போவதும் உண்டு. அவர் உத்தரவிட்ட பிறகு மறு உத்தரவு வேண்டும் என்று சொல்வதும் உண்டு.

அவர்கள் தெளிவாக குணசீலனை அனுமதிக்கும் முன்பு சோதிப்போம் என்றார்கள். சோதனைக்காக உடையார் ஸ்ரீ இராஜராஜரிடம் அனுமதி வாங்கினார்கள்.

"போய் சுற்றிப் பாருங்கள். உங்களுடைய பேச்சு நெஞ்சைத் தொட்டது. நாம் நிறைய பேசுவோம். பாண்டிய தேசம் பற்றி, பாண்டிய அரசியல் பற்றி, உங்களுக்குத் தெரிந்ததெல்லாம் எங்களுக்குச் சொல்லுங்கள். சோழ தேசத்தில் எங்கு போக விருப்பமோ, எங்கு வேண்டுமானாலும் போகலாம். நான் உங்களுக்கு அனுமதி தருகிறேன். அக்கா... வாருங்கள். வந்தியத் தேவன்ரயும் அழைத்துக் கொள்ளுங்கள். கோயில் நிவம் முழுவதும் நாம் ஒருமுறை சுற்றிவிட்டு வருவோம்."

உடையார் ஸ்ரீ இராராஜத்தேலர் நகர, குணசீலன் தளர்ந்தான். உட்கார்ந்தான். மெல்ல நிலத்தில் சாய்ந்தான். அவனுக்குக் கண் கிறங்கி தூக்கம் வந்தது.

முத்தான பொன்நங்கை ஏதோ யாருக்கோ கட்டளை யிட்டாள். ஒரு சிறிய கிண்ணத்தில் பச்சை மூலிகையில் சாறு

வந்தது. ஒரு வீரனிடம் கொடுத்து, அதை குணசீலனுக்குப் புகட்டச் சொன்னாள்.

அந்த வீரன் குணசீலனை நிமிர்த்தி அவன் வாயில் அந்தப் பச்சை இலையைப் புகட்ட, அவன் எழுந்து நின்றான். ஓடிப்போய் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டான்.

வயிறு புரட்டி வாந்தி எடுத்தான். முதல் எடுப்பிலேயே அவனுக்கு முகம் தெளிந்து விட்டது.

"இனி அடுத்தது நமக்கு என்ன வேலை."

–உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேலர் அருகேயிருந்த அதிகாரியைப் பார்த்துக் கேட்டார்.

"வெளியூரிலிருந்து வரும் தேவரடியார்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அந்த வீடுகளை வந்து பார்க்க வேண்டும். இதுவரை நாற்பது வீடுகள் முடிந்திருக்கின்றன. விரைவாய் மற்றவையும் எழுப்பி முடித்து விடுவோம். அவர்கள் நீங்கள் வரவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் உங்கள் பாதம் பதிய வேண்டும் என்று நினைக் கிறார்கள்."

"அப்படியா..."

மன்னர் கேட்டார். அவர் கேள்வியில் கவலை தெரிந்தது. இது எவ்விதம் முடியும் என்கிற மெல்லிய சலிப்பு தெரிந்தது.

"ஒவ்வொரு வீடும் ஏறி இறங்க வேண்டாம். ஏதேனும் சில வீடுகளைப் பார்த்துவிட்டுப் போனால் நன்றாக இருக்கும்."

"வீடுகள் அவர்களுக்குத் திருப்தியாக இருக்கின்றனவா...?"

"இல்லை. மெல்லிய குறைகள் சொல்கிறார்கள்." அதிகாரி பதில் சொன்னான்.

"என்ன குறைகள்."

"வீடு இன்னும் உயரமாய் இருக்க வேண்டுமென்று நினைக் கிறார்கள். கடும் மழை பெய்து தண்ணீர் சூழ்ந்தால் வீட்டிற்குள் தண்ணீர் வந்து விடுமோ என்று பயப்படுகிறார்கள்."

"இந்த இடமே மேடுதானே... எப்படி இங்கு தண்ணீர் வரும்."

"ஆனால், அவர்கள் ஏற்க மறுக்கிறார்களே."

"சரி, நான் சொல்கிறேன்."

"நான் சிற்பிகளுக்கு நடுவே இருக்க விரும்புகின்றேன்." ணசீலன் பேசினான்.

"அது உங்களுக்கு நல்லது. வந்தியத்தேவரே... இவரைச் சிற்பிகளுக்கு நடுவே நல்ல வீடு பார்த்துக் குடியிருக்க வையுங்கள். சிற்பித் தலைவரிடம் இந்தப் பாண்டிய தேசத்து வீரர் என்னுடைய நண்பர் என்று அறிமுகப்படுத்துங்கள். குணசீலரே... எப்பொழுது நான் கோயில் கட்டும் தளத்திற்கு லந்தாலும் அங்கு வந்து என் எதிரே நின்று நீங்கள் பார்க்க முயற்சிக்கலாம். உங்களை எவரும் தடுக்க மாட்டார்கள். என் அந்தரங்க வீரர்கள் அனைவருக்கும் இதுவொரு கட்டளை. குணசீலரைத் தடுக்க வேண்டாம்."

"ஆனால் வழக்கமான சோதனைகள் நடைபெறும், ஸ்ரீ உடையார் அவர்களே."

"செய்து கொள்ளுங்கள்." -இராஜராஜர் அவர்களுக்கு அனுமதி கொடுத்தார்.

சில சமயம் இராஜராஜரின் அந்தரங்க ஒற்றர்கள் இராஜராஜரின் பேச்சைக் கேட்காமல் போவதும் உண்டு. அலர் உத்தரவிட்ட பிறகு மறு உத்தரவு வேண்டும் என்று சொல்வதும் உண்டு.

அவர்கள் தெளிவாக குணசீலனை அனுமதிக்கும் முன்பு சோதிப்போம் என்றார்கள். சோதனைக்காக உடையார் ஸ்ரீ இராஜராஜரிடம் அனுமதி வாங்கினார்கள்.

"போய் கற்றிப் பாருங்கள். உங்களுடைய பேச்க நெஞ்சைத் தொட்டது. நாம் நிறைய பேகவோம். பாண்டிய தேசம் பற்றி, பாண்டிய அரசியல் பற்றி, உங்களுக்குத் தெரிந்ததெல்வாம் எங்களுக்குச் சொல்லுங்கள். சோழ தேசத்தில் எங்கு போக விருப்பமோ, எங்கு வேண்டுமானாலும் போகலாம். நான் உங்களுக்கு அனுமதி தருகிறேன். அக்கா... வாருங்கள். வந்தியத் தேவன்ரயும் அழைத்துக் கொள்ளுங்கள். கோயில் நிலம் முழுவதும் நாம் ஒருமுறை கற்றிவிட்டு வருவோம்."

உடையார் ஸ்ரீ இராராஜத்தேவர் நகர, குணசீலன் தளர்ந்தான். உட்கார்ந்தான். மெல்வ நிலத்தில் சாய்ந்தான். அவனுக்குக் கண் கிறங்கி தூக்கம் வந்தது.

முத்தான பொன்நங்கை ஏதோ யாருக்கோ கட்டளை யிட்டாள். ஒரு சிறிய கிண்ணத்தில் பச்சை மூலினகயில் சாறு

வந்தது. ஒரு வீரனிடம் கொடுத்து, அதை குணசீலனுக்குப் புகட்டச் சொன்னாள்.

அந்த வீரன் குணசீலனை நிமிர்த்தி அவன் வாயில் அந்தப் பச்சை இலையைப் புகட்ட, அவன் எழுந்து நின்றான். ஓடிப்போய் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டான்.

வயிறு புரட்டி வாந்தி எடுத்தான். முதல் எடுப்பிலேயே அவனுக்கு முகம் தெளிந்து விட்டது.

"இனி அடுத்தது நமக்கு என்ன வேலை."

-உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேலர் அருகேயிருந்த அதிகாரியைப் பார்த்துக் கேட்டார்.

"வெளியூரிலிருந்து வரும் தேவரடியார்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அந்த வீடுகளை வந்து பார்க்க வேண்டும். இதுவரை நாற்பது வீடுகள் முடிந்திருக்கின்றன. விரைவாய் மற்றவையும் எழுப்பி முடித்து விடுவோம். அவர்கள் நீங்கள் வரவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் உங்கள் பாதம் பதிய வேண்டும் என்று நினைக் கிறார்கள்."

"அப்படியா..."

மன்னர் கேட்டார். அவர் கேள்வியில் கவலை தெரிந்தது. இதுவ் எவ்விதம் முடியும் என்கிற மெல்லிய சலிப்பு தெரிந்தது.

"ஒவ்வொரு வீடும் ஏறி இறங்க வேண்டாம். ஏதேனும் சிவ வீடுகளைப் பார்த்துவிட்டுப் போனால் நன்றாக இருக்கும்."

"வீடுகள் அவர்களுக்குத் திருப்தியாக இருக்கின்றனவா...?"

"இல்லை. மெல்லிய குறைகள் சொல்கிறார்கள்." அதிகாரி பதில் சொன்னான்.

"என்ன குறைகள்."

"வீடு இன்னும் உயரமாய் இருக்க வேண்டுமென்று நினைக் கிறார்கள். கடும் மழை பெய்து தண்ணீர் சூழ்ந்தாவ் வீட்டிற்குள் தண்ணீர் வந்து விடுமோ என்று பயப்படுகிறார்கள்."

"இந்த இடமே மேடுதானே... எப்படி இங்கு தண்ணீர் வரும்."

"ஆனால், அவர்கள் ஏற்க மறுக்கிறார்களே."

"சரி, நான் சொல்கிறேன்."

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் நடக்கத் துவங்கினார்.

"சிறு தேர் கொண்டு வரட்டுமா?"

வேறொரு அதிகாரி கேட்டார்.

இராஜராஜத்தேவர் தலையசைத்து விட்டு மறுத்து விட்டார்.

"குதிரை கொண்டு வரட்டுமா." – இன்னொரு அதிகாரி கேட்க, அதில் ஏறவும் அவருக்கு விருப்பமில்லை என்று தெரிவித்தார்.

ஆனால், இராஜராஜத்தேவரின் நடையில் அவ்வளவு விறுவிறுப்பு இல்லை. கடும் சிந்தனை வயப்பட்டதுபோல் தெரிந்தது. கூட்டம் விலக்கி அவருக்கு வழி ஏற்படுத்த இரண்டு புறமும் உள்ள மக்களை உற்றுப் பார்த்துக் கொண்டு லந்தார்.

சட்டென்று நின்றார்.

"அக்கன் எங்கே. குந்தவைப் பிராட்டியார் எங்கே." என்று கேட்டார்.

அதிகாரிகள் பாய்ந்து ஓடி பின்னே வருகின்ற குந்தவைப் பிராட்டியாரிடம் தகவல் தெரிவித்தார்கள்.

"வந்தியத்தேவரையும் வரச்சொல்." என்று உனடயாரின் குரல் அழைக்க, வந்த வீரனின் காதுகளில் எட்டியது.

"உங்களையும் கூப்பிடுகிறார்." என்று வந்தியத்தேவரைப் பார்த்து அதிகாரி கூற, வந்தியத்தேவர் மெல்லச் சிரித்தார்.

"எதற்கு இப்படி கூவுகிறார். குந்தவைப் பிராட்டியார் அங்கு வந்தால் நானும் கூட லந்துவிட்டுப் போகிறேன். நான் கூப்பிட்டால் வரமாட்டேனோ என்ற எண்ணம் ஏன் அவருக்கு வருகிறது. குந்தவை, மன்னரிடம் சொல். இயல்பாக சாதாரண மாக இருக்கச் சொல். மிகுந்த கவனத்தோடும், கவலையோடும் காணப்படுகிறார். இது அவர் உடல்நலத்திற்கு நல்லதல்ல."

"சரி சொல்லலாம். ஆனால் எதிரே இருக்கின்ற வேலை களைப் பார்க்கும்பொழுது எனக்கும் கவலைதான் வருகிறது. எப்படி இந்தக் கோயில் முடிக்கப் போகிறோம் என்று புரியாமல் ஒரு லேதனை எழுகிறது."

"முடித்து விடலாம். நாம் முடிக்கிறோம் என்ற எண்ணம் இருந்தால் பிரச்சினை ஏற்படும். இறைவன் னகயில் ஒப்படைத்து விட்டு, நம்முடைய வேவைகளை நாம் சாதாரணமாகச் செய்யத் துலங்கலாம்."

அவர்கள் பேசிக் கொண்டே உடையாரிடம் நெருங்கினார்கள்.

"என்ன அருண்மொழி."

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் இயற்பெயரை விளித்தபடி குந்தலைப் பிராட்டியார் அருகே வந்தார்.

"அந்தப் பாண்டிய தேசத்து இளைஞன் பெயரென்ன? குணசீலனா... அவன் பேசியதைக் கேட்டீர்களல்லவா. திருத்தொண்டர் கனதகளைப் பற்றி அவன் பேசுகிறான். அதைக் கொண்டு போய் பாண்டிய தேசத்திலுள்ள மக்களுக்குச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறான். இது வாழ்க்கையைப் பண்படுத்தும் நாகரிகமாக்கும் என்று சொல்கிறான். திரும்பத் திரும்ப அவன் வார்த்தைகளே எனக்குள் ஓடிக் கொண்டிருக்கின்றன.

மனித வாழ்க்கையில் நாகரிகமென்பது அருளுடைமை. அந்த அருளுடைமை என்பது வெகு சிலரிடம் மட்டுமே இருக்கிறது. இப்படியும் மனிதர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்று நாம் எடுத்துச் சொல்ல வேண்டியதிருக்கிறது.

கோயில் கட்டுவதைப்போல, போர் செய்து வெல்லுவதைப்போல நான் செய்ய வேண்டிய இன்னொரு முக்கியமான காரியம் குமரியிலிருந்து திருப்பதி வரை பல நபர்களை அனுப்பி, பல தமிழறிஞர்களைப் போய் வரச்சொல்லி, அவர்களால் எவ்வளவு அடியார்கள் கதை திரட்ட முடியுமோ – அத்தனை திரட்ட வேண்டுமென்று சொன்னாலென்ன? இவைகளை ஒரு தொகுப்பாக எவரேனும் எழுதினால் என்ன...?"

அந்தக் கோயில் நிலத்தின் நடுவே நின்று உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் கேட்டார்.

"ஆஹா... அருமையான யோசனை."

"தமிழகத்தின் பண்பாடு முழுவதும் இந்தக் கதைகளில் வெளிவந்துவிடும். இருக்கின்ற பத்துப் பதினைந்து கதைகளுக்கே கண்களில் கண்ணீர் கோர்த்து வயிறு கலங்கி அழ வைக்கிறது. இன்னும் இதுபோல் எத்தனை கதைகள் இருக்கின்றனவோ. அவைகளைப் போய் கேட்டுக்கொண்டு வந்தால் என்ன. இதை யாரிடம் ஒப்படைப்பது அக்கன். இதைக் கேட்கத்தான் உங்களை அழைக்கேன்."

75

நம்பியாண்டார் நம்பியிடம்தான் ஒப்படைக்க வேண்டும்."

வந்தியத்தேவர் சொன்னார், "நம்பியாண்டார் நம்பி தேவார திருவாசகப் பதிகங்களைப் பிரதியெடுத்துக் கொண்டிருக்கிறாரே. அந்த வேலை இன்னும் முடியவில்லையே. சிதம்பரத்திலிருந்து கொண்டு வந்த ஓலைச்சுவடிகள் மிகவும் பழுதுபட்டிருக்கின்றன. இது நெட்டி வேலையாக இருக்கிறது. நிறைய பெண்களை அந்த வேலையில் ஈடுபடுத்தி அவர் நிதானமாகச் செய்து கொண்டிருக்கிறார். தயவு செய்து அவரை இப்பொழுது கலைக்க வேண்டாம்."

குந்தவைப் பிராட்டியார் வேகமாகச் பேசினார்.

"நான் நம்பியாண்டார் நம்பியைப் பயணப்படச் சொல்ல வில்லை. நம்பியாண்டார் நம்பியிடம் சொன்னால் அவர் நல்ல ஒரு மனிதரைச் சொல்லுவார் அல்லவா. இந்த வேலையை யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று நமக்குத் தெரியவில்லை யல்லவா. இது போர் வீரர்களின் வேலையல்ல. புலவர்களின் வேலை. எந்தப் புலவருக்கு சைவ மதத்திலும், அடியார்கள் கதையிலும் ஆர்வம் இருக்கிறது என்று பார்க்க வேண்டாமா."

"வெறும் புலவரால் எப்படி முடியும் அருண்மொழி. குமரியிலிருந்து திருவேங்கடம் வரை பயணப்படுவதென்றால் குதிரையில்தான் பயணப்பட வேண்டும். லேகமாக பல இடங்களுக்குப் போக வேண்டும். வெயில், காற்று, மழை என்று எல்லா இடத்தையும் சமாளித்துக் கொள்ள வேண்டும். பல லனாந்தரங்களைத் தாண்டிப் போக வேண்டும்.

சேர தேசத்திற்கு எந்தப் புலவர்களாவது நடந்து போக இயலுமா. எனவே இது புலவரின் வேலை அல்ல. போர் வீரனின் வேலை என்று நான் கருதுகிறேன்."

"அப்படியானால் இதில் ஆர்வம் இருக்கிறவர் போக வேண்டுமென்பது உண்மையானால், உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர்தான் போக வேண்டும்" என்று வந்தியத்தேவர் கண் சிமிட்டிச் சொல்ல, சட்டென்று திரும்பி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வந்தியத்தேவரை உறுத்துப் பார்த்தார்.

"என்னுடைய ஆசையும் அதுதான். கோயில் கட்டுவதற்கு முன்பே நான் இந்த வேலையைத் துவங்கியிருக்க வேண்டும். எதனாலோ எனக்கு நினைவில்லாமல் போய்விட்டது. உண்மையில் இதுதான் மிகச் சரியான காலம்.

சேர தேசத்திலும், பாண்டிய தேசத்திலும், சாளுக்கிய தேசத்திலும், தொண்டை நாட்டிலும், நடுநாட்டிலும், தெற்கே குமரி வரையும், ஈழத்திலும் கூட வெகு எளிதாக நுழைய முடியும். அந்த தேசத்தவர்கள் எல்லோருமே நல்லதொரு சம்பந்தம் நம்மோடு வைத்திருக்க, இப்பொழுது பயணப்படுவது எளிது.

நான் ஒரு சாதாரணப் போர் வீரனாக அல்லது சிவ மடத்தைச் சேர்ந்தவனாக இந்த ஊர்களுக்கெல்லாம் போய், இங்கு என்ன நடந்தது. யார் அடியார்கள். அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள். அவர்கள் செய்த அதிசயமென்ன. அவர்கள் வாழ்க்கை எப்படி உன்னதமாயிற்று. சிவ தரிசனம் எப்படி அடைந்தார்கள் என்றெல்லாம் விசாரித்துக் கொண்டு வரவேண்டுமென்பது என் நெடுநாள் ஆசை. கோயில் கட்டுவதற்குப் பதில் இந்தச் சரித்திரங்கள் தேடுவதைச் செய்திருப்பின் தமிழுக்கு மிகப் பெரிய உன்னதமான ஒரு சந்தோஷத்தை நான் கொடுத்திருப்பேன் என்று நினைக்கிறேன்."

"அருண்மொழி... கோயில் கட்டுவது என்பது எளிதான விஷயமா. நீ சொல்வதுபோல ஊர் ஊராகப் போய் கதைகள் தேடி வருவது, சரித்திரம் தேடி வருவது என்பது யார் வேண்டுமானாலும் செய்யலாம். நான்கூட செய்ய முடியும். ஆனால் இந்தக் கோயில் கட்டுவதை ஐயனே... உன்னைத் தவிர வேறு யாரும் செய்ய முடியாது. இன்னொரு முறை இந்தக் கோயில் கட்டுவதைவிட மிக முக்கியமான வேலை லேறு ஏதேனும் ஒன்று இருப்பதாய் தயவுசெய்து சொல்லாதே" குந்தவைப் பிராட்டி கைகூப்பினார். பேச்சத் தொடர்ந்தார்.

"அருண்மொழி. இது முக்கியமான வேலை. இறைப் பணி. தமிழர் நாகரிகத்தை இதைவிட அற்புதமாய் வேறு எதுவும் காட்டிவிடாது. நீ சொன்னதுபோவ அடியார் சரித்திரம் இன்றில்லையேனும் ஏதேனும் ஒரு நாள் திரட்டப்படும். கவலைப்படாதே." –அரசரின் புறங்கை தொட்டாள்.

"ஏன் இன்றில்லையேனும் ஏதேனும் ஒருநாள் என்று பேசுகிறீர்கள் அக்கன். சாதாரண வேலையா இது. ஒருவர்

செய்யும் வேலையா. சேர தேசத்திற்கு மூவர். குமரிப்பக்கம் மூவர். நடுநாட்டிற்கு மூவர். தொண்டை நாட்டிற்கு மூவர். பாண்டி தேசத்தில் நால்வர் என்று பலபேர் அனுப்பி, அலர் களையெல்லாம் வெவ்வேறு இடங்களுக்குப் போகச் செய்து அங்கிருந்து தகவவ் தேடி லர வேண்டும். அங்கு சொவ்லப் படுவதை ஆராய்ந்து தெளிந்து இதில் சேர்க்க வேண்டிய அவசிய முண்டா என்று பார்க்க வேண்டும். ஏதேனும் கொண்டு வரவேண்டும் என்பதற்காக இல்வாததும் பொல்லாததும் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, இந்தக் கதைகளைக் கொண்டு வந்து சேர்ப்பதும் பெரிய விஷயமல்ல. இலைகளைத் தொகுக்க வேண்டும். நூலாக மாற்ற வேண்டும்."

"இது மிகப்பெரிய கதை. ஆனால் நீ சொன்னதுபோல அந்த சரித்திரம்தான் தமிழ் நாகரிகம். தமிழரின் நாகரிகம். அந்தப் பாண்டிய உபதளபதி குணசீலன் மிக மிகக் கூர்மையான வனாக இருக்கிறான். இறையருள் பெற்றவனாக இருக்கிறான். எதற்காக அவனுக்கு மருந்து கொடுத்து வேதனைப்படுத்து கிறார்கள். அவனை இன்னும் மரியாதையாக நடத்த வேண்டு மென்று உன் வீரர்களுக்குக் கட்டளையிடு. அவர்கள் செய்தது எனக்குப் பிடிக்கவில்லை அருண்மொழி. விட்டால் வந்தியத் தேவருக்குக்கூட இவர்கள் மது கொடுத்து விடுவார்கள்." – நேரம் பார்த்து குந்தவைப் பிராட்டியார் சொல்ல, மன்னர் வேகமாக கைதட்டினார்.

அந்தக் கைதட்டலில் லேசான கோபம் இருந்தது.

அந்தரங்கச் சேகவன் அருகே வந்தவுடன் தலைவனை வரச் சொன்னார்.

"அந்தப் பாண்டிய ஒற்றர் படைத் தளபதி குணசீலனை இனி நெல்முனையளவும் அவமரியாதையாய் நடத்தக்கூடாது. அவருடைய இரும்புக் கேயூரங்களை எடுத்துவிட்டு தாமிரக் கேயூரங்களை மாட்டுங்கள். அவருக்கு ஏவவ் சொல்ல இங்குள்ள எந்த அதிகாரிக்கும் அதிகாரம் இல்லை. அவரைக் கைது செய்ய பெருந்தனத்தார் மட்டுமே முயற்சி செய்யலாம். அவரும் அவரைக் காவலில் வைக்க முடியாது. குணசீலர் என்ன செய்து கொண்டிருக்கிறார்." என்று மன்னர் இதமாகக் கேட்டார்.

அந்த மரியாதை சோழ வீரர்களின் நெஞ்சில் சுருக்கென்று தைத்தது.

"அதிகாரிச்சி முத்தான பொன் நங்கை அவருக்கு மாற்று மருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்."

"நல்வது அவருக்குச் சிற்பிகளிடம் இடம் தேவையில்லை. வந்தியத்தேவரின் அரண்மனையிலேயே பின் கட்டில் ஓர் இடம் கொடுக்கட்டும். வந்தியத்தேவர் என்ன உணவு எடுத்துக் கொள்கிறாரோ – அதுவும் எடுத்துக் கொள்ளட்டும். அரண்மனையில் பாண்டிய ஒற்றர் இருக்கட்டும்."

"இது நல்லதல்ல என்பது என் அபிப்ராயம்." – மிருதுவாக அரசரின் அந்தரங்க அதிகாரி சொல்ல, அரசர் தலையசைத்தார்.

"ஏன்."

"அவர் என்னவானாலும் பாண்டிய தேசத்தவர். அவர் நம்முடைய அரச குடும்பத்தினருக்கு ஏதேனும் ஊறு விளைவிக்கக் கூடும்."

"நல்லது. அவருக்கு உதவியாக சோழ தேசத்திலிருந்து ஒரு அந்தண இளைஞனை அனுப்பு. பிரம்மராயரின் படையிலிருந்து தேர்ந்தெடுத்து அவரிடம் உதவிக்காகக் கொண்டு போய் விடு. அந்த உதவியாளன் ஒற்றனைப் போலாகவும், அவர் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துபலனாகவும் இருக்கட்டும்." அதே நேரம் அவருக்குச் சோழ தேசத்தில் என்ன புரிந்து கொள்ள லேண்டுமென்பதைச் சொல்பவனாகவும் இருக்கட்டும். அவரைக் கண்டு மிரள வேண்டாம். அவர் ஆர்வம் தூய்மையானது. தெளிலானது. அந்த ஆர்வத்திற்கு நாம் மதிப்பு கொடுப்போம். அவரைக் கண்காணிக்கவும் செய்வோம்."

"அரண்மனைக்கு வெளியே புறம்படியில் இடம் கொடுத்தால் போதாதா."

"இல்லை. உள்ளே இடம் கொடுப்பது நல்லது."

"பாண்டிய தேசத்து ஆபத்துதவிகள் தஞ்சை முழுவதும் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது வரும் படையிலும் கலந்து விட்டார்கள் என்று நாங்கள் கேள்விப் படுகிறோம். அந்தப் படை உள்ளே நுழையும்போது, பாண்டியரின் ஆபத்துதவி படைகள் நிச்சயமாக அங்கங்கே நகருவார்கள். இப்படி அரண்மனையில் ஒருவர் இருக்கிறார் என்று தெரிந்தால், பாண்டியனின் ஆபத்துதவி படைகள் அங்கு வந்து அவரைத் தொடர்பு கொள்வார்கள்."

அந்த அதிகாரி அடிக்குரலில் பேசினார்.

"இதுவும் நல்லதுதான். அவரை யார் தொடர்பு கொள்ளு கிறார்கள் என்று பார்த்து, அவர்கள் யார் என்று விசாரித்தால், பாண்டியனின் ஆபத்துதவி படைகள் எத்தனை பேர் கலந் திருக்கிறார்கள். எங்கெல்லாம் கலந்திருக்கிறார்கள் என்று தெரிய வரும். இதுவொரு தூண்டில் முள் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அவரை மிக மரியாதையாக அரண்மனைக்கு அழைத்துச் செல்லுங்கள்."

மாடுகள் பூட்டிய வண்டியில் வைக்கோலுக்கு நடுவே குணசீலன் சுருண்டு கிடந்தான். அந்த வண்டி உள்ளாலை நோக்கிப் போயிற்று. வந்தியத்தேவரின் அரண்மனை முன் நின்றது

முத்தான பொன்நங்கை கைதட்டி சேடிகளை வரவழைத்து, குணசீலனைக் கைத்தாங்கலாய்த் தூக்கிக் கொண்டு போய் கொல்லைப்புறமுள்ள மிகப் பெரிய அறையில் தங்க வைத்தாள்.

அந்த அறைக்கு நேர் எதிரே அவள் அறை இருந்தது. அதனாலோ என்னவோ அவள் மிகச் சந்தோஷமாக இருந் தாள். ஏன்... ஏன்... என்ற கேள்வி அடிக்கடி எழுந்து வந்தாலும், சும்மாயிரு என்று அந்தக் கேள்வியைப் புறக்கணித்தாள். சந்தோஷத்தை அனுபவி என்று கட்டளையிட்டாள்.

குணசீவன் புலம்பத் துவங்கினான். தன்னை மறந்து போதையில் பேசத் துவங்கினான். அந்த போதை குறைய ஒரு நாளாகும்.

அவனுக்கு வைஷ்ணவ பாசுரங்கள் தெரிந்திருந்தன. குறிப்பாய் ஆண்டாள் என்று அழைக்கப்படும் கோதை நாச்சி யாரின் பாடல்களை அவன் பாடத் துவங்கினான். அவனுக்கு இனிமையான குரல் இருந்தது. தன்னை மறந்து அவன் உரக்கக் குரலெடுத்து அந்தப் பாடலைப் பாடுவதை அதிகாரிச்சி முத்தான பொன் நங்கை வியந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

"கற்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
பொற்புள்ள செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும்
நாற்றமும் விருப்புற்று கேட்கின்றேன்
சொல்லாழி வெண்சங்கே"

என்று அவன் உரத்த குரலில் பாட, முத்தான பொன் நங்கைக்கு வயிறு குளழந்தது.

அவளுள் காமமும் காதலும் போட்டி போட்டுக் கொண்டு கிளர்ந்தன.

பிரம்மராயர் என்றழைக்கப்படும் கிருஷ்ணன் ராமன், தன் மாளிகையின் வாசலிவ் மிகப் பெரிய திண்ணையில் சம்மணமிட்டு உட்கார்ந்திருக்க, அவருக்கு அருகே அவர் மனைவி உட்கார்ந்து வெற்றிலை மடித்துக் கொண்டிருந்தாள். ஒவ்வொன்றாய் தன் விரலில் அடுக்கிக் கொண்டிருந்தாள். சற்று தள்ளி ஒற்றர்படைத் தலைவர்கள் நின்றிருந்தார்கள்.

சோழப்படையின் ஒரு பகுதியைப் பல குழுக்களாகப் பிரித்து ஒற்றர் படை என அறிவித்து, அவர்களை தேசத்தின் பல பகுதிகளுக்கு அனுப்பி – வெற்றி பெற்ற தேசத்திலுள்ள அரசியல் நடவடிக்கைகளை உற்றுக் கவனித்து அவ்வப்போது தகவல் அனுப்பச் சொல்வது பிரம்மராயரின் வழக்கம்.

ஆனாவ் கோயில் கட்ட ஆரம்பித்ததிலிருந்து வெளிதேசத்தில் இருக்கிற ஒற்றர்படைத் தலைவர்களை வேகமாக தஞ்சைக்கு வரச் சொல்லியிருக்கிறார்.

கோயில் கட்டுகிற விஷயத்தை ஒட்டுமொத்தமாக அவர்களோடு உட்கார்ந்து பேச லேண்டும்.

எங்கிருந்து ஆபத்து வரும். எவரிடமிருந்து எதிர்ப்பு வரும். யார் இதற்காகக் கோபப்படுவார்கள். எவர் எரிச்சலுறுவார்கள் என்று கேட்பதற்கு ஆசைப்பட்டார்.

அவர் இல்லத்தில் விருந்து உண்டுவிட்டு அந்த வீரர்கள் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்கள்.

அவர் வந்ததும் எழுந்து கைகட்டிக் கொண்டார்கள்.

"தொண்டை நாட்டிலிருந்து வந்த ஒற்றர்படைத் தலைவர் இன்று காலை வந்து சேர்ந்தார். வந்தவுடன் சற்று கவலையான செய்தியைச் சொன்னார்.

திருவொற்றியூரிலிருந்து கிளம்பிய அடிமைகள் நாளை அல்லது நாளை மறுநாள் வந்துவிடுவார்கள். அவர்களோடு காஞ்சிபுரத்தில் பாண்டிய ஆபத்துதவிகள் கலந்து விட்டார்கள். வெகு நிச்சயமாக ஆதித்த கரிகாலனைக் கொன்ற ரவிதாஸரின் மகன் யாரோ ஒருவன் அதில் இருக்கிறான். யார் என்று இனம் கண்டுபிடிக்க முடியவில்லை. தன்னைத் தானே சங்கிலியில் பிணைத்துக் கொண்டு முரட்டுக் கைதியைப் போல

உட்கார்ந்திருக்கிறான். அவனால் அந்தச் சங்கிலியை விலக்கி விட்டு ஓடவும் கூடும். எனவே அடிமைகளிடம் மிகக் கவனமாக இருக்க வேண்டும். உள்ளே வந்து அமர்ந்து சில நாட்களிலேயே அவர்கள் மிகப் பெரிய கலவரம் செய்ய வேண்டுமென்று திட்டமிட்டிக்கிறார்கள். முன்னதாக சில ஆட்களை தேசத்தின் வேறு பகுதியிலிருந்து அனுப்பியிருக்கிறார்கள். குறிப்பாய் பாண்டிய தேசத்திலிருந்து போர் வீரர்கள் சிற்பிகள் என்ற பெயரில் வந்து உட்கார்ந்து விட்டார்கள்.

பாண்டிய ஆபத்துதவிகளின் ஒரே குறிக்கோள் இராஜராஜ சோழரைக் கொல்வது."

செய்தி கேட்டதும் பிரம்மராயர் கவலையானார்.

அரசரைச் சுற்றி அரண் அமைப்பது எளிது. பாதுகாப்புப் போடுவது பெரிய விஷயமில்லை. ஆனால் அரசர் அந்தப் பாதுகாப்பை மீறி அடிக்கடி நகர்ந்து விடுவதும், மக்களுக்கு நடுவே போய் நிற்பதும்தான் கவலையாக இருக்கிறது. விளக்கிச் சொன்னால் அரசர் சிரிப்பார். சற்று கோபப்படுவார். சட்டென்று கோபம் அதிகமாகி, நாலு பேர் முன்னால் கடுமையாகக் கண்டிக்கவும் கூடும்.

இன்று காலை ஒரு பாண்டிய ஒற்றனைச் சங்கிலியிலிருந்து விலக்கி தோளில் தட்டிக் கொடுத்ததாக செய்தி வந்தது.

இது தவறு. மிகப் பெரிய தவறு.

பிரம்மராயர் மனைவியிடமிருந்து வெற்றிலை வாங்கிமென்று கொண்டே யோசிக்கத் துவங்கினார்.

சரியாய் ஒரு தாக்குதல் சோழப் படை வீரர்களையே வைத்து பாண்டியர்கள் மீது நடத்தினால் என்ன என்று யோசித்தார்.

76

எண்ணம் தோன்றியவுடனேயே செயல்படுத்தக்கூடிய வேகம் சேனாதிபதி கிருஷ்ணன்ராமனான பிரம்மராயருக்கு உண்டு.

பிரம்மராயர் என்பது அவருக்குக் கொடுக்கப்பட்ட பட்டம். சேனாதிபதி என்பது அவர் பதவி.

சம்பிரதாயத்தில் ஊறிய அந்தணரான அவர் சமயபேதமின்றி சோழ மன்னனுக்குத் தன்னை முற்றிலுமாய் அர்ப்பணித்துக் கொண்டவர். உடையார் ஸ்ரீ இராஜராஜன் மீது மிகுந்த காதல் உள்ளவர். உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரைவிட அவரது மகன் இளவரசன் இராஜேந்திரன் மீது மிகுந்த நம்பிக்கையும் இராஜேந்திரனால் சோழதேசம் இன்னும் உன்னதமான நிலைக்கு வரும் என்று நம்பிக்கை உடையவர்.

உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவருக்கு என்ன உதவி செய்கிறோமோ, அதைவிட அதிக உதவிகளை ஒரு சேனாதிபதியாய், மந்திரியாய் இருந்து இராஜேந்திரனுக்குச் செய்ய வேண்டும் என்ற ஆசை உடையவர். அவருடைய எதிர்பார்ப்புகளைச் சற்றும் பொய்க்காமல் இராஜேந்திரன் வளர்ந்து வந்தான். சில சமயம் அவரே வியக்கும் வண்ணம் பல திட்டங்களைப் பற்றி அவன் மனம்விட்டுப் பேசுவான். தன்னுடைய கனவுகளை அவர் காலடியில் அவருக்கருகே உட்கார்ந்து காதோடு கூறுவான். 'பிரம்மராயரே' என்று அன்போடு அழைப்பான்.

"உங்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும்." என்று ஒரு நாள் இரவு இதே திண்ணையில் அமர்ந்து அவன் கேட்டான்.

"என்ன இராஜேந்திரா... என்ன திடீரென்று கேள்வி? உனக்குத் தெரியாதது என்ன... நான் இந்தச் சோழ தேசத்தைப் பற்றிச் சொல்லிவிடப் போகிறேன்..." என்று பிரம்மராயர் கிட்டத்தட்ட அலன் குரல் விகிதத்திலேயே பதில் சொன்னார்.

"நான் சோழ தேசத்தைப் பற்றித் தான் கேட்கப் போகிறேன் என்று ஏன் நினைக்கிறீர்கள். என் எண்ணம் சோழ தேசத்தைத் தாண்டி வேறு சில இடங்கள் மீது நிலை கொண்டிருக்கிறது. என் கேள்வி முக்கியமானது. கொஞ்சம் ஆழ்ந்து நீங்கள் சிந்தித்துப் பதில் சொல்ல வேண்டும்." என்று பீடிகையோடு பேசத் துவங்கினான்.

"கேள் ராஜேந்திரா..." அவர் நெருங்கி உட்கார்ந்து கொண்டார்.

"பரதகண்ட மன்னர்களில் எவரேனும் படையெடுத்து பிற தேசத்திற்குப் போனதுண்டா...? ஆமெனில் யார்... இல்லையெனில் ஏன்?"

பிரம்மராயர் திகைத்துப் போனார்.

இப்படி ஒரு கேள்வி இளவரசன் இராஜேந்திரனிடமிருந்து வரும் என்று அவர் நினைக்கவே இல்லை. இந்திய தேசத்தி லிருந்து எந்த அரசராலது எந்தக் காலகட்டத்திலாவது படை யெடுத்து அன்னிய தேசத்திற்குப் போனதுண்டா...? ஆமென்றால் யார்... இல்லையெனில் ஏன்?

"போனதுண்டே ராஜேந்திரா... உன்னுடைய தகப்பன் உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர், அவருடைய தகப்பன் கந்தர சோழர். எல்லோரும் போனதுண்டே... இலங்கையை நோக்கி நாம் படையெடுத்திருக்கிறோமே... இலங்கை அன்னிய தேசம் தானே...

"இவ்வை... ஈழத்தை நான் அன்னிய தேசம் என்று நான் நினைக்கவேயில்லை... அது நம்முடைய பகுதியில் ஒன்று. கடல் குறுக்கிட்டதால் அது அன்னியமாகத் தோன்றுகிறது. நமது மக்கள் வாழும் பூமி. இதை அன்னியம் என்று எப்படிச் சொல்வது... நான் சொல்வது இன்னும் விலகி கிழக்கே உள்ள இந்தக் கடலைக் கடந்து வேறு பக்கம் அரசர்கள் யாரேனும் போயிருக்கிறார்களா... வடக்கே இமயம் வரை போய் இருந்திருக் கிறார்களா...."

"போனதாகச் சொல்லப்படுகிறது ராஜேந்திரா. சேரன் ஒருவன் போயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அது குறித்து சரியான தகவல்கள் ஏதும் இல்லை."

"இந்த பரதகண்டம் தாண்டி ஏன் இவர்கள் போகவில்லை. வடக்கே மணல் வெளியாக இருக்கிற காந்தார தேசம் போய் முற்றுகையிட்டு அங்கிருந்து அழகான பெண்டிர்களை ஏன் கொண்டு வரவில்வை. முன்னீர் பழந்தீவு ஆயிரத்தை ஏன் இவர்கள் கைக்கொள்ளவில்வை. கிழக்குப் பக்க தேசங்களை ஏன் இவர்கள் வெற்றி கொள்ளவில்லை. கடாரத்தை ஏன் இவர்கள் தொட்டுப் பார்க்கவில்வை?"

"இராஜேந்திரா அதற்கு மிகப் பெரிய படைபலம் வேண்டுமே."

"இல்லை பிரம்மராயரே... திறமை வேண்டும். படைபவம் எப்படி வேண்டுமானாலும் சம்பாதித்துக் கொள்ளவாம். அப்படிப் போக வேண்டுமென்ற எண்ணம் வேண்டும். எண்ணத்தைச் செயலாற்றும் திறமை வேண்டும். இவையிரண்

டும் இந்த பரதகண்டத்து தென்பகுதி மக்களுக்குக் குறைவாக இருக்கிறது. இதைத் தவிர, உள்ளூர் சண்டைகளிலேயே இவர்கள் சோர்வாகி விடுகிறார்கள். அந்தச் சண்டைகளைத் தீர்த்து வைக்கவே இவர்களால் முடியாது போகிறது. ஊர்விட்டு விலகினால் ஊர் கொள்ளையடிக்கப்படுமோ என்று பயப்படுகிறார்கள். எனவே, கடல் தாண்டிப் போகவோ, இமயம் வரை நடக்கவோ இவர்கள் அஞ்சுகிறார்கள்."

"உண்மைதான் ராஜேந்திரா... எதற்காக இப்படி ஒரு கேள்வி கேட்கிறாய்..."

"எனக்கு அப்படி ஒரு எண்ணம் இருக்கிறது பிரம்மராயரே..."

"கடல் கடந்து போகவா..."

"ஆமாம்... இமயம் வரை போவதற்கு. அங்கு போய் கங்கை நீரைக் கொண்டு வருவதற்கு... அங்கிருந்து கங்கை நீரைக் கொண்டு வந்து இங்குள்ள எல்லா சிவாலயங்களிலும் அபிஷேகம் செய்வதற்கு... கடாரம் போய் அங்கிருக்கின்ற செவ்வங்களை வாரி நம்மூர் சிவனுக்கு அணிவித்துப் பார்ப்பதற்கு.. அங்குள்ள மக்கள் யார்... என்ன செய்கிறார்கள். அங்குள்ள விதை நெல்கள் எப்படிப்பட்டவை. வேறு என்ன அங்கு விளைகின்றன என்று கண்டுபிடித்து அரிய பொருட்களைக் கொண்டு வருவதற்கு. நம்மைப் பற்றி அவர்களுக்குச் சொல்வதற்கு. அவர்களைப் பற்றி நாம் அறிவதற்கு, படையெடுத்துப் போகவேண்டும் என்று தோன்றுகிறது."

"இதற்குப் படையெடுத்துத்தான் போக வேண்டுமா. கலாச்சார பரிவர்த்தனை செய்து கொள்ளலாமே."

"யாரும் அனுமதிக்க மாட்டார்கள். எவரும் விரும்ப மாட்டார்கள். கத்திமுனையில்தான் இதுவரை எவ்வா தேசத்திலும் கலாச்சார பரிவர்த்தனை நடந்திருக்கிறது. மதம் வளர்ந்திருக்கிறது."

"உண்மை இராஜேந்திரா, உன்னுடைய நல்ல கனவுகள் பலிக்கட்டும் என்று என் தகப்பன் ரங்கநாதன் திருவடியில் தலை வைத்து நமஸ்கரிக்கிறேன். மனமுருகப் பிரார்த்திக்கிறேன். உன்னுடைய திட்டம் என்ன. எப்போது அதை நிறைவேற்றப் போகிறாய்."

"எதுவும் இப்பொழுது உறுதியாகத் தெரியவில்லை பிரம்மராயரே. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு நான் கடவ் கடந்து போவதற்கு விரும்புகின்றேன்."

"அப்படியா, அதற்கு முன் இங்கு செய்யவேண்டிய வேலைகள் அதிகமிருக்கின்றதே."

"ஆமாம் வடக்கே பலப்படுத்திக் கொள்ள வேண்டும். சாளுக்கியன் தலைதூக்க விடாமல் செய்ய வேண்டும். குறிப்பாய் மேலைச் சாளுக்கியனை அதிரடித்து அவன் கால்களை முறித்து வெறும் விவசாயிகளாய் அலர்களைச் செய்யவேண்டும். பத்து பேர் ஒன்று கூடினால் படையெடுத்துப் போய்விடவேண்டும். மிகபவமான நமது படை ஒன்றை அங்கு நிறுவி, நமது ஆட்சியை நடத்த வேண்டும். அதேவிதமாக பாண்டியர்கள் தலை தூக்க விடாமல் அழுத்தி வைக்க வேண்டும். பாண்டியர்களும், சாளுக்கியர்களும் எத்தனை விதமாக நாம் உபதேசித்தாலும் சுதந்திரமாக இருக்கவே ஆசைப்படுவார்கள்.

பாண்டியனை இடையறாது சேரன் தூண்டிவிட்டுக் கொண்டே இருப்பான். இலங்கையிலுள்ள பௌத்த குருமார்களால் அங்குள்ள பரம்பரை மஹிபாவர்களும் ஆடிக்கொண்டிருப்பார்கள். எனலே மூன்று புறமும் ஆபத்து இருக்கிறது. நான்காவது புறம் கொந்தளிக்கும் கடல் இருக்கிறது. எனவே சோழதேசத்தை உறுதிப்படுத்தி விட்டுத்தான் நான் லெளியே போகவேண்டும். அதற்குண்டான எல்லா முயற்சிகளையும் இப்பொழுதே நான் செய்யத் துலங்கிவிட்டேன்."

"என்ன முயற்சிகள் சொல்."

பிரம்மராயர் கவலையோடு கேட்டார்.

"நான் திருவொற்றியூருக்கு பயணப்படப் போகிறேன். அங்கிருந்து கடல் பார்த்து அமர்ந்து கொள்ளப் போகிறேன். அங்குள்ள பரதவர்களோடு பேசப் போகிறேன். தொண்டை மண்டலத்து பரதலர்கள் பலம் மிக்கவர்கள். மிகத் துடிப்பானவர்கள். அவர்களின் படகுகள் ஏறி கீழைச்சாளுக்கியம் போகப் போகிறேன். அங்கும் உள்ள பரதவர்களை சிநேகமாக்கிக் கொண்டு ஒரு படை திரட்டப் போகிறேன்.

சோழ தேசத்தின் பரதவர்களும், படைவீரர்களும் அவர்களோடு சேர்ந்து பயிற்சி பெறுவார்கள். ஒரு கடற்படை, திருவொற்றியூர் கடற்கரையில் என்னால் உருவாக்கப்படும்.

அந்தக் கடற்படை மெல்ல நகர்ந்து நாகப்பட்டினத்தில் நிலை கொள்ளும்."

"ஏன் திருலொற்றியூரைத் தேர்ந்தெடுத்தாய்?

"நாம் கடற்படை உருவாக்குவது பாண்டியர்களுக்கோ, சேரர்களுக்கோ தெரியாமல் இருக்க வேண்டும். நாகப்பட்டினத்தில் உருவாமால் தெரியவந்துவிடும். அப்படி தெரியவந்து விட்டால் அவனும் நாம் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள் கடற்பயணம் கிளம்புவோம் என்று புரிந்து கொண்டு படை திரட்ட ஆரம்பித்து விடுவார்கள். நாம் எந்த நேரமும் விழிப்போடு பாண்டியனையே பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று தெரிந்தால் நான்கு பேர்கள் சேர்ந்து பேசமாட்டார்கள்.

தலைதூக்கி ஆடமாட்டார்கள்.

கிழைச்சாளுக்கிய பரதவர்களோடு பேகம்போது அவர்கள் ஒரு செய்தியைச் சொன்னார்கள். இப்படி கடல் லழியாகவே வடக்கு நோக்கிப் போனால் கங்கை கலக்கும் இடம் ஒன்று வரும் என்றும், அந்த கங்கைக் கடற்கரையோரம் இறங்கி உள்ளே போனால் இமயமலை அடிவாரத்தை அடையலாம் என்றும் அவர்கள் சொன்னார்கள். அப்படி யாத்ரீகர்களாய் போய் வந்த பரதவர்களை நான் சந்தித்தேன்.

மூன்று முறை யாத்ரீகராய் போய் வந்த ஒரு பெரியவரையும் நான் பார்த்தேன். அந்த நாகரீகம் பற்றி அவர் விரிவாகச் சொல்கிறார்.

ஆனாவ் அவர் பரதவர் நாகரீகம் பற்றியும், படகுகள் கட்டுமானம் பற்றியும், போர் வீரர்களுடைய குணங்கள் பற்றியும் சொல்கிறாரே தவிர, உள்ளுக்குள் போய் பொதுமக்களின் விஷயங்களைத் தெரிந்து கொள்ளவில்லை. அரசர்களுடைய நிலைமையும், அவர்களுடைய வாழ்க்கைப் பற்றியும் தெரிந்து கொள்ள அவராவ் இயலவில்லை. அதற்கு அலர் அனுமதிக்கப் படவில்லை.

எனவே, சில உயர் குடிப்பிரபுகளை அழைத்துக் கொண்டு நான் கடற்கரை வழியாக நல்ல காற்றுள்ள நேரத்தில் வடக்கு நோக்கி கங்கைக்கரை வரை பயணப்படலாம் என்றிருக்கிறேன். கங்கைக் கரையில் இறங்கி குதிரை ஏறி இமயமலை அடிவாரம் போய், மறுபடியும் கடற்கரைக்கு வந்து அங்கிருந்து பருவ காலம்

பார்த்து கப்பலில் ஏறி மீண்டும் திருவொற்றியூர் வரலாம் என்றிருக்கிறேன்."

"ராஜேந்திரா... நல்ல எண்ணம். ஆனால் வடக்கே திருவொற்றியூரிலோ, மேல் பாடியிலோ நீ இல்லையென்று தெரிந்தால் சாளுக்கியர்களும், பாண்டியர்களும் ஆட ஆரம்பித்து விடுவார்கள். உன் தகப்பனார் வேறு விதமாக எண்ணம் கொண்டிருப்பதால், உன் திட்டத்தில் நீ ஒரு சிறிய மாற்றம் செய்யவேண்டியிருக்கிறது."

"என்ன சொல்லுங்கள்."

இராஜேந்திரன் இப்பொழுது நெருங்கி வந்தான்.

"உன் தகப்பனாருக்கு யுத்தம் அலுத்துவிட்டது. கோயில் கட்டுதல் பற்றி பேச ஆரம்பித்துவிட்டார். எனவே நீ எல்லைகளைப் பார்க்கும் பொறுப்பும் படைகளை பலப்படுத்தி உற்சாக மூட்டும் வேலையும் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறாய். நீ யாத்திரை செய்ய முடியாது. யாத்திரைக்கு நீ போய் விட்டால், இங்கு யார் தலைமையில் எல்லைக் காவல் நடைபெறும். எல்லைக்காவல் இங்குள்ள சேனாதிபதிகளால் தான் நடைபெறும் என்றால், அது அவ்வளவு ரசமான விஷயமல்ல. உள்ளுக்குள்ளே தகப்பன் கோயில் கட்டிக் கொண்டிருக்கிறான். பிள்ளை யாத்திரை போய்விட்டானென்றால், அன்னியர்களுக்கு உடனே வாள் பிடிக்கத் தோன்றும். வேல் வீசத் தோன்றும். படை திரட்டத் தோன்றும். நாமாய் ஒரு படையெடுப்பை வரவழைத்துக் கொள்கிறோம் என்று நினைக்கிறேன்."

"பிறகு எப்பொழுதுதான் நான் யாத்திரை போவது."

"அதற்கொரு காலகட்டம் இருக்கிறது ராஜேந்திரா..."

"இதை வேண்டாமென்று சொல்கிறீர்களா?"

"இல்லை. உன்னுடைய திட்டம் மிகச் சரியானது. ஆனால் நீ போகாமல் திருவொற்றியூரில் இருந்து கொண்டு உன்னுடைய படை வீரர்களை அனுப்பு. வெறுமே பத்து, இருபது என்றில்லாமல் இருநூறு பேரை அனுப்பு."

"அப்பொழுது அது படையெடுப்பு போல் ஆகிவிடுமே!"

"தனித்தனியாக அனுப்பு. மூன்று நாட்கள், நான்கு நாட்கள் இடைவெளியில் அனுப்பு. அதிகம் ஆரவாரமில்லாமல் தெற்கிலிருந்து கயிலாயம் தரிசிக்க வந்திருக்கிறோம் என்று

போகட்டும். வம்புக்கு இழுத்தாலும் மரியாதையாகப் பேசட்டும். பரிசுகளைக் கொண்டு போகட்டும். பொற்காசுகளைப் பொது மக்களுக்கும், படைவீரர்களுக்கும் அவர்கள் அள்ளித் தரட்டும். அவர்கள் கேட்கின்ற சுங்கவரிகளைச் செலுத்தி விடட்டும். பிறகு பயணம் சுகமாக இருக்கும் என்பது என் அபிப்ராயம். அந்த கடல் மார்க்கமான பயணத்தினுடைய பத்திரத்தைப் புரிந்து கொண்டு, அதற்குப் பிறகு நீ பயணப்படலாம்.

இம்மாதிரியான குழுக்கள் இரண்டு மூன்று போனபிறகு அல்லது ஒருவரே இரண்டு, மூன்று முறை போன பிறகு, நீ அதில் பயணப்படலாம். ஒரு இளவரசன் சட்டென்று தான் மட்டுமே யாத்திரை கிளம்புவது நல்லதல்ல."

"நீங்கள் சொல்வதில் ஒரு நியாயமும் இருப்பதை உணர்கிறேன். பிரம்மராயரே நான் மறுபடியும் யோசித்துவிட்டு உங்களுக்குத் தகவல் அனுப்புகிறேன். ஆனால் என்னால் சோழ தேசத்திலேயே உட்கார்ந்திருக்க முடியாது என்பதை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

பரதகண்டத்தைவிட்டு வெளியே போய் படையெடுத்து தன்னுடைய புகழையும், தீரத்தையும் நிலைநாட்டிய முதல் சோழ மன்னனாக, ஏன் பரதகண்ட மன்னனாக இருக்க இந்த இராஜேந்திரன் பிரியப்படுகிறான்."

இராஜேந்திரன் சொல்லி முடித்ததும் ஜெயவிஜயீபவ என்று பிரம்மராயர் குரல் கொடுத்தார். அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

"உன்னுடைய இந்த உள்ளக்கிடைக்கை நிறைவேறுவதற்காக என் ஊரான அமண்குடியிலுள்ள அழகிய துர்க்கைக்கு நல்ல நாள் பார்த்து சஹஸ்ர சண்டி ஹோமம் நடத்துவேன். அந்த சஹஸ்ர சண்டி ஹோமம் முடியும் தருவாயில் உன்னுடைய படை ஒன்று வடக்கு நோக்கிப் போகட்டும். உனக்குத் தகவல் அனுப்புவேன். போய்வா ராஜேந்திரா."

அவரை சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கிவிட்டு இராஜேந்திரன் வெளியேறினான்.

அந்த இராஜேந்திரனுக்காக சஹஸ்ர சண்டி ஹோமம் அமண்குடியில் நடக்கத் துவங்கிவிட்டது.

ராஜேந்திரனுடைய முதல் கடற்படைக்குழு வடக்கு நோக்கி நகர்ந்து விட்டதென்றும், அதற்கு முன்பே

ராஜேந்திரனுடைய கட்டுப்பாட்டில் இருந்து மேலைச்சாளுக்கிய வீரர்கள் பதினாறாயிரம் பேர் அணிவகுத்து தஞ்சையை நோக்கி நடந்து வந்து கொண்டிருக்கிறார்கள் என்றும், சிறிய குற்றங்களுக்கும் கடுமையாக தண்டிக்கப்படுகிறார்கள் என்றும், கூலி வேலைக்காகவும் அழைத்துவரப்படுகிறோம் என்று கேள்விப்பட்டு மனம் நொந்துபோய் அடிக்கடி கோபமடைகிறார்கள் என்றும் அவருக்குச் சொல்லப்பட்டது.

ஆனால் கால்நாழிகைக்கு முன்பு ஒரு ரகசியத் தூதுலர் லேறொரு செய்தியைச் சொன்னார். "ராஜேந்திரசோழன் கடற்பயணம் செய்யத் தயாராகிவிட்டாரென்றும், அதற்கு முன்பு தந்தையான உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரை தரிசித்துவிட்டுப் போவாரென்றும் அவர் கடற்பயணம் நாகையிலிருந்து துவங்கும் என்றும், கங்கை நீர் கொண்டு வந்து திருவிடைமருதூர் மகாலிங்கேஸ்வரருக்கும், இன்னும் பிற கோவில்களுக்கும் வழங்குவார் என்றும் விளக்கப்பட்டது.

பிரம்மராயர் கவலையானார்.

77

சேனாதிபதி கிருஷ்ணன் ராமனான பிரம்மராயரின் மகன் அருண்மொழி பட்டன் தஞ்சைக்குள் நுழைந்தபோது நகரம் மிக பரபரப்பாக இருந்தது.

தஞ்சை புறம்படிக்கு வெளியே அரைக்காத தொலைவில் கைது செய்யப்பட்ட சாளுக்கிய வீரர்கள் வெகுநாட்கள் திருவாற்றியூரில் குடிவைக்கப்பட்டு பதமாக்கப்பட்டு தஞ்சையை நோக்கி வருகிறார்கள் என்று தகவல் தரப்பட்டது.

அருண்மொழி பட்டன் அவர்களைப் பார்க்க விரும்பினான். குதிரையை முன்னும், பின்னும் அலையவிட்டு யோசித்தான். சட்டென்று திரும்பி தஞ்சை உள்ளாலை நோக்கி வேகமாகப் போனான். அவனைத் தொடர்ந்து அவனது மெய்க்காவல் படை போயிற்று.

நான்கு குதிரைகள் ஒருசேர வேகமாய் தஞ்சைக்குள் நுழைவது பார்த்து, வீரர்கள் மெல்லியதாய் பரபரப்பானார்கள். யாரது என்று கேட்டார்கள்.

அருண்மொழி என்று பதில்வர புன்னகை செய்தார்கள்.

"வந்துவிட்டாரா... இனி கொண்டாட்டம் தான்.' என்றார்கள்.

அருண்மொழி வீடு நோக்கி குதிரையைச் செலுத்தினான். அப்பாவின் அரண்மனை வாசலில் நிறுத்தினான். கீழிறங்கினான். அப்பா திண்ணையில் அதிகாரிகளோடு உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். படிகளில் தாவி ஏறினான்.

ஓடிப்போய் அப்பாவின் பாதத்தில் சிரம் பதிய வைத்து நலமா என்று புன்னகை தவழக் கேட்டான்.

பிரம்மராயருக்குப் பிள்ளையைப் பார்க்க ஆனந்தமாக இருந்தது. முகம் வெயிலினால் கறுத்துப் போயிருந்தாலும், மிகுந்த களையோடு மகன் இருந்ததை அலரால் உணர முடிந்தது.

மெய்க்காவலரில் ஒருவன் பெரிய மரப்பெட்டியைக் கொண்டுவர, அந்த மரப்பெட்டியை வாங்கி திண்ணையில் வைத்துத் திறந்து அதிலிருந்து உள்ளங்கை அளவிற்கு ஒரு சாளகிராமம் எடுத்து அப்பாவிடம் நீட்டினான். அந்தக் கறுப்புச் சாளகிராமம் ஒரு மாம்பழம் அளவிற்குப் பெரியதாக இருந்தது. நல்ல கனமாக இருந்தது. சாளகிராமம் முழுவதும் தங்கத் துகள்கள் மினுமினுத்தன. வெள்ளையாய் ஒரு ஒற்றைக்கோடு பூணூல் போல குறுக்கே போயிருந்தது.

பிரம்மராயர் அந்த சாளகிராமத்தை வியப்போடு பார்த்தார். கண்களில் ஒற்றிக்கொண்டார். தலையில் வைத்துக் கொண்டார். "அபூர்வம்... அபூர்வம்... என்றார்.

"அதனால்தான் உங்களுக்காக எடுத்து வந்தேன்."

"எங்கு கிடைத்தது."

"சேர தேசத்தில் நாம் படையெடுத்தபோது நம்பூதிரியின் வீட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டது. பூஜையற்று இருந்தது. இது தெரிந்தவுடன் நான் போய் கையகப்படுத்திக் கொண்டு வந்தேன். தினமும் காலையில் நான் பூஜை செய்து வந்தேன். இனி இதைப் பூஜிப்பது உங்கள் பொறுப்பு."

பிரம்மராயர் எழுந்து கண்ணில் ஒற்றிக்கொண்டு உள்ளே திரும்பி குரல் கொடுத்தார். அவர் மனைவி வெளியே வர அப்பாவையும், அம்மாவையும் நிற்க வைத்து அதிகாரிகள் முன்னிலையில் அருண்மொழிப்பட்டன் விழுந்து வணங்கினான்.

அவர்கள் மூவரும் வீட்டிற்குள் போனார்கள். அவர்களுக்குப் பின்னே வேறு யாரும் போகவில்லை. நேரே பூஜை அறையை அடைந்து அங்குள்ள ஜன்னல்களை அம்மா திறக்க, அருண்மொழிப்பட்டனின் அப்பாவான பிரம்மராயர் அதை ஒரு மரப்பீடத்தின் மீது வைத்தார். கூடையிலுள்ள துளசிகளை எடுத்து அதன் மீது போட்டார்.

கிண்டியிலிருந்து ஜலம் எடுத்து அதன் மீது ஊற்றினார். மறுபடியும் இடம்பெயர்த்து வேறொரு இடத்தில் உட்கார வைத்து அதைச் சுற்றி சிறிய பட்டுத்துணியை சாத்தினார். சந்தன, குங்குமம் இட்டார்.

"இரும். வந்து உபசரிக்கிறேன்." என்று கைகூப்பினார். திரும்பி மகனைப் பார்த்து இறுகத் தழுவிக் கொண்டார். பிள்ளையும் அப்பாவை இறுகத் தழுவிக் கொண்டது. அம்மா சந்தோஷப்பட்டாள்.

"எப்படியப்பா இருக்கிறது தஞ்சை."

"வரும்போது பார்க்கவில்லையா."

"மிக்க கொதிப்பாக இருக்கிறதே..."

"ஆமாம், இப்பொழுதே கொதிக்க ஆரம்பித்துவிட்டது. இனி பதினாறாயிரம் பேர் உள்ளே வந்தாவ் என்ன ஆகும் என்பது எனக்குத் தெரியவில்லை...

"இதைக் கேள்விப் பட்டுத்தானப்பா நான் இங்கு வந்துவிட்டேன்."

"நீ லந்தவரையில் நல்லது."

"எனக்கு ஏதேனும் உத்தரவுகள் இருக்கின்றதா தந்தையே."

"இருக்கிறது அருண்மொழி. முதலில் ராஜேந்திரன் இங்கு வரப்போகிறான் என்பதைப் புரிந்து கொள். பதினாறாயிரம் வீரர்கள் உள்ளே வரும்போது அவர்கள் வெளியேறாமல் தடுப்பதற்குத்தான் முதலில் நாம் ஏற்பாடுகள் செய்தாக வேண்டும். தஞ்சையின் எல்லைகளை முதலில் கற்றிப் பார். யார்... யார் எங்கிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொவ். எந்த இடத்தில் யார் யார் முறை மாற்றிக் கொள்கிறார்கள் என்கிற விஷயத்தையும் மனதில் பதிய வைத்துக் கொள். பதினாறாயிரம் வீரர்கள் தங்க வைக்கப்படும் அந்த இடத்தையும் மேற்பார்வையிடு. அவர்களுக்கு வசதி இருக்கிறதா என்று பார். இல்லையெனில் கூடுதலாகச் செய்து கொடு..."

"கலவரம் எதிர்பார்க்கிறீர்களா தந்தையே."

"தோற்றுப் போனவர்கள், நொந்து போனவர்கள் உள்ளே நுழைந்து தஞ்சையின் வளத்தைப் பார்த்தவுடன் கலவரமடையலாம். ஆரம்பத்தில் பிரச்சனைகள் நிச்சயம் இருக்கும். மெல்ல மெல்ல... நாம் உபசரிப்பதில், இந்த வேலையில் உயர்வு தெரிந்த பிறகு, அவர்கள் அமைதியாகக் கூடும். எல்லாம் சரியாக இருக்கிறது என்று நிம்மதியடையாமல் ஒரு யுத்த காலத்தில் இருப்பது போன்ற பரபரப்பிலும், கண்காணிப்பிலும் நாம் இருக்கவேண்டும்..."

"உடனே கிளம்புகிறேன் தந்தையே...

அவன் மறுபடியும் வாயில் நோக்கிப் போக முயற்சிக்க, "வந்த பிள்ளை ஒன்றும் சாப்பிடாமல் ஓடுகிறதே... இது என்ன வீட்டிற்கு வந்தால் ஓய்வெடுத்துக் கொண்டுதானே வேலைக்குப் போவார்கள்." – மனைவி வேகமாகப் பேசினாள்.

"இல்லை, அவனைத் தடுக்காதே. ஏதேனும் கொடுக்க விரும்பினால் உடனே கொடு..."

பிரம்மராயர் கட்டளையிட்டார்.

"அம்மா மோர் சாதம் கரைத்துக் கொடுங்கள், போதும்." பிள்ளை மிருதுவான குரலில் கேட்டது.

அம்மாவுக்கு அந்த வீட்டு ஆண்களின் வேகமும், பொறுப்பும் தெரியும். எனவே எந்தப் பதிலும் பேசாமல் ஒரு கற்சட்டியில் சாதம் போட்டு மோர் ஊற்றி அழுத்தி பிசைந்து மிளகுப் பொடி தூவி நகக்கிய இஞ்சித் துகளை மேலே தூவி பிரட்டி அவன் கையில் போட அவன் லாங்கி உண்டான். இன்னொரு கைபோட, அதுவும் சாப்பிட்டான்.

ஐந்து கைகள் மோர்சாதம் சாப்பிட்ட பிறகு, சின்னதாய் ஏப்பம் வந்தது.

குழந்தை அம்மாவைப் பார்த்துச் சிரித்தான். அம்மா நீர் சொம்பு எடுத்து வந்தாள். அவனை கற்சட்டியில் கை நீட்டச் சொன்னாள். கழுவினாள். கற்சட்டியில் இன்னும் ஒரு பிடி சோறு இருந்தது.

கற்சட்டியைத் தூக்கி அவனுக்கு அப்படியே திருஷ்டி சுற்றினாள். இடதும், லலதுமாக மூன்று கற்றி சுற்றி கொல்லைப் புறம் எடுத்துக் கொண்டு போனாள். ஒரு பானறயில் கற்சட்டியைப் போட்டு வேகமாய்த் தூக்க சடேரென்று கற்சட்டி

உடைந்தது. நாலா பக்கமும் எகிறிப் பறந்தது. ஒரு பருக்கைகூட அந்தப் பாறை மீது படாமல் அத்தனையும் லெளியேறிக் கிடந்தது.

"அப்பா... எத்தனை திருஷ்டி." என்று தாய் அலுத்துக் கொண்டாள். திரும்பி வந்தாள். அதற்குள் உடம்பெல்லாம் ஈரத் துண்டால் துடைத்து, தலைவாரி, நெற்றிக்கு இட்டு, வாசனைத் சந்தனத்தையும், புனுகையும் கலந்து பூசி அவன் தயாராக இருந்தான்.

"உடைகளையும் மாற்றிக் கொள்." என்று அப்பா கட்டளையிட, மரத்தட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புதிய வேட்டியை எடுத்து இடுப்பில் சுற்றிக் கொண்டு பஞ்சகச்சமாகக் கட்டி, மேலே புதிய துண்டைச் கற்றி கட்டிக் கொண்டான். அதன் மீது உடைவாள் கோர்த்த தர்ப்பைக் கயிற்றைக் கட்டிக் கொண்டான். மேலே அங்கவஸ்திரம் போட்டுக் கொண்டான். நிலைக்கண்ணாடி முன்பு நின்று பார்த்துக் கொண்டு பின்கட்டி லிருந்து கூடத்திற்கு வந்து, கூடத்திலிருந்து வெளியே ரேழிக்கு வந்து, ரேழியிலிருந்து திண்ணைக்கு வந்து நின்று கொண்டான்.

பளிச்சென்று முகம் மாறி அழகாக இருக்கின்ற தலை வரைப் பார்த்து மெய்க்காவல்படை சிரித்தது. அடடா... என்று வியந்தது.

"நீங்கள் உடை மாற்றிக் கொள்ளவில்லையா?" என்று அவன் கேட்க, "மெல்ல மாற்றிக் கொள்ளலாம். இப்பொழுது நாம் எங்கு போகிறோம்." என்று அந்த வயதானவன் கேட்டான்.

"மூவருமே எனக்குத் துணைலர வேண்டிய அவசிய மில்லை. இது தஞ்சைதானே. யாரேனும் ஒருவர் வந்தால் போதும். மற்ற இருவரும் நமது வீட்டில் ஓய்வு எடுத்து கொள்ளுங்கள். அம்மாவிடம் கேட்டு புதிய துணிகள் வாங்கிக் கொள்ளுங்கள்." என்று வேகமாகப் பின்னால் திரும்ப, அம்மா அருகிலேயே இருந்தாள்.

சாப்பிட்ட பொழுது அந்த மூன்று வீரர்களுமே தங்களுக் குள் பேசி மூவருமே போகத் தயாராக இருந்தார்கள். இருப்பதில் லயசான கிழவனை அவன் தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

"நீர் என்னோடு வாரும். ஏனெனில் நாம் போகும் விஷயம் முக்கியமானது. மற்ற இருவரும் குளித்து உடைமாற்றி ஓய்வெடுத்துக் கொண்டிருக்கட்டும். நாம் மறுபடியும் இங்கு

தான் லருலோம். சில நாட்கள் இங்குதான் தங்குவோம்." என்று அலர்களிடம் பேகினான்.

வயசாளி, குதிரையின் மீது தாவி ஏற, அவர்கள் இருலரும் பிரம்மராயரிடம் விடைபெற்றுக் கொண்டு மெல்ல தெற்கு நோக்கிப் போனார்கள்.

அரண்மனையிலிருந்து ஒரு சின்ன விரட்டலில் கோவிலுக்கு லந்துவிட்டார்கள். சவுக்குக் கட்டை தடுப்பு போடப்பட்டு, மூங்கில் கதவுகள் அமைத்து, கோயில் கட்டப் படும் இடத்தைப் பாதுகாப்பாக லைத்திருந்தார்கள்.

மூங்கில் கதவுகள் அருண்மொழிப்பட்டனைப் பார்த்ததும் திறந்தன. எக்காளம் ஊத ஒரு வீரன் முற்பட்டபோது, சட்டென்று அருண்மொழிப்பட்டன் கையசைத்துத் தடுத்தான். அந்தப் பெரிய திடலுக்குள் நுழைந்தான்.

கோவில் கட்டப்பட இருக்கும் திடலின் நான்கு மூலையிலும் கொட்டகை கட்டப்பட்டு, அங்கு யானைகள் நிற்க வைக்கப்பட்டிருந்தன. உள்ளுக்குள்ளே நான்கு யானைகள் நிற்க, இன்னும் நான்கு யானைகள் கோவிலுக்கான எல்லையில் நடந்து கொண்டிருந்தன.

இதுவொரு லழக்கம். பெரிய யானையை நடக்க விட்டு எல்லையை உறுதிசெய்வது ஒரு பழக்கம். அப்படி யானை நடந்த இடத்தில் புல் முளைக்காது. எல்லைகள் தெள்ளத் தெளிலாகத் தெரியும். எந்த சந்தேகமும் வராது.

அருண்மொழிப்பட்டன் குதிரையைத் திடலுக்குள் செலுத்தி னான். மிக நீண்ட செவ்வகமாக இருந்த அந்தத் திடலுக்குள் கருவறை எங்கே வரப்போகிறது என்பதை கல்லிட்டுக் காட்டியிருந்தார்கள். அதைத் தனியாக எல்லைகளாக வகுத்திருந்தார்கள். அந்தக் கருலறையோடு பார்க்கும்பொழுது கோவில் எவ்லளவு பெரியது என்பது புரிந்தது.

அந்தக் கருவறைக்கருகே பெரிய திரைச்சீலையில் கோவில் படம் வரையப்பட்டிருந்தது. குதிரையை வேகமாக அங்கு செலுத்த, காவலாளியும் குதிரையை அங்கு வேகமாகச் செலுத்திக் கொண்டு வந்தான். இருவரும் கீழிறங்கி அந்த கருவறைக்கு முன்பு கைகூப்பினார்கள். திரும்ப திரைச்சீலைக்கு வணக்கம் சொன்னார்கள். அருகே போய் பார்த்தார்கள். வியந்து நின்றார்கள்.

அந்தக் கோவிலுக்குக் கீழே மனித உருவமும் யானை உருவமும் வரையப்பட்டிருந்தன. ஒன்றன் மீது ஒன்று அடுக்கினாவ் பன்னிரெண்டு யானை உயரம் வரும்போல தெரிந்தது.

இவ்வளவு உயரமாக ஒரு கோவில் கட்ட முடியுமா என்று சந்கேகம் வந்கது.

கல் எப்படி மேலே போகும், கீழே கல், மேலே கதையாக இருக்குமா? சிறிய செங்கலாக இருக்குமா? அல்லது சின்னஞ் சிறிய கற்களை மேலே கயிறு கட்டி அனுப்புவார்களா? நந்தியின் எடை குறிப்பிடப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட ஒரு குட்டி யானையின் எடையாக அந்த நந்தி இருந்தது. ஆக, ஒரே கல்லாய் இவ்வளவு பெரிய நந்தி போகவேண்டுமெனில் விமானத்தின் வலிவு எல்வளவு பலமாக இருக்க லேண்டும்.

செங்கல்லாவ் கோவில் கட்டினால் அங்கே கருங்கல்லால் நந்தி லைக்க முடியாது. ஒன்றல்ல... இரண்டல்ல... எட்டு நந்திகள் அங்கு உட்கார வேண்டும் என்றால், அதன் தளம் எவ்வளவு பலமாக இருக்க லேண்டும்.

ஒன்றும் புரியாமல் அருண்மொழிப்பட்டன் திகைத்தான். திரும்பி கிழவரைப் பார்த்தான். கிழவர் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"இது சாத்தியமா அருண்மொழிப் பட்டரே. இது நவ்ல விதமாக முடியுமா. எனக்குக் கவலையாக இருக்கிறது." அடிக்குரலில் வந்து கேட்டார்.

"முடியும், முடியும் கோபாலரே... முடியாத எந்த விஷயத்தையும் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் துவங்க மாட்டார்."

"ஐயா, நான் யாதவன். மாடுகளோடும், தாம்புக் கயிறுகளோடும் எனக்குப் பழக்கமுண்டு. சிறுவயதிலேயே கயிற்றைக் கையில் கொடுத்து மரத்தில் கட்டி இழுக்கச் சொல்லி உள்ளங்கைகளில் உரமேற்றுவார்கள். கன்றுகளின் தாம்புக் கயிற்றை கையில் கொடுத்துவிட்டு கன்றை விரட்டுவார்கள். இழுத்து நிறுத்த முடிகிறதா என்று பார்ப்பார்கள். உள்ளங்கைத் தோவெல்லாம் உரிந்து முரட்டுக் கைகளாக மாறவேண்டுமென்று சிறு வயது முதற்கொண்டே எங்களுக்குப் பலம் ஏற்றுவார்கள்.

ஆனால் ஒரு குட்டியானையின் எடையளவுக்கு இருக்கின்ற இந்த நந்தி மேலே கயிறுகட்டி இழுக்கப்படவேண்டு

மென்றால் என்ன கயிறு உபயோகப்படுத்தப்படும். எப்படி இழுக்கப்படும். எத்தனை பேர் இழுப்பார்கள். அந்த உள்ளங்கைகள் என்னவாகும் என்று எனக்குப் புரியவில்லை.

என்னைவிட கயிறு கட்டி வலுவாக இழுக்கின்ற நூறு பேர் இருந்தால்தான் இதில் ஒரு நந்தி மேலே போக முடியும். ஒருவேளை... தவறாகச் சொல்வதற்கு மன்னிக்கவும். அறுந்து விழுந்தால், கீழே விழுந்தால் நாற்பது, ஐம்பது பேராலது இறப்பார்கள். நூறு பேராவது ஊனமாவார்கள்."

அவர் பேச, அருண்மொழி ஆமென்று தலையசைத்தான்.

"அருண்மொழிப்பட்டரே... இது நம்முடைய வேலை யில்லை. இப்போதைக்கு இதில் மனது செலுத்தி திகைப்புறாமல் காலலைப் பற்றிய யோசனையைச் செய்வோம். கிழக்கே பலமாக இருக்கிறது. தெற்கே காவலே இல்லை."

"ஏற்படுத்த வேண்டும். மேற்கே என்ன நிலை..."

"மேற்கே குளமிருப்பதால் அங்கும் நடமாட்டம் இருக்கும். வடக்கே நம்முடைய ஊர் இருக்கிறது. எனவே கிழக்கேயும், தெற்கேயும் காவலைச் சற்று அதிகப்படுத்தினால் போதும்."

"பெண்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறார்களாம். அதுவும் கிழக்கே இருக்கிறதாம்"

"அதுவும் என்றால்."

"பதினாறாயிரம் வீரர்கள் வந்து தங்குவதற்கான இடம். மிகப் பெரிய கொட்டகை. கோவிலுக்கு லடகிழக்கே இருக்கிறது. கோவிலின் தென் கிழக்கே பெண்களுக்குக் குடியிருப்புகள் கொடுத்திருக்கிறார்கள்."

"இங்கேயிருந்து தெரியவில்லையே."

"இல்லை. அடுக்கி வைத்த சவுக்குக் கட்டைகளும் மரங்களும் மறைக்கின்றன. நாம் எல்லையை பிரதட்சணமாகச் கற்றிக் கொண்டு பிறகு கிழக்கே போவோம்."

அவர்கள் குதிரையில் ஏறிக்கொண்டு யானை போட்ட பாதையின் வழியாகவே குதினரனயச் செலுத்திக் கொண்டு எல்லைகளைத் தெளிவாகக் கவனித்துக் கொண்டார்கள்.

கோவில் குளத்திற்கு அருகே குடிசை கட்டி போர் வீரர் களை, குடியிருக்க வைப்பதைக் கவனித்துக் கொண்டார்கள்.

"இது போதாது." என்று சொல்லிக்கொண்டார்கள். கோவிலை வலமாகச் சுற்றி அருண்மொழிப்பட்டன் முன்னால் போக, மிகப்பெரிய பந்தலின் கீழ் குதிரை வேகமாக ஓடிற்று.

78

உயரமாக சரிவாகப் போடப்பட்ட அந்த கூம்புப் பந்தலுக்குள் அருண்மொழி பட்டனுடைய குதிரை போயிற்று. கீழே ஆற்று மணல் போட்டு ஈரம் பண்ணி மெத்தென்று வைத்திருந்தார்கள். நிறைய ஈச்சம்பாய்களை உருட்டி அடுக்கடுக்காய் தொங்கவிட்டிருந்தார்கள். அரைவட்ட வடிவ செங்கற்களைத் தலைக்கு வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்திருந்தார்கள். அவைகளையும் அடுக்கி வைத்திருந்தார்கள்.

ஏற்பாடுகளைக் கவனித்துவிட்டு எந்த விசாரணையும் இல்லாமல் அருண்மொழிப்பட்டன் வலப் பக்கம் திரும்பி புதிதாகக் கட்டப்பட்டுள்ள அந்த ஓட்டு வீடுகளைச் சுற்றிக் கொண்டு வந்தான்.

மார்பு உயரம் கவர் எழுப்பி அங்கேயும் மரக் கதவு போடப்பட்டிருந்தது. அவன் கதவுக்கு அருகே வர, உள்ளிருந்து ஒரு வீரன் எட்டிப் பார்த்துவிட்டு யார் என்று கேட்க, பின்னால் வந்த கிழவன் அதட்டலாய், "அருண்மொழிபட்டன் வந்திருக்கிறார். போ. கதவு திற." என்று அதட்ட, கதவு விரியத் திறக்கப்பட்டது.

அருண்மொழிப்பட்டன் மெல்ல உள்ளே நுழைந்தான். கீழே மண் தரை மெத்தென்று இருந்தது. எல்லார் வீட்டு வாசலிலும் கோலம் போடப்பட்டிருந்தது. எதிரும் புதிருமாய் இடைவெளிவிட்டு, இடைவெளி விட்டு வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன.

எடுத்தவுடன் இரண்டு படி உயரத்திற்கு ஒரு நடைபாதை. எதிரும் புதிருமாய் திண்ணை. பிறகு ஒரு நடை வழி பிறகு மிகப்பெரிய கூடம். முற்றம். அதைத் தாண்டி இரண்டாம் கட்டு இரண்டு அறைகள். பிறகு மூன்றாம் கட்டு திறந்தவெளி. சமையல் அறை. பிறகு கொல்லைப்புறம்.

அந்தக் கொல்லைப்புறத்தையும் தனர சமனம் செய்து, கிணறு தோண்டி அங்கும் கருங்கவ் தளம் பரவியிருந்தது. மேலே தட்டோடுகளும் வளைவு ஓடுகளும் போடப்பட்டு பனைமரத் துண்டுகளால் வீடு தூக்கப்பட்டிருந்தது. லாசவ் பக்கத் தூண்கள் கடைசல் நிரம்பியதாய் இருந்தன.

எல்லா வீடுகளிலிருந்தும் பாட்டுச் சத்தமும், ஆட்ட சத்தமும், சிரிப்புச் சத்தமும் கேட்டன. யாரோ சண்டையும் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

அருண்மொழிபட்டன் மெல்ல அந்த வீடுகளைத் தாண்டி குதிரையில் போனான்.

வாசலில் உட்கார்ந்திருந்த ஒரு வயசாளி எழுந்து நின்று னகக்கூப்பினார். அருண்மொழிபட்டன் தனலயசைத்துவிட்டு நடந்தான்.

பின்னால் வந்த காவலாளி அந்த வயசாளியைப் போய் பார்த்து யார் என்று விசாரிக்க, அவன் வீணை வாசிப்பவன் என்று தெரிந்தது.

இருபது வீடுகள் நிரம்பிய அந்த இடத்தின் கடைசி எல்லையிவ் ஒரு பெரிய மண்டபம் இருந்தது. அந்த மண்டபத்தில் கதையால் நடராஜர் சிலை செய்யப்பட்டிருந்தது. அருகே சிவகாமியின் சிலையும் இருந்தது. மூன்று நான்கு விளக்குகளும், தூபங்களும் எரிந்து கொண்டிருந்தன.

ஆனால், யாரும் வீட்டிற்குள்ளிருந்து வெளியே வர வில்லை. ஏன் ஒரு குதிரை போகிறது என்று கவலைப்பட வில்லை. அந்த உச்சி லெயிலில் ஓய்வாகவும், அரட்டையாகவும், சந்தோஷமாகவும் மனிதர்கள் இருப்பதை அறிய முடிந்தது.

அந்த எல்லை முடிந்து மறுபடி பார்த்தபொழுது, தெற்குப் பக்கம் போவதற்கு வாட்டமாய் ஒரு பாதை போவது தெரிந்தது. அருகேயுள்ள அந்த மார்பு உயரச் கவர் பின்பக்கமும் கட்டப்பட வேண்டும் என்று அருண்மொழி நினைத்தான். இது பாது காப்பான இடமாக இல்லல என்று அவனுக்குத் தோன்றியது.

அவன் திரும்பியபோது, வீணை வாசிப்பவன் என்று சொன்ன அந்தக் கிழவன் நாலைந்து மத்திம வயது பெண்களோ டும், இரண்டு ஆண்களோடும் அவனை நோக்கி வெயிலில் ஓடி வருவது தெரிந்தது.

குதிரையைத் திருப்பி அலர்களை நோக்கிச் செலுத்தினான். அவர்களுக்கு அருகே போய் டக்கென்று இறங்கினான். கைகூப்பினான்.

"தஞ்சைக்கு விருந்தினர்களாக வந்திருக்கின்ற கலைஞர்களுக்கு என் வணக்கம்." என்று சொன்னான்.

அந்தச் சிறிய கூட்டம் திகைத்தது.

"ஐயன்... நீங்கள் அருண்மொழிபட்டர் அல்லவா. சேனாதிபதி பிரம்மராயரின் மூத்தகுமாரன் அல்லவா" வந்திருந்த வயசாளி கைகூப்பினான்.

நெற்றி நிறைய விபூதியும், லாய் நிறைய வெற்றிலையும், கழுத்தில் ருத்திராட்சமும், கைகளில் கங்கணமும், தோடாக்களும், விரல்களில் மோதிரங்களும், இடுப்பில் சிகப்புச் சாய வேட்டியும், மேல் மஞ்சள் நிற அங்கவஸ்திரமும் அணிந்திருந்த அந்தக் கிழலனைப் பார்க்கும்போது அருண்மொழிப் பட்டனுக்கு வியப்பாக இருந்தது.

கறுத்து, தோள் திரண்ட, வயிறு குழிந்த, மீசையும், சுட்டெரிக்கும் பார்வையும் கொண்ட வீரர்களோடு வெகுநாள் வாழ்ந்துவிட்டு, இடுங்கிய கண்களைக் கொண்ட, வேகமாக ஓடக்கூடிய உளவாளிகளோடு பல நாட்கள் பழகிவிட்டு, குதிரை ஆட்கள், யானைப் பாகர்கள், பல்லக்கு தூக்குவோர், பரிவாரங்களுக்குச் சமைப்போர் என்று உழைக்கின்ற, உழைத்து உரமேறிய ஆண்களைப் பார்த்த கண்களுக்கு இந்த நிகுநிகுப்பான கிழலன் ஆச்சரியமாக இருந்தான். அவன் மேல் தோல் லேசான பழுப்பு நிறம் கொண்டதாகவும் இருந்தது. மேனியில் எண்ணெய் தடவிய ஒரு மினுமினுப்பு இருந்தது. சுகலாசி என்று மேல் தொந்தியும், நெளியும் இடுப்பும் சொல்லின. கண்களில் ஒரு கிறக்கம் இருந்தது.

இந்தக் கூட்டத்தில் இந்தக் கிழலனுக்கு என்ன வேலை இருக்கும். பாட்டுப் பாடுபவனா, அபிநயம் சொல்லித் தருபவனா அல்லது இவர்களையெல்லாம் கட்டி வைத்து வேலை வாங்குபவனா... அந்தக் காது வளையமும், குடுமியில் செருகியிருக்கிற பூவும் இவனை சொகுசானவனாய் காட்டுகின்றன. ஆனால் சோழ தேசத்தில் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்பது நாம் புரிந்து கொள்ள வேண்டியது

.அலசியம். இவனை விடவும் சொகுசான ஆட்களும் இருக்கக்கூடும்.

மறவர்கள் எல்லாம் தொலைதூரம் வேலும், வாளும் ஏந்தி பல காதங்கள் கடந்து போரிட்டு வெற்றி வாகை சூடி திரும்பி வருகிற பொழுது, இதைப் போல ககவாசிகளைப் பார்த்தால் சற்று கோபமடையத்தான் செய்வார்கள். இந்த சுகவாசிகளுக்கு தான் வளமாக இருப்பது இந்தப் படை வீரர்களால்தான் என்று தெரியுமா... அல்லது தெரிந்தும் வெளியே தெரியாததுபோல் இருக்கிறார்களா...

இவைகளைச் சற்று விசாரிக்க வேண்டும். இந்தக் கூட்டம் ஒட்டு மொத்தமாய் வந்து தஞ்சையில் தங்கப் போகிறது. இங்கு தங்கும் பொழுது மறலர்களுடைய பேச்சுக்கும், ஏச்சுக்கும், ஏளனத்திற்கும் ஆளாகாமல் இருக்க வேண்டும். அல்லது மறவர்களைக் கேலி செய்வதுபோல் இலர்கள் நடந்து கொள்ளாதிருக்க வேண்டும்.

இதுவரை யுத்த பூமியாய் இருந்த தஞ்சை இப்பொழுது மாறத் துவங்கியிருக்கிறது. தனித்தனியே எங்கெங்கோ பல கிராமங்களில், பல கோயில் வாசல்களில் இருந்த இம்மாதிரி யான ஆட்கள் இப்பொழுது ஒரே தெருவுக்கு வந்திருக்கிறார் கள். இவர்களுக்குள் எவ்வளவு ஒற்றுமை இருக்குமோ தெரிய வில்லை.

"நான் அருண்மொழிபட்டன் தான். நீங்கள் யார்."

"[illegible]

அந்தக் கலைஞனின் பேச்சில் கர்லம் கொப்பளித்தது.

"மிக்க சந்தோஷம்." – அருண்மொழி பட்டன் கை கூப்பினான். அந்தக் கிழவன் ஊடுருவிப் பார்த்தான்.

ஒரு போர் வீரன், சேனாதிபதியின் மகன், அரசியலில் செல்வாக்கு உள்ளவன் – பதவிகள் ஏதும் வகிக்காவிட்டாலும் அவன் பேச்சுக்குப் பலரை செவிசாய்க்க வைப்பவன் என்று

அந்தச் செம்பியன் வீணை ஆதிச்சனுக்குத் தெரிந்திருந்தது. எனவே தன் புகழை இன்னும் அதிகம் சொல்ல வேண்டுமென்று ஆசைப்பட்டான்.

ஐம்பத்தைந்து வயது இருக்கும். தலை நரைத்திருந்தது. உடம்பு கட்டவிழ்ந்து இருந்தது. ஆயினும் முகத்தில் நெல் முனையளவும் சர்லம் குனறயவில்லை.

"நான் வீணை வாசித்து நீங்கள் கேட்டதில்னலயே ஐயன். உங்கள் இல்லம் எங்கே என்று சொல்லுங்கள். அங்கு வந்து நான் வீணை வாசிக்கிறேன். அரை நாழிகை நான் அங்கு வீணை வாசித்தால் அந்த வீடு கபிட்சம் பெறும்."

சந்தித்த சில விநாடிகளிவேயே தன்னைப் பற்றி அதிகம் சொல்பவனை அருண்மொழிக்குப் பிடிக்கவில்லை. அருகே யிருந்த சிலரும் இதை மெல்ல உணர்ந்தார்கள்.

"ஐயனுக்கு ஆயிரம் லேலை. உன் வீணையை உட்கார்ந்து கேட்க எங்கே நேரம் இருக்கிறது. அவர்கள் அரசியலில் முக்கியப் பங்கு வகிப்பவர்கள். இடதும், வலதுமாக அலைந்து கொண் டிருப்பவர்கள்." என்று இன்னொரு கிழவி சொன்னாள்.

இவளும் பார்ப்பதற்கு வித்தியாசமாக இருந்தாள்.

காதுகளில் தங்க ஓலை. வயதானாலும் தலையில் சந்திர பிரபை, சூரிய பிரபை இருந்தது. மூக்கில் பேசரி. இரண்டு பக்கமும். மூக்குத்தி. கழுத்தில் காரை என்கிற அட்டிகை. அதற்குக் கீழே கனமான தங்கச் சங்கிலி. கைகளில் வளையல்கள், விரல்களில் மோதிரங்கள். அவள் மேல் சேலையை இழுத்துச் சொருகியிருந்த விதம் அவள் ஒரு காலகட்டத்தில் பேரழகியாய், கட்டுடல் கொண்டவளாய் பல காளைகளின் உள்ளங்களைக் கவர்ந்து இழுத்து தன்வசப்படுத்துகிறவளாய் இருந்திருப்பாள் என்பதைக் காட்டியது. அவள் அசைவுகளில் ஒயில் இருந்தது. நாட்டியமாடுபவள் என்று அந்த ஒயில் சொல்லியது.

"நீங்கள் சொல்வது உண்மை அம்மணி. நாலாபுறமும் எதிரிகள் இருக்கின்ற தேசம் சோழ தேசம். இங்கே ஒரு போர் வீரன் ஓய்ந்து உட்கார்ந்திருக்க முடியாது. வீணையெல்லாம் பொதுமக்கள் கேட்பதற்காக... நாட்டியங்கள் பொதுமக்கள் பார்ப்பதற்காக, என்னைப் போன்றவர்களுக்கு இடையறாத வேலை. எப்பொழுதும் அலைச்சல்தான். இப்பொழுதும்கூட உங்கள் இடத்தினுடைய கட்டுக்காவல் பற்றி நான் அதிகம்

யோசித்துதான் இங்கு வந்திருக்கிறேன். எல்லாம் சௌகரியமாக இருக்கிறதா. ஏதேனும் வசதிகள் வேண்டுமா. உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரிடம் ஏதேனும் சொல்ல வேண்டிய அவசியம் உண்டா."

அவர்கள் மௌனமாக இருந்தார்கள். அந்த மௌனம் அவர்களுக்குக் குறைகள் இருக்கிறது என்பதைக் காட்டியது.

"என்ன... ஏன் மௌனமாக இருக்கிறீர்கள். ஏதேனும் பிரச்சினைகள் இருக்கின்றனவா."

"பெரிய பிரச்சினை ஒன்றும் இல்லை ஐயன். நாலு பேர் இருக்க வேண்டிய ஒரு வீட்டில் பதினேழு பேர் இருக்கிறோம். நாளை இன்னும் நாற்பது பேர் இந்தப் பகுதிக்கு வருகிறார்கள். அவர்களை எங்கே தங்க வைப்பது என்று தெரியவில்லை. எங்கே குளிப்பார்கள். எங்கே உடை மாற்றுவார்கள். எங்கே உட்கார்ந்து உணவு உண்ணுவார்கள். எங்கே தூங்குவார்கள் என்று எதுவும் புரியவில்லை... ஆண்களாகிய நாங்கள் தெருவிலே மரப்பலகை அல்லது கட்டில் போட்டுப் படுத்துக் கொள்கிறோம். பெண்கள் எங்கே படுப்பார்கள். எங்களுடைய கவலை இரவு படுப்பது பற்றிக்கூட இல்லை. நாளை மறுநாள் பதினாறாயிரம் வீரர்கள் தஞ்சைக்குள் நுழைகிறார்கள். அத்தனை பேரும் சாளுக்கியர்கள். போரிவ் கைதியாக்கப்பட்டவர்கள். இங்கு கற்பாறை தூக்கும் கூலி வேலைக்காக வருகிறார்கள். அவர்கள் வருகிறபொழுது படுக்கக் கூட இல்லாமல் தெருவில் படுத்தால் என்ன ஆகும் என்ற பயமும் இருக்கிறது." கிழவி நிதானமாகச் சொன்னாள்.

"கிழவிக்குப் பழுவூர். அங்கே கோட்டை போன்ற மிகப்பெரிய வீட்டில் குடியிருந்துவிட்டு இந்த வீட்டிற்குள் நுழைந்தவுடன் ஓவென்று அழத் துவங்கிவிட்டாள்." வீணை ஆதிச்சன் பேசினான்.

"இங்கேயா எல்லாக் காலமும் கழிக்கப் போகிறேன்." என்று பதறத் துவங்கி விட்டாள்.

"ஏன்... வீடு அனமப்பே நன்றாக இல்லையா... அவ்லது நிறைய பேருக்கு இத்தனை சிறிய வீடு என்ற கவலையா." அருண்மொழிப்பட்டன் விசாரித்தான்.

"இரண்டும்தான்."

"வீடுகள் தொடர்ந்து கட்டிக்கொடுக்கப்படும். வெகு விரைவாக வீடுகள் எழுப்பப்படும். வீடு கட்டுவோர் இருப்பினும், தகுந்த கூலியாட்கள் இல்லாததால் வேலை தாமதப்படுவதாக நான் கேள்விப்படுகிறேன். பதினாறாயிரம் வீரர்கள் ஒட்டு மொத்தமாக உங்களைச் சுற்றி வந்து நின்றுவிட மாட்டார்கள். அவர்கள் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு லெவ்வேறு திக்கிவ் அனுப்பப்படுவார்கள். வெவ்வேறு வேலைக்கு அனுப்பப் படுவார்கள்.

உதாரணமாக, தஞ்சைக்கு வரும் வழியில் கருந்தட்டாங் குடியில் ஆயிரம் பேர் நிற்க வைக்கப்படுவார்கள். மேற்கே சில பேர் அனுப்பப்படுவார்கள். தெற்கே பாறைகளைச் சுமந்துவர சிலர் அனுப்பி வைக்கப்படுவார்கள். இந்த இடத்திவ் எத்தனை பேர் தேவையோ - அத்தனை பேர் இருப்பார்கள். பதினாறாயிரம் வீரர்களும் இங்குள்ள அத்தனை பெண்களையும் கற்றிக் கொண்டிருப்பார்கள் என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம். வீடு இன்னும் பெரிதாக வேண்டுமென்றாலும் உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவர் கட்டித் தருவார். ஒரு வீட்டை நான் பார்க்க ஆசைப்படுகிறேன்."

அவன் ஒரு வீடு நோக்கி வர, அந்தக் கதவை தள்ளிக் கொண்டு கிழவி முன்னே போனாள். பின்னால் அந்த வீணை வாசிக்கும் ஆதிச்சன் நடந்து வந்தான். அவன் கைகள் காற்றில் வீசியபடி இருந்தன. அவன் வாய் ஏதோ ஒரு ஸ்வரக் கோர்வையை முணுமுணுத்துக் கொண்டிருந்தது. உலகத்தில் எது பற்றியும் கவலைப்படாது வீணை வாசிப்பது பற்றியே கவலைப் படுகின்ற ஆளாக அவன் இருந்தான்.

அந்த முதியவன் உள்ளே நுழைய, உள்ளுக்குள் பெண்கள் பரபரப்பாவது கேட்டது. அருண்மொழி தயங்கி நின்றான். பின்னடைந்தான். திண்ணையிவ் அமர்ந்து கொண்டான்.

"வாருங்கள், வாருங்கள்." - உள்ளேயிருந்து குரல் கேட்டது.

"பெண்கள் இருக்கிறார்கள் போலிருக்கிறதே."

"இங்கே பெண்கள்தான் இருப்பார்கள். வாருங்கள்." என்று முதியவன் குரல் கேட்க, நிதானமாக உள்ளே நுழைந்தான். நுழையும்போதே மேல் வேட்டியை உதறி மொத்தமாகப் போர்த்திக் கொண்டான்.

அவன் நுழைய, பெண்கள் மடமடவென்று மூன்று வரிசையாய் ஆனார்கள். சட்டென்று கை கூப்பினார்கள். காலை தரையில் உதைத்து 'தா... தை..." என்று நடனமிட்டார்கள். கைகளை அசைத்தார்கள். கழுத்தை வெட்டினார்கள். கண்களைச் சுழற்றினார்கள். இரண்டடி முன்னே வந்து தரையைத் தொட்டு நெற்றியில் தேய்த்துக் கொண்டார்கள்.

அது நடன மாதர்களின் வணக்க முறை. அரச குடும்பத்தினர்களுக்கு அவர்கள் செய்யும் மரியாதை.

கைகூப்பி அந்த மரியாதைகளை ஏற்றுக் கொண்டான்.

அறைகளைப் பார்த்தான். மேல் கூறையைப் பார்த்தான். தரையைப் பார்த்தான்.

"இனி யார் வந்தாலும் சரி; கால் உதைத்து தரை தொடுகின்ற வணக்கம் கிடையாது. வெறுமே கைகூப்பி மட்டுமே இருந்துவிட வேண்டும்."

ஒரு பெண் உரக்கச் சொன்னாள். ஏன் என்பதுபோல் அருண்மொழி பார்த்தான்.

"ஒரு உதை உதைத்தால் தரை ஆடுகிறது. பதினெட்டு பேரும் சேர்ந்து உதைத்தால் வீடு இடிந்து விடும்." – அவள் சொல்ல பெண்கள் சிரித்தார்கள்.

அருண்மொழிப்பட்டனும் சிரித்தான்.

79

அவர்கள் அத்தனை பேரும் சதங்கை அணிந்த கால் உயர்த்தி, தொப்பென்று தரையிவ் அடித்தார்கள். ஜிலீர் என்று ஒரு சலங்கை ஒலி கேட்டது. தரையிலிருந்து தூக பறந்தது. தரை உறுதியாக இல்லை என்று அந்த உதையில் தெரிந்தது.

அருண்மொழி கவலையானான்.

ஏன் இத்தனை அவசரம். எதற்காக இத்தனை குழப்பம். இன்னும் தெளிவாக, அழகாக, கம்பீரமாக இந்த வீட்டைக் கட்டியிருக்கலாமே. வெகு நிச்சயமாய் இந்தப் பெண்களுக்கு இது கஷ்டத்தைக் கொடுக்கும்.

அவன் சிந்தித்த வண்ணம் பின்கட்டிற்குப் போனான். பின் கட்டில் முள் திருத்தாத தோட்டம் இருந்தது. வேலிக்காத் தான் செடிகள் நெருக்கமாக இருந்தன.

"காலைப்பொழுதுக்கு இங்குதான் வந்துவிட வேண்டும் என்று சொல்கிறார்கள். அதுவும் கவலை கொடுக்கிறது."

"என்ன?"

"கையில் சொம்போடு இந்தப் பகுதிக்குத்தான் போக வேண்டுமாம். எங்கள் ஊரில் அப்படி வழக்கமில்லை."

கிழவி சொல்ல, திகைத்துப் போனான்.

சிறிதுகூட சரியில்லை. பெண்கள் வந்து கொண்டே இருக் கிறார்கள். ஆனால் அவர்களுக்கு மறைவிடத்தில் ஒதுங்கக்கூட சரியாக இடம் இல்லையென்றால் என்ன செய்லார்கள். ஏன் இது யாருடைய வேலை. சோழப் பெருந்தச்சன்தான் இதையும் செய்திருக்க வேண்டும்.

ஒருவேளை - சோழப்பெருந்தச்சனுக்குத் தேவையான அவகாசம் கொடுக்கப்படவில்லையா. கவலையோடு வீட்டை விட்டு வெளியே நடந்தான்.

பின்னே ஒரு பெண் குரல் கேட்டது.

"நாளை காலை உங்கள் அத்தனை பேருக்கும் மிகப்பெரிய மாளிகை ஒன்று உருவாக்கப்பட்டு, அதில் இடங்கள் ஒதுக்கப்படும். அதுவரை எந்தக் கவலையும் படாமல் இங்கே நடனமாடிக் கொண்டிருங்கள்."

அந்தப் பெண் உரத்த குரலில் அருண்மொழி காதுபட கட்டளைபோல் சொன்னாள். திரும்பி அருண்மொழி பார்க்க, அங்குள்ள எல்லாப் பெண்களும் சிரித்தார்கள்.

இந்தப் பெண்கள் யாரை லேண்டுமானாலும், எப் பொழுது வேண்டுமானாலும், எது குறித்து வேண்டுமானாலும் கேலி செய்யும் புத்தியுடையவர்கள் என்று அருண்மொழிக்குப் புரிந்து போயிற்று. இந்த நடனப் பெண்களுக்கு அது வழக்கம். ஆனால் உள்ளுக்குள் வரும் பதினாறாயிரம் வீரர்களுக்கு எது வழக்கம் என்று தெரியவில்லை. இந்த வழக்கம் பிடிக்குமா என்று புரியவில்லை.

அரச குடும்பத்து இளைஞன் என்று தெரிந்தும், அதிகாரம் உள்ளவன் என்பது புரிந்தும் இடையில் உடைலாளும்,

வேகமாக குதிரையும், கூடவே ஒரு காவல் ஆளும் இருப்பது தெரிந்தும் எந்தக் கவலையும் இல்லாமல், முகத்துக்கு நேரே கேலிகளை இறைக்கின்ற பெண்களை கவவையோடும், வியப் போடும் அருண்மொழி பார்த்தான்.

அவர்களுக்கு வசதிகள் செய்து தராததை மிக நுணுக்க மாகக் கேலி செய்வதைக் கண்டு லேசாய் வேதனைப்பட்டான். அந்த வேதனை மெல்லிய கோபமாக மாறியது.

என்ன செய்கிறார்கள் இந்தச் சிற்பிகள். கிட்டத்தட்ட இருநூற்றிச் சொச்சம்பேர் வந்துவிட்டார்கள் என்று தெரிந்தும், வெகு சிலருக்கே வீடு கட்டிக் கொடுத்து மற்றவை விரைவில் கட்டிக் கொடுக்கப்படும் என்று ஏன் சொல்லுகிறார்கள். இந்த ஏற்பாட்டை முன்னால் செய்ய முடியாதா. இங்கே என்ன குழப்பம். நிர்வாகத்தில் ஏன் தாமதம். எல்லாமே நிதானமாக, நேரம் தாழ்த்திச் செய்வதில் சோழர்களுக்கு இணையானவர்கள் யாருமில்லை.

சோழ தேசத்தில் அன்பும், பொறுமையும் அடிப்படையாக இருக்கின்றன. சாளுக்கிய தேசம் போல கையிலே சவுக்கு வைத்துக் கொண்டு அதிகாரிகள் அலைந்தால், தொட்டதற் கெல்வாம் சுளீர் களீர் என்று வீசினால் வேலைகள் சுறுகறுப்பாக நடக்கும். ஆனால், சோழமன்னர்கள் யாருமே இந்தச் செய்கையை அனுமதிப்பதில்லை.

"நீ அவனை அடித்து விட்டாயா. வேலை தாமதம் என்றா. அப்பொழுது உன்னை யார் அடிப்பது. எங்கே சவுக்கு கொண்டு வா," என்று உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் பிரம்பால் அடித்த ஒரு அதிகாரியை மிரட்டினார். நூறு பேர் எதிரே அந்த அதிகாரியைச் சவுக்கால் இரண்டு முறை அடித்தார்.

"வலிக்கிறது அல்லவா. அதே போல் அவனுக்கும் வலிக்கும். அவனிடம் வேலை லாங்க உனக்குத் தெரியவில்லை என்றுதான் இதற்கு அர்த்தம். கட்டளையிட்டால் வேலை செய்யக்கூடிய நிலையில் நீ இல்லை என்பதுதான் இதற்குப் பொருள். இங்கு வா." என்று பிரம்பால் அடி வாங்கிய தொழிலாளியை அருகே அழைத்தார். அவன் நடுங்கியபடியே வந்தான்.

"இவர் சொன்னபடிக்கு லேலை முடிக்காமல் தாமதமாக முடிக்க என்ன காரணம்."

"எனக்குண்டான அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வில்லை. அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை என்று நான் சொன்னபோது, இவர் என்னை அவட்சியம் செயது விட்டுப் போய்விட்டார். இவர் அலட்சியம் எனக்குக் கோபத்தைக் கொடுத்தது. எனக்கு என்ன வேண்டும் என்று புரியாமல் வேவை மட்டும் முடியவேண்டும் என்று அவர் நினைத்துக் கொண்டிருக்கிறாரே இவருக்கு என் வேலையி னுடைய கடினத்தை உணர்த்த வேண்டுமென்று நினைத்தேன். நான் வேலையைத் தாமதப்படுத்தினேன். வேலை செய்யாமவ் நின்றேன். எனக்குண்டான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தாவ் வெகு நிச்சயமாக இந்த வேலை முடிந் திருக்கும்."

அவன் பேச்சை உள் லாங்கிக் கொண்டு அடித்த அதிகாரியைத் திரும்பி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் பார்த்தார்.

"இவருக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவது என் வேலையல்ல. அது வேறு நிர்வாகம். வேலையை விரைவாக முடிக்கச் சொல்லி எனக்குக் கட்டளையிருந்தது."

"யார் கட்டளை."

"அமைச்சரின் கட்டளை."

"எந்த அமைச்சர்?"

அமைச்சர் ஒருவர் முன் வந்தார்.

"நான்தான் கட்டளையிட்டேன்." என்று சொன்னார்.

"இதற்குக் காரணம் நீங்கள்தான். அவனுக்கு அடிப்படை யான தேவைகள் கொடுக்கக்கூடிய நிர்வாகியையும் அனுப்ப விவ்லை. அதட்டலுக்கு ஒரு ஆள் அனுப்பி வைத்தீர்கள். நீங்கள் அனுப்பி வைத்த ஆள் முழு மூடன். அவனுக்கு அடிக்கத்தான் தெரிகிறதே தவிர, என்ன பிரச்சினை என்று அணுகத் தெரியவில்வை. இதற்குக் காரணம் நீங்கள். எனவே, அந்த அடிவாங்கிய தொழிலாளிக்கு உங்களால் இயன்ற அளவு பணமும், நெவ்லும் கொடுத்து அவனிடம் மன்னிப்புக் கேளுங்கள்." என்று உரத்த குரலிவ் கட்டளையிட்டார்.

எல்லா அதிகாரிகளும் உறைந்து போய் நின்றிருந்தார்கள்.

அடிப்பட்டவன், "வேண்டாம் மகாராஜா. அதெல்வாம் வேண்டாம்." என்று சொன்னான்.

"சும்மாயிரு." என்று அவனை அதட்டினார்.

இடுப்பிலிருந்து பணமுடிப்பு எடுத்து ஐந்து பொற்காசுகள் எடுத்து மன்னனிடம் நீட்டினார். மன்னர் சரியென்று தலை யசைத்தார். நேரே போய் அந்தப் பொற்காசுகளை அந்த அடிபட்ட தொழிலாளியிடம் கைப்பிடித்து இழுத்து அமைச்சர் திணித்தார்.

"உன் வீடு தேடி மூன்று கலம் நெல் இன்று மாலைக்குள் வந்துவிடும். என் கட்டளையால் நகர்த்தப்பட்டு உன்னிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்ட அந்த அதிகாரியின் செயலுக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன். தயவு செய்து மன்னித்து விடுங்கள்." என்று கைகூப்பினார்.

அந்தத் தொழிலாளி திகைப்போடு உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரைப் பார்த்துக் கொண்டிருந்தான்

"இந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. அடுத்த பிரச்சினை..." என்று மன்னர் கேட்க, "உன்னுடைய அடிப்படைத் தேவை என்ன." என்று மந்திரி விசாரிக்க ஆரம்பித்தார்.

மாமன்னர் வேறு வேலைக்குத் திசை திரும்பினார்.

எனவே இங்கு எந்த அதிகாரியும் யாரையும் விரட்டிவிட முடியாது. சோழதேசம் பண்பாடு மிக்க தேசம் என்கிற பெயரிவ் சற்று மெத்தனமாகவும், அலட்டலாகவும், தேவையற்ற மிருதுத் தன்மையோடும் வலம் வந்து கொண்டிருக்கிறது. இது எவ்வளவு தூரம் நல்லது என்று தெரியவில்லை.

அருண்மொழி சட்டென்று செம்பியன் வீணை ஆதிச்சனை நோக்கித் திரும்பினான்.

"நாளை காலைக்குள் இங்கு மிகப்பெரிய மாளிகை எழுப்பி இவர்களையெல்லாம் குடித்தனம் லைக்க இயலாது. இது மனித யத்தனத்தில் அடங்கியது அல்ல. உங்களை வரவழைப்பதற்கு முன்பு இங்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் சிற்பிகள் ஓயாது வேலைகள் செய்து கொண் டிருக்கிறார்கள். கட்டடக் கலைஞர்கள் இடையறாது உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய கூலி ஆட்கள் இங்கு இல்லை. இத்தனை வீடுகள் கட்ட வேண்டுமென்றால் ஒரு வீட்டிற்கு நான்கு கூலி ஆட்களாலது வேண்டும்.

இந்தக் தாமதம் கூலி ஆட்களால் ஏற்பட்டிருக்கிறது. வெகு விரைவிலேயே திருவொற்றியூர் வீரர்கள் இங்கு வந்து

விடுவார்கள். அவர்களால் வேலை மிக வேகமாக நடைபெறும். அதுவரை அனுசரித்து பொறுமையுடன், அதிகம் பேசாமல் உங்கள் குறைகளைப் பெரிதாக்கி மற்றவரிடம் காட்டாமல், மிக அமைதியாக வாழ்லதற்கு முயற்சி செய்யுங்கள்.

சோழ தேசம் பல வெற்றிகளைக் கண்டிருக்கிறது. பல தேசங்களையும் மீறி படையெடுத்து வெற்றிக் கொடியை நாட்டியிருக்கிறது. ஆனால் சோழ தேசம் தன்னை ஜெயித்திருக்கிறதா என்பது பற்றி எனக்குச் சந்தேகம் உண்டு. வெறும் அகங்காரம் அறிவீனம். வாழ்க்கையை அது கெடுத்துவிடும்.

நான் போரில் வல்லவன்; மிகச் சிறந்த வீரன் என்பதாலேயே எந்நேரமும் வாளை உருவிக் கொண்டு அலைய முடியாது. நான் நடனத்தில் வல்லவன் என்பதாலேயே எந்நேரமும் நடனம் பற்றியே பேசிக் கொண்டிருக்க முடியாது. நடனம் மட்டுமே ஒரு கலை என்று சொல்லிக் கொண்டு திரிய முடியாது. உழவர்களும், கருமார்களும், கட்டடக் கலைஞர்களும், சிற்பித் தொழிலாளிகளும், தச்சர்களும், குயவர்களும் நமக்கு முக்கியம். நான் மட்டுமே முக்கியம் என்கிற திமிர் அதிகம் பேச வைத்துவிடும். பேச்க புண்படுத்தும். புண்பட்ட நெஞ்சம் பழி வாங்கும். பழிவாங்கல் அடிதடி ரகளையில் முடியும். எனவே, அது அமைதியின்மையைக் கொடுக்கும். அமைதியாய் வாழ பேசுவதைக் குறைத்துக் கொள்ளுங்கள்."

– திடமாய் தீர்க்கமாய் அருண்மொழி சொல்ல சகலரும் கேட்டுக் கொண்டார்கள். வீணை ஆதிச்சன் பதறினான். சம்பந்தப்பட்ட பெண்ணை முறைத்துப் பார்த்தான். ஆனால் அவள் அதைப் பற்றிக் கலைப்படுலதாகவே இல்லை.

"வாயைப் பொத்திக் கொள்ளுங்களடி. இறுக்க மூடிக் கொள்ளுங்கள். உங்கள் கால்கள்தான் பேச வேண்டும். கண்கள் தான் பேச வேண்டும். ஜதி மட்டுமே பேசலேண்டும். மற்றவரெல்லாம் சோழ தேசத்தில் வாயே திறக்கக்கூடாது." என்று அதே பெண் சொல்ல, ஒரு முதிர்ந்த பெண்மணி 'ஏய்' என்று அவளை அதட்டினாள்.

அந்தப் பெண் ஹூம் என்று ஒரு முறைப்பு முறைத்து உள்ளுக்குள் வேகமாகப் போனாள். அவளைத் தொடர்ந்து நாலைந்து பெண்கள் போனார்கள். அப்படிப் போன அந்தப் பெண்மணிக்கு மத்திம வயது இருக்கும். நடனமாடி... நடனமாடி உரமேறிய உடம்பு. ஆனால் முகத்தில் ஏனோ ஒரு கடுகடுப்பு

இருந்தது. அந்தக் கடுகடுப்பு முகத்தில் குரூரமாகத் தெரிந்தது. அவள் அகங்காரி; திமிர் பிடித்தவள்; ஆபாசமான சொற்களைப் பேசத் தயங்காதவள் என்கிற எண்ணம் உற்றுப் பார்த்த எவருக்கும் வந்திருக்கும்.

வீணை ஆதிச்சன் சட்டென்று அருண்மொழிப் பட்டனின் புறங்கையைத் தொட்டான்.

"ஐயன் சற்று மன்னித்துக் கொள்ள வேண்டும். அந்தப் பெண் சற்று அதிகப்ரசங்கி."

"யாரால்?"

"யாரைச் சொல்வது. அவள் சூழ்நிலை அப்படி. இதுவரை அவளை மூன்று பேர் காதலித்துத் திருமணம் செய்து கொள்வதாய் உறுதி கொடுத்து விலகிவிட்டார்கள். அதனால் அவள் ஆண்கள் மீது வெறுப்புள்ளவளாகவும், கோபமுள்ள வளாகவும் இருக்கிறாள்."

"அதனால் என்ன? பேச்சில் நிதானம் இழப்பதா?"

அருண்மொழி கவலையோடு கேட்டான். மற்ற பெண்கள் அவனைச் சமாதானம் செய்ய முன் வந்தார்கள்.

"என்னுடைய கவலை அந்தப் பெண்ணைப் பற்றியோ, உங்களைப் பற்றியோ அல்ல. போர்க்களத்திற்கு வெற்றி பெறுவோம் என்று வந்த சோழ வீரர்களிடம் அடிபட்டு, பிறகு பிடிபட்டு, பிறகு கைதியாய் இரண்டு மூன்று வருடங்கள் இருந்து, இப்பொழுது கூலி வேலைக்கு இவ்வளவு தொலைவு வரும் அந்தச் சாளுக்கிய வீரர்கள் பற்றித்தான் கவலை. உங்கள் பேச்சுக்களை அவர்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். பாய்ந்து ஒரு அடி அடித்தால் அவள் முகம் சிதைந்து போகும். நல்ல ஒரு நடனக் கலைஞர் சோழ தேசத்தில் ரத்தம் சிந்த வேண்டியிருக்கும். இதனால் நமது பக்கத்து மக்கள் கோபமுறுவார்கள். கைதிகளைத் தாக்க முயற்சிப்பார்கள். பிறகு கைதிகள் திட்டமிட்டு கலவரம் செய்வார்கள். உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் ஆரம்பித்த இந்தப் புனிதப்பணி – மாபெரும் கோயில் கட்டுகிற பணி உங்களால், உங்கள் பேச்சால் உங்கள் நடத்தையால் சிதைந்து போகும்.

இங்குள்ள நடனப் பெண்களுக்கு பொறுப்புகள் மிக மிக அதிகமிருப்பதை தயவு செய்து நான் நினைவுபடுத்துகிறேன். நான் யார் என்று தெரிந்து என்னிடமே எக்காளமாகப்

பேசுகின்ற பெண்; எகத்தாளமாக வார்த்தைகளை உதிர்க்கின்ற பெண் மற்றவர்களிடம் எப்படிப் பேசுவாள் என்று கற்பனை செய்து பார்க்கிறேன். இது உங்களுக்கு நல்லதல்ல; சோழ தேசத்திற்கும் நல்லதல்ல. அமைதியாக இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் குறைகள் நீங்கள் எனக்குச் சொல்லாமலேயே புரிகின்றன. நான் ஏற்பாடு செய்கிறேன்."

–அருண்மொழிப் பட்டன் குதிரையேறி மெல்ல வீடுகளைப் பார்த்துக் கொண்டே போனான்.

80

வீணை வாசிக்கும் செம்பியன் ஆதிச்சன் அருண்மொழிப் பட்டனை நோக்கி கை கூப்பினான். அவன் பின்னாலிருந்த வயதான சில பெண்மணிகளும் கை கூப்பினார்கள்.

"ஐயன், எது இருந்தாலும் மனதிலே வைத்துக் கொள்ளாமல், உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரிடம் எங்களைப் பற்றி எதுவும் சொல்லிவிடாமல் சற்று மன்னித்து மறந்து விடுங்கள்..."

"அடடே... இதைப் போய் மன்னரிடம் சொல்லிக் கொண்டிருப்பார்களா? என் கவலை உங்களுக்கு எப்படி உதவிகள் செய்வது என்பதுதான். நான் நேரே சிற்பிகளிடம் போகிறேன்."

அருண்மொழி குதிரையை லேகமாகச் செலுத்தினான். குதிரை கிழக்கிலிருந்து கோவில் கட்டப்படும் இடத்தின் தெற்குப் பகுதிக்குப் போயிற்று. சிறு சிறு குடிசைகள் வட்டமாக அமைந்திருந்தன. நடுவே தட்டுப்பந்தல். அந்த தட்டுப்பந்தலில் சிற்பிகள் படுத்தும், உட்கார்ந்தும், பேசிக்கொண்டும் இருந்தார்கள். நிறைய கயிற்றுக் கட்டில்கள் போடப்பட்டிருந்தன. காற்று வரும் என்பதால் அந்தச் சிற்பிகள் தெற்கு பார்த்து திறந்த வெளிவிட்டு, வடக்குப் பக்கம் பாதி அடைத்து தங்களுக்கென்று மிக விசாலமான ஒரு தூங்குமிடத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

பாறைகள் கொண்டு வந்து குவிக்கும் இடத்திலும் மிக உயரமான கூம்புக் கூரை போடப்பட்டிருந்தது. அந்த கூம்புக் கூரையின் கீழிருந்து இடையறாது உளிச்சத்தம் வந்து கொண்டிருந்தது.

குதிரைகள் வருவதைப் பார்த்து அங்கு காவலுக்கு இருந்த சோழ வீரர்கள் எழுந்து நின்றார்கள். கையை உயரே தூக்கி மெதுவாக வரச் சொன்னார்கள். அருண்மொழிப் பட்டன் குதிரையை நிதானமாக்கினான். சோழ வீரர்கள் அவனைக் கவனித்துவிட்டுக் கை கூப்பினார்கள். குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டார்கள்.

"தலைமைச் சிற்பி இருக்கிறாரா?"

"இல்லை. மாமன்னரைத் தேடிப் போயிருக்கிறார்."

"வேறு யார் இருப்பது?"

"துணைச் சிற்பிகள் பலபேர் இருக்கிறார்கள். அதிலே குறிப்பாக கல் பிளக்கும் வகையைச் சார்ந்த கல் வேலை செய்பவர்கள், சிற்ப வேலை செய்பவர்கள் இங்கிருக்கிறார்கள். ஓவியர்களும் இருக்கிறார்கள்."

"ஓவியர்கள் இருக்கிறார்களா? வேலைகள் ஆரம்பித்து விட்டனவா?"

"ஆமாம். ஓவிய வேலை நிரம்ப நடந்து கொண்டிருக்கிறது. துணிக்குச் கண்ணம் அடித்துக் காயவைத்து, அந்தக் காய வைத்த துணியில் மரக்கட்டை போட்டு சட்டமாக்கி, அந்தச் சட்டத்தில் இழுத்துத் தைக்கப்பட்ட துணியில் எழுதுகிறார்கள். துணியில் எழுதிய பிறகு அளவுகள் தருகிறார்கள். எண்ணிக்கை கொடுத்து மடித்து வைக்கிறார்கள். அது தவிர எப்படிக் கட்டடம் உருவாக வேண்டுமென்று வரைபடங்களும் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள்."

"கல் உடைக்கும் வேலையைச் செய்வது யார்?"

"வெறும் அஸ்திவார கல்லுக்குண்டான வேலைதான் நடந்து கொண்டிருக்கிறது."

"எந்தச் சிற்பமும் செதுக்கவில்லையா?"

"இல்லை. ஒரே ஒரு சிலை மட்டும் செய்து வைத்திருக் கிறார்கள். அதற்கு நேற்று பிராணப்பிரதிஷ்டை நடந்தது."

"எங்கே?"

"இலர்கள் இருக்கும் இடத்திலேயே..."

"பிறகு லேறு என்ன வேலை செய்யப் போகிறார்கள்?"

"அடுத்த வளர்பிறையில் நந்தி எம் பெருமான் சிலை ஒன்று செய்ய வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்கான

அடிப்படைகள் தயாராகி விட்டன. கல்லும் தேர்ந்தெடுத்து விட்டு சமன் செய்து கொண்டிருக்கிறார்கள்."

"சமன் செய்வது என்றால்?"

"முடிந்த அளவுக்கு தேவையில்லாத கற்களை எடுத்து விடுலது. கிட்டத்தட்ட செவ்வக வடிவமாகச் செய்வது."

"நல்லது. நீ எந்தப் படையைச் சேர்ந்தவன்?"

"நான் கோட்டைக் காவல். சிறு வயதிலிருந்தே தஞ்சைக் கோட்டைக் காலலில் இருக்கின்றேன்."

"இவ்வளவு அனுபவம் பெற்ற உன்னை ஏன் இங்கு போட்டு விட்டார்கள்?"

"இங்குள்ள சிற்பிகளுக்கு யார் வருகிறார்கள். என்ன செய் கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்களுக்கு வந்தவர்களை நம்பவும் முடியவில்வை. எனவே, வெளியூரிலிருந்து வந்த சிற்பி களுக்கு உள்ளூரில் இருக்கின்ற அதிகாரிகளை, பெரியவர்களை அறிமுகப்படுத்தி பழக்கப்படுத்த என்னைப் போட்டிருக் கிறார்கள். எனக்குக் கீழே வேலை செய்த இருவர் இப்பொழுது கோட்டைக் காவலை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருக் கிறார்கள்."

"நல்ல யுக்தி. நல்ல யுக்தி." - அருண்மொழி வாய்விட்டுப் பாராட்டினான்.

"இப்படியொரு ஆளை அங்கே நடனமாடும் பெண் களுக்கு நடுவே போட்டால் என்ன. அங்கு ஏன் காவலே இவ்லை..."

"காவல் இருந்ததய்யா..? அந்தப் பெண்கள்தான் துரத்தி விட்டார்கள்."

"ஏன்?"

"அலர்கள் உள்ளே வரும்பொழுதும், போகும் பொழுதும் கட்டியம் கூறவேண்டுமாம்."

"யார் சொன்னது?"

"எல்லாப் பெண்களும்தான்."

"எதற்குக் கட்டியம்?"

"யார் யாருக்கோ சொல்கிறீர்களே... எங்களுக்குச் சொன்னால் என்ன. நாங்களும் தவைக்கோலிகள்தானே' என்று கேட்கிறார்கள். வீண் வல்லடி நடக்கிறது."

"என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?" அருண் மொழிப்பட்டன் அவனுக்கு அருகே நடந்து கொண்டே கேட்டான்.

"அவர்கள் இயல்பு அப்படி. எதற்கும் கேலி. யாரோடும் நகைச்சுவை. எப்பொழுதும் ஒரு குதர்க்க புத்தி. அங்கு வேவை செய்யப் பிடிக்காமல் காவலுக்கு இருந்த இரண்டு வீரர்களும் மீண்டும் கோட்டைக் காவலுக்கே போய்விட்டார்கள். அந்த இடம் காவலற்று இருப்பது இப்போதைக்குத் தவறில்லை யெனினும், பிற்பாடு காவல் வேண்டும்."

"பிற்பாடு என்றால்..."

"சாளுக்கிய வீரர்கள் இங்கு வருகிறார்களாமே. கற்கள் தூக்கவும், புரட்டவும், எடுபிடி வேலைக்கும் இங்கு வரப் போகிறார்களாமே. அவர்கள் வந்தால் அந்த இடத்திற்குக் காவல் இல்லாமல் முடியாது. ஏதேனும் அசம்பாவிதம் நடக்கலாம்."

"உங்கள் அனுபவம் உங்களைத் தெளிவாகப் பேச வைக்கிறது. இதற்கு நல்ல ஏற்பாடு ஒன்று செய்தாக வேண்டும். யாரைப் போடலாம்..."

"என்னுடைய அபிப்ராயப்படி..."

"சொல்லுங்கள்."

"வீரர்களைப் போட்டால்தான் கேலி. அதிகாரிச்சிகளைப் போட்டால்... நம் அதிகாரிச்சிகளில் வாள் வீச்சும், அம்பு தொடுப்பதும் தெரிந்த பெண்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களில் சற்று முரடான, கோபமான பெண்களைக் கொண்டு வந்து இங்கு போட்டால் இறங்கி பளீர் என்று கன்னத்தில் அடிப்பார்கள். அவர்கள் தங்களைக் கேலி செய்தாலும் பொறுத்துக் கொள்வார்கள். மாமன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரை, பிரம்மராயரைக் கேலி செய்தால் வெகுண்டு எழுவார்கள்."

"அந்தப் பெண்கள் மன்னரைக் கேலி செய்கிறார்களா என்ன?"

"அவர்கள் யாரைக் கேலி செய்யவில்லை. நேற்றுகூட இங்கு வந்திருந்தார்கள். சின்ன ரகளை ஏற்பட்டது."

"என்ன... என்ன சொல்கிறீர்கள்?"

"சிற்பிகளைக் கண்டால் அவர்களுக்கு அத்தனை இளக்காரம்."

"ஏன் இளக்காரம்?"

"எந்தக் காரணமுமில்லாத இளக்காரம். இறைவனுக்குக் கோவில் கட்டுவது இருக்கட்டும்; எங்களுக்கு எப்பொழுது வீடு கட்டித் தரப்போகிறீர்கள்' என்று கேட்டு, 'உங்களுக்கு வீடு கட்டத் தெரியாதா... அதனால்தான் குடிசையில் இருக்கிறீர்களா' என்றெல்லாம் கேலி செய்துவிட்டுப் போனார்களாம்."

"நானும் கேட்க வேண்டுமென்றிருந்தேன். இவர்கள் ஏன் வீடு கட்டிக்கொள்ளவில்லை?"

"இந்தக் கோவிலுக்கென்று அந்த நடனப் பெண்மணிகள் அர்ப்பணம் செய்யப்பட்டவர்கள். ஆனால் சிற்பிகள் தங்களை அர்ப்பணம் செய்து கொள்ளவில்லை. அவர்கள் அடுத்த கோவிலுக்கு நகர வேண்டியவர்கள். ஏழு அல்லது எட்டு வருடம் இந்தக் கோவில் செய்து முடித்த பிறகு நாங்கள் இங்கு இருக்கப் போவதில்லை. வெகு நிச்சயமாக வேறு இடத்திற்குப் போகப் போகிறோம். மன்னர் வேறு இடத்தில் கோவில் கட்டுவார். அங்கு போய் அமரப் போகிறோம். எதற்காக எங்களுக்கு வீடு? குடிசையில் இருப்பதுதான் ககம்."

"மழைநாளில் கடினமல்லவா?"

"அதற்குள் மண்டபம் எழுப்பிவிடுவார்கள். கோவிலைச் சுற்றி மண்டபம் எழுப்ப ஒரு திட்டம் இருக்கிறது. அதற்கான வரைபடங்களும் முடிந்து விட்டன."

"நல்லது. என் வருகையை இங்கிருக்கும் உபதலைவரிடம் சொல்."

அருண்மொழிப்பட்டன் அந்தக் குடிசை வட்டத்திற்குள் நுழைந் தான். தட்டுப்பந்தலின் கீழ் இருந்தவர்கள் எழுந்து பார்த்தார்கள். அருண்மொழியைப் பற்றி கட்டியக்காரன் உரக்க அறிவிப்பு சொல்ல, அவர்கள் எழுந்து வணக்கம் சொன்னார்கள். அருகே வந்தார்கள்.

"குடிக்கத் தண்ணீர் கொடுங்கள்." என்று அருண்மொழி கேட்டபோது திகைத்தார்கள்.

"இங்கு அந்தணர்கள் யாரும் இல்லையே ஐயன்" என்றார்கள்.

"நான் ஒன்றும் அந்தணன் இல்லை. போர் வீரன்." என்று பதிலுக்கு அருண்மொழி சொல்ல, அவர்கள் வெகு எளிதில் அவனுக்கு நெருக்கமானார்கள்.

வெள்ளைத் திரைச்சீலையில் வரையப்பட்ட கோவிலின் அடிப்பாகத்தையும், விமானத்தையும் பார்த்து அருண்மொழிப் பட்டன் திகைத்துப் போனான்.

"மனித எத்தனத்தில் முடியுமா இது." என்று கேட்டான்.

சிற்பிகள் மெல்ல சிரித்தார்கள்.

"வெகு நிச்சயம் முடியும். நம்மால் முடியும்." கைகளை மடக்கிச் சொன்னார்கள்.

"ஆமெனில், இதற்கு வித்திட்ட மாமன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வாழ்க," என்று அருண்மொழி குரல் கொடுக்க, பதிலுக்கு அவர்களும் குரல் கொடுத்தார்கள்.

மன்னரை வாழ்த்திக் கொண்டிருந்தபோது, கிழக்குப் பக்கத்திலிருந்து ஒரு சிறிய கூட்டம் அந்தச் சிற்பிகளை நோக்கி வந்தது. அதற்குத் தலைமை வகித்து கருவூர்த்தேவர் நடந்து வந்தார்.

வயதே அளவிட முடியாத கருவூர்த்தேவர் தொலைவி லிருந்து அருண்மொழியைப் பார்த்துவிட்டார். இரண்டு கைகளையும் விரித்தார். தட்டி அருகே வா என்று அழைத்தார்.

அருண்மொழிப்பட்டன் உடைவாளைக் கழற்றி அருகி லுள்ள வீரனிடம் கொடுத்துவிட்டு, அவரை நோக்கி ஓடினான். நேரடியாய் போய் நிலம்பட காலில் விழுந்து வணங்கினான். அவர் காலைத் தொட்டு தலையில் வைத்துக் கொண்டான். கைகளைப் பற்றிக் கொண்டான். எழுந்து நின்றான். அவர் அவனை இறுக்க அணைத்துக் கொண்டார். நெற்றியில் மு மிட்டார். திரும்பி தோளில் கைபோட்டுக் கொண்டார். அவனோடு அந்தச் சிற்பிகள் இருக்கும் இடம் நோக்கி நடந்து வந்தார்.

"எப்படி இருக்கிறாய் அருண்மொழி. தஞ்சை எப்படியிருக்கிறது. இந்தப் பக்கத்தில் கட்டுக்காவலே இல்லையே... யாரேனும் மடக்கி ஏதேனும் விசாரிப்பார்கள் என்று நினைத்தோம். எவரும் விசாரிக்கவில்லை. தஞ்சையை நோக்கி வெகு சுலபமாக எவர் வேண்டுமானாலும் வந்துவிடலாம் போலிருக்கிறது. சிறு படை போல நாங்கள் வருகிறோம். எங்களை யார் என்று கேட்பதற்குக் கூட ஆளில்லை. எனக்கு இது கவலையாக இருக்கிறது அருண்மொழி."

"எனக்கும் அவ்விதமே இருக்கிறது ஐயா..."

– அருண்மொழி தாழ்ந்த குரலில் சொன்னான்.

சட்டென்று கருவூர்த்தேவர் நின்றார். நீண்ட வெண்மையான தாடியைத் தடவிக் கொண்டார்.

"அந்தக் குடில்கள் யாருடையவை?"

"சிற்பிகளுடையவை..."

"அந்தப் பக்கம் இருக்கின்ற குடிவ்கள் யாருடையவை?

"தளிச்சேரி பெண்களுடையவை..."

"தளிச்சேரி பெண்களுக்கு இந்த இடத்தில் என்ன வேலை?"

"தளிச்சேரி பெண்களைக் கோயிலுக்கு வேலை செய்வதற்காக வைத்திருக்கிறார்கள்.

"கோயிலே இன்னும் வரவில்லையே. எதற்காக தளிச்சேரி பெண்கள் இங்கு வரவேண்டும்?"

"தெரியவில்வை ஐயா."

"இது யாருடைய உத்தரவு?"

"உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருடைய உத்தரவு...

"வேறு யாரேனும் இதில் ஈடுபட்டிருக்கிறார்களா? யாருடைய மேற்பார்வையில் இந்தக் குடில்கள் நிறுவப்பட்டன?"

"இராஜராஜப் பெருந்தச்சர் மேற்பார்வையிவ் நிறுவப்பட்டன."

"அவன் மகா கெட்டிக்காரன் ஆயிற்றே. ஏன் இந்தத் தவறு செய்தான்?"

"இதில் தவறு என்ன இருக்கிறது?"

"கோயில் கட்டுமானப் பணியை மையமாக வைத்து எதிர் எதிர் திசையில் இவர்களை வைத்திருக்க வேண்டும்."

"ஏன் ஐயா அப்படிச் சொல்கிறீர்கள்."

"இரண்டு பேருமே சண்டைக்காரர்களாயிற்றே. சிற்பிகள் நல்லவர்களாக இருக்கிறார்கள். தளிச்சேரி பெண்கள் கொஞ்சம் வாயாடியாக இருக்கிறார்கள்."

"தளிச்சேரி பெண்கள் லெறும் வாயாடிகள்தான். சிற்பிகள் கோபக்காரர்கள். சட்டென்று உளியைத் தூக்கி மேலே அடித்து விடுவார்கள். உளியில் அடிவாங்காமல் எவனும் சிற்பியானதே யில்லை. இரும்புத் துண்டு மேலே பட்டால் ரத்தம் வராமல் போனதுமில்லை. சிற்பிகள் வேறு யாரையேனும் தாக்க, விவகாரம் பெரிதாகி விடுமல்லவா.

ஆனால், இதுதான் பாறைகள் வரும்வழி. கோயிலுக்கு அந்தப் பக்கம் சிற்பிகள் இருக்க லேண்டுமென்றால் பாறைகள் இன்னும் சிறிது தூரம் பயணப்பட வேண்டும். பயண தூரத்தைக் கணக்கிட்டு அவர்கள் இதைச் செய்திருப்பார்கள்..."

"அப்படியானால் மேற்குப் பக்கம் தளிச்சேரிப் பெண் களை நிறுத்தி வைத்திருக்கலாமே."

"கோயிலின் மேற்குப் பகுதி சற்று வறண்ட பூமி. செம்மண் நிறைந்த பூமி. அந்த இடத்தில் குடியிருப்பதற்கு யாரும் விரும்ப மாட்டார்கள். எந்த இடத்தில் செம்மண்பூமி ஆரம்பிக்கிறதோ அந்த இடத்திலே கோயில் மையம் கொண்டிருக்கிறது. அதைத் தாண்டி லெகுதூரம் வரையில் செம்மண் இருப்பதால் அங்கு குடியிருக்க யாரும் பிரியப்படுவதில்லை. முந்திரிக்காடுகளும், சவுக்குத் தோப்புகளும், மூங்கில் புதர்களும் அதிகம் வளரு கின்றன. விவசாயத்திற்குக்கூடப் பயன்படாத நிலம் அது. தளிச்சேரி பெண்டுகள் அங்கு குடியேற விரும்பமாட்டார்கள் என்று நினைத்து இந்தப் பக்கம் வைத்திருக்கிறார்கள்."

"நீ சொல்வது உண்மை. குடியிருப்புக்கு ஏற்ற இடமில்லை. ஆயினும் தஞ்சையை ஊடறுத்து கால்வாய் வெட்டியிருக் கிறீர்களே. இது குடியிருப்புக்குப் போதுமானதாயிற்றே என்று யோசிக்கிறேன்."

"வேறு என்ன தவறு இருக்கிறது ஐயா."

"போனால்தான் தெரியும். இங்கிருந்து பார்த்துவிட்டுப் பேககிறேன். நமது அரசன் இராஜராஜ சோழன் எதையும்

சிந்தித்துத்தான் செய்லான். என் புத்திக்கு எட்டாததெல்லாம் கூட அவன் புத்திக்கு எட்டியிருக்கும். வா. அருகே போய் பார்க்கலாம். சிற்பிகளைப் பார்த்துவிட்டு லந்துவிட்டாயா."

"பார்த்துவிட்டு வந்துவிட்டேன் ஐயா."

"எனக்குக் கோயிலின் நடுப்பக்கம் போக வேண்டும். என்னோடு வா. மற்றவர்களை நிறுத்திவிடு."

"உதவிக்கு ஒரு ஆள் வைத்துக் கொள்ளலாமா?"

"வேண்டாம்"

கருவூர்த்தேவர் சொல்ல, அவர்கள் யானை நடந்த பாதையைத் தாண்டி அந்த மண்மேட்டில் மெல்ல ஏறினார்கள். கோவில் கருவறை இருக்கும் இடத்திற்குப் போய் நின்றார்கள்.

கருவூர்த்தேவர் அந்த இடத்தை நோக்கி கைகூப்பினார். அருண்மொழியும் கைகூப்பினான்.

81

கருவூர்த்தேவர் கருவறையைக் கும்பிட்டுவிட்டு மெல்ல நகர்ந்து வரைபடத்தைப் பார்த்தார். பிறகு மறுபடியும் கருவறை இருக்கும் இடத்திற்குப் போய் நின்றார். சுற்றிலும் கண்களை ஓட்டினார். முன்னும், பின்னும் நடந்தார். அண்ணாந்து பார்த்தார். மனதுக்குள் அவர் அந்தக் கட்டடத்தைக் கட்டிக் கொண்டிருப்பது அருண்மொழிப் பட்டனுக்குத் தெரிந்தது. பிறகு மறுபடியும் திரைச்சீலைக்கு வந்து கருவூர்த்தேவர் உதடு பிதுக்கியபோது அருண்மொழிப் பட்டன் ஆவலானான்.

"ஐயா, ஏதேனும் தவறு இருக்கிறதா..." மெல்லிய குரலில் அடுத்தவருக்குத் தெரியாமல் கேட்டான்.

"ஆமாம் அருண்மொழி." - உதடு பிரிக்காமல் இன்னும் மெல்லிய குரலில் கருவூர்த்தேவர் பதில் சொன்னார்.

"சரி செய்துவிடலாம் இல்லையா."

"தெரியவில்லை. சொன்னால் செய்வார்களா என்று தெரியவில்லை."

"ஐயா, நீங்கள் தஞ்சை மன்னரின் அபிமான குரு. உடையார் ஸ்ரீ இராஜராஜரின் மரியாதைக்கு உகந்தவர். சோழ மண்டலம் முழுவதும் உங்களை ஆச்சார்யனாக ஏற்றுக் கொண்டு வணங்குகிறது. எந்த மதவாதிக்கும் தலைவணங்காத என் தகப்பனார் பிரம்மராயர் உங்களைக் கண்டால் பயப்படு கிறார். எழுத்து நிற்கிறார். கருவூர்த்தேவர் என்று யார் சொன்னாலும் கண்களை மூடி பிறகுதான் திறக்கிறார்."

"ஆமாம். அவனுக்கு மரியாதையெல்லாம் மனதில் இருக்கிறது. ஆனால் வெளியே காட்டமாட்டான்."

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள். என் தந்தை உங்களைப் பலமுறை நமஸ்கரித்துப் பார்த்திருக்கிறேனே."

"இவ்வை. என்னைப் பார்த்தவுடன், அடா... இவனை நமஸ்கரிக்க வேண்டியிருக்கிறதே என்று ஒரு அச்சம் கொள்கிறான். அவனுக்கு வைணவர்களைத் தவிர வேறு யாரையும் வணங்குவது பிடிக்கவில்லை."

"அப்படியில்லை ஐயா."

"அப்படித்தான் அருண்மொழி. உன் தகப்பனைப் பற்றி உன்னைவிட எனக்கு அதிகமாகத் தெரியும்."

"சரி; பிரம்மராயர் பற்றி பேகவது இருக்கட்டும். இதிலுள்ள தவறு என்ன சொல்லுங்கள்."

"அருண்மொழி, வரைபடத்தை நன்கு பார்த்துக் கொள். குறுக்குவெட்டுத் தோற்றம் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. அருண்மொழி, இந்த இடத்தை நன்கு உயரமாக்கிய பிறகு கற்றி கவர் கட்டி, நடுவே மண்போட்டு, கவ் போட்டு, பாறைகள் போட்டு, கெட்டிப்பட்ட பிறகு கருவறை எழுப்பிய பிறகு விமானம் எழுப்பப் போகிறார்கள். கருவறையின் வாசல் பற்றி உன் கண்கள் அளவெடுக்கட்டும். உள்ளுக் குள்ளே இருக்கின்ற மூர்த்தியை என்னவென்று அள வெடுத்துக் கொள்ளட்டும். அந்த மூர்த்தி இந்தக் கருவறைக்குள் எப்படிப் போகும். கருவறையின் வாசலைவிட மூர்த்தி மிகப் பெரியது."

குச்சி ஒன்றை உடைத்து அருமொழிப்பட்டன் திரைச் சீலை அளவுகள் எடுத்தான். யோசித்தான்.

வெகு நிச்சயமாக கருவறை வாயில் வழியாக இந்த லிங்கத்தை எடுத்துக் கொண்டு போக முடியாது என்பது

அவனுக்குப் புரிந்தது. கருவூர்த்தேவர் அவனைப் பார்த்து மெல்லச் சிரித்தார்.

"திருவிடைமருதூருக்கு நானும், ராஜராஜனும் போயிருந்தோம். மகாலிங்கம் என்று சொன்னதும் அவன் மிகப் பெரிய உருவத்தை எதிர்பார்த்தான் போலிருக்கிறது. 'இதுவா மகாலிங்கம்' என்று கேட்டான். 'ஏன் – உனக்கு என்ன சந்தேகம்' என்று கேட்டேன். 'இன்னும் பெரியதாக பிரம்மாண்டமாக இருக்க லேண்டும் என்று நினைத்தேன்' என்றான். 'பிரம்மாண்டமாக உருவம் இருப்பதாலேயே ஒரு விஷயம் மகாலிங்கம் ஆகிவிடாது' என்று நான் பதில் சொன்னேன்.

'இல்லை ஐயா... இலங்கையில் புத்தர் சிலைளெல்லாம் உயரமாய், பிரம்மாண்டமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. அதே போல் சிவனுடைய மூர்த்தியையும் வைத்தால் தவறாகுமோ' என்று என்னைக் கேட்டான்.

மகாலிங்கத்தை அப்படியொரு பிரம்மாண்டமான உருவமாக நினைத்து வந்திருப்பான் போலிருக்கிறது. அது மனதில் தங்கி இவ்வளவு பெரிய லிங்கத்தைச் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டிருக்கிறான். ஆனால் கருவறை வாசலைச் சிறிதாக வைத்துவிட்டு லிங்கத்தைப் பெரிதாக்கினால் என்ன அர்த்தம். கருவறையைக் கட்டிய பிறகு, லிங்கத்தை உள்ளே கொண்டுவரலே முடியாது."

"அப்படியானால் வேறு எவ்விதம் இதைச் செய்வார்கள். ஏதாவது மேலிருந்து கீழ் இறக்குவார்களா."

"அதுவும் இவ்வை..."

"பிறகு...?"

"லிங்கத்தை வைத்துவிட்டுத்தான் கருவறையைச் செய்வார்கள் என்று நினைக்கிறேன்."

"ஆஹா... அதுவும் நல்ல வழிதானே..."

"அது நல்ல வழி அல்ல. கோயிலைக் கட்டிவிட்டுத்தான் மூர்த்தியை வைப்பார்களே தவிர, மூர்த்தியை வைத்துவிட்டு கோயில் கட்டுவார்களா... அது தவறாகுமே என்று பயப்படுகிறேன்."

"ஏன். என்ன தவறாகும்..."

"மூர்த்தியை வைத்துவிட்டு அதற்கு மேல் ஆட்கள் வேலை செய்வார்கள். சிரிப்பார்கள். வாயில் வெற்றிலையை அதக்கிப் பேசுவார்கள். அங்கிருந்து எச்சில் லிங்கத்தின் மீது தெறிக்கும்."

"மூடிவிட்டால்..."

"என்ன மூடினாலும் சிவனுடைய தலைக்கு மேலல்லவா ஆட்கள் இருப்பார்கள். அது நல்லதா."

"விமானம் கட்டிய பிறகும், வண்ணப் பூச்சுக்கோ, கொடி யேற்றத்திற்கோ, கும்பாபிஷேகத்திற்கோ நாம் ஏறத்தானே வேண்டும்."

"விமானத்தின் மீது ஏறுவதற்கும், உள்ளுக்குள் போய் அங் கிருந்து சிவலிங்கத்தைப் பார்ப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இது எவ்வளவு தூரம் சரி என்று எனக்குத் தெரியவில்லை. ஆழ்ந்து யோசித்துச் செய்ய வேண்டும்."

"ஐயா... இதைத் தவறென்று உடனடியாக ஸ்ரீஇராஜராஜத் தேவருக்குத் தெரிவித்தால் மாற்று உபாயம்...

"வேண்டாம். அவன் கனவு மிகப் பெரிய சிலலிங்கம். . புந்தக் கனவை நான் ஏதேனும் சொல்லித் தவிர்க்க வேண்டாம். சிலலிங்கம் உருவாவதற்கு அவன் இந்நேரம் உத்தரவு கொடுத் திருப்பான். எனவே, நாம் இப்போதைக்கு மௌனமாக இருப்பது நல்லது."

"உத்தரவு கொடுக்கவில்லையெனில் மெல்லச் சொல்லிப் பார்க்கலாமா. தெய்வக் குற்றம் லரக்கூடாது என்றுதானே நாம் முதலில் நினைக்க வேண்டும்?"

"குற்றம் ஏதும் வந்துவிடாது. நான் இருக்கிறேன். இதற்கு வேறு உபாயம் கண்டுபிடித்து விடலாம்."

"என்னவித உபாயம்?"

"சிவலிங்கத்தை நிறுத்தி கொட்டகை போட்டு, பிறகு சுற்றுச்சுவர் எழுப்பி, அதற்கு மேல் விமானம் கட்டிவிட்டு கொட்டகையைப் பிரித்து விடலாம். ஆனாலும் இவ்வளவு பெரிய லிங்கம் பிரதிஷ்டை செய்ய எத்தனை அடி ஆழம் அமர வேண்டும். எவ்வளவு சாந்து அரைக்க வேண்டும் என்றெல்லாம் யோசித்தால் மிகப் பிரம்மாண்டமாக இருக்கிறது."

"ஐயா, அதைவிட பிரம்மாண்டம் விமானத்தின் உயர மல்லவா"

"கற்களை ஒன்றின் மீது ஒன்று அடுக்கிக் கொண்டு போவதும், ஆட்கள் வைத்து மேலே இழுப்பதும் பிரம்மாண்டமல்ல. இல்லளவு பெரிய லிங்கத்திற்குச் சாந்து அரைக்க வேண்டும். அந்தப் பொருட்கள் கிடைப்பது மிகக் கடினம்."

"ஐயா, நிறைய குறைகள்தான் சொல்கிறீர்களே தவிர, நிறை ஒன்றும் சொல்லவில்லையே."

"அற்புதம். பல காலம் நிற்கப் போகின்ற விமானம். ஜென்ம ஜென்மமாய் பல மக்கள் இங்கு வந்து இருக்கப் போகிறார்கள். பார்த்து வியக்கப் போகிறார்கள். கண்களில் ஜலம் விட்டு அழப் போகிறார்கள். உலகம் இருக்கும் லரை இந்த அற்புதமான கட்டடமும் இருக்கும். ஆனால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்துவிட்ட பிறகு கருவறை கட்டப் போகிறோமோ - அதற்கு மேல் விமானம் எழுப்பப் போகிறோமோ என்பதுதான் இன்னும் கவலையாக இருக்கிறது. இவ்வளவு பெரிய சிவலிங்கத்திற்கு யார் சாந்து அரைக்கப் போகிறார்கள். எப்படித் தூக்கப் போகிறார்கள். எப்படி உள்ளே நிரப்ப போகிறார்கள். எப்படி அழுத்தப் போகிறார்கள் என்பதும் கவலையாக இருக்கிறது."

"அழுத்துவது என்றால்..."

"சிலலிங்கத்தை உள்ளே இறக்கி சாந்துக்குள் அழுத்தி, பிறகு கற்றிலும் சாந்து பூச வேண்டும். அப்படி விரைவாகப் பூசினால்தான் சிவலிங்கம் இறுகி நிற்கும். இல்லையெனில் வெகு சீக்கிரம் ஆடத் துவங்கிவிடும்.

சிலலிங்கப் பிரதிஷ்டை செய்த பிறகு வெறுமனே விட்டு வைக்க முடியுமா. பிராணப் பிரதிஷ்டையும் செய்ய வேண்டும். பிராணப் பிரதிஷ்டை செய்துவிட்டு, நாம் விமானம் கட்டப் போகிறோம். எனக்கு அது கவலையாகத்தான் இருக்கிறது."

கருவூர்த்தேவர் வந்திருக்கிறார் என்று தெரிந்ததும், சிற்பிகள் தங்கள் இருப்பிடங்களிலிருந்து கிளம்பி முகம் துடைத்துக் கொண்டு, வாயிலிருந்த வெற்றிலைக் குதப்பலை உமிழ்ந்துவிட்டு, வாய் கொப்பளித்துக் கொண்டு, நெற்றியில் திருநீறு இட்டு, இடுப்பில் துண்டு கட்டி, வேகமாக கோயில் கட்டும் இடம் நோக்கி வந்தார்கள்.

உள்ளுக்குள் லந்து, அவருக்குப் பத்தடி தொலைவில் நின்று தலைக்கு மேல் கைகூப்பி, "தென்னாடுடைய சிவனே போற்றி -

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று மிகப் பெருங்குரலில் கோஷமிட்டார்கள்.

அவர் திரும்பி கை உயர்த்தியதும், நெடுஞ்சாண்கிடையாக ஆண்களும் பெண்களுமாய் விழுந்து வணங்கினார்கள். அவர் அருகே வர சைகை செய்ததும், மிக நெருக்கமாய் அவரைச் சுற்றி நின்று கொண்டார்கள். எல்லோரையும் கருவூர்த்தேவர் உற்றுப் பார்த்தார்.

அது வித்தியாசமான பார்வை. உள்ளுக்குள் இருதயத்தை நோண்டி, அங்கிருந்து விஷயத்தை வெளியே எடுத்து வீசுகின்ற பார்வை. உடம்பும், உடம்பைச் சார்ந்த மனதும் எப்படி இருக்கின்றன. புத்தியின் நிதானம் எப்படியிருக்கிறது. கவைத் திறமை எத்தனை ரத்தத்தில் கலந்திருக்கிறது என்று கண்டுபிடிக்கின்ற பார்வை.

அவர் மெல்ல ஒவ்வொரு ஸ்தபதியாகப் பார்த்துக் கொண்டு வந்து பிறகு கூட்டத்தைப் பிளந்து – சற்று மேடான இடத்தில் ஏறி நிற்க, அங்கு சிற்பியைச் சேர்ந்த ஒருவன் ஆசனம் கொண்டு வந்து போட்டான். ஆசனத்தைத் துடைத்து அவரைப் பார்த்துக் கை கூப்பினான்.

அவர் ஆசனத்தில் உட்கார்ந்து, யார் ஆசனம் போட்டானோ அவனுக்கு முதலில் தலையைத் தடவி ஆசிர்வாதம் செய்தார். அவர்கள் உடனே வரிசையானார்கள்.

ஒரு உபதலைவராக இருக்கும் சிற்பி ஒவ்வொருவராக அறிமுகம் செய்து வைக்க, அவர் ஒவ்வொருவர் தலையையும் தடவி முதுகு தொட்டு நெஞ்சிவ் அடித்து ஆசிர்வாதம் செய்தார். பெண்களின் வலக்கையைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டார் சிவருக்குத் தலையில் கை வைத்து ஆசிர்வாதம் செய்தார். சிலர் காதுகளை வருடினார். குழந்தைகளை நிறுத்தி வைத்து உற்றுப் பார்த்தார். இறுகத் தழுவிக் கொண்டார். இளைஞர்களை மார்பில் களீர் களீர் என்று அடித்தார். முடியைப் பிடித்து உலுக்கினார்.

அவர்கள் எல்வோரும் அதைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள். இரண்டு சிறுவர்களைத் தனியே நிறுத்தி தன் பக்கம் வைத்துக் கொண்டார். தன்னைச் சுற்றி வரச் செய்தார். வலக்கால் கட்டை விரலால் அவர்களுடைய வலக்கால் கட்டை விரலை அழுத்தி, தாடையை நிமிர்த்தி, பட்டென்று கன்னத்தில்

அடித்தார். அவர்கள் தடுமாறி தரையில் உட்கார்ந்தார்கள். கண்களை மூடிக்கொண்டார்கள். மெல்ல விழித்து கருவூர்த் தேவரைப் பார்த்தார்கள்.

"எழுந்து வா" என்று கட்டளையிட, அருகே வந்து நின்றார்கள். அவர்களைத் தழுவிக் கொண்டு உச்சி முகர்ந்து ஆசிர்வதித்தார்.

"அற்புதமான ஆட்கள் இருக்கிறார்கள். எனக்கு மிகுந்த சந்தோஷமாக இருக்கிறது. மிக மிக அற்புதமான ஆட்கள் இருக்கிறார்கள். இந்தக் கோயில் இவர்களுடைய கைவண்ணத்தால் வெகு விரைவில் நினைத்ததைவிட எளிதாகவும், வேகமாகவும், உறுதியாகவும் மலரப் போகிறது. இந்தக் கோயில் மட்டுமல்ல; தமிழகம் முழுவதும் பல கற்றளிகள் செய்யக்கூடிய சிற்பிகள் இங்கு இருக்கின்றனர்."

"இவர்கள் இரண்டு பேரையும் தனியாகப் பிரித்து வைத்ததினுடைய காரணம் என்ன?"

"இந்த இரண்டு பேரும் மூலவிக்ரஹங்கள் செதுக்குகிறவர்களாக மாறப் போகிறார்கள். கண் திறக்கின்ற ஸ்தபதிகளாக மலரப் போகிறார்கள். இவர்கள் னகவண்ணத்தில் பல்லாயிரக் கணக்கான வருடங்கள் மக்கள் பார்த்து வணங்குகின்ற தெய்வ விக்ரஹங்கள் உருவாகப் போகின்றன. வடக்கே வெகுதூரம் வரை இவர்கள் புகழும், கைவண்ணமும் பரவப் போகிறது. எனவேதான் இந்த இளைஞர்களைத் தனியே பிரித்தெடுத்து ஆசிர்வாதம் செய்தேன். நல்லது. உங்களுக்கு ஏதேனும் என்னிடம் சொல்ல விருப்பமுண்டா."

அவர் உற்றுப் பார்த்தார். சிற்பிகள் மௌனமாக இருந்தார்கள்.

"இவ்வை என்றுதானே சொல்ல வேண்டும். மௌனமாக இருக்கிறீர்களே, ஏதேனும் குறைகள் உண்டா?"

"எதுவுமில்லை குருதேவா...? மெல்ல மெல்ல வசதிகளை மன்னர் செய்து கொடுத்து விடுவார்."

"வசதிகள் சற்று குறைவாக இருக்கிறதா?"

"ஆமாம். பெண்கள் புழங்க சரியான இடம் இல்லை. கோடைக்காவம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. கத்தரி வெய்யில் வரும்பொழுது ஆற்றில் நீரில்வாமல் போகலாம். இருக்கின்ற ஒரேயொரு கேணியில் எத்தனை பேர் குளிப்பது

என்ற பயம் வந்திருக்கிறது. தஞ்சையில் நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுமோ என்று பயம். மேலும் பத்தாயிரம் ஆட்கள் லெளியூரிலிருந்து லருகிறார்களாம் – இங்கு கூலி லேலை செய்வதற்காக. அவர்களுக்கெல்லாம் தண்ணீர் எப்படி வரும் என்று தெரியவில்லை. சித்திரை மாதத்தில் மழையை எதிர்பார்க்க முடியாதே. அதனால்தான் பல்வேறு கலலைகளோடு நாங்கள் லேலை செய்து கொண்டிருக்கிறோம்.

"கவலைப்படாதே சிற்பியே. மழை வரும்."

"சித்திரை மாதமா மழை வரும் என்கிறீர்கள்."

"ஆமாம். சித்திரை வைகாசி, ஆனி, ஆடி எல்லா மாதங்களிலும் நல்ல மழை இருக்கும். அற்புதமான காரியத்தை மன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேலர் துவங்கியிருக்கிறார். அதற்குக் குந்தகம் நேரும் லண்ணமாய் இயற்கை ஒரு போதும் செயல்படாது. நாளை /– அல்லது நாளை மறுநாள் நல்ல மழை இருக்கும்."

"அடடா... அப்பொழுதும் கலலைதான்."

"என்ன கவலை?"

"ஓலைக் குடிசைகளில் குடியிருக்கிறோம். ஒழுகினால் நீர் அதிகம் வந்து தரை சேறானால், எங்கு படுத்துக் கொள்வது என்று பிரச்கினை வரும்."

"மூன்று நாட்கள் சற்று அனுசரித்துக் கொள்ளுங்கள். மரப்பலகைகள் வாங்கி லைத்துக் கொள்ளுங்கள். அதில் நன்கு உறங்கலாம். பகல் வேளையில் மழை பெய்து, இரவு லேளை குளுமையை ஏற்படுத்தும். அதனால் கவலைப்பட வேண்டாம். நீர் குறைவரக் கிடைக்கும். இது இறைவன் அருள். கவலை வேண்டாம்." என்று சொல்லி நகர்ந்தார்.

அவர்கள் மறுபடியும் தாள் படிந்தார்கள்.

"அந்தப் பக்கம் தேவரடியார்கள் இருக்கிறார்களல்லவா." கருவூர்த்தேவர் அதை நோக்கி நடந்து கொண்டே கேட்டார்.

"ஆமாம்."

"எந்த ஊரிலிருந்து வந்திருக்கிறார்கள்."

"கிட்டத்தட்ட சோழ தேசத்தின் எல்லா ஊர்களிலிருந்தும் இருப்பவர்கள் வந்திருக்கிறார்கள். தொலைதூரம் தொண்டை நாட்டில் இருப்பவர்களும், இந்தப் பக்கம் திருச்சீரபுரத்கில் இருப்ப

வர்களும் வரவில்லை. அவர்கள் விரைவில் வந்து விடுவார்கள் என்று சொல்வப்படுகிறது."

"இவர்களுக்கு மட்டும் நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டிருக்கின்றனவே. வற்புறுத்தல் காரணமா... அல்லது அங்கிருந்து வேலை ஆரம்பித்திருக்கிறீர்களா..."

82

"இல்லை. முதன் முதலில் அங்கிருந்து வேலை ஆரம்பிக்கப்பட்டது. கோயில் கட்டும் இடத்திற்கு நேர் கிழக்கே அவர்கள் குடியிருப்பை லைத்து, அந்தக் குடியிருப்பின் ஈசான்ய மூலையிலிருந்து துவங்கி, மெல்ல மெவ்ல அக்னி மூவைக்குப் போய், ஒரு சதுர வடிவில் கட்டடங்கள் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். முக்கால்வாசி முடிந்துவிட்டது. நடுவே இரண்டு கோடுகளாய் வீடுகள் வரும். அந்த வீடுகளும் முடிந்து விடும். இதை இன்னும் கிழக்குப் பக்கமாகக் கொண்டு போகலே உத்தேசித்திருக்கிறார்கள். புது ஆறு ஓரமாகவே இந்தக் குடியிருப்புகள் இருக்கும் என நினைக்கிறேன்."

"இன்னும் ஏதேனும் குறைகள் உண்டா."

"அதிகம் சொல்கிறார்கள். வீடு உறுதியாக இல்வை என்கிறார்கள். இடிந்து போய்விடும் என்கிறார்கள். மற்ற மக்களைவிட அதிகமாகக் குறைகள் சொல்லுகிறார்கள். உரத்த குரலில் கேலி செய்கிறார்கள். அதட்டலாய்ப் பேககிறார்கள். அடக்கமின்றி ஆர்ப்பாட்டமாய் நடந்து கொள்கிறார்கள்."

"அது அலர்கள் இயவ்பு. அப்படிச் செய்வதற்கு அவர் களுக்கு உரிமை உண்டு. அந்தப் பெண்கள் கேலி செய்தால் பொறுத்துக் கொண்டு போவதே இங்குள்ள ஆண்களின் குணம். அவர்களை அதிகம் லட்சியம் செய்யாது, உண்டான குறைகளை விரைவில் நீக்குவதற்குப் பாருங்கள்."

கருவூர்த்தேவர் உள்ளே நுழைந்ததும், சிற்பக் கூடத்தி லிருந்து கருவூர்த்தேவர் வருகிறார் என்பதைத் தெரிந்து கொண்டு, தவைக்கோலிகள் குடங்களில் நீர் எடுத்து வந்து அவர் முன் எதிர்ப்பட்டு, நின்று புன்முறுவல் பூத்து, குடங்களை அவர் காலுக்குக் கீழே வைத்து, நமஸ்கரித்து, அந்தக் குடத்து நீரால்

அவருடைய கால்களை அலம்பி, அவர் வரும் வழியில் மெல்ல நீர் தெளித்துக் கொண்டு போக, நீர்தெளித்த பாதையில் கருவூர்த்தேவர் நடந்து வந்தார். இரண்டு புறமும் உள்ள வீடுகளைத் திரும்பிப் பார்த்தார்.

"மிக அருமையாகக் கட்டப்பட்டிருக்கிறது. ஏதேனும் குறைகள் உண்டா தலைக்கோலி." என்று கேட்க, அந்தத் தலைக் கோலி அதாவது நாட்டியத்தில் மிகச் சிறந்த பெண் என்று பெயர் வாங்கிய அந்த தேலரடியார் அவரைப் பார்த்துக் கைகூப்பினார்.

"சிலவை இருக்கின்றன. ஆனால் பாராட்டும்படியாக இல்லை. மெல்ல மெல்ல அவைகள் தானாகவே சரியாகிவிடும் என்று நினைக்கிறோம்."

"குறிப்பாக என்ன சொல்கிறாய்?"

"இது பாதுகாப்பாக இல்லை. இது சற்று கலவரத்தை ஏற்படுத்துகிறது."

"யாரிடமிருந்து உங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்?"

"பெண்கள் இருக்கும் இடத்தில் ஆண்கள் எளிதாக வரக் கூடிய நிலைமை இருக்கக் கூடாது. கற்றுச் கலரும், கதவும் இருப்பது நல்லது என்று நாங்கள் நினைக்கிறோம். இல்லாவிடில் எலர் லேண்டுமானாலும் உள்ளே வரலாம் என்பதால், எங்களுடைய தூக்கமும் அல்லது பேச்கம் அல்லது ஆட்டம் பாட்டமும் ஒரு பயத்தோடே இருக்கும். அது நல்லதல்ல என்பது என்னுடைய கருத்து."

"புரிகிறது. வெகு விரைவிலேயே உங்களுக்கு நல்ல பாது காப்பு தரச்சொல்லியும், அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்யவும் நான் மன்னரிடம் சொல்கிறேன். கவனல வேண்டாம். உங்களுக்கருகே மிகச் சரியான மனிதர்களே நிறுத்தி வைக்கப்படுலார்கள். காவலுக்கு அனுப்பப்படுவார்கள்.

நீங்கள் உங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்ற லேலை மிகப் பெரிய வேலை. என்ன என்பது உங்களுக்கு இப்பொழுது புரியாது. பிறகு ஒருநாள் உங்களுக்குப் புரிய வைக்கிறேன்." என்று அலர் கை உயர்த்தி ஆசிர்வாதம் செய்தார். அந்த இடம் நோக்கி யும் விலகி நடந்தார்.

அலருக்கு தேர் கொண்டு வரப்பட்டது. நான்கு சக்கரமுடைய அந்தத் தேரில், இரண்டு குதிரை பூட்டிய தேரில்

அலர் ஏறிக் கொள்ள, அருண்மொழிப் பட்டன் தன் குதிரையில் தாவி உட்கார்ந்து கொண்டான். அவர்கள் இருவரும் தஞ்சை நகரை நோக்கி வேமாகப் போனார்கள்.

தெற்கே மெல்ல கருமேகம் திரண்டது.

அரண்மனை லாசலில் கருவூர்த்தேவரை கிருஷ்ணன் ராமனான பிரம்மராயரும், இராஜராஜப் பெருந்தச்சரும் வரவேற்றார்கள்.

உபசேனாதிபதிகள் வரிசையாய் நின்றார்கள். படை வீரர்கள். அணிலகுத்து நின்றார்கள். எக்காளம் ஊதப்பட்டது. முரசுகள் முழங்கின.

பெண்கள் விளக்குகள் ஏற்றி அலர் முன்பு காட்டிவிட்டு அவரைச் சுற்றிக் கொண்டு போனார்கள். காவிரி நீரை கும்பத்தில் வைத்து, அதன் மீது நெற்றுத் தேங்காயை வைத்து அந்தணர்கள் எடுத்து வந்து, அவர் வரவு நல்வரவு ஆகட்டும் என்றும், அவர் வரவால் இந்த மாளிகையிலும், ஊரிலும் நல்லன நடக்கட்டும் என்றும் பிரார்த்தித்துக் கொண்டார்கள்.

"நீ தேஜஸ்வி. பிரம்ம சொரூபம். கடவுளுடைய அம்சம். உன் இருப்பு உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் ஆனந்தம். நீ வாழ்வாங்கு வாழ வேண்டுமென்று பரமேஸ்வரனைப் பிரார்த் தித்துக் கொள்கிறோம்." என்று ஒரு அந்தணர் கவிதைபோல பாடினார்.

கட்டியக்காரன் உரத்த குரலில், "லயதே தெரியாத, மூப்பே அடையாத, மூன்று காலமும் தெரிந்த, உலகின் சகல திக்கு களிலும், சூட்சுமமாய் பிரயாணம் செய்த சித்தபுருஷரும், ஞானியும், சிலசொரூபமும், தில்லை நடராஜனே வந்து உயிரோடு பிறந்தது போல் உவப்பான தோற்றமும் கொண்ட கருவூர்த்தேலர் ஐயா லருகிறார்," என்று குரல் கொடுத்தான்.

அவர் காலடி எடுத்து லைக்க, மறுபடியும் முரசுகள் முழங்கின. எக்காளம் ஊதப்பட்டது. பெண்கள் குலலை யிட்டார்கள். சோழ வீரர்கள் வாளை உருவி கேடயத்தில் ஓங்கி அடித்து, 'சோழம்... சோழம்... சோழம்' என்று சொன்னார்கள்.

யானைகள் பிளிறின. குதிரைகள் கனைத்தன. பசுமாடுகள் கால் உதறி குரல் கொடுத்தன. கோட்டையிலுள்ள புறாக்கள் சடசடத்து மேலே எழுந்தன.

பஞ்சவன் மாதேவி முன் நின்று வணங்கினாள். கருவூர்த்தேவரைப் பார்த்துக் கைகூப்பினாள்.

கருவூர்த்தேவர் கண்கள் உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரைத் தேடின. இல்லையென்றதும் முகம் சுருங்கியது. என்ன என்பதுபோல பஞ்வன் மாதேவியை நோக்கினார்.

"உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் மாளிகையில் இல்லை. வெகு அவசர வேலையாக வெளியே கிளம்பிப் போயிருக்கிறார். நீங்கள் வருவது அவர் போன பிறகுதான் எங்களுக்குச் சொல்லப்பட்டது. பின்னாலேயே, அவரை மீண்டும் இங்கு வரச்சொல்லி, ஆள் அனுப்பியிருக்கிறேன். அவர் வரும் வரையில் உள்ளே வந்து தங்க வேண்டும். இளைப்பாற வேண்டும்" என்று அழைத்து, நெற்றி நிலம்பட விழுந்து வணங்கினாள்.

அரச குலத்துப் பெண்களும் விழுந்து வணங்கினார்கள். குழந்தைகளைத் தரையில் போட்டார்கள்.

திரும்பி அருண்மொழியைப் பார்த்தார். அருண்மொழியும் திகைத்துப் போய் கிடந்தான். கருவூரார் பிரம்மராயரையும், இராஜராஜப் பெருந்தச்சரையும் ஊடுருவி நோக்கினார்.

அவர்கள் முகம் குறுகி இருந்தது. கருவூர்த்தேவர் மெல்ல மாளினகயின் படியேறினார்.

கருங்கற்களால் உயரமாகவும், அகலமாகவும் கட்டப்பட்ட அந்தக் கோட்டைக்கு நடுவே சுட்ட செங்கலாலும், நன்கு அரைத்த சுண்ணாம்புக் காரையாலும் மாளிகை கட்டப் பட்டிருந்தது.

மூன்று அடுக்கு உயரமான அந்த மாளிகையின் மீது காவல் கோபுரங்கள் இருந்தன. எல்லா கோபுரங்களிலும் ஆட்கள் நின்று கொண்டிருந்தார்கள். மேல் தளத்தில் ஈட்டி. களோடும், வாட்களோடும் வடக்குத் திசையைக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கருவூர்த்தேவர் நுழைந்ததும், கோட்டைக் கதவுகள் அடைக்கப்பட்டு, காவவ் மறுபடியும் கெட்டிப்படுத்தப்பட்டது. லெறும் திட்டி வாசல் மட்டும் திறக்கப்பட்டது.

மாளிகையைச் சுற்றி உள்ள கோட்டையின் பாதைப் பகுதியில் குதிரைகள் வலம் வந்து கொண்டிருந்தன. என்னறக்கும் இல்லாதபடி அன்று மாளிகையின் காவல்

பலப்படுத்தப்பட்டதைக் கருவூர்த்தேவரின் கூர்மையான கண்கள் கவனிப்பதைப் பஞ்சவன் மாதேவியும் கவனித்து விட்டாள்.

"வடக்கே இளவரசர் இராஜேந்திரன் அனுப்பிய பத்தாயிரம் சாளுக்கிய வீரர்கள் திருவொற்றியூரிலிருந்து பதினோரு நாள் பயணம் செய்து, இன்று மாலை அல்லது இரவு தஞ்சையை அடைந்து விடுவார்கள் என்று சொல்லப்படுகிறது.

உற்சாகமாக நடப்பதற்காக அந்த வீரர்கள் வேண்டு கோளின்படி மது கொடுக்கப்பட்டிருக்கிறது. இருபத்தாறு பேருக்குச் சங்கிலியால் கால்கள் பிணைக்கப்பட்டிருக்கின்றன. மற்றபடிக்கு எல்லா வீரர்களும் விடுதலையாகவும், எந்தவிதப் பாதுகாப்பின்றியும் தஞ்சை நகரை நோக்கி உற்சாகமாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

வழியே சிற்சில இடங்களில் கைகலப்பு ஏற்பட்டது. அதற்குச் சாளுக்கிய வீரர்கள் மட்டுமே காரணம் இல்லை. சோழ தேசத்து மக்களும், சாளுக்கிய வீரர்களைக் கண்டால் கல்லாலும், மண்கட்டிகளாலும் அடித்துத் துன்புறுத்துகிறார்கள் என்றும், 'என் தந்தை இறந்ததற்குச் சாளுக்கியன் தானே காரணம்' என்று ஒரு சிறுவன் பாய்ந்து ஒரு வீரன் முகத்தில் அடித்தான் என்றும், அந்தச் சிறுவனுக்குப் பிரம்படி கிடைத்ததென்றும், அதனால் கிராம மக்கள் கோபமாகி எதிர்த்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

சாளுக்கிய வீரர்களை யார் துன்புறுத்தினாலும், அவர் களைப் பிரம்பால் அடிக்கும்படி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் கட்டளையிட்டிருக்கிறார். எனவே, என் தந்தை இறந்த தற்கு நீதானே காரணம் என்று எவன் மீதோ ஒரு இளைஞன் பாய்ந்ததை வெறுமனே விட்டு விடலாகாது என்று – அங்கேயே பிரம்படி தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இம்மாதிரியான சிவ நிகழ்ச்சிகள் தவிர, அந்தப் பத்தா யிரம் வீரர்களும் ஊர்வலமாக தஞ்சையை நோக்கி எந்தவித சிரமமும் இன்றி நடந்து வருகிறார்கள். அவர்கள் வருவதற்கு முன்னேற்பாடாகத்தான் கோட்டைக்காவல் பலப்படுத்தப் பட்டிருக்கிறது."

"எல்லாம் சரி. உங்கள் வரை காலல் பலப்படுத்தியது சந்தோஷம். ஆனால் அவர்களை எங்கே தங்க வைக்கப் போகிறீர்கள்?"

கருவூர்த்தேவர் பஞ்சவன் மாதேவியைக் கேட்டார்.

"வெட்ட வெளியில்தான்."

"ஏன். எதற்காக பத்தாயிரம் வீரர்களை வெட்டவெளியில் தங்க வைக்க வேண்டும்?"

"எதற்காக அவர்களுக்கு வீடு கொடுக்க வேண்டும் என்று மன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் கேள்வி கேட்டார்."

"மன்னரே கேட்டாரா?"

"ஆமாம். கூரை எழுப்பட்டுமா என்று சேனாபதியான பிரம்மராயர் கேட்டபோது, எதற்காக என்று மன்னர் வினவினார். வீரர்கள் தங்குவதற்காக என்று சொன்னபோது, 'இல்லை. சாளுக்கிய வீரர்கள் வெட்ட வெளியில் தங்கட்டும். அவசியமானால் மரத்தடியில் தூங்கட்டும். மண்ணில் தூங்கவும் தலைக்குச் செங்கல் வைத்துக் கொள்ளவும், வெட்டவெளியில் புழங்கவுமே அவர்கள் விரும்புவார்கள். அவர்களைக் கூரைக்குள் அடைத்து வைப்பது அவர்களுக்கும் நல்வதல்ல. நமக்கும் நல்லதல்ல' என்று மன்னர் சொல்லிவிட்டதாகத் தெரிகிறது. விலங்குகள் மாட்டப்பட்டவர்கள் மட்டுமே தனியாக ஒரு திறந்தவெளி கொட்டடியில் அடைக்கப்படுவார்கள். மற்றவர்கள் இப்பொழுது கோயில் கட்டப்பட இருக்கும் நிலத்திற்கு மேற்குப்புறம் தங்க வைக்கப்படப் போகிறார்கள். அதிலிருந்து ஆயிரம் வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்னும் தெற்கே பாறைகளைத் தோண்டுவதற்காக அனுப்பப்படப் போகிறார்கள். திருவக்கரையில் இருநூற்றைம்பது வீரர்கள் தங்க வைக்கப்பட்டு விட்டார்கள். அங்கிருந்து பாறைகளை உடைத்து வண்டியில் ஏற்றி வருவதற்கும் அவர்கள் பழக்கப்படுத்தப்படப் போகிறார்கள். கிட்டத்தட்ட எண்ணாயிரம் வீரர்கள் கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் வேலை பார்ப்பார்கள்."

"எண்ணாயிரம் பேருக்கு வேலை இருக்குமா?"

"இருக்காது."

"அப்பொழுது குழப்பம் உண்டாகுமே."

"இல்லை. என்ன செய்வதென்பது அவர்கள் வந்தபிறகு தீர்மானிக்கப்படும். அவர்களில் சிலர் வயல் வேலைக்கும், கட்டட வேலைக்கும், கால்வாயைத் தூர் எடுத்து பக்கக் கரைகளைக் கட்டுகின்ற வேலைக்கும் அனுப்பப்படுவார்கள்.

ஆனால் கோட்டைக்குள்ளோ, அரண்மனைக்குள்ளோ எவரும் நுழைய அனுமதி தரக்கூடாது என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் இன்று காலை வந்தியத்தேவரின் ஆளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே ஒரு பாண்டிய வீரனுக்கு மட்டுமே கோட்டைக்குள் நுழையும் அதிகாரமும், இரும்புக் கேயூரமும் தரப்பட்டன. மன்னர் உடையார் ஸ்ரீ இராஜ ராஜத்தேவர் அவனை நேரே பார்த்து அனுமதி கொடுத்தார்."

"எதனால் அவனுக்கு அப்படியொரு வாய்ப்பு."

"சோழ தேசத்துக் கலாசாரத்தைப் பாண்டிய தேசத்திற்கு எடுத்துப் போக வேண்டும். இதற்காகவே நான் மன்னரையும், சோழ தேசத்தையும், சோழ தேசத்துக் கோயில்களையும் பார்க்க விரும்புகிறேன் என்று அவன் சொன்னான்."

"அவன் சொன்னால் நம்பிவிடுவதா."

"இல்லை. அவன் மனம் திறந்து பேகவதற்குண்டான மருந்து கொடுக்கப்பட்டது. மருந்து கொடுத்த பின்னும் அவன் அப்படியேதான் உளறினான். எனவே அவனுக்குத் தனித்த அதிகாரங்களும் தரப்பட்டிருக்கின்றன. அவன் ஒருவனைத் தவிர வேறு எவருக்கும் அப்படிப்பட்ட அதிகாரம் தரப்பட வில்லை. எனவே, வீரர்கள் வந்து சேர்ந்ததும் கோயில் வேலையை வெகு துரிதமாக ஆரம்பித்துவிட மன்னர் எண்ணி யிருக்கிறார்."

"மன்னர் எங்கே?"

பஞ்சலன்மாதேவி மௌனமாய் பிரம்மராயரைப் பார்த்தாள். பிரம்மராயர் அருகே வந்து கைகட்டிக் கொண்டார். கருவூர்த்தேவரும் பிரம்மராயருக்கு காது கொடுத்தார். பிரம்மராயரின் உதடுகள் மெல்ல முணுமுணுத்தன.

"மாறுவேடத்தில் பத்தாயிரம் வீரர்களையும் பார்ப்பதற் காக அவர் வடக்கே போயிருக்கிறார். பழையாறை தாண்டி அவர்கள் வந்ததும், ஒரு சிறிய கிராமத்திலே குத்திட்டு உட்கார்ந்து சகலரையும் பார்த்து - பிறகு அவர்களைத் தாண்டிக் கொண்டு, தஞ்சையின் எவ்லையான கருத்தாட்டாங்குடியில் அவர்களுக்குள் புகுந்து, அவர்களோடு நடந்து இங்கே லந்து சேருவார். அவர்கள் தங்க வைக்கப்படும் இடத்தில் ஓரிரு நாள் அவர்களோடு தங்குவார் என்று சொல்லப்படுகிறது."

"இது மன்னருக்கு நல்லதல்லவே. இம்மாதிரி ஊடுருவி அவர்களோடு வர இங்கே ஒற்றர்கள் இல்லாது போனார்களா உங்கள் ஒற்றர்படை தூங்கிக் கொண்டிருக்கிறதா. ஏன் மன்னரை இப்படிப்பட்ட ஒரு வேலைக்கு அனுப்பியிருக்கிறீர்கள்."

"எவ்வளவோ எடுத்துச் சொல்லிப் பார்த்தேன். இது என் வேலை. நேரடியாய் எனக்கு அவர்களின் மனம் பற்றித் தெரியா விட்டால், அவர்களுடைய இருப்பு பற்றித் தெரியாவிட்டால் கோயில் வேலை குந்தகமடையும். உங்கள் பேச்சை நான் இங்கு நம்பத் தயாராக இல்லை. உங்கள் ஒற்றர் படையின் தகவல்கள் எக்கு முன்னும் பின்னும் முரணாக இருக்கின்றன என்று கோபித்துக் கொண்டார்."

83

கருவூர்த்தேவர் நல்ல உயரம். அழுத்தமான உடற்கட்டு. நரைத்த தாடி. நீண்ட லெள்ளை கிகையை உச்சியில் முடிந் திருக்க, கழுத்துக்குக் கீழே சில சடை முடிகள் தென்பட்டன. விபூதி மணத்தது. ஆனால் பேச்சில் ஒரு கோபம் இருந்தது.

"ஏன் உங்களைக் குறை கண்டுபிடிக்கும்படி விட்டு விட்டீர்கள். ஒற்றர்படை முன்னும் பின்னும் தகவல் தருலது புதிதல்லவே. அவரவருக்கு என்ன அனுமானம் தோன்றுகிறதோ அதை வெளியே சொல்லும்போது எதிரும், புதிருமாக சில சமயம் அனுமானங்கள் வந்துவிடும். இதற்காக தானே போர்கிறேன் என்று மன்னன் சொல்வது தவறு. பஞ்சவன் மாதேவியாலும் தடுத்து நிறுத்த முடியவில்லையே."

"பஞ்சவன் மாதேவிக்குச் சொல்லப்படவேயில்லை."

"நல்லது. சோழர்குல குடும்பம் மிக அழகாக இருக்கிறது. யார் எங்கே போகிறார்கள். என்ன செய்கிறார்கள் என்று எவருக்கும் தெரியவில்லை. இது அல்லாது பாண்டிய தேசத்து ஒற்றர்படை ஆளையும் இங்கே விட்டு விட்டீர்கள். அவன் ஒற்றர் படை ஆள் என்று எப்படி உங்களுக்குத் தெரிந்தது?"

"இல்லையெனில் எவனால் இத்தனை சாமர்த்தியமாக உள்ளே நுழைந்திருக்க முடியும்? சோழர் கலாசாரத்தை பாண்டிய தேசத்திற்குச் சொல்லப் போகிறேன் என்று எந்த

சாதாரண படைவீரனாலது சொல்வானா? அவன் உபதளபதி அளவிற்குத் தகுதி பெற்றவனாக இருப்பான். உபதளபதி அளவிற்குத் தகுதி பெற்று அவன் இன்னமும் சோழ தேசத்தில் இருக்கிறான் என்றால் அவர் போர் வீரனாக இருக்க முடியாது. உயிரோடு இருந்தால் அவன் தப்பித்து பாண்டி தேசத்திற்கு ஓடியிருப்பான். சேர தேசத்தில் பதுங்கியிருப்பான். இல்லை யெனில் செத்து மடிந்திருப்பான். உயிரோடு உங்களோடு நடந்து வருகிறான் என்றால் அவன் ஒற்றர்படையைச் சேர்ந்தவனாகத் தான் இருக்க வேண்டுமென்று எளிதில் எவரும் அனுமானிக்க லாம்."

பிரம்மராயர் கவலையோடும், பயத்தோடும் கருவூர்த் தேவரை உற்று நோக்கினார்.

"உங்களுக்கு வயதாகிவிட்டது பிரம்மராயரே. முன்புபோல வேகமாகவும், நேர்த்தியாகவும் வேலை செய்யும் திறன் உங்களுக்குக் குறைந்து விட்டது. நீங்கள் வெகு சீக்கிரம் ஓய்வு பெற்று அருண்மொழியை அந்த இடத்திற்குத் தயார் செய்துவிட வேண்டும்.

அருண்மொழி, அப்பாவிடம் இது பற்றிப் பேக. இவரால் சோழ அரசியலில் சிக்கல் வரவேண்டாம். இவருக்கு வயதாகிவிட்டதென்று நான் சொன்னால் இவருக்குக் கோபம் வரும். நீ சொன்னால் ஒரு வேளை கேட்கக்கூடும். எனவே, அவருக்குச் சில வார்த்தைகள் சொல்லி ஓய்வெடுக்கச் சொல். எனக்கு உண்ண உணவும், குடிக்க நீரும் கொடுங்கள்." என்று சொல்ல, பஞ்சவன் மாதேவி கைதட்டினாள். சேடிகள் ஓடி வந்தார்கள்.

பஞ்சலன்மாதேவி மறுபடியும் அவரைப் பணிந்து உள்ளே வரும்படி அழைத்தாள். அவர் பஞ்சவன் மாதேவியைத் தொடர்ந்து நடந்து போனார்.

அப்பாவும், பிள்ளையும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பிள்ளையைப் பார்த்து பிரம்மராயர் நீண்ட மூச்சு விட்டார்.

"அப்பா நமஸ்கரிக்கிறேன்." என்று அவன் கைகூப்ப, "வேண்டாம்." என்று பிரம்மராயர் வேகமாகத் தடுத்தார்.

"ஏனப்பா என் மீது கோபமா?"

"இல்லை."

- "உன்னிடம் நல்ல தகுதிகள் இருக்கிறதென்று என்னனவிட வல்லவர் ஒருவர் சொல்லியிருக்கிறார்."

"யாரப்பா. யார் உங்களிடம் சொன்னது."

"இப்பொழுது இங்கே கருவூர்த்தேவர் சொல்லியிருக்கிறார். எனக்குச் சில விஷயங்கள் தெரியாது. எனவே அருண்மொழியை வைத்துக் கொண்டு சொல் என்று என்னைவிட உன்னை அதிக மாகப் போற்றிப் பாராட்டியிருக்கிறார். போற்றிப் பாராட்டும் நிலையில் இருக்கின்ற நீ, என் காலில் விழுந்து வணங்க வேண்டிய அவசியமென்ன. எனவே அடுத்து என்ன நடக்க வேண்டும் என்பது பற்றி ஆலோசிப்போம்."

"அப்பா, அவர் பேச்சுக்காக என் மீது கோபித்துக் கொண் டிருக்கிறீர்கள். நமஸ்கரிக்க வேண்டாம் என்று சொல்கிறீர்கள்."

"சரி. நமஸ்காரம் செய். எனக்கு இதில் எந்த ஆட்சே பணையும் இல்லை." என்று சொல்ல, அருண்மொழிப் பட்டன் தகப்பனார் காலில் விழுந்து நமஸ்கரித்தான். காது மடல்களில் கை வைத்துக் கொண்டான். தன் குலம், கோத்திரம் எல்லாம் சொன்னான்.

அப்பா அந்தப் பணிவில் நெகிழ்ந்து போனார். அவனை நிமிர்த்தி தழுவிக் கொண்டார்.

"சற்று பொறாமையாக இருந்தாலும் உன் தகுதி மெல்ல மெல்ல லளர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்துச் சந்தோஷமாக இருக்கிறது. உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் உன்னைப் பாராட்டினால் எனக்குப் பொறாமையில்லை. கருவூர்த்தேவர் பாராட்டினால் உள்ளுக்குள்ளே சற்று கடுப்பாகத்தான் இருக்கிறது. ஏனெனில், சரியான ஆளைத் தவிர வேறு எவரையும் கருவூர்த்தேவர் பாராட்டி நான் பார்த்ததேயில்லை."

"ஏன்?"

"உண்மையில் என்னைக் கருவூர்த்தேலர் பாராட்டியதே யில்லை." அப்பாவும் பிள்ளையும் பேசிக் கொண்டே நகரக் காலலைப் பார்வையிட்டார்கள். கருவூரார் வந்துவிட்டார் என்பதாலேயே காவல் பற்றி கவலையானார்கள்.

தஞ்சை நகர் காவல் அதிகாரிகளும் சோழப்படையின் பல்வேறு பிரிவினரும் கடந்த இருநூறு வருடங்களாகப் போர் களில் ஈடுபட்டது மட்டுமல்லாமல், போர்களைத் திறம்படச்

செய்வது மட்டுமில்லாமல், தேசத்தின் காவலை செவ்வனே நடத்துவதற்குப் பழக்கப்பட்டிருந்தார்கள்.

பரம்பரை பரம்பரையாய் காவல் செய்து வந்ததால், கையில் வாளேந்தி போரிட்டு லந்ததால் அந்த மறவர் கூட்டத் திற்கு அடுத்தடுத்து என்ன செய்ய வேண்டுமென்று அவர்கள் முன்னோராலேயே சொல்லி வைக்கப்பட்டிருந்தது.

தினசரி வாழ்க்கையிவ் போர் வீரருக்கு உரிய ஒரு ஒழுக்கமும், திடமும், திறமையும் சகலரிடமும் இருந்தன. தேசம் பற்றிய ஒரு பிடிப்பு, பெருமை, ஆர்லம் எல்லோருக்கும் இருந்தது.

தங்களால்தான் சோழ தேசம் மிக உச்சமான ஒரு நிலையை அடைந்திருக்கிறதென்றும், இன்று மகத்தான பணி களைச் சோழதேசம் மேற்கொண்டிருக்கிறதென்றால் - ஆறு, ஏழு தலைமுறைக்கு முன்பு வாளேந்தி போருக்குப் போன மறவர் களுடைய ஆட்கள் தான் காரணம் என்றும் அலர்கள் புரிந்து வைத்திருந்தார்கள். முன்னோர்களை விட இன்னும் சிறப்பாகச் செயல்பட லேண்டும்; அடுத்த தலைமுறையை இன்னும் பலமாக வளர்க்க லேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்தார்கள்.

எந்நேரமும் தேசம் பற்றியும், தேசப் பாதுகாப்பு பற்றியும், போர் பற்றியும், போர் முறைகள் பற்றியும், உடம்பு வலிவு பற்றியும், உள்ளத் திண்மை பற்றியுமே அவர்கள் பேசினார்கள்.

சோழ தேசத்து வீரர்கள் எவ்லோரும் இறுக்கமாய் வேட்டி கட்டி, இடுப்பில் துண்டு போட்டு இறுக்கி, மார்பில் தோள் கலசமோ, சங்கிலிக் கவசமோ அணிந்து, தலைப்பாகை கட்டி, புஜங்களிவ் கேயூரம் அணிந்து, நெற்றியில் திருநீறு இட்டு, இடது கையில் கேடயமும், லலது கையில் வாளோ, ஈட்டியோ தரித்து, காலில் தோலாலான பாதரட்சை அணிந்து, அந்தப் பாத ரட்சையின் பிணைப்பு வாரை முழுங்காவ் வரை சுற்றி, கீழே விழுந்தால் முழுங்காலில் அடிபடாமல் இருக்க அங்கும் தடித்த எருமைத் தோல் சுற்றி, கையுறைகள் அணிந்து, வெகுதூரம் நாடு கடந்து பல்வேறு தேசங்களுக்குப் போய் படையெடுத்து, கோட்டை தாக்கிக் கொள்ளையடித்து - பெண்டிரும், பண்டங் களுமாய் ஊருக்குத் திரும்பியவர்கள்.

இப்படியொரு கூட்டம் போயிற்றென்றால் இன்னொரு கூட்டம், படை ஒன்று நகரத்தைவிட்டு நகர்ந்ததுமே கோட்டைக் காவலையும், நகரத்துக் காவலையும் கெட்டிப்படுத்திவிடும்.

ஒரு ஈ... எறும்பு அசைந்தாலும் என்ன என்று விசாரிக்கும். அண்ணியர் உள்ளே நுழைந்தால், உடனே பிடித்து கொட்டடியில் சில நாள் தங்க வைத்து, அவர்களின் நடவடிக்கைகளைக் கவனித்து பிறகே வெளியே விடப்படுவார்கள். சந்தேகம் இருந்தால் அடித்துத் துரத்தி விடுவார்கள். இல்லையென்றால் கூசாமல் கத்தியை நெஞ்சில் இறக்கி விடுவார்கள்.

ஆனால், எதிரி தேசத்துப் படை வீரர்கள் பத்தாயிரத் திற்கும் மேற்பட்டோர் சோழ தேசத்திற்குள் காலடி வைத்து, தஞ்சை நகருக்குள் புகுந்து, அங்கே தங்கப் போகின்ற ஒரு சம்பவம் இந்தப் போர் வீரர்களுக்குப் புதிதாக இருந்தது. இதை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்று கவலையாக இருந்தது. என்னை ஏற்பாடுகள் செய்து வைத்திருக்க வேண்டும் என்று புரியாமல் இருந்தது.

அந்தச் சாளுக்கிய வீரர்கள் எகிறிப் பேசினால் அடிப்பதா அல்லது அன்பாகப் பேசுவதா? இது எங்களுடைய ஊர். எங்களுடைய தேசம். எங்களுடைய தலைநகரம். உங்கள் வரவு நல்வரவாகுக என்று வரவேற்பதா. நாயே... வந்து கல்லைத் தூக்கு என்று கட்டளையிடுவதா. கேணியிலிருந்து நீர் இறைத்துத் தலைக்கு ஊற்று. வீடு பெருக்கி வை. ஓடுகள் மாற்று என்று கூலிக்கு ஆளை அமைத்துக் கொள்வதா.

பத்தாயிரம் வீரர்களும் ஒன்று சேர்ந்து இரவோடு இரவாக எங்கேனும் ஆயுதங்களைத் திருடிக்கொண்டு சட்டென்று வீடு புகுந்து தாக்கினால் குதிரைக் கொட்டகையை, யானைக் கொட்டகையை உடைத்து உள்ளே போய் அவைகளில் ஏறிக் கொண்டு போருக்குத் தயாரானால் என்ன செய்வது?

இப்படியொரு விஷயம் சோழ தேசத்தில் நடந்ததே இல்லையே என்று உள்ளுக்குள் பதறினார்கள். இடையறாது அது பற்றியே சிந்தித்தார்கள். பேசிக் கொண்டார்கள்.

"கூடுதலாக சவுக்குகள் தேவைப்படுமோ." என்று ஒருவன் கேட்க, சிவ பேர் வேண்டாம் என்று வேகமாகத் தலையசைத் தார்கள்.

"ஏன் வேண்டாமென்று சொல்கிறீர்கள். சாளுக்கிய வீரர் களைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா. நீங்கள் அவர்களிடம் அடி வாங்கியதில்லையா. அடிவாங்கிய கனதகள் உங்களுக்குச் சொல்லப்பட்டதில்லையா. மிருக வெறிகொண்ட சாளுக்கியர்

களிடம் சோழ வீரர்கள் எத்தனை முறை மாட்டிக்கொண்டு, எத்தனை விதமான சித்ரலதைகள் பட்டிருக்கிறார்கள். சுந்தர சோழர் காலத்திலிருந்துதானே நாம் சரியாகத் தலையெடுக்க ஆரம்பித்திருக்கிறோம். பாண்டியர்களுடைய துரோகமும், நரித்தனமும் நமக்குப் புதிதில்லையே. இதில் திமிர் பிடித்த சேரப் படை வீரர்களும் இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம்.

எத்தனை நாள் முற்றுகை. எவ்வளவு நாள் போர். ஊர் முழுவதும் இடையறாது தீப்பந்தங்கள் வீசி எரித்த பிறகல்லவா அந்தச் சேரன் அடங்கினான். ஒரு நகரத்தையே எரியூட்டி உள்ளே புகுந்து சகலரையும் அடித்துத் தாக்கிய போதல்லவா அடிப்பணிந்தான். எனவே, வருகின்ற இந்த மூன்று குழுவினரும் உன்மத்தம் பிடித்தவர்கள். சவுக்கு இல்லாமல் பணிய மாட்டார்கள். நான் எழுதித் தருகிறேன்." என்று ஒருவன் கர்ஜனையாகப் பேச, மற்றவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

நகரத்தின் எல்லையில் நெருக்கமாய் குடிசைகள் போட்டு, குடிசைகளுக்கு நடுவே பெரிய பந்தல் போட்டு, வீடுகள் அமைத்துக் குடியிருந்த அந்த வீரர்களுக்கு நடுவே தோளில் சிறிய மூட்டையும், கையில் குத்தீட்டியுமாய் ஒரு வீரன் வந்து சேர்ந்தான்.

அலனுக்கு இருபது இருபத்தியிரண்டு வயதிருக்கும்.

"யாரப்பா நீ. எங்கிருந்து வருகிறாய்?"

"எனக்கு ஊர் திருக்குடந்தை. தஞ்சை நகருக்குப் போய் சில வேலைகள் முடித்துவிட்டு மறுபடியும் குடந்தைக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்."

"போர் வீரனா?"

"இல்லை. ஆனால் போர்ப் பயிற்சியும் உண்டு."

"என்ன தொழில் உனக்கு?"

"நான் சிற்பி. ஆனால் ஓவியம் வரையும் பணியே எனக்கு இப்பொழுது தரப்பட்டிருக்கிறது."

"வா. வா உட்கார். ஓவியம் வரைகிற ஆளா. ஆயிரக் கணக்கில் ஓவியம் வரைந்து வைத்திருக்கிறீர்களாமே... கோயில் மிகப் பிரம்மாண்டமாக எழும்பப் போகிறதாமே. தாகத்திற்கு ஏதேனும் சாப்பிடுகிறாயா."

"கொடுங்கள். நீர் மோர் இருக்குமா." என்று அந்த இளைஞன் கேட்க, ஒரு வீரன் வேகமாகத் தட்டுப் பந்தலுக்குப் போனான்.

அங்கு பாத்திரங்களில் உணவு வகைகள் வைக்கப் பட்டிருந்தன. ஒரு பெரிய பானையைத் திறந்து, அதிலிருந்து ஒரு சொம்பு நீர்மோர் கொண்டு சுத்தமாகத் துடைத்தபடி அந்த இளைஞனுக்கு அருகே லந்தான். வைத்தான்.

இளைஞன் அதை வாங்கிக் குடிக்க, சற்று விலகியிருந்த வீரர்களும் ஒன்றாக அமர்ந்து கொண்டார்கள். கிட்டத்தட்ட ஐம்பது அறுபது வீரர்கள் அவனைச் சுற்றி நின்றும், உட்கார்ந்தும் இருக்க அவன் நீர்மோர் குடித்து விட்டு நன்றி சொன்னான்.

"ஓவியம் வரைவதென்றால் எப்படி. எங்கு பயிற்சி பெற்றாய்?"

ஒரு முதிய போர்வீரர் ஆவலுடன் கேட்டார். போர் தவிர அவருக்கு வேறு எதுவும் தெரியாது என்பதால், எது குறித்தும் அவருக்கு ஒரு ஆச்சரியம் இருந்தது.

"என் தந்தை ஓவியம் வரைபவர். தாயும் ஓவியம் வரைபவள். எங்களுக்கெல்லாம் சிற்பிகளுக்கான ஓவியம் வனரயும் பயிற்சி ஐந்து வயதிலிருந்தே தரப்படுகிறது."

"இதோ... இந்தத் தரையில் ஏதாவது ஓவியம் வரைவாயா."

"ஆஹா... வரையலாமே..."

அவன் மெல்லிய குச்சியை எடுத்து சற்று உலர்ந்திருந்த அந்த இடத்தில் ஒரு அன்னப்பட்சியை வரைந்தான்.

வீரர்கள் எட்டிப் பார்த்துக் கை கொட்டினார்கள்.

"ஒரு யானை போடப்பா பார்க்கலாம்." – அந்தக் கிழவன் சொல்ல, சற்றுத் திரும்பி லேகமாக ஒரு யானை படம் போட்டான்.

·எல்லோரும் கூர்ந்து கவனித்தார்கள்.

"யானைபோல இல்லையே... ஏதோ மனிதத் தலை போலவ்லவா போட்டிருக்கிறாய்."

"உற்றுப் பாருங்கள். யானையினுடைய பின்பக்கம்."

"அடேயப்பா இப்பொழுது புரிகிறது." – கைகொட்டிச் சிரித்தார்கள்.

"யானைக்கு அருகே குதிரையையும் போட்டுவிடு. அதுதானே வட்சணம்." என்று சொல்வ, அவன் நேராக பக்க வாட்டில் மிக உயர்ந்த ஜாதிக்குதிரை ஒன்று வரைய...

"அடடா... இது உயிர்பெற்று எழுந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். இப்படி ஒரு குதிரை வேண்டுமென்று வெகு நாளாக நினைத்துக் கொண்டிருக்கிறேன்." என்று வேறொரு வீரன் சொல்ல, அடுத்த பக்கமே ஓயிலாய் நிற்கின்ற ஒரு பெண் படம் போடப்பட்டது. கையில் மதுக்குடம் போவ அவள் ஒன்றை ஏந்தியிருக்க, வீரர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"இதுவும் உயிரோடு எழுந்தால் நன்றாக இருக்குமே. இப்படியொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று எத்தனை நாள் காத்திருந்தேன்."

"ஏற்கெனவே மூன்று முடிந்து விட்டது. இப்பொழுது நான்காவது ஒன்று உயிரோடு வரவேண்டுமா." என்று சொன்னவனை இன்னொருவன் கேலி செய்ய, மறுபடியும் சிரிப்பலைகள் எழுந்தன.

அவர்கள் எவ்வோரும் ஓவியம் வரைவதை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்க, அந்த இடத்திற்குச் சற்று வயதான, நரைத்துத் தளர்ந்த அதிகம் நடக்க முடியாதபடியான ஒரு கிழவர் வந்தார்.

அங்குள்ள மேடையில் அமர்ந்து கொண்டார். அவரைத் திரும்பிப் பார்த்து ஒரு வீரன் என்னவென்று கேட்க, புவவர் என்று சொன்னார்.

அவன் கைகூப்பினான்.

84

அந்தப் புவவரின் முகத்திவ் அறிவுக்களை படர்ந்து, கண் களிவ் கூர்மை மிகுந்து, உதட்டோரம் அலட்சியப் புன்னகையும் நிறைந்திருந்தது.

தாகத்திற்கு ஏதேனும் வேண்டுமா என்று ஒரு வீரன் கேட்க, நீர் என்று சொல்ல, அவருக்கு மோரும், நீரும் தரப் பட்டது.

அவன் மடியிலிருந்து பனை வெவ்லம் எடுத்து அவரிடம் நீட்ட, அந்தப் பனைவெவ்லத்தையும் அவர் நன்றியோடு வாங்கிக் கொண்டார். மெவ்ல அந்த வீரனனப் பார்த்துச் சிரித்தார்.

வீரன் மறுபடியும் ஓடிப்போய் உரத்து எழுந்த சிரிப்பலை களுக்கு என்ன காரணம் என்று விசாரிக்கப் போனான்.

இந்த முறை ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டிருக்கிற சித்திரம் வரைய, அங்கு உற்சாகம் கரை புரண்டது. அந்தக் கிழவர் சுற்றும் முற்றும் பார்த்தார்.

படைக் கவன்கள் ஒரு ஓரமாகக் குவிக்கப்பட்டிருந்தன. நிறைய ஈட்டிகள் சாய்க்கப்பட்டிருந்தன. அந்தப் பாடி வீட்டின் வாசலுக்கு ஒருவர்கூட காவல் இல்லை. ஒரேயொரு வீரன் மட்டும் உயரமான ஒரு பரணிவ் அமர்ந்து பாட்டுப் பாடிக் கொண்டிருந்தான். இவர்கள் எதற்காகச் சிரிக்கிறார்கள் என்று அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அங்கு காவல் என்பது பலமாக இல்லை. வெறும் ஒரு விளையாட்டாக, ஏதோ இருக்க வேண்டுமே என்பதற்காக இருப்பது என்பது புரிந்து போயிற்று.

தூரத்தில் ஒரு எக்காளச் சத்தம் கேட்டது. பரணிவ் நின்றவன் எழுந்து நின்று னக தூக்கிப் பார்த்தான். புழுதிப் படவம் தெரிந்திருக்க வேண்டும்.

அங்கிருந்து உரக்கக் கத்தி, "புழுதிப்படலம் தெரிகிறது. குதிரைப் படை வருகிறது என்று நினைக்கிறேன்." என்று சொல்ல, இன்னொரு வீரன் தொலைவில் போய் பார்த்து விட்டு, "ஆமாம் வருவதற்கு கால் நாழிகை ஆகும்… என்று சொல்ல, அவர்கள் மறுபடியும் அந்த சித்திக்காரனைப் படம் போடச் சொன்னார்கள்.

"எப்போதோ ஒருமுறை வருகிறீர்களப்பா. வந்து மகிழ்வாக சில விஷயங்கள் செய்யக்கூடாதா?"

சரி சொவ்லுங்கள். என்ன படம் போட வேண்டும்?"

"அதேதான். நிற்கும் வண்ணம் இல்லாமவ் படுக்கும் வண்ணமாக ஒரு படம் போடேன்." என்று இன்னொரு கிழவன் சொல்ல, மற்றவர்கள் தொடைதட்டி ரசித்தார்கள்.

இப்பொழுது இன்னொரு படம் போடப்பட்டது. அதில் ஆணும், பெண்ணும் படுத்துக் கொண்டிந்தார்கள்.

கூட்டம் வெறியாய்க் கத்தியது.

"அடேய்... உனக்கு இருபது வயதுதான் இருக்கும் போலிருக்கிறது. இப்படிப் படம் வரைய வேண்டுமென்றால் எத்தனை பார்த்திருக்க வேண்டும்." என்று சொல்ல, "இல்லை. இது சொல்லித் தரப்பட்டது." என்றான் ஓவியன்.

"யார். உன் தாயார் சொல்லிக் கொடுத்தார்களா? அவளும் ஓவியம் வரைவாள் என்று சொல்கிறாயே." என்று ஒருவன் கேட்க, கேட்டவனின் முதுகில் ஓங்கி அறைந்து ஒருவன் சிரிக்க, மறுபடியும் சிரிப்பலைகள் தெறித்தன.

"எங்களுக்குப் பெண் உடம்போ, ஆண் உடம்போ வரைவதில் எந்தக் கூச்சமும் இல்லை. கூச்சப்படவும் கூடாது. கூச்சப்பட்டால் ஓவியம் வராது. ஆணின், பெண்ணின் பல்வேறு விதமான அசைவுகளை, தோற்றங்களை வரைவது எங்களுக்குப் பழக்கம். இம்மாதிரிப் படங்களை என் தாயும் வரைவாள். நானும் வரைவேன். ஆனால் உங்களைப் போன்றவர்களிடம் காட்டிக் கொண்டிருக்க மாட்டோம். ஏதோ வெறுமனே பல் குத்திக் கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்களே என்பதற்காகத்தான் இம்மாதிரிப் படங்களை ஒரு சந்தோஷத்திற்காக வரைந்தேன்," என்று ஓவியன் சிரித்தான்.

"யாரடா பல் குத்திக் கொண்டு உட்கார்ந்திருப்பது. இந்தச் சோழ வீரர்கள் இல்லையென்றால் சோழ தேசமே இல்லை. தெரியுமா உனக்கு."

"இது வெறும் திமிர்ப் பேச்க. எப்பொழுதோ யாரோ ஜெயித்துக் கொடுத்து விட்டார்கள். இங்கே நீங்கள் கோட்டைக் காவலுக்காக உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்களே போய் சாளுக்கிய தேசம் முழுவதும் கைப்பற்றியதாகச் சொல்வது வெறும் இறுமாப்பு."

"அடேய்... நான் சாளுக்கிய தேசம் போய் திரும்பி வந்தவன்."

"எப்பொழுது போனீர்கள். எப்பொழுது வந்தீர்கள். அந்தக் கதை பத்து வருடமாகி விட்டதல்லவா. இப்பொழுது நீங்கள் வெறும் கோட்டைக் காவல்தானே. அந்த வேலையையும் ஒழுங்காகச் செய்வதில்லையே. போரில் உங்களுக்குத் திறமை யில்லை என்றுதானே கோட்டைக் காவலில் போட்டு விட்டார்கள். இங்கு இருக்கிற அத்தனை பேரும் இரண்டாந்தரப்

போர் வீரர்கள்தானே." என்று சொல்ல, ஒருவன் அந்த ஓவியன் தோளில் சட்டென்று கை வைத்தான்.

"எங்களைச் சந்தோஷப்படுத்தினாய் என்பதற்காக உன்னுடைய பேச்சைப் பொறுத்துக் கொள்கிறேன். இன்னொரு முறை சோழப் படை வீரர்களைப் பற்றி ஏதேனும் தவறாகப் பேசினால் பளீரென்று அறை விழும்." என்று உரக்கச் சொன்னான்.

"நீங்கள் அடித்தால் முடிந்து போயிற்றா? ஒரு ஓவியனைப் பளீரென்று கன்னத்தில் அறைந்து விட்டால் மாலை போடு வார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா. நான் உடனடியாக இது பற்றி உபதளபதிகளிடம் குறை சொல்வேன். அந்த உபதளபதிகள் தீர விசாரிப்பார்கள்.

ஒரு ஓவியனைக் கூப்பிட்டு வைத்து இழிவுபடுத்தியதற்காக உனக்குக் கசையடியும், மூன்று நாள் உணவில்லாத சிறை வாசமும் கிடைக்கும். அடித்துப் பார்." என்று வேகமாக ஓவியன் எழுந்து நிற்க, இன்னொரு கிழவன் அவனை அமைதிப்படுத்தி னான்.

"ஏன் எங்களை இழிவுப்படுத்துகிறாய். நாங்களும் எங்கள் வேலையைச் செவ்வனே தான் செய்து கொண்டிருக்கிறோம்."

"இல்லையென்று சொல்கிறார்கள்."

"யார் சொல்கிறார்கள்?"

"படையெடுப்புக்குப் போய் வந்து நகரத்துக்குள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்ற உபதளபதிகளும், போர் வீரர்களும் - கோட்டைக்காலல் அறவே சரியாக இல்லை என்று கேலி செய்கிறார்கள். நீங்கள் தொந்தியும், தொப்பையுமாக இருப்பதையும், எப்பொழுதும் வெற்றிலை போட்டுக் கொண்டு தூங்குவதையும், குடித்துவிட்டுப் பாடுவதையும் கேலி செய்து கொண்டிருக்கிறார்கள். நேற்று இரவு யாரோ மாடத்தின் உச்சியில் முழுவதுமாகக் குடித்துவிட்டு, தன்னுடைய நிழலைத் தானே பார்த்து அதட்டிக் கொண்டிருந்தான் என்று ஒரு உபதளபதி எங்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

லெளியூரிலிருந்து தேவரடியார்கள் வந்தால் மடக்கி நின்று தீர விசாரிக்கிறீர்களாம். காலையிலிருந்து மாலை வரை சந்தேகத்திற்கு இடமான நபர் என்று நிற்க வைத்துவிட்டு,

அவர்களோடு சல்வாபித்து விட்டுத்தான் அனுப்புகிறீர்களாம். தவையில் அடித்துக் கொள்கிறார்கள்."

"இதை யாராவது சொல்கிறார்களா அல்வது நீயாக ஏதேனும் கதை விடுகிறாயா?"

"உங்களைப் பற்றி இன்னும் கேவவமாகவும் பேக கிறார்கள்."

"என்ன கேவலமாகப் பேசுகிறார்கள்?"

"உங்கள் அனைவருக்கும் கள்ளக் காதல் இருப்பதாகவும், அதிகாரிச்சிகளைப் போய் பார்த்துப் பல் இளிப்பதே உங்களுக்கு வேலை என்றும், அந்த அதிகாரிச்சிகள் ஏவிய பணிகளைச் செய்வதற்காகலே நீங்கள் அவைகிறீர்கள் என்றும் சொவ்லு கிறார்கள்."

"இவனைப் பேச விட்டது தவறு."

ஒருலன் எழுந்து வேகமாக அந்த ஓவியனின் கழுத்தைப் பிடிக்க, அந்த ஓவியன் அந்தக் கையைத் தட்டிவிட்டு சரக் கென்று குத்து வாளை எடுத்து அவன் முன்பு காட்டினான்.

வெறும் கையோடு தாக்க முனைந்த போர் வீரன் பின்னுக்குத் திரும்பினான். சில வீரர்கள் ஓடிப்போய் சுவரில் சாய்த்து வைத்திருந்த வாளையும், வேலையும் எடுத்துக் கொண்டார்கள்.

"ஓவியன் என்றால் ஒன்றும் தெரியாதவன் என்று நினைப்பா. உங்களுக்கு மட்டும்தான் வாளும், வேலும் தூக்கத் தெரியுமா? நான் கத்தி எடுத்தால் உங்களில் பல பேருக்கு ரத்தக் காயம் ஏற்படும். கை நீட்டுகிற வேலையை வேறு எங்கேயாவது வைத்துக் கொள்ளுங்கள். வணிகர்களிடமும், தேவரடியார் களிடமும், உங்கள் விசாரணையை மேற்கொள்ளுங்கள். என்னிடம் வாலாட்டினால் ஒட்ட நறுக்கி விடுவேன்." என்று சீற, அவர்கள் அனைவரும் வியப்போடு பார்த்தார்கள்.

அவன் கத்தியைப் பிடித்த விதமும், நின்ற விதமும் வேகமாக வீசிய விதமும் அவர்களுக்கு வியப்பைக் கொடுத்தன.

மறுபடியும் பரணிவ் இருந்தவன் உரக்கத் கத்தினான்.

"சாளுக்கிய வீரர்கள் கண்ணுக்கு தெரிகிறார்கள்." என்றான்.

அவர்கள் சோர்வாக அவரலர் ஆயுதங்களை எடுத்துக் கொண்டார்கள். வரிசையானார்கள். அந்தப் பாதையின் இரண்டு புறமும் பிரிந்து நின்றார்கள்.

புழுக்கம் அதிகமாக இருந்தது. காற்று வேகமாக வீசியது. மெல்ல அந்த மாலை வேளையில் வெகு சீக்கிரமாகலே இருட்டத் துவங்கியது.

"மழை வரும்போல் இருக்கிறதே" என்று ஒருவன் சொல்ல, அந்த ஓவியன் தன்னுடைய குறுவாளை உறையில் போட்டுக் கொண்டு மேலே இடுப்பில் கட்டிய துணியை உருவி மேலே போர்த்திக் கொண்டு, அந்தப் பாடி வீடுகளுக்கு அருகேயிருந்த திண்ணையில் உட்கார்ந்து கொண்டான். அவனுக்குப் பக்கத்தில் இருந்த கிழவர் அவனைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

"ஏதோ படை வருகிறதுபோல் இருக்கிறது." என்றார்.

"படை வரவில்லை. அடிமைகள் வருகிறார்கள்."

"அடிமைகளா... எங்கிருந்து?" – அந்தக் கிழவர் கேட்டார்.

"திருலொற்றியூரிலிருந்து ராஜேந்திரர் அனுப்பியிருக்கிறார். சாளுக்கிய தேசத்து வீரர்கள் இங்கே வருகிறார்கள்."

"வந்து என்ன?"

"கோயில் கட்டும் பணி துவங்கி விட்டதல்லவா. அதற்குக் கூலி வேலை செய்ய ஆட்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்."

"பத்தாயிரம் பேர் கூலியாட்கள் தேவையா?"

"மிகப் பெரிய கட்டடமய்யா. இது போதாது."

"இன்னும் எவ்வளவு தேவைப்படும் என்று நினைக்கிறாய்?"

"இன்னும் ஒரு பத்தாயிரம் தேவைப்படும்..."

"இத்தனை பேருக்குத் தங்க இடம் எங்கே?"

"தெரியவில்லை."

"உணவுக்கு வழி இருக்கிறதா?"

"தெரியவில்லை."

"பிறகு எப்படி வரவழைக்கப்படுகிறார்கள்?"

"உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் எதையும் திட்டமிட்டுச் செய்வார். இங்குள்ள அதிகாரிகள் திறமைசாலிகள். ஏதேனும்

ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை..."

"நீங்கள் ஓவியர் என்று அவர்கள் பேசக் கேட்டேன்..."

"ஆமாம் ஓவியன்தான்."

"நான் ஒரு தமிழ்ப் புலவன்..."

"மிக்க சந்தோஷம். எங்கே பயணப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?"

"திருவையாறு வரை போய் சுவாமி தரிசனம் செய்து விட்டு, ஏதேனும் சில பாடல்கள் எழுதிக் கொண்டு திரும்பவும் தஞ்சைக்கு வந்து மன்னரிடம் சொல்லலாம் என்று முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்."

"பாடல்கள் எழுதி விட்டீர்களா..."

"இரண்டு எழுதி விட்டேன். இன்னும் சிலவை எழுத வேண்டும்..."

"இறைவன் மீதுள்ள பாடவ்களா..."

"இல்லை. மன்னன் மீது ஒரு பாடல்..."

"பாடல் என்றால் கவிதை வடிலா? அல்லது நாட்டிய மங்கைகள் ஆடுகின்ற விதமாகவா..."

"தேவரடியார்கள் அதிகம் வந்திருக்கிறார்களல்லாவா. அவர்களுக்குப் புதுவிதமாக பாடல்கள் எழுதுவது நல்ல தல்லவா? அதற்குண்டான பயிற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறேன். அதேநேரம் வெறும் சிருங்கார ரசமான பாடல்களாக இல்லாமல், சோழ தேசத்தை இராஜராஜ சோழர் எப்படி மேம்படுத்தினார் என்கிற விதமாகவும் என் பாடல் அமையும்..."

"நல்ல யுக்தி... நல்வ யுக்தி... ஆனால்..." என்று இழுத்தான்.

"என்ன ஆனால்...

"மன்னர்களையும், மந்திரிப் பிரதானிகளையும் மட்டுமே புலவர்கள் பாடிக் கொண்டிருக்கிறார்கள். இதை விட்டாவ் புலவர்கள் தேவரடியார்களின் அங்க வனப்புகளைப் பாடுவார்கள். ஆனால் இறைவனைப் பற்றியும், இறைலனுடைய அடியார்களைப் பற்றியும் பாடல்கள் வேண்டுமே."

"இறைவனைப் பற்றிய பாடவ்கள் தமிழில் என்ன குறைவு?"

"அதிகம் இருக்கிறது. ஆனால் இறைவன் அடியார்களைப் பற்றிய கதைப் பாடல்கள் இல்லை..."

"அது என்ன கதைப் பாடல்கள்..."

"ஒரு நாட்டிய நாடகம் ஆடுவதற்கு மிக நீண்ட பாடல்கள் தேவை. விதம் விதமான மெட்டுகள் தேவை. விதம் விதமான தாளக்கட்டுகள் தேவை. உதாரணமாக இறை அடியாரின் வாழ்க்கையை, அவர் பட்ட அவஸ்தையை, இறைவனுக்காக அவர் செய்த தவத்தை விளக்கி, அவருக்கு எப்படி இறைவன் அருள் கிடைத்தது என்று பாடல்கள் எழுதலாம் அல்லவா. இந்த முயற்சியை யாரும் செய்ய மாட்டேன் என்கிறார்கள்..."

கிழவர் சட்டென்று திரும்பி அவனைப் பார்த்தார்.

"நன்றாக இருக்கிறது..."

"இப்படியெல்லாம் பாடினால்..." ஓவியன் தொடர்ந்தான். எச்சில் விழுங்கினான்.

"இப்படியெல்லாம் பாடினால்..." புலவர் ஆவலானார்.

"இந்த மாதிரி ஆரவாரக் கூச்சலில்லாமல் ஜனங்கள் அமைதியாகக் கேட்பார்கள். ஆழ்ந்து ரசிப்பார்கள். அவர்களுக்கும் இந்த விஷயங்கள் உள்ளே புகுந்து, அலர்களை இன்னும் கனிவாக்கச் செய்யும். கோயில் பணி என்பதில் இன்னும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முடியும். எங்கும் நிறைந்த ஈசனுக்காக வேலை செய்கிறேன் என்ற எண்ணம் அவர்களுக்கு வரும்..."

"அபாரம்... அற்புதம், ஓவியனே... உன் பெயரென்ன?"

"சீராளன்..."

85

"சீராளன், எங்கேயோ கேள்விப்பட்டதுபோல இருக்கிறதே." – புலவர், ஓவியன் தோளில் கைபோட்டு மெல்லிய வியப்போடு பேசினார்.

"ஆமாம். இந்தச் சீராளனை வைத்தும் ஒரு கதை இருக்கிறது."

"என்ன கதை தெரியவில்லையே."

"ஒரு பல்லவ தளபதியின் கதை. அவர், சிவனடியார். அவர் சீராளன் என்கிற தன்னுடைய மகனை அரிந்து லாசலில் வந்து நின்று மனிதக்கறி கேட்ட இறைவனுக்குப் படைத்தார்."

"அடேயப்பா... அப்படியும் ஒரு கதை இருக்கிறதா."

"ஆமாம், நீங்கள் எழுந்து நில்லுங்கள்."

"ஏன்?"

"சாளுக்கிய வீரர்கள் வருகிறார்களே."

"சாளுக்கிய வீரர்கள் வந்தால் நாம் எழுந்து நிற்க வேண்டுமா. எதற்காக எழுந்து நிற்க வேண்டும். அவர்கள் அடிமைகள்தானே."

"நன்றாக இருக்கிறது கதை. அவர்கள் நம்முடைய ஊருக்கு வருகிறார்கள். எந்த ஆயுதமும் இல்லாமல் வருகிறார்கள். கோவில் பணிக்கு வருகிறார்கள். உண்மையில் ஊர் எல்லையில் அவர்களுக்கு உண்ண உணவும், குடிக்க நீரும், உடுக்க உடையும், முகர்ந்து பார்க்கப் பூவும், இனிப்புகளும் கொடுத்து வரவேற்க வேண்டும். எதுவுமில்லாமல் நொந்துபோய் வருகிறவர்களை நாம் கேவலமாக வரவேற்கப் போகிறோம்."

"அதெப்படி கேவலமாக வரவேற்கப் போகிறோம் என்று தெளிவாகச் சொல்கிறாய்."

"இந்தக் கூட்டத்தைப் பாருங்கள். இதில் யாராவது ஒருவருக்கு ஏதேனும் தெரிகிறதா?"

"தம்பி, நீதானே அவர்களைக் கிளறி விட்டாய்."

"நான் கிளறி விட்டால் இவர்கள் கிளர்ந்து விடுவதா. அப்பொழுது இவர்கள் ஒழுக்கத்திற்கு என்ன பலம். எது பின்னணி? வெறும் படம் வரைந்ததற்கே பல் இளிக்கிறார்களே... இரண்டு பெண்கள் உட்கார்ந்தால் இவர்கள் எத்தனை அசிங்கமாக இருப்பார்கள். இவ்வளவு அலட்சியமான எல்லைப் புறக்காவல் எந்தத் தேசத்திலாவது பார்த்திருக்கிறீர்களா."

"என்ன காரணம் அதற்கு." – அந்தக் கிழவர் கேட்டார்.

"வெற்றி பெற்றுவிட்டோம் என்ற மமனத. யாரோ போய் போர்புரிந்து ஜெயிக்க, இந்தக் கோட்டைக் காவலர்கள் குடித்து விட்டு எகிறி எகிறிப் பேகிறார்கள். ஏமாந்தவர்கள் கிடைத்தால் அதட்டுகிறார்கள்."

"கோட்டைக் காவல் சரியில்லை என்று சொல்கிறாயா."

"கொஞ்சம்கூட சரியில்லை. இவர்களை இன்னும் எல்லைப்புறத்திற்கு அனுப்பிவிட்டு, படையெடுத்துப் போன வீரர்களை கோட்டைக் காவலுக்கு லைக்க வேண்டும்."

"ஏன்?"

"அப்பொழுதுதான் நல்ல ஒரு கட்டுப்பாடு இருக்கும்."

"நீ சொல்வது நல்ல யோசனையாக இருக்கிறது." – புலவர் பாராட்டினார்.

"சரி... சரி... நான் உங்களுக்கு யோசனை சொல்லி, நீங்கள் எனக்கு யோசனை சொல்லி இங்கே என்ன நடக்கப் போகிறது. யாருக்கு யோசனை சொல்ல வேண்டுமோ – அவருக்குச் சொல்வதற்கு ஆளில்லை. சொன்னால் கேட்பதற்கு அவர்களுக்குப் பொறுமையில்லை."

"அப்படியா சொல்கிறாய். பிரம்மராயரும், மற்ற உப தளபதிகளும் திறமை இல்லாமலா இருக்கிறார்கள்."

"இல்லை. அவர்கள் ஏதோவொரு கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதிலும் பிரம்ம ராயர் தந்திரமாக ஏதேனும் முன்னேற்பாடுகள் செய்திருப்பார். ஆனால் அவர் மட்டுமே இயங்கினால் போதுமா. கீழ்மட்டத் தளத்தில் கொஞ்சம் கட்டு தளர்ந்து தான் இருக்கிறது."

"ஆமாம். அதை நான் பார்க்கிறேன்."

"நீங்கள் வந்து அரை நாழிகையாயிற்று. நீங்கள் யாரென்று விசாரணை உண்டா. எதற்கு உட்கார்ந்திருக்கிறீர்கள் தெரியுமா. கையில் ஓலைச் சுவடி வைத்து நீண்ட தாடி வைத்து விட்டால் உடனே அலர்கள் புலவர் என்று தீர்மானம் செய்து விடுகிறார்கள். நீங்கள் பாண்டிய தேசத்து ஒற்றராகக் கூட இருக்கலாம் அல்லவா. இது பொய் தாடியாகக் கூட இருக்கலாம் அல்லவா." என்று அவன் கேட்க, அந்தக் கிழவர் உற்றுப் பார்த்தார்.

"நீ ஓவியன்தானா அல்லது நீயும் ஒற்றனா," என்று சிரித்தபடி அவர் கேட்க, "நான் இராஜராஜப் பெருந்தச்சரின் இரண்டாவது மனைவியின் மூத்த மகன். தந்தையின் கட்டளைப்படி இங்கு வந்திருக்கிறேன்."

"உனக்கு என்ன கட்டளை?"

"இந்தச் சாளுக்கிய வீரர்கள் யார், எப்படி என்று விசாரித்து வா. இவர்களை வைத்துக் கொண்டு நாம் வேலை

வாங்க முடியுமா என்பதை கொஞ்சம் உற்றுப் பார்த்து தீர்மானம் செய். முடிந்தால் பேசி விட்டு வா என்று தந்தை அனுப்பியிருக்கிறார். அவருக்கு ஒரே கவலை."

"என்ன கவலை." – புலவர் புருவம் சுருக்கினார்.

"இந்த வீரர்கள் சரியில்லையெனில் கோயில் பணி செவ்வனே நடக்க முடியாது. கூலியாட்கள் ஒத்துழைக்கவில்லையெனில், சிற்பிகளால் எந்த லேலையும் செய்ய முடியாது. கோயில் கட்டுமானப் பணி இப்பொழுது சிற்பிகள் கையில் இல்லை. இந்தக் கூலியாட்கள் கையில் இருக்கிறது. இந்தச் சாளுக்கிய வீரர்கள் கையில் இருக்கிறது. இவர்கள் உண்மையாகவும், அன்பாகவும், உழைப்பவர்களாகவும் இருந்தால்தான், அங்கு அமைதியோடு வேலை செய்தால்தான் பணி எந்த இடையூறுமில்லாமல் தொடரும். அடிக்கடி சண்டை ஏற்பட்டால் சிற்பிகளின் கவனம் சிதறும். ஒரு அடி தவறாகப்பட்டால் கூட ஒரு முழு சிலை பின்னப்பட்டு விடும். மிக கவனமாகச் செய்ய வேண்டிய இடத்தில் அமைதியாக இவர்கள் இருப்பார்களா... அல்லது ஆரவாரமாக ஆடுவார்களா என்று சந்தேகப்படுகிறார். பார்த்துவிட்டு வரும்படி சொல்கிறார்."

"பிரம்மராயரைப் போவ இராஜராஜப் பெருந்தச்சரும் மிகுந்த கவலையோடும், பொறுப்போடும் இருக்கிறார் என்று சொல்கிறாயா?"

"ஆமாம். என் தந்தையினுடைய பொறுப்புணர்வு மன்னருடைய பொறுப்புணர்வைவிட மிக அதிகமானது." ஓவியன் தலை சிலுப்பினான்.

"இருக்கலாம். ஏனெனில் கோயில் கட்டுமானப் பணி என்று வந்துவிட்ட பிறகு மன்னரைவிட பெருந்தச்சனுக்குத் தானே பெருங்கவலை."

புலவர் தலையாட்டினார்.

குதிரை வீரர்கள் அருகே வந்தார்கள். மழை மேகம் திரண்டது.

குதிரை வீரர்கள் சோர்வோடு தாண்டிப் போனார்கள். அவர்களை நிறுத்தி வைத்து பாடி வீரர்கள் கேள்வி கேட்டார்கள். அவர்கள் முத்திரை மோதிரம் காட்ட, விலகினார்கள்.

"எத்தனை வீரர்கள்." என்று கேட்க, அவர்கள், பதினோராயிரத்து நானூற்று முப்பத்து மூன்று." என்று தகவல் சொல்ல, பாடி வீரர்கள் நெருக்கமானார்கள்.

ஒவ்வொரு சாளுக்கிய வீரனாக உள்ளே அனுப்பினார்கள். அவர்களிடம் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைச் சோதனை செய்தார்கள். கில முரண்டுகள் அங்கு நடந்தன. நடக்கும்போது பாடி வீரர்கள் பளிச்சென்று அடித்தார்கள்.

இத்தனை நேரம் சிரித்துக் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்த அந்தக் கோட்டைக் காவவர்கள் கடுமையானார்கள்.

ஒரு இரும்பு வளையத்தை ஒருவன் இடுப்பில் கற்றி, அதன் மீது துண்டு போட்டிருக்க, அதைக் கண்டுபிடித்து பிடுங்கி எறிந்தார்கள். காலில் இருக்கும் வீரக் கழலை அகற்றச் சொன்னார்கள்.

'நடக்க முடியவில்லை; மூங்கில் கழிகளை ஊன்றி நடக்கிறோம்' என்று சில வீரர்கள் போக, அவர்களை உற்றுப் பார்த்து மூங்கில் கழிகளோடு நடக்க விட்டார்கள்.

பருமனாகவும், நீண்ட தாடி வளர்த்தவனாகவும், கூர்மையான மூக்கு உடையாவனாகவும், கால்களில் புண் ஏற்பட்டு அதைத் துணியால் கற்றிக் கொண்டு விந்தி விந்தி நடப்பவனாகவும் இருக்கின்ற ஒரு போர் வீரனை அந்தப் புலவர் உற்றுப் பார்த்தார்.

அவன் கையில் ஆள் உயர மூங்கில் இருந்தது. அவன் மிகுந்த சோர்வோடும் ஜுரம் வந்தவனைப் போலவும் நடந்து அந்தக் காவல் வீரர்களைக் கடந்தான்.

அந்தப் புலவர் அவனை உற்றுப் பார்த்துச் சிரித்தார்.

"என்ன, அந்த குண்டனைப் பார்த்துச் சிரிக்கிறீர்கள். யார் அவன்... உங்களுக்குத் தெரிந்தவனா?"

"அவனுடைய உடம்பைப் பார்த்தாவ் அந்தணனைப் போல இருக்கிறதே என்று சிரித்தேன்."

"இதென்ன... அந்தணருக்கென்று தனியாக உடம்பு இருக்கிறதா..."

"ஆமாம். போர் செய்யாமல் யாகத் தீயில் காய்ந்த உடம்பு வேறு விதமாக இருக்கும். யாகத்தீயில் உட்கார்ந்தவனுக்குப் பசி

அதிகமாக இருக்கும். அப்படி பசி அதிகம் இருப்பவன் வேகமாகச் சாப்பிடுவான். வேகமாகச் சாப்பிடுபவனுக்கு மேல் வயிறு அதிகமாகவும், பிருஷ்டத்தில் அதிக சதைகளும் இருக்கும். அவன் யாகம் செய்து சோறு தின்பவன். அதே சமயம் ஆயுத வேலைகளும் அவன் பழகியிருக்க வேண்டும். அந்தணனாக இருப்பலன் ஆயுத வேலை பழகி, இந்தப் பக்கம் கால் கற்றி விந்தி விந்தி லருகிறான் என்றால் இது கவனிக்கப்பட வேண்டிய விஷயம்."

"ஆனால் யாரும் கவனித்ததாகத் தெரியவில்லையே."

"இல்லை. கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.',

"யார்..."

"ஒற்றர்கள் சுற்றி இருக்கிறார்கள்."

"எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"நானும் ஒரு ஒற்றன்தான்."

"புலவரல்லவா?"

"இல்லை."

"நான் நினைத்தேன்."

"என்ன நினைத்தாய்?"

"இந்த தாடி பொய்யாக இருக்கிறதே என்று நினைத்தேன்."

"நல்லது. இது பொய் தாடிதான். ஆனால் வெளியே சொல்லாதே. எனக்கு நீயொரு உதவி செய்ய வேண்டும்."

"என்ன?"

"அந்தக் குண்டனிடம் போய் பேச வேண்டும்."

"எப்படிப் பேகவது?"

"ஏதேனும் இங்கு ரகளை செய்து அடி வாங்கு. அவர்கள் உன்னைக் கைதுசெய்து மறுபடியும் நகரத்திற்கு அனுப்புலார்கள். அப்போது அவனோடு போ. இது தவிர..." அந்தப் புலவர் மெல்ல இழுத்தார்.

"இது தவிர...?"

"மழை லரும்போல் இருக்கிறது."

"அதனாவ் என்ன?"

"இவர்கள் எங்கு தங்குவார்கள் என்று தெரியவில்லை."

"அதனால் என்ன?"

"இந்த நேரம் இவர்கள் கோபமாக இருப்பார்கள். நல்ல உணவும், சரியான இடமும், படுத்துத் தூங்க வசதியும் இல்வாத தால் கோபமடைவார்கள். அந்தக் கோபத்தில் இவர்கள் அதிகம் பேசக்கூடும். அப்போது நீ அருகிலிருந்து இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று எனக்குத் தெரிவிக்க வேண்டும்."

"ஒற்றருக்கு நான் ஒற்றர் வேலை பார்க்க வேண்டுமா? எனக்கு வேறு வேலை இல்லையென்று நினைத்தாயா. நான் குடந்தை போக வேண்டும். ஓவியங்களுக்கான துணிகள் சேகரித்து வரவேண்டும்."

"இது என் கட்டளை. நான் சொன்னதைச் செய்."

"எனக்குக் கட்டளையிட நீங்கள் யார்?"

"சீராளா... நான் உனக்குக் கட்டளையிட உரிமையுள்ள வன். உன் தந்தைக்கு கட்டளையிட உரிமையுள்ளவன். எனவே, சொன்னதைச் செய்."

சீராளன் திகைத்து அவரை உற்றுப் பார்த்தான். கண்டு பிடிக்க முடியாமல் திணறினான். அவன் திணறலைப் பார்த்த அந்தப் புவவர், அதாவது ஒற்றர் வாய்விட்டுச் சிரித்தார்.

அந்தச் சிரிப்பு சட்டென்று சீராளனுக்கு ஏதோ ஞாபகப்படுத்தியது.

"மன்னரா..." என்று உரத்துக் கத்த, அவர் 'உஸ்...' என்று அவன் வாய் மீது விரல் வைத்து அழுத்தினார்.

"சொன்னதைச் செய்."

"உடையாரை இத்தனை அருகில் நின்று பார்ப்பேன் என்று நினைக்கவேயில்லை. உங்களுக்கருகே இவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தது எவ்வளவு பெரிய பாக்கியம்."

"சீராளா... பரஸ்பரம் பாராட்டிக்கொள்ள இது நேர மிவ்லை. போ. போய் ரகளை செய். நீயும், நானும் வேறொரு நேரத்தில் அருகருகே உட்கார்ந்து வெகுநேரம் வேவை செய்யப் போகிறோம். நிறைய ஒருவரையொருவர் தெரிந்து கொள்ளப் போகிறோம். இப்பொழுது இந்தப் போர் வீரர்களைப் பற்றிய கவலை அதிகமிருக்கிறது. குறிப்பாய் அந்தக் குண்டனைப் பற்றிய கவவை எனக்கிருக்கிறது. உடனடியாக உன் உதவி வேண்டும்."

"ஐயா, எந்தப் பாதுகாப்புமில்லாமல் தனியே இருக்கிறீர்களே."

"இல்லை. என் பாதுகாப்புக்கு எனக்கு உடைவாள் இருக்கிறது. கவலைப்படாதே."

"மறுபடி உங்களை நான் எங்கு சந்திப்பது?"

"நீ சந்திக்க வேண்டாம். நான் உன்னைச் சந்திப்பேன். போ. போய் கலவரம் செய்."

ஓவியன் எழுந்தான். ஒரு சாளுக்கிய வீரனிடம் போய் 'நலமா' என்று கேட்டான்.

அந்த சாளுக்கிய வீரன் திரும்பி நிற்க, "உங்களைத்தான், நலமா. எப்படியிருக்கிறீர்கள். உங்கள் ஊர் கோயிலுக்கு நான் வந்திருக்கிறேனே." என்று உரக்கச் சொன்னான்.

அவன் திகைத்துப் பார்க்க, பாடிக்காலல் வீரன் ஓவியனை சற்று பின்னே நகர்ந்தினான்.

"அடேய்... நான் பேசிக் கொண்டிருக்கும்பொழுது என் மீது கை வைத்து ஏன் பின்னே நகர்த்துகிறாய்?"

அங்கு கலவரம் துவங்கியது. பாடிக் காவல்வீரன் மறுபடியும் பின்னால் அவனை நகர்த்த, ஓவியன் முன்னேறி சட்டென்று அந்த வீரனை அடித்தான்.

அங்கு கைகலப்பு ஏற்பட்டது.

ஒரு வீரன் பாய்ந்து, ஓவியனை அழுத்தி அவன் முகத்தில் அடித்தான். கொண்டு போய் மறுபக்கம் குவிந்திருந்த சாளுக்கிய வீரர்களிடம் தள்ளினான்.

"நகரத்தை விட்டு நீ லெளியே போக முடியாது. உன் மீது விசாரணை இருக்கிறது." என்று உரக்கக் கத்தினார்கள்.

ஓவியன் மறுபடியும் திமிர, ஒருவன் வேகமாய் வந்து ஓவியன் காலில் பிரம்பால் அடித்தான்.

அடித்த இடத்திலிருந்து ரத்தம் வந்தது.

புலவர் எழுந்து பார்த்துவிட்டு மறுபடியும் வடக்கு நோக்கி நடந்தார்.

86

எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் மன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வடக்கு நோக்கி தனியே நடந்து போவது பார்த்து, அந்த ஓவியனுக்கு ஒரு கிறிய கலவரம் ஏற்பட்டது. பாடிக் காவல் வீரர்களில் எவரேனும் ஒருவரை உலுக்கி 'அங்கே போவது மன்னர், பின்னால் அவர் அறியாமல் பாதுகாப்புக்குப் போ' என்று சொன்னால் என்ன என்று தோன்றியது.

ஆனால், காவல் வீரர்கள் அநேகமாக முட்டாள்களாகத் தான் இருப்பார்கள். உடனே பதறியடித்துப் பெருங்குரல் கொடுப்பார்கள். மன்னர் போகிறார்... மன்னர் போகிறார் என்று அலறுவார். அத்தனை பேரும் அவரைச் சூழ்ந்து கொள்வார்கள். மன்னரா என்று சோதிப்பார்கள். அப்படிச் சோதிப்பதில் அதீத வேகம் காட்டுவார்கள்.

மன்னருக்கு தான் என்ன செய்கிறோம் என்று தெரியும். அவர் கவலையில்லாமல் நடந்து போய்க் கொண்டிருக்கிறார்.

ஓவியனை பின்கை கட்டி பாடிக் காவல் வீரர்கள் அடிமை வீரர்களோடு சேர்த்தார்கள். மன்னர் சுட்டிக் காட்டிய அந்த குன்டோதரனிலிருந்து நாலு வீரர்கள் தள்ளி ஓவியன் நின்று கொண்டான். தலைகுனிந்து மிகுந்த அவமானப்பட்டவன்போல் அவர்களோடு கலந்து நின்றான்.

"யார் நீ. என்ன தேசம்... அருகேயிருந்த வீரன் கேட்க, "நான் சோழ தேசம் தான்... என்றான்.

"பிறகு உன்னை ஏன் இப்படி மாடு போல் அடிக்கிறார்கள்..."

"இந்தப் பாடிக்காவல் ஆட்கள் முட்டாள்கள். இவர்களுக்குத் தாங்கள் என்ன செய்கிறோம் என்று ஒரு போதும் தெரியவில்லை."

"நீ இங்கு என்ன தொழில் செய்கிறாய்..."

"ஓவியன்..."

"ஓவியம் வரைகிறவனையா ஒரு பாடிக்காவல் வீரன் அடிக்கிறான். என்ன முட்டாள்தனம் இது. என்ன விதமான ஓவியம் வரைகிறாய்...

"சிற்பம் செதுக்குவதற்கு முன்பு அந்தச் செதுக்கிய சிற்பம் ஓவியமாக வரையப்பட வேண்டும். மாதிரி ஓவியங்கள் வரைவதற்காக நான் பயிற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறேன். என் தாயும், தந்தையும் அதில் வல்லவர்கள்."

"ஆஹா... உயர்குடிப் பிறப்பல்லவா. வேலை தெரிந்தவர் களல்லவா. உங்களுக்கே இந்தக் கதியா. ஏன் இப்படி நடக்கிறது சோழ நாட்டில்." – அந்தச் சாளுக்கிய வீரன் உரக்கக் கூறினான்.

"என்ன செய்வது. பல்வேறு யுத்தங்களில் ஜெயித்து, பல்வேறு வெற்றிகளைக் கொண்டு வந்து சோழ மன்னர் காலடியில் கிடத்தி பொன்னும், பொருளும் வாரி வந்து, அவைகளையும் கடை பரப்பி கடந்து பத்து வருடங்களாக மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறார்கள்."

"அதனால் என்ன... யார் வேண்டுமானாலும் யாரை வேண்டுமானாலும் அடித்து விடவாமா. எங்கள் தேசத்தில் பாடகர்களுக்கும், நடனமாடுபலர்களுக்கும், ஓவியர்களுக்கும், சிற்பிகளுக்கும் மிகுந்த மரியாதை."

"நீ மேலைச் சாளுக்கியனா?"

"ஆமாம்."

"நன்றாகத் தமிழ் பேசுகிறாயே."

"மூன்று வருடம் கைது செய்யப்பட்டு திருவொற்றியூரில் இருந்தவனல்லவா... தமிழ் பேசுவதற்கு என்ன கேடு. வேறு என்னதான் அங்கு கற்றுக்கொள்வது..."

"குடும்பத்தைப் பிரிந்து மூன்று வருடமாயிற்றா...

"நான்கு வருடமாயிற்று...

"முதல் வருடம் என்ன செய்துகொண்டிருந்தாய்...

"வீட்டிலிருந்து என்னுடைய தேசத்தின் எல்லைக்கு நடத்தி அழைத்து வரப்பட்டேன். பத்து நாள் பயணம் செய்து, எல்லை யில் நின்று, பல்வேறு கிராமங்களிலிருந்து வீரர்கள் வர, அங்கிருந்து படையெடுத்து மேல் பாடிக்கு வர, அங்கு சோழ வீரர்களால் தாக்கப்பட்டோம். தடுத்து நிறுத்தப்பட்டோம்...

"போர் வெகு நேரம் நீடித்ததா...

"இல்லை. கால் நாழிகை போர் அது...

"எப்படி நடந்தது போர்..."

"மேல்பாடிக்கு இரண்டு கல்தொலைவில் சோழ வீரர்கள் எதிர்கொண்டார்கள். கை கலப்பு முடிந்த சில நிமிடங்களில் எக்காளம் ஊதப்பட்டது. சோழ வீரர்கள் மிக வேகமாகப் பின்னடைந்தார்கள். தோற்று விட்டதுபோல தலைதெறிக்க ஓடினார்கள். நாங்கள் குதூகலமடைந்தோம். நாங்களும் துரத்திக் கொண்டு ஓடினோம். தண்ணீர் இல்லாத ஒரு ஆற்றில் இறங்கி அவர்கள் ஓட, அலர்களை நாங்கள் துரத்தினோம். ஆனால் இரண்டு கல் தொலைவு போனதும் மேல் பாடி எல்லையில் சட்டென்று நின்று கொண்டார்கள்.

இரண்டு கரைகளிலும் வீரர்கள் தோன்றினார்கள். ஒரு லட்சம் வீரர்களை எதிர்கொள்ள வேண்டிய நாங்கள் ஓடி வந்து மூன்று லட்சம் வீரர்களை எதிர்கொண்டோம். கால் நாழிகை அங்கு யுத்தம்.

யுத்தம் ஆரம்பித்தவுடனேயே தெரிந்து விட்டது. நாங்கள் தவறு செய்து விட்டோமென்று. துரத்தி ஓடியிருக்கக் கூடாதென்று புரிந்துவிட்டது. சோழ வீரர்களின் தந்திரத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய சேனாதிபதி எங்களில் இல்லை. வெறும் குடித்துவிட்டு கூடும் வெறியோடுதான் இருந்தார்கள்.

எங்களில் சிலருக்கு இதில் மிகுந்த வருத்தம். நல்ல தலைமை இல்லையே என்கிற லேதனை. எனலே, சோழ வீரர்கள் அதட்டியவுடன் வாட்களைக் கீழே போட்டுவிட்டு குத்திட்டு உட்கார்ந்து அழத் துவங்கி விட்டார்கள்.

அழுத வீரர்களைச் சோழர்கள் தனியே அப்புறப்படுத்தி உட்கார வைத்து கஞ்சியும், துவையலும் கொடுத்து சமாதானப் படுத்தினார்கள்.

எதிர்த்தவர்களையும், வீரம் பேசியவர்களையும் மட்டும் கசையால் அடித்தார்கள். சிறு சிறு குழுக்களாகப் பிரித்து திருலொற்றியூருக்கு அழைத்துப் போனார்கள்.

அங்கு கடற்கரை மணலில் சவுக்குக் கட்டைகளால் மிகப் பெரிய வேலி போட்டு திறந்தலெளி சிறைச்சாலை அமைத்தார்கள்."

"எப்போதும் திறந்த வெளியிலா இருந்தீர்கள்." ஓவியன் கேட்டான்.

"ஆமாம் கைதிகளுக்குக் கூரை போட்டு கட்டிலும், மெத்தையும் போட்டு யாரேனும் கொண்டாடுலார்களா.

லேளைக்கு உணவு கிடைக்கிறதே அதுவே பெரிய விஷயம். மேலைச் சாளுக்கிய சிறையில் உணவில்லாமல் மடிந்த வீரர்களின் கணக்கு அதிகமுண்டு..."

ஓவியன் அதைக் கேட்டுவிட்டு பயத்தால் மெய் சிலிர்த்தான்.

"அதிக வீரம் பேசுகிறவர்களை, எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கிறவர்களை நாங்கள் அடித்து தனிக் கொட்டடியில் போட்டு விடுவதுண்டு. பல நாட்கள் உணவும், தண்ணீரும் இல்லாமல், ஆள் அரவமேயில்லாமல் வைத்து விடுவதுண்டு. ஐந்து நாள், ஆறு நாள் பொறுத்து உயிரோடு இருந்தால் திறந்து அவனை மற்ற கைதிகளோடு விடுவதுண்டு. இல்லையேல் பிணமான அவனைத் தூக்கி எறிவதுண்டு.

ஆனால் சோழ தேசத்தில் அவ்விதம் நடக்கவில்லை. லயிறு வாடாமல் கவனித்துக் கொண்டார்கள். அதிக உணவு பரிமாறவும் இல்லை. அதற்காக பட்டினி போடவும் இல்லை. நீர் ஆகாரமாகக் கொடுத்தார்கள். பழங்கள், காய்கறிகள் என்று கொட்டினார்கள். கீரை கலந்த கம்பங்கூழும், அரிசிச் சோறும் கிடைத்தன. மூன்று முறை உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரின் பிறந்த நாளுக்குப் பாயசம் சாப்பிட்டோம்."

"இங்கு இருக்கிற எல்லோருமே மேலைச் சாளுக்கியத்தைச் சார்ந்தவர்களா..."

"இல்லை. தெரியவில்லை. இங்கு வந்து மிக நெருக்கமான பழக்கமுடைலர்களும் இருக்கிறார்கள்..."

"பாண்டியர்கள் உண்டா?"

"எதற்குக் கேட்கிறாய். நீ பேசுவதைப் பார்த்தால் ஒற்றன் போலல்லவா இருக்கிறது..."

"இல்லை. பாண்டியர்களோடு எங்களுக்கு ஜென்மப் பகை..."

"அதனால் என்ன...

"அவர்களோடு பேசவும், பழகவும் நான் கூச்சப்படு கிறேன்." ஓவியன் குழறலாய் பேசினான்.

"எல்லோரும் மனிதர்கள்தானே..."

"இல்லை. பாண்டியர்களை நான் அவ்விதம் நினைக்க வில்லை..."

"தவறு. இது வெறும் சோழத் திமிர்..."

"இல்லை. மூன்று வருடம் சிறையில் சோழர்களுக்கு அருகே இருந்தும் ஏன் உன்னால் சோழர்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை...

காரணம், சோழ வீரர்கள் உன்னை பாண்டிய வீரர்களுக்கு அருகே அனுப்பியிருக்க மாட்டார்கள். பாண்டிய வீரர்கள் உனக்குத் தெரியாமல் போய்விட்டது. மேலைச் சாளுக்கிய, கீழைச் சாளுக்கிய வீரர்களோடுதான் நீ இருந்திருக்கிறாய்."

"அப்படியென்ன பாண்டிய வீரர்கள் மோசமாகி விட்டார்கள்..."

"பாண்டிய வீரர்கள் துரோகிகள். சத்தியத்திற்குக் கட்டுப்படாதவர்கள். தோற்றுவிட்டோம் என்று தெரிந்ததும் ஆற்றங்கரையில் லாளைப் போட்டு விட்டு உட்கார்ந்து விட்டாய். உன்னை சோழ வீரர்கள் மரியாதையாக நடத்தினார்கள். பாண்டிய வீரர்கள் லாளைப் போட்டு உட்கார்ந்திருப்பார்களா? நேரம் கிடைக்கும் போது லாளைப் பறித்துக் கொண்டு முதுகில் குத்திவிட்டு ஓடுவார்கள். ஆனால், மேலைச் சாளுக்கிய வீரர்கள் பல பேரை விடுவித்ததாகச் சொன்னார்களே..."

"ஆமாம். இளவரசர் ராஜேந்திரர் அவ்விதம் பலமுறை கூறினார். எங்களுக்குப் போக இஷ்டமில்லை...

"ஏன்?"

"மேலைச் சாளுக்கியத்தில் சோழ தேசத்து மந்திரிமார்கள் தான் ஆட்சி செய்கிறார்கள். அவர்கள் வசம் தன்னை ஒப்படைத்த சாளுக்கியக் குடும்பத்தைத்தான் அரச பதவியில் உட்கார லைத்திருக்கிறார்கள். அங்கு போய் பெண்டு பிள்ளைகளுக்கு முன்னால் சோழ அதிகாரிகளுக்குக் கைகட்டி நிற்பதைவிட, இங்கு கைதியாக இருப்பது உத்தமம் என்று இருக்கிறோம்..."

"பெண்டு பிள்ளைகளைப் பார்க்கின்ற ஆசை இல்லையா."

"இருக்கிறது. வயல்களைப் பார்க்கும்பொழுதெல்லாம் என் வயல் ஞாபகம் வருகிறது..."

"நீ வேளாளனா..."

"இல்லை. நான் கல் தச்சன்..."

"என்ன...?" – ஓவியன் திகைத்தான்.

"ஆமாம். கருவறை வேலை செய்வதில் எனக்குச் தேர்ச்சி உண்டு."

"பிறகு ஏன் ஆயுதம். தாங்கினாய்...

"வேறு வழியில்லை. ஆண்களாக இருப்பவர்கள் அத்தனை பேரும் ஆயுதம் தாங்கி போர் முனைக்கு வரவேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. நிறைய கிழவர்கள் வெகு தொலைவு நடந்து, தொடர முடியாமல் சுருண்டு சுருண்டு விழுந்தார்கள். அங்கங்கே அவர்களைத் தகனம் செய்துவிட்டு வந்துவிட்டோம்."

"சாளுக்கிய தேசம் சிதிலமாகி விட்டது என்று நினைக்கிறாயா..."

"முற்றிலுமாய் சிதிலமாகி விட்டது. சாளுக்கிய தேசத்தின் சந்தோஷம் அறலே போய்விட்டது. இனி அந்த சந்தோஷம் திரும்புவதற்கு ஐம்பது, அறுபது வருடங்கள் பிடிக்கும்...

"நீ உன் ஊருக்குப் போய் உன்னுடைய வேலையை செய்யலாமே...

"யார் செய்வார்கள். செய்வதற்கு ஆட்கள் யார் இருக்கிறார்கள். காக யார் தருவார்கள். மன்னர்களெல்லாம் காட்டிற்குள் ஒளிந்திருக்க, இருக்கிற மன்னர் சோழ தேசத்தின் தயவில் இருக்க எங்கே, என்ன கல் தச்க வேலை நடக்கும்? நான் கிளம்புகிறபோது அரண்மனையில் இருக்கிற கழிவறைகளைச் சுத்தம் செய்து விட்டு வேறு கல் விட்டு வந்தேன். அதுதான் நான் செய்த கடைசி கல்தச்சு வேலை."

"கோயில் வேலை செய்திருக்கிறீர்களா?"

"பலமுறை செய்திருக்கிறேன்...

"சிலலிங்கப் பிரதிஷ்டையா...

"எல்லாமும்தான். நான் அதிகம் செய்தது காளி பிரதிஷ்டை. குறிப்பாய் ரேணுகா தேவி கோயில்கள் அதிகம் செய்திருக்கிறேன். தோள் வரை மட்டுமே இருக்கின்ற அம்மனை அதிகம் ஸ்தாபித்திருக்கிறேன்."

"உன் பெயர் என்ன?"

"விகர்ணன்...

"உங்களை சோழதேசம் இனிதே வரவேற்கிறது...

ஓவியன் கைகூப்பினான். விகர்ணன் வாய்விட்டுச் சிரித்தான்.

"நீ ஒரு கைதி. நான் ஒரு கைதி. இங்கு வரவேற்பென்ன வேண்டிக்கிடக்கிறது..."

"தஞ்சைக்குள் காலடி வைத்ததும் என்னை விடுவித்து விடுவார்கள்...

"இந்த அடி அடித்திருக்கிறார்கள். எப்படிச் சொல்கிறாய்...

"எங்கள் ஆட்கள் நான் கைதாகி நடந்து வருவதைப் பார்த்தால் கோபித்துக் கொள்வார்கள். பொங்கி எழுவார்கள். வீரர்களை பளார் என்று அறைந்து என்னை விடுவித்து விடுவார்கள்...

"சோழ வீரர்களை அடிப்பதற்கும் ஆட்கள் இருக்கிறதா..."

"பாடி காவல் ஆட்களை வீரர்கள் என்று நான் சொல்லமாட்டேன். வெறும் காவல்காரர்கள். முட்டாள்கள். சோழ வீரர்கள் அப்படி நடந்து கொள்வதில்லை..."

"ஆமாம், நானும் பார்த்தேன். எங்களோடு வந்த சோழ வீரர்களைக் காணோமே...

"அவர்கள் எல்லைப்புறத்திலேயே நின்று விட்டார்கள். இப்பொழுது நாம் தஞ்சைக்குள் நடந்து கொண்டிருக்கிறோம்."

"எனக்குச் சோழ வீரர்களில் நல்ல நண்பர்கள் இருந்தார்கள். எல்லைப் புறத்திலிருந்து எங்கே போவார்கள்...

"அவரவர் கிராமம் இருக்கிறதல்லவா. அங்கு போய் பெண்டு பிள்ளைகளைப் பார்க்க வேண்டுமல்லவா. பிறகு அங்கேயே தங்கி விடைபெற்றுப் போகத் தயாராக இருப்பார்கள்...

"ஒருவேளை – உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவரைச் சந்தித்து விட்டுப் போவார்களோ...

அந்த விகர்ணன் ஆவலோடு கேட்டான்.

"இது மூன்றாம் முறையாக உடையாரைப் பற்றிப் பேசுகிறாய். உனக்கு அவர் மீது என்ன அத்தனை பிரியம்..."

"கோயில் கட்டுகிறாராமே... அதனால்தான்...

"ஆமாம். மிகப் பெரிய கோயில். ஏழு பனை உயரம்...

"எதற்காக ஒரு தேசத்தில் ஏழுபனை உயரத்தில் ஒரு கோயில் கட்டவேண்டும்." – விகர்ணன் கேட்க, ஓவியன் கோபமானான்.

87

"ஏன் கட்டினால் என்ன." ஓவியன் சீராளன் வியப்போடு கேட்டான்.

"ஒரு பனை உயரம் கோயில் கட்டுவதற்குப் பதிலாக ஏழு கோயில்கள் கட்டலாமல்லவா." விகர்ணன் பதிலில் மெல்லிய சூடு இருந்தது.

"தஞ்சைத் தரணியில் கோயிலுக்கு குறைவேயில்லை. இந்தக் கோயில் காலகாலத்திற்கும் நிற்க வேண்டும் என்று கட்டுகிறார்கள்."

"ஏழு பனன உயரம் கோயில் கட்டிவிட்டால் காலா காலத்திற்கும் நிற்குமென்று என்ன அத்தாட்சி. யார் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஒருவேளை அத்தனை உயரமாக இருந்ததாலேயே அது சிதிலமாகி போகக் காரணமாக இருக் கிறது. இடியாலும், மழையாலும், காலத்தாலும் வெகு சீக்கிரம் சிதைந்து போக வழியிருக்கிறது. அளவாக, அமைப்பாக கோயில் கட்டுலதை விட்டுவிட்டு ஏழு பனைஉயரம் என்று சொல்லது முட்டாள்தனமாக உனக்குத் தெரியவில்லையா...

"இது உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் உத்தரவு அவருடைய கற்பனை...

"அங்குதான் எனக்கு இராஜராஜ சோழரைப் பார்க்க வேண்டுமென்று தோன்றியது."

"ஏன்? அவ்லளவு உயரம் கட்டுகிறாரே, அதனாவா...

"இல்லல. அவரை வழிமறித்துப் பேசி உமக்கு மூளை யிருக்கிறதா. ஏன் இப்படி ஒரு கோயில் கட்டுகிறீர் என்று கேட்க வேண்டுமென்ற ஆசையிருக்கிறது."

விகர்ணன் சொல்லும்போதே ஓவியன் கோபமாக அவனை நோக்கி அவன் தொண்டைக் குழியில் கைனவக்க விகர்ணன் மௌனமாக இருந்தான்.

"லேண்டுமென்றால் அடித்துவிடு. கோபத்தை குறைத்துக் கொள். பிறகு தொடர்ந்து பேசலாம்." விகர்ணன் சொவ்ல அவன் மௌனமாக அதேசமயம் கடுமையாக முறைத்து விகர்ணனைப் பார்த்தான்.

"நீ கை ஓங்கி விட்டதாலேயே நான் பயந்துவிட்டேன் என்று அர்த்தமல்ல. உனக்கு ஓவியம் வரையத் தெரியும். சிற்பத்தோடு சம்பந்தம் உண்டு என்பதாலேயே இதைப்பற்றி நான் பேசினேன். உண்மையில் சிற்பம் தெரிந்தவன், சித்திரம் தெரிந்தவன் நான் சொன்ன விஷயத்தை நன்கு புரிந்துகொண்டு உடனே தனக்குள் கேள்வி கேட்டுக் கொள்வானே தவிர கோபமாக தாக்குவதற்கு வரமாட்டான். உனக்கு இன்னும் சிற்பத்திலும், சித்திரத்திலும் பயிற்கியில்லை என்பது தெரிகிறது வெறுமே பரவசப்பட்டு கற்றுக் கொண்டிருக்கிறாய். தஞ்சையில்தானே உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் கோயில் கட்டப் போகிறார்."

"ஆமாம்...

"சிற்பிகள் அங்கு வந்து சேர்ந்து விட்டார்கள் அல்லவா..."

"ஆமாம்...

"அவர்களின் தலைமைச் சிற்பி அங்கு இருக்கிறார் அல்லவா...?"

"இருக்க வேண்டும்...

"அப்படியானால் அவரை எனக்கு அடையாளம் காட்டு வாயா?"

"எதற்கு? இந்தக் கேள்வியைக் கேட்கவா..."

"இல்லை. ஏழுபனை உயரம் கட்ட எங்கிருந்து கல் லருகிறது. என்ன விதமான கல்லைத் தேர்ந்தெடுக்கிறீர்கள். கீழ் பரப்பு என்ன என்று ஒரு கேள்வி எனக்கு இருக்கிறது..."

"உங்கள் கேள்வியின் அடிப்படை விஷயம் எனக்குப் புரிய வில்லை...

"ஏழு பனை உயரம் என்பதை நானும் கேள்விப்பட்டேன். ஏழு பனை உயரம் கோயில் எழுப்ப வேண்டுமென்றால் மூன்று பனை ஆழம் அஸ்திவாரம் தோண்டியிருக்க வேண்டும். மூன்று பனை ஆழம் அஸ்திவாரம் தோண்டினால் நீரை என்ன செய்வது. எப்படி குறைப்பது. ஊறிக்கொண்டே இருக்கிற நீரை எப்படித் தடுத்து நிறுத்துலது. அருகே கால்வாய் ஓடிக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

காவ்வாய் ஓடினால் நீரை இறைத்து மாளாது. எனவே மூன்று பனை ஆழம் தோண்டவே முடியாது. மூன்று பனை

ஆழம் தோண்ட முடியாவிட்டால் ஏழு பனை உயரம் எந்தக் கோயிலையும் எழுப்ப முடியாது. இது இயலாத காரியம். முடியாத வேலை."

"ஆக நீர் தஞ்சைக்கு வந்தது இந்தக் கோயிலை பார்ப்பதற்கா."

"வெகு நிச்சயமாய். அதற்கு மட்டுமே. இதோ என் கையில் ஒரு ஓலையும் கொடுத்திருக்கிறார்கள்."

அலன் மடியிலிருந்து ஒரு சுருளைப் பிரித்து நீட்டினான்.

"என்ன ஓலை அது?" லாங்காமவ் ஓவியன் கேட்டான்.

"இளவரசர் இராஜேந்திரர் தன் கைப்பட எழுதிக் கொடுத்த ஓலை..."

"என்னவென்று எழுதியிருக்கிறார்...

"எனக்குத் தமிழ் தெரியாது. பேச மட்டுமே தெரியும். நீ படித்துச் சொல்..."

மெல்ல மெல்ல லெளிச்சம் மங்கிக் கொண்டிருக்க, மழை மேகம் திரண்டு கொண்டிருக்க, ஓவியன் சீராளன் அந்த ஓலையை படிக்கத் துவங்கினான். ஒரேயொரு லாரி எழுதியிருந்தது. இராஜராஜேந்திரருடைய முத்திரை இருந்தது. கையொப்பமும் இருந்தது. கையொப்பத்தைச் சரிபார்த்துக் கொண்டு ஓவையைத் தடவிப் படித்தான்.

'இலன் விகர்ணன், ராஷ்டிரகூடச் சிற்பி. உபயோகப் படுத்திக் கொள்ளவும். இது என் எழுத்து இராஜேந்திரன்' என்று மிகச் சுத்தமாக எழுதப்பட்டிருந்தது.

"உங்களைச் சிற்பி என்றும் உபயோகப்படுத்திக் கொள்ளுங் கள் என்று இராஜேந்திரர் பொதுவான ஒரு அறிமுகக் கடிதம் கொடுத்திருக்கிறார். இன்னாருக்கு என்று சொல்லப்படவில்லை. சொல்லப்படாதது நல்லதும்கூட..."

"இந்த ஓலையைக் கொடுத்து லாங்கிக் கொள்ளலாமல்லலா. எனக்கு இந்த நியதி புரியவில்லை. ஒரு லேளை இது மாமன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரிடம் போக வேண்டுமோ என்ற பயத்தில் இருந்தேன்."

"அல்வ, பெருந்தச்சரிடம் போனாவ் போதும். மந்திரி கிருஷ்ணன் ராமனான பிரம்மராயரிடம் போனால் போதும், லந்தியத் தேவரோ அலருடைய துணைவி

யார் குந்தவைப் பிராட்டியார் பார்த்தாலும் கூட உங்களுக்கு நல்லது செய்து வருவார்கள்...

அலர்கள் நகரத்தின் வாசலுக்கு வந்தார்கள். நகரத்தின் ஊடே நடத்திச் செல்லப்பட்டார்கள். பொதுமக்கள் திரளாக வேடிக்கை பார்க்கத் துவங்கினார்கள். நிறைய பெண்கள் மாடத்திலும், வீட்டு வாசலிலும், திண்ணை மீதும் ஏறிக் கொண்டு லருபவர்களை வேடிக்கை பார்த்தார்கள்.

தஞ்சை நகரத்துப் பெண்கள் அழகானவர்கள். கவர்ச்சியாய் உடுத்தக் கூடியவர்கள். எப்பொழுதும் அலங்கார பூஷணியாய் இருக்கிறவர்கள். ஆண்களைக் கவரும் வித்தை களைத் தெரிந்தவர்கள். நிறைய அணிகலன்களோடும், பட்டாடைகளோடும், தலைப் பின்னல்களோடும், பூக்களோடும், வாசனைகளோடும், வெற்றிலை போட்டு சிவந்த சாறொடும், கையில் குலுங்கும் லளையல்களோடும், கால் தண்டை களோடும், மேலாடை நழுவி நிற்க, வந்த வீரர்களை வியப்போடு அந்த பெண்கள் பார்க்க, வீரர்களைப் பற்றி ஏதோ சொல்லி உரத்துப் பேசினார்கள்.

மாலை மங்கி மழை மேகங்கள் திரண்டு பூமியை மேலும் இருட்டாக்கிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் சாளுக்கிய வீரர்கள் உள்ளே நுழைந்தனர். பிறந்த தினத்திலிருந்து தஞ்சை...தஞ்சை என்று சோழ மன்னனைப் பற்றி எத்தனையோ விதமாக கேள்விப்பட்டுக் கொண்டிருந்த வாசகங்கள் எல்லாம் காதுக்குள் ரீங்கரித்தன. எல்லோர் கண்களும் தஞ்சையை ஆவலுடன் விழுங்கின.

மேலைச் சாளுக்கிய தேசத்தில் நகரங்கள் உண்டு. பெரிய கோட்டைகள் உண்டு. உயர்ந்த மாட மாளிகைகள் உண்டு. ஆனால் இத்தனை சீராகவும், நேராகவும், உறுதியாகவும், எடுப்பாகவும், கவர்ச்சியாகவும் ஒரு நகரம் அமைந்திருக்குமா என்று அலர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அநேகமாய் எல்லா மாட மாளிகைகளிலும் சோழ தேசத்தின் புலிக்கொடி பறந்து கொண்டிருந்தது. மஞ்சள் நிறக்கொடியில் சிகப்பு நிறத்தில் புலி எழுதப்பட்டிருந்தது. பலர் வீட்டு வாசலில் லேப்ப மரம் லளர்த்து வைத்திருந்தார்கள். அந்த லேப்பமரத்திற்கு மாலை போட்டு மஞ்சள் குங்குமம் அபிஷேகம் செய்திருந்தார்கள். வீட்டுத் திண்ணையை ஒட்டிய கலரில் காவல் தெய்லங்கள் படமும், நடுநாயகமாக உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேலர் படமும் வரைந்திருந்தார்கள்.

ஒரு வீட்டு வாசலில் கந்தர சோழருடைய சிலை இருந்தது. அதற்கெதிரே அணையாத தீபம் ஒன்று எரிந்து கொண்டிருந்தது. சீவி சிங்காரித்து, மிக வண்ணமயமான உடையணிந்து, நகைகள் அணிந்து மாடமாளிகையிலிருந்து பெண்கள் எட்டிப் பார்த்தார்கள். வீரர்களைப் பார்த்து வாய் பொத்திக் கொண்டார்கள்.

மேலை சாளுக்கிய வீரர்களால் எத்தனை சிரமம் என்ற விதமாய் பேசிக் கொண்டார்கள். வேசாய் கோபத்தையும், வெறுப்பையும் முகத்தில் காட்டினார்கள்.

இளவரசர் கைது செய்து விட்டது பல நூறாயிரம் பேர். எஞ்சியவர்களே இங்கு வந்திருக்கிறார்கள். எஞ்சியவர்களே இத்தனை கூட்டம் என்றாவ் இளவரசர் எப்பேர்ப்பட்ட படையை ஜெயித்திருப்பார் என்று யோசித்துப் பாருங்கள் என்று பெரியவர்கள் சொல்ல, மற்ற பெண்கள் கரகோஷம் செய்தார்கள்.

மேவைச்சாளுக்கிய வீரர்களுக்கு இந்தக் காட்சி புதுமையாக இருந்தது. அழகான பெண்களைப் பார்த்து வெகு நாளாயிற்று. திருவொற்றியூரிவ் தனியிடத்தில் அடைக்கப் பட்டிருந்ததால் பெண்கள் தரிசனம், யதேச்சையாகத்தான் கிடைத்தது. கடற்கரைக்கு வரும் பரதவப் பெண்களைத் தவிர வேறு பெண்களைப் பார்க்க முடியவிவ்லை. அந்த வீரர்களை வெறுப்பேற்றுவதற்காகவே பரதலப் பெண்கள் முன்னும், பின்னும் நடை போடுவார்கள். கைது செய்யப்பட்ட வீரர்கள் சவுக்குக் கட்டைகள் இடுக்கு வழியே உரக்கக் கத்தி தங்கள் வேகத்தைக் குறைத்துக் கொள்வார்கள்.

இங்கு அப்படி கத்த முடியவில்லை. ஆனாவ் கத்துகின்ற எண்ணம் தொண்டைக்குழி வரை வந்து அடைத்து நின்றது. பெண்கள் மிக அழகாக இருந்தார்கள். தலையலங்காரமும், முக அவங்காரமும், உடையலங்காரமும் கொள்ளை கொண்டன.

கையில் பிரம்பு வைத்து நிற்கின்ற அதிகாரிச்சிகள். பூக்கூடை வைத்திருக்கின்ற சேடிப் பெண்கள், மருதாணியும், சந்தனக் குழம்போ தடவி கையை காற்றில் ஆற வைத்திருக்கும் இளவரசிகள், அரச குவப் பெண்கள் என்று பலரையும் பார்த்து வியந்து போனார்கள். இருவரது பார்வையிலும் பரஸ்பரம் ஒரு ஈர்ப்பும், ஒரு எதிர்ப்பும் விநோதக் கவவையாய் இருந்தன.

இரண்டு வீடுகளுக்கு ஒரு இடைவெளிவிட்டு மாளிகைகள் கட்டப்பட்டிருந்தன. ஒரு குதிரை போகும் அந்த சந்திலிருந்து

பெரிய ஓலம் ஒன்று கேட்டது. ஒரு மூதாட்டி ஓடி வந்தாள். அவள் கையில் மிகப்பெரிய கத்தி இருந்தது. சாளுக்கிய வீரர்களில் முதல் வரிசையில் வந்தவனைப் பார்த்து அவள் மிக வேகத்தோடு முன்னேறினாள். வேகமாக வாளைச் சுழற்றினாள். வாள் சுழற்றி பழக்கப்பட்டவள்போல் இருந்தது. ஆனாலும் பிடியில் உறுதியில்லாமல் இருப்பதும் தென்பட்டது. வாள் சுழற்றியபடி, வயதான காரணத்தால் தள்ளாடி அந்தச் சாளுக்கிய வீரனை நெருங்கி அவள் வாள் உயர்த்திக் சுத்தினாள்.

"என் குவத்தை நாசம் செய்த மேலைச் சாளுக்கிய வீரர்கள் மூன்று பேரையாவது கொன்று விட்டுதான் நான் உங்களைப் போக விடுவேன்" என்று சொன்னாள். முதலில் வந்த வீரன் மீது வேகமாக கத்தியை வீசினாள். அந்த வீரன் கையைத் தூக்கி வாளை நிறுத்தினான். அவன் கையின் நடுவில் கத்தி கிழித்து ரத்தம் பொங்கியது. அவன் அவறினான். வலது கையால் அந்த மூதாட்டியை பிடித்துத் தள்ளினான். காவலுக்கு வந்த பாடி வீரர்கள் வேகமாக அவனைப் பிடித்து விலக்கினார்கள். தள்ளு கின்ற வேகத்தில் பிரம்பால் அவன் முகத்திலும், மார்பிலும் அடி வாங்கினான். அந்த மூதாட்டியை அள்ளி எடுத்துக் கொண்டு போய் ஓரமாக நிற்க வைத்தார்கள். கையிலிருந்து வாளைப் பிடுங்கிப் போட்டார்கள்.

"பைத்தியமா உனக்கு. யார் நீ" என்று கர்ஜித்தார்கள். அந்தச் சாளுக்கியப்படை அப்படியே திகைத்து நின்றது. சேனாதிபதிகளும், உபசேனாதிபதிகளும் அந்தக் கிழவியைச் சூழ்ந்து கொண்டார்கள். இது நவ்வதவ்வ என்று எல்லார் முகத்திலும் தெரிந்தது.

"என் மகனைக் கொன்ற மேலைச் சாளுக்கிய வீரன் யார் என் கணவனைக் கொன்ற மேவைச் சாளுக்கிய வீரன் யார்? என் மைத்துனனையும், தகப்பனையும், சிற்றப்பனையும் இந்த மேலைச் சாளுக்கியர்களிடம் நான் பறிகொடுத்திருக்கிறேன். எனக்குக் கொல்ல உரிமை உண்டு. எனக்கு வெட்ட உரிமை உண்டு. எங்கே என் வாள்." அவள் உதறி எழுந்து வாளைத் தேடினாள்.

வாள் அவளிடமிருந்து மறைக்கப்பட்டது. அவள் அழுத்தி நிறுத்தி வைக்கப்பட்டாள்.

"இதற்கு மிஞ்சி நீ கூச்சல் போட்டால் உன்னைக் கட்டிப் போட்டு விடுவோம். விளையாடுகிறாய். இது மன்னருக்குத்

தெரிந்தால் எவ்வளவு கேலலம். ஆயுதம் இவ்லாத ஒரு வீரனிடம் இவ்வளவு பெரிய கத்தி எடுத்துக் கொண்டு போய் வீசுகிறாயே. அவன் கையை வெட்டி விட்டாயே... அறிவிருக்கிறதா உனக்கு.

ஒரு குடும்பத்தில் பலபேர் இறந்திருக்கிறார்கள். போரில் இறந்திருக்கிறார்கள். மேவைச்சாளுக்கியர்களும் இறந்திருக்கிறார்கள். அதை வஞ்சம் தீர்க்க இது சந்தர்ப்பம் அல்ல. உனக்கு சாமர்த்தியம் இருந்தால் உன்னுடைய குடும்பத்திலிருந்து இன்னொரு ஆணைத் தயார் செய்து அனுப்பி மேலைச் சாளுக்கியத்திற்கு மறுபடியும் போய் அலர்கள் வடக்கு எல்லையில் போர் செய்து அங்கிருந்து கைதிகளை இழுத்து வரச் செய்யுங்கள். மேலைச் சாளுக்கியம் முற்றிலும் அழிந்து விடவில்லை. இன்னும் இருக்கிறது. உங்களுக்கு வாய்ப் பிருக்கிறது." என்று இன்னொரு உபசேனாதிபதி கத்தினார்.

படை திகைத்துக் கிடந்தது.

88

"இப்பொழுது என்ன செய்வது." - சேனாதிபதிகள் கற்றி நின்று பேசினார்கள்.

"இது மிக மோசமான விஷயம். வந்தவுடன் இரத்தம் சிந்துவது அவர்களுக்குக் கசப்பைக் கொடுக்கும். நம்முடைய லேலை கோவில் லேவை. அலர்கள் இஷ்டமில்லாமல் இவ்வளவு தொவைவு லந்திருக்கிறார்கள். இந்த வரவேற்பு அசிங்கமானதாகவும் இருக்கிறது.

மன்னருக்கு இது தெரிந்தால் மிகக் கோபமாக நடந்து கொள்வார். எதற்கும் லாயக்கிவ்லாதலர்கள் என்று நம்மைப் பார்த்து ஏசுவார். லேடிக்கை பார்க்கும் கூட்டம் என்று மெத்தன மாக இருந்தது பிசகு.

உபசேனாதிபதிகள் குதிரையில் ஏறுங்கள். அதிகம் சோழப் படை வீரர்களை வரவழையுங்கள். முன்னும் பின்னும் அவர் களை நமது வீரர்கள் காலல் காக்கட்டும். சோழ சேனாதிபதிகள் குதிரைகள் பக்கவாட்டில் நடக்கட்டும். அவர்களுடைய இடம் வரும்வரை எந்த விதமான அவமரியாதையும் இவர்களுக்கு நடக்கக்கூடாது. எங்கே அந்த அடிபட்ட வீரன். உடனடியாக

அவனை ஒரு சிறு தேரில் அமர்த்தி ஆதுரச்சாலைக்கு எடுத்துப் போங்கள். அரச குடும்பத்திற்கு என்னவிதமான வைத்தியம் உண்டோ அதை அவனுக்கு செய்யுங்கள்."

"இந்தக் கிழவியை என்ன செய்வது?"

"அரசர் வரும்வரை ஏதேனும் ஒரு சிறிய கொட்டடியில் போட்டு வையுங்கள். நமது கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர் வீட்டின் வாசலில் ஒரு கொட்டடி இருக்கிறது. அங்கே இந்தக் கிழவி இருக்கட்டும். இந்தக் கிழவி யார்? இவள் பின்னணி என்ன என்பதை விசாரித்துவிடுங்கள். வேறு யாரேனும் இதுபோல் முன்னேறி வந்தால் சற்றும் தாமதிக்காமல் மிக மோசமான தண்டனை கொடுங்கள். பிரம்பால் விளாசுங்கள். விளையாட்டிற்குக்கூட இவர்களை எவரும் இம்சைப்படுத்த லாகாது."

ஒரு சேனாதிபதி உரக்கக் கத்தி மடமடவென்று உத்தரவு கள் பிறப்பிக்க, வீரர்கள் வரிசையானார்கள். முன்னே நின்று சாளுக்கிய வீரர்களைப் பாதுகாத்தார்கள். இடதும், வலதும் குதிரைகளில் உபசேனாதிபதிகள் வந்தார்கள். பின்னேயும் ஒரு சிறியபடை அவர்களுக்காக நிறுத்தப்பட்டது.

சாளுக்கிய வீரர்கள் மொத்தமும் மிகக் கவனமாக இதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். உபசேனாதிபதிகளின் பேச்சை காதோடு காதாக... காதோடு காதாக... கடைசி வரை பரவியது.

"நல்லது. நாம் எதிர்பார்த்ததை விட சோழப் படை வீரர்கள் மிக மரியாதையாக நடத்துகிறார்கள். ஏதோ ஒரு பைத்தியக்காரக் கிழவி மனம் பேதலித்து நம்மீது பாய்ந்து விட்டாள். அடிபட்டவன் எப்பொழுதுமே பல்கடித்துக் கொண்டு நடக்கிறவன். அப்படிச் செய்யாதே. வேறு தேசத்தில் வேறு இடத்தில் இருக்கும் பொழுது பல்கடித்து மீசை முறுக்கினால் அது தவறாக வரும் என்று சொன்னேன். கேட்கா மல் ஒவ்வொரு முறையும் பல்கடித்து மீசை முறுக்குகிறான். கடைசியில் வெட்டுப்பட்டான். இனி அந்தப் பழக்கத்தை விட்டு விடுவான் என்று நினைக்கிறேன்."

சாளுக்கிய வீரர்கள் நடந்துகொண்டே பேசினார்கள். வடக்கிலிருந்து கிழக்குப்பக்க வீதியில் நடந்து தெற்கு நோக்கி நகர்ந்தார்கள். தெற்கில் மிகப் பெரிய தென்னந்தோப்பு இருந்தது.

அந்த தென்னந்தோப்புக்குள் நுழைந்தார்கள். சோழ வீரர்கள் விலகிக் கொள்ள, என்ன என்று திகைத்தார்கள்.

"உங்களில் யாரேனும் ஒருவனை நீங்கள் தலைவனாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். மூன்று பேரை உபதலை வராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். உங்களுக்கு இருப் பிடம் இதுவே. இதைச் சுற்றி வேலி கட்டப்பட்ட மாட்டாது. நீங்கள் போகவேண்டுமென்று தீர்மானித்தால் ஒளிந்து பயந்து போக வேண்டாம். எங்களிடம் சொல்லி உத்தரவு பெற்று, நீங்கள் பாண்டிய தேசம் வரை போவதற்குண்டான ஓலை பெற்று போகலாம்.

ஒருவேளை ஒளிந்து மறைந்து போவீர்கள் என்றால், வழியிலே மடக்கி நீங்கள் யார் என்று விசாரிக்கும்பொழுது பதில் சொல்ல முடியாமல் மறுபடியும் இங்கு திருப்பி அனுப்பப் படுவீர்கள். எங்கள் ஓலை இருந்தால் பாண்டிய எல்லை வரை நீங்கள் அனுப்பப்படுவீர்கள்.

எனவே, எந்தக் காவலுமில்லாமல் நீங்கள் இங்கு வைக்கப் பட்டிருக்கிறீர்கள். இதோ இங்கிருந்து அரைகல் தொலைவில் மிகப் பெரிய புல்வெளியில் கோயில் எழும்பப் போகிறது. அந்தப் புல்வெளிக்கு அப்பால் உள்ள இடத்தில் சிற்பிகள் தங்கியிருக் கிறார்கள். இரண்டு நாட்கள் நன்கு ஓய்வெடுத்துக் கொள்ளுங் கள். இன்னும் சற்று நேரத்தில் கடகட அரிசிச்சோறும், கதம்பக் குழம்பும், கத்திரிக்காய் கறியும் உங்களுக்குப் பரிமாறப்படும். உடல்வலி நீங்குவதற்காக சிறிதளவு மது வழங்கப்படும்.

உடம்பு முடியாதவர்களுக்கு, ஜுரம் அல்லது வேறு ஏதேனும் உபாதை இருக்கிறவர்களுக்கு இங்கு ஆதுரச்சாலை இருக்கிறது. காவலுக்காக இங்கு பதினாறு வீரர்கள் நிறுத்தி வைக்கப்படுவார்கள். உங்களுக்குத் தேவையானவற்றை அந்த வீரர்களிடம் தெரிவித்தால் அவர்கள் உடனடியாக நிறைவேற்று வார்கள்.

சாளுக்கிய வீரர்களே... தெள்ளத் தெளிவாக உங்களிடம் ஒன்று சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் கைதிகள் அல்ல. உங்களைக் கைதியாக எவரேனும் நினைப்பீர்கள் என்றால், அவர்கள் உடனடியாக இந்தத் தஞ்சை நகரை விட்டு வெளியேறி விடலாம். நீங்கள் கோயில் பணிக்காகக் கொண்டு வரப்

பட்டிருக்கிற வீரர்கள். நீங்கள் விரும்பி தஞ்சைக்கு வருவதற்கு ஒத்துக் கொண்டிருப்பீர்கள் என்பதை நினைவூட்டுகிறேன்.

எனவே, சுமுகமாக, மிக மிகச் சுமுகமாக இந்தத் தஞ்சை நகரில் நீங்கள் இருக்க வேண்டும். நல்லபடி வாழ்ந்து, திரும்பவும் உங்கள் நகருக்குப் போக வேண்டும் என்று விரும்புகின்றேன். எந்தக் குறையிருந்தாலும், எப்பொழுது வேண்டுமானாலும் இங்குள்ள வீரர்களிடம் தெரிவிக்கலாம். ஒரு உபசேனாதிபதி எப்பொழுதுமே உங்களுடன் இருப்பார்" என்று சொல்லிவிட்டு, அந்தச் சேனாதிபதி குதிரையைத் திருப்பிக் கொண்டுபோக, தென்னந்தோப்புக்குள் அந்த வீரர்கள் நுழைந்தார்கள்.

தென்னந்தோப்புக்குள் நுழையுமிடத்தில் மூன்று சோழ வீரர்கள் காவல் இருந்தார்கள்.

"இது தாண்டிப் போக வேண்டுமென்றால் ஒரு வார்த்தை சேனாதிபதியிடம் கேட்டுவிட்டுப் போங்கள்."

"நாங்கள் நகரைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்றால் அனுமதியுண்டா?"

"இப்போதைக்கு இவ்லை. பிற்பாடு சர்லசாதாரணமாக அது ஏற்படும்."

"எப்படி...?"

"உங்களுக்கென்று ஒரு அடையாளச் சின்னம் கொடுத்து விடுவார்கள். உங்கள் கைகளிவ் இரும்பு வளையங்களை மாட்டி விடுவார்கள். அந்த இரும்பு வளையங்கள் நீங்கள் சாளுக்கிய வீரர்கள் என்று உங்களைத் தெரியப்படுத்தும். அந்த இரும்பு வளையங்கள் இருக்கும் வரை நீங்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாம். இரும்பு வளையங்கள் இல்லாதவர்கள் நகர முடியாது."

"எப்பொழுது இரும்பு வளையங்கள் தருவீர்கள்?"

"இன்னும் இரண்டு, மூன்று நாட்களிவ் தரப்படும். உங்களில் வெகு சிலருக்கே முதலில் இரும்பு வளையங்கள் தரப் படும். பிறகு உங்கள் நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டு மற்றவருக்கும் வழங்கப்படும்."

"கோயிவ் வேலை எப்பொழுது துவங்குவதாக உத்தேசம்." – ஒரு சாளுக்கிய வீரன் கேட்டான்.

"துவங்கியாகி விட்டது. அடிக்கல் நாட்டி களிற்றையும பிடியையும் சுற்றி வரச்செய்து எவ்வைகள் வகுத்தாகி விட்டன. இங்கே என்னென்ன விதமான சந்நிதிகள் வரவேண்டுமென்று வரைபடங்களும் தயாராகிவிட்டன. எனவே, நன்கு ஓய் வெடுத்துக் கொண்டு கோயில் வேலைக்காக உங்கள் மனத்தைத் தயார் செய்து கொள்ளுங்கள்."

"என்ன விதமான வேலைகள் இருக்கும்...

"எங்களுக்குத் தெரியவில்லை..."

"பரவாயில்லை சொல்லுங்கள். கல் உடைக்கிற வேலையா? கல் தூக்குகிற வேலையா?"

"இரண்டும்தான்." ஒரு உபசேனாதிபதி உரத்துச் சொன்னான்.

"எங்கிருந்து தூக்கி வரவேண்டும்...

"உங்கள் வேலையை எளிதாக்க பல ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மிகப் பெரிய தேர் அடிப்பாகங்கள் உருவாக்கி கொண்டிருக்கின்றன. ஆறு அல்லது எட்டு சக்கரங்கள் பொருத்திய வண்டியில் கருங்கற்களை வைத்து இழுத்து வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆட்கள் மட்டுமே அவ்வண்டிகளை இழுக்க முடியாது. முட்டுக் கொடுக்க யானையும், இழுக்க இன்னொரு யானையும் இருக்கும் பொழுது அந்தச் சக்கரங்களைச் சரியாக திசை திருப்பி எடுத்து வர உங்கள் உதவி தேவை. அதற்கு முன்னர் அம்மாதிரி கருங்கற்களை எடுத்து வருகின்ற பாதை போடவும் உங்கள் உதவி தேவை."

"ஆக, கூலி வேலை என்று சொல்லுங்கள்..."

"உண்மை, உங்களோடு தோளோடு தோளாக சோழ, வீரர்களும் இருப்பார்கள். இது அரசனுக்குச் செய்கின்ற கூலி அல்ல. சோழ தேசத்திற்குக் கொடுக்கின்ற கூலி அல்ல. இறைவனுக்கு நீங்கள் செய்கின்ற கூலி வேலை. மறுபடியும் சொல்கிறோம். இஷ்டமிருப்பின் இருக்கலாம். இல்லையெனில் போகலாம்."

"நான் போக விரும்புகின்றேன்."

– ஒருவன் உரக்கக் கத்தினான்.

எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

குண்டாக, மிக குண்டாக சிறிய தாடியுடன், உச்சிக் கொண்டையுடன் அந்த வீரன் கையில் கோவோடு நின்றிருந் தான். இடுப்பில் கோமணமும், மேலே மெல்லிய பட்டும் சுற்றியிருந்தான்.

அவன் முகம் மேவைச் சாளுக்கிய முகமாகத் தெரிய வில்லை. சேர தேசத்து அந்தணன் போல இருந்தான்.

அப்படி உரக்கக் கத்தியவனை கூட்டத்தோடு கூட்டமாக நின்றிருந்த ஓவியன் உற்றுப் பார்த்தான். அவனை அனுமதிப்பது நல்லது என்று சோழ வீரனுக்குச் சொல்ல, அவனுக்கு ஆவலாக இருந்தது. ஆனால் அவன் நினைக்கும் முன்பே உபசேனாதிபதி முன்னேறி அவனுக்கு அருகே போய் கைப்பிடியாக வெளியே இழுத்து வந்து, 'நீ போகலாம்' என்று கட்டளையிட்டான்.

"அதோ... மேற்கு நோக்கி அறுபது காத தூரம் நடந்தால் பாண்டிய தேசத்தின் முக்கிய நகரம் ஒன்று வந்துவிடும். அதற்குப் பிறகு அங்கிருந்து சேர தேசத்திற்கு வழி சொல்வார்கள். நீ இப்பொழுது இந்த க்ஷணமே போகலாம்." என்று சொன்னான்.

அந்த வீரன் திரும்பிக் கையசைத்துவிட்டு வேகமாக மேற்கு நோக்கி நடக்கத் துவங்கினான். ஓவியன் பதறி ஒரு சோழ வீரனை அணுகினான்.

ஆனால் ஓவியன் சீராளனும் அறியா வண்ணம், அந்தக் குண்டனை பெண் அதிகாரிச்சிகள் புல்லுக்கட்டு அரிவாளுடன் வேளாளர் பெண்கள் போலுள்ள உடையில் பின் தொடர்ந் தார்கள்.

அந்தக் குண்டனை தஞ்சை நகரத்து எல்லையில் சிலர் தொடர்பு கொண்டார்கள். குதிரைகளிலும் மேலும் பெண் அதிகாரிச்சிகள் அனுப்பப்பட்டார்கள்.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் புலவரைப் போல் வேட மணிந்து வடக்கு நோக்கி நடக்க, அவர் பின்னே தலையில் பால் குடத்தோடும், கையிலே கதிர் அரிவாளோடும் சில பெண்கள் நடந்து போனார்கள். உற்றுக் கவனிக்க, அந்தப் பெண்களும் அதிகாரிச்சிகள் என்பது தெரிந்தது.

கருந்தட்டாங்குடி கிராமத்திற்குள் நுழையும் போது அங்கு ஒரு வீட்டு வாசலில் இரண்டு பெண்கள் நின்று கொண் டிருந்தார்கள்.

மன்னர் அவர்களைப் பார்த்துத் தலையசைத்தார். அந்தப் பெண்கள் எழுந்து நின்று, "புலவர் ஐயாவா... லருக வருக." என்று கைகூப்பினார்கள்.

"குதிரைகளை இந்த வீட்டுக்குப் பின்னால் கட்டியிருக் கிறோம். எந்த நேரமும் தயாராக இருக்கிறோம்." என்று பதில் சொன்னார்கள்.

புலவர், அவர்களை ஆசிர்வதிப்பது போல் கை உயர்த்தி விட்டு கருந்தட்டாங்குடிக்குள் அதிகாரிச்சிகளுடன் நுழைந்தார்.

கருந்தட்டாங்குடி புகை படிந்த கிராமமாக, எந்நேரமும் அகன்ற நெருப்பு எரிந்து கொண்டிருக்கின்ற கிராமமாக இருந்தது. சம்மட்டி ஒலிகள் தொலைவில் கேட்டன.

ஊருக்குச் சற்றுத் தள்ளி வயல் லெளியில் கருப்பு மணல் பகுதியில் குழிகள் தோண்டி, செங்கல் அடுக்கி பெரிய உலை வைத்து, அருகில் இரும்பு போட்டுக் காய்ச்சி, அந்த உருக்கிய இரும்பை எடுத்துக் கொண்டு போய் விதம் விதமாக அச்சில் ஊற்றி, அந்த அச்சிலிருந்து ஊற்றிய இரும்புத் துண்டங்களை எடுத்து கத்தியாகவும், கேடயமாகவும், ஈட்டியாகவும், வாளாகவும் ஒரு கூட்டம் தயார் செய்து கொண்டிருந்தது.

புலவர் உள்ளுக்குள்ளே நுழைகிறபொழுது, நூற்றுக்கணக் கான ஈட்டி முனைகளுக்காய் இளைஞர்கள் உருகிய இரும்புக் குழம்போடு ஓடிக்கொண்டிருந்தார்கள். பதம் குறைவதற்குள் அச்சில் ஊற்றி லார்த்து வேறு பக்கமாகக் குழம்பு பிடிக்க நகர்ந்து கொண்டிருந்தார்கள். அப்படி அவர்கள் ஊற்று வதையும், ஓடுவதையும் புதிதாக வந்த சாளுக்கிய வீரர்கள் சில பேர் லேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். புலவர் அந்த சாளுக்கிய வீரர்கள் கூட்டத்தை உற்றுப் பார்த்தார்.

"என்ன வேண்டும் பெரியவரே." – ஒரு வாலிபன் தோளில் சம்மட்டியுடன் நின்று கொண்டிருந்தவன் புலலரைப் பார்த்துக் கேட்க, "எனக்கு நூறு எழுத்தாணிகள் தேவைப்படுகின்றன." என்றார் புலவர்.

"நாங்கள் இரும்பல்லவா ஊற்றிக்கொண்டிருக்கிறோம். எழுத்தாணி பித்தளையில் இருந்தால் அல்லவா நல்லது. இரும்பு துருப்பிடிக்கும். கையை அறுக்குமே."

"இல்லை. எனக்கு லெண்கலத்திலோ, பித்தளையிலோ வார்த்துக் கொடுத்தல் வேண்டும். வெண்கலமும் பித்தளையும் கலந்திருந்தால் நல்லது. நன்றாக இருக்கும்."

"எதற்காக நூறு ஆணிகள்? ஏதேனும் பாடசலை ஆரம் பிக்கப் போகிறீர்களா?" – அந்த இளைஞன் கேள்வி கேட்டான்.

89

புலவர் அந்த கருத்தட்டாங்குடி கருமாரைக் கூர்மையாகப் பார்த்தபடியே பேசினார்.

"இல்லை. கோயில் கட்டுவதற்கு இந்த நூறு ஆணிகளை நான் தானமாகக் கொடுக்கலாம் என்றிருக்கிறேன். உத்தரவு அனுப்பும் அதிகாரிகளுக்கும், அடுத்த நாள் வேலையைப் பற்றி குறிப்பு எடுக்கும் சிற்பிகளுக்கும் இந்த எழுத்தாணிகள் அவசிய மாகின்றன. அது தவிர கோயில் சம்பந்தமான எந்த வேலையை நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று பார்க்கவும் ஆசை."

"கோவில் சம்பந்தமான வேலை ஒன்றுகூட ஆரம்பிக்க வில்லை. குறைந்த பட்சம் உளியைக்கூட எங்களுக்குச் செய்ய உத்தரவு வரவில்வை. நாங்கள் இல்லாமலேயே கோயில் லேலை நடந்து விடுமோ என்று கவலை இன்று காலை சிலபேருக்கு லந்தேவிட்டது."

"அதெப்படி கருந்தட்டாங்குடி கருமார்கள் உதவியிவ்லா மல் கோயில் எழும்ப முடியும். நீங்களின்றி எந்தக் காரியத்தை இந்த நகரம் செய்திருக்கிறது. உங்களைத் தவிர்த்துவிட்டு வேறு எதை அந்த அரசாங்கம் செய்து ஜெயித்துவிட முடியும்? சோழ தேசத்தின் ஒரு கண் உழவர்கள் என்றால், மறுகண் கருமார்கள்."

"அப்படிச் சொல்வதற்கில்லை நண்பரே."

"வேறு எப்படி சொல்ல வேண்டும்?"

"உழவர்கள் ஒரு கண் என்றால், அந்தணர்கள் இன்னொரு கண். அப்படித்தான் இந்த சோழ தேசம் நினைத்துக் கொண்டிருக்கிறது. நடத்திக் கொண்டிருக்கிறது. கருமார்களான எங்களைப் பற்றி அதிகம் கவலைப்படுவதாக தெரியவில்லை."

"யார் உங்களைப் பற்றி கவலைப்பட வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? அரசாங்கம் கலலைப்படவில்லையென்று எப்படிச் சொல்கிறீர்கள்?"

"அடிப்படை வசதிகள் ஒன்றுகூட இந்தக் கிராமத்திற்கு செய்து தரவில்லை."

"அப்படியா... ஆச்சரியமாக இருக்கிறதே. தஞ்சைக்கு அருகேயிருக்கின்ற ஒரு கிராமம், படைகளுக்கு வேண்டிய ஆயுதங்களைச் செய்து தருகின்ற இந்தக் கிராமம், இதுவரை எல்லாப் போரிலும் ஜெயிப்பதற்குக் காரணமாக இருந்த ஒரு கிராமம். இத்தனை சேனாதிபதிகளும், உபசேனாதிபதிகளும் போர் வீரர்களும் உங்களை அண்டி வந்து கத்தி தீட்டவும், வேல் முனை சரி செய்யவும், கேடயத்தை சரி செய்யவும் உங்களை அணுகுகிறார்கள். உங்களைப் பாராட்டி புகழ்ந்துவிட்டுப் போகிறார்கள். இப்படி நீங்கள் நொந்து கொள்ளும்படி இங்கு என்ன குறை இருக்கிறது!"

"குளிப்பதற்கு வசதியில்லை ஐயா."

"என்ன சொல்கிறீர்கள்." - புலலர் வேகமாகக் கேட்டார்.

"இங்கு கருந்தட்டாங்குடியிலிருந்து சற்று தொலைவே ஆற்றுக்குப் போக வேண்டியிருக்கிறது. கிராமத்திலுள்ள கேணி களும், குளங்களும் புகை தூசு பட்டு கலங்கலாகக் காட்சி யளிக்கின்றன.

பூமி எப்பொழுதும் நெருப்பு எரிந்து சூடாக இருப்பதால் நீரும் சூடாக இருக்கிறது. மீன்கள் அந்தச் சூடு நீரில் இருப்ப தில்லை. எனவே அழுக்கு மண்டி, தூக மண்டி, பாசி குறைந்து குளங்களும், கிணறுகளும் காணப்படுகின்றன. மீன்களைக் கொண்டுவந்து விட்டாலும் மூன்றாம் நாள் மீன்கள் இறந்து போகின்றன.

பூமியில் இத்தனை சூடு இருக்கிறபொழுது கிணற்றுநீர் குளுமையாக இருக்காது என்று கட்டிட லல்லுனர்கள் சொல் கிறார்கள். நாங்கள் இங்கு குளிக்க வேண்டுமென்றால் எங்களுக்கு ஒரு கால்லாய் வேண்டும். இப்படியொரு கால்வாய் இந்தப் பக்கம் வெட்டித்தாருங்கள் என்று பல முறை சொல்லி யும் யாரும் கேட்கவில்லை. நாங்கள் கால்வாய் வெட்டுலதற் கென்று நூறு ஆட்கள் கேட்டோம். இதோ பாருங்கள்... இருபது பேர்தான் உங்களுக்கு என்று சொல்லிவிட்டு பத்தாயிரம் பேரை உள்ளுக்குள்ளே கூட்டிக் கொண்டு போகிறார்கள்."

"இவர்கள் சாளுக்கிய வீரர்கள். நீங்கள் தேர்ந்தெடுத்ததா?"

"நாங்கள் ஒன்றும் தேர்ந்தெடுக்கவில்லை. குத்துமதிப்பாக நீ வா... நீ வா... என்று இருபது பேரை அழைத்து இங்கு நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இவர்களால் இரும்பு வேலை செய்ய முடியுமா. இரும்பு வேலையில் விருப்பமுண்டா. விருப்பமில்லாமல் இரும்பு வேலை செய்தால் எல்லாம் வினையாக முடியும். வேலை பாதியில் நிற்கும். இரும்பை உருக்கி ஊற்றுவது ஓடி ஓடி செய்யவேண்டிய வேலை. அப்படிப்பட்ட ஓட்டம் இவர்களில் யாரால் ஓட முடியும். இப்படி வெறும் ஆட்களை கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போனால் நாங்கள் என்ன செய்வது?"

"ஆக உங்களுக்கு நூறு ஆட்கள் வேண்டுமென்று சொல்கிறீர்களா..."

"ஆமாம், நூறு ஆட்கள் வேண்டும்."

"கால்வாய் வெட்டுவதற்கா?"

"தெரியவில்லை. நாங்களாக கால்வாய் வெட்டிக் கொள்ளலாமா என்று தெரியவில்லை. அது ஆற்றுக்கு இடைஞ்சலா... இது கிராமத்திற்குச் சரியானதா என்று தெரியவில்லை. அரசருடைய உத்தரவு இல்லாமல் கால்வாயை நகர்த்தலாமா என்பதும் எங்களுக்குப் புரியவில்லை. நெருப்பிலே வெந்து வேலை செய்கிற எங்களுக்கு இரண்டு வேளை குளிக்காமல் போனால், உண்ட உணவு செரிமானம் இல்வாமல், போகிறது. மறுபடியும் வேலைக்கு வருவதற்கு முடியாமல் சோர்வாக இருக்கிறது."

"எனக்குப் புரிகிறது. நான் ஏதேனும் சேனாதிபதிகளைச் சந்தித்தால் அவ்லது பிரம்மராயரைச் சந்தித்தால் வெகுநிச்சயமாக இனதப் பற்றிச் சொல்கிறேன். இது முன்பணம், எழுத்தாணிகளுக்காக, இதை யாரிடம் கொடுப்பது."

"வாருங்கள், எங்கள் தலைவரை அறிமுகப்படுத்துகிறேன். அவர்களிடமே கொடுங்கள். நீங்கள் தானமாக கொடுக்கின்றேன் என்று சொன்னதால் ஒரு வேளை அவர்கள் இன்னும் பணம் குறைத்துக் கொள்ளக்கூடும்...

அந்த கருந்தட்டாங்குடி தலைவன் மத்திய வயது உடையவனாக இருந்தான். இராஜேந்திர சோழனோடு சேர தேசத்திற்குப் போய் அங்கே போர் கடிகைக்குப் போய் யுத்தப் பயிற்சிகள் பெற்று வந்தவன்.

சோழப் குடியுரிமை பற்றி உத்தம சோழருக்கும், ஸ்ரீஇராஜராஜருக்கும் பகை மூட்ட பலபேர் முயன்று கொண்டிருக்கும் பொழுது, ஸ்ரீ இராஜராஜர் பின்னடைய உத்தமசோழர் அரியணை ஏறியபோது ஸ்ரீ இராஜராஜருக்கு வேண்டியவர்கள் யார் என்று ஒரு விசாரிப்பு நடந்தது. ஸ்ரீ இராஜராஜரின் நேரடி வாரிசு இல்லாமல் வேறு யார் ஸ்ரீ இராஜராஜருக்கு ஆதரவு தெரிவித்தாலும், அதை மறைமுகமாகக் கண்டிக்க வேண்டும் என்ற எண்ணம் உத்தமசோழரின் அதிகாரிகளுக்கு இருந்தது.

இந்த கருந்தட்டாங்குடியின் தலைலன், அவன் தகப்பனெல்லாம் ஸ்ரீஇராஜராஜசோழருக்கு ஆதரவாக இருந்ததால் கருந்தட்டாங்குடியை விட்டு வெளியே போகவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இங்கே இருந்தால் மெல்ல மெல்ல பிரச்சனைகள் ஏற்படுத்துவார்கள், தொந்தரவு கொடுப்பார்கள் என்பதால் அவர்கள் ஸ்ரீ இராஜராஜர் இருக்கும் உடையார்குடிக்கு இடம் பெயர்ந்தார்கள்.

ஸ்ரீ இராஜராஜர் உடையார்குடியில் தனியாக அரசாங்கம் அமைத்து விடுவாரோ என்ற பயம் உத்தமசோழருக்கு இருந்ததாம். அதை நீக்க வேண்டி தன்னைச் சுற்றியுள்ள ஆட்களை யெல்லாம் வெகுதொலைவுக்கு ஸ்ரீ இராஜராஜ சோழரே அனுப்பி வைக்க நேரிட்டது. இராஜேந்திர சோழனையும் அவர் பிரிந்திருக்க முடிவு செய்தார்.

அப்பாவும், பிள்ளையும் ஒரே இடத்திலிருந்து ரகசிய ஆலோசனைகள் செய்கிறார்கள். மகனை அடுத்தபடி அரசனாகக் கொண்டுவர முயற்சி செய்கிறான் என்றெல்லாம் பேச்சு வரக்கூடாது என்பதற்காக இராஜேந்திர சோழன் தனியாக இருந்து பழகலேண்டும் என்பதற்காக தாயின் ஆதரவும், தகப்பனுடைய செல்வாக்கும் அவனைக் கெடுத்துவிடக்கூடாது என்பதற்காக சேரநாட்டின் கடற்கரையோரம் அமைந்த செம்மண் குன்றுகள் நிறைந்த காந்தளூர்ச்சாலை என்றழைக்கப்பட்ட போர்கடிகைக்கு மகனை அனுப்பி வைக்க, மகனோடு இந்தக் கருந்தட்டாங்குடி தலைவன் போனான்.

“உங்கள் மகனைப் பற்றி கவலைப்படாதீர்கள் ஐயா. நான் அவனுக்குத் துணையிருக்கிறேன்” என்று முன்வந்து கால் தொட்டு பணிவாகக் கைகூப்பிச் சொன்ன அந்த நாள் இன்னும் நினைவிலிருக்கிறது.

சிறுவனாக இருந்த இந்த கருந்தட்டாங்குடித் தலைலனை அப்பொழுது வாரி அணைத்துக் கொண்டதும் ஞாபகம் இருக்கிறது.

'நீங்களெல்லாம் இருக்கின்ற தைரியத்தில் தான் அவனை சேர தேசத்திற்கு அனுப்புகிறேன்' என்று அந்தக் கருந்தட்டாங்குடி தலைவன் தலையை அன்று அவர் தடவினார். அந்தச் சிறுவன் பல்தெரியச் சிரித்தான்.

இப்பொழுது பற்கள் வெற்றிவை பாக்கு போட்டு காவி யேறி கருந்திருக்கிறது. உடம்பு லலுவாக இருக்கிறது. கண்களில் ஒரு சூழ்ச்சி தெரிகிறது. மீசைகள் எடுப்பாக இருக்கின்றன.

இராஜந்திரசோழன் போர்ப்பயிற்சி செய்கிறபொழுது இவன் யார் என்று விசாரித்து காந்தளூரிவ் உள்ள ஆசிரியர்கள் இவனுக்கு எப்படி கருவிகள் செய்வது; கருவிகள் செய்வதி னுடைய நுணுக்கங்கள் என்ன என்பதைச் சொல்லிக் கொடுத்தார்கள்.

போர்ப் பயிற்சி சிறிது எடுத்துக் கொண்டு பிறகு கருவி களுக்காக மண்ணிலிருந்து இரும்பு எடுக்கவும், பித்தளைகள் எடுக்கவும், தாமிரச் கரங்கங்களைக் கண்டுபிடிக்கவும் அலனுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

மிக உன்னதமான அந்த விஷயங்களிவ் தேறி கருந்தட்டாங் குடியில் உலைகள் அமைத்து பல்வேறு தேசங்களிலிருந்து உலோகம் கலந்த மண் எடுத்து வந்து உலோதத்தைப் பிரித்து எடுத்து அற்புதமான கருவிகள் இவன் செய்து கொடுக்க, பல போர்கள் ஜெயிக்கப்பட்டன.

சிறிதளவும் ஓய்லெடுக்காது இரவும், பகலுமாக இந்தக் கருமார் இளைஞர்கள் பேயாய் உழைத்து ஆயுதங்கள் சரிசெய்து கொடுக்க, புது ஆயுதங்களைத் தயார்செய்து கொடுக்க போர் முனைக்கு இடையறாது அம்புகளும், ஈட்டிகளும், கத்திகளும் வந்து சேர்ந்து கொண்டிருந்தன.

இரண்டு பக்கமும் கூரான நுனிகள் முறியாத கத்தியைக் கண்டுபிடித்தது இந்தக் கருமார் இளைஞர்கள்தான். நெருப்பிவ் தகதக்கும் கத்தியைச் சட்டென்று தண்ணீரில் சொருகினால் இரும்பு கெட்டிப்படும் எண்ணெயில் சொருகினால் இன்னும் அதிகமாக கெட்டிப்படும் என்பதையும் இவர்கள்தான் கண்டுபிடித்தார்கள்.

கால் கட்டை விரலிலிருந்து மார்பு வரை உயரமான கத்தியை நீண்ட பிடிகளோடு இவர்கள் தயார் செய்தார்கள். அந்தப் போர் முறையைச் சோழ வீரர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

மயக்க மருத்து தடவிய அம்புகளால் முதலில் எதிரிப் படையை தாக்கிவிட்டு, தேர்களையும், யானைகளையும், ஓட்டிச் சிதறடித்துவிட்டு பிறகு நீண்ட கத்திகளுடன் வீரர்கள் உள்ளே நுழைவார்கள். ஒரு ஆள் பலபேரை தாக்கிச் சிதறடிக்க, அந்தக் கத்திகளை வைத்துக் கொண்டு பயிற்சி பெற்றார்கள். ஒட்டு மொத்தமாய் எதிரிப்படை வந்து தாக்குகிறபோது இந்த நீண்ட கத்தி வீர்ர்கள் அவர்களைத் தடுத்து சரமாரியாய் வெட்டிக் கொன்றார்கள். எதிரிகள் ஆயுதம் எடுப்பதற்கு முன்பே தாக்கிக் காயப்படுத்தினார்கள்.

எல்லா போர் வீரர்களும் முழங்காலோடு ஒட்டிய உறை தைத்துக் கட்டி, அதிவ் குறுவாட்களை வைத்துக் கொள்ளுகின்ற வழிகளையும் இவர்கள்தான் சொல்லிக் கொடுத் தார்கள். அதெல்லாம் போர்க்காலங்களில் உண்டான வித்தை கள். இந்தச் சமாதான காலத்தில் கடவுள் சிலைகள் செய்வதற்கு வெங்கலமும், பித்தளையும், தாமிரமும் தேவைப்பட்டபோது, அவைகளை சரியான விதத்தில் தோய்த்து வெங்கலக் கட்டைகள் வேண்டியிருந்தபோது அந்த வெங்கலக்கட்டைகளைத் தயார் செய்து கொடுத்ததும் இவர்களே.

இராஜேந்திர சோழன் தஞ்சைக்கு வரும்முன் இவர்களோடு இரண்டு நாள் தங்கிவிட்டுத்தான் வருவான். அதற்குக் காரணம் இந்தக் கருந்தட்டாங்குடித் தலைவன். இவன் மீது இராஜேந்திரனுக்கு மிகப் பெரிய மயக்கம் இருந்தது. இரண்டு முறை இராஜேந்திரனைப் போர் முனையில் காப்பாற்றியிருக் கிறான் என்பது மட்டுமல்ல. தான் எவ்வளவு முக்கியம் தன்னால்தான் போர் வெற்றி பெறுகிறது என்பதை மிகத் தெளிவாக இராஜேந்திர சோழனுக்கு இலன் எடுத்துரைத்ததும் காரணமாக இருக்கலாம்.

"ஒரு போரில் ஜெயித்துவிட்டீர்கள் என்றால், அந்தப் போர் முடிந்து எதிரி துவம்சமாகிவிட்டான் என்றால் அந்த ஊருக்குள் போய் மிகுந்த அளவு ஆயுதங்களை வாரிக் கொண்டு வந்து விடுங்கள். மாட்டு வண்டிகளிலும், குதிரை வண்டிகளிலும் ஏற்றி உடனடியாக கருந்தட்டாங்குடிக்கு அனுப்புங்கள்.

அந்த ஆயுதங்கள் அவர்களிடம் இருக்கக்கூடாது என்பது மட்டுமல்ல, அந்த ஆயுதங்களை உருக்கி நான் மறுபடியும் இரும்பாக்கி மீண்டும் நம்முடைய இலச்சினை பொருத்தி ஆயுதங்களைச் செய்வதற்கு மிக உதவியாக இருக்கும்." என்று சொல்ல, இராஜேந்திரசோழன் நூற்றுக்கணக்கில் மாட்டு வண்டிகளில் உடைந்த ஆயுதங்களையும், உடையாத ஆயுதங்களையும் எதிரிகளிடமிருந்து பறித்துக் கொண்டு இங்கு அனுப்பினான்.

எதிரிகள் மூங்கில் கழிகூட வைத்துக் கொள்ளக்கூடாது என்று உத்தரவிட்டான். இந்தக் கருமார்களைக் கவனிக்க வேண்டுமென்று இராஜேந்திரசோழன் மேலைச் சாளுக்கியப் படையெடுப்புக்குப் பிறகு ஒரு சபையில் லாக்குவாதம் புரிந்ததும் ஞாபம் இருக்கிறது.

அலர்கள் அலர்கள் கடமையைச் செய்தார்கள். இதற்குத் தனித்த பாராட்டு எதற்கு என்று பிரம்மராயர் எழுந்து சொல்ல இராஜேந்திரன் மிகக் கடுமையாக பிரம்மராயரை எதிர்த்தான்.

"போரில் லெற்றி பெற்றதற்கு உங்களைப் 'பாராட்ட வில்லையா, நீங்கள் உங்கள் கடமையைத்தானே செய்தீர்கள். ஒரு போர்முனைக்கும் வராத உங்களைப் பாராட்டுகிறபோது இந்த போர்முனைக்குப் பல்வேறு ஆயுதங்களைச் செய்து அனுப்புகிற அவர்கள் பாராட்டப்படக் கூடாதா?" என்று சொல்ல, பிரம்ம ராயர் கோபமானார்.

"நான் போர் முனைக்கு வராது போகலாம். ஆனால் என் புத்தி போர் முனைக்கு வருகிறது." என்று பதிலுக்குக் கத்தினார்.

"உங்களுடைய புத்தி வருவதுபோல இவர்களுடைய கத்தி வருகிறது. ஆகவே இவர்களும் பாராட்டப்பட வேண்டும்" என்று இராஜேந்திர சோழன் சொல்ல, சபை இராஜேந்திர சோழனை ஆதரித்தது.

பிரம்மராயருக்கும், இராஜேந்திர சோழருக்கும் லேசான கசப்பு ஏற்பட்டது. வந்தியத்தேவர் சமாதானம் செய்து வைக்க, இராஜேந்திரசோழன் சமாதனம் செய்து கொள்ள மறுத்தான். இவர்களுக்கு ஏதாவது செய்தேயாக வேண்டுமென்று சபையில் வற்புறுத்தினான்.

"என்ன வேண்டும்?" என்று ஸ்ரீ இராஜராஜர் கேட்ட போது, "அவர்களையே கேளுங்கள். என்னை ஏன் கேட்கிறீர்கள்?" என்று சீறினான்.

இந்தக் கருந்தட்டாங்குடித் தலைவன், ஐந்து வருடங்களுக்கு முன்பு சபையில் தனக்கு என்ன வேண்டும் என்று சொன்னபோது சபை உறைந்து போயிற்று.

90

சோழதேசத்து வாழ்க்கை வர்ணமாகப் பிரிக்கப்பட்டு, வேதங்கள் என்ன சொல்லியிருக்கிறதோ அதுவே கடைப் பிடிக்கப்படுகிறது. அந்த வர்ணங்கள் ஒன்றோடொன்று கலப்பில்லாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது அரசனுடைய கடமையாக இருக்கிறது. வர்ணக் கவப்பு ஏற்பட்டால் தொழிலில் சிக்கல் உண்டாகும். எந்தத் தொழிலும் பூர்ணம் இல்லாமல் போகும் என்று பெரியவர்கள் அடித்துச் சொன்னார்கள்.

அந்தந்த வர்ணத்தாருக்கு உண்டான தொழிலைச் செய்வதும், அந்தத் தொழிலுக்கு உண்டானபடியான உடைகள் உடுத்திக் கொள்வதும், அந்த தொழிலுக்குண்டான உணவை உண்பதும் ஒரு நியதியாக்கப்பட்டிருந்தன. அந்த உணவை உண்பவர்களும், வேறு உணவை உண்பவர்களும் அருகருகே இருந்தால்கூட அந்த உணவினுடைய விசேஷத்தால் குணம் மாறக்கூடும் என்று சொல்லப்பட்டது.

எனவே தனித்தனி குழுக்களாகப் பிரிந்து - அதே சமயம் ஒற்றுமையாக வாழுகின்ற லழியை மூத்தோர்கள் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்கள். அந்த முறையைச் சோழதேசம் கடைபிடித்தது. அந்த வர்ணாசிரம தர்மத்தை மீறுவதற்கு எலருக்கும் துணிவில்லை. மீறுவற்கு முன்னால் அந்த லர்ணாசிரம தர்மம் தவறு என்று சொல்லக்கூடிய தகுதி வேண்டும்.

ஆனால், அப்படிச் சொன்னவர்கள் பௌத்தர்களாக மாறினார்கள். சமணர்களாகப் போனார்கள். இந்து மதத்தின் வர்ணாசிரம தர்மத்தையும், அதில் பிராமணர்களுடைய ஆதிக்கத்தையும் கடுமையாக எதிர்த்தவர்கள் சைவ சமயத்தையும், வைணவ சமயத்தையும் உதறி மொட்டையடித்துக் கொண்டு பௌத்தர்களாகவும், சமணர்களாகவும் மாறி இந்த

வேத விஷயங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருந்தார்கள்.

அரசு சைவ நெறி அரசாக இருப்பதால் அவர்கள் எதிர்ப்பு பெரிதாகப் படவில்லை. அவர்களுக்கு எங்கு ஆதரவு இருக்கிறதோ அங்கு போனார்கள்.

மேலைச் சாளுக்கிய தேசம் சமணர்களுக்கு ஆதரவாக இருந்தது. கீழைச் சாளுக்கிய தேசம் பௌத்தர்களை ஆதரித்தது. தெற்கே இலங்கையில் பௌத்தர்களுக்கு ஆதரவு பெருமளவில் இருந்தது. இவர்கள் மத ரீதியாகவும் சோழ தேசத்தை எதிர்த்தார்கள். குல ரீதியாகவும் பகைமை கொண்டிருந்தார்கள்.

ஆனால், இந்தக் கருந்தட்டாங்குடி இளைஞர்கள் பௌத்தர்களைப் போல் அல்லாமல் சோழ தேசத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு எங்களுக்குச் சில சலுகைகள் கொடுங்கள் என்று சபையில் சொன்னார்கள். ஒவ்வொரு கருமாரும் தன்னுடைய வீட்டிற்கு முன் வாசலும், பின் வாசலும் வைத்துக் கொள்ளவும், வீட்டுக்கு வெள்ளையடித்துக் கொள்ளவும், காலில் செருப்பு போட்டு நடக்கவும், இடுப்பிலே ஒரு துணியும் தோளில் ஒரு துணியும் தலையில் ஒரு துணியுமாய் கம்பீரமாக நடந்து வரவும், பல்லக்கில் வரவும், நல்லது கெட்டதற்குச் சங்கு ஊதிக்கொள்ளவும் அனுமதி வேண்டுமென்று கேட்டார்கள். எங்களை உயர்குடியாக மதிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அதோடு கருந்தட்டாங்குடி ஆட்கள் நிறுத்தியிருக்கலாம்.

நான் அந்தணரைப்போல் பூணூலைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று உரத்துச் சொன்னபோது சபையில் மிகப் பெரிய எதிர்ப்பு கிளம்பியது.

அந்தணர்கள் அவசரமாக வெளியேறினார்கள். ஒன்றுகூடி ஆலோசித்தார்கள். பூணூல் அணிந்து கொள்ளக்கூடாது என்றார்கள். அணிந்து கொள்ள வேண்டும் என்று இராஜேந்திரன் உரத்த குரலில் சண்டையிட்டான்.

கடைசியாகக் கேட்ட அந்த பூணூல் சர்ச்சையினால் எந்தச் சலுகையும் கொடுக்கக் கூடாதென்று சபையின் பெரும்பான்மை முடிவு செய்தது.

கருமார்கள் கருமார்களாகலே இருக்கட்டும். போரிலே உதவி செய்ததால் கருமார்கள் அந்தணர்களாக மாறிவிட முடியாது. அது அதிக பட்சம். இப்பொழுது அந்தச் சலுகை

கொடுத்தாலும் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அல்லது இன்னும் அதிகமாகக் கேட்பார்கள் என்று சொல்லப் பட்டது.

இந்த விஷயம் ஆறப் போடப்பட்டது. இதனால் கருமார் கள் கோபமடைந்தார்கள். தாங்கள் இழிவு படுத்தப்பட்டதாய் நினைத்தார்கள்.

'இன்னும் எத்தனை நாளைக்குத் தான் உலைக் களத்தில் இரும்படித்து உங்களுக்காகச் செத்துக் கொண்டிருப்பது?' என்று ஒரு கருந்தட்டாங்குடி இளைஞன் உரத்துப் பேசியபோது இராஜேந்திரன் கோபமாக வெளியேறினான்.

"நீங்கள் என்னை அலமானப்படுத்தியதால் நாங்கள் ஒட்டு மொத்தமாக பௌத்த சமயத்திற்கோ, சமணசமயத்திற்கோ மாறிவிடுவதற்கு எங்களுக்கு நேரமாகாது. ஆனால் அப்படிச் செய்வது சோழ தேசத்திற்கும், சோழ அரசர்க்கும் செய்யும் துரோகம் என்பதால், உங்களின் உப்பைத் தின்று வளர்ந்தேன் என்பதால் நான் சைவனாக இருக்கவே விரும்புகின்றேன். அதே சமயம் எங்களை நீங்கள் இழிவு படுத்திவிட்டீர்கள் என்ற நினைவை நாங்கள் நெஞ்சிலே தேக்கிக் கொள்ள விரும்பு கின்றேன்.

இனி எங்கள் கிராமத்திற்கு எவர் வந்தாலும் கை கட்ட மாட்டோம். அந்தணர்கள் எங்கள் கிராமத்திற்கு வரவேண்டிய அவசியமில்லை. நாய்களும், அந்தணர்களும் எங்கள் கிராமத் திற்கு வர தடை செய்யப்பட்டிருக்கிறார்கள்." என்று உரத்த குரலில் சொல்ல, மீண்டும் சபையில் கோபம் எழுந்தது.

கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர் வாள் உருவிக் கொண்டு போகும்பொழுது வந்தியத்தேவர் அதைத் தடுத்து நிறுத்தி விட்டார்.

"பதிலுக்கு நான் வாளெடுத்தால் பத்து நொடிப் பொழுதில் உங்கள் தலையை தரையில் சாய்ப்பேன்." என்று அந்த இளைஞன் கர்ஜனை செய்தான்.

ஸ்ரீ இராஜராஜர் இங்கேதான் கோபப்பட்டார்.

"என் சபையில் என் சேனாதிபதியைக் கொல்லுவேன் என்று சொன்னவனை நான் சிறையில் வைத்து கசையால் அடிப்பதே நியாயம். சிரச்சேதம் செய்யலம் எனக்கு

உரிமையுண்டு. நீ பேசியது தவறு. மன்னிப்பு கேள்." என்று சொன்னபோதும் அவன் மறுத்து விட்டான்.

அதே சபையில் பதின்மூன்று கசையடிகள் தர ஸ்ரீ இராஜராஜர் உத்தரவிட, அந்தக் கருந்தட்டான்குடி இளைஞனுக்கு அந்தத் தண்டனை கொடுக்கப்பட்டது. இராஜேந்திர சோழன், மறுபடியும் சபைக்கு வந்து இதைத் தடுக்க முயன்றான். ஆனால் சபையிலுள்ள காவலர்கள் அந்தக் கசையடி தண்டனையை நிறைவேற்றினார்கள்.

சபை அத்தோடு கலைந்தது.

ஒரு வார காலம் எதுவும் பேசாமல் இராஜேந்திர சோழன் இந்தக் கருந்தட்டாங்குடி கிராமத்திலேயே கிடந்தான் என்றும், அப்படிக் கிடந்ததால் இராஜேந்திர சோழனை அவர்கள் தெய்வ மாக மதிக்கிறார்கள் என்றும் ஸ்ரீ இராஜராஜருக்குச் சொல்லப் பட்டது.

இராஜேந்திர சோழனுக்கும் ஸ்ரீ இராஜராஜருக்கும் ஏற்பட்ட முதல் பிரிவு அது. அதற்குக் காரணமான அந்தக் கருந்தட்டாங் குடி இளைஞன் இப்பொழுது மத்திய வயதை அடைந்தவன். அந்தக் குடிமக்களின் தலைவன். அவர் எதிரே வந்து தலைகுனிந்து வணங்கினான். கைகட்டாமல், வலக்கையில் கோவ் ஊன்றி 'புலவர் அவர்கள் வரவேண்டும்' என்று பணிவாக வரவேற்றான்.

பணிவாக வரவேற்றான்.

புலவரை அவர்களுடைய ஆலமரத்திற்கு அழைத்துப் போய் அங்கு ஆசனம் போட்டு அமரச் செய்தான். குடிக்க நீர் கொடுத்தான்.

"எல்லா உலைகளையும் அணைத்து விடுங்கள். நல்ல மழை வரும்போலிருக்கிறது'' என்று திரும்பி குடிமக்களுக்குக் கட்டளையிட்டான். புலவர் வேடத்தில் இருந்த இராஜராஜர் உயரே பார்த்தார். மேகங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் நழுவித் தரையில் விழுவேன் என்று நின்று கொண்டிருந்தன.

"உலைக்களத்தில் இன்னும் வாளும், ஈட்டியும்தான் ஊற்றிக் கொண்டிருக்கிறீர்களா?" புலவர் வியப்போடு அச்க களை எட்டிப் பார்த்துவிட்டு கேட்டார்.

"ஏன்... வாளும், வேல்களும் வேண்டாமென்று யாராவது சொல்லிவிட்டார்களா? இனி யுத்தமே பூமியில் வராது என்று

முடிவெடுத்து விட்டார்களா. வாளும், லேலும் ஊற்றாமல் லேறு என்ன ஊற்றுவது...?"

"இல்லை. தெற்கே அந்தப் புல்வெளியில் கோயில் கட்ட ஆரம்பித்து விட்டார்கள். அதற்குண்டான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. எல்லை பிரித்துக் கயிறு கட்டி அதன் மீது சுண்ணம் எழுதி, ஈசான்ய மூலையில் பள்ளம் தோண்டி நீர் நிரப்பியிருக்கிறார்கள்."

"இருக்கட்டும் அதனால் என்ன...?"

"ஒரு கோயில் கட்ட வேண்டுமென்றால் அதுவும் பல பனை உயரத்திற்குக் கற்களினால் கோயில் கட்ட வேண்டு மென்றால் இரும்பு வேலை செய்ய லேண்டுமல்வவா?"

"எனக்கென்ன தெரியும்... புலவரின் பேச்சுக்கு கருமார் தலைவன் அவட்சியமாக பதில் சொன்னான்.

"ஏன் இப்படி அலட்சியமாகப் பேசுகிறீர்கள். உளிகளும், சுத்தியலும், வெட்டு இரும்பும், ராட்டினமும் உங்களுக்குச் செய்வதற்குண்டான உத்தரவு வரவில்லையா?"

"இல்லை...

"அப்படியானால் வேறு யாரையேனும் வைத்துச் செய்வார்களோ" புலவர் வியப்போடு கேட்டார்.

கருமார்த் தலைவனுக்குக் கோபம் வந்தது.

"என்ன சொல்கிறீர்கள். வேறு யார் இந்த வேலையை செய்துவிட முடியும்...?"

"அடேய்... இது என்ன பேச்சு. நான் மட்டுமே தமிழ்ப் புலவன், மற்றவர் யாருக்கும் தமிழ் தெரியாது என்று இறு மாந்திருக்கலாமா. உங்களுக்கு மட்டுமே கருமார் வேலை தெரியும். இரும்பு வேலை செய்ய வேறு எவராலும் முடியாது என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா...?"

"இந்தப் பகுதியில் இந்த வேலையில் தலை சிறந்தவன் நான்தான். நான் மட்டும்தான்." கருமார்த்தவைவன் உரத்துப் பேசினான்.

அருகேயிருந்தவர்கள் நெருங்கி வந்து தலைவனையும், புலவரையும் மாறிமாறிப் பார்த்தார்கள்.

"கோபப்பட்டால் ஆயிற்றா. உள்ளுக்குள்ளே பத்தாயி ரத்துச் சொச்சம் வீரர்கள் போனதைக் கலனித்தீர்களா..."

"கவனித்தேன். அதனாவ் என்ன?"

"அவர்கள் பல பேர்கள் மரத்தச்சர்கள். கவ் தச்சர்கள். கருமார்கள். நகைவேலை செய்பலர்கள். அவர்கள் வெறும் போர் வீரர்கள் அல்வர். அமைதியான காலத்தில் தொழிவ் செய்து கொண்டிருந்தவர்கள். தேசத்திற்கு ஆபத்து என்றதும் வாளும், லேலும் எடுத்து போரிட வந்தவர்கள். உண்மையில் அவர்கள் தொழில் தெரிந்தவர்கள். அதிவ் மரத்தச்சர்களாக முன்னூறு பேரும், கருமார்களாக இருநூறு பேரும் இருக்கிறார்கள். பொன்வேலை செய்பவர்கள் பதினேழு பேர் இருக்கிறார்கள்.

ஓவியம் வரையத் தெரிந்தவர்களும் உண்டு. கவ்தச்சர்கள் பதினாலு பேர் இருக்கிறார்கள். மண் பாண்டம் செய்பவர்களும், விவசாயிகளும், மரம் ஏறுபவர்களும், காடு அழிப்பவர்களும், ஆடு மேய்க்கிறவர்களும் என்று பவ்வேறு தொழிவ்களைச் செய்த பல்வேறு குலத்தினர் இங்கு போர் வீரர்களாக வந்திருக் கிறார்கள்.

திருவொற்றியூரிலேயே இராஜேந்திரர், அவர்களை – வீட்டுக்குப் போகலாம். விடுதலை செய்து விட்டேன் என்று சொன்னார். ஆனால் அவர்கள் போகாமல் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் கட்டுகிற சிவன் கோயிலுக்கு உதவி செய்ய வேண்டுமென்று தென்திசை நோக்கி நடந்து வந்திருக்கிறார்கள்...

"என்ன இருந்தாலும் அவர்கள் எதிரிப்படை வீரர்கள் அல்லவா. தஞ்சை நகரை நோட்டம் பார்த்துவிட்டு மறுபடியும் விடுதலையாகிப் போய் படையெடுத்து வரும்போது தஞ்சையைச் சூறையாட முற்படலாம் அல்லவா. அதற்காக வந்திருக்கலாம் அல்லவா..."

"தஞ்சை நகரைச் சூறையாடுலதா... கனவிலும் நடக்காத விஷயம் அது. எதிரிகள் தங்கள் தேசத்தை விட்டு அசை கிறார்கள் என்று தெரிந்தவுடனேயே வழியிலேயே மடக்கி அவர்கள் திமிர் அடக்க நாம் எப்பொழுதும் தயாராக இருக்கிறோம்."

"மிக்க மகிழ்ச்சி புலவரே. நீர் அரசரின் சார்பாய் பேச வந்திருக்கிறீர் போலும். வெளி தேசத்திலிருந்து கருமார்கள் வந்து விட்டதைச் சொல்ல வந்தீர் போலும். மண்ணோடு மண்ணாக வாழ்ந்திருப்பவர்களை, இந்த தேசத்தை நேசிப்பவர்களைப்

புறக்கணித்துவிட்டு வேறு ஆட்களோடு ஏழுபனை உயரம் கோயில் கட்டி விடமுடியுமா?"

"யார் உங்களைப் புறக்கணித்தார்கள்... நீங்களல்லவா மன்னரைப் புறக்கணித்திருக்கிறீர்கள்..."

"இது என்ன பேச்சு, நாங்கள் எப்பொழுது மன்னனரப் புறக்கணித்தோம்..."

"இந்தக் கணம் வரையில் மன்னரைப் புறக்கணித்துத் தானே இருக்கிறீர்கள்..."

"என்ன சொல்கிறீர்கள் புலவரே. உளறுவது ஒரு அளவோடு இருக்கட்டும்." என்று கருமார்த் தலைவன் சீற, அங்குள்ளவர்கள் கோபமாக புலவரைப் பார்த்தார்கள்.

"மன்னர் கோயில் கட்டப் போகிறார் என்று பறையறி வித்து மக்களுக்குச் சொல்லியாகி விட்டது. அங்கு பூஜையும் நடந்து விட்டது. உங்களில் யாரேனும் போய் அங்கு வணங்கி மன்னரை விசாரித்தீர்களா. உண்மையில் நீதானே போயிருக்க வேண்டும். மன்னர் கேட்பதற்கு முன்பே இது கோயில் வேலை, நான் வருகிறேன் என்று நீதானே சொல்லியிருக்க வேண்டும். மன்னரிடமிருந்து ஆணை வரவேண்டுமென்று அலட்சியமாகக் காத்துக் கொண்டிருக்கிறாயே .இது நல்லதா..."

"வேறு வழியில்லை புலவரே. நான் போய் அங்கு நின்று இப்பொழுது நீங்கள் சொன்னதுபோவ, நீ தேவையில்லை. நான் முன்னூறு கருமார்களை வரவழைத்து விட்டேன் என்று சொன்னால் நான் என் முகத்தை எங்கே வைத்துக்கொள்வது? அங்கேயே மன்னர் எதிரிலேயே நாண்இட்டுக் கொண்டு சாக வேண்டியதுதான்." என்று கருமார்த் தலைவன் சீற்றத்துடன் சொன்னான்.

"எப்படி மன்னர் உன்னைப் புறக்கணிப்பார் என்று நினைக்கிறாய்...?"

"இதுவரை அழைக்கவில்லையே. இது புறக்கணிப்பு தானே..."

"அனழத்தால் வந்துவிடுவாயா தம்பி..."

"யோசிக்க வேண்டும்...

"எதற்காக யோசிக்க வேண்டும்...?" புலவர் சீறினார்.

"இளவரசர் இராஜேந்திரரைக் கலந்து கொண்டுதான் பதில் சொல்ல முடியும்..."

"எதற்காக இளவரசர் இராஜேந்திரரைக் கலந்து கொள்வது. மன்னர் கட்டளைக்கு இளவரசர் அனுமதியைப் பெற வேண்டிய அவசியமென்ன?" – மறுபடியும் புலவர் கோபமாகக் கேட்டார்.

கற்றியுள்ள கருமார் இளைஞர்கள் முஷ்டியை மடக்கினார்கள். புலவரைக் கோபமாகப் பார்த்தார்கள். புலவர் அவர்களைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் மிக ஆவேசத்தோடு கருமார்த் தலைலரை நோக்கி கைகளை ஆட்டிப் பேசினார்.

"உங்கள் அரசர் யார். ராஜராஜரா, ராஜேந்திரரா, யார் இங்கு முக்கியம். யார் கட்டளையின் கீழ் சோழ தேசம் நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு பேசு. தலைக்குத் தலை பெரியத்தனம் செய்து கொண்டு ஆளுக்கு ஆள் கட்சி கட்டிக் கொண்டு, சோழ தேசத்தை எதிரிக்குக் காட்டிக் கொடுக்காதீர்கள்." என்று வேகமாகப் பேச கருமார்த் தலைவன் கோபமானான்.

"யார் எதிரிக்குக் காட்டிக் கொடுக்கிறார்கள். என்னைப் பார்த்தா அந்த வார்த்தை சொல்கிறாய்." இரண்டடி முன் வைத்தான். கருமார் இளைஞர்கள் வேகமாகப் புவலரை நோக்கி வந்தார்கள்.

புலவர் ஓவை மறைப்பிலிருந்து சட்டென்று ஒரு குத்துக் கத்தியை எடுத்துக் கொண்டார். சட்டென்று காற்றில் வீசினார். கருமார் இளைஞர்கள் துள்ளிப் பின் வாங்கினார்கள். மின்னல் வேகத்தில் நடந்து கருமார்த் தலைவன் கழுத்தில் கத்தியை வைத்தார்.

"இங்கு எவர் அசைந்தாலும் உன் தலை துண்டாக கீழே விழும். சகலரையும் விலகிப் போகச் சொல்." என்று உரத்த குரலில் கத்தினார்.

கருமார்த் தலைவன் சைகை செய்தான். கருமார் இளைஞர்கள் விலகி நின்றார்கள். ஆனாலும் அவர்களுக்கு கோபம் பொங்கிக் கொண்டிருந்தது. தங்கள் தலைவனை மடக்கி வைத்துக் கொண்டிருக்கிற புலவனை எப்படித் தாக்குவதென்று அவர்கள் வேகமாகத் திட்டமிட்டார்கள்.

91

கருந்தட்டாங்குடிக்கு லெளியே அதைவிட வேகமாகக் காரியங்கள் நடைபெற்றன. தஞ்சையிலிருந்து ஒரு சிறிய படை மிக லேகமாக கருந்தட்டாங்குடியில் நுழைந்து அதைச் சுற்றி வளைத்துக் கொண்டது. உருவிய வாட்களுடன் உலைக்களம் நோக்கி ஓடி வந்தது. உலைக்களத்தை அடைத்துக் கொண்டிருந்த கருமார் இளைஞர்கள் இதைப் பார்த்துத் திகைத்தார்கள்.

சட்டென்று கீழே கிடந்த கத்திகளையும், வாட்களையும் எடுத்துக் கொண்டு தயாராக நின்றார்கள். வந்த எல்லா சோழ வீரர்களின் கேடயங்களிலும் புலிச்சின்னம் இருப்பது பார்த்துத் தயங்கினார்கள்.

பிரம்மராயர் வருகிறார் என்ற எக்காளம் ஒலித்தது. மிக துரிதமாகச் செயல்படும் ஒற்றர்கள் மடமட வென்று ஓடி வந்து புலவரையும், அலர் மடக்கிக் கொண்டிருந்த கருமார் தலைவனையும் நெருங்கி மற்றவர்களை விலக்கினார் கள்.

அப்புலவர் கத்தியை அசைக்கவேயில்லை. கருமார்த் தலைவனை விடவேயில்லை. சுற்றி இன்னும் போர் வீரர்கள் வந்து இறங்குவதைப் பார்த்து கருமார் வீரர்கள் திகைத்தார்கள். கோபம் கொண்டார்கள்.

"நாங்களென்ன கைதிகளா... ஏன் அத்துமீறி எங்கள் பகுதிக்குள் நுழைகிறீர்கள்?" என்று சப்தமிட்டார்கள். பெண்கள் கூக்குரலிட்டார்கள்.

"தலைவரை யாரோ ஒருவன் மடக்கிக் கொண்டிருக் கிறான். நீங்களும் உள்ளுக்குள்ளே தடாலடியாக நுழைந்து கொண்டிருக்கிறீர்கள். என்ன நடக்கிறது இங்கே?" என்று கருமார்த் தலைலனின் தாய் உரத்த குரலில் சத்தமிட்டாள்.

இடுப்பில் கை வைத்துக் கொண்டு பிரம்மராயரை முறைத்தாள். பிரம்மராயர் வேகமாக நடந்து வர, அலளை வீரர்கள் விலக்கினார்கள். பிரம்மராயர் நடந்து போய் மரத்தடி மேடைக்கு அருகே கத்தியோடு கருமார்த் தலைவனை மடக்கிக் கொண்டிருந்த புலலருக்கு அருகே நின்றார்.

"போதும் இந்த விளையாட்டு. கருவூர்த் தேவர் கடுங்கோபத்தில் இருக்கிறார். என்ன நடக்கிறது இங்கே என்று

உரக்கக் கத்துகிறார். பஞ்சவன் மாதேவி பதட்டமடைந்து எனக்கு ஆள் மேல் ஆள் அனுப்புகிறார்கள். தயவு செய்து இந்த விளையாட்டை நிறுத்திக் கொண்டு எனக்குக் கட்டுப்பட்டிருங்கள்." என்று கைகூப்பினார்.

திரும்பி கருமார்த் தலைவன் புலவனரப் பார்த்தான். கண்களை உற்றுக் கவனித்தான். புலலர் சிரித்தார். கருமார்த் தலைவன் கைகூப்பினான். மண்டியிட்டுத் தரையில் அவர் பாதம் பட விழுந்து வணங்கினான். எழுந்து, 'என்னை மன்னித்து விடுங்கள்' என்றான்.

கருமார் வீரர்கள் வாட்களைக் கீழே போட்டார்கள். கைகட்டி வந்து அருகே நின்றார்கள். மொத்த கருமார் கூட்டமும் காலில் விழுந்து வணங்கியது. எழுந்து நின்றது.

"சரி இதனால் நமக்குப் பிணக்கு தீர்ந்துவிட்டது என்று அர்த்தமா. நமக்குள் பிணக்கு அப்படியே இருக்கிறது. அது என்ன பிணக்கு என்பனதயும் நான் அறிவேன். அந்தப் பிணக்கை ஒரு நாளில் தீர்த்து னவக்க முடியாது. என் ஒருவனால் மட்டும் அதற்குத் தீர்ப்பு சொல்ல முடியாது. நீங்கள் கேட்பது மிகப் பெரிய உரிமை. அந்த உரிமையை உங்களுக்குத் தர அரசனாகிய எனக்கு அனுமதியில்லை.

இது மதம் சம்பந்தப்பட்டது. வேதம் சம்பந்தப்பட்டது. எத்தனை செல்லம் வேண்டுமானாலும், எத்தனன வசதிகள் வேண்டுமானாலும் நான் உங்களுக்குச் செய்து தருகிறேன்.

ஆனால் பூணூல் அணிந்து கொள்ளும் உரினமயை ஒரு அரசன் எப்படி ஒரு கருமாருக்குத் தரமுடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இதனால் என் மீது கோபம் கொண்டு என் வேவைகளில் கணக்கம் காண்பிக்கிறீர்கள். கோயில் கட்டுகிறேன் என்று தெரிந்தும் உளிகளுக்கும், கத்திகளுக்கும், ராட்டினங்களுக்கும் நான் வந்து உங்களைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்கள். உங்களை யாரும் அழைக்கவில்லையே என்று நினைக்கிறீர்கள்.

பிரம்மராயரோ, பஞ்சவன் மாதேவியோ வந்து உங்களை அழைத்திருந்தால் சந்தோஷமாகக் கலந்து கொண்டிருப்பீர்கள். ஆனால், நான் அவர்களை இங்கு வந்து அழைக்கும்படியாகச் சொல்வதற்கு விருப்பமில்லை. நானே வரலேண்டுமென்று ஆசைப்பட்டேன்.

நான் இங்கு வருகிறேன் என்று உத்தரவு கொடுத்தால், இங்கு உங்களுக்குள் இரண்டாகக் கட்சி பிரியும். இராஜேந்திரன் கட்சி என்றும், இராஜராஜன் கட்சி என்றும் உங்களுக்குள் பிரிவினை உண்டாகும். எனவேதான் நான் உங்களுடைய மனோநிலை எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்காக மாறுவேடத்தில் வந்தேன்.

எனக்கும் இராஜேந்திரனுக்கும் பிணக்கு என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். அரக என்று இருந்தால் அதில் பிணக்கு என்று வருவது சகஜம். குடும்பம் என்று இருந்தால் அதில் எதிரும் புதிருமான எண்ணங்கள் இருப்பதும் நடக்கும்.

கோயில் கட்டுகிறேன் என்று சொன்னேனே தவிர, போர் வீரர்கள் வேண்டுமென்று சொல்லவில்லை. கோயில் கட்டு வேன்; ஏழு பனை உயரத்திற்கு என்று சொன்னதும், வேலைக்கு ஆள் வேண்டுமே என்று சோழ தேசத்திற்குப் பதினோராயிரம் வீரர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறான். அவர்களிடம் மனம் நெக்குருகும்படி பேசியிருக்கிறான்.

'சோழ தேசத்தில் சோழர்களாக வாழ்ந்து சிவப்பணி செய்யுங்கள். பிறகு உங்கள் ஊருக்குத் திரும்பிப் போங்கள்' என்று சொல்லியிருக்கிறான். 'நீங்கள் கைதிகளல்ல' என்று பேசியிருக்கிறான். பகைவர்களிடையே மனமாற்றம் நடக்கிறது. ஆனால் நம்மவர்களிடம், நம் மண்ணில் பிறந்தவர்களிடம் இந்த மனமாற்றம் இல்லை. தேவையில்லாத ஒரு எதிர்ப்புணர்ச்சி இருக்கிறது. இராஜேந்திர சோழன் ஆதரவாக இருப்பதாகவும், நான் உங்களுக்கு எதிரியாக இருப்பதாகவும் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இது சரியல்ல; மிகத் தவறானது."

–உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் முகத்தில் ஒட்டிக் கொண்ட வெள்ளைத் தாடியை மெல்லப் பிய்த்து எறித்துவிட்டு, அருகிலுள்ள அதிகாரிச்சிகளிடம் எண்ணெய் வாங்கி முகத்தில் தடவிக் கொண்டு, பிறகு அலர்கள் கொடுத்த துண்டால் அழுத்தமாகத் துடைத்துவிட்டு பளபளப்பாகக் காட்சியளித்தார்.

"உங்களுக்கு கருமார் ஒரு உயர்ந்த குலம் என்கிற எண்ணம். நாம் வேவை செய்துதானே போர் நடக்கிறது என்கிற

ஒரு கர்வம். இது நியாயமானது. இதில் தவறேயில்லை. உங்களால்தான் சோழப்படை முன்னணியில் நின்றது. உங்களுடைய கடும் உழைப்பால்தான் சோழப்படை பல தேசங்களைக் கைப்பற்றி, நிறைந்த செல்வங்களை இங்கு கொண்டு வந்திருக்கிறது. நம் மக்களுடைய வீரமும், உங்களுடைய ஆயுதங்களும் ஒன்று சேர்ந்து மிகப்பெரிய வெற்றியை சோழ தேசத்திற்குக் கொடுத்திருக்கின்றன. என்றுமில்லாத அளவுக்குச் சோழதேசம் நாலா திசையிலும் பரவிக் கிடக்கிறது. அதை நானும், நாட்டு மக்களும் மறக்கவேயில்லை.

நீங்களாக உங்களை இழிவுபடுத்திக் கொண்டு, 'எல்லோரும் பாராட்டப்படுகிறார்கள். நமக்குப் பாராட்டு இல்லையே' என்று நினைப்பது தவறான விஷயம். இங்கு அந்தணர்கள் மிகக் குறைவானவர்கள். அம்மாதிரியான ஒரு சிறு குழுவுக்கு அதிகம் லசதிகள் செய்து கொடுத்து, அவர்கள் வேலைகளில் ஈடுபடாமல் பார்த்துக் கொண்டு சோழ தேசத்திற்காகக் கடவுள் வழிபாட்டில் ஈடுபடுவதும், ஹோம யக்ஞங்களில் ஈடுபடுவதும் நல்லது என்று நான் நினைக்கிறேன். இன்றைய சோழ தேசத்தின் பல வெற்றிகளுக்கு அவர்களுடைய பூஜைகளும், புனஸ்காரங்களுமே காரணம்.

உங்களுக்கு நினைவிருக்கிறதா... மேற்கே கடும் மழை பெய்யும் ஆனி மாதத்தில் நாம் படையெடுத்துப் போனோமே, அங்குள்ளவர்களும் – சோழப்படைகள் சேற்றில் மாட்டிக் கொண்டு தவிக்கப் போகிறது என்று சொன்னார்களே... ஆனால் இங்குள்ள அந்தணர்கள் என்ன சொன்னார்கள்... 'இந்த வருடம் பரத கண்டம் முழுவதும் மழையிருக்காது. எனவே தைரியமாகப் படையெடுத்துப் போகலாம்' என்று அறிவுறுத்தினார்களே.

நாம் படையெடுத்துத் திரும்பும் வரை மழையே இல்லை. கொள்ளிப் பாகை முழுவதும் கலக்கி விட்டு வந்தோமே. யார் எதிர்த்தார்கள். யார் தடுத்தார்கள். யாரால் தடுக்க முடிந்தது? மழைக்காலத்தில் நாம் படையெடுத்து வருவோம் என்று யாரும் எதிர்பார்க்காத நேரத்தில், நம் எதிரிகள் வெறுமே பல்குத்தி உட்கார்ந்து கொண்டிருந்த நேரத்தில் நாம் போய் ஜெயித்து விட்டு வந்தது யாரால் என்று நினைக்கிறீர்கள்.

அதே வருடம் நமக்கும் சொல்லப்பட்டது – நெல் விதைக்க வேண்டாம்; பயறுகள் மட்டுமே விவசாயம் செய்யலாம் என்று.

மிகக் குறைவான நெல் விதைத்து விட்டு மற்ற எல்லா இடத்திலும் கரும்பும், பருப்பு வகைகளும் விதைத்தோம். நம் பக்கமும் மழையில்லை. மேற்கே தாமதமாகப் பெய்த மழை காவிரியில் வந்து காவிரிப் பாசனத்தால் சிறிதளவு நமக்கு தண்ணீர் கிடைத்தது.

அந்தணர்கள் பேச்சைக் கேட்காமல் விதைத்திருந்தோமானால் நமக்கு மிகப் பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கும். ஆனால் அடுத்த வருடம் மிகுந்த மழையிருக்கும். மூன்று போகம் செய்யலாம் என்று சொன்னார்கள். மூன்று போகம் செய்தோம்; புல்லரித்தோம். நீங்கள் எந்தக் காரணமுமில்லாமல் அந்தணர்கள் மீது காய்கிறீர்கள். இது எனக்குப் பிடிக்கவில்லை."

–உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் உரத்துச் சொல்லிவிட்டு மௌனமானார்.

கருமார்த் தலைவன் எழுந்தான். கைகட்டிக் கொண்டான்.

"எதிர்த்துப் பேசியதற்கு உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேலர் என்னை மன்னிக்கட்டும். சோழ தேசத்தின் துரோகி என்று என்னைச் சொன்னதால் மனம் கலங்கிப் போய் நான் உங்களைக் கடித்து கொண்டேன். என் வார்த்தைகளுக்காக மீண்டும் மன்னிப்பு கேட்கிறேன்."

கருமார்த்தலைவன் விழுந்து வணங்கினான். உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் அவனைத் தூக்கி நிறுத்தி தழுவிக் கொண்டார்.

"என்னுடைய குறைகளைச் சொல்வ தயவுசெய்து இங்கு இடம் கொடுங்கள். பேச்சு என்று வந்துவிட்ட பிறகு எங்களுடைய மனத்தை நாங்கள் சொல்லாமல் இருக்கக்கூடாது. சோழ தேசத்தின் லெற்றிக்கு நாங்கள் காரணம் என்று நீங்கள் ஒப்புக் கொண்டதற்கு மிக்க நன்றி.

ஆனால், சோழப்படை வீரர்கள் உயிருக்குத் துணிந்து போராடி வெளி தேசத்திலிருந்து கொள்ளையடித்து அம்பாரம், அம்பாரமாக இங்கு கொண்டு வருகிறீர்கள். நகைகளும், பாத்திரங்களும், வாள்களும், வேல்களும் கொண்டு வருகிறீர்கள். வேலையும், வாளையும் மட்டும் இங்கு போட்டுவிட்டு, நகைகளை மருந்துக்குக் கூட காட்டாமல் எடுத்துக் கொண்டு போய் விடுகிறீர்கள்.

சோழக்குலப் பெண்களும், தேலரடியார்களும், நகைகளையும், பட்டுகளையும் உடுத்திக் கொண்டு மினுமினுக்க, எங்கள் பெண்கள் மட்டும் தலையெல்லாம் சாம்பலும், முகமெல்லாம் தீக்காயமும், வெறும் ஒரு சுற்றுப் புடவையுமாக இங்கு உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கிறது.

அந்தப் பெண்களைப் போல நீங்கள் அழகாக இல்லையே என்று நாங்கள் கேட்டபோது, அவர்கள் எப்படிக் குமுறுகிறார்கள் என்று எங்களுக்குத்தான் தெரியும். வெளி தேசத்திலிருந்து சோழ தேசத்திற்குக் கொண்டு வரப்படும் செல்வத்தில் எல்லோருக்கும் பங்கு கிடைக்கிறது. எங்களுக்கு மட்டும் கிடைக்கவில்லை. எங்களுக்குக் கிடைத்ததெல்லாம் நுனி முறிந்த ஈட்டியும், பிடியறுந்த வாளும்தான். இதை உருக்கி எடுத்துக் கொண்டு மறுபடியும் லாள் செய்து உங்களுக்கு நெல்லுக்காகத் தரவேண்டும். அரசாங்கம் எங்களுக்கு நெல் படியளக்கும். நெல்லோடு, சோறோடு கருமான் முடிந்து விட்டானா. அலனுக்கு வேறு வசதிகள் கிடையாதா. அலன் வீட்டுப் பெண்கள் சிங்காரித்து இருக்கக் கூடாதா. அலன் நல்ல துணி உடுத்தக் கூடாதா. அலனை சபையில் அழைத்து பதக்கம் தரக்கூடாதா?

இதுவரை ஒருமுறைகூட – ஒரு சோழ அரசர்கூட கருமாருக்கென்று எந்த உதவியும் செய்ததில்லையே. இது ஏன் – அப்படியென்ன பாபம் செய்தோம். கடைசி வரை உலைக்களத்தில் சம்மட்டி அடித்து அடித்துச் சாக வேண்டியதுதான் எங்கள் தலையெழுத்தா?"

"என்ன பேசுகிறீர் கருமார்த் தலைவனே. இதையே விலசாயி சொல்லிவிடலாம் அல்லவா. இதையே பசுக்கள் மேய்ப்பவர் சொல்லி விடலாம் அல்லலா. இதையே மரத்தச்சரும், கல் தச்சரும், நெசவாளரும் தங்களுக்கு அதிகமான உரிமைகள் வேண்டுமென்று பேசலாம் அல்லவா. இது எங்கு போய் முடியும்? ஏன் திடீரென்று அந்தணர்கள் மீது நீங்கள் பார்வையைத் திருப்பியிருக்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. நீங்கள் அந்தணராக வேண்டுமென்று விரும்புகிறீர்களா., அல்லது மறலர்களின் மரியாதைக்கு இணையாக நடத்தப்பட வேண்டுமென்று விரும்புகிறீர்களா?

மறவர்களிடம் காக புழங்குகிறது. தங்க நகைகள் இருக்கின்றன. பொற்பாளங்கள் இருக்கின்றன. ரத்தினக் கற்கள்

இருக்கின்றன. எனவே, அதற்கு ஏற்றாற்போல் உங்களுக்கும் வேண்டுமென்று நினைக்கிறீர்கள். ஆனால் அப்படிக் கேட்பதற்கு அச்சமாக இருக்கிறது. பொருள் இல்வாவிட்டாலும் பரவாயில்வை, மரியாதையாவது இருக்கட்டும் என்று மறவர்களிடமிருந்து அந்தணர்களுக்குத் தாவி விட்டீர்கள்."

பிரம்மராயர் உரத்த குரலில் கேட்க, அங்கிருந்து எதிர்ப்புக் குரல்கள் அதிகம் எழுந்தன.

கருமார்கள் ஆளுக்கு ஆள் விதம் விதமாகப் பேச ஆரம்பித்தார்கள்.

முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் பிரம்மராயரை நோக்கி ஓடி வந்தாள். சட்டென்று தன் சேலையை முதுகுப் பக்கம் விலக்கிக் காண்பித்தாள்.

மிகப்பெரிய தீக்காயம் கழுத்திலிருந்து நடுமுதுகு வரை இருந்தது.

"மரத்துண்டுக்குள் என்ன ஈரம், என்ன பிசின் இருந்தது என்று தெரியவில்லை. காற்றுத் துருத்தியை அசைத்துக் கொண்டிருந்தபோது அந்த மரம் வெடித்தது. நான் திரும்பிக் கொண்டேன். என் முதுகு முழுவதும் நெருப்புப் படர்ந்தது.

இது என் மகன். அக்னிக் குழம்பைக் காலிவ் ஊற்றிக் கொண்டான். ஊற்றிக் கொண்டபோது பதினான்கு வயது. இப்பொழுது பதினெட்டு வயது. முன்பாதம் முழுவதும் கரைந்து காணாமல் போய்விட்டது. ஒரு வருடம் வலியில் துடித்தான். இன்று வரை இவனுக்குப் பெண் கொடுக்க எங்களில் எவரும் முன் வரவிவ்லை.

எங்கள் கூட்டத்தில் கண் போனவர்களும், கை விரவ் போனவர்களும், புகைதாக்கி நுரையீரல் கெட்டுப்போய் மூச்சத் திணறி இறந்து போனவர்களும் அதிகம். ஆனால் ஒரு நாளும் அரசோ, அரசரோ, அதிகாரிகளோ குறை சொல்லும்படி நாங்கள் நடந்து கொண்டதில்லை. நீங்கள் கேட்பீர்களோ, கேட்க மாட்டீர்களோ – நாங்கள் எங்கள் வேவைகளை இடையறாது செய்து கொண்டிருக்கிறோம். யுத்தம் வருமோ, வராதோ – நாங்கள் எந்த நேரமும் உங்களுக்கு உதவ எப்பொழுதும் தயாராக இருக்கிறோம். உதவிக் கொண்டிருக்கிறோம்."

"ஆனால் இவர்கள் கேட்பது அதிகமல்லவா." பிரம்ம ராயர் உரத்துக் கேட்டார்.

92

கருத்தட்டாங்குடி கம்மாளர் கூட்டம் அவரைக் கோபத்தோடு பார்த்தது. அங்குள்ள பெண்கள் பல் கடித்தார்கள். பெருமூச்சு விட்டார்கள். ஆனால் பிரம்மராயர் அதை அலட்சியம் செய்தார். தீக்காயம் பட்ட கம்மாளப் பெண்மணி சண்டைக் குரலில் பேசினாள்.

"அதிகம்தான். அதிகம் கேட்டால்தான் ஏதாவது ஒரு சலுகையாவது தருவீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். நடனமாடும் தேவரடியார்களுக்கு எவ்வளவு அகலமாகவும், உறுதியாகவும் வீடு கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள்.

வாசலில் கண்ணம் அடித்து, பனந்துண்டுகளைக் குறுக்கே போட்டு, மேலே ஓடுகள் வேய்ந்து எவ்வளவு உறுதியாகக் கட்டி கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் நாங்கள்மட்டும் கூரை வீட்டில் இருக்க வேண்டுமென்று தலையெழுத்தா? நெருப்பில்தான் காய்கிறோம் என்றால், மழையிலும் நனைந்து சாக வேண்டுமா? நல்ல தூக்கம் எங்களுக்கு இருக்கவே கூடாதா?"

"ஆஹா... என்ன பேசுகிறாய் தாயே... நம்முடைய வெயில் தேசத்தில் கூரைக்குள் இருப்பதுதான் குளிர்ச்சி. மண் கவர் கட்டிய வீட்டுக்குள் இருப்பதுதான் நல்லது. தேவையற்ற ஆடம்பரத்தால் உங்களுக்கு தொந்தரவு தான் உண்டாகும்."

பிரம்மராயர் பதில் சொன்னார்.

"அது சரி... ஆடம்பரம் என்பது உங்களுக்கு மட்டுமே பழக்கப்பட்டிருக்க வேண்டும். மற்றவருக்கு வந்து விடக்கூடாது என்று உறுதியாக நீங்கள் நினைக்கிறீர்கள்." – கூட்டத்திலிருந்து ஒருவன் கூவினான். அந்தக் கூவலில் பொருமல் இருந்தது.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் சட்டென்று கைதூக்கினார். பிரம்மராயரை நோக்கித் திரும்பினார்.

"இவர்களுக்குக் கல்லில் வீடுகட்டிக் கொடுப்பதை யார் தடை செய்திருக்கிறார்கள். எது தடை செய்யப்பட்டிருக்கிறது."

"நான்காவது வருணத்தாருக்குக் கல்லில் வீடு கட்டிக் கொள்ளுகின்ற உரிமையில்லை."

"அதை யார் தீர்மானிப்பது?"

"தர்ம சாஸ்திரம் அவ்விதம் சொல்லியிருக்கிறது..."

"அந்தணர்கள் வாளேந்த சாஸ்திரத்தில் இடமுண்டா?"

"இல்லை. ஆபத்துக் காலத்தில் வேண்டுமானாலும்..." –பிரம்ம ராயர் உரத்துச் சொல்வ, உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் கை தூக்கினார்.

"ஆபத்துக் காலம் என்று அந்தணருக்கு வாளேந்த உரிமை கொடுக்கப்பட்டது. ஆனால் அந்தணர்கள் சேனாதிபதியாக இருக்கிறார்கள். அதேபோல நான்காவது வருணத்தார் கல்லில் வீடுகட்டிக் கொண்டு ஓடு அமைத்துக் கொண்டால் தவறா? வீட்டிற்குத் திண்ணை வைத்துக் கொண்டால் தவறா? நான் இவை மீறக்கூடாது என்று ஏன் சொல்ல வேண்டும். கருத் தாட்டங்குடி குடிமக்கள் கல்லில் வீடு கட்டிக் கொள்ளலாம். வீட்டிற்கு முன்னும், பின்னும் வாசல் வைத்துக் கொள்ளலாம். வீட்டிற்குள் சுண்ணம் அடித்துக் கொள்ளலாம். மற்ற விஷயங் களைப் பற்றி பிற்பாடு பேசிக் கொள்வோம். இன்றிலிருந்து இது உங்களுக்குச் சோழ தேசம் கொடுக்கின்ற சலுகை." என்று உரத்துச் சொன்னார்.

சட்டென்று ஒரு நிமிடம் மிகப்பெரிய மௌனம் கருமார் களுக்குள் ஏற்பட்டது. அவர்கள் திகைத்துப் போனார்கள். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். 'ஓ' வென்று கூச்சலிட்டார்கள்.

"உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வாழ்க... வாழ்க..." என்று கத்தினார்கள். நிலம்பட விழுந்து வணங்கினார்கள்.

முதுகு காட்டி கோபமாகப் பேசியவள், உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் காலைப் பற்றிக் கொண்டு தேம்பி அழுதாள். மன்னர் அவளை நிமிர்த்தி வைத்தார். மெல்ல தலையைத் தடவினார்.

"சகோதரி, உன்னுடைய துணிச்சலான, பேச்சைப் பாராட்டுகிறேன்." என்று சொன்னார்.

தன் கழுத்தில் தங்கத்தாவ் கோர்த்துப் போட்டிருந்த சங்கு மாலையை அவள் கழுத்தில் போட்டார்.

கருமார்த் தலைவனை அணைத்துக் கொண்டார். கருமார்களுக்கு நடுவே நடந்தார். நின்றார். திரும்பினார். அனைவரையும் பார்த்து கைகூப்பினார்.

"உங்கள் தலைவன் முன்னால் உங்கள் அனைவரையும் கைகூப்பி, சோழதேசம் கட்டுகின்ற மிகப்பெரிய சிவன்

கோயிலுக்கு உதவி செய்யுமாறு தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். ஊர் கூடி தேர் இழுப்பதுபோல சோழதேசம் மொத்தமும் மனமொத்து ஈடுபட்டு இந்தக் கோயிலைக் கட்ட வேண்டும். தென்னாடுடைய சிவனுக்கு நம்மால் முடிந்த கைங்கர்யத்தைச் செய்ய வேண்டும். மற்றபடி உங்களுக்கு வாய் மொழியாகக் கொடுத்த சலுகையெல்லாம் பட்டயமாக்கித் தரப்படும். உடனடியாய் பட்டயம் கேட்க வேண்டாம். நீங்கள் வீடுகள் கட்டிக் கொள்ளுங்கள். யாரும் தடுக்க மாட்டார்கள். வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய நிதி உதவியும், மணல், செங்கல், ஓடுகள் போன்ற உதவியும் உங்களுக்கு உடனடியாக வழங்கப் படும்."

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் கைகூப்பி விடை பெறுகையில், எதிர்ப்பக்கமுள்ள கருமார்கள் விலகி வழிவிட, பஞ்சவன்மாதேவி அங்கு ஒயிலாக நடந்து வந்தாள். அவரைப் பார்த்து, 'என்ன இது' என்பதுபோல் சைகை செய்தாள். பிரம்ம ராயருக்குக் கண்களால் நன்றி சொன்னாள்.

"இதற்கு மாறு வேடத்தில் போக வேண்டிய அவசிய மென்ன. அதுதான் எனக்குப் புரியவில்லை." என்று சொன்னாள்.

"இவர்கள் பேசமாட்டார்கள். நான் வந்து கேட்கிறேன் என்றவுடனேயே இவர்கள் தங்கள் குமுறலை அடக்கிக் கொண்டு, வந்து விடுகிறோம்... வந்து விடுகிறோம் என்று சொல்வார்கள். நாம் போன பிறகு முணுமுணுப்பார்கள்.

மனதில் இருப்பதைக் கொட்டிவிட்டும். நம் காதுபட இவர்கள் குறைகளைக் கேட்டு விடுவோம். எவ்வளவு ஆத்திர மாக இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வோம் என்பதற்காகத்தான் நான் புலவர் வேடத்தில் வந்தேன். சேர்ந்து அடிக்கலே வந்து விட்டார்கள்."

கருமார்கள் தலைகுனிந்து கொண்டார்கள். நாணி னார்கள்.

"நீங்கள் வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் பற்றிச் சொன்னதைக் கேட்டேன். மிக நல்ல உத்தரவு. இவர்கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்கு முன்பு அரசே இங்கு மிகப் பெரிய ஆதுரச் சாலை அமைக்கட்டும். உயர்ந்த செங்கற் சுவர்கள் சூழ, ஓடுகள் வேய்ந்த கூரையோடும். பத்துப் பதினைந்து கட்டில்களோடும்,

ஆதுரச் சாலை ஒன்று இங்கு நிரந்தரமாக நிறுவ வேண்டும். தீக்காயங்களுக்கு னவத்தியம் செய்கின்ற திறமையான வைத்தியர் ஒருவரை இங்கே நியமிக்க வேண்டும். தீக்காயங் களுக்கான மருந்துகள் உடனடியாக இவர்களுக்குக் கிடைக்கும் வண்ணம் செய்ய வேண்டும். வீடுகளுக்கு முன்பு ஆதுரச்சாலை எழுவது நவ்லது என்பது என் எண்ணம். கருமார்த் தலைவர் என்ன சொல்கிறார்?''

பஞ்சவன் மாதேவி சொல்வ கருமார்த் தவைவன் மறுபடியும் கைகூப்பினான்.

"இது தாய் உள்ளம். உங்களால்தான் இப்படிச் சிந்திக்க முடியும்...'' என்று மெவ்லிய குரலில் அவளுக்கு நன்றி சொன்னான்.

அதிகாரிச்சிகள் மன்னரின் குதிரையைக் கொண்டுவர பஞ்சவன்மாதேவியும், அரசரும் குதிரையிவ் ஏறிக்கொள்ள, பிரம்மராயர் சிறு தேரிவ் ஏறி உட்கார்ந்து கொண்டார். அவர்கள் தஞ்சை போகும் சாவை நோக்கி நகர்ந்தார்கள். சாலையை அடைந்தார்கள்.

"ஏதும் வருத்தமா பிரம்மராயரே." -உடையார் ஸ்ரீ இராஜ ராஜத்தேவர் அடிக்குரலில் கேட்டார்.

"ஆமாம். நீங்கள் கொடுத்த சலுகையோடு இவர்கள் திருப்தியடைந்து விடுவார்கள் என்று நான் நினைக்கவேயில்வை. அடுந்தச் சலுகைகள் கட்டடம் எழும்புவதற்கு முன்பு நிச்சயம் உங்கள் காதுகளுக்கு வரும். அப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை."

"என்ன சலுகை கேட்பார்கள் என்று நினைக்கிறீர்கள்..."

"கொடுத்துப் பழகி விட்டீர்களல்வவா. இனி வானம்தான் எவ்லை. உங்களைவிட உயரமாக உட்கார வேண்டுமென்று கேட்பார்கள். நீங்கள் கொடுக்கிறீர்களா இல்லையா என்று நான் அப்பொழுது பார்க்கப் போகிறேன்..."

பிரம்மராயரின் குரலில் கோபம் தெளிவாகத் தெரிந்தது.

அவர்கள் தஞ்சையை நோக்கி விரைவாக நகர்ந்தார்கள்.

"கோயிலுக்கென்று எவ்லை வகுத்து கல் நட்ட மூன்றாவது நாளுக்குள் மழை பெய்தாக வேண்டும். மழைபெய்தாவ்தான் கப சகுனம். ·இல்வையெனில் கோயில் கட்டுவதை யாரோ

விரும்பவில்லை என்று அர்த்தம்." – அந்தணர்களும், சிற்பிகளும் மன்னர் அருகே வந்து சொன்னார்கள்.

மன்னர் வானம் பார்த்து பெய்யும் என்று சொன்னார். அதே போல் மழை அடித்துப் பெய்தது. பிற்பகல் வரை நீலமாய் இருந்த வானத்திற்கு நடுவே மேகங்கள் மெல்ல மெல்ல திரண்டு வந்து, கனமாகி காற்று நின்று மேகங்கள் கீழிறங்கி, பிறகு செங்குத்தாய் கனமழையாய் பெய்தது. ஒரே சீரான இரைச்சலை வெளிப்படுத்தியது.

மன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரைப் பஞ்சவன் மாதேவி கவலையோடு பார்த்தாள். இரண்டு பேர் தொப்ப லாக நனைந்து போயிருந்தார்கள். பிரம்மராயரும் நன்றாக நனைந்து போயிருந்தார்.

அந்தத் தேரில் மறைப்புகள் ஏதும் இல்லை. இரு சக்கரத் தேரை இரண்டு புரவிகளில் பூட்டியிருந்தார்கள். புரவிகள் துரித மாக ஓடக்கூடியவைகளாக இருந்தன. அந்தத் தேரில் உட்கார்ந்து கொள்ள வசதியில்லை. ஈட்டிகள் எறிலதற்கும், அம்புகள் விடுவதற்கும் பயன்படுத்துகின்ற சிறு தேர் அது. காலை முட்டுக் கொடுத்து உட்கார்ந்து கொள்ள வேண்டும். வேகமாக ஓடும்போது பிடித்துக் கொள்ள அருகே ஒரு உருளைக் கம்பு மட்டும் இருக்கும். அதில் சோழக்கொடி பறந்து கொண் டிருக்கும்.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் போகின்ற வேகத்தைப் பார்த்தால் அவர் அந்தப்புரத்திற்குப் போகின்ற மனோ நிலையில் இல்லை என்பது தெரிந்தது.

சட்டென்று சிறு தேரின் புரவிகளை பிரம்மராயர் இடது பக்கம் திருப்பச் சொன்னார். தேர் திரும்பியதும் தஞ்சையின் சுற்றுப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு நிகம்பசூதனி கோயில் வழியாக தேலரடியார்கள் இருப்பிடம் நோக்கி விரைவாக பிரம்மராயர் வண்டியைச் செலுத்தினார். எதிரே கூலிப்படையின் கடைசிப் பகுதி போயிற்று.

கூலிப்படை வீரர்கள் உள்ளே நுழைய, இது என்ன சகுனம் என்று தெரியவில்லை. இது கூலிப்படைக்கு நல்லதா அல்லது மன்னருக்கு நல்வதா என்று தெரியவில்லை. ஆனால் எந்த வசதியும் செய்து கொடுக்காமல் வெட்ட வெளியில் நிற்க வைக்கப்பட்டிருக்கிற அந்தக் கூலிப்படை வீரர்கள் இப்பொழுது

எங்கே இருப்பார்கள். என்ன செய்வார்கள். அவர்களுக்கு என்ன உணவு. எங்கே கொடுப்பது என்று யோசித்தார். யோசிப்பே திணறலாய் இருந்தது.

ஆயிரம், இரண்டாயிரம் பேர் என்றால்கூட சமாளித்து விடலாம். பத்தாயிரம் பேருக்கு அதிகமான வீரர்களை எப்படிச் சமாளிப்பது? அதுவும் பகைமை கொண்ட கூலியாட்களை எங்கு கொண்டு போய் நிறுத்துவது? ஒரு படையெடுப்பு நடத்துவதைவிட, ஒரு படையெடுப்பைத் தடுப்பதை விட, இந்த கோயில் கட்டுவது கடினமான காரியமாக இருக்கும்போல் இருக்கிறதே என்று பிரம்மராயர் நொந்து கொண்டார்.

கம்மாளர்களுடைய உதவி வேண்டுமென்பதற்காக, அவர்களுக்கு முன் பின்னாய் வாசல் வைத்து திண்ணையோடு வீடு கட்டிக் கொள்ளும் உரிமை கொடுத்தாயிற்று.

நாளை காலைக்குள் இந்தச் செய்தி குடந்தைக்குப் போய் சேர்ந்து விடும். குடந்தையிலுள்ள அந்தணர்கள் முகம் சுளிப்பார்கள். அரசருக்கு நாசகாலம் என்று ஆரம்பிப்பார்கள். 'கம்மாளன் ஓட்டு வீட்டில் படுத்தால் சூடு தாங்காது. ஓடு சூட்டை உள்ளே இழுக்கும். சூட்டில் வேலை செய்கிறவன் சூட்டில் படுத்தால் மறுநாள் காலை எழுந்திருக்க முடியுமா' என்று ஏதேனும் கதை பேசுவார்கள்.

வேறு ஏதேனும் ஒரு முக்கியமான நேரத்தில் முரண்டு பிடிப்பார்கள். இதைவிட மிகக் கொடுமை நெய்பவர்களையும், யாதவர்களையும், சிற்பிகளையும் தூண்டி விடுவார்கள். சிற்பிகளைத் தூண்டிவிட இது சரியான நேரம்.

சிற்பிகள் நான்காவது வருணத்தினர் இல்லை. ஆயினும் அவர்களுக்கு இன்னும் கூடுதலான மரியாதை வேண்டுமென்று கேட்பதற்கு ஏற்பாடுகள் செய்வார்கள்.

மறவர்களுடைய வீட்டிற்குப் போய் உங்களுடைய வீடு கம்மாளர்கள் வீடுகள் போல் இருக்கின்றன என்று சொல் வார்கள். மச்க வீடு கட்டிக் கொள்ளக் கூடாதா என்று கேட்பார்கள். போர் முனைக்குப் போகாமலேயே இத்தனை கௌரவங்கள் கிடைக்கிறதென்றால் நீங்கள் எதற்குப் போர் முனைக்குப் போகிறீர்கள் என்று பின்னடையச் செய்வார்கள். மனம் நோக வைப்பார்கள்.

எங்கேயாவது அந்தணர்கள் நிறைந்த குடியிருப்பில் அவர்கள் வாழும் மங்கலத்தில் இளைப்பாறும் பொழுது, 'இது நியாயம்தானா. நீங்கள் இருக்கும் பொழுது இல்வாறெல்லாம் நடைபெறலாமா. உங்களுக்கு சாஸ்திரம், சம்பிரதாயம் தெரியாதா, தெரியவில்லையென்றால் என்ன, எங்களைக் கேட்கக் கூடாதா' என்றெல்லாம் வம்புக்கு இழுப்பார்கள்.

இப்படி மீறுவது மழை பொழிவதைத் தடுக்கும் என்பார்கள். அச்சான்யம் பேசுவார்கள். ஜனங்களுடைய உள்ளுக்குள் இருக்கின்ற வீரத்தை ஆட்டிப் பார்ப்பார்கள். இது மிகவும் ஆபத்தானது. கருமாருடைய வாளும், வேலும் முன்னைப் போல் கூர்மையாக இருக்காது. சுகம் வந்து விட்டதல்லவா... கட்டில் போட்டுக் கொண்டு படுக்கின்ற குணம் வந்து விட்டதல்லவா... சம்மட்டி அடி சரியாக விழாது. சம்மட்டி அடி சரியாக இல்லையென்றால், நன்றாக காயவில்லை யென்றால் ஈட்டி முனை உறுதியாக இருக்காது என்றெல்லாம் சொல்லுவார்கள். உங்கள் ஆயுதங்களைக் கவனமாக நீங்களே உருவாக்கிக் கொள்ளுங்கள் என்று பிரிவினை பேசுவார்கள்.

வெளியூரிலிருந்து முன்னூறு கம்மாளர்கள் லந்திருக்கிறார் களாம். அரசர் சொல்லியிருக்கிறார். இராஜேந்திரன் தகவல் அனுப்பியிருப்பார் போலிருக்கிறது. கம்மாளர்களை விட வேண் டாம். நைச்சியமாகப் பேசி கோயில் லேலைக்கு அனுப்பலாம் என்று முன் கூட்டியே தகப்பனும், பிள்ளையும் திட்டமிட்டி ருப்பார்கள் போலிருக்கிறது. கோயில் வேலைக்கு உண்டான இரும்புச் சாமான்கள் செய்லதற்கு அந்த முன்னணிக் கம்மாளர்கள் போதும். இலர்கள் தேவையில்லை. ஆனாலும் உள்ளூர் கம்மாளர்களால் தொந்தரவு வரக்கூடாதென்று கருந்தட்டாங்குடிக்குத் தானே போய் உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேலர் மொத்த விஷயமும் கறந்து அலர்கள் முகத்தைத் திசை திருப்பி விட்டிருக்கிறார்.

பலவிதமான சிந்தனைகளோடும், இறுகிய முகத்தோடும் கிருஷ்ணன் ராமன் என்று பெயர் கொண்ட, பிரம்மராயர் என்று எல்லோராலும் மரியாதையாய் அழைக்கப்படுகின்ற சேர, சோழ, பாண்டிய மண்டலங்களுக்கு முதன்மைச் சேனாதிபதியாக இருக்கிற அந்த அந்தண வீரர் தேரில் ஏறி வெகுதொலைவு பார்த்தபடியே போனார்.

93

'பிரச்சினை ஏற்படுகின்ற எல்வா இடத்திலும் மன்னரே போய் நின்றால் சரியாக வராது. இப்படிப்போய் நிற்பது தவறான செய்கை. பிறகு நான் போய் நின்றால், மன்னர் லரட்டும் பார்த்துக் கொள்வோம். நீங்கள் இளைப்பாறிவிட்டுப் போங்கள் என்று விலகிப் போய்விடுவார்கள். பிரம்மராயர் உரத்தக்குரலில் தனக்குத்தானே பேசிக்கொண்டார்.

மந்திரிகளுக்கும், சேனாதிபதிகளுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் மரியாதை இவ்வையெனில் அரசு நடத்துவது கஷ்டம். மன்னர் இன்னும் தன்னை வாலிப வயதாகவே நினைத்துக் கொண்டிருக்கிறார். அல்லது இந்தக் கோயில் வேலை மிக நன்றாக நடக்க வேண்டுமே என்ற கவலையோடும், பரபரப்போடும் இருக்கிறார்.

கோயில் வேலை என்று ஆரம்பித்து விட்டால், அதில் நாம் கவலைப்படுவதில் எந்த நியாயமும் இல்லை. அது இறைவன் பணி. இறைவன்தான் தன்னுடைய பணியைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமே தவிர, நம்மை கருவியாக்கிக் கொண்டு அவன் நடத்திக் கொள்வானே தவிர, நாம் கவலைப்படுவதில் எந்த நியாயமும் இல்வை.

ஆனாவ் இதைச் சொன்னால் காதில் ஏறாது. போதாக் குறைக்கு கருவூர்த்தேவர் வேறு தஞ்சாவூருக்கு வந்துவிட்டார். அவரிடம் போனாலும் ஏகப்பட்ட பிரச்சினைகள் ஏற்படும். இது சரியில்வை. அது சரியில்வை என்று ஏதாவது சொல்லிக் கொண் டிருப்பார். அவரை எதிர்த்துப் பேச முடியாமல் பட்டத்து மசிஷியும், பஞ்சவன் மாதேவியும் பிரம்மராயரை அவருக்கு அருகே அனுப்பி விடுவார்கள். அவர் என்ன செய்தாலும் முயற்சி செய்யுமாறு கட்டளையிடுவார்கள்.

அருண்மொழி எங்கிருக்கிறான் என்று தெரியவில்லை. ஒருவேளை அலனும் இராஜேந்திரனுக்கு உடந்தையாக இருக்க லாம். சோழ தேசத்தின் நலன் கருதி செய்வதாய் நினைத்துக் கொண்டு இராஜேந்திர சோழன் என்ன சொல்கிறாரோ –அந்தக் கட்டளைகளையெல்லாம் ரகசியமாய் நிறைவேற்றி வைக்கிறான்.

வரைபடங்களோடு வந்த காஞ்சிபுரத்து தேவரடியார் இந்தச் சூழ்நிலையைப் பற்றி விரிவாகக் கடிதம் எழுதி இராஜேந்திரனுக்கு அனுப்புவார்கள். இராஜேந்திரன் மறுபடியும்

அங்கிருந்து ஆட்கள் அனுப்பவாம். கோயில் கட்டுலதில் விருப்பமில்லை என்று சொல்லிவிட்டு விலகி நின்று வேறு எங்கேனும் தனக்காக ஒரு குடியமைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

கொள்ளிடம் தாண்டி ஒரு சவுக்குத் தோப்பில் இராஜேந்திர சோழன் வெகுகாலம் பாடி வீடு அமைத்துக் குடியிருந்தான். அந்த இடம் மிக சந்தோஷமாக இருக்கிறதென்று பல பேரிடம் சொல்லியிருக்கிறான். அங்கு குடியிருப்புகள் கட்ட உத்தர விட்டிருக்கிறான். அல்லது உடையாளூரை இராஜேந்திர சோழன் தன்னுடைய தலைநகரமாகவும் அறிவித்து விடலாம். அல்லது காஞ்சி மாநகரையே தன் இருப்பிடமாகக் கொள்ளலாம். இல்லை திருவொற்றியூர்தான் வசதியென்று திருவொற்றியூரை யும் பலப்படுத்தி விடலாம்.

உற்றுப் பார்த்தால் ஒன்று தெரிகிறது. மூன்று லருடத்திற்கு ஒரு முறை இராஜேந்திர சோழன் ஊர் மாற்றிக் கொண்டு, போன ஊர்களிளெல்லாம் தனக்குச் சாதகமான நண்பர்களை வைத்து ஊரை பலப்படுத்திக் கொண்டு – லடதேசம் முழுலதும், சோழ தேசத்தின் வடபகுதி முழுலதும் தன்னுடைய தெளிவான ஆளுமைக்குக் கொண்டு லந்துவிட்டான்.

மன்னருக்கு அதுபற்றி கவலையில்லை. கோயில் கோயில் கோயிலென்று கோயிலொன்றே குறியாக இருக்கிறார். தேசம் முழுவதும் கோயிலில் ஈடுபட்டுவிடும். அதனால் எந்தப் பிரச்சினையும் வராது என்று வேறு பேசுகிறார்.

இது கொஞ்சம் சிரிப்பாக இருக்கிறது. கோயிலில் தேசம் முழுவதும் ஈடுபடுமோ, சொந்தப் பிள்ளையே ஈடுபட வில்லையே. இதைக் கேட்டால் மன்னர் புரிந்து கொள்வாரா?'

– பிரம்மராயர் சிறு தேரில் குலுங்கியபடியே நெடுந்தூரம் பார்வையைச் செலுத்தியபடியே யோசித்துக் கொண்டு தஞ்சை யின் தெற்குப் பக்கம் நோக்கிப் போனார். தேலரடியார்களின் குடியிருப்புகளுக்குள் அவர் தேர் நின்றது.

அருகிலிருந்த ஒரு வீட்டிற்குள் ஏறி திண்ணையில் நின்று கொண்டார். குதிரை வீரன் என்ன என்று பார்த்தபோது, நீ போ என்று சைகை செய்தார். அந்தத் தெருலைக் கடந்து தெரு முனையில் தேர் போய் நின்றது. ஒரு மரத்தடியில் குதிரைகளை

அவிழ்த்துவிட்டு அவன் தேரைச் சாய்த்துவிட்டுக் கை கட்டி அவரைப் பார்த்தான்.

"இரு" என்று சொன்னார். பிறகு மெல்ல உள்ளுக்குள் எட்டிப் பார்த்தார்.

அங்கு தேவரடியார் பெண்கள் தட்டுப் பரப்பி வட்டமாக உட்கார்ந்திருந்தார்கள். ஒரு பானையிலுள்ள சோற்றைக் கிளறி எல்லோருக்கும் போட்டுக் கொண்டு வந்தார்கள். குழம்பின் மணம் தூக்கியது. மிளகும், நெய்யும் கவந்த வாசனை வீசியது.

இருட்டுவதற்குள் உண்டுவிட்டு, இருட்டிய பிறகு கதை பேசியபடியே தூங்கி விடுகின்ற கிராமத்துப் பெண்கள் போலிருக்கிறது. இரண்டு மூன்று விளக்குகள் வைத்து பாட்டுப் பாடிவிட்டு படுத்துக் கொள்வார்கள் போலிருக்கிறது. உண்ணும் நேரத்தில் உள்ளே போகலாமா, வேண்டாமா என்று யோசித்தார்.

"யாரது வெளியே?" - ஒரு கிழவன் குரல் கேட்டது.

ஒரு பையன் வெளியே வந்தான். யாரென்று கேட்டான்.

அவர் திண்ணைவிட்டு கீழிறங்கினார். முகம் துடைத்துக் கொண்டார்.

"நான் பிரம்மராயர்." என்று நிதானமாகச் சொன்னார்.

அவனும் கிராமத்திலிருந்து வந்த னபயன் போல் இருக்கிறது. மிருதங்கம் வாசிப்பவன் போல் இருக்கிறது.

அவன் மெல்வத் திரும்பி, "யாரோ பிரம்மராயராம்." என்று உரக்கச் சொன்னான்.

வீட்டிற்குள் சட்டென்று ஒரு பாத்திரம் வேகமாய் இழுபடும் ஓசை கேட்டது.

"பிரம்மராயரா?" - ஒரு கிழவன் வேகமாக கூவினான். எவ்வோரும் எழுந்திருக்கும் சப்தம் கேட்டது. தட்டுகள் நகருகின்ற சப்தம் கேட்டன. வெளியே பெண்கள் ஓடிவந்தார்கள். அவரைப் பார்த்தார்கள். கைகூப்பினார்கள். உள்ளே வரச் சொன்னார்கள்.

"உணவு வேளையில் தவறாக வந்துவிட்டேன். மன்னிக்க வேண்டும்." பிரம்மராயர் கைகூப்பினார்.

"வரவேண்டும் வரவேண்டும். உங்கள் வருகை நல்வரவாக வேண்டும். இப்பொழுதுதான் உண்ணத் துவங்கினோம். மழை

பெய்கிறதே இருட்டிவிடுமே என்று பயந்து விரைவாக உணவை முடித்து விடலாம் என்று ஆரம்பித்தோம்."

"உணவை முடித்து விடுங்கள். மழை பலத்து வரும்போல் இருக்கிறது." என்று பிரம்மராயர் சொன்னார்.

பெண்கள் தயங்கினார்கள்.

"சரி, நான் உங்களோடு உட்கார்ந்து கொண்டால் நீங்களும் உண்பீர்களல்லவா."

"நீங்கள் ஐயன் இல்லையா?"

"ஆமாம். அதனால் என்ன..."

"எங்கள் வீட்டில் சாப்பிடுவீர்களா.."

"ஆஹா... நன்றாகச் சாப்பிடுவேன். போர் தொழில் என்று வந்த பிறகு இதெல்லாம் புறக்கணிப்பேயில்லை." பிரம்ம ராயர் சொல்ல அவருக்கு வெள்ளித் தட்டு துடைத்து வைக்கப் பட்டது.

கிழவன் கைகளில் ஜவம் எடுத்து அவருக்கு மெல்வ ஊற்ற, அவர் கையில் ஜலம் வாங்கி லெள்ளித் தட்டில் தெளித்து துடைத்து வீசியெறிந்தார். வெள்ளித் தட்டின் மீது வாழையிலை பரப்பச் சொன்னார்.

வெள்ளித் தட்டின் மீது லாழையினவயைப் பரப்பினார் கள். அனதயும் துடைத்தார். கைகளைக் கழுவிக் கொண்டார்.

பிறகு சோறு பரிமாறப்பட்டது. குழம்பு ஊற்றப்பட்டது. அவர் கைகூப்பினார். எல்வோரும் உட்கார்ந்து கொண்டார்கள். அவர்களும் கைகூப்பினார்கள்.

மெல்வ, இந்த உணவுக்காக நன்றி சொல்கிறேன் என்ற ஸ்லோகத்தைச் சொல்ல, அலர்கள் மௌனமாய் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கண் திறந்தார். ஐந்து பருக்னககள் வாயிவ் போட்டுக் கொண்டார். அவர்களைப் பார்த்து ஆரம்பிக்கலாம் என்று சொன்னார். அலர்கள் உண்ண ஆரம்பித்தார்கள்.

"இன்று கானலதான் உங்கள் மகன் வந்து விட்டுப் போனார்." – கிழவன் சொன்னான்.

"அப்படியா... இந்தப் பக்கம் போகிறேன் என்று சொன்னான். உங்கள் வீட்டிற்கு வந்திருந்தானா." – ஆவலோடு விசாரித்தார்.

"ஆமாம். இங்குதான் உட்கார்ந்திருந்தார். எல்லா வீடு களுக்கும் நுழைந்துபோய் பார்த்துவிட்டு வந்தார்."

"எதற்கு எல்லா வீடுகளுக்கும் நுழைய வேண்டும். ஏதேனும் குறைகள் சொன்னீர்களா...

"ஆமாம். வீடு கட்டுமானம் பற்றி சில குறைகள் நடன மாடும் பெண்கள் சொன்னார்கள்..."

"இது மிகத் தற்காலிகம். மிக உறுதியான, உயரமான வீடுகள் நிச்சயம் உங்களுக்குக் கட்டித்தரப்படும். இந்த வீடுகளை உங்களுக்குச் சேவகம் செய்யும் பெண்களுக்குக் கொடுத்து விடுமாறு தான் நாங்கள் நினைத்திருக்கிறோமே தவிர, இது உங்களுக்குண்டான வீடுகளே இல்லை. வெளிப்புறம் கருங்கல் கவரும், உள்பக்கம் தேக்குமரத்தால் இழைக்கப்பட்ட உத்திரமும், அதன் மீது செங்கல் பரப்பும் கொண்டு மச்க வீடுகளாக இருக்குமே தவிர, மேல் சாளரமும், கீழ் சாளரமும் வைத்து மிக உயரமாகக் கட்டப்பட்டிருக்குமே தவிர, உங்களுடைய வீடெல் லாம் இது மாதிரி இருக்காது. அதற்குண்டான வரைபடங்கள் வந்துவிட்டன.

வரைபடங்கள் இல்லாமல் வீடு எழுப்புவது கடினம். எனவே, வரைபடங்களை வரையச் சொல்லியிருக்கிறார்கள். வரைபடங்கள் காஞ்சிபுரத்து தேவரடியார்களிடம் இருக் கின்றன. நாளை காலை அரசரிடம் கொடுக்கப்படும். பிறகு வெகு விரைவில் வீடு கட்டுதல் ஏற்பட்டுவிடும்."

"எவ்வளவு சீக்கிரம் கட்டிக் கொடுப்பீர்கள் ஐயா..." – ஒரு பெண் கேட்டாள்.

"ஆறு மாதமாவது ஆகும்."

"அதுவரை இந்த மழையில் இந்த வீடெல்லாம் தாக்குப் பிடிக்க முடியுமா என்று சந்தேகமாக இருக்கிறது."

"மழைக்குத் தாக்குப் பிடித்துவிடும். சந்தேகமேயில்லை. ஆனால் இப்பொழுதே பத்துப் பன்னிரண்டு பேர் இருக்கிறீர் களே. இந்தக் கூட்டம்தான் எனக்குப் பயமாக இருக்கிறது."

"நாங்களெல்லாம் திண்ணையில் தான் படுத்துக் கொள் கிறோம் ஐயா. வேறு காற்றோட்டமாக இடம் இல்லை. உள்ளுக்குள் படுத்தால் வியர்த்து வழிகிறது."

"இல்லை. இன்று குளிர் அதிகமாக இருக்கும். திண்ணைக்கு நீங்கள் போக வேண்டியிருக்காது..."

"ஆனால் தினமுமா மழை பெய்யும்...?"

"தினமும் மழை பெய்யாது. ஆனால் அடிக்கடி மழை பெய்யும். இந்த வருடம் முழுவதும் நல்ல மழையிருக்கும் என்று தான் சொல்லுகிறார்கள்." என்று பிரம்மராயர் சொல்ல, பெண்கள் அவரைக் கூர்ந்து பார்த்தார்கள்.

"ஐயா, பத்தாயிரம் வீரர்கள் வந்துவிட்டார்களாமே. அவர்களால் நகரத்தில் குழப்பம் ஏற்படும் என்று கோயில் கட்டும் இடத்திற்கு அடுத்த பக்கம் உள்ள தோப்பில் நிற்க னவத்திருக்கிறீர்களாமே... அவர்கள் அங்குதான் குடியிருப்பார்களா..."

"ஏனம்மா... எதற்குக் கேட்கிறாய்..."

"வீட்டுக்காவல் ஏதும் இல்லாத இந்த இடத்தில், அரைகாத தூரத்தில் பத்தாயிரம் வீரர்கள் இருந்தால் எங்களுக்கு அது பாதுகாப்பானதா என்று யோசித்துக் கொண்டு தான் நாங்கள் சாப்பிடத் துவங்கினோம். நாங்களும் நகருக்குள் போய்விடலாமா என்று எண்ணத் துவங்கினோம். நல்லவேளை நீங்கள் வந்துவிட்டீர்கள்..."

"ஆமாம். அவர்கள் அங்குதான் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள்."

"ஐயா, யாருக்கும் எந்த வசதியும் செய்து தராமல் மடமடவென்று கல்நட்டு யானையைச் கற்ற வைத்து எல்லைகள் வகுத்து விட்டீர்கள். பூஜை ஆரம்பித்து விட்டீர்கள். மிச்ச வேலைகள் எப்பொழுதும் நடக்கும்..."

"லெகு விரைவில் நடக்கும். இந்தப் பத்தாயிரம் வீரர்களுக்குத்தான் இத்தனை நாள் காத்துக் கொண்டிருந்தோம். இந்த வீரர்கள் தரம்வாரியாகப் பிரிக்கப்பட்டு வெல்வேறு லேலைகளுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படுவார்கள். எல்லா வீரர்களும் ஒரே இடத்தில் குவிந்திருக்க மாட்டார்கள். எனவே, நீங்கள் கவலைப்பட லேண்டாம். இந்த இடத்தில் கோயில் கட்டுவதற்காக ஆயிரம் வீரர்களுக்குக்குமேல் இருக்க மாட்டார்கள்."

"அடேங்கப்பா... ஆயிரம் வீரர்கள் என்பது லேசான காரியமா. அவர்கள் முரட்டுத் தனம் செய்தால் யார் அடக்குவார்கள்..."

"சோழப் பனடவீரர்கள் அடக்குவார்களம்மா. உங்களுக்கு ஏன் அந்தக் கவலை. உங்களுனடய பாதுகாப்பு என்னுனடய

வேலை. உங்களிடம் யார் தவறாக நடந்தாலும் அதனுடைய விளைவு மிகக் கொடுமையாக இருக்கும்..."

"இன்னும் சற்று குழம்பு விடட்டுமா..."

"ருசியாக இருக்கிறது. விடு..."

அவள் குழம்பும் ஊற்றி, குழம்புக்கு அடியில் இருக்கின்ற பருப்போடு கலந்த கத்திரிக்காயை வாரி, அவர் இலையில் போட்டாள். பிரம்மராயர் அதைச் சோற்றில் கலந்து விழுது விழுதாக வாயில் வைத்து விழுங்கினார்.

அவர் மனம் முழுவதும் வீரர்கள் இப்பொழுது என்ன செய்து கொண்டிருப்பார்கள் என்ற நினைப்பிலேயே இருந்தது.

திருவொற்றியூரிலிருந்து தஞ்சை வரை நடந்து வந்த அந்தக் கூலிப்படை வீரர்கள், களைப்பும் பசியும் தாங்காமல் அந்தத் தோப்பில் கால் விரித்துப் படுத்துக் கிடந்தார்கள். மேலே கருமேகம் சூழ்ந்து தோப்பு இருட்டாயிற்று. குளிர் காற்று வீசியது. "மழை பெய்தால் என்ன செய்வது." – வாரிச் சுருட்டிக் கொண்டு சில இளைஞர்கள் எழுந்தார்கள்.

"என்ன... எழுந்து எங்கே போகப் போகிறாய். ஒண்டுவதற்கு இடம் தேடுகிறாயா. எப்பொழுது உன் வீட்டை விட்டுக் கையில் வாளை எடுத்துக் கொண்டு சோழர்களை ஜெயிப்பேன் என்று வெளியே வந்தாயோ அப்பொழுதே உனக்கு வீடு என்பது தலைக்கு மேல் கூரை என்பது இல்லையென்றாகிவிட்டது. நான் ஒரு கூரையின் கீழ் படுத்து கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகள் ஆகிவிட்டன. இனி ஒரு கூரையின் கீழ் படுக்கின்ற யோக்கியதை எனக்கு இருக்குமென்று நினைக்கவேயில்லை. ஆடு, மாடுகள் போல், ஒரு எருமை போல் மழை வந்தாலும், வெயில் வந்தாலும் நான் லெளியே உட்கார்ந்து அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். ஒண்டிக் கொள்ள எனக்கென்று ஒரு இடம் இல்லை. எனவே பதட்டப்படாமல் படுத்துக் கொண்டிரு. மழை வந்தால் எழுந்து உட்கார்ந்து கொள்ளலாம்." என்று எழுந்து, திரிந்த வீரர்களை மற்ற வீரர்கள் ஆகவாசப்படுத்தினார்கள்.

ராஷ்டிரகூடன் விகர்ணன் தோப்பின் எல்லைக்குப் போய் சீராளன் எங்கிருக்கிறான் என்று பார்த்தான்.

தொவைதூரத்தில் யானைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஒரு மாவிலைக் கொத்தோடு கூடிய கொம்பு நடப்பட்டிருந்தது.

ஒருவேளை கோயிலுக்குண்டான இடமாக இருக்கவாம். யானைகள் எல்லைகள் வகுக்க நடை பயிற்றுவிக்கப் பட்டிருக்கலாம்.

அது தாண்டி சில ஓடு வீடுகள் தெரிகின்றன. அந்த ஓட்டு வீட்டிலிருந்து புகை எழுகிறது. இதோ – சமையல் நடந்து கொண் டிருப்பது போல கழன்று நிதானமாக புகை மேலே போகிறது.

இந்தப் பக்கம் தஞ்சை நகரின் ஆரம்பம் தெரிகிறது. வீரர் களின் பாடி வீடுகள் இருக்கின்றன. எல்லைப்புறக் காவலுக்காக மூங்கில் கழிகளை நட்டு, பிறகு அகழி தாண்டச் சொல்லி, பிறகு கோட்டைக்குள் விடுகிறார்கள். தாண்ட முடியாத அகழி ஒன்று மில்லை. ஆனாலும் ஜலம் வேகமாகப் போய்க் கொண்டிருக் கிறது. முதலைகள் இருக்கலாம் என்று தோன்றுகிறது. மூங்கில் கம்பை ஊன்றி எகிறினாவ் கோட்டையினுடைய மேல் தளத்திற்குப் போய்விடலாம். ஆனால் கோட்டைக்குள் போய் என்ன செய்வது?

தெற்கே குடிசைகள் தெரிகின்றன. மிகப்பெரிய கூரைக் கொட்டகை ஒன்று இருக்கிறது. யானை கட்டுவதற்கா அல்லது வேறு எதற்காகவா? கல் உடைக்கும் ஓசை கேட்பதால் சிற்பிகள் அங்கு இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஒருவேளை சீராளன் அங்கு இருப்பானோ?

விகர்ணன் இடம் பெயர்ந்து தெற்கே குடிசை வீடுகளைக் கவனித்தான்.

94

கரியமாணிக்கம் என்ற அந்த தேவரடியாருக்கு மேற்குப் பக்கம் லடக்குப் பார்த்து முதல் வீடு கொடுக்கப்பட்டிருந்தது. மேற்குப் பக்கம் என்பதால் உச்சிப் பொழுதுக்குப் பிறகு சூரியனுடைய வெயில் லெளிப்புறச் கவரில் பட்டு வீட்டிற்குள் அனல் வீசியது. வடக்கே வாசல் வைத்திருப்பதால் கோடைக் காலத்தில் காற்று சிரமப்பட்டுதான் உள்ளே நுழைந்தது.

வீடு ஒரு அடுப்புபோல இருந்தது. காற்று கழன்று வெளி யேறவில்லை. உள்ளுக்குள்ளும் புகவில்லை. கும்மென்று ஒரு புழுக்கமாக வீடு கிடந்தது.

கரிய மாணிக்கம் கோபமுற்றாள். வருத்தமுற்றாள்.

சிதம்பரம் தீட்சிதர்கள் மூலமாக ஊருக்கு அதிகாரிகள் வந்து தமுக்கு அடித்து ஊரைக் கூட்டி அரசு ஓலை என்று உரக்கப்படித்து, 'கரிய மாணிக்கம் கோயில் பணி செய்வதற்காக பணிக்கப்பட்டிருக்கிறாள். அவளுக்குத் தனியாக ஒரு வீடும், கை நிறைய சன்மானமும், தலைக்கோலி என்ற பட்டமும் இன்ன பிற வசதிகளும் தஞ்சையில் செய்து தரப்படும்.' என்று நீட்டி முழக்கி அறிவித்தார்கள்.

மக்கள் ஆரவாரத்தில் கைக்கொட்டினார்கள். மிக நல்ல வாய்ப்பு என்று மற்ற தேவரடியார்கள் பொறாமைப்பட்டார்கள். சிதம்பரத்திற்கு நல்ல பெயர் கொண்டு வா அம்மா என்று கிளம்பும்போது வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

"கோயில் உனக்குக் கொடுத்திருக்கிற வீட்டை நான் எடுத்துக் கொள்ளட்டுமா?" – வழியில் மடக்கி இன்னொரு தேவரடியார் வேகமாகக் கேட்டாள்.

சரியென்று தலையசைத்ததும் இடுப்பிலிருந்த ஓலையை உருவி, "இதில் கைச்சாற்று போட்டுக்கொடு" என்று கேட்டாள்.

நாலுபேர் எதிரே கரிய மாணிக்கம் கைச்சாற்று போட்டு ஓலையை அந்த தேவரடியாரிடம் நீட்டினாள்.

சிதம்பரத்திலிருக்கின்ற வீடு இனி அந்த தேவரடியாருக்குச் சொந்தமாயிற்று. ஆனால் இங்கு வந்ததுமே தெரிந்துபோயிற்று – எதுவுமே சரியில்லையென்று. திரும்பவும் சிதம்பரத்திற்கே போய் விடலாமா என்று கோபம் எழுந்தது. ஆனால் போக விட, மாட்டார்கள். வெளிப்பார்வைக்கு தேவரடியார்களுக்குச் சகல சுதந்திரமும் இருப்பதுபோல் தெரிந்தாலும் உள்ளுக்குள் யாருக்குமே இல்லை. படைவீரர்களுக்குண்டான சுதந்தரம், முன்னும் பின்னும் நகர்தல் வேறு எந்த மக்களுக்கும் இல்லை.

கோட்டையைத் தாண்டி வெளியே போனால் எங்கே போகிறாய், ஏன் போகிறாய் என்று கேட்பார்கள். போக உத்தரவு இருக்கிறதா என்று கேட்பார்கள்.

சோழ தேசம் என்னுடைய தேசம்... இதில் எங்கு வேண்டு மானாலும் போகவாம். இதில் யாரிடம் உத்தரவு கேட்க வேண்டும் என்று பதிலுக்குக் கேட்டால் இரு என்று நிற்க வைத்து விடுவார்கள். வயல் வரப்புகளோடே நடந்து போனால் கிராம மக்கள் சந்தேகப்படுகிறார்கள். ஏன் பாதை வழியாகப்

போகாது காட்டு வழியாகப் போகிறாய் என்று மடக்கி கேள்வி கேட்பார்கள்.

சோழதேசம் அற்புதமான தேசம்தான். ஆனால், ஒரு தேவரடியார் தன்னந்தனியாய் தஞ்சையிலிருந்து சிதம்பரம் நோக்கி நடந்து போய்விட முடியாது. மாட்டு வண்டியிலோ, குதிரை வண்டியிலோ நகர்ந்துவிட முடியாது. ஆண்கள் துணை யோடு தான் போக வேண்டும்.

ஆனால் தேவரடியார் மிகச் சந்தோஷமாக வாழ்க்கை வாழ்கிறார்கள் என்று குலப்பெண்கள் நினைத்துக் கொண்டிருக் கிறார்கள். பாட்டென்ன, ஆட்டமென்ன, பல புருஷர்களோடு பேசிச் சிரிப்பதென்ன, நினைத்தாவ் நினைத்த இடத்திற்குக் கிளம்பி பல கோயில்களுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்வதென்ன... அங்கங்கே கிடைக்கிற மரியாதைகள் என்ன, தங்குமிடங்கள் என்ன, வாழ்க்கை வசதிகள் என்ன என்று குலப்பெண்கள் பொறாமையோடு பேசுகிறார்கள்.

உங்கள் ஆட்டத்தைப் பாராட்டி நகைகளும், துணிகளும் கூட இலவசமாய் கொடுப்பார்களல்லவா. தனவணிகர்கள் உங்களிடம் ஸ்நேகமாய் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுவார்களல்லவா என்று வினவிய குலப்பெண்களும் உண்டு.

இவைகளெல்லாம் உண்மைதான். ஆனாலும் இவை களைத் தாண்டி தேவரடியார் என்கிறபோது ஒரு அடிமைத் தனமும் இருக்கிறது.

ஒரு கிராமத்து நாயை சோறு போட்டு வளர்ப்பது போவ உச்சி வேளையில் குரல் கொடுத்து அழைத்து, எஞ்சிய சோற்றை கவிழ்ப்பதுபோல ஏதேனும் கொடுத்துவிட்டு பதிலுக்கு எதிர்பார்க்கிறார்கள்.

நாயைக் காவலுக்கு எதிர்ப்பார்ப்பதுபோல் மாலை வேளை களில் கள்வெறியோடு உட்கார்ந்து கொண்டு 'ஆடு... ஆடு... என்று சொல்கிறார்கள். ஆட்டத்தைப் பார்க்கிறவர்கள் எல்லோரும் பாட்டையும், தாளத்தையும், ஆட்டத்தையும் பார்க்கிறார்கள் என்று சொல்ல முடியாது. வயதானவர்கள் ஆடினால், 'போதும், இளம் பெண்களை ஆடச் சொல்' என்றுதாதன் சொல்கிறார்கள்.

கோயிலில் ஆடும்போது அவ்வளவு கூட்டம் இருக்காது. ஆனால் பாடி வீடுகளில் தங்கியிருக்கும் வீரர்கள் கற்றிக் கொண்டால் அங்கு வேறு விதமான ஆட்டம் ஆட வேண்டும். ரதி மன்மதன் திருமணம், குறலன், குறத்தி என்றெல்லாம் விதம் விதமான குதியல் ஆட்டங்களைக் கேட்பார்கள். கொஞ்சம் குடித்துவிட்டு ஆடு என்று கட்டாயப்படுத்துவார்கள். இவ்வளவு தானா... இவ்வளவுதானா... இன்னும் வேறேதும் இல்லையா என்று தொந்திரவு செய்வார்கள்.

ஆட்டம் முடிந்து வீட்டிற்குப் போன பிறகு வீட்டுத் திண்ணையில் இருபது, முப்பது பேராவது உட்கார்ந்திருப்பார்கள். என்ன சொன்னாலும் போக மாட்டார்கள்.

அப்படி வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருக்கிற படை வீரர்களைப் பார்த்தால் கோபமாக வரும். எழுந்து போங்களடா நாய்களா என்று கூச்சலிட வேகம் வரும். ஆனால் கூச்சலிடக் கூடாது. குறிப்பாய் படை வீரர்களை அவமானப் படுத்தக் கூடாது.

சோழதேசம் இன்று இந்த நிலைமையில் இருப்பதற்குக் காரணம் படைவீரர்கள். அவர்கள் உயிர்த் தியாகம். அவர்களுடைய விழுப்புண்கள். நடந்து நடந்து, பல காதம் நடந்து அவர்கள் ஜெயித்த போர்கள். பிடித்த கோட்டைகள். சோழ தேசத்தின் செல்வ வளத்திற்குக் காரணம் படை வீரர்கள். கங்கர்களையும், ராஷ்டிர கூடர்களையும், சாளுக்கியர்களையும் கொள்ளையடித்து பாண்டியர்களை முற்றிலும் துவம்சம் பண்ணி, ஈழத்திலுள்ள அபூர்வமான பொருள்களையெல்லாம் கொணர்ந்து, மிக உயர்ந்த ஒரு நிலையை அவர்கள் சோழ தேசத்திற்குக் கொடுத்து விட்டார்கள்.

எல்லார் வீட்டிலும் பொன்னும், பொருளும், வெள்ளிக் கிண்ணமும், தங்கப் பாத்திரமும், தாமிரக் குடங்களும், இரும்புக் கத்திகளும் இருக்கின்றன. பருத்தித் துணிகளும், பட்டுத் துணிகளும் சகலர் வீட்டிலும் உபயோகப்படுத்துகின்றனர். எல்லா வர்ணத்தாரும் எல்லா விதத் துணிகளையும் கட்டிக் கொண்டு அலைகிறார்கள்.

இத்தனை வெற்றிக்குப் பிறகும், சோழ தேசம் விழிப்பாக இருக்கிறது. காவிரியாற்றில் மாட்டு வண்டியைச் செலுத்தி மேடேறினால் உடனே குதிரை வீரர்கள் வந்து நிற்கிறார்கள். யார், எதற்காக எங்கே வந்திருக்கிறாய், ஏன் இருட்டில் கரை

தாண்டுகிறாய் என்று கேட்கிறார்கள். பிரம்மராயரே வந்து நிற்கிறார். இரவெல்வாம் ஒரு முதல் மந்திரி காவிரிப் படுனக முழுவதும் காவல் போட்டுக் கொண்டு அலைகிறார் என்றால் ஏதோ பயமிருக்கிறது என்றுதானே பொருள். ஆனால் இலர்கள் எதைக் குறித்து பயப்படுகிறார்கள் என்று தெரிய வில்லை.

இந்த ஊருக்குப் பத்தாயிரம் வீரர்கள் வரப்போகிறார்கள். அந்த வீரர்கள் எல்லோரும் கங்கர்கள், ராஷ்டிர கூடர்கள், மேலைச் சாளுக்கியர்கள். அவர்களை இங்கு கூலி வேலைக்காக அழைத்துக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னாலும் அவர்களைக் குறித்து பயப்படுவதாகத் தெரியவில்லை. உள்ளுக் குள்ளேயே ஒருவர் மீது ஒருவர் சந்தேகத்தோடேயே இருக்கிறார்கள்.

கோயில் கட்டுகிற பணி என்று ஒன்று சொல்லியாகி விட்டது. சிற்பிகள் மட்டும் உட்கார்ந்திருக்கிறார்களே தவிர கருமார்கள் இல்லை. கருமார்கள் இல்லாததால் வேலை தாமத மாகுமென்று சிற்பிகளே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஊருக்குத் திரும்பவும் எப்போது போகலாம் என்று கேள்வி கேட்டபோது, கோயில் பணி முடிந்த பிறகு என்று பதில் வந்தது. கோயில் பணி ஒரு தேவரடியாருக்கு எப்பொழுது முடியும் என்று யாரும் சொல்ல முடியாது.

ஆனால், தலைக்கோலி இராஜராஜிதான் மிகத் தெளிவாக இருக்கிறாள். இன்னும் ஐந்து வருடங்களில் நீ சிதம்பரம் போய்விடலாம் என்று சொன்னாள். ஏன் என்று கேட்டதற்கு, 'அதுவரைக்கும் உன் மார்பு நிற்காது; தழைந்துவிடும். மார்பு தழைந்து விட்டால் உன்னை ஆடச் சொல்ல மாட்டார்கள். இருக்கிற பெண்களையே சொல்வார்கள். எனவே நீ எந்தக் கவலையுமில்லாமல் சிதம்பரம் நோக்கிப் போகலாம்' என்று சொன்னாள். இதைக் கேட்பதற்கு சற்று வேதனையாகவும் அருவெறுப்பாகவும் இருந்தது. ஆனால் இது உண்மையென்றும் தெரிந்தது.

எப்பொழுது போவோம் என்று தெரியவில்லை. இருக் கின்ற இடமும் கத்தமாக இல்லை. கற்றியிருக்கின்ற ஆட்களும் சரிவர இல்லை.

சிற்பிகளுக்கோ திமிர் அதிகம். பெட்டைகள் வந்து விட்டார்களா என்றுதான் தேவரடியார்களைப் பற்றி சொல்

கிறார்கள். யாராவது அந்தப் புறமாகப் போனால் நில் என்று சொல்லி, அவளை உள்ளே அழைத்து வந்து இப்படி நில், அப்படி நில், அந்தக் கை தூக்கு, இந்தக் கை தூக்கு, தொடையைக் காட்டு, முதுகைக் காட்டு என்றெல்லாம் கட்டளையிடுவார்கள். அப்படி கட்டளையிடும்போது உடனடியாக தேவரடியார் அதை நிறைவேற்ற வேண்டும்.

'அவர்கள் சிற்பம் செதுக்குலதற்காக உங்களை உற்றுப் பார்க்கிறார்கள். இப்படி வேறு யாரை உற்றுப் பார்ப்பது... உங்களைத் தான் பார்க்க முடியும். உங்களைக் குறிப்பாக வைத்துத் தான் சிற்பம் செதுக்க முடியும். எனவே, அவர்கள் என்ன கட்டளையிட்டிருக்கிறார்களோ அதை உடனடியாகச் செய்யுங்கள்' என்று தேவரடியார்களுக்கு அதிகாரிகளின் உத்தரவு இருந்தது.

கரியமாணிக்கத்தோடு, எச்சமண்டை என்பவளும் அனுப்பப்பட்டிருந்தாள். ஏன் அவளுக்கு அப்படி பேர் லைத்தார்கள் என்று தெரியவில்லை. இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்து இறந்து பிறகு, அலள் தாய் அவளை இது எஞ்சிய மண்டை என்று இழிலாகப் பேசி, அப்படி இழிவாகப் பேகவதின் மூலம் பிரியமில்லை என்பதைக் காட்டிக் கொண்டு, அப்படிப் பிரியமில்லை என்பதைச் சொல்வதன் மூலம் தனக்கு இது சொந்தமாக இருக்கட்டும். தன் லயிற்றில் இது தங்கட்டும் என்று பெயர் வைத்திருப்பாள் போலிருக்கிறது.

ஆனால், எச்சமண்டை அழகி. மிக அமைதியானவள். கொஞ்சம் அப்பாவி. யார் எது சொன்னாலும் நம்பி விடுகிறவள். பதினைந்து வயதில் எல்லாக் கூத்தும் முறைப்படியாகக் கற்று முடித்தலள். சிதம்பரத்தில் அரங்கேற்றம் செய்து எல்லா தீட்சிதர்களின் பாராட்டைப் பெற்றவள்.

ஆடுவதில் மட்டுமல்லாமல் மாலை தொடுப்பதிலும் வல்லவள். சிதம்பரத்தில் பலமுறை நடராஜப் பெருமானுக்கு அலள் விதம் விதமாக மாலை தொடுத்துப் போட்டிருக்கிறாள்.

குறிப்பாய் திருவாதிரை அன்று எச்சமண்டை இரவெல்லாம் விழித்து நடராசப் பெருமானுக்கு மாலை தயாரிப்பாள். அடர்த்தியாய் யானைத் துதிக்கைபோல மாலை செய்து அனுப்புலாள். காலில் மாட்ட வெட்டிலேரில் இறுக்கமாய் குஞ்சிதபாதம் செய்லாள். உலா வரும்போது அம்மனுக்கு சடையாய் 'பூ' தைத்து அனுப்புவாள். கவாமி பல்லக்கில் கடந்து

போன பிறகு எல்லோரும் நின்று பின்புறம் என்ன அலங்காரம் என்று பார்ப்பார்கள். எச்க மண்டை கைங்கர்யம் என்று சொல்வார்கள். ஊரார் எத்தனை புகழ்ந்தாலும் கர்வம் எச்சு மண்டைக்கு ஏறாது. 'ஏதோ என்னாவ் ஆனது. இறைவன் பணி' என்று மிருதுவாய் சொல்வாள்.

வேறு யாரோடும் ஒட்டாமல் கரிய மாணிக்கத்தையே கற்றிச் கற்றி வந்தாள். கரிய மாணிக்கம் கிளம்புகிறேன் என்றதும், எச்க மண்டையும் தானாகலே தஞ்சையில் இறைபணி செய்ய ஏற்றுக் கொண்டாள். அவளுக்கு அழைப்பு வராதபோதும் இந்த வலையிலே வந்து சிக்கினாள்.

வீடு எப்படியிருக்கிறது என்று கேட்க, நன்றாக இருக்கிறது என்று சொன்னாள். இந்த வீடு வெப்பம் அதிகமுள்ள வீடு என்று இரண்டு மூன்று தேரவடியார்கள் வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போய்விட்டார்கள்.

எச்க மண்டையும், கரிய மாணிக்கத்தையும் தவிர வேறு எவரும் அங்கு வரவிவ்லை. லரமாட்டார்கள். என்று தான் தோன்றியது. ஒரு லேளை லெளியூரிலிருந்து வேறு எவரேனும் வந்தால் வேறு வழியில்லாமல் இங்கு தங்கலாம். தங்கிவிட்டு வேறு இடம் மாற்றிக்கொண்டு போகலாம்.

கரியமாணிக்கம் வீட்டைப் பலமுறை கற்றி வந்தாள். வேறு ஏதேனும் செய்தால் இந்த வீடு சரியாகுமா, ஓடு உயர்த்திக் கட்டினால் சரியாகுமா... அல்லது உயர்த்திக் கட்ட முடியாத வீடா. உயர்த்திக் கட்ட என்ன செலவாகும். கையிலே நாற்பது பொன் கழஞ்ககள் இருக்கின்றன. அதை லைத்து இந்த வீட்டைச் சரி பண்ணி விடலாமா. தெற்குப் பக்கம் உயரே சுவர் எழுப்பியிருக்கிறார்கள். கொல்லைப் புறத்தில் பெண்கள் நடமாட்டம் தெரியக்கூடாது என்று நினைத்திருக்கிறார்கள்.

ஆனால் வடக்குப் பக்கம் வாசல் வைத்து திறந்து விட்டிருக்கிறார்கள். குளிர் காலத்தில் அதிக குளிரும், வெயில் காலத்தில் அதிக சூடுமாய் இந்த வீடு இருக்கக்கூடும்.

ஆனால் அடுத்த வீடு இத்தனை மோசமில்லை. இந்த வீடு மேற்கத்திய வெயிலைத் தாங்கிக் கொள்வதால் அடுத்த வீடு சாதாரணமாக இருக்கிறது. இது மட்டும்தான் அனல்போல தகிக்கிறது. என்ன செய்லது...?

கரியமாணிக்கம் கோபமாகவும், அலுப்பாகவும் வீடு சுற்றி வரும்போது விகர்ணன் அந்த வீட்டிற்கு அருகே வந்தான். குடிக்கத் தண்ணீர் கேட்கலாம் என்று அந்த வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தான்.

"யாரது?" எச்க மண்டை குரல் கொடுப்பது தெரிந்தது. கொல்லைப் புரத்திலிருந்த கரிய மாணிக்கம் உள்ளுக்குள் நடந்து வந்தாள்.

"யாரது?" - அவளும் குரல் கொடுத்தாள்.

எழுந்து நின்றான். கை கூப்பினான். வந்தலர்களைப் பார்த்ததும் அவர்கள் தேவரடியார்கள் என்று தெரிந்து கொண்டான்.

"அடடே... சிற்பிகள் வீடு என்று நினைத்தோமே... இல்லை போல் இருக்கிறதே." என்று தடுமாறினான். இறங்கிப் போய் விடலாமா என்று நினைத்தான். ஆனால் ஒரு ஆள் வந்து நின்று அமர்ந்து விட்டு எதுவும் பேசாமல் இறங்கிப் போனால் நல்ல தல்ல என்பதால் தாமதித்தான். "குடிக்கத் தண்ணீர் வேண்டும்." என்று கேட்டான்.

அதற்குள் எச்சுமண்டை மேற்கொண்டு எதுவும் கேட்காமல் தண்ணீர் எடுக்க உள்ளே போனபோது கரிய மாணிக்கம் அலளை நிறுத்தினாள்.

"நீங்கள் யார். ஏன் இந்தப் பக்கம் வருகிறீர்கள்?" என்று வினவ, வந்தவன் முகத்தில் மெல்லியதாய் ஒரு கலவரம் தெரிந்தது.

சோழ வீரனாய் இருந்தால் இந்தக் கலவரம் வந்திருக் காதே... கரிய மாணிக்கம் சந்தேகப்பட்டாள். சிற்பியாக இருப் பானோ... வெறுமே பெண்களை நோட்டமிட முயற்சிப்பவனாக இருப்பானோ விசாரித்து விட்டு நீர் கொடுக்கலாம் என்று தோன்றியது.

"சொல்லுங்கள். நீங்கள் யார்?" மறுபடியும் குரல் உயர்த்திக் கேட்டாள்.

"என் பெயர் விகர்ணன்..."

"விகர்ணனா... தமிழ்ப் பெயராக இல்லையே...

"ஆமாம். நான் ராஷ்டிர கூடத்தைச் சேர்ந்தலன்..."

"ராஷ்டிர கூடத்தைச் சேர்ந்தவரா. உங்களுக்கு இங்கு என்ன லேவை. சோழ மண்ணிற்கு எதற்காக வந்தீர்கள்...?"

"நான் கைதியாக்கப்பட்டிருக்கிறேன். என்னை திரு வொற்றியூரிலிருந்து இன்று பிற்பகல் இங்கே கோயில் பணிக் காகக் கொண்டு வந்தார்கள். சிற்றுளிகள் சத்தம் கேட்டது. இந்தப் பக்கம் வந்தேன். ஆனால் உங்கள் வீடு எதிர்ப்பட்டதும் உட்கார்ந்து விட்டேன்..."

"சிற்றுளிகள் சத்தம் இங்கிருந்தா கேட்டது..."

"இல்லை. ஒரு கூரைப் பக்கமிருந்து கேட்டது. ஆனால் நான் திசை மாறிவிட்டேன்...

"சிற்றுளிகளின் சத்தம் கேட்டு ஏன் போனீர்கள்?"

"அங்கு சிற்பிகள் இருப்பார்கள்; ஏதேனும் வேலை செய்து கொண்டிருப்பார்கள். என்ன வேலை செய்கிறார்கள் என்று கவனிப்பதற்காக இங்கு நடந்து வந்தேன். சிற்பிகள் கூரை இன்னும் சற்று தொலைவில் இருக்கும் போல் இருக்கிறது. எனக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுத்தால் அங்கு போய் அவர் களோடு பேசிக் கொள்கிறேன்." என்று வினயமாகப் பதில் சொன்னான்.

"அடிமையாக வந்தவர் தானே." அந்த வார்த்தையை அழுத்தம் திருத்தமாக கரிய மாணிக்கம் உச்சரிக்க, வந்தவன் முகம் களித்தான். "ஆமாம்" என்றான்.

"உங்களை எங்கே கிடத்தியிருக்கிறார்கள்?" என்று கரிய மாணிக்கம் கேட்டாள்.

"அங்கே ஒரு தென்னந்தோப்பில் உட்கார வைத்திருக் கிறார்கள்..."

"அங்கேயே கிடக்க வேண்டியதுதானே. ஏன் இங்கு வந்தீர்கள்... தண்ணீர் கேட்டால் அங்குள்ளவர்கள் கொடுக்க மாட்டார்களா...?"

"இல்லை. அங்கு எங்களை இளைப்பாறச் சொல்லிவிட்டு வீரர்கள் அகன்று விட்டார்கள். எந்தக் கட்டுக் காவலும் இல்லை. எந்த உதவியும் இல்லை. சோறும் கிடைக்கவில்லை. குடிநீரும் இவ்வை. எனவேதான் நான் குடிநீர் தேடி வந்தேன்...

"குடிநீர் தேடி வந்தீர்களா, சிற்றுளி சத்தம் கேட்டு வந்தீர்களா...?"

"சிற்றுளி சத்தம் கேட்டுத்தான் வந்தேன். குடிநீரும் கிடைக்கும் என்று நினைத்தேன். ஏன் ஒரு குவளைக் குடிநீருக்கு இத்தனை கேள்வி கேட்கிறீர்கள்..."

"நாங்களும் இந்த ஊருக்குப் புதிதய்யா. யாரையும் நம்ப முடியவில்லை. எதற்கு இங்கு வந்திருக்கிறோம் என்றும் புரிய வில்லை. எந்த கட்டுக் காவலும் இவ்லை. வந்தால் போனால் கேட்பாரில்லை. வீட்டை விட்டு வெளியே போனாவ் சார்த்திக் கொண்டு போவதா அல்லது திறந்துவிட்டுப் போவதா என்று தெரியவில்லை. தெற்குப் பக்கம் செம்மண் கரளி, வடக்குப் பக்கம் நகரம், மேற்குப் பக்கம் கோயில் புல்வெளி, கிழக்கு ஏதோ சில கிராமங்கள் இருக்கின்றன. வந்தவர்களை வா என்று வாய் நிறைய வரலேற்கக் காணோம். என்ன தஞ்சை மண்... என்ன சோழ நாகரிகம் என்றும் புரியவிவ்லை..."

"ஆஹா... உங்களுக்கே புரியவில்லையா. அப்பொழுது நாங்கள் எப்படி வரவேற்பை எதிர்பார்க்கலாம்..."

"என்ன, வரவேற்பை நீங்கள் எதிர்பார்த்தீர்களா...?"

"ஆமாம்..."

95

கரியமாணிக்கத்திற்கும் ஊர் புதிது. விகர்ணனுக்கும் ஊர் புதிது. கரியமாணிக்கத்திற்கும் வரவேற்பில்லை. விகர்ணனையும் யாரும் வரச் சொல்லி அழைக்கவில்லை. கரிய மாணிக்கத்திற்கும் குறைகள் ஏராளம். விகர்ணனுக்கு வீடே இல்லை. என்ன செய்வது என்று புரியவிவ்லை.

சட்டென்று அவர்களுக்குள் ஒரு ஒற்றுமை நிலவியது.

"நீங்கள் யார்?" – விகர்ணன் மிருதுவாகக் கேட்டான்.

அவள் நிற்பதும், நடப்பதும், சிரிப்பதும் ஒயில் உள்ளவள் என்பதை வெகு எளிதாகக் காட்டின.

இந்த ஒயிவ், நாட்டியமாடுபவர்களுக்கு மட்டும்தான் இருக்கும் என்பது விகர்ணனுக்குப் புரிந்திருந்தது. ஆயினும், அவள் வாயிலிருந்தே அவள் யாரென்று வரட்டும்; அதுவே நல்லதென்று நினைத்தான். அடுத்தவரிடம் பேசும்பொழுது,

அவரைப் பற்றித் தெரிந்து கொள்ளும் பொழுது மிகுந்த மரியாதையுடன் பழகுவது தான் சோழ தேசத்தில் முன்னேறு வதற்குண்டான வழி என்பதை உள்ளூர உணர்ந்து கொண்டான்.

அவளுக்குத் தன்னைப் பற்றி ஒருவர் கேட்கிறார் என்றதும் மிகச் சந்தோஷமாக இருந்தது.

"நான் தலைக்கோலி."

"அப்படியென்றால்?"

"நாட்டியத்தில் மிகச் சிறந்த இடத்தை அடைந்தவள். உயர்ந்த நிலை பாடம் படித்தவள். பல பேருக்குச் சொல்லிக் கொடுக்கின்ற லன்மை பெற்வள். அப்படிப்பட்டவருக்கு தலைக்கோலி என்ற ஒரு பட்டம் வழங்குவார்கள். நான் தலைக் கோலி கரியமாணிக்கம்."

"அதாவது தரையில் கோவ்தட்டி தாளம் சொல்பவர் தானே..."

"ஆமாம். நான் வெறும் தாளம் மட்டும் சொல்பவளல்ல. அது நடனம் சொல்லித் தருபவருடைய இடம். தாளம் எல்லோரும் தட்டிவிட முடியாது. யாருக்கு நடனம் தெரியுமோ – அவர்கள்தான் தட்ட முடியும்."

"உங்களுக்கு இந்த இடம் ஒதுக்கப்பட்டருக்கிறதா?" – வீடு காட்டி விகர்ணன் கேட்டான்.

"ஆமாம். என்ன வீடு. எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை."

"ஏன், வீடு அழகாகத்தானே இருக்கிறது. எங்களைக் கொண்டு வந்து தோப்பில் நிறுத்தியிருக்கிறார்களம்மா. இந்த மழையில் வீரர்கள் என்ன செய்கிறார்கள் என்று புரியவில்வை. படுக்கக்கூட முடியாது. வெறுமனே நனைந்து மரம் பிடித்து நிற்க வேண்டியதுதான். வேறு என்ன செய்ய முடியும் அன்னிய தேசத்தில் வந்து, உங்களுக்கு இது அன்னிய தேசமா..." – அவன் கேட்டான்.

"அவரவர்க்கு அவர் வளர்ந்த கிராமம்தான் சொந்த தேசம். மற்றவை எவையும் அன்னிய தேசம்தான்..."

"எனக்குப் புரிகிறது. இங்கு வந்து எத்தனை நாளாயிற்று...?"

"மூன்று நாட்கள்தான் ஆகிறது." அவள் பதில் சொன்னாள்.

"அவ்வளவுதானா. நான் மூன்று வருடங்களாக என் கிராமத்தை, என் மனைவி மக்களை, என் தாய் தந்தையரை, மாடு கன்றுகளைப் பிரிந்திருக்கிறேன்..."

"எது உங்கள் கிராமம்?"

"கங்க தேசம். காவிரிக்கரை ஓரமாக இருக்கின்ற செழிப்பான இடம்..."

"பெரிய வீடா..."

"இரண்டு அடுக்குகள் கொண்ட ஓலை வீடு..."

"ஓலை வீட்டில் மேல் தளம் உண்டா..."

"ஆமாம். அல்விதம் நாங்கள் வேய்ந்து கொள்வோம்.."

"என்ன தொழில் செய்து கொண்டிருந்தீர்கள். விவசாயமா..."

"இல்லை. நான் சிற்பி..."

"சிற்பியா..." கரியமாணிக்கம் வியந்தாள். பின்னாவ் உள்ள எச்கமண்டை திகைத்தாள்.

"ஆமாம். கருவறைச் சிற்பி..."

"அப்படியென்றால்.."

"சிற்பிகளில் எல்வா வேலையையும் எல்லோரும் செய்ய மாட்டார்கள். அஸ்திவாரம் போடுபவர்கள், விமான வேலை - கோபுர வேலை செய்யமாட்டார்கள். கோபுர வேவை செய்பவர்கள் மதில் சுவர் வேலை செய்யமாட்டார்கள்."

வியப்போடு அவனைக் கரியமாணிக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சட்டென்று துள்ளி, "என்ன சாப்பிடுகிறீர்கள்." என்று கேட்டாவ். அவள் உபசரிப்புக்கு விகர்ணன் வியந்தான்.

"எது வேண்டுமானாலும் சாப்பிடுகிறேன். பசிக்கிறது." என்றான்.

கரியமாணிக்கம் உள்ளே போனாள். காலையில் அவளுக்குப் பழங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. நெய்யும், வறுத்த அரிசியும் கவந்து ஒரு இனிப்புத் தின்பண்டம் நடுவீட்டிலிருந்து வந்திருந்தது.

உள்ளே ஓடிப்போய் அவைகளைக் கொண்டு வந்து விகர்ணனிடம் கொடுக்க, விகர்ணன் இனிப்பை விழுங்கினான். "கூ வுளே... கடவுளே..." என்றான். கண்ணில் நீர் கட்டியது.

"ஏன். நன்றாக இல்லையா..." ஆச்சரியமாகக் கேட்டாள்.

"இல்லை. இனிப்பு சாப்பிட்டு, அதுவும் நெய் கலந்த இனிப்பு சாப்பிட்டு மூன்று ஸருடங்களுக்கு மேலாகிவிட்டது." என்று பதில் சொன்னான்.

"ஏன், சிறையிலா இருந்தீர்கள்..."

"சிறையிலல்ல. லேலி போட்டு மடக்கி வைத்திருந்தார்கள். பண்டிகைகளுக்கு இனிப்பு கொடுப்பார்கள். ஆனால் அதற்கு மிகப்பெரிய ரகளை இருக்கும். போட்டியிருக்கும். நான் ஒதுங்கியிருப்பேன். இங்கு நீங்கள் கொண்டு வந்து கொடுத்ததும் ஏதோ ஒரு தின்பண்டம் என்று லாயில் போட்டுக் கொண்டேன். மிக இனிப்பாக இருக்கிறது." என்று அவன் மறுபடியும் சுவைத்துக் கொண்டே சொன்னான்.

கடை வாயெல்லாம் அந்த அரிசி உணவு உதிர்ந்து விழுந்தது. வாழைப் பழங்களை உரித்துச் சாப்பிட்டான். நிமிர்ந்து புன்னகை செய்தான். கைகூப்பினான். மிக்க நன்றி என்றான்.

"கதவு திறந்து வைக்கட்டுமா. சார்த்தி வைக்கட்டுமா?" – பச்சுமண்டை கேட்டாள்.

"திறந்தே வை. காற்று உள்ளே போகட்டும். உள்ளே வெந்து தொலைகிறது." என்று சொல்வ, விகர்ணன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"உங்களுக்கு இந்த வீடு பிடிக்கவில்லையா." என்று கேட்டான்.

"ஆமாம். பக்கச் கவர் மேற்குப் பார்த்து இருப்பதால் வெயில் தகிப்பு உள்ளுக்குள் அதிகம் வருகிறது. தெற்கத்திக் காற்று வரவேயில்லை. தலறாக வீடு கட்டப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்..."

"வேறு வழியில்லை. இரண்டு சிறகாக வீடு கட்டியிருக்கிறார்கள். உங்களுக்கு மேற்கு மூலை கிடைத்து வி...து. இதில் பிரச்சினை ஒன்றுமில்லை. சரி செய்து விடலாம்." என்று சிற்பி சொன்னான்.

"அவ்வளவுதானா. நான் மூன்று லருடங்களாக என் கிராமத்தை, என் மனைவி மக்களை, என் தாய் தந்தையரை, மாடு கன்றுகளைப் பிரிந்திருக்கிறேன்...

"எது உங்கள் கிராமம்?"

"கங்க தேசம். காவிரிக்கரை ஓரமாக இருக்கின்ற செழிப்பான இடம்..."

"பெரிய வீடா..."

"இரண்டு அடுக்குகள் கொண்ட ஓலை வீடு..."

"ஓலை வீட்டிவ் மேல் தளம் உண்டா..."

"ஆமாம். அவ்விதம் நாங்கள் வேய்ந்து கொள்வோம்.."

''என்ன தொழில் செய்து கொண்டிருந்தீர்கள். விவசாயமா..."

"இல்லை. நான் சிற்பி..."

"சிற்பியா..." – கரியமாணிக்கம் வியந்தாள். பின்னால் உள்ள எச்கமண்டை திகைத்தாள்.

"ஆமாம். கருவறைச் சிற்பி..."

"அப்படியென்றால்.."

"சிற்பிகளில் எல்லா வேலையையும் எல்லோரும் செய்ய மாட்டார்கள். அஸ்திவாரம் போடுபலர்கள், விமான வேலை – கோபுர வேலை செய்யமாட்டார்கள். கோபுர வேலை செய்பவர்கள் மதில் கவர் வேலை செய்யமாட்டார்கள்."

வியப்போடு அவனைக் கரியமாணிக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சட்டென்று துள்ளி, "என்ன சாப்பிடுகிறீர்கள்." என்று கேட்டாள். அவள் உபசரிப்புக்கு விகர்ணன் வியந்தான்.

"எது லேண்டுமானாலும் சாப்பிடுகிறேன். பசிக்கிறது." என்றான்.

கரியமாணிக்கம் உள்ளே போனாள். காலையில் அவளுக்குப் பழங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. நெய்யும், வறுத்த அரிசியும் கவந்து ஒரு இனிப்புத் தின்பண்டம் நடுவீட்டிலிருந்து வந்திருந்தது.

உள்ளே ஓடிப்போய் அவைகளைக் கொண்டு வந்து விகர்ணனிடம் கொடுக்க, விகர்ணன் இனிப்பை விழுங்கினான். "கடவுளே... கடவுளே..." என்றான். கண்ணில் நீர் கட்டியது.

"ஏன். நன்றாக இல்லையா..." ஆச்சரியமாகக் கேட்டாள்.

"இல்லை. இனிப்பு சாப்பிட்டு, அதுவும் நெய் கலந்த இனிப்பு சாப்பிட்டு மூன்று வருடங்களுக்கு மேலாகிவிட்டது." என்று பதில் சொன்னான்.

"ஏன், சிறையிலா இருந்தீர்கள்..."

"சிறையிலவ்ல. வேலி போட்டு மடக்கி வைத்திருந்தார்கள். பண்டிகைகளுக்கு இனிப்பு கொடுப்பார்கள். ஆனால் அதற்கு மிகப்பெரிய ரகளை இருக்கும். போட்டியிருக்கும். நான் ஒதுங்கியிருப்பேன். இங்கு நீங்கள் கொண்டு வந்து கொடுத்ததும் ஏதோ ஒரு தின்பண்டம் என்று லாயில் போட்டுக் கொண்டேன். மிக இனிப்பாக இருக்கிறது." என்று அவன் மறுபடியும் சுவைத்துக் கொண்டே சொன்னான்.

கடை வாயெல்லாம் அந்த அரிசி உணவு உதிர்ந்து வழிந்தது. வாழைப் பழங்களை உரித்துச் சாப்பிட்டான். நிமிர்ந்து புன்னகை செய்தான். கைகூப்பினான். மிக்க நன்றி என்றான்.

"கதவு திறந்து வைக்கட்டுமா. சார்த்தி வைக்கட்டுமா?" எச்சுமண்டை கேட்டாள்.

"திறந்தே வை. காற்று உள்ளே போகட்டும். உள்ளே வெந்து தொலைகிறது." என்று சொல்வ, விகர்ணன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"உங்களுக்கு இந்த வீடு பிடிக்கவில்லையா." என்று கேட்டான்.

"ஆமாம். பக்கச் கவர் மேற்குப் பார்த்து இருப்பதால் லெயில் தகிப்பு உள்ளுக்குள் அதிகம் வருகிறது. தெற்கத்திக் காற்று வரவேயில்லை. தவறாக வீடு கட்டப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்..."

"வேறு வழியில்லை. இரண்டு சிறகாக வீடு கட்டியிருக் கிறார்கள். உங்களுக்கு மேற்கு மூலை கிடைத்து விட்டது. இதில் பிரச்சினை ஒன்றுமில்லை. சரி செய்து விடலாம்." என்று சிற்பி சொன்னான்.

"அப்படியா. உள்ளே வந்து பாருங்கள்." - கரியமாணிக்கம் அழைத்தாள். விகர்ணன் வீட்டை நோட்டமிட்டான்.

"தெற்கே இரண்டு ஓட்டை போட்டு விடலாம். மேற்கே சவுக்குக் கட்டைகள் ஊன்றி தடுக்கு வேய்ந்து விடலாம். நடுவே இரண்டு முழங்கை இடைவெளியிருந்தாவ் குளிர்ந்த காற்று வெப்பக்காற்றை உள்ளே விடாமல் தடுத்துவிடும். உள்ளுக்குள் இருக்கும் காற்று வெளியே போவதற்காக மேற்கூரையில் நான் சிவ அம்சங்கள் செய்து தருகிறேன். ஏதேனும் இரும்புக் கழி இருக்குமா..."

"எதற்கு..."

"சுவர் உடைப்பதற்கு..."

"இருங்கள். நான் வாங்கி வருகிறேன். நீங்கள் மறுபடியும் நன்றாக வீட்டைச் சுற்றிப் பாருங்கள்." என்று கரியமாணிக்கம் அவனைக் கேட்டுக் கொண்டாள். அவன் முன்னும் பின்னும் அலைந்தான்.

கரியமாணிக்கம் சிற்பிகள் உள்ள இடத்திற்குப் போய், அங்கு இரும்புச் சுத்தியலும், உளியும் கேட்டு வாங்கி வந்தாள். நீண்ட இரும்புக்கழி கூர்மை செய்திருந்ததையும் எடுத்து வந்தாள். எச்சுமண்டை தலைக்கட்டாய் சவுக்குக் கட்டைகளை எடுத்துவர, ஓலைத் தடுக்குக்கு மறுபடியும் புறப்பட்டாள்.

விகர்ணன் பின்புறமுள்ள கவரில் வட்ட வட்டமாக ஓட்டைகள் போட்டான். ஆறேழு ஓட்டைகள் போட்டவுடன் அந்த ஓட்டைகள் வழியே காற்று வேகமாக லந்தது. வீட்டின் வெப்பம் குறைந்தது.

"இப்பொழுது மேற்கே கழி நட்டு விடுகிறேன். கழிநட்டு தடுக்கு வேய்ந்து கொடுத்து விடுகிறேன். மேற்குப் பக்கத்திலிருந்து வெயில் வரவே வராது. இதைத் தவிர கூடத்தில், சமையல் அறையில், படுக்கையறையில் ஓரிரு ஓடுகளைப் பிரித்து சட்டம் போட்டு மேலே தூக்கிக் கொடுத்து விடுகிறேன்."

அவன் விரிவாகச் சொன்னான். தடுக்கு வேய உட்கார்ந்து கொண்டான். ஓலைகளைக் கொண்டு இறுக்கமாக தடுக்கு வேய்ந்தான்.

மேற்குப் பக்கம் முழுவதும் தடுக்கு மறைத்துக் கொண்டது. மீண்டும் தடுக்கு வேய உட்காரும்பொழுது எதற்கு என்று கேட்டாள்.

"உங்களது படுக்கை அறையின் மேலே ஓடுகளுக்கு மேல் இந்தத் தடுக்கை இணைத்துப் போட்டுவிடுவேன். அப்பொழுது வெயில் தாக்குதல் நேராக இருக்காது. உள்ளே குளுமையாக இருக்கும்." என்று சொல்ல, கரிய மாணிக்கம் கைகொட்டி அதனை ஏரவேற்றாள்.

ஓடுகளை நீக்கி, ஓடுகளைச் சற்று உயரமாக்கி உள்ளிருந்த காற்று வெளியே போகும் வண்ணம் இடைவெளி அமைத்தான். அதே நேரம் மழை நீர் உள்ளே வராமல் இருக்க ஓடுகளை இன்னும் நீளமாக்கினான்.

"இந்த வீட்டு வாசல், மழை பெய்தால் எளிதில் சேறாகி விடும். அந்தப் பக்கத்திலிருந்து வரும்பொழுது உடைந்த கருங்கற்களைக் கொண்டு வந்து குவியலாகப் போட்டுவிடுங்கள். இதை அழகாக அடுக்கி தரையைச் சரி செய்து கொடுத்து விடுகிறேன்." என்று சொன்னான்.

தன் குடும்பம் பற்றி விவரித்தான். தன் குழந்தைகள் என்னவெல்லாம் பாடும் எப்படியெல்லாம் பேசும் என்று சொன்னான். கரிய மாணிக்கத்தினுடைய வாழ்க்கையைக் கேட்டான். அவளுடைய ஊர் விவரங்களைக் கேட்டான். அவளுக்குத் தெரிந்த பாடல்களைக் கேட்டான்.

"உங்களை விடுதலை செய்ததும் நேரே போயிருக்க வேண்டியதுதானே. எதற்கு இங்கேயே உட்கார்ந்து விட்டீர்கள்." என்று கரியமாணிக்கம் கேட்டாள்.

"இது சிவன் வேலை. இதை விட்டுவிட எனக்கு இஷ்டம் இல்லை. மிக பெரிய, இதுவரை எவருமே கட்டியிராத ஒரு கோயில் என்று சொன்னதால் நான் ஆவலாகி இந்தப் பக்கம் திரும்பி விட்டேன். இதற்கடுத்தது இன்னொரு காரணமும் இருக்கிறது. தோற்றுப் போய் சோழதேத்தில் அடிமையாக மூன்று வருடம் இருந்து விட்டு கிராமத்திற்குப் போனால் அங்கு என்ன மரியாதை கிடைக்கும். கோயில் வேலையாவது மரியாதையாகச் செய்யலாமென்று நான் கிராமத்திற்குப் போகவில்லை. போயிருக்கலாமோ என்று சில சமயம் தோன்றும். ஆனால் போனால் நல்ல மரியாதை இருக்காது. சோழர் ஆளுகைக்கு உட்பட்ட இடமாக கங்க தேசம் மாறிவிட்டது. எனவே, அங்கு போய் அடிமையாக இருப்பதைவிட இங்கேயே அடிமையாக இருந்து விடலாம் என்று இருந்து விட்டேன்.

ஆனால் இங்கு வந்தால் உங்களைப் போன்றவர்களும், சோழ தேசத்தைச் சேர்ந்தவர்களும், சோழ அரசின் மீது அலுப்பாகத்தான் இருக்கிறீர்கள்."

"இல்லை. எனக்கொன்றும் பெரிய அலுப்பில்லை. இடம் மாறியதில் மனம் பதட்டமாக இருக்கிறது. இன்னும் லசதியாக வீடுகள் செய்து கொடுக்கலாமே என்கிற ஒரு கேள்வி லருகிறது. ஆனால் கோயில் வேலை சாதாரண மானதா. அதுவும் ஏழு பனை உயரம் கோயில் கட்ட லேண்டுமென்றால் எளிதான விஷயமா...

நேற்று எங்களுக்கு வரைபடம் காண்பித்தார்கள். திகைத்துப் போய் விட்டேன். கோபுர விமானத்திற்கு அருகே மனிதருடைய உருவம் லைத்திருந்தார்கள். மரத்தூணுக்குப் பக்கத்திலே கட்டெறும்பு இருப்பதைப் போல மனிதர்களை நிற்க வைத்திருக்கிறார்கள். கோயில் அத்தனை உயரம்." – அவள் விழி விரியச் சொல்ல, விகர்ணன் அவளையே பார்த்துக் கொண் டிருந்தான்.

"அப்படியொரு கோயில் கட்ட முடியுமா. உயரம், வெகு உயரம் போனால் சரிந்து விடாதா. அத்தனை ஆழம் அஸ்திவாரம் தோண்ட முடியுமா. பக்கத்தில் கால்லாய்கள் இருக்கின்றனவே. தண்ணீர் இறைக்க முடியுமா?"

"இல்லை. அஸ்திவாரம் அதிகம் ஆழமில்லையாம். ஆனால் அகலமாம். மிக உறுதியாம். சிற்பிகள் பேசிக் கொண்டார்கள்...

"இந்த ஆச்சரியத்தைப் பார்க்கத் தான் நான் சோழ தேசம் வந்தேன். இந்த மாதிரி ஒரு வேலையில் ஈடுபட்டு விட்டால், நமது ஊருக்குப் போய் நாமும் அதே மாதிரி ஒன்று செய்யவாமே என்கிற எண்ணத்தில் தான் இந்தப் பக்கம் திரும்பி விட்டேன்."

"நீங்கள் நல்லதே செய்தீர்கள். உங்கள் வீடு பற்றிக் கவலைப் படாதீர்கள். உங்களுக்கு எப்பொழுதெல்லாம் பேசவேண்டும் என்று தோன்றுகிறதோ நல்ல உணவு வேண்டுமென்று தோன்றுகிறதோ அப்பொழுது இங்கே வாருங்கள். இப்பொழுது வீட்டிற்குள் குளிர் காற்று வந்துவிட்டது. வெக்கை இல்லை. மிக நன்றாக எனக்கு உதவி செய்திருக்கிறீர்கள். என் நன்றியை எப்படித் தெரிவிப்பது என்று தெரியவில்லை. இன்னும் பழங்கள்

லேண்டுமா. உங்களுடைய நண்பர்களுக்குக் கொண்டு போய் கொடுங்கள்." என்று மேலும் சில பழங்கள் எடுத்தாள்.

"எனக்கு நண்பர்கள் என்று யாரும் இல்லை. ஆனால் நீங்கள் கொடுத்த வாழைப்பழங்கள் போதுமானது. அங்கே எனக்கு உணவு காத்திருக்கும் என்று நினைக்கிறேன். இப்போதைக்கு விடைபெற்றுக் கொள்கிறேன். நாளை காலை அலர்கள் ஏதும் தடுக்காமல் இருந்தால் மீண்டும் இங்கு வருகிறேன். வேறு யாருக்கேனும், ஏதேனும் வீடு மாற்றம் செய்ய வேண்டுமென்றால் என்னிடம் சொல்லுங்கள்'' என்று சொல்லிவிட்டு கைகூப்பினான். பிரிந்து போனான்.

அவன் செய்த மாற்றங்களை மற்ற தேலரடியார்கள் வந்து பார்த்தார்கள். நன்றாக இருக்கிறதே... நன்றாக இருக்கிறதே... என்றார்கள்.

"தரையையும் செப்பனிடச் சொல்ல வேண்டியதுதானே." என்று வினவினார்கள்.

"அதுவும் சொல்லப் போகிறேன்." என்று கரிய மாணிக்கம் நெஞ்க நிமிர்த்திக் கொண்டு பேசினாள்.

வேறொரு இல்லத்தில் பகல் உணவு முடித்த கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர் – கை கழுவி, முகம் துடைத்து, வெற்றிலைப் பாக்கு போட்டுக் கொண்டு மெல்வ படியிறங்கி ஒவ்லொரு வீடாகப் பார்த்துக்கொண்டு வருகிறபொழுது, கரிய மாணிக்கத்தின் வீட்டில் கும்பல் இருப்பதைப் பார்த்துவிட்டு என்ன என்று கேட்டார்.

"ஒரு கங்கபாடி சிற்பி வீட்டில் சிறிய மாற்றங்கள் செய்தான். வெப்பம் மிகுந்த வீடு, அழகாக மாறிவிட்டது. ஓட்டு வீட்டை எப்படித் தூக்கியிருக்கிறான் பாருங்கள்." என்று சொல்ல, உள்ளே போய் பிரம்மராயர் பார்த்தார்.

"இது எல்லாருக்குமே செய்யலாமே... எல்லார் வீடும் வெக்னகயாக இருக்கிறதே. உங்கள் வீட்டில் உணவு உண்ணும் போது எப்படி வியர்த்தது. நீங்கள் விசிறியதால் பிழைத்தேன். கூரை தாழ்வாக இருக்கிறது. உள்ளுக்குள் இருக்கிற காற்று வெளியே போக வாய்ப்பில்லை. எனவே, இங்கு செய்தது போலவே அழகாக இரண்டு மூன்று ஓடுகளைத் தூக்கிக் கட்டி விட்டால் சரியாக இருக்கும். இதற்கு எவ்வளவு பொருள் செலலானாலும் பரவாயில்லை. நிச்சயமாக எல்லோருக்கும்

இதைச் செய்துவிட வேண்டியதுதான். இதைச் செய்த சிற்பி யார், எங்கிருக்கிறார். அவருக்கு இதுதான் வேலையா. அல்லது வேறு ஏனும் லேலையா." என்று வினவ, சுரியமாணிக்கம் அலரைத் தேடிக்கொண்டு லந்து அந்த லேலையில் ஈடுபடுத்து வதற்கு நியமிக்கப்பட்டாள்.

அவளிடம் பதினைந்து பொன் கழஞ்ஞகள் கொடுக்கப் பட்டன.

"இது அந்தச் சிற்பிக்குக் கூலியல்ல; மரத் துண்டுகள் வாங்குவதற்கு வைத்துக் கொள்ளுங்கள். தடுக்குப் பின்னி கொல்லைப்புறங்களையும், லெயில் அடிக்கின்ற இடங்களையும் மறைக்கச் சொல்லுங்கள். சவுக்குக் கட்டைகள் வாங்கிக் கொள்ளுங்கள்." என்று சொன்னார்.

சுரியமாணிக்கம் தலையசைத்தாள். தொலைவே கொம்பூதும் சத்தம் கேட்டது.

உடையார் ஸ்ரீ ராஜராஜத் தேவர் கோயில் கட்டும் இடம் நோக்கி வருகிறார் என்பது தெரிந்தது. பிரம்மராயர் குதிரை ஏறிக் கொண்டார். தேலரடியார்களும், சிற்பிகளும் கோயில் கட்டும் இடம் நோக்கி நடந்தார்கள்.

சிறு தேரில் ராஜராஜரும், பஞ்சலன் மாதேவியும் விரை வாக கோயில் கட்டும் இடத்திற்குப் போய் நிற்பது தெரிந்தது.

உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவர் அங்கு லருவதற்கு முன்பு அழைத்து வரப்பட்ட அடிமைகள் அங்கு வரிசையாக நிற்க வைக்கப்பட்டிருந்தார்கள்.

தேர் ஓட்டிக் கொண்டே அவர்களையெல்லாம் உடை யார் ஸ்ரீ ராஜராஜத்தேவர் கூர்மையாகப் பார்த்துக் கொண்டே லந்தார். கடைசிக்குச் சற்று முன்னதாக விகர்ணன் நின்றிருந் தான். ராஜராஜரைப் பார்த்ததும் கை கூப்பினான். சிரித்தான்.

96

உடையார் ஸ்ரீ இராஜராஜரைப் பார்த்து பல வீரர்கள் கைகூப்பினாலும் விகர்ணனின் கைகூப்பலில் பணிவும், உண்மையும், சிரிப்பில் ஒரு நட்பும் தெரிந்தது. பதிலுக்கு இராஜராஜர் கைகூப்பினார். லணங்கினார்.

அவர்களைத் தாண்டி அங்கு போடப்பட்டிருந்த கருங்கல் பலகை மீது ஏறி நின்று கொண்டார்.

"நல்ல நாள் பார்த்து லேலையை ஆரம்பித்து விட்டோம். இனி தொடர்ந்து வேலைகள் நடக்க வேண்டும். சிற்பிகள் பள்ளம் தோண்டவும் தோண்டிய மண்ணை அப்புறப்படுத்தவும் இதோ இங்குள்ள வீரர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு சிற்பியும் தனக்கு வேண்டிய ஆட்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அந்தந்த சிற்பிக்குக் கீழே இப்பொழுது தேர்ந்தெடுக்கப்படுகிற ஆட்கள் வேலை செய்ய வேண்டும். சிற்பிகள் கொடுக்கின்ற வேலையைச் செவ்வனே செய்ய வேண்டும்.

உங்களுக்கு லந்ததும் சரியான லரவேற்பு இல்லை; தங்குலதற்கு இடமில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டிருப் பதை நான் அறிவேன். கவவை வேண்டாம். லெகு சீக்கிரமே மிக உயரமான ஒரு கொட்டகை ஒன்றைக் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்கிறேன். அதுவரை நீங்கள் தஞ்சையில் எந்த வீட்டுத் திண்ணையிலும் உட்கார்ந்து கொள்ளவாம். போய்ப் படுத்துக் கொள்ளலாம். விடிந்து ஒரு நாழிகைக்குள் நீங்கள் யாரிடம் வேலை செய்கிறீர்களோ அவரிடம் போய் நின்று விட லேண்டும். பிற்பகல் உணவுக்குப் பிறகு சிறிது நேரம் நீங்கள் உறக்கம் கொள்லலாம். ஓய்வெடுத்துக் கொள்ளலாம். பிறகு அந்தி சாயும் வரை வேலையிருக்கும். சில நாட்கள் இரவிலும் வேலை செய்ய வேண்டியிருக்கும். எனலே அமைதியாக வேலை செய்து ஆலயப் பணியில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றேன். கொட்டகை கட்டும் லரை அரண்மனையைத் தவிர மற்ற எந்த இடத்திலும் நீங்கள் தங்கலாம். ஒரு வேளை தங்குலதற்கு இடமில்வையென்று உங்களில் எவருக்கேனும் தோன்றினால் அரண் மனைக்குள்ளும் வந்து தங்கவாம்.

நான் உங்களை அன்னிய வீரர்களாகவே நினைக்க விவ்லை. உங்களைச் சிவப்பணியில் ஈடுபடுத்திக் கொண்ட செயல் வீரர்களாகவே நினைக்கிறேன். உங்களுக்கான உணவுகள்... வண்டிகளில் வந்து இறங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த உணவை முடித்து ஓய்வு கொள்ளுங்கள். நகரைச் கற்றிப் பாருங்கள். ஆடல், பாடல்கள் மூலைக்கு மூலை நடக்கும். அவைகளை கலனித்து தஞ்சையின் தமிழைப் புரிந்து

கொள்ளுங்கள். உங்களுடைய அனுபவங்களை மக்களுக்குச் சொல்லுங்கள்.

மக்களோடு கலந்து பழக முயற்சி செய்யுங்கள். உங்களை மரியாதையோடும், மிருதுவாகவும் நடத்த வேண்டுமென்று நான் கடுமையாகக் கட்டளையிட்டிருக்கிறேன். எங்கு எவர் தொந்தரவு செய்தாலும் அருகிலே உள்ள அதிகாரிகளை நீங்கள் சந்தித்து உங்களுக்குண்டான தொந்தரவைச் சொல்லலாம்.

நீங்கள் யாரும் எதன் பொருட்டும் ஆயுதம் ஏந்தக்கூடாது என்பது என் விருப்பம். ஊன்றுகோல் தவிர வேறு ஏதேனும் கூர்மையான ஆயுதங்கள் வைத்திருந்தால் அப்புறப்படுத்தப் படும். நீங்கள் கடுமையாக விசாரிக்கப்படுவீர்கள். பிறகு நல்ல மரியாதை உங்களுக்கு கிடைக்குமென்று நீங்கள் எதிர் பார்க்காதீர்கள்.

ஆனால், எந்தக் காரணம் கொண்டும் தஞ்சை நகரை விட்டு வெளியேற உங்களுக்கு அனுமதியில்லை. உங்களிடம் ஏதேனும் கேள்விகள் இருந்தாலும் கேட்டலாம்" என்று உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் உரத்த குரலில் பேச, ஒரு வீரன் முன் வந்தான்.

"சோழ மக்கள் எந்த அளவுக்கு எங்களை மதிப்பார்கள் என்று தெரியவில்லை. என் புருஷனைக் கொன்றது ராஷ்டிர கூடன், என் புருஷனைக் கொன்றது கங்கபாடி வீரன் என்று இங்குள்ள பெண்கள் எங்களை அடிக்க முன் வரும்போது நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க் கிறீர்கள்?"

"அமைதியாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். அவர்கள் அடிக்கப்படுவது உடனடியாக சோழ வீரர்களால் தடுக்கப்படும்."

"இல்லை. சோழ வீரர்களே இதைத் தூண்டி இதை ஏற்பாடு செய்தார்கள் என்றால் நாங்கள் என்ன செய்ய முடியும்?"

"அவ்விதம் நடக்காது. நடந்தால் அது விசாரிக்கப்படும். யாராயினும் மிகக் கடுமையாக தண்டனை தரப்படும். நீங்கள் சிவப் பணிக்காக இங்கு வந்திருக்கிறீர்கள் என்றுதான் சோழ மக்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. சிவப்பணிக்காக வந்தவர்களை ஒரு பொழுதும், ஒரு இடத்திலும் அவமரியாதை

யாக நடத்தக்கூடாது, நடத்த விடமாட்டேன். இப்படி நடந்துவிட்டால் என்று பேகவதைவிட, நடந்த பிறகு அதைப் பேசலாம். இப்பொழுது நீங்கள் தஞ்சை நகரம் முழுவதும் சுற்றிப் பார்க்க உங்களுக்கு உரிமை வழங்குகின்றேன்" என்று கை உயர்த்திச் சொல்ல, அந்த வீரர்களில் பல பேர் கைகூப்பி நிலம் தொட்டார்கள். மெல்ல ஸ்ரீ இராஜராஜருக்கு அருகே வந்து முகம் பார்த்து சிரித்தார்கள்.

"என்ன பார்க்கிறீர்கள்." அருகே வந்து பார்த்த ஒரு வீரனை உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் விசாரித்தார்.

"மிக அழகாக இருக்கிறீர்கள். இல்வளவு அழகாக ஒரு அரசரை நான் பார்த்ததேயில்லை. நான் ராஷ்டிரகூடன். எங்கள் அரசர்களெல்லாம் மல்யுத்த வீரர்களைப்போல இருப்பார்கள். நீங்கள் ஓடிசலாய், சிரிப்புமாய், மிக கம்பீரமாக இருக்கிறீர்கள். உங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போன்று தோன்றுகிறது" என்று சொல்ல உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேலர் வாய்விட்டுச் சிரித்தார்

"உங்கள் பெயரென்ன?" அவனை விசாரித்தார்.

அவன் பெயர் சொன்னான்.

"இன்று என்னோடு உணவருந்த லாருங்கள். உங்கள் நண்பர்கள் மூன்று நான்கு பேரை அழைத்துக் கொள்ளுங்கள்." என்று சொல்லி திரும்பிப் பார்க்க ஓலைநாயகம் ஒரு முத்திரை பதித்த ஓலையை அவரிடம் நீட்டினார். 'நான்கு' என்று எழுதினார். அவன் உட்பட நான்கு வீரர்கள் அரண்மனைக்குள் வரலாம் என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

விகர்ணன் எங்கு போவது என்று தெரியாமல் தஞ்சையை நோக்கி நடந்தபோது கரியமாணிக்கம் ஓடிப்போய் அவன் எதிரே நின்றாள்.

கரிய மாணிக்கம் அவன் எதிரே நிற்பதும், கைகள் ஆட்டிப் பேகவதும், விகர்ணன் வியப்போடு அவளுக்கு ஏதோ பதில் சொல்வதும் பிரம்மராயர் கண்களுக்குத் தென்பட்டன. பிரம்மராயர் விகர்ணனைப் பற்றி விசாரிக்க ஆள் அனுப்பினார்.

கூட்டம் கலைந்து போகும்போது மறுநாள் இளவரசர் இராஜேந்திரர் தஞ்சைக்கு வந்துவிடுவார் என்று தகவல் வந்தது.

இராஜேந்திரரோடு ஆயிரம் வீரர்கள் வருகிறார்கள் என்ற செய்தியையும் பிரம்மராயர் கேள்விப்பட்டார். கவலையானார்.

பாடிக்காவல் வீரர்களை மிரட்டலாம். அடக்கலாம். ஆனால், இராஜேந்திரனுடைய போர் வீரர்களை அடக்கி ஒரு இடத்தில் அமர வைப்பது கடினம். அவர்கள் சற்று முரடர்கள். பிடிவாதக்காரர்கள். அலட்டல் உள்ளவர்கள். இது பற்றி மன்னரிடம் பேச வேண்டுமென்று பிரம்மராயர் தீர்மானித்தார். மன்னரை நோக்கி தன் குதிரையைச் செலுத்தினார்.

அவர் எதிரே அவருடைய மகன் அருண்மொழிப் பட்டன் வந்து நின்றான்.

"அப்பா... இராஜேந்திரன் அனுப்பிய போர் வீரர்கள் வந்து விட்டார்களாமே. இனி வேலையில் எந்தச் கணக்கமும் இல்லாமல் இருக்குமல்லவா." ஆவலோடு அருண்மொழிப் பட்டன் கேட்டான்.

"தெரியவில்வை அருண்மொழி. திடும்மென்று மனகக்குள் எல்வா செயவ்களும் இழந்துவிட்டது போன்ற ஒரு நிலைமை எனக்குள் ஏற்பட்டு விட்டது. இனி அடுத்து என்ன செய்ய வேண்டுமென்பது தெரியாமல் ஒரு திகைப்பு வந்துவிட்டது. திட்டமிட்டு ஒவ்வொரு அங்குவமாக நகர வேண்டிய விஷயங்கள் எதுவுமே நடைபெறாமல் விதிர்த்துப் போய் நிற்கிறேனோ என்ற பயம் வந்துவிட்டது. எனக்கு வயதாகிவிட்டதின் காரணமா? அல்லது இது சிவன் வேலை என்பதால் இப்படி ஏற்படுகிறதா?"

"என்னப்பா சொல்கிறீர்கள். சிவன் வேலை என்றால் அப்படி ஏற்படுமா..."

"ஆமாம். வீடு கட்டும் போது இந்த திகைப்பு வராது. மாளிகை கோபுரங்கள் கட்டும்போது இந்த திகைப்பு வராது. கோயில் வேலை என்று ஆரம்பித்து விடு. அது சிறிய வேலையாக இருந்தாலும் திடீரென்று நம்மால் ஒன்றும் முடியாது என்பது போன்ற ஒரு மனோபாவம் ஏற்படும். குறிப்பாய் சிவன் கோயில் கட்டும்பொழுது இந்த பயமுறுத்தல் வெகு நிச்சயம் நிகழும். உன்னால் ஆகும் காரியமா இது. நானில்லாமல் முடியுமா என்று பரமேஸ்வரன் ஒரு வார்த்தை, கட்டுபவரைக் கேட்காமல் விடமாட்டான்."

"விஷ்ணு கோயில் கட்டும் பொழுது இது ஏற்படாதா...?"

"ஆஹா... ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் விஷ்ணு சௌலப்யன். மிக எளிதாய் நமக்கருகே வருபவன் என்று ஆழமான எண்ணம் இருப்பதால் சின்ன தடங்கல்கூட 'அட... இது நம்மை எச்சரிப்பதற்கு லந்திருக்கிறது' என்று தான் தோன்றுமேயொழிய மனப்பிரமைகள் ஏற்படாது."

"ஆனால் இராஜராஜர் உற்சாகமாகவல்லவா இருக்கிறார்?"

"கோயில் கட்டுவது ஸ்ரீ இராஜராஜர் தான். இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால் வேலை செய்வது நீயும் நானும். ஸ்ரீ இராஜராஜர் உத்தரவிட்டுவிட்டு நின்று விடுவார். அவரை இறைலன் பயமுறுத்தவில்லை. மாறாய் உன்னையும் என்னையும் தான் பயமுறுத்துவான்."

"இப்பொழுது நீங்கள் பயப்படும்படி என்னப்பா ஆகிவிட்டது?"

"வீரர்கள் வேண்டுமென்று கேட்டது உண்மை. ஆனால் அனுப்புகிறேன் என்று ஒரு வார்த்தை முன்கூட்டி எந்த எச்சரிக்கையும் விடாமல் பத்தாயிரம் வீரர்களை இங்கு கொண்டு லந்து விட்டிருக்கிறாரே. இந்த அலஸ்தையை எங்கு போய் சொல்வது. பத்து நாளைக்கு முன்பு ஒரு ஓலை அனுப்ப முடியாதா? வீரர்களைக் காவல் வைத்து சரியாகப் பந்தல் போட்டு இவர்களுக்கு உறங்குவதற்கும், உண்பதற்கும் தனிக்கூடங்கள் செய்திருக்கலாமல்லவா..."

"அப்பா, அதையும் யாரை வைத்துச் செய்வீர்கள். சோழ வீரர்களை லைத்தா? எவ்லோரும் இங்கே அடிமை வீரர்களைத் தானப்பா எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒல்வொரு காரியத்திற்கும் யாராவது ஆள் கிடைக்க மாட்டார்களா என்ற எண்ணம் தஞ்சையில் எல்லோருக்கும் வந்துவிட்டது. தஞ்சையிவ் எல்லோரிடமும் காசு இருக்கிறது தந்தையே. அதனாவ் குனிந்து நிமிர்ந்து லேலை செய்ய எவருக்கும் மனமில்லை. அடிமை வீரர்கள் வருகிறார்கள் என்றதும் அலரலர்கள் போட்டி போட்டுக் கொண்டு தனக்குப் பத்து, தனக்குப் பதினைந்து என்று விண்ணப்பங்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளைத் திணறடித்துக் கொண் டிருக்கிறார்கள். நல்ல முரட்டு ஆளாய் லேண்டுமென்று அடிக்கடி நச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்."

"ஆமாம் அதுவும் கேள்விப்பட்டேன்."

"நான் அதனாவ்தான் சொவ்கிறேன். ஆட்கள் வந்து விட்டார்கள். இவர்களை வைத்துக்கொண்டு வெகு வேகமாக வேவை துவங்க வேண்டும். அப்படி வேலை துவங்குவதற்காக உங்களிடம் ஒரு சிறிய விண்ணப்பம் செய்கிறேன்."

"என்ன அருண்மொழி. சொவ்." பிரம்மராயர் உற்று அவனைக் கவனித்தார்.

"நான் இங்கேயே தங்குவதாக தீர்மானித்திருக்கிறேன். இது சரியா என்று நீங்கள் யோசித்து சொவ்ல லேண்டும்."

"இங்கு நீ தங்கினாவ் வேலைகள் வேகமாகி விடுமா?"

"வேலைகள் வேகமாவதற்கு மட்டுமல்ல. இதமான ஒரு சூழ்நிலை இங்கு நிலவ வேண்டும் என்பதற்காகவும் நான் இங்கு தங்க விருப்பப்படுகிறேன். எவ்வா வசதிகளும் உள்ள அரண்மனையில் நாம் ககமாக இருப்பதுபோலவும் இங்குள்ளவர்களை அனாதையாக விட்டு விடுவது போலவும் ஒரு அபிப்ராயம் எழுகிறது. குறிப்பாக தேவரடியார்கள் முணுமுணுப்பாக இருக்கிறார்கள். சிற்பிகள் எப்பொழுதுமே அரசு வேலை இப்படித்தான் என்று அலுப்பாய் பேககிறார்கள்."

"நீ தங்கினாவ் அந்த அலுப்பு சரியாகிவிடுமா அருண்மொழி."

"அப்பா, உடனடியாகத் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளைத் தீர்க்கலாம், சொல்லுவதற்கு இடம் இருக்கிறது. கேட்பதற்கு ஒரு ஆள் இருக்கிறார் என்பது இவர்களுக்கு இதமாக இருக்கும் இல்லையெனிவ் கோபமாக ஏதேனும் செய்து விடுவார்களோ என்று பயப்படுகிறேன்."

"யார் என்ன செய்துவிட முடியும் அருண்மொழி."

"அப்பா, யாரும் எதுவும் செய்துவிட முடியாது. ஆனால் செய்யும் எண்ணம் லந்துவிடக் கூடாது என்பதில் நான் கவனமாக இருக்கிறேன். இது போர் நடவடிக்கைகள் இவ்வை. கோயிவ் வேவை. எவ்வளவு ஒற்றுமையாக செய்யமுடியுமோ அல்வளவு ஒற்றுமையாக செய்வது நல்லது என்று நினைக்கிறேன்."

"இங்கே எங்கு தங்குவாய். தேவரடியார்கள் இல்லத்திலா. அது உனக்குக் கெட்ட பெயர் கொண்டு வந்து தரும் அருண்மொழி."

"எனக்குத் தெரியும் அப்பா.. நான் சிற்பிகளோடு தங்கலாம் என்றிருக்கிறேன். தேவரடியார்கள் வீட்டிற்கும், சிற்பிகள் இருக்கும் இடத்திற்கும் அதிக தொலைவு இல்லை."

"சிற்பிகள் வீட்டில் தங்கினாலும் தேவரடியார்கள் ஸ்நேகிதத்திற்குத்தான் அங்கு தங்குகிறாய் என்று சிற்பிகளே சொன்னாலும் சொல்வார்கள்."

"ஆமாம் அப்பா. புரிகிறது. ஆனால் இங்கு தங்காமல் இருப்பது நல்லது என்று நினைக்கிறீர்களா."

"இல்லை. உன்னைப்போல் அந்தஸ்து உள்ள ஒரு ஆள் இங்கு தங்குவது நல்லது. உன்னால் அடிமை வீரர்கள் இருக்கு மிடத்தில் தங்க முடியுமா. உடனடியாக கொட்டகை போட்டு உனக்கென்று தனி இடம் கொடுத்து அங்கே தங்க வைக்கிறேன். இருப்பாயா."

"நல்லதப்பா. அப்படியே செய்து விடலாம். இன்று நாள் நன்றாக இருக்கிறது. ஹோரை சிறப்பாக இருக்கிறது. நான் இன்றே தங்கி விடுகிறேன்."

"இன்றைக்கு எப்படி தங்க முடியும். எந்தக் குடிலும் போடவில்லையே."

"அதுதான் நல்லதப்பா. அவர்கள் வந்தவுடன் அவர் களோடு ஒரு சோழ வீரனும் படுத்திருந்தான் என்று அவர்களுக்குச் சந்தோஷமாகட்டும். அவர்களைப் பற்றி நான் விசாரிக்கும் பொழுது அவர்கள் எனக்கு நெருக்கமாவார்கள்."

"குடிசைகள் கட்ட ஆரம்பித்துவிடலாம். நீ போய் தங்குவதை மன்னரிடம் ஒரு வார்த்தை சொல்லி விடுகிறேன்." என்று பிரம்மராயர் மன்னர் இருக்கும் இடத்தை நோக்கி நடந்தார்.

மன்னர் சிற்பிகளோடு பேசிக் கொண்டிருப்பதால் பஞ்சவன் மாதேவியோடு இந்த விஷயம் குறித்துப் பேசினார். பஞ்சவன் மாதேவி வியப்போடு அருண் மொழி பட்டனைத் திரும்பிப் பார்த்தாள். ஏன் என்று சைகையால் விசாரித்தாள். பிறகு தங்கிக் கொள்ளலாமே என்று சொன்னாள்.

ஆனால் அருண்மொழி மௌனமாக நின்றான்.

"சரி. அதுவும் நல்லதிற்குத்தான். உணவும் அவர்களுடைய உணலா. உனக்குச் சிறப்பான உணவு அனுப்பச் சொல்லட்டுமா" என்று சொல்ல, அருண்மொழி வேண்டாமென்று தலையசைத்து

விட்டான். பஞ்சவன் மாதேவி தொலைவிலிருந்து ஆதுரத்துடன் பார்த்தாள். அலளுக்குள் ஒரு ஸ்நேகமான, சகோதரத்துவமான ஒரு பாவம் பொங்கியது.

ஒரு கோயில் வேவையிவ் சோழ வீரர்கள் எப்படி ஈடுபட்டுக் கொண்டு, எந்தவித ககமும் எதிர்பார்க்காமல் முழுமனதாய் செய்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு அதற்கு முன்மாதிரியாய் அருண்மொழி பட்டன் நின்றான்... எடுத்துக் காட்டாக இருக்கிறான் என்று கேள்விப்பட்டு அவனை நோக்கிக் கை கூப்ப வேண்டுமென்ற எண்ணத்துடன் பார்த்தாள். அருண்மொழி அவள் எண்ணத்தைப் புரிந்து கொண்டவன் போல நின்ற இடத்திலிருந்தே தலைகுனிந்து நிலம் தொட்டு வணங்கினான். அருண்மொழியை நோக்கி கை உயர்த்தி ஆசீர்வாதம் செய்தாள்.

மன்னர் திரும்பிப் பார்த்தார்.

"என்ன அருண்மொழிக்குப் பவமான ஆசீர்வாதம் நடக்கிறது. என்ன விசேஷம்?"

"அருண்மொழி வீரர்களோடு தங்கப் போகிறானாம்."

"ஏன். அரண்மனையிவ் தகப்பனாரோடு சண்டையா."

"இல்வை. இங்கு யாருமே தங்குவதற்கு இல்லை. யாரும் இவர்களை உபசரிப்பதற்கு இவ்லை என்பதால் இந்த இடத்திவ் ஒரு சோழ அதிகாரி இருக்க வேண்டும் என்பதால் அவன் தங்குகிறேன் என்று சொல்கிறான்."

"அப்படியா. எனக்குப் போட்டியாக வருகிறான் அருண் மொழி. என் பெயரை வைத்துக் கொண்டதிலிருந்து அவன் எனக்குப் போட்டியாகத்தான் வருகிறான்." என்று மன்னர் சிரித்தபடி சொவ்வ, பஞ்சவன் மாதேவி வியப்போடு பார்த்தார்.

"நான் இன்று வீரர்களோடு தங்கலாம் என்றிருக்கிறேன். எதற்கு அருண்மொழி தங்க வேண்டும்? அருண்மொழி வேண்டுமானால் அரண்மனைக்குப் போகலாமே."

"நன்றாக இருக்கிறது கதை. நீங்கள் தங்குகிறேன் என்று சொன்னாவ் அருண்மொழி போவானா... பிரம்மராயர் போவாரா... அவ்லது நான்தான் போக முடியுமா?"

"நீங்கள் எவ்லோரும் போக வேண்டும். நானும், அருண் மொழியும் மட்டும் இருக்கிறோம். முன்னிரவு லரை சிற்பி

களோடு பேசிக் கொண்டிருந்துவிட்டு பிறகு நான் இராஜேந்திரன் அனுப்பிய அடிமை வீரர்களோடு உட்காரப் போகிறேன்."

"இது நல்லதா... பாதுகாப்புக்கு உகந்ததா. உங்களைச் கற்றி மற்ற வீரர்கள் வருவார்களே. அது சரியாக இருக்குமா?"

"நான்கு வீரர்கள் இருக்கிறார்கள். கூட அருண்மொழி வேறு இருக்கிறான். இதற்கு மேல் எதற்கு ஆட்கள்" என்று சொல்ல, அந்த விஷயம் மெல்ல கசிந்து மற்றவர்களிடையே போய் மன்னருடைய ஆபத்துதவி படை வீரர்கள் பரபரப்பானார்கள். தங்கள் தலைவருக்குத் தெரிவிக்க ஏற்பாடு செய்தார்கள். பிரம்மராயருக்கு அருகே லந்து இது சரியில்லை என்று பல் கடித்தார்கள். பிரம்மராயர் லேறு வழியிவ்லை என்று உதடு பிதுக்கினார்.

சோழ வீரர்கள் அரண்மனைப் பெண்டிரோடு வீடு திரும்ப – மன்னரும், மற்றலரும் சிற்பிகளுடைய வீட்டு லாசலிவ் உட்கார்ந்து உணவு எடுத்துக் கொண்டார்கள். ஆபத்துதவிகள் மெல்ல இராஜேந்திரன் அனுப்பிய அடிமை வீரர்களோடு கலந்து பேசி, 'இங்கு மன்னர் வருகிறார். மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும்' என்று எச்சரித்தார்கள்.

மன்னர் வந்து உட்கார்ந்தார். எல்லோரும் அவரைச் கற்றி வட்டமாக உட்கார்ந்து கொண்டார்கள்.

"தென்னாடுடைய சிலனே போற்றி." என்று மன்னர் சொன்னதும், "எந்நாட்டவர்க்கும் இனறலா போற்றி." என்று உரக்கக் கூவினார்கள்.

"நான் உங்களுக்கொரு கதை சொல்லட்டுமா. சிவபெருமானைக் கொண்டாடிய திருத்தொண்டர் புராணம் சொல்லட்டுமா? இந்த விதமான கதைகள் உங்கள் தேசத்தில் இருக்கின்றனவா. இருந்தால் என்ன விதமான கதைகள் இருக்கின்றன என்று எனக்குச் சொல்வீர்களா?" என்று வீரர்களைப் பார்த்துக் கேட்க, வீரர்கள் இன்னும் நெருக்கமாக உட்கார்ந்து கொண்டார்கள்.

மன்னர் ஆசனத்தின் மீது ஏறி நின்று கொண்டார். தொண்டை செறுமிக் கொண்டார். கதை சொல்லத் துவங்கினார்.

97

"மனைவியைக் கேட்டால் கொடுத்து விடலாமய்யா. ஆனால் பெற்ற மகளின் தலைமுடியைக் கேட்டால் கொடுக்க முடியுமா. அதுவும் அவள் சீவிச் சிங்காரித்து திருமணத்தன்று கணவனின் கைப்பிடிக்கக் காத்திருக்கின்ற தருணத்தில் ஒரு சிவனடியார் வந்து, 'உன்னுடைய மகளின் தலைமுடி நன்றாக இருக்கிறது. அது என்னுடைய பூணூலுக்கு ஆகும்' என்று சொல்ல, திருமணச் சடங்கிற்குக் காத்து நிற்கும் மகளை அருகே அழைத்து, 'சிவனடியார் கேட்கிறார். நான் தரப்போகிறேன்' என்று சொல்லி, மகளின் தலையைச் சிரைத்து வாரி சிவனடியார் கையில் திணித்திருக்கிறாரே... இதைவிட உத்தமமான மனிதர் ஒருவர் உண்டா.

என்ன அர்த்தம் இதற்கு.

என்னுடையது என்று எதுவுமில்லை. எல்லாம் சிவன் சொத்து. சிவனுக்காக..."

அரசர் மெல்ல மெல்ல அழகான வார்த்தைகள் கோர்த்து அந்தக் கதையை விவரிக்க, பலபேர் கண்களில் நீர் சுரந்தது.

"மணமகள் முகம் சுளிக்கவில்லை. மணமகளின் தாயார் முகம் சுளிக்கவில்லை. திருமணத்திற்குக் காத்திருக்கின்ற இன்னொரு சிவனடியாரான மணமகன் முகம் சுளிக்கவில்லை. எல்லோரும் சேர்ந்து அந்தப் பரிசு கொடுத்ததால், அந்த இடத்திலிருந்து சிலனடியார் மறைந்து சிவன் ரிஷிபாரூடராக காட்சியளித்தார்.

கணவனுக்கும், மனைவிக்கும் உள்ள அந்த அந்தரங்கம் ஊருக்குத் தெரிய வைத்தார் சிவன். உனக்கென்ன அந்தரங்கம் என்று தன் அடியாரைத் தன் வாயிலிருந்தே தான் இருபத்தைந்து வருடங்களாக மறைத்துக் கொண்டிருந்த ஒரு விஷயத்தை ஊருக்கு முன்னே போட்டு உடைக்கச் சொல்லி தலைகுனிய வைத்தார். 'சிவத்தொண்டருக்காக எதையும் இழப்பேன். நான் எதை அந்தரங்கம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேனோ, அதையும் இழப்பேன்' என்றொரு அடியார் சொன்னார். என்ன கதை தெரியுமா.

திருநீலகண்டர் என்ற ஒரு குயவர். பானை வடிப்பவர். வியாபாரம் நன்றாக ஆனதால் பிற்பகலில் பொது மகளிர் வீட்டிற்குப்போய் சுகித்துவிட்டுத் திரும்பினார். அவர் பொதுமகளிர் வீட்டிற்குப் போய் வந்தது தெரிந்து விட்டது. மனைவி கோபமானாள். 'இனிமேல் என்னை நீர் தொட வேண்டாம். தீண்டுவீராயின் திருநீலகண்டம்' என்று கோபத்தில் கூவினாள். அவர் தீண்டவே இல்லை.

லௌகீயே கணவன் மனைவியாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பார்கள். லேலைகள் செய்வார்கள். கணவனுக்குச் சோறிடுவதும், அவருக்கு எண்ணெய் தேய்த்து விடுவதுமான வேலைகளை மனைவி செய்வாள். மனைவிக்கு வேண்டிய உபகாரங்களைக் கணவன் செய்வான். இருவரும் சேர்ந்து திருமணத்திற்குப் போவார்கள். திருவிழாவுக்குப் போவார்கள் ஆனால் ஒருவரையொருவர் தீண்டுவதேயில்லை.

ஆனால், தீண்டும்படியான ஒரு விஷயத்தை இறைவன் ஏற்படுத்திக் கொடுத்தான். ஒரு சிவனடியாராகத் தோன்றி, தன்னுடைய திருவோட்டை அவரிடம் கொடுத்து கவனமாக வைத்திருக்கச் சொன்னார். திருவோடு காணாமல் போயிற்று. கொடுத்ததும் மாயை. வைத்ததும் மாயை. காணாமல் போனதும் மாயை.

திருவோடு எங்கே என்று திரும்பி வந்த சிவனடியார் கேட்க, இல்லையென்று சொல்ல, காணோம் என்று பரிதவிக்க, நீ திருடிவிட்டாய் என்று சிவனடியார் குற்றம் சாட்ட, 'சிவனடியார் சொத்தை ஒரு காலும் திருடமாட்டேன். மனத்தாலும், அதைத் தொட மாட்டேன்' என்று சொல்ல, நான் நம்பமாட்டேன் என்று சிவனடியார் மறுபடியும் வாக்குவாதம் செய்ய, 'சத்தியமாக நான் தொடவில்லை' என்று குயவர் சொல்ல, 'இப்படி சத்தியம் செய்தால் போதாது. ஊரார் முன்னிலையில் மனைவியின் கைப்பிடித்து, குளத்தில் மூழ்கி சத்தியம் செய்ய வேண்டும்' என்று சொல்ல, 'நான் மனைவியின் கை பிடிக்க மாட்டேன். மனைவியைத் தொட மாட்டேன்' என்று திருநீலகண்டக் குயவனார் சொல்ல, 'இதென்ன விசித்திரம்... கொண்ட மனைவியைத் தொட மாட்டேன் என்றால் நீர் பொய் சொல்கிறீர் என்றுதானே அர்த்தம்' என்று சிவனடியார் எகிற,

'இல்லை. இருபத்தைந்து வருடங்களாக நான் அவளைத் தொடவேயில்லை' என்று சொல்ல, மீண்டும் ஒரு பொய்யா' என்று சொல்ல – மனைவி, 'அது பொய்யில்லை உண்மை' என்று அதற்குக் காரணம் சொல்ல, ஊர் திகைத்து நின்றது.

'மிக அன்யோன்யமாய் வாழ்ந்தீர்கள்; நன்கு குடித்தனம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று நினைத்தால் இப்படியொரு பிணக்கா, இவ்வளவு நாள் பிணக்கா' என்று ஆச்சரியப்பட்டது.

'சரி. தொடவேண்டாம். கோவைப் பற்றிக் கொண்டு குளத்தில் மூழ்கி எழுங்கள்' என்று சொல்ல, குயவனார் எப்பொழுதுமே சக்கரம் சுற்ற வைத்திருக்கும் கைக்கோலை னவத்துக் கொண்டு மனைவியும், அவரும் குளத்தில் மூழ்கி எழுந்திருக்க, அவருக்கு மட்டுமில்லை; ஊரிலுள்ள அத்தனை பேருக்கும் ரிஷபாரூடராக சிவன் காட்சியளித்தார்.

கடவுள் பொய் என்று சொல்கிறார்கள். கற்பனை என்று சொல்கிறார்கள். சந்தோஷம். கற்பனையாகவே இருந்து விட்டுப் போகட்டும். ஒரு மனிதன் எப்படி வாழ்வது என்பனத இந்து மதம் சொல்லிக் கொடுத்ததுபோல, சைவம் சொல்லிக் கொடுத்ததுபோல, லேறு ஏதேனும் சொல்லிக் கொடுத்திருக் கிறதா. இந்த சைவத்தில் வழங்குகின்ற சிந்தனனயைப் போல வேறு எவரேனும் இந்த வழங்குகின்ற சிந்தனைகள் னவத்திருக் கிறார்களா.

என் இனிய நண்பர்களே. உங்களை நான் ராஷ்டிரகூடன் என்றோ, கங்கன் என்றோ, மேவைச் சாளுக்கியன் என்றோ, கீழைச் சாளுக்கியன் என்றோ, பாண்டியன் என்றோ, கேரளத் தான் என்றோ பார்க்கவேயில்லை. உங்களை நான் சிவனருட் செல்லராகவே பார்க்கிறேன். சிவன் அடியார்களாகவே பார்க்கிறேன். இந்தக் கோயில் நான் கட்டவில்லை.

சிவன் என்னைக் கருவியாக்கி தனக்கு ஒரு கோவில் கட்டிக் கொண்டிருக்கிறார். அதற்கு உங்களைத் துணையாக அனுப்பியிருக்கிறார். எனவே கோவில் கட்டுவதற்கென்று உங்களுக்கு என்ன வேண்டுமோ, என்ன உதவி வேண்டுமோ சகலமும் செய்து தருவேன்.

எந்த உதவியும் செய்யவில்லையே; இருக்க ஒரு கூரை கூட இல்னலயே என்று நீங்கள் உங்களுக்குள் கேள்வி கேட்கலாம். அது ஒரு சிறிய தவறு. நீங்கள் இவ்வளவு விரைவாக வந்து சேருவீர்கள் என்று இங்கு யாரும் நினைக்கவில்னல. சரியான

தகவல் வந்து சேரவில்லை. உங்களை அனுப்புவதற்குப் பத்து நாட்களுக்கு முன்பு இங்கு தகவல் வந்திருந்தால், இங்கு நல்லவிதமான வரவேற்பு கொடுக்கப்பட்டிருக்கும். இளவரசர் இராஜேந்திரர் அதைச் செய்ய மறுத்துவிட்டார். ஆயினும் உங்களுக்குச் சௌகரியமில்லாதபோது நான் அந்த சௌகரியத்தை அனுபவித்துக் கொண்டு அரண்மனையில் இருக்கப் பிடிக்கவில்லை.

எனவே, நீங்கள் என்ன அனுபவிக்கிறீர்களோ, நீங்கள் எங்கு இருக்கிறீர்களோ, சிவன் வேலை செய்ய வந்திருக்கின்ற உங்களுக்குண்டான சௌகரியங்கள் என்னவோ அவை எனக்குப் போதுமென்று நான் உங்களோடு இங்கிருக்க ஆசைப்படுகிறேன்..."

அவர் சட்டென்று பிரம்மராயர் பக்கம் திரும்பினார்.

"பிரம்மராயரே... எங்கே இவர்களுக்கு உணவு. என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்." என்று உரக்கக் கேட்டார்.

மன்னர் அதிகாரிகளிடம் உரக்கப் பேகின்ற பழக்கம் இல்லாதவர். நடுவே சிவ நூறு பேர்களை வைத்துக் கொண்டு கேள்வி கேட்கும் வழக்கமில்லாதவர். சட்டென்று அவர் கேட்க அருண்மொழி பட்டனும், பிரம்மராயரும் ஆச்சரியமடைந்தார்கள்..

சரி, மன்னர் யாரையோ சமாதானம் செய்ய நாடகமாடுகிறார் என்று புரிந்து கொண்டார்கள்.

"ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில் இங்கு வண்டிகள் வந்துவிடும்." என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இரண்டு பார வண்டிகள் முரட்டு எருதுகளில் பூட்டப்பட்டு அசைந்து அசைந்து அந்தப் புவ்வெளி நோக்கி வந்தன.

"உணவு வந்துவிட்டது... உணவு வந்துவிட்டது." – வீரர்கள் கூவினார்கள்.

பிரம்மராயர் அவர்களை நோக்கி கை அசைத்தார். "உணவு அல்ல. உணவுக்கான ஆயத்தங்கள். தானியங்கள், விறகு அடுப்பு போன்றவைகள் மட்டும்தான் வந்திருக்கின்றன. உணவை நீங்கள்தான் சமைத்துக் கொள்ள வேண்டும்."

கூட்டம் சட்டென்று அமைதியாயிற்று. இனிமேல் அடுப்பு பற்ற வைத்து உணவு தயாரித்து எப்போது முடியும். எல்லோருக்கும் லேசாய் கோபம் லந்தது.

உடையார் ஸ்ரீ இராஜராஜதேவர் எல்லோரையும் உற்றுப் பார்த்தார்.

"என்ன இப்படிச் செய்துவிட்டீர்களே. உணவு தயாரித்துக் கொண்டு வந்திருக்கக் கூடாதா. சரி; கால் நாழிகையில் உணவை நாங்கள் தயார் செய்து விடுகிறோம். இறக்கு. இறக்கு." என்று உரத்துக் கட்டளையிட, எல்லா வீரர்களும் லண்டியை நோக்கி பாய்ந்து ஓடினார்கள்.

கூடைகூடையாய் அரிசியை இறக்கி வைத்தார்கள். பருப்பையும், காய்கறிகளையும் பிரித்து லைத்தார்கள்.

"வானம் பார்த்துச் சமைக்க வேண்டாம். ஒரு தடுக்கு ஓலை போட்டு விடுங்கள். ஏதேனும் பந்தல் இருக்கிறதா என்று பாருங்கள்." என்று சொல்ல, சாய்த்து வைக்கப்பட்ட ஓலைகளை சிலர் லாரி லந்தார்கள். நான்கு புறமும் கொம்பு நட்டார்கள். குறுக்குக் கம்பு கட்டினார்கள். மிகக் குறைவான நேரத்தில் ஒரு பந்தல் தயார் செய்தார்கள்.

கீழே அடுப்பு மூடப்பட்டது. அரணிக் கட்டையைக் கடைந்து நெருப்பு மூடப்பட்டது. மூட்டப்பட்ட நெருப்பை எடுத்து மெல்ல ஊதி, 'சிவோஹம்' என்று அரசர் அடுப்பில் லைத்தார். சுள்ளிகளைப் பற்ற வைத்தார். கள்ளிகள் பற்றிக் கொண்டன.

"இடைவிடாது... இடைவிடாது இந்த நெருப்பு எரியட்டும். எல்லோர் வயிற்றிலும் இருக்கிற குடாரக்னியை இந்த நெருப்பால் சமைக்கப்படும் உணவுகள் சமன் செய்யட்டும்" என்று சொன்னார்.

அரிசியை வீரர்களே கழுவி கொதிக்க வைத்தார்கள். அரிசியைத் தின்று பார்த்தார்கள். ஆளுக்கொரு பிடி எடுத்துக் கொண்டார்கள். எடுத்துக் கொள்ள வெட்கப்பட்டவர்களிடம் கையில் கொடுத்தார்கள். சாப்பிடுங்கள் என்று சொன்னார். பெரிய பெரிய பானைகளில் சாதம் கொதிக்க வைக்கப்பட்டது. பருப்புக்குத் தனியே பானை ஏற்றப்பட்டது. காய்கறிகள் நறுக்கி கூட்டு செய்யப்பட்டது. ஐம்பது அறுபது வீரர்கள் இந்த வேலையில் ஈடுபட, மற்றோர் சும்மா உட்கார்ந்திருக்க,

அவர்களை நோக்கி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் மெல்ல நடந்தார்.

"போர் வீரர்களாகவே இருப்போர் எத்தனை பேர்." என்று கேட்டார்.

மிகச் சிலரே இருந்தார்கள். அதிகம் பேர் விவசாயிகளாக இருந்தார்கள்.

"கல் தச்சர்கள் யார். பொற்கொல்லர்கள் யார். நெசவாளர்கள் யார். யாதவர்கள் யார். கருமார்கள் யார்." என்றெல்லாம் கேட்டு விவரம் அறிந்தார்.

'கங்க தேசத்திலே எப்பொழுது மழை பெய்யும். மழை நீரைத் தேக்கி வைக்க என்ன வசதிகள் இருக்கின்றன. கங்க மன்னன் எப்படி ஆட்சி செய்கிறான். எப்படி வரி வசூலிக்கிறான். யாரிடம் வரி வசூலிக்கிறான்' என்றெல்லாம் கேட்டறிந்தார்.

அடுப்புகளுக்கு விறகுகள் கொண்டு வந்து குவிக்கப்பட்டன. எல்லோருக்கும் கையில் மந்தாரை இலைகள் கொடுக்கப்பட்டன. சிலருக்குத் தாமரை இலைகள் தரப்பட்டன.

வீரர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து இலைகளை ஏந்தி வரிசையானார்கள். கூட்டும், சோறும் அவர்களுக்குப் பரிமாறப்பட்டன. எல்லோருக்கும் வாழைப்பழங்கள் கொடுக்கப்பட்டன. தேவரடியார்கள் ஆய்ந்து கொடுத்த கீரையில் துவையல் செய்யப்பட்டிருந்தது. தஞ்சை நகரிலிருந்து பெரும் பானைகளில் மோர் வந்து இறங்கியது. வீரர்கள் கூட்டும் சோறும் தின்றுவிட்டு மோர் குடித்தார்கள். மோருக்கு கீரைத் துவையலை தொட்டுக் கொண்டார்கள். ஏப்பம் விட்டார்கள்.

"உணவு நன்றாக இருந்ததா." என்று கேட்க, "நன்றாக இருந்தது. ஆனால் எங்களுக்கு மாமிசம் வேண்டும். மாமிசம் சாப்பிட்டு வெகு நாளாயிற்று." என்று குரல் கொடுத்தார்கள்.

"நாளை மறுநாளிலிருந்து உங்களுக்கு மாமிசம் வழங்கப்படும். நாளைக்கு வேறு வகையான உணவு வழங்கப்படும்." என்று மன்னர் உரக்கச் சொன்னார். அவர் சொன்ன செய்தி மற்றவருக்கும் பரப்பப்பட்டது.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் அடிமைகளாக வந்த வீரர்களோடு சல்லாபிக்கப் போயிருக்கிறார் என்று தஞ்சை மக்கள் கேள்விப்பட்டு, மிகுந்த ஆவலோடு தங்கள் மனைவி

மக்களோடும், வீட்டுப் பெரியவர்களோடும் வேடிக்கை பார்க்க வந்தார்கள். அரசருடைய கீர்த்தி இந்த அடிமைகள் வரவால் அதிகரித்து விட்டது என்று பேசிக் கொண்டார்கள்.

பத்து நாள், பதினைந்து நாள் பயணம் செய்து, எல்லையே இல்லாத வானத்துக்கு அப்பால் போய், அங்குள்ள மனிதர்களைச் சிறைப்பிடித்து, அங்குள்ள செல்வங்களைத் தஞ்சைக்குக் கொண்டு வந்திருக்கிறார் மன்னர் என்று பீற்றலாய் பேசினார்கள். இவரைவிட மிகப் பெரிய கீர்த்திமான் உண்டா. உலகத்தின் மறு பக்கமெல்லாம் இவருடைய புகழ் பரவியிருக்கிறதென்று புலவர்கள் பாட, கிழவர்களும், பெண்களும் வாய் பிளந்து கேட்டுக் கொண்டார்கள்.

'உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் எழுந்து நின்றால் பூமி நடுங்கும். வாள் உருவினால் வானம் நடுங்கும்' என்று கவிதை நடையில் அதிகம் பேசினார்கள். பகவ் வேஷக்காரர்களும், தெருவுக்கு வந்து நடிக்கிறவர்களும் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரைப் பற்றி அதிகம் நடித்துக் காட்டினார்கள்.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் எப்படி உட்காருவார். எப்படி நடப்பார். என்ன பேசுவார் என்று அதிகம் அருகே இருந்து பார்த்துத் தெரியாத மக்கள், இந்த நடிகர்களை வியப்போடு பார்ப்பார்கள்.

'ஓ... இராஜராஜத்தேவர் சிரிப்பது போலவே இருக்கிறது.' என்று ஒருவர் சொல்ல, மற்றொருவர், 'அப்படியா' என்று கேட்பார். அந்த மற்றவர்கள் வேறு எவரிடமாவது, 'அடடே... உடையார் ஸ்ரீ இராஜராஜரைப் போவவே நடிக்கிறான் இவன்' என்று சொல்ல, நடித்தவன் புகழ் வேகமாகப் பரவியது. அவனுக்குத் தஞ்சையைச் சுற்றியுள்ள கிராமங்களில் மிகப் பெரிய வரவேற்பு இருந்தது.

இராஜராஜர் எப்படி உட்காருவார். இராஜராஜர் எப்படித் திரும்புவார். இராஜராஜர் கோபமானால் எப்படி விழிப்பார். உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் அரச சபையில் என்ன நடந்தது தெரியுமா என்றெல்லாம் அவன் விளக்க, மிகமிக அதிசயமாய் கை கட்டி கேட்டுக் கொண்டிருப்பார்கள். அவனையே உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவராய் நினைத்து சிலபேர் பணிவது உண்டு.

அவன் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேலர் வேஷத்தில் இருக்கும்பொழுது அவனை அவமதித்து விடவும் முடியாது.

நான் உடையார் வந்திருக்கிறேன் என்று வாசலில் நின்று இடுப்பில் கை வைத்து அந்தப் பகல் வேஷக்காரன் பேசினால், அந்த நடிகனை உடனே அமரச் சொல்லி ஒரு நாற்காலி போடத்தான் வேண்டும். ஊரிலுள்ள சபையோர்கள் எலராக இருந்தாலும் நின்றுதான் ஆகவேண்டும். கிராமத்து சபையில் அப்படித்தான் அவனுக்கு மரியாதை கொடுப்பார்கள். ஆனால், அந்தணர் வீடுகளில் இந்த ஏமாற்று வேலை பலிப்பதில்லை.

"என்ன இன்று உடையார் லேஷமா... பேஷ்... பேஷ்... சுமாராய் பொருந்தியிருக்கிறது. உடையார் வேஷம் போட்டு அவரைப்போல உடுத்திக் கொண்டால் போதுமா. உடம்பு இரும்புபோல் இருக்க வேண்டாமா. தொந்தியும், தொப்பையுமாய் நிற்கிறாயே. உடையார் ஓடுகிற குதிரையில் தாவி ஏறுவார். உன்னால் ஏற முடியுமா. நீ உடையார் வேஷம் போடுலதென்றால் இப்படி ஏறித்தான் ஆகவேண்டும்." என்று அவர்கள் சொல்ல, அநேகமாய் அந்தணர்கள் இருக்கும் மங்கலங்களை விட்டு அலன் விலகிப் போய்விடுவான். உடையாரையும் என்னையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று கைகூப்பிவிட்டுப் போய்விடுவான்.

இந்தப் பகல் வேஷக்காரர்களுடைய ஆட்டமெல்லாம் மறவர்கள் இருக்கின்ற பகுதியிலும், வைசியர்கள் வாழும் பகுதியிலும், கருமார், குயவர், தச்சர் போன்ற தொழில் தெரிந்தோர் பகுதியிலும்தான் எடுபடும்.

இப்படி கூத்தாடிகளாலும் பகல் லேஷக்காரர்களாலும் பரப்பப்பட்ட உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர், இப்பொழுதெல்லாம் தஞ்சையை விட்டு அதிகம் போகாமல், தஞ்சைக்குள்ளேயே வலம் வருகிறார். எல்லோரையும் சந்தித்துப் பேகிறார் என்று பேச்க உண்டாகி, தஞ்சையிலுள்ள மக்கள் அடிக்கடி போகும்போதும், வரும்போதும் பார்த்து, அதுவும் திருப்தியடையாமல், பகல் வேஷக்காரன் அலர் உட்காருவதை அற்புதமாய் நடித்துக் காண்பித்ததாய் சொன்னார்களே, அவர் உட்கார்ந்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, அவருக்குக் கோபம் வரும்போது எப்படியிருக்கும் என்பதை நேரே அறிய ஆசைப்பட்டு, எங்கெல்லாம் உடையார் ஸ்ரீ இராஜராத்தேவர் நிற்கிறாரோ, அங்கெல்லாம் மிகப் பெரிய கும்பல் சூழ ஆரம்பித்தது.

ஆபத்துதவிகளுக்கு மிகக் கடினமான நேரமாக அது இருந்தது. அரசரைச் கற்றிய மெய்க்காவல் படையினர் இன்னும் வேகமாக இருந்தார்கள்.

ஆனால் மன்னர் அவர்களை அத்தனை வேகமாக மக்களிடம் இருக்க வேண்டாமே என்று மெல்லியதாய் கட்டளையிட்டார். எனவே, மெய்க்காப்பாளர்களை, ஆபத்துதவிகளைத் தள்ளி விட்டு மக்கள் அவருக்கருகே போய் நிற்க வேண்டும் என்று விரும்பினார்கள். அதற்காக முயற்சியும் செய்தார்கள்.

98

பத்து வருடங்களுக்கு முன்பு உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் ஆபத்துதவிப் படையை எவரும் எளிதாக அணுகிவிட முடியாது. ஒரு மெய்க்காலல் படைக்காரனை எவரும் அருகே போய் நின்று விசாரித்துவிட முடியாது. பளீரென்று பிரம்பால் அடிவிழும். அல்லது நெட்டி வெளியே தள்ளப்படுவார்கள். திமிறினால் எந்தவித விசாரணையுமின்றி வயிற்றில் கத்தி இறக்கப்படும்.

ஆனால், இப்பொழுது அப்படியில்லை. மக்களைத் தண்டித்தால் மன்னருக்குக் கோபம் வந்துவிடுகிறதென்று சொல்லிவிட்டு, மக்கள் அவருக்கு அருகே வர அனுமதிக்கப் பட்டார்கள்.

எங்கிருந்து வருகிறீர்கள். என்ன பெயர். எந்த கிராமம் என்று மன்னர் கேட்கிறார் என்பதால் பவமுறை மன்னரைச் சந்திப்பதற்கு முன்னே தன் பெயரையும், தன் கிராமத்தின் பெயரையும் திரும்பத் திரும்ப உரத்துச் சொல்ல கிராமத்து மக்கள் பழகிக் கொண்டார்கள். ஆனால் மன்னர் விசாரிக்கும் பொழுது சொல்ல முடியாது விழித்தவர்களும் பவர் உண்டு.

“நான் போகிறேன்... நான் போகிறேன்... எவரேனும் வருவதாயிருந்தால் நான் அழைத்துப் போகிறேன்.” என்று வீட்டிலுள்ள பெரியவர்கள் சொல்ல, பெண்கள் மன்னரைப் பார்க்கக் கிளம்பினார்கள்.

வடக்குப் பக்கம் இருந்தும், மேற்குப் பக்கம் இருந்தும், கிழக்குப் பக்கம் இருந்தும் தஞ்சையிலுள்ள நீண்ட சாலைகளில் மக்கள் சாரைசாரையாக நடந்து தெற்கே உள்ள கோயில் பக்கம் நடக்கத் துவங்கினார்கள். எல்லோரும் போகிறார்களே என்று பின்னால் இன்னும் இன்னும் மக்கள் திரண்டார்கள்.

"என்னமோ நடக்கப் போகிறது போல் இருக்கிறது. அதனால்தான் எல்லோரும் போகிறார்கள். வா, நாமும் போகலாம்." என்று பலர் சேர்ந்து கொண்டார்கள்.

திடீரென்று அன்று மாலை வெகு வேகமாய் கூட்டம் கூடியது. வந்திருந்த வீரர்கள் உணவு முடித்ததும், பெரும் கூட்டமாய் தஞ்சை மக்கள் அந்தத் தென்னந்தோப்பைச் சூழ்ந்து கொண்டார்கள். சுற்றியிருந்த கட்டுக்காவலை மீறி தென்னந் தோப்புக்குள் நுழைந்தார்கள்.

"என்ன... எங்கள் மன்னரோடு பேசினாயா. உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் யாரென்று உனக்குத் தெரிந்ததா. நீ எந்த ஊர். என்ன மொழி. எப்போது கைதானாய். எந்தப் போரில் தோற்றுப் போனாய்" என்றெல்லாம் இவர்களாகவே விசாரித்தார்கள்.

பதில் சொல்ல விரும்பாத கைதிகளை, "சொன்னால் என்ன குறைந்தா போய்விடுவாய்.'' என்று வேகமாக வினவினார்கள்.

மன்னர் அவர்களுக்குக் கதை சொன்னாராம் என்று சொன்னவுடன், எந்தக் கதை. எந்தக் கதை என்று ஆவலோடு கேட்டுக் கொண்டார்கள்.

அடிமை வீரர்களில் தமிழ் தெரிந்தவர்கள் அதிகம் பேர் இல்லை. திருவொற்றியூரில் சில காலம் வாழ்ந்ததால் தமிழ் மொழி பரிச்சயமாக இருந்தது. ஆனால் தஞ்சை மக்களுடைய வேகமான பேச்சு அவர்களுக்குப் புரியவில்லை. நிதானமாய் அழுத்தந்திருத்தமாய் பேசினால் புரிந்தது. பாலங்களால் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் லேகமான விசாரிப்பும், அதட்டலான பேச்சும் வீரர்களுக்கு லேசான கோபத்தையும், லெறுப்பையும் கொடுத்தன. அவர்கள் முகம் திருப்பிக் கொண்டு தனியே போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

"இத்தனை உதை லாங்கியும் உனக்கு இன்னும் திமிர் போகவில்லையல்லவா... எங்கள் சிலனுக்காக முதுகில் கல்

தூக்கு. உன்னுடைய திமிர் நிச்சயம் குறையும்.” என்று சொன்னார்கள். சொல்லிவிட்டு லாய்விட்டுச் சிரித்தார்கள்.

உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் மக்கள் திரள்லதை மெல்லப் பார்த்தார். சோழ இளம் தளபதிகளை அழைத்து, அடிமை வீரர்களை லரிசையாக்கச் சொன்னார். மேலே மழை மேகம் திரளுவதையும், கீழே மக்கள் திரளுவதையும் உன்னிப்பாகக் கவனித்தார்.

நான்கு நான்கு பேராக பத்தாயிரம் வீரர்கள் வரிசை யானார்கள். மன்னர் குதிரை ஏறினார். வீரர்களைச் சுற்றி ஓட்டினார். அந்த நான்கு நான்கு பேராக வரிசையான வீரர்கள் அவரை உற்றுப் பார்த்தார்கள்.

“மக்கள் அதிகமாக இங்கு நடமாட ஆரம்பித்து விட்டார் கள். மழை லேறு லரும்போல் இருக்கிறது. எனலே உங்கள் அனைவரையும் அரண்மனைக்கு அழைத்துப் போகிறேன். என் பின்னே அரண்மனை நோக்கி வாருங்கள்.” என்று சொல்ல, அந்தச் செய்தி கடைசி ஆள் வரையில் வேகமாக பரப்பப் பட்டது.

பிரம்மராயர் திகைத்துப் போனார். அருண்மொழி இது தேலைதானா என்று மனம் குமைந்தான். ஆனால் எவருக்கும், எந்தப் பதிலும் சொல்லாது உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் முன்னே குதிரையில் போக, பத்தாயிரம் வீரர்கள் மிகுந்த உற்சாகத்தோடு மன்னரின் பின்னே அணிவகுத்து வடக்கு நோக்கி நகர்ந்தார்கள்.

மேலவீதி வழியாக அந்த ஊர்வலம் போயிற்று. சட் டென்று மேற்கு லாசல் லழியாக அரண்மனைக்குள் நுழைந்தது. குதிரை, யானைகள் கட்டியிருக்கின்ற மைதானத்துக்கு நடுவே வந்து நின்றது.

“இங்கிருக்கிற கொட்டடையில் மழை வரும் லரையில் இளைப்பாருங்கள். யானைகளையெல்லாம் சற்று ஒதுக்குப்புற மாக அழைத்துப் போங்கள்.” என்று சொல்ல, யானைகள் கொட்டடையிலிருந்து வெளியே அனுப்பப்பட்டன.

சில நல்ல குதிரைகள் மட்டும் உள்ளுக்குள்ளே அரண் மனைக்குள்ளே அழைத்துப் போகப்பட்டன. யானையும் குதிரையும் இருக்கும் கொட்டடையில் வைக்கோல் போர் மீதும்,

பனந்தட்டை மீதும், கட்டைகள் மீதும், மூங்கில் தடுக்கு மீதும் வீரர்கள் களைப்பாக உட்கார்ந்தார்கள்.

கோட்டைக் கதவு சார்த்தப்பட்டது. மக்கள் பின்னால் லருவது தடுக்கப்பட்டது. மறுபடியும் அந்த வீரர்களுக்குப் பனைலெல்லமும், பழங்களும் தரப்பட்டன.

மன்னர் அரண்மனைக்குள் நுழைந்த போது மெல்ல இரவு சரிந்தது. மேகம் தரையிறங்கியது. பலத்த, மிக பலத்த மழை பெய்யத் துவங்கியது. இடி மின்னலுடன் கூடிய மழையாக இருந்தது. காற்று வீசியது.

வீரர்கள் சுவரோரம் ஒண்டிக் கொண்டார்கள். நாம் இந்நேரம் அந்த தென்னந்தோப்பில் இருந்தால் மிகவும் கஷ்டப்பட்டிருப்போம் என்று பேசிக் கொண்டார்கள்.

'எதிரி நாடுகளைச் சேர்ந்த பத்தாயிரம் வீரர்கள் ஒட்டுமொத்தமாய் தஞ்சை அரண்மனையில் உள்ளுக்குள் நுழைலது சரித்திரத்தில் இதுவே முதல் தடவை' என்று அருண்மொழி தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். தளபதிகளோடு வேகமாகப் பேசி கட்டுக்காவலை அதிகப் படுத்தினான்.

பிரம்மராயர் அரண்மனையின் அந்தப்புரத்து லாசலில் உட்கார்ந்து கொண்டார். உள்ளுக்குள்ளே அரசருடைய குரலும், பெண்களுடைய சிரிப்பொலிகளும் கேட்டன.

இந்தக் கோயில் கட்டி முடிக்கிற வரையில் மன்னர் இப்படித்தான் ஏதேனும் வம்புகள் செய்து கொண்டிருப்பார். அதை நாம்தான் சமாளித்தாக வேண்டுமென்ற கலலை பிரம்மராயருக்கு ஏற்பட்டது.

மேலே இடிமுழக்கம் கேட்டது. இன்னும் இருட்டியது. குளிர்ந்த காற்று லேகமாக வீசியது. மழை பலமாயிற்று. மாடுகளும், குதிரைகளும் கால் மாற்றித் தவித்தன. பறவைகள் எழுந்து அடங்கின.

ஒரு குட்டி யானை சங்கிலியை அறுத்துக் கொண்டு நடுமுற்றத்திற்கு திறந்தவெளிக்கு ஓட, வீரர்கள் ஓவென்று கத்தினார்கள். அறுபது நாட்களே ஆன அந்தக் குட்டியானை, முன்னும் பின்னும் அலைந்தது. வீரர்களின் கூச்சலைக் கண்டு மிரண்டு ஓடியது. தடுக்கி விழுந்தது. எழுந்து நின்றது.

தாய் யானையின் மிகப் பெரிய பிளிறல் ஒன்று அருகே கேட்டது. அந்தத் தாய் யானை இரண்டு சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்தது

மழை புடலை கிழிந்ததுபோல் வேகமாக பூமியை நோக்கிப் பெய்யத் துவங்கியது. காய்ந்த மண்தரையில் மழையின் தடங்கள் ஏற்பட்டன. மண் ஈரமாகியது. நன்கு நனைந்தது. பிறகு சேறாகியது. நீர் நாலாபுறமும் பள்ளங்கள் நோக்கி ஓடத் துவங்கியது. பலத்த மழை... மிக பலத்த மழை பெய்தது. இது நிற்க இன்னும் சில நாழிகைகள் ஆகும் என்று பிரம்மராயருக்குத் தோன்றியது.

பத்தாயிரம் வீரர்கள் திடீரென்று ஊருக்குள் வர இப்படி ஒரு மழை பெய்கிறது. இது நல்ல சகுனமா. கெட்ட சகுனமா. இத்தனை வீரர்களுக்குத் தங்க இடம் ஏதுமில்லாமல், இங்கு அரண்மனை வளாகத்திற்குள்ளே கொண்டு லந்து அரசர் லைத்திருக்கிறார். அரண்மனையைச் சுற்றியும், அந்தப்புரத்தைச் சுற்றியும் எத்தனை கட்டுக்காவல் பலமாக வைத்தாலும், இந்த மழையால் அந்தக் கட்டுக் காவல் குறைந்துபோக வாய்ப்புண்டு.

லந்திருந்த வீரர்களில், ஒற்றர்கள் அல்லது ஆபத்துதவிகள் எவரேனும் இருந்தால் அவர்கள் அந்தப்புரத்திற்குள் வெகு எளிதாக நுழைந்து விடலாம். அரண்மனை வளாகத்திலிருந்து அந்தப்புரத்திற்குள் வந்துவிட்டால், யாரை வேண்டுமானாலும் தாக்கலாம். என்ன லேண்டுமானாலும் நடக்கலாம். ஜன்ம ஜன்மமான பகையை ஒரேயொரு வாள்வீச்சில் தீர்த்துக் கொள்ளலாம். எதிர்ப்பட்ட அத்தனை பெண்டிரையும் லெட்டிப் போட்டுவிட்டு அரசருக்குக் குறி வைக்கலாம்.

என் அப்பனைக் கொன்றதும் தமிழன். அதற்கு முன்பிருந்த என் பாட்டனைக் கொன்றதும் தமிழன் என்று சிலிர்த்து சீறுகின்ற ராஷ்டிர கூடர்களையும், கங்கர்களையும், சாளுக்கியர்களையும் பிரம்மராயர் அறிவார்.

அதே விதமாக இங்குள்ள தமிழர்களும் இவர்களைப் பற்றி கோபமான அபிப்பிராயங்கள்தான் வைத்திருந்தார்கள். மதத்தால் ஒன்றுபட்டாலும், எல்லைகளால் பிளவுபட்டிருந் தார்கள். மொழி வேறு மாறுதலாக இருந்தது.

ஆனால் தமிழுக்கு ஆளுமை எல்லா இடத்திலும் இருந்தது. கங்கர்களும், ராஷ்டிரகூடர்களும் தமிழைக் கொச்சையாகப் பேசினார்கள். சாளுக்கியர்கள் நன்றாகலே பேசினார்கள்.

இராஜேந்திரன் தேர்ந்தெடுத்துத்தான் ஆள் அனுப்பியிருக்கிறான்; பாண்டியர்கள் யாரும் இல்லை என்று சொன்னாலும், பாண்டியர்கள் இதில் நிச்சயமாக இருப்பதற்கு வாய்ப்புண்டு. கங்கர்களுக்கும், ராஷ்டிரகூடர்களுக்கும் சிவன் கோயிலை அரசர் கட்டுகிறார் என்பதில் ஒரு மயக்கமிருந்தது. ஆனால் பாண்டியர்களுக்குச் சிவன் கோயில் பற்றிய எந்த அபிப்ராயமும் இல்லை.

சோழர்கள் சைவர்களாக இருப்பதாலேயே பாண்டியர்கள் வைஷ்ணவர்களாக இருக்கத் தீர்மானித்து விட்டார்கள். சேரர்கள் தங்களுடைய கேரளத்தை பரசுராமர் க்ஷேத்திரம் என்று சொல்லி, அவர்கள் விஷ்ணு வழிபாட்டில் இறங்குகிறார்கள். தெற்கே உள்ள சிங்களவர்கள் பௌத்தர்களாக இருக்கிறார்கள்.

சோழ தேசத்தைச் சுற்றிலும் மதத்தால் வேறுபட்ட அரசர்கள்தான் இருக்கின்றனர். சிவன் கோயிலை இடிக்ககூடத் தயங்க மாட்டேன் என்று சொல்கின்ற வீர வைணவர்கள் பாண்டிய தேசத்தில் உண்டு. குதிரை ஏறிக் கடக்சிற பொழுது சிலன் கோயிலுக்குள் இரண்டு, மூன்று கருங்கற்களை வீசி எறிந்துவிட்டுப் போகின்ற அசட்டு இளைஞர்கள் பாண்டிய தேசத்தில் உண்டு.

சேரர்கள் வேறு விதம். திருநீறு அணிந்த சைவர்கள் வந்தால் முகம் திருப்பிக் கொள்வார்கள். முதுகு காட்டுவார்கள். சைவர்கள் தாண்டும்வரை அவர்களைப் பார்க்க மாட்டார்கள். அவர்களோடு பேசமாட்டார்கள். அருவருப்பான ஒரு விஷயத்தைப் பார்த்ததுபோல முகத்தை வைத்துக் கொள்வார்கள்.

"நீ வைணவனாக இருந்து, எதற்கு ஒரு சைவனிடம் கைகட்டி வேலை செய்கிறாய்." என்று சேர தேசத்தைச் சேர்ந்த ஒரு அந்தணன் உரக்கச் சொல்ல, பிரம்மராயர் கீழிறங்கி வந்து பிரம்பால் அவனை விளாசினார்.

"உங்களால்தானடா ஒரு தேசத்தின் முன்னேற்றமே கெடுகிறது" என்று உரக்கச் சத்தம் போட்டார். "இன்னொரு முறை வாய் திறந்தால் உன்னைச் சிரச்சேதம் செய்வேன்." என்று உறுமினார்.

அடி வாங்கித் துடித்த அந்தச் சேர தேசத்து அந்தணன் சட்டென்று தன்னுடைய நாக்கைத் தன் கையாலேயே திருகி எறிந்தான். வாயெல்லாம் ரத்த விளாறாய் தரையில் விழுந்தான்.

இந்தக் காட்சியால் எல்லோரும் பிரம்மராயர் மீது கோப மடைந்தார்கள். ஒரு அந்தணனை அடிப்பது தவறு என்று பேசினார்கள். பிரம்மராயர் மேலும் சீற்றமானார்.

"எவர் பேசினாலும் அடிப்பேன்." என்று பிரம்பை உருவிக் கொண்டு கூட்டத்தின் மீது பாய்ந்தார். கூட்டம் அவரை வெறுப்போடு பார்த்தது. கிட்டத்தட்ட அந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி இங்கும் நடப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது.

தனக்கு எதிரான பேச்சையோ, அரசருக்கு எதிரான கூச்சலையோ பிரம்மராயரால் ஒருக்காலும் கேட்டுக் கொண்டு கம்மாயிருக்க முடியாது. கோபம் வந்துவிடும். னகக்குக் கிடைத்த ஆயுதத்தை வைத்து தாக்குகிற போது, தாக்கப்பட்டவன் சபை நடுவே அவமானமடைந்து பிரம்மராயரைப் பழிவாங்க வேண்டி எது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.

ஆனால், அரசர் உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேலர் இங்குள்ள இந்த அடிமை வீரர்களுக்கு சைவநெறிக் கதைகள் சொல்லுகிறார். திருத்தொண்டர்புராணம் பேசுகிறார். அரண்மனை வளாகத்திலேயே தங்க வைத்து விடுகிறார். தன் பாதுகாப்பு பற்றி எந்த அக்கறையும் இல்லாமல், தன் குடும்பத்தினுடைய பாதுகாப்பு பற்றி எந்தக் கவலையும் இல்லா மல் எதிரிகளை மிக அருகே வைத்துக் கொண்டிருக்கிறார்.

ஓர் அறையில் இருட்டான குதிரை லாயத்துக்குள் அந்த அடிமை வீரர்கள் ஒண்டிக் கொண்டிருந்தாலும், அவர்கள் வெகு வியப்போடு அரண்மனையையும், அந்தப்புரத்தையும் பார்ப்பது தெரிந்தது. குதிரைகளையும், மாடுகளையும் தடவி விடுவது தெரிந்தது.

மழையில் நனைந்தபடியே மூன்று வீரர்கள் உரக்கக் கத்தியு தாய் யானையை நோக்கி ஓடினார்கள். ஒருவேளை அவர்கள் யானனப் பாகர்களாக இருக்கக் கூடும். யானையின் கூச்சலை யானைப் பாகர்களால் தாங்கிக் கொள்ள முடியாது. உடனே அதைச் சமாதானப்படுத்தியாக வேண்டுமென்று வேகம் வரும்.

அவர்கள் வேகம் அப்படித்தான் பிரம்மராயருக்கு உணர்த்தியது. அருண்மொழி குதிரை லாயங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு தந்னதக்கு அருகே வந்தான்.

"அப்பா. நான் தேவரடியார்கள் இல்லத்திற்குப் போகிறேன்." என்று சொன்னான்.

பிரம்மராயர் திரும்பிப் பார்த்தார்.

"அங்குள்ள வீடுகள் மழைக்கு எப்படியிருக்கின்றன. என்ன விதமாகத் தாக்குப் பிடிக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டாமா. நான் இன்று பார்த்தபோது அனவ சிறப்பானதாக இவ்லை. ஏதேனும் ஆபத்து வருவதற்கு முன்பு அங்கிருப்பது நல்லது என்று நினைக்கிறேன்." என்று படபடப்பாகச சொன்னான்.

பிரம்மராயர் யோசித்தார்.

வேண்டாம் என்று சொன்னால் அவனை நம்பவில்னல என்று பொருள். சரி என்று சொன்னால் அது பற்றிய அக்கறை இல்லை என்று அர்த்தம். என்ன செய்வது என்று யோசித்தார்.

"அருண்மொழி. தேவரடியார்கள் மிக உரத்தக் குரலில் குறைகள் சொவ்லுகிறார்கள். இது நல்லதல்ல என்று சொல். ஒன்றுமேயில்லாமவ் பத்தாயிரத்துச் சொச்ச வீரர்கள் இடுப்புத் துணியோடு நின்று கொண்டிருக்கிறார்கள். இனதச் கட்டிக் காட்டி வீடும், சோறும், உனடயும், மற்ற வசதிகளும் செய்து கொடுத்த பிறகு உரத்துப் பேசுவது லாபம் இல்னல என்று சொல்.

கோயில் பணி முடியும் லரை பல்வேறுவிதமான உபத்திரவங்கள் ஏற்படும் என்றும், அந்த உபத்திரவங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்றும் சொல். அவரலர் ஊர் களிலே சுகமாக வாழ்ந்தது போல, இங்கே அரசர்கூட சுகமாக இருக்க முடியாது. வேலைப் பளு அதிகம். இருப்பதை வைத்துக் கொண்டு அனுசரணையாய் நடந்துகொள்ள வேண்டுமென்று கடுமையாக எச்சரி. குழைந்து பேசினால் அவர்கள் அதிகம் பேகவார்கள்." பிரம்மராயர் அந்தக் கடைசி வார்த்தையைச் சொல்ல, அருண்மொழி தந்னதயை நோக்கித் திரும்பினான்.

நான் குழைந்து பேசுவதாக யார் சொன்னது என்பது போல் பார்த்தான்.

"உன் திறனும், அறிவும் எனக்குத் தெரியும். ஆனால் உன்னைவிட தேவரடியார்கள் திறமை மிக்கவர்கள். இதைப் புரிந்து கொள்." நிதானமாய், அழுத்தம் திருத்தமாய் மற்றவருக்குக் கேட்காதவாறு அடிக்குரலில் பிரம்மராயர் அருண்மொழியிடம் சொன்னார்.

அருண்மொழிக்கு அது பிடிக்கவில்லை.

99

உயரமான அந்தப் பெரிய பந்தல்தான் அழுத்தமாக வேயப்பட்டிருந்தது. வீடுகளெல்லாம் ஏனோதானோ என்று கட்டப்பட்டிருந்தன. மழைநீர் உள்ளே வந்தது. எவ்வளவு மண்ணை வாரி தடுத்தாலும் அதையும் மீறி, பள்ளமாக இருப்பதால் கரையை உடைத்துக் கொண்டு வீட்டிற்குள் வந்தது. வீட்டிலுள்ள பெண்களும், குழந்தைகளும் வெளியே வந்து பந்தலிவ் உள்ள பெரிய பாறைகளில் அமர்ந்து கொண்டார்கள். கற்றியும் விளக்குகளும், தீப்பந்தங்களும் ஏற்றி வைத்து, தூக்கக் கலக்கத்துடன் ஒருலரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மழையின் வேகம் அதிகரித்தது.

ஆயிரத்து நானூற்று ஐம்பத்தாறு சிற்பிகளும் விழித்துக் கொண்டார்கள். என்ன செய்வது என்ற கவலையோடு மழையைப் பார்த்தார்கள். காற்று சீறியடித்தது. சாரல் உள்ளே வந்தது. குழந்தைகள் வீறிட்டு அழுதன. குழந்தைகளைப் பெண்கள் துணியால் மூடிக் கொண்டார்கள். உடம்புகளை குறுக்கிக் கொண்டார்கள்.

சதாசிவ கல்தச்சன் எழுந்து பாறை மீது நின்று சுற்றும் முற்றும் பார்த்தார். ஆயிரத்து நானூற்று ஐம்பத்தாறு வீரர்களும், இன்னும் நெருக்கமாகக் கவலையோடு உட்கார்ந்து கொண்டிருப்பது பார்த்தார்.

அவர் மேலே நின்று சுற்றிப் பார்ப்பதைப் பார்த்து ஒரு நாற்பது வயது பெண்மணி எழுந்து நின்றாள்.

"போதும் கோயில் கட்டியது. என்னை விட்டுவிடு. நான் ஊருக்குப் போகிறேன்." என்று கைநீட்டிப் பேசினாள்.

"கோட்டை மாதிரி வீடு. நான்கு தலைமுறை பார்த்துப் பார்த்து, இழைத்து இழைத்து கட்டிய கருங்கல் கட்டடம். ஒரு வெயில் தெரியாது. ஒரு குளிர் எடுக்காது. ஒரு மழைச்சாரல் உள்ளே லராது. தாயின் கர்ப்பப்பையைபோல மிக அற்புதமான அந்த வீட்டை விட்டு இந்த ஓலைக் குடிசையில் லந்து நான் என்ன கசம் கண்டேன். எதற்கு எங்களை இப்படி வேதனைப் படுத்துகிறீர்கள்? கோயில் வேலை செய்ய வேண்டும்தான். ஆனால் அதற்கான வசதிகள் செய்து கொடுக்க வேண்டாமா... நாங்கள் என்ன அனாதைகளா. எடுப்பார் கைப்பிள்ளைகளா.

வாரத்திற்கு ஒருமுறை தானியம் தருவதையே இந்த சோழ வீரர்கள் அலுப்பாகத் தருகிறார்கள். கோயில் வேலை எப்பொழுது ஆரம்பிக்கும் என்று கேட்கிறார்கள். தெரியவில்லை யென்றால், 'உட்கார்ந்து... உட்கார்ந்து சாப்பிடுகிறீர்களே, வேலை ஆரம்பிக்க வேண்டாமா' என்று கேட்கிறார்கள்.

'உன்னுடைய தானியமாடா சாப்பிடுகிறேன். உங்க ளுடைய செல்வத்தையா அபகரிக்கிறேன்' என்று கேட்டேன். வாய் பொத்திக் கொண்டு போய்விட்டான். எனக்கு சோறு தின்னவே பிடிக்கவில்லை. அந்தக் கேள்வி இன்னும் என்னை உறுத்துகிறது. வெறுமே உட்கார்ந்து சாப்பிடவா நான் இங்கு வந்திருக்கிறேன்..."

அந்தப் பெண்மணி கல் உடைக்கிறவள். உருளைக் கற்களும், படிக்கற்களும், தூண்களும் செதுக்குகிறவள். சிற்ப வேலை தெரிந்தவளல்வ. பெரிய பெரிய பாறைகளைக் கோடு போட்டு நீளவாட்டிலோ, சதுர வாட்டிலோ செதுக்கும்படி சொன்னாவ் நாள் பூராவும் கொத்துக் கருவி எடுத்து சின்னச் சின்ன செதிவாக பாறைகளை உடைத்து அவள் தூணாக்கு வாள்.

ஒரு அளவுலரை அவள் உடைத்த பாறையைச் சிற்பிகள் எடுத்துக் கொண்டு போய் வட்டமாகலோ, பட்டையாகலோ, சதுரமாகவோ சிற்பங்களுடன் செதுக்குவார்கள். பாதித் திட்டம் முடிந்த பாறை என்று அதற்குப் பெயர். அந்தப் பாதித் திட்டம் உடைக்கவிவ்லையென்றால் சிற்ப வேலை செய்ய முடியாது. பாதித் திட்டம் உடைக்கிறவர்களிடம் சிற்பங்கள் செய்கின்ற நெளிவு இருக்காது. சிற்பங்கள் செய்கிற நெளிவு இருக்கிறவர்கள் பாதித்திட்டம் லேலை செய்ய மாட்டார்கள்.

"எங்களுக்கு வசதி இல்லை. வேலை செய்ய முடியாது என்று அரசரிடம் திட்டவட்டமாகச் சொல்லி விட வேண்டும்."

லேறு ஏதோ ஒரு பெண் குரல் கூட்டத்தின் நடுவிலிருந்து கேட்டது.

"அப்படிச் சொல்ல முடியுமா?" – யாரோ ஒருவர் விசாரித்தார்.

"ஏன் முடியாது. ஏழு பனை உயரம் அரசரா கட்டுகிறார். இல்லை இங்குள்ள அதிகாரிகள் கட்டுகிறார்களா. நாம்தானே கட்டுகிறோம். நம்மை அனுசரித்துப் போனால்தானே கட்ட முடியும். சவுக்கு வீசினால், கத்தி காட்டினாவ் நடந்துவிட

முடியுமா. இப்போதுகூட நாம் சலுகைகள் பெறவில்லையெனில், வேறு எப்போது பெறுவது."

"என்ன சலுகைகள் உங்களுக்கு லேண்டும்." என்று யாரோ வேண்டுமென்று தூண்டுவது போல் கேட்டார்கள்.

"எந்தச் சலுகை கொடுத்து விட்டார்கள். நான்கு நாட்கள் முன்பு கூட உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் கருமார்ச்சேரிக்குப் போயிருக்கிறார். அங்குள்ள கருமார்களுடன் பேசியிருக்கிறார். உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அவர்கள் என்ன கேட்டார்கள் தெரியுமா. அந்தணர்கள் போல பூணூல் அணிந்து கொள்ளவும், மந்திரம் சொல்வவும் எங்களுக்கு உரிமை வேண்டும். எங்களை அந்தணர்களை நடத்துவது போல நடத்த வேண்டும்மென்று சொன்னார்கள்."

ஒரு கூழவ வாய்விட்டுச் சிரித்தாள்.

"குதிரையை யானைபோல் நடத்த முடியுமா. அல்வது யானையைத்தான் குதிரையாக்க முடியுமா."

"தயவுசெய்து மனிதர்களை மிருகங்களோடு ஒப்பிடுலதை நிறுத்திக் கொள்ளுங்கள். நாம் ஒரு மரியாதை கேட்கிறோம் அவ்லளவுதான். அந்தணர் என்பது உச்சகட்ட மரியாதை. அதைக் கருமார்கள் கேட்கிறார்கள்- அவ்வளவுதான். இங்கு கிழிந்த ஓலையும், ஈரம் பதிந்த தரையும், வாசற்படியில் ஓடுகின்ற வாய்க்காலும், வெறும் காற்றுக்குப் பிய்த்துக் கொள்ளும் கதவுமாய் வீடு கொடுத்துவிட்டு, நம்மை அந்தணர்களைப் போவ் நடத்து என்றால் நடத்துவார்களா. அடிப்படை வசதியே இல்லையே. இதில் அந்தணர்கள் என்ன. அரசர்கள் என்ன..."

வேறொரு பெண் உரக்கக் கத்தினாள்.

உட்கார்ந்து கொண்டிருந்த அறுபது வயதுக் கிழவி முன்தலை நரைத்தவள். கால் ஊன்றி பாறைகளிவ் ஏறி மூன்றாவது அடுக்குப் பாறையில் நின்று கொண்டாள். எல்லோரையும் விட உயரமாக நின்றாள்.

"ஒரு நாள் மழைக்கே எல்லோரும் அரண்டு போய் பேக கிறீர்கள். ஏதோ இதுவரையிவ் மழையிலேயே நனையாததுபோல் நாடகம் போடுகிறீர்கள். வெளியூருக்கு வந்திருக்கிறோம். வேலைக்காக லந்திருக்கிறோம்.

நம் ஆண்கள் எல்லோரும் வீட்டில் உட்கார்ந்து வேலை செய்கிறவர்கள் அல்ல. கருவிகளை எடுத்துக் கொண்டு எங்கு

கோயில் இருக்கிறதோ எங்கு கோயில் கட்டப்படுகிறதோ அங்கு போய் வேலை செய்கிறவர்கள்தான். அந்த இடத்தில் என்ன கிடைக்கிறதோ, அதை அனுசரித்துக் கொண்டு போகிறவர்கள்தான்.

இந்த வேலை உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவருக்காகச் செய்வது என்று தெரிந்தவுடன் அதிகமாக நாம் எதிர் பார்க்கிறோம். இது சிவன் வேலை. சிலனுக்காக செய்கிற வேலை. நாமெல்லாம் சிவனின் அடிமைகள்.

கூரையே இல்லாது போனாலும் கூட, உணவே கொடுக் காமல் போனாலும்கூட, வேறு எந்த வசதிகளும் இல்லாமல் போனாலும் கூட வேலை செவ்வனே முடிப்பது தான் நம் குலத்திற்கு அழகு. நம் குடும்பத்திற்கு அழகு. அதிகமாக இங்கு உட்கார்ந்து பேசுகிறீர்கள். இந்த இடத்திலிருந்து நீங்கள் பேசுவது வெளியே போய் அரசருக்குத் தெரிந்தால், அரசர் மனம் வேதனைப்படும். இல்லை – அவர் வேறு ஏதேனும் மோசமான நடவடிக்கைகள் எடுத்துவிடக் கூடும்."

"என்ன மோசமான நடவடிக்கைகள்..."

"சற்று முன்தான் கேள்விப்பட்டேன். பத்தாயிரம் வீரர்களில் பலபேர் சிற்பிகளாம். கங்க தேசத்திலிருந்து வந்திருக் கிறார்களாம். அரசாங்கம் என்பது சாதாரண விஷயம் அல்ல. அரசர்களும் சாமான்யமானவர்கள் அல்ல. இளவவசர் ஸ்ரீ இராஜேந்திரர் தேடிப்பிடித்து இங்கு ஆட்களை அனுப்பி யிருக்கிறார்."

"அவர்களுக்கு எந்த வசதியும் செய்யப்படவில்லை."

"ஏன் வசதிகள் செய்யப்படவில்லை. அத்தனை பேரையும் அரசர் கையோடு கூட்டிக் கொண்டு போயிருக்கிறார். அவர்களுக்கு நடுவே உட்கார்ந்து கதைகள் பேசுகிறார். திருத்தொண்டர் புராணம் சொல்லுகிறார்."

"ஒரு நாளாவது நம்முடைய இடத்திற்கு வந்ததுண்டா...?" எவளோ சிறினாள்.

"இப்பொழுது உங்கள் பிரச்சினை என்ன. உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் உங்களுக்கு நடுவே வந்து பேசவில்லை என்பதா... அல்லது இந்த மழைக்குத் தங்குகின்ற வசதிகள் உள்ள வீடுகள் இல்லை என்பதா... அல்லது இந்த இரண்டுமேயா." அந்தக் கிழவி உரத்துக் கேட்டாள்.

"எழிலி, தயவுசெய்து உட்கார்." - சதாசிவ கல்தச்சன் எழிலினய உட்காரவைத்தார். எழிலி பாறையிலிருந்து கீழிறங்கினாள். எந்த மறுப்பும் சொல்லாமல் தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

"எழிலி பேசுவதில் நியாயம் இருக்கிறது. நாம் அலுத்துக் கொள்ளக் கூடாது. ஆனால் அதே சமயம் இப்படி இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது குழந்தைகளோடும், பெண்டுகளோடும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பதை அரசருக்குத் தெரிவித்துத்தான் ஆக வேண்டும். நாமாய் போய் தெரிவிப்பதா அல்லது அரசர் வரும் பொழுது சொல்வதா. இதுதான் என் கேள்வி." - சதாசிவ கல்தச்சர் உரத்துச் சொல்ல, "குமரிமுனையிலிருந்து வடவேங்கடம்வரை சோழதேசத்னதக் கட்டி ஆளும் அரசருக்கு, உங்களுக்கு என்ன தேவை என்று தெரியாதா. நாம் என்ன செய்கிறோம் என்று தெரியாதா. உங்களுக்கு வசதிகள் குறைவு என்பதை அவர் அறியமாட்டார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா. மிகப் பெரிய வேலை ஆரம்பித்திருக்கிறார். இதுவொரு நிதானத்திற்கு வரவே ஒரு வருடம் ஆகும்.

இன்று வேகமாக மழை பொழிவதால் நாம் தூக்கம் கெட்டு, தூக்கம் கெட்ட அலுப்பில் கோபமாகப் பேசுகிறோம். இந்த மழை நல்லது. பூமியைக் குளிர்விக்கும். கள்ளென்ற வெயில் குறைந்து, பூமியின் தகிப்பும் மறைந்து குளுமையாகும். காவிரியில் நீர் பெருக்கெடுத்தோடும் கால்வாய்களிலும் பொங்கி வழியும். தயவுசெய்து விடியல் லரை பொறுத்துக் கொள்ளுங்கள். எல்லாமும் சரியாகும்." எழிலி உரத்த குரலில் கைகூப்பியபடி பேசினாள். கூட்டம் அவளை உற்றுப் பார்த்தது. அலள் சொல்வதில் உள்ள நியாயத்தைப் புரிந்து கொண்டது.

சதாசிவ கல்தச்சன் எழிலியைப் பார்த்து மெல்ல சிரித்தான்.

குடந்தையில் ஒரு கோயில் விமானம் கட்டிக் கொண்டிருந்தபோது, விமான லேலை செய்து கொண்டிருந்த எழிலியின் புருஷன் கால் தவறி விழுந்து இறந்து போனான்.

கோயில் வேலைகள் ஆரம்பித்து பாதி நடந்து கொண்டிருந்தபோது கடும் மழை பெய்தது. கதைகள் கரைய ஆரம்பித்தன. இரவு நேரம் கதைகளைப் போர்த்திவிட்டு

வரலாமென்று எழிலியின் கணவன் விமானத்தின் மேலேற-கால் தப்பி, சுண்ணாம்பு நீர் லழுக்கி தரை நோக்கி, விழுந்து, தலையில் அடிபட்டு இறந்து போனான். மழைதான் காரணம்... மழைதான் காரணம் என்று பல பேர் சொன்னார்கள். ஆனால் எழிலி மழையைக் கோபித்துக்கொள்ள மறுத்து விட்டாள்.

"அவர் தலையெழுத்து முடிந்து போயிற்று. என் விதி மோசமாக இருந்திருக்கிறது. நான் போன ஜென்மத்தில் செய்த பாபம் என்னை இன்னமும் துரத்துகிறது. இதற்கு மழையை நோவானேன். இந்த மழை நல்லது. மக்களுக்கு உதவி செய்யக் கூடியது. இதை நான் நோவதாக இல்லை. என் புருஷன் இறந்ததற்கும், மழைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை" என்று ஆணித்தரமாக அப்பொழுதே சொன்னவள்.

இப்பொழுது மழையை யாரோ கோபித்துக் கொள்ளும் பொழுது, அலள் முன்னே வந்து மறுத்துப் பேசுகிறாள். எழிலியின் கணவர் கதை லேலை செய்கிறவர், எழிலிக்கு இந்தச் கதைக்காகச் சுண்ணம் அறைக்கிற வேலை.

கடற்கரை கிளிஞ்சல் கண்ணாம்பு மணலும், கறுப்பு மண்ணும், முட்டையும், தேனும், முருங்கைப் பிசினும் சேர்ந்து கலந்த கலவையை அவள்தான் வேகமாகத் தயாரிப்பாள். புருஷன் இறந்து சில மாதங்கள் அமைதியாக இருந்தலள் மறு படியும் வேலைக்கு மனம் தேறி வந்துவிட்டாள். இப்படி கதைக்கு சுண்ணம் தயாரிக்கின்ற வேலையை அவள் மட்டும் செய்யாமல் பல பெண்களுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண் டிருக்கிறாள். அதில் புதிதாக என்னவெல்லாம் செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறாள்.

மெல்லிய தாமிரக் கம்பிகளை, வெங்கலப் பட்டைகளை செங்கலுக்கு நடுவே கொடுத்து கைகளும், கால்களும் செய்லதற்கு உறுதி ஏற்படுத்திக் கொண்டிருக்கிறாள்.

அவள் புருஷனின் ஆன்மா சாந்தி அடைய வேண்டு மென்பதற்காக மிகப்பெரிய சர்ப்ப உருவம் செய்து, அதை குடந்தையிலுள்ள கோயிலில் பிரதிஷ்டை செய்திருக்கிறாள்.

அறுபது வயதில் அவள் தளராது இருந்தாலும், முன்பு போல் கண்ணம் அரைக்க முடியவில்லை. வேறு யாரேனும் அரைத்தால், பதம் பார்த்துவிட்டு எப்படி அரைப்பது என்று சொல்லிக் கொடுத்துவிட்டு நகர்ந்து விடுவாள். ஆனால்

ஓய்ந்திருக்க மாட்டாள். எல்லா இடத்திற்கும் போய் வேலை எப்படி நடக்கிறது. யார் யாரை உற்சாகப்படுத்த வேண்டும், என்ன விதமான குறைகள் இருக்கின்றன என்று சுற்றிச் சுற்றி வருவாள். வெறுமே சுற்றி வந்தால் நன்றாக இராது.

எனவே ஒரு அதிகாரியைப்போல கர்வம் ஏற்பட்டு விடும் என்பதாவ், ஒரு பானையை இடுக்கிக் கொண்டு, பானையின் மேல் மூடி னவத்துக் கொண்டு, மூடியின் மீது ஒரு குவளை வைத்துக் கொண்டு 'நீர் மோர் வேண்டுமா, நீர் மோர் வேண்டுமா' என்று வேலை செய்பவர்களிடம் கேட்டுக் கொண்டு நீர்மோரும், பானகமும் கொடுத்துக் கொண்டிருப் பாள்.

"நான் ஒன்றேயொன்று சொல்கிறேன் ஐயா." ஒரு நடுத்தர வயது கல்தச்சன் எழுந்து நின்றான்.

"சிற்பிகளைப் போல எடுபட்டவர்கள் வேறு எவரு மில்லை. எத்தனை சிறப்பாகக் கட்டினாலும், எத்தனை உயரமாகக் கட்டினாலும், எத்தனை ஆபத்துக்களை மீறி உற்சாகமாக வேலை செய்தாலும் நம்மை ஆதரிப்பார் என்று எவரும் இல்லை. நம்முடைய வேதனைகள் என்ன, குறைகள் என்ன என்று கேட்பதற்குக் கூட ஆளிவ்லை. அரசர் வேலைக்கு வந்து விட்டோம். அனுசரித்துத்தான் போக வேண்டும். ஆனாலும் நம்மை ஆயிரத்து நானூற்று ஐம்பத்தாறு பேரை ஆடு மாடுகள் போல ஒரே பந்தலில் உட்கார வைத்து எந்த உதவியுமில்லாமல், மழை நேரத்திவ் போய் ஒண்டிக் கொண்ட அதிகாரிகளையும், அரச குடும்பத்தினரையும் நினைத்தால் எனக்கு கோபமாகவும், ஆத்திரமாகவும்தான் இருக்கிறது.

சிற்பிகளைக் குப்பையாக நினைத்தவர்கள் இதோ தேவரடியார்களுக்கு எத்தனை அழகாக வீடு கட்டிக் கொடுத் திருக்கிறார்கள். இந்தச் செங்கல்லும், ஓடும் போட்டு வீடு கட்டிக் கொடுத்தால் நான் இருக்க மாட்டேனா... என் பெண்டும் குழந்தைகளும் குடியிருக்க மாட்டார்களா. எங்களுக்கு மட்டும் ஓவை என்று எப்படி தீர்மானித்தார்கள். ஏன் தீர்மானித்தார்கள். இதைக் கேட்கக் கூடாதா. கேட்கின்ற தலைவர் நம்மிடையே இல்லையா. எனக்கு வீடுகள் வேண்டாம். இங்கு வந்திருக்கின்ற பத்தாயிரம் அடிமைகளையும் அரண்மனைக்கு அழைத்துப் போய், அங்கு விருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார் மன்னர். அப்பொழுது நான் யார் வேண்டாதவனா. கோயில் வேலை

செய்பவன் நாயினும் கீழானவனா. கூலிப்படையைச் சேர்ந்தவன் உத்தமமானவன். கோவில் சிற்பி மட்டமானவனா. எதற்காக இந்தக் கிழவி எழுந்திருந்து அரசருக்கு ஆதரவாகவும், நம்மை இழித்தும் பேசுகிறாள் என்று புரியவில்லை.

மழை நின்றதும் நாளை காலையில் நானும், என் மனைவியும், இரண்டு பிள்ளைகளும் இந்த இடத்தை விட்டு எங்கள் ஊருக்குப் போகப் போகிறோம். யார் தடுத்தாலும் எங்களால் இங்கு வேலை செய்ய முடியாது என்று சொல்லி விட்டு, உதறிவிட்டுப் போகப் போகிறோம். யார் என்ன நினைத்தாலும் சரி. இது முடிவான விஷயம்." என்று உரத்துச் சொல்லி கற்பாறையில் அமர்ந்தான்.

அவன் சொல்வது சரியென்றும், தவறு என்றும் சிலர் முணுமுணுத்தார்கள்.

வேட்டியால் முகம் மூடி, கூரைப் பந்தலின் சவுக்குக் கட்டையில் சாய்ந்து கொண்டிருந்த பிரம்மராயரின் உளவுப் படை வீரன் ஒருவன் மெல்ல வேட்டியை மடித்துக்கொண்டு ஒதுக்குப்புறம் போவதுபோல் போய் மழையில் நனைந்து, இருட்டில் கரைந்து பிரம்மராயரின் இடத்தை நோக்கி நடந்தான். வழியிலுள்ள வீரனை மடக்கி குதிரை வாங்கிக் கொண்டான்.

அடுத்த அரை நாழிகையில் பிரம்மராயர் குதிரையோடு அந்த கூரைப் பந்தலுக்கு வந்தார்.

சிற்பிகளும், குழந்தைகளும் சுருண்டு தூங்கிக் கொண் டிருந்தார்கள். மழை லேசாக விட்டு அடுத்த வலுவான வீச்சுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தது. இடி முழக்கம் பலமாகக் கேட்டது. மின்னல் ஒளிக்கீற்றுகள் தொடர்ந்து வானத்தில் பரவிக் கொண்டிருந்தன.

உட்கார்ந்து கைக்கருங்கல்லால் தரை மண்ணைக் கிளறிக் கொண்டிருந்த எழிலி திடுக்கிட்டு நிமிர்ந்து பிரம்மராயரைப் பார்த்தாள். எழுந்து நின்று கைகூப்பினாள்.

பிரம்மராயர் அவளைத் தனியே வரும்படி சைகை செய்ய, ஓலைத் தடுக்கை தனித்தனியே பிடித்துக் கொண்டு தேவரடி யார்கள் இருக்கின்ற இடம் போய் முதல் வீட்டை அடைந் தார்கள். திண்ணையில் ஏறினார்கள். கதவு தட்டினார்கள்.

கரியமாணிக்கம் கதவு திறந்தாள்.

"அருண்மொழிப் பட்டரும் வருகிறாரா..." கரிய மாணிக்கம் உரத்துக் கூறியபடி பிரம்மராயருக்குப் பின் பக்கம் எட்டிப்பார்த்தாள்.

பிரம்மராயருக்கு அந்தக் கேள்வி பிடிக்கவில்லை.

எழிலி தயங்கி உள்ளே நுழைய அலளைக் கரிய மாணிக்கம் வரவேற்றாள். இரண்டு பேருக்கும் மணை போட்டாள். எதிரே உட்கார்ந்து கொண்டாள்.

"இது எழிலி, கதைச் சிற்பி ருத்திர பூபதியின் மனைவி. ருத்திர பூபதி இப்பொழுது இல்லை. விமான வேலை செய்யும் போது இறந்து போனார். எங்கள் ஊர் அமண்குடியிலுள்ள துர்க்கைக் கோயில் அவர் கைவண்ணத்தில் தான் மின்னிக் கொண்டிருக்கிறது. இந்த தேவரடியார் பெயர் கரிய மாணிக்கம். எச்க மண்டை என்ற இன்னொரு தேவரடியாரோடு இங்கு குடியிருக்கிறார். நீங்கள், நான் எல்லோரலுமே சிவத்தொண்டு செய்யத் தயாராகிக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தேன். பிரச்சினை எது நடுவே கிளம்பினாலும் சிவத்தொண்டு நிற்கக் கூடாது என்பதை மட்டும் தயது செய்து புரிந்து கொள்ளுங்கள்" என்று மிருதுவாகப் பேசினார்.

எழிலி அந்தப் பேச்சுக்கு அப்பால், தன்னைவிட வயதில் இளையவளான, லாலிபத்தின் மிடுக்கில் இருக்கின்ற கரிய மாணிக்கத்தைப் பார்த்து புன்னகை செய்தாள்.

அடுத்தவள் எங்கே என்று கேட்க, அவள் தூங்கிக் கொண்டிருக்கிறாள் என்று சைகையால் கரிய மாணிக்கம் சொல்ல, அந்த பேச்சில்லாத சைகை மொழியே அவர்களுக்குள் ஒரு நவ்ல இனிய இறுக்கத்தை ஏற்படுத்தியது.

100

அடடா... எவ்வளவு பெரிய அரண்மனை. எத்தனை பெரிய முற்றம். ஒரே நேரத்தில் நாற்பது யானைகள், நூறு குதிரைகள் கட்டும்படியான உள்புறம். இதற்கு வடக்குப் பக்கம் அந்தப்புரவாசல். அதற்கொரு மதில்கவர். மதில் கவர் மீது

தீப்பந்தங்கள், காவலர்கள், முள்வேலிகள் என்று அத்தனை பாதுகாப்பு.

விகர்ணன் உள்பக்கமாகலே கற்றிச் கற்றி வந்தான். ஒவ்வொரு கொட்டடியாகத் தாண்டி இடதும், வலதும் அலைந் தான். தரை மிக கலனமாக ஈசான்ய மூலையில் சரியும்படி லைக்கப்பட்டிருக்கிறது. ஈசான்ய மூலையில் மிகப் பெரிய கிணறு இருக்கிறது. யானைகளைக் குளிப்பாட்ட வேண்டு மென்பதற்காக பெரிய தொட்டியும், கிணற்றுக்கு அருகே மூன்று பேர் ஓடக்கூடிய ஏற்றமும் இருக்கிறது.

எதிர்ப்பக்கம் இன்னொரு ஏற்றமும் இருக்கிறது. இந்த ஏற்றத்திற்கும், அந்த ஏற்றத்திற்கும் நடுவே நல்ல இடைவெளி இருக்கிறது.

பெரிய தொட்டியில் பெரிய ஏற்றம் இறைத்துக் கொண் டிருக்கும் பொழுது, சிறிய தொட்டியில் சிறிய ஏற்றம் வைத்து இறைத்துக் கொள்ளலாம். அப்படியானால் எவ்வளவு இறைத்தாலும் வற்றாத கிணறு என்றுதானே அர்த்தம். அப்படி வற்றாமல் இருக்க லேண்டுமென்று இருப்பதற்காக கிணற்றை ஈசான்ய மூலையில் வைத்து, தரையில் கவ்தடங்கள் அமைத்து, பெய்கின்ற மழை ஜலம் \ முழுவதும் கிணற்றுக்குள் விழும்படி செய்திருக்கிறார்கள்.

குதிரைகளுக்குச் கவரில் வளையங்கள் லைத்திருக் கிறார்கள். யானைக் கொட்டடியில் வளையங்கள் முழுவதும் தரையில் அடிக்கப்பட்டிருக்கின்றன. யானை வளையத்தை இழுத்து கலரை பாழாக்கிவிடும் என்பதால் வளையங் களெல்லாம் பாறைகளுக்கிடையே அடிக்கப்பட்டிருக்கின்றன.

எல்லா வளையங்களும் எந்தப் பிசிறும் இல்லாமல் மிக நேர்த்தியாக செய்யப்பட்டிருக்கின்றன. யானை கட்டுகிற சங்கிலியை விகர்ணன் எடுத்துப் பார்த்தான். நல்வ பளபளப்பாக இருந்தது. சங்கிலி இரும்பில் கருப்பும், லெளுப்பும் மாறி மாறி தென்பட்டன. அதாவது சங்கிலியை அடித்துக் கோர்த்துவிட்டு சங்கிலியை உறுதியாக்க பழுக்கக் காய்ச்சி எண்ணெயில் இறக்கி வலுவேற்றியிருக்கிறார்கள்.

இரும்பு வேலை அற்புதமாகச் செய்கிற ஆட்கள் யாரோ தஞ்சையில் இருக்கிறார்கள். குதிரை லாடங்கள் ஒரு இடத்தில் குவிந்து கிடந்தன. எல்லாம் பழைய லாடங்கள்.

அந்த லாடங்களை எடுத்துப் பார்த்தான். யவனர்களுடைய குதிரைகளுக்குப் போடப்படும் லாடம் போலவே இருந்தன. சோழதேசத்தில் லாடங்கள் இல்லாமல் குதிரைகளை ஓட்டுவதில்லையென்று கேள்விப்பட்டிருக்கிறான். குதிரைகளைக் காடு மேடுகளில் வேகமாகத் துரத்த வாடங்கள் மிக அவசியம் என்று பலர் சொல்வதுண்டு.

ஆனால், கங்கதேசத்தில் லாடங்களை உபயோகிப்பதில்லை. அரசருடைய குதிரைகளுக்கு மட்டும் லாடங்களைப் போடும் லழக்கம் சமீபமாக வந்தது. சோழதேசத்திலும் இப்பொழுதுதான், ஒரு பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்புதான் லாடங்கள் மாட்டுகின்ற அமைப்பு ஏற்பட்டது.

இதை எருதுகளுக்குத்தான் முதலில் பயன்படுத்தினார்கள். பிறகு குதிரைகளுக்கும் மாட்டினார்கள்- பாதங்களில் லாடங்களைப் பொருத்தியது போலேவே, சேணங்களிலும் மாறுதல்கள் செய்தார்கள்.

குதிரைகளுடைய வாய்ச் சேணங்களையும்... முதுகில் அமரக்கூடிய படுக்கைகளையும் புரட்டிப் பார்த்தான். தையல் மிக அழுத்தமாக இருந்தது. தோல் எருமைத் தோலாக இருந்தது. இரண்டு வார்களை இணைக்கும் இரும்பு லளையங்கள் மிக மழுமழுப்பாக இருந்தன. சில, இடங்களிலே அலங்காரமான குதிரைக்கண்பட்டைகளும் மாட்டப்பட்டிருந்தன.

மிரளுகின்ற குதிரைகளுக்குக் கண் பட்டைகள் கட்டி அனுப்புலார்கள் போலும். சில சவுக்குகள் இருந்தனவே தவிர வேறு எந்த ஆயுதமும் இவ்லை. நீண்ட இரும்புக் கம்பிகள் துருப்பிடித்தவைகள் சிலது ஓரத்தில் போடப்பட்டிருந்தன. ஏதாவது ஒன்றை எடுத்து வைத்துக் கொள்ளலாமா, தேவையா என்று அந்த இரும்புக் கம்பிகளை அவன் பார்த்தான். இல்லை, இவைகளை வைத்திருப்பதன் மூலம் தொந்தரவுகள் ஏற்படும். கீழே போட்டான்.

ஒரு அங்குசம் கூட இல்லாமல், இங்கே வீரர்கள் வந்து தங்கப் போகிறார்கள் என்று அத்தனையும் வாரிப் போயிருக்கிறார்கள். இல்லையெனிவ் இத்தனை குதிரைகள், இத்தனை யானைகள் இருக்கின்ற இடத்தில், உடைவாட்களும், ஈட்டிகளும், இரும்புத்தடிகளும் இல்லாமலா போயிருக்கும்.

அடிமை வீரர்கள் வரப்போகிறார்கள் என்பதற்காக சகலமும் அப்புறப்படுத்தப்பட்டு, தயாராக வைக்கப்பட்டிருக்கிறது.

அப்படியெனில் இந்த இடத்திலுள்ள விஷயங்களை அப்புறப்படுத்த சில நூறு வீரர்கள் தேவைப்பட்டிருக்கும். அப்படியெனில் இந்த வீரர்கள் வெகுவிரைவில், கால் நாழிகையில் இந்த இடத்திலுள்ள அத்தனை ஆயுதங்களையும் பார்த்துப் பார்த்து எங்கோ ஒளித்து வைத்திருக்க லேண்டும்.

அப்படியெனில் இதை இவ்வளவு தெளிவாக யோசிக் கின்ற அதிகாரிகள் இருக்க வேண்டும். அவர்கள் யோசிப்பை நிறைலேற்றுகின்ற வேலையாட்கள் இருக்க வேண்டும்.

அப்படியானால் இது மிகமிக கட்டுக்கோப்பான ஒரு அரண்மனை. மிகத் தெளிலான ஒரு நிர்வாகம். அந்தப் புல் திடலிலிருந்து இந்த அரண்மனைக்குள் லருவதற்குள் இந்த இடம் காலி செய்யப்பட்டிருக்கிறது என்றால் இது மகத்தான சாதனை.

சோழதேசம் ஜெயித்ததில் ஆச்சரியமே இல்லை. சோழ தேசத்தில் மக்கள் கட்டுக்கோப்பாக தன் நாடு, தன் மொழி, தன் மதம் என்று இறுக்கமாக இருக்கிறார்கள். அதிகாரிகள் பேச்சை வேலைக்காரர்கள் கேட்கிறார்கள். அதிகாரிகள் லேலைக்காரர் களிடம் பிரியமாக நடந்து கொள்கிறார்கள். அதிகாரிகள் அரசரை தெய்லமாக நினைக்கிறார்கள். அரசன் அதிகாரிகளை உயிராக நினைக்கிறான். இங்கு நல்வ விதமான எண்ணப் பரிமாற்றம் இருக்கிறது.

கங்கதேசத்தில் வாழ்க்கை முறை இப்படியில்லை. அங்கு எதற்கெடுத்தாலும் சவுக்கால் அடிக்கின்ற காட்டு மிராண்டித்தனம் உண்டு. இனிமையான வார்த்தைகள், பாராட்டுகளெவ்லாம் ஒருபொழுதும் லேலைக்காரர்களுக்குக் கிடைப்பதில்லை. மரியாதையான உணலை ஒருலேளைகூட கொடுப்பதில்வை.

உனக்கு என்ன லேண்டும் என்று லேலையாட்களை அதிகாரிகள் கேட்பதில்லை. கங்கதேசத்து காலாட்படையில் ஒரு பையன் இருந்தான். அந்தப் பையனுக்குப் பதிமூன்று பதினான்கு வயதிருக்கும். ஆறு பெண்கள் கொண்ட அவனுடைய வீட்டில் அவன்தான் ஆண் மகன். அவன் உழைப்பைத்தான் அந்தக் குடும்பம் நம்பியிருக்கிறது. அவன் வளர்ச்சியைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அவனும் இறந்த போனபிறகு அந்தக் குடும்பம் என்ன ஆகியிருக்கும் என்று தெரியவில்லை.

அந்த அந்தப்புரக் கதவுக்கு அருகே போய் நின்றதும் என்ன வேண்டுமென்று ஒரு குரல் வந்தது. இருட்டில் நின்றிருந்த வீரர்கள் மெல்ல வெளியே வந்து, அவனருகே வந்து அவனை நிமிர்த்திப் பார்த்தார்கள். ஏதும் அவசரமா என்று கேட்டார்கள்.

"ஒன்றுமில்லை. இது என்ன இடம்."

"இது அந்தப்புரம்."

"அரசர் இதற்குள்தான் இருக்கிறாரா" என்று விகர்ணன் கேட்க, "ஆமாம், இதற்குள் தான் இருக்கிறார். என்ன தேவை உனக்கு." என்று மறுபடியும் அந்த வீரர்கள் கேட்க, "நாளை காலை அரசரைச் சந்திக்க முடியுமா" என்று விகர்ணன் பதிலுக்குக் கேட்டான்.

"எதற்காக அரசரைச் சந்திக்க வேண்டும்."

"காலில் விழுந்து வணங்க வேண்டும். என்னை அறிமுகப் படுத்திக் கொள்ள வேண்டும்."

"அப்படியா... அறிமுகப்படுத்திக் கொள்ளும்படியாக நீ யார்... எங்களுக்குச் சொல்..." என்று வீரர்கள் சாதாரணமாகக் கேட்டார்கள்.

கங்கதேசத்தில் ஒரு நாளும் எந்த வீரனும் இப்படி வாசலில் வந்து நிற்கின்ற வழிப்போக்கனிடம் பேசமாட்டார்கள். வந்ததுமே அடிதான் விழும். மிரட்டவ்தான் இருக்கும்.

"நான் ஒரு சிற்பி. ஆனால் போரில் பங்கு கொண்டேன். எனக்குப் போர் பழக்கமில்லை, என்னைப் போன்ற பலருக்குப் போர் பழக்கமில்லை. அதனால் வலிவுமிக்க சோழ வீரர்களிடம் மிக எளிதாகத் தோற்றுப் போனோம். சோழ வீரர்கள் கைது செய்து கொண்டு இங்கே அழைத்து வந்து விட்டார்கள்.

இரண்டரை வருடங்களுக்கு முன்பு நடந்த போரில் நான் கைதாகி, திருவொற்றியூரில் வெகுகாலம் சிறை வைக்கப் பட்டேன். ஆனால் அடிப்படையில் நான் ஒரு சிற்பி. கருவறைச் சிற்பி.

அரசர் மிகப் பெரிய கோயில் கட்டப் போகிறார் என்பதைப் போய் பார்த்துத் தெரிந்து கொண்டேன். அரசர் காலில் விழுந்து வணங்கி என்னை உபயோகப்படுத்திக் கொள்ளுமாறு அவரிடம் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்."

"என்ன சிற்பி என்ன சொன்னீர்கள்."

"கருலறைச் சிற்பி...

"அதாவது... அந்த வீரன் புரிந்துகொள்ள முயற்சி செய்தான். விகர்ணனை உள்ளே அழைத்தான். அந்தப் பெரிய கதவிலிருந்து சிறிய திட்டிக்கதவு ஒன்றை திறந்தான்.

"உள்ளுக்குள் நுழைந்து வா." என்றான்.

விகர்ணன் உள்ளே நுழைய, அந்தக் கதவை அடித்து மூடினான். குறுக்கே மரக்கட்டை இழுத்து வைத்தான். விகர்ணனை அழைத்துக் கொண்டு தீப்பந்தத்தைச் சுற்றியிருந்த வீரர்களுக்கு அருகே அழைத்துப் போனான்.

"இவர் கருவறைச் சிற்பியாம். அரசரைப் பார்க்க வேண்டுமாம். ஏதோ சொல்கிறான். நெடுநேரமாக அரண்மனையின் சகல பகுதிகளையும் உற்று உற்றுப் பார்த்துக் கொண்டு இப்பொழுது லாசலுக்கு வந்து அதன் உயரத்தையும், அகலத்தையும் கண்களால் அளந்து கொண்டிருந்தான். என்ன என்று கேட்டபோது இப்படி பதில் சொல்கிறான்" என்று பணிவாகத் தெரிவித்தான்.

ஆக, தான் எல்லா இடங்களையும் சுற்றித் திரிந்ததை வீரர்கள் கவனித்திருக்கிறார்கள் என்பதை விகர்ணன் புரிந்து கொண்டான். அமைதியாக கைகட்டிக் கொண்டு நின்றான். சற்று தூக்கக் கலக்கமாகவும், உணவு உண்ட களைப்பாகவும் இருந்த வீரர்கள் மெல்ல அவனைப் பார்த்துப் புன்னகை செய்தார்கள்.

"உட்காருங்கள்." ஒரு செல்லகமான கருங்கல் பாறையைச் சுட்டிக் காட்டினார்கள். அவர்களுடைய ஆசனமும் கருங்கல் பாறையாகத்தான் இருந்தது. அந்தப் பாறையை தடவிப் பார்த்து பிறகு விகர்ணன் உட்கார்ந்தான்.

"கங்க தேசத்தில் இப்படி அரண்மனை லாசலில் பாறைகள் இருக்காதா." ஒரு வீரன் கேட்டான்.

"இல்லை, அரண்மனை வாசலில் இப்படி பாறைகளை பார்த்ததேயில்லை. அது என்ன கதவு."

"மரக்கதவு."

"ஒரு வேளை மரக்கதவை யானை வைத்து எதிரிகள் பிளந்துவிட்டால், பெரிய மரத்தடி கொண்டு அடித்து நொறுக்கி விட்டால், அடுத்தது என்ன செய்லார்கள்?"

"உள்ளே விரைவார்கள்."

"உள்ளே விரையும் வீரர்களைத் தடுத்து நிறுத்த எது நல்ல வழி."

"மூங்கில் கழிகளைக் குறுக்கே வைக்கலாம். முள்வேலிகள் அமைக்கவாம்."

"நெருப்புப் பந்தங்களை வீசினால் கால் நாழிகையில் சகலமும் எரிந்துவிடும். பிறகு தண்ணீர் ஊற்றி அணைத்துவிட்டு ஓடிவந்து விடுவார்கள். இது எதற்கென்று எனக்குத் தெரிய விவ்வையே."

விகர்ணன் கற்றி முற்றிப் பார்த்தான். தீப்பந்த வெளிச்சத்துக்கு ஊடே அம்மாதிரி செவ்வகமான பாறைகள் பலதும் இருந்தன.

"கதவுகள் உடைபடும் என்று தெரிந்துவிட்டால் நாங்கள் இந்தப் பாறைகளை இழுத்து நடுவே போட்டு விடுவோம்." என்று தலைமை வகிப்பவன் போலிருந்த வீரன் சொன்னான்.

அந்த வீரனுக்கு ஐம்பது வயதிருக்கும்.

"இதை நடுவே போட்டுவிட்டால் வீரர்கள் ஓடிவர மாட்டார்களா?"

"வீரர்கள் ஓடித்தான் வரவேண்டும். மற்றபடி யானையோ, குதிரையோ வரமுடியாது. இம்மாதிரிப் பாறைகளை நடுவே நாவாபுறமும் மடக்கிப் போட்டுவிட்டால், உள்ளுக்குள் மாட்டுவண்டியோ, சிறுதேரோ, புரவிகளோ, யானைகளோ வரவே முடியாது. காலாட்படைதான் முன்னேற முடியும். அப்படி காலாட்படை முன்னேறினால் என்ன ஆகும் தெரியுமா."

"தெரியவில்லையே."

"இவரைச் சற்று உள்ளே அழைத்துப் போ."

அந்தக் காவல் இடம் தாண்டியதும் மறுபடியும் ஒரு முற்றம் வந்தது. அந்த முற்றத்தின் தளமும் கல்லில் அமைந்திருந்தது.

அந்த முற்றத்திற்கு நடுவே ஒரு பெரிய தீச்சட்டி வைத்து, அதில் நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. எண்ணெய் வார்க்கின்ற உபகரணங்கள் அருகே இருந்தன.

சுவர் முழுவதும் வெள்ளை அடிக்கப்பட்டிருந்தது. வெள்ளையிவ் நெருப்பு வெளிச்சம்பட்டு அந்த இடம் பிரகாசமாக இருந்தது. யார் ஓடினாலும், யார் அசைந்தாலும் நிச்சயமாகத் தெரியும். இந்தக் காவவ் வாசலுக்கும், அடுத்த அந்தப்புர வாசலுக்குமிடையே இருபத்தைந்து தப்படிகள் இடைவெளி இருந்தன.

"இந்த இடத்தை யார் தாண்டினாலும் பல அம்புகள் தைக்கும்படியாக வீரர்கள் மேலே உட்கார்ந்திருப்பார்கள். அம்புகளைத் தடுக்கின்ற கேடயத்தோடு எவரேனும் வந்து விட்டால், அவரைத் துரத்தவும் நாங்கள் வழிவகை வைத்திருக் கிறோம். கொதிக்கின்ற எண்ணெயை பெரிய கரண்டிகளிவ் மொண்டு, இங்கு நிற்பவர் தலையில் ஊற்ற முடியும். அடேய் கரண்டி காட்டடா..." கீழிருந்து குரல் கொடுக்க, அந்த முற்றத்தின் மதில் சுவர் மேலேயிருந்த வீரன் மூங்கில் நுனியில் கற்றப்பட்ட மிகப் பெரிய அகப்பையைக் காட்டினான். அகப்பை மீண்டும் உள்ளுக்குள் போயிற்று.

"அடேய்ப்பா... புதிதாக இருக்கிறதே. இதுவரை நான் பார்த்ததேயில்லை."

"ஏன், கங்க தேசத்தில் இந்த மாதிரி கோட்டைப் பாது காப்புகள் இல்லையா."

"நான் இருக்கின்ற சிற்றரசருடைய கோட்டை மூங்கில் கம்புகளால் ஆனது. அரசருடைய அரண்மனை புற்களால் வேய்ந்த கூரை. இரண்டு அடுக்குக் கூரை. மூங்கிலைத் தாண்டி கற்பாறைகளை அடுக்கி வைத்திருப்போம். அது சுலர்கூட இல்லை. ஒரு யானையால் சரித்துவிட முடியும். அப்படித்தான் எங்கள் கோட்டை சோழ தேசத்து யானைகளால் நாசம் செய்யப்பட்டது."

"ஏன் கற்கோட்டை கட்டிக் கொள்ளவில்லை." – ஒருவன் விகர்ணனைப் பார்த்து கேள்வி கேட்டான்.

"இதற்கெல்லாம் நேரம் இல்லை. இதற்கெல்லாம் வசதியில்லை. நாங்கள் இருக்கிற இடம் மலையும், மரங்களும் அடர்ந்த காடு, மழை பெய்தால் சேறாகி விடுகிற பூமி."

"நீங்கள் இருப்பது தலைநகரமா?"

"அப்படிச் சொல்வதற்கில்லை. அரசர் இங்கும் இருப்பார். அவருடைய அரண்மனையிலும் இருப்பார். அரசர் இருக்கின்ற இடத்தைத் தலைநகரம் என்று நீங்கள் அழைக்கிறீர்கள். அங்கே அரசர்கள் மாற, அரண்மனைகளும் மாறிக்கொண்டிருக்கும். ஒரு அரசர் வாழ்ந்த இடத்தில் இன்னொரு அரசர் லாழமாட் டார். ஏனென்றால் அந்த அரசருடைய மனைவிகளும், மகன்களும் வேறு எங்கும் போகமுடியாது என்பதால் இளவரசப் பட்டம் கட்டிக் கொள்ளும்பொழுதே லேறு இடம் தேர்ந்தெடுத்து, மரத்தினால் தரையிலிருந்து இரண்டடி

உயரத்திற்கு பரணைப் போல் வீடுகள் அமைத்துக் கொள்வோம். இரண்டு பரணைக் கட்டி மேல் பரணையில் கூரை போட்டு அரசர் லசிப்பார். கீழே வேலைக்காரர்களும், அரசரது உறவினர்களும் இருப்பார்கள்."

"கீழே கூரை லைக்கோல் புல் என்றா சொன்னாய்."

"வைக்கோல் புல் அல்ல. லேறு விதமான கோரைப் புல்."

"ஒரு தீப்பந்தத்தில் கோரைப் புவ் எரிந்துவிடாதா?"

"உன்மையில் அப்படித்தான். ஆனால் எந்நேரமும் மழை பெய்கின்ற ஒரு ஊராக இருப்பதால், எப்பொழுதும் குளுமை யாக இருப்பதால், மேவேயுள்ள கோரைப் புல் ஈரமாக இருக்கும். ஒரு தீப்பந்தத்தில் கோரைப்புல் எரிந்து விடாது. ஆடிமாதக் காற்றுக்கு முன் ஆனிமாதம் கடும் வெயில் இருக்கும். அப்பொழுது சில சமயம் தீப்பற்றிக் கொள்வதுண்டு. வெய்யில் கடுமையாக இருந்தால் அந்த நேரத்தில் மலை ஏறி எந்தப் பகைலரும் தாக்கமாட்டார்கள்."

"கட்டிடம் ஏன் கட்டிக் கொள்ளவில்லை. அதற்கு என்ன காரணம்?"

ஒருவன் விகர்ணனை மெவ்வ உட்கார வைத்து மறுபடியும் கேட்டான்.

101

"கங்க தேசத்தில் ஒரு எண்ணம் இருக்கிறது. கல்லோ, செங்கல்லோ, காரையோ கோவிலுக்குத்தான் உபயோகிக்க லேண்டுமே தவிர, மனிதர்கள் வசிக்கும் கட்டடங்களுக்கு உபயோகிப்பது நல்லதல்ல என்பது கருத்து. கட்டடங்களுக்குள் இருப்பது மனிதர்களை பலவீனப்படுத்தும் என்பது எங்கள் பெரியவர்களுடைய வாக்கு..."

"புரியவில்லையே..."

"எங்கள் ஊரில் கடும் குளிர் இருக்கும். குளிருக்கு வெளியே வந்து தோலாடை போர்த்திக் கொண்டு அல்லது கம்பளிகளைச் சுற்றிக்கொண்டு குளிரோடு வாழப் பழக வேண்டுமே தவிர, கட்டடத்தின் வெதுவெதுப்புக்குள் நுழைந்து விடக்கூடாது. நுழைந்து விட்டால் மறுபடியும் குளிரைத்

தாக்குப்பிடிக்க முடியாது. கட்டடத்தின் வெப்ப ககம் தெரியக் கூடாது என்பதற்காகவே கட்டடங்கள் கட்டவில்லை என்று பெரியவர்கள் சொல்வார்கள்."

"இந்தக் கட்டடங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்." என்று வீரர்கள் கேட்க, "மிக அற்புதமாக இருக்கின்றன. இவ்வளவு உயரமாக, அகலமாக, உறுதியாக கட்டடங்கள் தேவைதானா என்று எனக்குப் புரியவேயில்லை. வெப்பத்தை இந்தக் கட்டடங்கள் தாங்கும் என்று நினைக்கிறேன். கடும் வெயிவ் நேரத்தில் இந்தக் கட்டடங்கள் குளுமையைத் தரும் என்று நினைக்கிறேன். பாறைகளால் கவர் எழுப்பி, மேல் தளத்தை செங்கற்களாவ் நிரப்பி, வளைவு வளைவாக கூரை களைச் செய்திருக்கிறீர்கள். மேற்பரப்பில் வெள்ளை அடித்து வெப்பத்தை மேலே விரட்டி விட்டீர்கள்.

கிட்டத்தட்ட ஒரு பனை உயரம் கூரை இருப்பதால் உள்ளுக்குள் வெப்பமில்வை. அப்படியே வெப்பம் இருந்தாலும், அவை வெளியே போவதற்கு சிறிய சாளரங்களை லைத்திருக் கிறீர்கள். சாளரங்களிலிருந்து காற்று வருகிறது. வெப்பம் வர வில்னல. அதே நேரம் மழைச்சாரலும் உள்ளே வராது.

தஞ்சையில் இப்படிப்பட்ட கட்டடங்கள் தேவைதான். ஆனாவ் கல்லுக்கு என்ன செய்கிறீர்கள் என்று தெரியவில்லை. நான் திருவொற்றியூரிலிருந்து வரும்போது தஞ்சைக்கு வெகு தொலைவில் திருவக்கரை என்ற ஊரில்தான் கருங்கற்கள் பார்த்தேனே தவிர, வேறு மலைகள் பார்த்தாக ஞாபகமில்லை. அங்கிருந்தா கற்கள் வருகின்றன. இவ்லளவு உறுதியாகக் கோட்டைகள் கட்ட எங்கிருந்து கற்கள் கொண்டு வருகிறீர்கள். அருகே என்ன மவை இருக்கிறது. சொரசொரப்பான இந்தக் கற்கள் எங்கிருந்து கிடைக்கின்றன" என்று ஆச்சரியமாகக் கேட்டான் கருவறைச் சிற்பி விகர்ணன்.

"எல்லாம் இயற்கை தந்த வரம். ஆனாவ் தஞ்சைக்கு அருகே எந்த மலையும் இல்லை. தஞ்சை வண்டல் மண் நிறைந்த பூமி. தஞ்சைக்கு அருகே ஐந்து நதிகள், பவ உபநதிகள் ஓடுகின்றன. எல்லா இடமும் காலப் போக்கில் வயவாக்கப்பட்டு விட்டன.

காவிரி உள்ளே நுழையாமல் இருக்க நெடுக கரை எழுப்பி, கானகங்களை அழித்து வயவாக்கியிருக்கிறோம். பல தலைமுறை களுக்கு முன்பு எங்களுடைய வீடுகளும், அரண்மனைகளும்

மண்ணாலும், ஓலைகளாலும்தான் செய்யப்பட்டிருந்தன. கற்களின் உபயோகம் பத்து தலைமுறைகளுக்கு முன்பு தெரிந்து, பல கற்களைக் கொண்டு வருவதற்காகவே தஞ்சைக்குப் பாதைகள் அமைத்து, உறுதியான வண்டிகள் செய்து... மெவ்ல... மெல்ல... தினம்... தினம் கற்களைக் கொண்டு குவித்துக் கொண்டிருக்கிறோம். அப்படிக் குவிக்கப்பட்ட கற்களின் மூலம்தான் இங்கு அரண்மனைகளும், பல வீடுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. இது ஆறு தலைமுறை அரண்மனை.

கிட்டத்தட்ட நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு விஜயாலயச் சோழன் என்பவர், முன்பிருந்த சிறிய அரண்மனையை விஸ்தரித்து மிகப் பெரியதாகக் கட்டினார். ஒவ்வொரு தலைமுறையினரும் அரண்மனையை மிக அழகாக விஸ்தரித்தார்கள்.

இப்பொழுது அரசராக இருக்கிறாரே உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர், அவருடைய தந்தையார் கந்தரசோழர் காலத்தில் இந்த அரண்மனைகளும், அந்தப்புரங்களும் மிகத் தெளிவாகத் திட்டமிடப்பட்டு, நேர்த்தியாகச் செப்பனிடப் பட்டன. முன்னும், பின்னும் பலமான காவல் அமைத்து, உள்ளுக்குள்ளேயே படைவீரர்கள் தங்குகின்ற ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

அரண்மனையைச் சுற்றிய அகழிகளும், அவர் காலத்திலேயே செப்பனிடப்பட்டன. நீ கருவறைச் சிற்பி என்று சொன்னதால், கட்டடம் பற்றி உனக்குத் தெரியும் என்று நினைத்து இவைகளைச் சொல்கிறேன்." என்று அந்தத் தலைமை வீரன் சொல்ல, விகர்ணன் தவையசைத்து அந்த மரியாதையை ஏற்றுக்கொண்டான்.

"லாட்பயிற்சியும் உண்டோ." என்று இன்னொரு வீரன் கேட்டான்.

"அப்படியெவ்லாம் பிரமாதமான பயிற்சி இல்லை...

"இங்கு வந்திருக்கிறவர்களில் சிறந்த வாள் பயிற்சி யுள்ளவர்கள் உண்டா."

"உண்டு. ஆனால் அவர்கள் இனி வாள் எடுப்பதில்லை என்று சபதம் செய்திருக்கிறார்கள்..."

"ஏன்."

"சில மனவருத்தங்கள்."

"யார் மீது?"

"எங்கள் அரசன் மீது."

"அப்படியா என்ன லருத்தம்..."

"படையெடுத்துப் போகச் சொல்லிவிட்டாரே தவிர, அதற்குண்டான எந்த உதவியும் செய்யவில்லை. போருக்குண்டான உற்சாகம் எதுவும் தரவில்லை. எப்பொழுதும் குடித்து விட்டு ஆடும் தளபதிகள். பிறன்மனை தேடும் அதிகாரிகள். லஞ்சம் கேட்கும் ஊழியர்கள் என்று என்னுடைய தேசம் குழப்பமாக இருந்தது. அதில் நல்ல வீரர்கள் முன்னால் நின்று முடிந்தவரை போரிட்டு உயிர் துறந்தார்கள். சிலர் கைதானார்கள். சிலர் கைதானபோது எவருமே உதவிக்கு வரவில்லையே என்று நொந்து, வாட்களைக் கீழே போட்டுவிட்டு, இனி லாளே எடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள்."

"அவ்விதம் சபதம் எடுத்தவர்கள் எத்தனை பேர்கள் இருப்பார்கள்." ஒரு வீரன் விகர்ணனைக் கேட்டான்.

"நாற்பது பேருக்கு மேல் இருக்கும்..."

"அவர்களை எனக்கு அடையாளம் காட்டுவாயா..."

"ஏன்..."

"மறுபடியும் அவர்களோடு பேசி சமாதானம் செய்து, சோழ தேசத்து வீரர்களாக அவர்களை மாற்றுவதற்கு விரும்புகின்றேன்." – அந்த வீரன் சொல்ல, தலைமை அதிகாரி நல்லது என்று தலையசைத்தான்.

"இல்லை. அவர்கள் வாள் எடுக்க மாட்டார்கள். சோழ தேசத்து வீரர்களாகவும் மாற மாட்டார்கள்."

"ஏன் அவ்வளவு தெளிவாகச் சொல்கிறீர்கள்."

"நடுவே ஒருமுறை திருவொற்றியூரில் பாண்டிய வீரர்கள் உள்ளே புகுந்து இங்கு படையெடுப்பு நடத்தலாம். கலவரம் மூட்டலாம் என்று சொன்னபோது, அவர்கள் தங்கள் சத்தியத்தைப் பாண்டிய வீரர்களுக்குச் சொல்லி மறுத்து விட்டார்கள்."

"சரி. வாளெடுத்துப் போராடவேண்டாம். அந்த நாற்பது வீரர்களும் அரசர் எழுப்புகின்ற இந்த மாபெரும் கற்கோயிலைக் காப்பாற்றுவதாய் சத்தியம் செய்லார்களா. இந்த வேலை முடியும் வரை இந்த இடம் விட்டு நகராது காப்பு கட்டிக் கொண்டு கோயில் குடமுழுக்கு முடிந்த பிறகே வேறு வேலைக்குப் போவேன் என்று பிரதிக்ஞை செய்து கொள்வார்களா."

"செய்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அப்படிப் பட்ட எண்ணத்தில்தான் இங்கு வந்திருக்கிறார்கள்."

"இது தவிர வேறு ஏதேனும் எண்ணம் உண்டா அந்த வீரர்களுக்கு..."

--அந்தக் காவவ் தவைவன் மீண்டும் கேட்டான்.

"கடல் தாண்டி கடாரம் போவது, சீனம் போவது என்றும் அவர்களுக்குள் சிவர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பரத கண்டத்தில் மட்டும் நின்று விடாது, இன்னும் தேசத்தின் பல பாகங்களுக்குப் போகவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்."

"அடேயப்பா... பெரிய ஆசையாக இருக்கிறதே. ஏன் இந்த ஆசை வந்தது."

"இந்த தேசம்தான் என்னுடைய தேசம் என்று இல்லாமல் போய்விட்டது. கங்க தேசத்தின் மீது பிடிப்பு போய்விட்டது. ஆக, உலகத்தின் எந்த இடமெல்லாம் வளமாக இருக்கிறதோ, எந்த இடமெல்லாம் நாகரிகம் இருக்கிறதோ அங்கெவ்லாம் போய் பார்த்துவிட்டு ஒரு பத்து ஆண்டுகள் கழித்து, மீண்டும் கங்கதேசம் வந்துவிட வேண்டும் என்று பேசிக் கொள்கிறார்கள். இரவு நேரத்தில் தூக்கம் வராது பேசுகின்ற பேச்சுகளில் இவையும் சில."

"ஆச்சரியமாக இருக்கிறதய்யா... மிகப் பெரிய கனவுகளாக இருக்கின்றனவே."

"ஆமாம். எங்கள் தேசத்திலிருந்து வேரோடு பிடுங்கி, திருவொற்றியூரிவ் இரண்டரை வருடங்கள் ஆடுமாடுகள் போவ் கொட்டடியில் வைத்திருந்தீர்கள். நாங்கள் வேறு என்னதான் செய்வது. கற்பனை உலகில் சஞ்சரிக்காமல், கனவுகளை வளர்த்துக் கொள்ளாமல் இருந்தால் நாங்கள் செத்துத்தான் போவோம். எனவே, நாங்கள் நாரைகளைப் போல, பெரும் கொக்குகளைப் போல சிறகடித்து உலகின் எல்லா பாகங்களுக்கும் பறக்கத் துவங்கி விட்டோம்."

"இதற்குக் கடல் கடந்து போவானேன். நேரே கங்கையைப் போய் பார்க்க வேண்டும்; வடக்கே போக வேண்டும் என்ற எண்ணமில்லையா."

"அப்படியும் சிலருக்கு இருக்கிறது."

"விகர்ணா... உன்னைச் சந்தித்ததில், உன்னோடு பேசிய திவ், உன்னிடமிருந்து நல்ல தகவல்கள் வாங்கியதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. நான் இந்தக் கோட்டைக் காவலில் முதல்

தளபதி. இங்கு வா, படியேறி இந்த லழிநடையிலிருந்து இந்த முற்றத்தைப் பார்.” என்று எழுந்து படியேறி அழைத்துக் கொண்டு போனான். சுட்டிக் காட்டினான்.

அந்த இடத்திலிருந்து முற்றம் தெரிந்தது.

வீரர்கள் முன்னும் பின்னும் அலைலதும், பாடுலதும், படுத்து உருளுவதும், சிரிப்பதும் தெள்ளத் தெளிவாகக் கேட்டன.

“இங்கிருந்து உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இங்கு பல பேர் படுத்து உறங்க, கிடைத்ததைச் சாப்பிட ஆரம்பிக்க, கெக்கலித்துப் பேசத் துவங்க –நீ மட்டும் ஒவ்வொரு இடமாக நகர்ந்து போனாய். ஆயுதங்கள் தேடினாய். அதனால்தான் உன்னை உள்ளே லரச் சொன்னேன். உங்களைச் சோழப்படை வீரர்கள் முற்றிலுமாக, முழு கவனத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதே.

எனக்கு அந்த நாற்பது வீரர்களை அடையாளம் காட்டினால், மன்னரிடம் அழைத்துப் போய் மிக முக்கியமான பொறுப்புகளை வாங்கித் தருவதாக உத்தேசித்துள்ளேன். ஒரு நாள் இரவு மன்னர் உங்களோடு மனம் விட்டுப் பேசவும் செய்வார் என்பது எண்ணம். கடல் கடந்து போகின்ற உங்கள் கனவுகளுக்கெல்வாம் அவர் ஏதேனும் வழிலகுப்பார்.

இந்தக் கோயில் கட்டுகிறபோதே வடக்கே வெகுதூரம் போய் கங்கை நீர் கொண்டு வரவும் அவருக்குத் திட்டமிருக் கிறது. அதற்காக ஒரு குழுவை அனுப்பவும் அவர் விரும்பு கின்றார். இதையெல்லாம் நான் சொல்வதைவிட நேரடியாய் மன்னரிடமிருந்து தெரிந்து கொள்ளலாம். நடுநிசி லந்துவிட்டது. இங்கேயே உறங்கு.”

விகர்ணனுக்கு அங்கு ஒரு மரப்பலகை காட்டப்பட்டது. தலைக்கு இன்னொரு பலகை தரப்பட்டது. போர்த்திக் கொள்ள மெல்லியதாய் ஒரு போர்வையும் தரப்பட்டது.

“வெற்றிலை போடுகிறாயா.”

தாம்பூலம் தரப்பட்டது.

சிறிது நேரம் வெற்றிலை மென்று ருசித்துக் கொண்டிருந்த விகர்ணன் மரப்பலகையில் மெல்ல சாய்ந்தான். போர்வையால் தன்னை மூடிக் கொண்டான். நன்கு விடியும் வரை அயர்ந்து தூங்கினான். விடிந்தபோது மழை முற்றிலும் விட்டிருந்தது. லெயில் பிரகாசமாக இருந்தது.

அரண்மனையில் பெருங்கதவுகள் திறந்து கொண்டன. அந்தப்புரத்துச் சாளரங்களும், கதவுகளும் திறக்கப்பட்டன. உள்ளுக்குள் இருந்து பாத்திரங்கள் வெளியே போயின. வெளியிலிருந்து தானியங்கள் உள்ளே வந்தன.

அந்தப்புரத்தில் பெண்கள் கூட்டமும், கூச்சலும், குழந்தைகளின் கும்மாளமும் கேட்டன.

சுட வைத்த நீராகாரம், குளுமையான நீராகாரம் என்று இரண்டு வகையான பானைகள் இறக்கப்பட்டன.

எல்லா வீரர்களும் வரிசையானார்கள்.

உப்பிட்ட கிச்சிலியும், பிரண்டைத் துவையலும் வழங்கப்பட்டன. குவளை குவளையாக வீரர்கள் நீராகாரம் குடித்தார்கள். அனைவரும் அரண்மனையை விட்டு வெளியேறி மறுபடியும் புல் திடலுக்குப் போகவாம் என்று சொல்லப்பட்டது.

எந்தக் காவலும் இல்லாமல் அந்தப் பத்தாயிரத்துச் சொச்சம் வீரர்களும் பேசிக் கொண்டே, தஞ்சைத் தெருக்களிவ் வீடுகளைப் பார்த்துக் கொண்டே, வாசல்களில் நிற்கின்ற பெண்களைப் பார்த்துக் கொண்டே புல்வெளி நோக்கிப் போனார்கள். அவர்கள் போவதற்கு முன்பு, பார வண்டிகள் நீண்ட சவுக்குகளையும், தென்னோலைகளையும் எடுத்துக் கொண்டு போயின.

இன்னும் பச்சை ஓலைகள் பின்னால் வருவதாகச் சொல்லப்பட்டது.

வீரர்கள் வயல்வெளிப்பக்கம் போனார்கள். அந்தக் குளத்திவ் இறங்கிக் குளித்தார்கள். கால்வாய்களில் கை கால்கள் கத்தம் செய்து கொண்டார்கள்.

தென்னந்தோப்புக்குள் புகுந்தார்கள். தென்னந்தோப்பை ஒட்டிய திடலில் மாவிவை கட்டிய பெரிய சவுக்கு நட்டு, அதற்கு மஞ்சள் தடவி ஆட்டுக்கடா பலி கொடுத்து பந்தல் வேலை ஆரம்பித்தார்கள்.

பத்தாயிரம் வீரர்களும் உட்கார்ந்து ஓலை முடைந்தார்கள். முடையத் தெரியாதவர்கள் வேகமாக முடைபவர்களிடம் கொடுத்தார்கள். சவுக்குக் கட்டைகளைத் தூக்கிக் கொண்டு போய் குறிப்பிட்ட இடங்களில் போட்டு குழிதோண்டி நட்டார்கள்.

அன்று மாலைக்குள் பாதி கொட்டகை உயர்ந்து விட்டது. இரவு தீப்பந்தங்களுடே மேலும் கூரை நெய்தார்கள். தொடர்ந்து கூரை போடப்பட்டது.

அவர்களுக்கு நடுவே மரப் பலகைகள் போயின. இடுப்பு உயரத்திற்கு ஒரு மரமேடை அமைக்கப்பட்டது. மரத்தச்சர்கள் மிக வேகமாக வேலைகள் செய்து மரமேடையைத் தயார் செய்தார்கள்.

மரமேடையின் பின் பக்கம் சவுக்கு நட்டு, பெரிய துணியைக் கட்டினார்கள். வீரர்களுக்கு அது நாடக மேடை என்று புரிந்து விட்டது. உரக்கக் குரல் கொடுத்தார்கள். தொடை தட்டினார்கள். மார்பில் அறைந்து கொண்டார்கள். தலையில் சுற்றியிருந்த துணியை உதறி ஹோ என்று கூவினார்கள்.

எப்பொழுது நாடகம், எப்பொழுது நாட்டியம் என்று கேட்டார்கள்.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் கட்டளைப்படி, பதினாறு பெண்கள் அந்த வீரர்களுக்கு நடுவே நடந்து மேடையேறி, வணக்கம் சொல்லி, திரைக்குப் பின்னால் போய் நின்று கொண்டார்கள்.

இன்றிலிருந்து ஏழு நாளைக்கு ராமகாவியம் நாட்டிய நாடகம் நடைபெறும்' என்று தாளத்துடன் தலையில் தொப்பியுடன் தோன்றிய விதூஷகன் அறிவித்தான். வீரர்கள் கரவொலி செய்தார்கள்.

பிறை வட்டமாய் மேடையைச் சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள். விநாயகர் பூஜை செய்யப்பட்டது. நந்தி தேவருக்கு வணக்கம் சொல்லப்பட்டது.

கிராம தேவதைகளுக்கும், குல தேவதைகளுக்கும், பூமித்தாய்க்கும், சூரியனுக்கும், சந்திரனுக்கும், வருணனுக்கும், வாயுவுக்கும் வந்தனம் சொல்லப்பட்டன. ரிஷிகளும், முனிகளும் கும்பிடப்பட்டார்கள். உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் புகழ் பாடப்பட்டது.

"வடக்கே வெகுதூரத்தில் அயோத்தி அயோத்தி என்ற ஊர் இருந்தது. அந்த ஊர் எப்படி இருந்தது தெரியுமா" என்று சோழ தேசத்து நாட்டிய மங்கைகள் வர்ணித்தார்கள்.

"ஒருக்காலும் வற்றாத, இரண்டு ஆள் ஆழத்திற்கு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிற, பெரிய பெரிய மீன்கள் துள்ளி கரையில் மோதி பாறையை உடைக்கின்ற, எகிறி மரத்திலுள்ள பழக் குலையைப்

பறிக்கின்ற மீன்கள் நிறைந்த ஆறு. அந்த மீன்களைப் படகுகளில் போய் துடுப்பால் அடித்துக் கொண்டு பெண்கள் எடுத்து வர, அதை விலைக்கு வாங்கி, அறுத்து - உப்பிட்டும், காரம் போட்டும், சுவைத்துத் தின்ற குடும்பங்கள்.

மீன் லாசனை அறிந்து நாய்கள் கற்றிலர, அவைகளுக்கும் உணவு. அந்த நன்றியுள்ள நாய்கள் துணையுடன் மாட்டு மந்தைகளை மேய்க்க செழிப்பான பால். அதனால் ஏற்படுகின்ற தயிர், வெண்ணெய், நெய் என்று பல்லேறு விஷயங்கள். அதை உண்டு குடித்த வாலிபர்கள். தின்று நிமிர்ந்து மதர்த்த பெண்கள்.

மழையினாலும், வெயிலினாலும் பச்சென்று முளைக்கும் மூலினககள். அவைகளின் ரசத்தைக் குடித்து வளர்ந்த கெட்டிக் காரர்கள். அலர்களால் செய்யப்பட்ட பாடல்கள்.

நாகரிகம் கொடிகட்டிப் பறந்த அந்த அயோத்தியில் பல அரசர்கள் ஆண்டு வந்தார்கள். சூரிய வம்சத்தைச் சேர்ந்த அந்த அரசர்கள் யார் தெரியுமா என்று ஆரம்பித்து, ஸ்ரீராமருடைய பரம்பரையை ஒரு பெண் சொல்லிக் கொண்டு போக, இன்னொரு பெண் அபிநயம் பிடித்துக் காட்டினாள்.

"என்ன நடக்கிறது அங்கே." சிற்பிகள் வேலைகளை நிறுத்திவிட்டு ஆவலோடு கேட்டார்கள்.

"லந்திருந்த வீரர்களுக்கு ஸ்ரீராம கதை நாட்டியம் நடக்கிறதா... நாம் லந்து பத்து நாளாயிற்று. நமக்கு ஒரு சிறிய வரலேற்புகூட இல்லை. அந்த அடிமை வீரர்களுக்கு எதற்கு நாட்டிய நாடகம். எதனால் இப்படிச் செய்யப்படுகிறது." - சிற்பிகள் கேட்டார்கள்.

அவர்களில் யாருக்கும் பதில் தெரியவில்லை.

"யாரையாவது கேட்க லேண்டாமா." என்று ஒரு இளைஞன் கேட்க, ஒரு முதியவர் லேண்டாம் என்று மறுத்தார்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்." அந்த இளைஞன் சீற, "அதிகாரிகளாகவே இதைப் புரிந்துகொண்டு ஏதாவது செய்கிறார்களா என்று பார்ப்போம். நாம் அவசரப்பட்டு எதுவும் கேட்க லேண்டாம். நமக்கு வேலை இருக்கிறது. அதனால் வேலையைக் கெடுக்க வேண்டாம் என்று விட்டிருப்பார்கள். அவர்களுக்கு லேலை இல்லை. அவர்கள் பொழுது போக்கிற்காக நாட்டிய நாடகம் நடத்துகிறார்கள். எனவே, நாம் நம் வேலையைச் செய்வோம். வேலையைச் செய்து கொண்டே வேண்டியவற்றைக் கேட்போம். அலசரப்பட்டு

எந்தக் கோபமான வார்த்தையையும் வெளியிட்டு விடாதீர்கள்." என்று மிகத் தெளிவாகப் பேசினார்.

அவர் பேசியது சிற்பிகளுக்குப் புரிந்தது. ஆனாலும் தாங்கள் சரியாக நடத்தப்படவில்லை என்கிற எண்ணமும் இருந்தது.

102

தஞ்சை மாநகரத்தில் உள்ள குயவர் தெருவுக்கு அருகே அந்தக் கோயில் இருந்தது. அந்தக் கோயில் துர்க்கை கோயில். உள்ளுக்குள் இருக்கிற துர்க்கைக்கு நிசும்பசூதனி என்று பெயர். ஏழடி உயரமும், மெல்லிய உடம்பும், லற்றிய முலைகளும், புடைத்துத் தெறிக்கின்ற விலா எலும்பும், உருளையான பிதுங்கி வழிகின்ற மூட்டுகளும், மேலுதடு இல்லாத பற்களும், கபாலம் போன்ற தலையும், அதிலிருந்து மெல்லியதாகத் தொங்கும் சில முடிகளும், கண்களில் உக்கிரமும், கையில் மிகப்பெரிய வலிமையும் கொண்டு சூலத்தைக் கையில் ஊன்றியவாறு அந்தப் பெண் தெய்லம் இருந்தது.

இந்த உவகத்தின் எந்த மூலையிலும் பெண் என்பவளை இத்தனை கோரமாக எந்தச் சிற்பியும் செய்ததில்லை. சிற்பி செய்தது இருக்கட்டும், இப்படி ஒரு உருவத்தை யாரும் வழிபட்டதுமில்லை. இத்தனை உக்கிரமான தெய்வம் சோழ தேசத்தில் வேறு எங்கும் பார்த்ததுமில்லை.

கருவறைக்குள்ளிருந்து வெப்ப அலை அடித்தது. சாக்த வழிபாட்டில் சிறந்த ஒரு அந்தணர் நெற்றி நிறைய குங்குமம் பூசி மூலமந்திரம் ஜபம் சொல்லி அர்ச்சனை செய்து கொண்டிருந்தார். தஞ்சை மக்கள் கூடை கூடையாக சிவந்த பூக்களைக் கொண்டு வந்து கொடுக்க, அந்த அந்தணரால் அர்ச்சனை நடந்து கொண்டிருந்தது.

விடியலிலேயே இரண்டு மூன்று ஆடுகளைக் கொண்டு வந்து பலி போட்டிருப்பார்கள் போலும், இரத்த வாடை கோவிலைச் சுற்றியிருந்தது. ஈக்கள் பறந்தன. ஈக்கள் தரையில் உட்காராமல் இருக்க தண்ணீர் தெளித்திருந்தார்கள். மூலிகைகளைப் பறித்து புகை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

பச்சை மூலிகைகள் எரிந்த வாசனையில் லேசாக ஒரு காரம் மூக்கில் ஏறியது.

கருவறைக்குள்ளே அந்தணருக்கு எதிர் மூலையில் கருவூர்த்தேவர் கைகூப்பி நின்றிருந்தார்.

விரித்த சடாமுடியிலிருந்தும், நீளமான வெண்ணிற தாடியிலிருந்தும் நீர் சொட்டிக் கொண்டிருந்தது. குளித்துவிட்டு ஈரத்தோடு கோவிலுக்கு வந்து அம்மன் வழிபாடு நடத்திக் கொண்டிருந்தார்.

வெகுநாள் கழித்து கருவூர்த்தேவர் அந்தக் கோயிலுக்கு வந்திருப்பதால், அஷ்டோத்ரம் முடித்து உபசாரங்கள் செய்து உடைவாள், சூலம், கலரி, பதாகை, குடை போன்றவை சமர்ப்பித்து, நைவேத்தியம் அர்ப்பணித்து, அடுக்கு தீப ஆரத்தி அந்தணர் காட்ட நிசும்ப சூதனி அந்த வெளிச்சத்தில் தகதகவென்று மிகக் கோரமாய் காட்சியளித்தாள். சிவப்பு நிற ஆடை மேலே சுற்றப்பட்டிருந்தது.

தீபாராதனை நடக்கத் துவங்கியவுடன் காண்டா மணியும், பேரிகையும், மத்தளமும், எக்காளமும், சிறு முரகம் முழங்கத் துலங்கின. பறைகளை வேகமாக முழக்கினார்கள். அத்தனை சத்தமும் மனம் வாங்க, மனம் எளிதில் ஒன்று குவிந்தது. **தீபத்தின் மீதும், தீபத்தின் வெளிச்சத்தில் தெரியும் தெய்வத்தின் மீதும் அழுத்தமாய் படர்ந்தது.**

"தாயே நிசும்ப சூதனி, சோழ தேசத்தின் காவல் தெய்லமே, எங்கள் அரசன் இராஜராஜசோழன், உன் அருண்மொழி, மிகப் பெரிய காரியத்தில் இறங்கி இருக்கிறான். எந்த இடைஞ்சலும் இல்லாமல், எந்த ஊனமும் ஏற்படாமல் அலன் காரியத்தை நீ நடத்திக்கொடு. அதன் எழுப்புகின்ற கோவிலுக்குக் காலவாக இரு. அலன் செய்கின்ற ஒவ்வொரு செயலிலும் உன்னுடைய இருப்பைக் காட்டு. தாயே, நீ இல்லையெனில் தஞ்சை இல்லை. உன்னால்தான் சோழர்கள் உன்னதமான ஒரு நிலைக்கு லந்திருக் கிறார்கள். பல்லவர்களின் பிடியில் சிக்கிக் கொண்டிருந்த இந்த வீரர் குடும்பம் அவர்களுக்குண்டான சோழ தேசத்தைப் பெற்று, அதை இன்னும் விரிலாக்கி பரத கண்டத்தின் எல்லாப் பகுதி களிலும் தங்கள் புலிக்கொடியைப் பறக்க விட்டிருக்கிறார்கள். வெறும் போரில் மட்டும் ஜெயித்தால் போதாது. சரித்திரத்தை யும் ஜெயிக்க வேண்டுமென்று அந்த அரசன் மிக உன்னதமான ஒரு பணியில் இறங்கியிருக்கிறான்.

தமிழும் தமிழ்க் கலாச்சாரமும், சோழ தேசத்து மக்களும் காலம் காலமாய் பெருமை பேசிக் கொள்கிறதுபோல மிக அற்புதமான ஒரு திருப்பணியைச் செய்ய இருக்கிறான்.

நிகம்பசூதனி தாயே, மெல்ல லா. அவனுக்குத் துணையிரு. உன் இருப்பை எனக்குக் காட்டிவிட்டுப் போ. நீ சரியென்று சொன்னால்தான் நான் மறுபடியும் அரசனைப் பார்ப்பேன். நீ சம்மதம் என்று சொன்னால்தான் நான் கோயில் கட்டும் பணியை மேற்பார்வையிடுவேன் நீ இருக்கிறாய் என்று தெரிந்தால்தான் இதில் தொடர்ந்து ஈடுபடுவேன். அம்மா எனக்குக் குறிகாட்டு. எனக்கு குறிக்காட்டு...

கருவூர்த்தேவர் மனதுக்குள் இறைஞ்சினார்.

கருவறைக்கு வெளியே சற்றுத் தள்ளி சோழ வீரர்களால் ஜனக்கூட்டம் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

"கருவூர்த்தேலர் பூஜை செய்து கொண்டிருக்கிறார். அதை முடித்து வெளியே லந்ததும் நீங்கள் அனுமதிக்கப்படுவீர்கள்." என்று இதமாக ஜனங்களிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். பூஜை செய்யவும், கருவூர்த்தேவரைப் பார்க்கவும் தஞ்சை நகரத்துப் பெருமக்கள் ஆவலாக இருந்தார்கள். குறிப்பாகப் பெண்கள் கருவூர்த் தேவரைப் பார்த்து வணக்கம் சொல்லி, தங்களுக்கு இருந்த குறைகளைச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள்.

"இடைவிடாத ரத்தப் போக்கு அம்மாவுக்கு. எழுந்திருக்கவே முடியவில்லை. எத்தனையோ விதமான வைத்தியம் செய்தாகி விட்டது. மூத்தோர் சாபம் என்று சொல்கிறார்கள். உங்களிடம் விண்ணப்பித்துக் கொள்கிறேன். நீங்கள்தான் சரி செய்ய வேண்டும்." என்று ஒரு பெண் உள்ளுக்குள் சொல்லிக் கொண்டு கருவூர்த்தேவர் எப்பொழுது லெளியே வருவார் என்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

'போருக்குப் போன மகன் திரும்பி வரவில்லை. அலன் இறந்து போனதாக எதுவும் தகவல் இல்லை. அவன் இருக்கிறானா இல்லையா என்று தெரியவில்லை. அவனுக்கு இரண்டு மனைவிகள் இருக்கிறார்கள். இருவருமே இளம் பெண்கள். அலன் வருகையைப் பற்றி நல்லவாக்கு சொல்லுங்கள் ஐயா.' என்று ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி கை கூப்பி உள்ளுக்குள் கேட்டுக் கொண்டிருந்தாள்.

எப்படியாவது கருவூர்த் தேவரை பார்த்துவிட வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

தங்கையின் திருமணம், மாடுகள் அடிக்கடி இறப்பது, திருமணமாகிக் கணவனோடு புகுந்த வீட்டிற்குப் போன பெண் மூன்றே மாதத்தில் பேய் பிடித்துத் திரும்பி வந்த கதை என்று பல்வேறு விஷயங்கள் அவருக்காக லெளியே காத்துக் கொண்டிருந்தன.

அங்கே அதிகாரிச்சி முத்தான பொன் நங்கை கோவிலுக்கு வழிபட வந்துவிட்டு, கருவூர்த்தேவர் இருக்கிறார் என்று தெரிந்ததும், மெல்ல ஒரு சோழ வீரனிடமிருந்து கைகோல் வாங்கி ஜனங்களைப் பின்பக்கம் போகும்படி அதட்டிவிட்டு, பூக்கூடையை மண்டபத்துப் படியிலேயே வைத்துவிட்டுக் காத்திருந்தாள்.

கருவூர்த்தேவரை வணங்கி நமஸ்கரித்த பின்னர் பூஜை செய்துவிட்டு வேலைக்குப் போக வேண்டும். இந்த லேலைக்கு வந்து இன்றோடு ஏழு லருடங்கள் ஆகி விட்டன.

திருமணம் பற்றி இன்னும் எந்த சிந்தனையுமே இல்லை. ஆனால் உள்ளுக்குள் திருமணம் செய்து கொள்ள லேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டது.

நான் எந்தப் பக்கம் போக வேண்டும். திருமணம் செய்து கொண்டு கிராமத்திற்குப் போய் குடித்தனம் செய்யவா? அல்லது இல்லறத்தில் ஈடுபடாமல் சோழ தேசத்திற்குத் தன்னை அர்ப்பணம் செய்து கொண்டு அதிகாரிச்சியாகலே வாழ்ந்து விடவா? அதிகாரிச்சி திருமணம் செய்து கொண்டால் அத்தனை சிறப்பானதாக இராது. இது நல்ல உத்தியோகம். நல்ல உணவு. தெற்குப் பார்த்த சாளரத்திற்கு அருகே அற்புதமான படுக்கை. கீழே இருபது, முப்பது லேலையாட்கள், வருடாந்திர நெல் தவிர மாதாந்திர பொற்கழஞ்சு.

அவசரத்திற்குக் குதிரை, பல்லக்கு எதிலும் போகலாம். யானை மேல் ஏறிக்கொண்டு, நிகும்பசூதனியைப் பார்க்க வந்தாலும் ஏன் இப்படி என்று கேட்பாரில்லை. அதிகாரிச்சி முத்தான பொன்நங்கை எது செய்தாலும் காரணமாகத்தான் செய்லாள் என்று அரச குடும்பத்தினர் அத்தனை பேருக்கும் நம்பிக்கை.

கருவூர்த்தேவர் வெளியே லந்தாவ் அவரிடமும் தன் எதிர்காலம் பற்றிக் கேட்கலாமா– அல்லது நிகும்பசூதனியை

வணங்கிவிட்டு உன் விருப்பப்படி அருள் செய்வாயாக என்று சொல்லிவிட்டுப் போகலாமா?

கருவூர்த்தேவரை சந்திக்க பலபேர் காத்திருக்கிறார்கள். வேறொரு சமயத்தில் கருவூர்த் தேவரைப் பார்த்துக் கொள்ள வாம். இப்பொழுது வேலை இருக்கிறது. வழிபட்டுவிட்டு வேலைக்குப் போவதுதான் உத்தமம்.

அவள் எட்டி கருவறையைப் பார்க்க, கருவறையிலுள்ள தெய்வத்தின் கண்களிலிருந்து ஒரு ஒளி லேகமாக சட்டென்று அதிகாரிச்சி முத்தான பொன் நங்கையின் முன் கழுத்துப் பக்கம் தாக்கியது. தொண்டையை யாரோ அழுத்துவதுபோல் உணர்ந்தாள்.

என்ன இது, நெஞ்சிலிருந்து ஏதோ ஒன்று தொண்டையை அடைத்துக் கொள்கிறது. கனைக்க முற்பட்டாள். கனைக்க கனைக்க இறுக்கம் அதிகமாகியது.

மூச்கத் திணறி சட்டென்று நினைவு பிழன்றது. நினைவு பிழன்றதும் மூச்சு விடுதவ் சரியாயிற்று. அவள் உள்ளுக்குள் மிகப் பெரிய சக்தி பரவியிருப்பதை உணர்ந்து கொண்டாள். ஓங்காரமாய் கூச்சலிட்டாள். அவளைச் சுற்றியிருந்த ஜனங்கள் பயந்து ஓடினார்கள்.

"அடேய்... குடந்தைக் கிழவா..." என்று உரத்த குரலில் கூச்சலிட்டாள்.

கருவூர்த்தேவர் திரும்பி அதிகாரிச்சி முத்தான பொன் நங்கையைப் பார்த்தார்.

அவரைக் குடந்தைக் கிழவன் என்று அவருடைய மத்திம வயதில் அழைப்பார்கள். அலர் தாடி நரைத்த பிறகு அவரை சித்தர் என்று ஜனங்கள் ஏற்றுக் கொண்ட பிறகு எவரும் அப்படி அழைப்பதில்லை. அநேகமாக அந்த அழைப்பு எல்லோருக்குமே மறந்து போயிருந்தது.

"அடேய்... குடந்தைக் கிழவா... இங்கு வாடா." -நிசும்ப சூதனி அதிகாரிச்சி முத்தான பொன் நங்கையின் உள்ளுக்குள் புகுந்து உரக்கக் கூவினாள்.

கருவூர்த்தேவர் கருவறையை விட்டு வெளியே வந்தார். அதிகாரிச்சி முத்தான பொன்நங்கை முன்பு கைகூப்பினார்.

கண்கள் பெரிதாகி, பற்கள் கிட்டித்து, உடம்பு நடுங்க மயிர்க்காவ்கள் சிலிர்த்து நிற்க, கால்கள் தள்ளாட, கழன்று

சுழன்று' அதிகாரிச்சி முத்தான பொன் நங்கை ஆடினாள். மூச்சிறைக்க கருவூர்த்தேவர் முன்பு நின்றாள்.

கருவூர்த்தேவர் குனிந்து அதிகாரிச்சி பொன் நங்கையின் பாதம் தொட்டு தலையில் வைத்துக் கொண்டார்.

"சொல் தேவி. சொல். எனக்குப் பதில் சொல்." என்று உள்ளுக்குள் கேட்டபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

வாய்விட்டு அதிகாரிச்சி முத்தான பொன் நங்கை சிரித்தாள்.

"ஏய்... குடந்தைக் கிழவா, நான் இருக்க கவலை எதற்கடா? இங்கு நடக்கின்ற அத்தனை கூத்தும் என்னால் நடைபெறுபவை. இந்த தஞ்சை நகரம் முழுவதும் எனக்குக் கட்டுப்பட்டது. என் உத்தரவு பெற்றுத்தானடா இந்த அரசன் அங்கு கோயில் கட்டுகிறான். நான் இருப்பேன். குடந்தைக் கிழவா... நான் அங்கு இருப்பேன். எல்லா மூலைகளிலும் இருப்பேன். எல்லா பாறைகளிலும் இருப்பேன். எல்லா உளிகளிலும் இருப்பேன். எல்லா சுத்தியலிலும் இருப்பேன். எல்லா செயல்களிலும் இருப்பேன்.

அடேய் குடந்தைக் கிழவா... போ. போய் கல் தூக்கு. நீர் ஊற்று. மண் குழைத்துப் போடு. தஞ்சையிலுள்ள அத்தனை மக்களும் அதில் ஈடுபட வேண்டும் என்று சொல். இது என் கட்டளை என்று விவரி. ஈடுபடாதவரை நிகம்ப சூதனி குதறி எறிவாள் என்று எச்சரித்து வை.

சோழ தேசத்து அத்தனை மக்களின் கைகளும் இதில் இருக்க வேண்டுமென்று கட்டளை போடு. எவ்வளவுக்கு எவ்வளவு உழைக்கிறீர்களோ, அத்தனைக்கு அத்தனை நிகம்பசூதனி குளிர்ந்து போவாள் என்று சொல். அவர்கள் குலம் விளங்க ஆசீர்வதிப்பாள் என்று சொல். அவர்களுக்கு எந்தத் தீங்கும் வராமல் காப்பாற்றுவாள் என்று விவரி. உன் அரசனுக்குச் சொல். நிசும்ப சூதனியால்தான் இந்தக் கோயில் கட்டப்படும் என்று சொல்.

ஏய்... குடந்தைக் கிழவா, இந்தக் கோயில் கட்டி முடியும் வரை இந்த இடத்தை விட்டு நீ போகக்கூடாது. போகவும் விடமாட்டேன். பால் ஊற்றடா... பால் ஊற்று நிகம்பசூதனிக்குப் பால் ஊற்று" என்று உரக்கக் கத்தினாள்.

"செய்கிறேன் தாயே. செய்கிறேன். பதினாறு குடங்கள் பகம்பாவ் உன் தலையில் ஊற்றி அபிஷேகம் செய்கிறேன். உன் கட்டளைப்படி இந்த இடத்தைவிட்டு நான் எங்கும் போக மாட்டேன். இங்குள்ள அத்தனை மக்களையும் இந்தப் பணியில் ஈடுபடுத்துவேன். நீ கட்டுகிற கோயில் என்று எல்லோருக்கும் சொல்வேன். தாயே நிசும்பசூதனி, சோழ குவத்தைக் காப்பாற்றுவேன் என்று வாக்கு கொடு தாயே."

"நான் இருக்கிறேனடா. சோழர்குலம் விளங்க நான் இருக்கிறேன். கண்ணுக்கெட்டிய வரையில்... கண்ணுக்கெட்டிய வரையில் சோழர் கொடி பறந்து கொண்டிருக்கிறது. அதை அகற்றவோ அசைக்கவோ எவராலும் முடியாது. வாழ்க சோழர் குலம். எல்வோரும் முக்கியமடா... எல்லோரும் முக்கியம். அத்தனை பேர் முதுகிலும் பாறை ஏறியிருக்க வேண்டும். அத்தனை பேர் கைகளும் மண்ணைப் பிசைந்திருக்க வேண்டும். ஒருவர்கூட விட்டுவிடக்கூடாது. எல்லோரும் முக்கியம்... எல்லோரும் முக்கியம்." என்று உரக்கக் கத்தினாள்.

அவள் உடம்பு கட்டுக்கடங்காமல் ஆடிக் கொண்டிருந்தது.

கருவூர்த்தேவர் அருகிலிருந்த வீரன் கத்தியைச் சரக்கென்று உருவி, தன் உள்முழங்கையில் கீறி நிலத்தில் ரத்தம் விட்டார் வாளை வீரனிடம் கொடுத்தார்.

"நன்றி தாயே. நன்றி, இதோ கருவூர்த்தேவன் காணிக்கை ஏற்றுக்கொள்." என்று சொன்னார்.

ரத்தம் மாயமாய் மறைந்தது.

அதிகாரிச்சி முத்தான பொன் நங்கை சுருண்டு விழுந்தாள்.

கூட்டம் இன்னும் ஆரவாரித்தது. முன்னேயிருந்தவர் பின்னேயிருந்தவருக்கு என்ன நடந்தது என்று உரத்த குரலில் சொல்ல, பின்னேயிருந்தவர் அவருக்குப் பின்னேயிருந்தவரிடம் விவரிக்க, வெளியே இருந்தவர் மறுபடியும் உள்ளுக்குள் ஓடிவர, மிகப்பெரிய குழப்பம் அங்கு ஏற்பட்டது.

படை வீரர்கள் பொது மக்களைப் பின்னுக்குத் தள்ளினார்கள். கருவூர்த்தேவர் மறுபடியும் கருவறைக்குப் போனார் நிசும்பசூதனியின் பாதத்தில் நெற்றிபட வணங்கினார். எழுந்து நின்றார் நிசும்பசூதனியின் மெல்லிய எலும்பு விரல்களைத் தடவிக் கொடுத்தார்.

"நன்றி. நீ என்ன சொல்கிறாய் என எனக்குப் புரிந்து விட்டது. வருகிறேன்." என்று கைகூப்பினார். வெளியே நடந்தார். கூட்டம் அவருக்கு வழிவிட்டது.

எதிரே இராஜராஜப் பெருந்தச்சர் அவருடைய ஆட்களோடு லேகமாக நடந்து லந்து கொண்டிருந்தார்.

செங்கல் சுடுலது பற்றி குயவர்களுக்கு அவர் விலரித்துக் கொண்டிருக்க, யாருக்கோ அருள் வந்துவிட்டதென்று செய்தி கிடைக்க, அவர் கோவில் நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தார். கருவூர்த் தேவரைப் பார்த்து நின்றார். விழுந்து வணங்கினார்.

"ஏதும் பிரச்சினையா ஐயா." என்று பணிவாகக் கேட்டார்.

"இல்லை. தாயிடம் அருள்வாக்கு தருமாறு கேட்டேன். ஒரு அதிகாரிச்சியின் மீது பரவி தாய் தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்தாள். சகலரும் இதில் ஈடுபட லேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறாள். எல்லோர் கையும் களிமண்ணாக வேண்டும், எல்லோர் முதுகிலும் பாறை ஏறலேண்டும். சோழ தேசத்திலுள்ள அத்தனை பேருக்கும் இதில் பங்கு இருக்க வேண்டுமென்று விரும்புகிறாள். இதைச் செய்ய உன்னால்தான் முடியும். எவரையும் மறுக்காதே. எலருக்கும் வேவை இல்லை யென்று சொல்லாதே. எல்லோரையும் இதில் ஈடுபடுத்துகின்ற விஷயத்தை எப்பொழுதும் கலனத்திவ் வைத்துக்கொள்."

"காரியம் நன்றாக முடியுமா?"

"மிக அற்புதமாக முடியும், சோழக்கொடி கண்ணுக் கெட்டிய வரை பறக்கிறது என்று சொல்கிறாள்."

"கண்ணுக்கெட்டிய லரையில் என்றால்... இன்னும் அதிக நாடுகளை உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் பிடிப்பாரா? மீண்டும் போர் இருக்குமா?" இராஜராஜப் பெருந்தச்சர் வினவினார்.

"அப்படி அர்த்தமல்ல. சந்திர சூரியர்கள் இருக்கும் வரை சோழருடைய புலிக்கொடி பறந்து கொண்டுதான் இருக்கும். காலத்தின் கடைசி லரையில் சோழரின் புலிக்கொடி பறந்து கொண்டிருக்கும். சோழப் புலிக்கொடியை எவராலும் அகற்றவோ, அழிக்கலோ முடியாது என்று அம்மா சொல் கிறாள்."

"மிகுந்த சந்தோஷம். உங்களைப் போன்ற தபஸ்விகள் இருக்கும்பொழுது சோழ தேசத்திற்கு என்ன குறை? வேறு ஏதேனும் கட்டளை உண்டா?"

"ஆமாம். எனக்கு ஒரு கட்டளை போட்டிருக்கிறாள்."

"என்ன அது?"

"இந்தக் கோவில் பணி முடிகிறவரையில் இந்த இடத்தை விட்டு நகரவேண்டாம் என்று உத்தரவு வந்திருக்கிறது."

"ஆஹா, அது நாங்கள் செய்த பாக்கியம்."

"பெருந்தச்சரே, உண்மையாகவே சொல்கிறீர்களா? எனக்கு உங்களுடைய வரைபடங்களில் நிரம்ப சந்தேகம் இருக்கிறது. ஏழு பனை உயரத்திற்கு விமானம் கட்ட எட்டு முழத்திற்கு அஸ்திவாரம் தோண்டியிருக்கிறீர்கள். எப்படி முடியு மென்று எனக்குப் புரியவில்லை. அதற்கு மாதிரி ஏதேனும் செய் திருக்கிறீர்களா. லிங்கப் பிரதிஷ்டை முடித்துவிட்டு விமானம் எழுப்புவீர்களா. விமானம் எழுப்பிவிட்டு லிங்கப் பிரதிஷ்டை நடக்குமா. ஆகம விதிகளைப் பல இடங்களில் மீறி இருக்கிறீர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.

மேலும், இது எந்த வகை வழிபாடு? இன்னும் காபாலிகத் தையும், காளாமுகத்தையும் விட்டு வரவில்லை போலிருக் கிறதே... அரசரோ ஆரிய சைவர்களை அழைத்துவந்து ஆகம விதிப்படி பூஜைகள் செய்து கொண்டிருக்கிறார். அக்னி வளர்த்து ஹோமங்கள் செய்து கொண்டிருக்கிறார். உங்களுடைய சிற்பங்களோ, காபாலிகத்தின் அடிப்படையில் இருக்கின்றன. உக்கிரமான லாள் உருவிய இந்த மூர்த்திகளை எல்லா கோஷ்டத்திலும் வைத்துவிட்டு அதை யார் பராமரிப்பது? எவர் பலிதருவது, காலப்போக்கில், பலிதர மறந்துவிட்டார்கள் என்றால் இந்த சோழ தேசம் என்னாகும்."

"ஐயா, நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? கண்ணுக் கெட்டியவரையில் புலிக்கொடி பரவியிருக்கிறதென்று தாய் சொல்லியிருக்கிறாளே, அதை நீங்கள்தானே அழகாகச் சொன்னீர்கள். காலத்தின் கடைசி வரையில் சோழப் புலிக்கொடி இருக்கும் என்று சொல்கிறீர்கள். பிறகு சோழதேசம் என்னலாகிவிடும் என்ற கவலை எதற்கு? கடவுளின் ஆக்ரோஷ மான ஒரு விஷயத்தைத்தான் நான் கோவிலுக்குள் செய்தியாக வைத்திருக்கிறேன். உள்ளே லிங்க ஸ்தாபிதம் நடந்துவிட்டுத்தான் விமானம் எழுப்பப்படும்.

"அதாவது சிலலிங்கத்தின் தலையில் உங்கள் ஆட்கள் கால் வைத்து ஏறி செதுக்கிக் கொண்டிருப்பார்களா?"

"ஐயா, இது வெறும் பாறைக்கல்" பெருந்தச்சர் கீழே உள்ள பாறையைச் கட்டிக் காட்டினார். "நான் தொட்டு சரிசெய்தால் மூன்று நாளில் இதற்கு ஒரு அழகான லிங்க உருவம் கொடுத்துவிடுவேன். இது பாறையிலிருந்து லிங்கமாக மாறுமே தவிர, ஆகம விதிப்படி ஸ்தாபிதம் செய்து குடமுழுக்கு நடத்திய பிறகுதான் கடவுள் என்ற அந்தஸ்தை அடையும். உங்களுக்குத் தெரியாதது அல்ல. லிங்கஸ்தாபனம் நடந்தாலும் அது லெறும் கல்தான். அதற்கு மருந்திட்டு அசையாமல் வைத்தபிறகு குடமுழுக்கு நடந்த பிறகே அதில் கடவுள் ஆவாஹனம் நடைபெறுகிறது.

அதுவரை கைபடலாம், கால்படலாம். எதுவும் தவறில்லை. ஒரு கோல் (பதினெட்டு அடி) உயரத்திற்கு துவார பாலகர்கள் சிலையை நாங்கள் செய்யப் போகிறோம். அந்தச் சிலையை தள்ளி நின்றா செய்யமுடியும்? தலைமீது ஏறி உட்கார்ந்துதான் செய்யமுடியும். எங்கள் வியர்வையும் தாம்பூல எச்சிலும் சிலைமீது படத்தான் செய்யும். ஆனால் அது தோஷமாகாது."

"அதாவது, உள்ளுக்குள் கொண்டுபோய் ஆவுடையாரை வைத்துவிட்டு மருந்து பூசாமல் லெறுமே தாங்கலாய் வைத்து விட்டு அதற்குப் பிறகு மருந்து பூசி இறுக்க வைப்பாய். அதற்குப் பிறகு குடமுழுக்கு என்று சொல்கிறாய் அல்லலா?

"ஆமாம் ஐயா."

"சரி, நான் மாதிரியைப் பார்க்கவேண்டும். எப்பொழுது லரலாம்?"

"இப்பொழுதே என்னுடனே லாருங்கள்."

இராஜராஜப்பெருந்தச்சனும், கருவூர்த் தேவரும் நடந்தார்கள்.

அதிகாரிச்சி முத்தான பொன் நங்கை மயக்கம் தெளிந்து எழுந்து முகம் துடைத்துக் கொண்டு நிகம்பசூதனி எதிரே கை கூப்பினாள்.

"தாயே எனக்குத் திருமணம் நடக்குமென்றால் பூவை உதிர்த்துவை. இல்லையெனில் லெறுமே சிரித்தபடி இரு. பத்து விரல்களை விரிப்பதற்குள் எனக்கு பதில் சொல்." என்று சொன்னாள்.

மூன்றாவது விரல் விரிக்கும்போது நிசும்ப சூதனியின் நெற்றியிலிருந்து ஒரு ஒற்றை செம்பருத்திப் பூ உருண்டு புரண்டு நிசும்ப சூதனியின் பாதத்தில் வந்து விழுந்தது.

"ஐயா, எனக்கு உத்தரவாகியிருக்கிறது. அந்தப் பூவைக் கொடுங்கள்." முத்தான பெண் நங்கை கை நீட்டிச் சொன்னாள்.

அந்தப் பூ அவளுக்குத் தரப்பட்டது.

103

அரண்மனைக்குப் போகின்ற வழியில் இடது பக்கம் நின்ற மிகப்பெரிய மாளிகைக்குள் பெருந்தச்சர் நுழைய, அங்கு வாசலில் நின்ற இளம் சிற்பிகளும், கூலி ஆட்களும், காவல் ஆட்களும் எழுந்து நின்று கைகூப்பி லணக்கம் தெரிவித்தார்கள். கருவூர்த்தேவரைக் கண்டதும் இடுப்புத் துணியை இறுக்கி காலில் விழுந்து நமஸ்கரித்தார்கள்.

"திருநீறு கொடுங்கள் ஐயா." – ஒரு நடுவயது சிற்பி பணிலோடு கைநீட்ட, திரும்பி தன்னுடைய சீடனை கருவூர்த் தேலர் பார்த்தார். சீடன் கையிலிருந்த பித்தளைச் செம்படத்தைத் திறந்து அவரிடம் நீட்டினான். இடது கையில் செம்படத்தை வைத்து மனதுக்குள் நமச்சிவாய மந்திரத்தைச் சொல்லியபடி, அங்கிருந்தவர்களுக்குத் திருநீறு வழங்கினார்.

பெருந்தச்சர் கிழக்குபார்த்து அவர் காலில் விழுந்து வணங்க, கொத்து விபூதியை எடுத்து, நெற்றி முழுவதும் தடவி கழுத்து, பிடரி, தோள், மார்பு என்று எல்லா இடத்திலும் விபூதியைத் தடவி, 'வாழ்க... வாழ்க... நமச்சிவாயம் வாழ்க. நமச்சிவாயம் வாழ்க' என்று உணர்ச்சி மிகுந்த குரலோடு, பெருந்தச்சர் தலை முழுவதும் திருநீறால் தடவினார்.

தெருவில் போன கூட்டமும், அடுத்தடுத்த வீடுகளில் இருந்தவர்களும் 'கருவூர்த்தேவர் வந்திருக்கிறார்' என்று கேள்விப் பட்டு திருநீறு வழங்குகிறார் என்ற செய்தி பரவி ஓடி வந்தார்கள். முகம் கணங்காமல் எல்லோருக்கும் திருநீறு வழங்கினார்.

மெல்ல மாடியின் படியேறினார். பெருந்தச்சர் கண்காட்ட, மாளிகைவீரர்கள், ஜனங்கள் உள்ளே வராமல் தடுத்தார்கள். அவசியமான சிற்பிகளை மட்டும் உள்ளே விட்டார்கள். இளம் சிற்பிகளையும் போக வேண்டாம் என்று

தடுத்தார்கள். முன்னும், பின்னுமாய் காவலைக் கெட்டிப் படுத்தினார்கள். ஓய்வெடுத்துக் கொண்டிருந்த காவல் வீரர்கள் எல்லோரும் எழுந்து வீட்டைச் சுற்றி நின்று கொண்டார்கள். ஜனங்கள் வெளியே போனதும் தோட்டத்துக் கதவைப் பூட்டிக் கொண்டார்கள். சில நிமிடங்களுக்குள் இது நடந்துவிட்டது.

எந்தக் கோபமும் படாமல், எந்த அதட்டலும் இல்லாமல் வீரர்கள் ஜனங்களை அப்புறப்படுத்துவதை உன்னிப்பாக குருவூர்த்தேவர் பார்த்தார்.

"ஆஹா... அற்புதமான படையை உங்களுக்கென்று வைத்திருக்கிறீர்களே. மிகத் திறமையாக செயல்படுகிறார்கள்." வாய்விட்டு வியந்தார்.

"மிக முக்கியமான வேலையைச் செய்து கொண்டிருக் கிறோம் குருதேவா. அதனால்தான் மிகத் திறமையானவர்களை அருகே வைத்துக் கொண்டிருக்கிறேன்.

இலர்கள் தொண்டை நாட்டைச் சேர்ந்த வீரர்கள். உங்களுக்குத் தெரியுமா குருதேவா...? இவர்கள் அனைவரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். கணிதத்தில் வல்லவர்கள். சிற்பக் கலையில் ஈடுபாடு உள்ளவர்கள். ஆனால் காவல் வேலை செய்கிறார்கள்."

பெருந்தச்சர் சொல்ல குருவூர்த்தேவர், 'அப்படியா... என்பதுபோல் பார்த்தார்.

"இங்கே வேலை செய்கிறவர்கள் எவரும் சிற்பக்கலை பற்றி தெரியாமல் இருக்கக் கூடாது. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குத் தகவல் சொல்ல, இந்தக் காவல் வீரர்களை நான் பயன்படுத்துகிறேன். அப்போது அவர்கள் தெளிவாகவும், திறமையாகவும், தாங்கள் சொல்ல வேண்டிய விஷயத்தை தெரி விக்க வேண்டும். அது மட்டுமல்லாது சிற்பிகள் எப்படி வேலை செய்கிறார்கள், என்ன வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் புரிந்து கொள்ளவேண்டும். சிற்பிகள் கல் உடைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று ஒற்றை வரியில் சொன்னால், அதில் எனக்கு எந்த நன்மையும் இல்லை. எந்தக் கல்லை எப்படி வைத்து, எதற்கு உடைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தவுடனேயே கண்டுபிடித்துவிடக் கூடிய காவல் வீரன் தான் என்னிடம் வேலை செய்யமுடியும்."

குருவூர்த்தேவர் மாளிகைக்குள் வந்ததுமே கால் கழுவ பெரிய தாம்பாளம் வைத்து, அதில் குருவூர்த்தேவரை நிற்க

வைத்து ஒரு சொம்பு ஜவத்தை அவர் காலிவ் ஊற்றி, நன்கு கழுவி, சந்தனக் குங்குமம் இட்டு, மலர்கள் தூவி வீட்டுப் பெண்கள் கைகூப்பி வரவேற்றார்கள்.

"இவர்கள் இருவரும் என் மனைவியர். இது மகள். இது மகன். இது என் மாமியார். இவர்கள் பாட்டி வழி உறவு. இவர் தாய்மாமன். இவர் தாய்மாமனின் மனைவி..."

"பெரும் குடும்பியாய் இருப்பீர் போலிருக்கிறதே. இவர்களுக்கும் சிற்பக்கலை பற்றி ஞானம் உண்டா?"

"இவர்கள் அனைலருமே மீன்குஞ்ககள். நீந்த நான் கற்றுத் தரவிவ்லை."

"என்ன சொல்லுகிறீர்கள் பெருந்தச்சரே. பெண்டிருக்கும் இந்த வேலை தெரியுமோ?"

"வெகு நிச்சயமாகத் தெரியும். தெரிந்தே ஆகவேண்டும். ஒவ்வொரு நாள் விடியலிலும் நாங்கள் வேலை செய்யும் இடத்தை இவர்கள் கத்தம் செய்ய வேண்டும். விளக்குமாறால் சிவையைத் தடவி, கத்தம் செய்து, நீர் ஊற்றி சிறுசிறு துகள்களையும் அகற்றி, கீழே கிடக்கின்ற சிறுசிறு சிவ்லுகளையும் பொறுக்கித் தனியாகக் கொட்டி ஆயுதங்களை எடுத்து வைக்க வேண்டியது இவர்களுடைய வேவை."

"ஆயுதங்களையும் பெண்கள்தான் கத்தம் செய்கிறார் களா... இதற்கென்று இளைஞர்கள் இருப்பார்களே..."

"இல்லை. இரவு நெருங்கும் வரை, கண்ணுக்கு உருவம் தெரியாது மறையும் வரை சிற்பிகள் வேலை செய்வார்கள். இரவு வந்ததும் ஆயுதங்களை அந்த இடத்திலேயே வைத்துவிட்டு நகர்ந்து விடுவார்கள். குளித்து உணவு உண்ண உட்கார்ந்து விடுவார்கள். உடனே அயர்ந்து தூங்கிவிடுலார்கள்.

அயர்ந்து தூங்குகின்ற பெருஞ்சிற்பிகளுக்குக் கைப்பிடித்து விடவும், கால்பிடித்து விடவும்தான் இளைஞர்கள் முயற்சி செய்வார்கள். எனவே சுத்தம் செய்கின்ற வேவையும், ஆயுதங்கள் அடுக்குகின்ற லேலையும் பெண்களுக்கேற்றதாய் போகிறது."

"அட... கால்பிடித்துவிட ஒவ்வொரு சிற்பிக்கும் ஆள் உண்டா?"

"இவ்லையெனில் சிற்பக்கலை கற்றுக் கொள்ள முடியாது. சூடான கல்லில் உட்கார்ந்திருக்கும்போது ஆசனவாய் வழியாய் சூடேறி, நாடி நரம்புகளை மெல்லியதாய் பாதித்திருக்கும். வாயுவைத் தூண்டிவிட்டு முன்னும் பின்னும் அலைய வைக்கும்.

இதனால் கைகுடைச்சலோ, கால் குடைச்சலோ, தலைவலியோ, அடிவயிற்றில் வலியோ சிற்பிகளுக்கு ஏற்படலாம்.

அனேகமாய் கால்மடித்து உட்கார்ந்து வேலை செய்வதால், ரத்த ஓட்டம் சீராக இல்லாமல், கால் குடைச்சல் ஏற்படுவது மிக இயல்பு. எனவே சிற்ப வேலைக்கு வந்த இளைஞன் அழுத்தமாய், கட்டைவிரலாலும், ஆள்காட்டி விரலாலும் ஆடுதசைகளை பிடித்துப் பிடித்து விடுவதை முதலில் கற்க வேண்டும். தசையை கிள்ளாது அழுத்தி அழுத்தி ரத்த ஓட்டம் ஏற்படுத்த வேண்டும். இவ்வளவுதானா உன் விரலுக்கு பலம் என்று படுத்துக் கொண்டிருக்கிற சிற்பி கேட்பார். இளம் சிற்பி ஆடுதசையை இரண்டு விரல்களால் அழுத்தி அழுத்தி நீவி ரத்த ஓட்டத்தைச் சீர் செய்வாள். அந்த சுகத்தில் சிற்பிகள் அயர்ந்து தூங்கிவிடுவார்கள்.

விடியலில் எழுந்து வாய் கொப்பளித்து, உடம்பு கத்தி செய்து கொண்டு, பால் கலந்த நீராகாரம் அருந்தி, லெற்றிவை பாக்கு போட்டுக் கொண்டு சூரியன் உதிப்பதற்கு முன்னால் மறுபடியும் வேலை மீது உட்கார்ந்துவிடுவார்கள். சூரியன் உச்சிக்கு லரும்வரை வேலை செய்வார்கள். மறுபடியும் இருப்பிடம் திரும்பி நன்கு உண்டுவிட்டு மீண்டும் தூங்குவார்கள். இந்தப் பகல் தூக்கம்தான் உண்மையான தூக்கம். மாலையில் எழுந்து கணக்கு வேலைகள் ஆரம்பித்துவிடும். விவாதங்கள் தொடங்கி விடும். புதிதாய் என்ன செய்யலாம் என்று பேச உட்கார்ந்து விடுவோம். வெய்யில் தாழ மறுபடியும் கல்மீது உட்கார்ந்து சுத்தம் செய்யத் துவங்குவார்கள். இதுதான் எங்களுடைய வழக்கமான பணி. உள்ளே வாருங்கள்."

கருவூர்த்தேவரை அழைத்துக் கொண்டு போனார் பெருந்தச்சர். மிகப்பெரிய முற்றம் தெரிந்தது. இரண்டு பக்கமும் அகலமான தாழ்வாரங்கள் இருந்தன. முதல் கட்டத்தை தாண்டி, இரண்டாம் கட்டத்து முற்றத்தின் வலப்பக்கத்து தாழ்வாரத்தில் திரை போட்டு மூடப்பட்டிருந்தது. அவர் கை தட்டியதும் இளம் சிற்பிகள் திரையை விலக்கினார்கள். உள்ளுக்குள்ளே ஒரு மரமாதிரி கோவில் வடிவம் பட்டுச் சால்வையால் மூடப் பட்டிருந்தது.

பெருந்தச்சர் கற்றும் முற்றும் பார்த்துவிட்டு, சில சிற்பிகளை வெளியே போகச் சொன்னார். பெண்களை அடுத்த

கட்டிடத்திற்கு விரட்டினார். நான்கைந்து பேர்கள் மட்டுமே இருக்கும்பொழுது சரி என்று ஒரு இளம் சிற்பியைப் பார்த்துத் தலையசைத்தார். பதினைந்து வயது பையன் பட்டுச் சால்வையை உருவினான்.

நல்ல தேக்குமரத்தில் கோயில் மாதிரி வடிவம் மிக நேர்த்தியாகச் செய்யப்பட்டிருந்தது. ஒரு மேடையில் மாதிரி வடிவம் வைக்கப்பட்டிருந்தது. மூன்று முழ உயரத்திற்குக் கட்டடம் இருந்தது. கீழே கண்டுவிரல் நகத்தின் உயரத்தின் அளவு ஒரு மனித பொம்மை வைக்கப்பட்டிருந்தது.-மனித பொம்மையின் உயரத்தை வைத்து, கட்டடத்தின் உயரத்தைப் பார்க்கையில், கட்டடம் மிகப் பிரம்மாண்டமானது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

யானை, குதிரை, ஒட்டகம், பனைமரம், தென்னைமரம் போன்ற உருவங்களும் மரத்தில் செய்து அருகே வைக்கப் பட்டிருந்தன. அவற்றின் மூலமாகக் கோயிலின் நீளமும், அகலமும், உயரமும் தெரிந்தது. சுவர் முழுவதும் மரச்சட்டம் அடித்து, மரச்சட்டம் முழுவதும் ஆணி அடித்து திரைச்சீலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மறுபடியும் தலையசைக்க, அந்தத் திரைச்சீலைகளைப் பரபரவென்று இளம் சிற்பிகள் பிரித்தார்கள்.

எல்லாத் திரைச் சீவையிலும் கோயிலின் குறுக்கு வெட்டுத் தோற்றமும், நெடுக்கு வெட்டுத் தோற்றமும், வரை படமாக வரையப்பட்டிருந்தன. எதற்கும் ஆடாத கருவூர்த் தேவரே இந்த ஏற்பாடுகள் பார்த்துவிட்டு சற்று ஆடிப்போனார்.

"பெருந்தச்சரே... முழு பலத்தோடு இருக்கிறீர்கள் என்று புரிந்து கொண்டேன்'' என்று வலதுகையைத் தூக்கி பெருந்தச்சரின் உச்சியில் வைத்தார்.

"உங்கள் ஆசி. சிவபெருமான் கருணை. மன்னரின் அன்பு. என்னால் இயன்றதைச் செய்து கொண்டிருக்கிறேன்" என்றார்.

"ஒரு கட்டிடம் கட்டும்போது, அந்தக் கட்டிடத்தின் பவ்லேறு கணக்குகள், உயரம், அகலம் போன்றவைகள், தடுப்புச் சுவர்கள் எல்லாமுமே கட்டிடக் கலைஞரின் மனதுக்குள் இருக்கும். வரைபடம் வரைந்து கட்டுவது என்பது வெகுசிலரே செய்வார்கள். அங்குவம் அங்குலமாக ஒவ்வொருவருக்கும் தன்னுடைய சிற்பம் எப்படி இருக்க வேண்டுமென்றும், ஒவ்வொரு கோஷ்டமும் எப்படி இருக்க வேண்டுமென்றும் விவரித்திருக்கிறேன்."

"மொத்தம் எத்தனை திரைச்சீலைகள்?"

"ஆறாயிரத்து முன்னூற்றி நாற்பத்தேழு திரைச்சீலைகள் அத்தனையும் கோவில் பற்றிய படங்கள்."

"இத்தனை தெளிவாய் இதை செய்யவேண்டுமென்று உமக்கு யார் சொன்னது."

"உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர்"

"ஏன் அப்படிச் சொன்னார்?" கருவூர்த்தேவர் கூர்மையாக பெருந்தச்சரைப் பார்த்தபடி கேட்டார்.

பெருந்தச்சர் பதில் சொல்லத் தயங்கினார்.

"சொல்லுங்கள். ஏன் இத்தனை படங்கள். இது பழக்க மில்லையே. எதற்காக எல்லாப் படங்களும் வரையச் சொன்னார்?"

"உங்களிடம் சொல்வதற்கென்ன... மன்னர் என்னைத் தனியே அழைத்துப் போய், 'இந்தக் கோயில் கட்டி முடிப்பதற் குள் நான் இறந்தாலும், அல்லது நீ இறந்தாலும் இந்தக் கோயில் கட்டி முடிக்கப்பட வேண்டும். எதன் பொருட்டும் இந்தக் கோயில் கட்டுமானப் பணி நின்று விடக்கூடாது' என்று சொன்னார்."

மெல்லிய மாறுதல்கள் கருவூர்த்தேவர் முகத்தில் ஏற்பட்டன.

"அப்படியானால்... கோயில் கட்டி முடிப்பதற்குள் இறந்து விடுவோம் என்று மன்னர் ஸ்ரீ இராஜராஜத்தேவர் நினைக்கிறாரா?"

"அப்படி நான் அர்த்தம் கொள்ளவில்லை. அசம்பாவிதம் ஏதும் நிகழ்ந்துவிடக் கூடாது. நிகழ்ந்தாலும், கோயில் பணி நின்றுவிடக் கூடாது என்பதில் மிக மிகக் கவனமாக இருக்கிறார்."

"உங்கள் மன்னருக்கு எதுவும் நிகழாது. மன்னர் பலகாலம் நீடுழி வாழ்வார். மன்னர் மட்டுமல்ல பெருந்தச்சரே, மன்னருக்குப் பிறகு நீயும் நெடுநாள் வாழ்வாய். இதேபோல் இன்னொரு கோயில் கட்டுவாய்"

"நான் இன்னொரு கோயில் கட்டுவது ஒரு பக்கம் இருக்கட்டும் குருதேவா. இந்தக் கோயில் நல்லபடியாக முடிய வேண்டும் என்று ஆசீர்வாதம் செய்யுங்கள். இங்கு மனிதர் எவரும் முக்கியமில்லை. இனறபணி முக்கியம். இந்தத் தஞ்னசப் பிரகதீஸ்வரர் கோயிவ் எந்தக் குறையுமின்றி நல்லபடியாய் கட்டி

முடிக்கப்பட வேண்டுமென்று உங்கள் காலில் விழுந்து பிரார்த்தனை செய்து கொள்கிறேன்." – நெடுஞ்சாண் கிடையாக பெருந்தச்சர் விழுந்தார். அவர் விழுந்ததும், அவருடைய சீடப் பிள்ளைகளும் விழுந்தார்கள்.

"இறைவன் திருவுள்ளப்படிதான் எல்லாமும் நடக்கிறது. தொடர்ந்து இறைவன் இதை நடத்தி வைப்பார். கவலை வேண்டாம். இது பற்றி ஒரு கேள்வி இருக்கிறது..."

"கேளுங்கள் குருதேவா. எனக்குத் தெரிந்த விதத்தில் நான் உங்களுக்கு விளக்கிச் சொல்கிறேன்."

"கிட்டத்தட்ட பதினோரு கோல் (ஒருகோல் 18 அடி) உயரம் விமானத்துக்கு, அரைக்கோவ் ஆழத்தில்தான் அஸ்திவாரம் அமைத்திருக்கிறோம். தாங்குமா... கற்பாறைகளை எட்டடி ஆழ அஸ்திவாரத்தில் நிற்க வைப்பது சரியாக வருமா."

''பதினாறாம் திரைச்சீலையை பிரித்து வை.'' – பெருந்தச்சர் கட்டளையிட்டார்.

ஒரு திரைச்சீலை ஆணியிலிருந்து எடுக்கப்பட்டு, தரையில் விரிக்கப்பட்டது. சிறிய முக்காலிகள் சுற்றிப் போடப்பட்டன.

''நான் அஸ்திவாரத்தினுடைய பவத்தில் இந்த விமானத்தை கட்டவில்லை. வெகு ஆழத்திற்கு இந்த பூமியிவ், இந்த இடத்தில் அஸ்திவாரம் தோண்டவும் முடியாது. இது செம்மண். செம்பாறைகள் நிறைந்த பூமி. எண்ணெயில் பொரிந்த திண்பண்டம் போல பொரிந்த தோற்றத்துடன், மழைநீரை உள்ளுக்கு விடாது செம்மண் பாறைகள் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட ஆழத்திற்குப் பிறகு இந்த இடம் முழுவதும் பரவிக் கிடக்கின்றன. கோவில் கட்ட இதைவிட, ஒரு அற்புதமான இடம் எதுவுமில்லை. தஞ்சையைச் சுற்றி பல இடங்களில் வண்டல் பூமி.

எவ்வளவு ஆழம் போனாலும், களிமண்ணாகத்தான் இருக்கிறது. சற்று வெள்ளைக் களிமண்ணாக இருக்கிறது. ஆனால், இந்த இடத்திவ் அரைக்கோவ் ஆழத்திற்குக் கீழே போகவே முடியாது. நீர் ஊற்றினால், நீர் அப்படியே தேங்கி நிற்கிறது. ஒரு விரல் அகலத்திற்குக்கூட நீர் உள்ளே இறங்க வில்லை. பக்கவாட்டில் நீர் பரவுகிறதே தவிர, பூமிக்குக் கீழே போகவில்லை. ஆக, இந்த செம்மண் பூமி, செம்பாறை நிறைந்த கடினமான பூமி. இந்தப் பூமி எத்தனை கனத்தையும் தாங்கும். எவ்வளவு பாறைகளையும் ஏற்கும்.

இம்மாதிரிப் பாறைகள் தெற்கே போகப் போக அதிகம் கிடைக்கின்றன. இந்த பூமியில் அரைக்கோல் ஆழத்திற்குப் பிறகு உறுதியான பாறைகள் இருப்பதால், அந்த இடம் வரை தோண்டி விட்டு நவ்ல கருங்கற்களை உள்ளே அடுக்கி, மேலே எழுப்பி - பூமிக்கு மேலே, பூமியிலிருந்து தோண்டிய செம்பாறை களை னவத்து அதேபோல, ஒரு கோல் இடைவெளிவிட்டு இன்னொரு பாறைச் கவர் கட்டுகிறோம். அதாவது ஒரு கோல் இடைவெளியில் இரண்டு பாறைச்கவர்கள். ஒல்வொரு பானறயின் அகலமும் ஒன்றரை முழங்கை.

இரண்டு கவர்கள் எழுப்பிய பின்னர், அந்த இரண்டு கவர்களுக்கு நடுவே செங்கல்லை, களிமண்ணை, உடைந்த உதிரிப்பாறைகளை, வெறும் கற்களை, கூழாங்கற்களை, ஆற்று மணலைப் போட்டு நிரப்பி, தண்ணீர் ஊற்றி கெட்டித்து விடு கிறேன். அதாவது, இரண்டு பாறைகளுக்கு நடுவே மண்போட்டு எழுப்பிய கவர், கிட்டத்தட்ட ஒன்றரைக் கோவ் அகலத்திற்கு உங்களுக்குக் கிடைக்கிறது.

ஒன்றரைக் கோல் அகலமுள்ள செல்லக லடிலாய் கட்டப் பட்ட ஒரு கவர்மீதுதான் விமானம் பலகை பலகையாய் அடுக்கி வைக்கப்படும். விமானத்தின் கனம் மொத்தமும் இந்த செவ்லக கலர் தாங்கும். மறுபடியும் சொல்கிறேன். வெறும் கவரல்ல. இரண்டு பாறைச் கவர்களுக்கு நடுவே கெட்டிப்படுத்தப்பட்ட ஒரு கவர். அதிலிருந்து இன்னமும் எத்தனை உயரம் வேண்டுமானாலும் எழுப்பலாம். ஆழ்ந்து அஸ்திவாரம் தோண்டுவதைவிட, அகலமாய் அஸ்திவாரம் செய்து கடின மான பூமியில் நிற்க வைத்திருக்கிறேன். அதன் மேல் பலகைக் கற்களால் விமானம் எழுப்புகிறேன்.

பத்து முழம் நீளமுள்ள பலனகக் கல். இரண்டு சாண் விட்டு அடுக்கப்படும். அதாவது கவர் மீது பத்து முழம் முதல் பலகைக்கல் வைத்தால், அடுத்த பத்து முழ பலகைக்கல் முதலில் வைத்த பலகை விளிம்பிலிருந்து இரண்டு சாண் தள்ளி வைக்கப்படும்.

அதாவது அந்தப் பலகை கருவறைக்குள்ளே இரண்டு உள் ளங்கை அளவு நீண்டிருக்கும். இப்படி அடுக்கப்பட்ட பலனகக் கற்கள் உள்ளுக்குள் பாத்திரத்தைக் கவிழ்த்து வைத்ததுபோல, கூம் பான ஒரு மண் சட்டியைக் கவிழ்த்து னவத்ததுபோல தெரியும்.

அந்தப் பலகைக்கல் எவ்வளவு இருக்கவேண்டும். அந்தப் பலனகக்கல் விளிம்பிவ் என்ன உருவம் வரும். என்ன பொம்மை

வரும் என்பதெல்லாம் ஒவ்வொரு வரைபடத்திலும் மிகத் தெளிவாக எழுதப்பட்டுவிட்டது. கல்தச்சர்களுக்குத் திரைச்சீலைகள் கொடுக்கப்பட்டுவிடும். எந்தக் கேள்வியும் கேட்காமல், அவர்களுக்கு என்ன திரைச்சீலை தரப்பட்டதோ, அந்த திரைச்சீலையிலுள்ள வடிவத்தின்படி, ஒருநூல்கூட வித்தியாசம் இல்லாமல், அவர்கள் செதுக்கவேண்டும். பொம்மைகள் மீது மிக கவனமாக இருக்கவேண்டும். அப்படிச் செதுக்கப்பட்ட பலகைகளுக்குத் திரைசீலைகளின் எண்ணிக்கை தரப்படும். அந்தப் பலகைக்கற்கள் குறிப்பிட்ட இடத்திற்கு வரவேண்டும். குறிப்பிட்ட திசையில் சாரம் கட்டி ஏற்றவேண்டும். குறிப்பிட்ட விதமாக அடுக்கவேண்டும்.

இங்கே கல்தச்சர்கள் மூன்று விதமாகப் பிரித்திருக்கிறார்கள். ஒன்று, கல்லில் செதுக்குபவர்கள். இரண்டு, கொண்டு போய் கோவிலுக்கருகே சரியான இடத்தில் செதுக்குகிற பாறையை இறக்குபவர்கள். மூன்றாவது கல்தச்சர் அவைகளைச் சாரம் கட்டி ராட்டினம் கட்டப்பட்ட கயிறு மூலமாய் மேலே இழுத்து, சரியான இடத்தில் பொருந்தக்கூடியவர்கள். இவர்களுக்கு வேலை மாற்றம் எதுவும் கிடையாது. எந்தக் கல் எங்கு இருக்கவேண்டுமென்று மூன்றாமவர் சொல்ல, அந்தக் கல்லைக் கொண்டுவந்து கொடுப்பது இரண்டாமவர் பொறுப்பு. அந்தக் கல்லைச் செய்வது ஒன்றாமவர் வேலை."

"எத்தனை சிற்பிகள் இருக்கிறார்கள்?" கருவூர்த்தேவர் கேட்டார்.

"இப்போதைக்கு அறுநூறு பேர் குடும்பத்தாரோடு கணக்கிட்டால் ஆயிரத்து நானூறு."

"இன்னும் எத்தனை பேர் வேண்டும்?"

"அதாவது ஆயிரத்து எண்ணூறு சிற்பிகள் வேண்டுமா?"

"ஆமாம். சிற்பிகள் ஆயிரத்து எண்ணூறும், அவர்களுக்குச் சேவகம் செய்ய ஒரு இருநூறு பேரும் வேண்டும்."

கருவூர்த்தேவர் மெல்ல கவலைப்பட்டார்.

104

"என்ன சேவகம்?" – கருவூர்த்தேவர் இராஜராஜப் பெருந்தச்சரைப் பார்த்துக் கேட்டார்.

"வீரர்களுக்குக் கொடுப்பதுபோல் உணவு சிற்பிகளுக்குக் கொடுக்க முடியாது. சிற்பிகள் அதிகாலையில் வேலைக்கு வந்து விடுவதால் இரவே உணவு தயாரித்து, சூடாகவோ, குளுமையாகவோ இரண்டு விதமான உணவுகள் அவர்களுக்குக் காலையில் தரப்பட வேண்டும். நடுநடுவே குடிக்க மோர், பால், பழச்சாறுகள் என்று பல்வேறு விதமான விஷயங்கள் நடந்து கொண்டிருக்க வேண்டும். பானகம் தரப்பட வேண்டும். கக்கு தட்டிப் போட்ட வேம்பு ரசம் தரப்படவேண்டும். பிற்பகல் சாப்பாடு. அவர்கள் தூங்கும் போது விசிறுவதற்கு ஆட்கள் என்று ஒரு நல்ல கும்பல் வேண்டும். மிகப் பணிவான கும்பல் வேண்டும். இதைவிட முக்கியமான வேலை..."

"என்ன?"

"சிற்பிகள் எவரும் கல் தூக்க மாட்டார்கள். கல் தூக்க கூலியாட்கள் வேண்டும். கல் தூக்குவது எளிதான காரியமல்வ. ஒருவாரம் சிரமப்பட்டு ஒரு சிற்பி செய்த பலகையைத் தூக்கத் தெரியாமல் தூக்கி, எங்கேனும் மோதி உடைத்துவிடலாம். அது சிற்பிக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கும். எனவே விலரம், தெரிந்த, மிக நிதானமான கூலியாட்கள் எங்களுக்குத் தரப்படவேண்டும். கூலியாட்களை நாங்களே தேர்வு செய்து கொள்கின்ற உரிமை எங்களுக்கு இருப்பின் நல்லது."

"ஏன் இத்தனை கடுமையாக இருக்கிறீர்கள்? கொடுத்த வேலைக்காரர்களை வைத்துக் கொண்டு வேலை செய்யவாமே."

"இல்லை. ஒருமுறை எங்கேனும் சச்சரவு வந்துவிட்டால் சிற்பிகளின் கவனம் சிதறிப் போகும். ஒரு நூல்கூடப் பிசகாமல் செய்ய வேண்டிய மிகவும் மகத்தான, நுணுக்கமான பணி. எந்த வம்பும், வழக்கும், எந்தச் சிரமமும் சிற்பிகளுக்குத் தரக்கூடாது. அதையும் தவிர..." பெருந்தச்சர் நிறுத்தினார்.

"சொல்லுங்கள், என்ன வேண்டும்?"

"நாள் தவறாது தேவரடியார்களின் பாட்டும், ஆட்டமும், நாட்டியமும், நாடகமும் இருப்பது நல்லது. சிற்பிகள் தூங்கப் போவதற்கு முன்பு சந்தோஷமாக தூங்கப் போவது அவர்கள் வேலையை எளிதாக்கும்."

"இதெவ்லாம் மன்னருக்குச் சொல்லப்பட்டிருக்கிறதா?"

"ஒரு மாதிரி சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாவ் மன்னருக்குப் புரிந்ததாகத் தெரியவில்லை."

"வேறு யாரிடம் சொல்லியிருக்கிறீர்கள்?"

"ஒரு கட்டு ஓலைச் சுவடியில் என் தேவையெல்லாம் எழுதி கிருஷ்ணன் ராமனான பிரம்மராயருக்கு கொடுத்திருக்கிறேன். ஆனால்..."

"என்ன ஆனால்..."

"அந்த ஓலைக்கட்டு பிரிக்கப்படக்கூட இல்லையென்று என்னுடைய ஆட்கள் சொல்கிறார்கள்."

"உங்கள் ஆட்கள் என்றால்... ஒற்றர்களா?" லேசாய் கருவூர்த் தேவர் குரலில் சூடு இருந்தது.

"இல்லை. பிரம்மராயர் எப்பொழுது கூப்பிட்டாலும் எனக்கு உடனே தகவல் தெரிவிக்க வேண்டுமென்று அங்கு ஒரு ஆளை நிறுத்தி வைத்திருக்கிறேன்."

கருவூர்த்தேவர் மெல்ல அந்த மாளிகையை விட்டு வெளியே வந்தார்.

பெருந்தச்சரின் ஏற்பாடுகள், அலருக்குச் சந்தோஷத்தையும் கொடுத்தன. கலலையையும் அளித்தன.

கெட்டியான பூமி. குறைவான அடி ஆழம். ஆனால் அகலமான அஸ்திலாரம். அதன் மீது பலகைக் கற்களைப் போட்டுப் போட்டு, ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கி அடுக்கி விமானம் எழுப்பப்பட வேண்டும்.

பலகைக் கற்கள் கீழே சரியாக பொருந்தும்படி இருக்க, நழுலாமல் இருக்க உச்சியில் நல்ல தடிமனான ஒரு முழு பலகைக்கல். அதன் மீது எட்டு நந்திகள். அதன் மீது முழுவது மாய் ஒரு பெரும்பாறை. அதன்மீது கலசம். ஆள் உயர நந்திகள் எட்டை சரியாக அடுக்கி வைப்பதால், பலகையினுடைய அழுத்தம் மற்ற பலகையின் மீது பரவி அசையாமல் நிற்கலைக்கும். என்ன காற்று அடித்தாலும் கல் நகராது. விமானம் பட்டையாக இல்லாமல், பல்லேறு முனைகள் நீட்டியபடி இருக்கிறது. இதனால் காற்று கிழிந்து வெவ்வேறு திசைக்குப் போகுமே தவிர முழு பலத்தோடு விமானத்தைத் தாக்காது.

கட்டடக் குறிப்புகளெல்வாம் அற்புதம். எல்லாக் கணக்குகளும் மிகச் சரி. ஆனாவ், இவ்வளவு கற்களை எங்கிருந்து கொண்டு வருவார்கள்? எத்தனைபேர் கொண்டு வருவார்கள்? திருலக்கரைக் கற்கள் கிற்பங்கள் செய்வதற்கு அற்புதமானலை. அந்த நீலநிறக் கற்களைவிட திரிசீரபுரத்திலிருந்தும், பாண்டிய தேசத்திலிருந்தும் கொண்டு வரும் கற்கள்தான் கட்டடம் கட்டுவதற்கு வலுவானவை.

திருவக்கரையிலிருந்து கருங்கல் கொண்டு வருவதில் ஒரு பிரச்சினை இருக்கிறது. நடுவே பல ஆறுகள். ஆனால் பாண்டிய தேசத்திலிருந்து இங்கே வருவதற்கு அந்த மாதிரிப் பிரச்சினைகள் ஏதுமில்லை. பல சக்கரங்கள் கொண்ட மிக நீண்ட வண்டியில், எருதுகளையும், யானைகளையும் வைத்து இழுத்து லந்து விடலாம். எருதுகளை இழுக்கச் சொல்லி யானைகளைத் தள்ளச் சொல்லி பாறைகள் கொண்டு லந்து விடலாம்.

ஆனால், பாறைகள் கமந்து கொண்டு லரும் அளவுக்கு, யானைகள் நடந்து போகும் அளவுக்கு உறுதியான பாதைகள் இருக்குமா?

கருவூர்த்தேவர் யோசித்தார். யோசித்தவுடனே சிரித்தார்.

பாதைகள் போடப்பட வேண்டும். எங்கெல்லாம் கற்கள் இருக்கிறதோ, அங்கெல்லாம் பல கிளைகளாகப் பாதைகள் பிரியும். யானைகள் நடக்கும். வண்டிகள் போகும். மனிதர்கள் நகருவார்கள். காடழித்து நாடாக்குவது என்பது பாதைகள் போட்ட பிறகு மிக எளிதாக நடக்கும். கிராமங்கள் செழிப்புறும். சோழ தேசத்தின் கரங்கள் குமரிமுனைவரை நீளும். பாண்டிய தேசத்தின் ஒரு சிறிய வாலாட்டம்கூட இவ்லாமவ் அவர்களை அடக்கி வைக்கவும், அங்கிருந்து சேர தேசம் போகவும் பாதைகள் வெகு சீக்கிரம் உருவாகிவிடும்.

இது வெறும் கோயில் கட்டுவது மட்டுமல்வ. சோழ மண்டலத்தைப் பலமாக்குவது. சோழ மண்டலம் விரிந்து பரந்து கிடப்பதை ஒரே கொடிக்குக் கீழ் கொண்டு வருவது. பாண்டியரோ, சேரரோ மறுபடியும் தாக்க முடியாமவ் அவர்களைக் காலா காவத்திற்குக் கீழே லைத்திருப்பது. தெற்குப் பக்கம் பலமாகிவிட்டால், வடக்கே சாளுக்கியர்களையும், கங்கர்களையும் வழிக்குக் கொண்டு வந்து பாரதத்தின் தென்பகுதியை மிகப்பலமான ஒரு தேசமாக, ஒரே கூட்டமாக செய்து விடுவது. நூறு நூற்று ஐம்பது வருடத்திவ் இது முடித்துவிடும். முடியத்தான் வேண்டும்.

வடக்கே வெகு தூரத்தில் இமயமலை அடிவாரத்தில் யவனர்கள் வந்துவிட்டார்களாம். கோயில்களை இடிக்கிற யவனர்களாம். கோயில்களை இடிக்கிற யலனர்கள், கொள்ளையடிக்கிற யவனர்கள், இரவு நேரம் பதுங்கியிருந்து தாக்கி ஊரை அழிக்கின்ற யவனர்கள் தெற்கு நோக்கியும்

வரக்கூடும். இன்றில்லையெனில் நாளை, நாளையில்லையெனில் நாலு வருடம் கழித்து, இருநூறு வருடம் கழித்து, முன்னூறு, முன்னூற்றி ஐம்பது வருடம் கழித்து அலை அலையாக வந்து இங்குள்ள செல்வங்களையும் அழித்துப்போக நேரிடும். அதற்கு முன் இந்த இடம் பலமாகிவிட வேண்டும்.

மதத்தாவோ, கோயிலாலோ, மொழியாலோ அல்லது வேறு எந்த கலாச்சாரத்தாலோ பாரதத்தின் இந்தத் தென்பகுதி ஒற்றுமையாகிவிட வேண்டும். சிறு சிறு குழுவாகப் பிரிந்திருப்பது என்பதை அறவே கைவிட்டுவிட வேண்டும்.

தொண்டை நாட்டிலிருந்து படித்த வீரர்களைக் கொண்டு வந்திருக்கிறேன் என்று இந்தக் கல்தச்சன் சொல்கிறான். அலர்களும் கர்வம் மிக்கவர்களாக இருக்கிறார்கள். இந்தத் தொண்டை நாட்டு வீரர்களைப் பாண்டிய தேசத்துக்கு அனுப்பினால், பாண்டியர்களை அவர்கள் இழிவாக நடத்துவார்கள். இந்த அவட்டவ்கள் ஓயவேண்டும்.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் செய்லது அற்புதமான காரியம். ஒரேயொரு சாக்கு வைத்து எல்லோரையும் ஒன்றாக்க முயற்சி செய்கிறார். கங்கர்களை, ராஷ்டிரகூடர்களை, சாளுக்கியர்களை, கோயிலின் பொருட்டு நெருக்கமாகச் சேர்க்கிறார். ஸ்ரீ இராஜராஜர் முயற்சி செய்தால் போதுமா. அவர்கள் முன்னுக்கு வரவேண்டாமா. வேறு யாராவது அவர்களை இந்த மையம் நோக்கி நகர்த்த வேண்டாமா. இதற்கு எந்த இடைஞ்சலும் இல்லாமல் இந்தக் காரியம் நிறைவேற வேண்டாமா. வேறு என்ன உதவிகள் செய்வது. வேறு எப்படி இங்கு கட்டுக்கோப்புகள் கொண்டு வருவது.

கருவூர்த்தேவர் ஆழ்ந்து யோசித்தார்.

பேசிப் புண்ணியமில்லை. விவாதம் செய்து விளக்க முடியாது. ஆடலும், பாடலும், கூத்தும், நகைச்சுவையும் இதற்கு உதவி செய்யும்.

பரத கண்டத்தின் தெற்குப் பக்கம் வைணவர்கள் மிகக் குறைவு. சைவர்கள் அதிகம். வைணவத்தை எதிர்க்காமல், சைவத்தைப் பற்றிப் பேசவேண்டும். நாட்டியம் போல ஆடச்சொல்லவேண்டும். நாடகம் போடச் சொல்ல வேண்டும். இங்குள்ள புவவர்களைவிட்டு சிறிய பாடல்கள் எழுதச் சொல்ல வேண்டும். எல்வோருக்கும் திருநீறு கொடுக்கவேண்டும். குறிப்பாய் சாளுக்கிய தேசத்திலிருந்தும், ரெட்டபாடியிலிருந்தும்,

கங்க தேசத்திலிருந்தும் வந்த வீரர்களை அமைதிப்படுத்த வேண்டும்.

ஜெயித்தோம் என்று அலட்டிக் கொண்டிருக்கிற சோழ வீரர்கள் ஒரு பக்கம். மிகப்பெரிய கல் கட்டடம் கட்டப் போகிறோம் என்று இறுமாந்திருக்கிற கவ் தச்சர்கள் ஒரு பக்கம். வெவ்வேறு தேசத்திலிருந்து ஆட, அதை மன்னர் பார்க்க, மன்னர் பணி செய்ய அழைத்திருக்கிறார்கள் என்று கர்வமாக வந்திருக்கின்ற தலைக்கோலிகள் என்ற ஆடவ் மகளிர் ஒரு பக்கம். அடிமை வீரர்கள் ஒரு பக்கம்.

நான்கைந்து குழுக்களாய் இந்த இடம் பிரிந்து கிடக்கிறது. இவர்களை ஒன்றாக்க வேண்டும். இவர்களுக்குள் எந்தப் பிரச்சினையுமில்லாமவ் சுமுகமாகப் போக சொல்லித்தர வேண்டும், உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருக்கு இதைப் பற்றி விளக்க வேண்டும். பிரம்மராயர் மகன் அருண்மொழிப் பட்டனுக்கு இதைக் குறிப்பிட்டுக் காட்டவேண்டும். குந்தவைக்கும், வந்தியத்தேவருக்கும் சொவ்ல வேண்டும். இந்த இணக்கம் அற்றுப் போனால், கோவில் வேலை சிரமமாக இருக்கும் என்று விளக்க வேண்டும்.

கோவில் வேலை முடியுமா என்பதற்கு, முடியும் என்று மனதிலிருந்து வார்த்தைகள் வந்து கல்தச்சரை ஆசிர்வாதம் செய்துவிட்டோம். கோவிவ் வேவை முடியுமா...?

மெல்ல விடைபெற்று மாளிகையிலிருந்து கீழே இறங்கி மறுபடியும் கோயில் கட்ட இருக்கின்ற புல்வெளி நோக்கிப் போய் அங்கு அமைதியாக நின்றார்.

வலப்பக்கம் குளக்கரைக்கு அருகேயுள்ள தென்னந் தோப்பிலிருந்து பெரிய ஆடற்பாடல் ஆரவாரம் கேட்டது. இடது பக்கத்திலிருந்து சிற்றுளிகள் இடைவிடாது ஒலிப்பது கேட்டது. கிழக்குப் பக்கத்திலிருந்து பெண்கள் குரலும், குழந்தைகள் குரலும், வாசனைப் புகையும் தேவரடியார்களின் வீட்டிலிருந்து வருவது தெரிந்தது. சமையல் நடந்து கொண்டிருக்கிற வாசனையும் தெரிந்தது.

வடக்கே சோழ வீரர்கள் குதிரைகளோடு அலைந்து கொண்டிருந்தார்கள். அடர்த்தியாய் மரங்களடர்ந்த இடம் அங்கிருந்த தஞ்சையைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தது.

நான்கு திக்கிலும் நான்கு விதமான குழுக்கள் இருக்கின்றன. இவை நான்கும் ஒன்றிணைந்து இந்த மேட்டிற்குள் நின்று விரற்கடை விரற்கடையாய் கோயில் எழுப்ப வேண்டும்.

இடையறாத பணி நடந்தாவ்தான் நான்கு அல்லது ஐந்து வருடத்திற்குள் அந்த மாதிரி விமானம் கட்டி முடிக்கப்படும். இவர்களை ஒன்றிணைக்கின்ற வேலையை மன்னரும், தேவரடியாரும் செய்ய வேண்டும். தேவரடியார்களைப் பார்ப்பதற்கு முன்பு, இந்த சாளுக்கிய வீரர்கள், கங்க வீரர்கள், பிடித்து வரப்பட்ட ராஷ்டிரகூட வீரர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று பார்த்துவிடவாம்.

மெல்ல மேற்கு நோக்கி கருவூர்த்தேவர் நடந்தார்.

இறைவனுடைய திருவிளையாடல் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்லொரு விதமாக இருக்கிறது. இந்த பரத கண்டத்தை மொழியால் இணைத்த இறைவன், இப்பொழுது க்ஷத்திரியர்களுடைய பலத்தால் ஒருங்கிணைக்கத் தீர்மானித்திருக்கிறான்.

இராஜராஜன் என்கிற மகத்தான ஒரு படைப்பை பூமிக்கு அனுப்பி அவன் மூலம் மிகச் சிறந்த ஒரு கலாச்சாரத்தை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறான். வடமொழி, தேசத்தின் குமரி முனையிலிருந்து, இமயமலைவரை பரவி ஒன்றாய், இறுக்காமய் கட்டிப்போட்டு இது ஒரே தேசம் என்று சொல்ல வைத்தது. அதேபோல நல்ல குணமுள்ள க்ஷத்திரியர்கள் வடக்கிலிருந்து தெற்கு வரை நகர்ந்து பரத கண்டம் ஒன்று என்று நிரூபித்திருக்கிறார்கள்.

ராமர் இலங்கைக்கு வந்தது, ராவணனைக் கொல்லுவதற்கு அல்ல. சீனதயை மீட்பதற்கு அல்வ. இவையெல்லாம் சாக்கு.

தெற்குப்பக்கம் அரக்கர் கூட்டம் அதிகமாகிவிட்டது. தர்மத்திற்கு எதிரான வேவைகள் நடக்கின்றன. மாற்றான் மனைவியை அபகரிப்பது இடையறாது நடந்து கொண்டிருக்கிறது. பெண்கள் அவஸ்தைப்படுகிறார்கள் என்று தெரிந்து ராமன் என்கிற க்ஷத்திரியன், வில்லுக்கு நாணேற்றி தம்பியுடன் தர்மத்துடன் தெற்கு வரை வந்து வெற்றிவாகை சூடிவிட்டுப் போனான்.

அதேபோல இராஜராஜனுக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆனாவ் இராஜராஜன் இந்த வாய்ப்பனபத் திசை திருப்பிவிட்டான். வடக்கே வெகு தூரம் போக வேண்டிய பனடயெடுப்பைச் கருக்கிக் கொண்டு, அவன் வாழ்ந்த பூமியில் காலாகாலத்திற்கு எல்லா பகுதி ஜனங்களும் வந்து பார்க்கும்படியாய் ஒரு அற்புதக் கவையை நிறுவியிருக்கிறான்.

இராஜராஜன் நினைத்திருந்தால், இமயமலை வரைபோய் தொட்டுவிட்டு திரும்பியிருக்கவாம். அத்தனை படைகளோடும் வடக்கே போய் பல மன்னர்களை ஜெயித்திருக்கலாம்.

இராஜராஜனுக்குள் ஏதோ மனமாற்றம். போர் வேண்டாம் என்கிற ஒரு அலுப்பு. கைகால் வெட்டப்பட்டு துடிப்பதும், அலர் சரித்து விழுவதும், நெஞ்சு குத்துப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடப்பதும் அவனுக்கு அருவருப்பைக் கொடுத்துவிட்டன.

ஒரு உயிரை தனக்குக் கொல்ல உரிமையில்லை என்கிற எண்ணம் வந்துவிட்டது. இது எல்லோருக்கும் ஒரு வயதில் ஏற்படும். உடம்பு தளரும்பொழுது மற்ற உடம்பு பற்றிய துக்கம் எழும். தன் மரணம் பற்றி யோசிக்கும்பொழுது மற்றவர் மரணம் பற்றி கருணை ஏற்படும். இராஜராஜனுக்கு வயதாகி விட்டது. வயதானது மட்டுமல்ல; வேறு ஏதோ உள்ளுக்குள் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

நம்பியாண்டார் நம்பியைப் பார்த்த பிறகு, திருத்தொண்டர் புராணத்தில் வரும் அடியார்கள் கதையைக் கேட்ட பிறகு எந்தவிதத் தியாகத்திற்கும் தயாராக இருப்பவனே மனிதன் என்று சொல்லப்பட்ட பிறகு, தனக்கு என்று எதுவுமே இல்லை; எல்லாம் இறைவன் சொத்து என்று உள்மனது உணர்ந்த பிறகு, அவனுக்குள் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. அந்த மாற்றம் ஏற்பட்டதால்தான் சிவாலயம் கட்டவேண்டுமென்ற எண்ணமும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இந்த மாற்றம் வெகு வேகமாய் சிந்தனை உச்சிக்கு இராஜராஜனை அழைத்துப் போய்விடும்.

கடவுள் என்பது லிங்க உருவமும் அல்ல. அடையாளச் சின்னமும் அல்ல. அது எங்கும் பரந்தது. எங்கும் நிறைந்தது என்று தெரிந்துவிடும். அப்பொழுது இந்தக் கோயில் கட்டுகின்ற ஆசையும் இவ்லாமவ் போகும். ஆரம்பித்து விட்டதாலேயே முடிக்க லேண்டுமென்ற நிர்பந்தம் அவனுக்குள் இருந்திருக்கும்.

இந்தக் கோயில் கட்டுவது இப்போதைக்கு இந்தத் தேசத் திற்கு மிகச் சிறப்பான விஷயம். கங்கர்களும், ராஷ்டிரகூடர் களும், சாளுக்கியர்களும், பொந்தொப்பி நாட்டைச் சேர்ந்தவர் களும், நுளம்பாடி ஆட்களும், பெரும்பாணப்பாடி தமிழர்களும், திருமுனைப்பாடி வீரர்களும், பாண்டியர்களும், சேரர்களும் ஒன்று சேர்ந்து இந்த மிகப்பெரிய ஆலயம் அமைக்க, இதை வந்து பார்க்கின்ற ஜனங்கள் சோழநாடு தனக்கு அன்னியமில்லை

என்று தெளிவாகி, நாம் ஒரே மொழி பேககின்றோம், ஒரே இனறவனை வணங்குகின்றோம், ஒன்றாக இருப்போம் என்ற நிலையும் ஏற்படலாம்.

அந்த நிலை ஏற்படுமா, இனறவன் அருளால் நிலைத்து நிற்குமா.

கருவூர்த்தேவர் ஆழ்ந்த சிந்தனையோடு அந்தத் தென்னந் தோப்புக்குள் நுழைந்தார்.

105

தென்னந்தோப்புக்கு நடுலே மிகப்பெரிய கூரைக் கொட்டகை போடப்பட்டிருந்தது. நிழல் முழுவதும் பரவிவிட்டாலும், இன்னும் அழுத்தமாய் ஓனலயை முடைந்து கொண்டிருந்தார்கள். பச்சையாகவே போட்டுப் பின்னிக் கொண்டிருந்தார்கள். உள்ளுக்குள் நீர் வராதிருக்க வைக்கோல் பிரிகளைப் போட்டு இழுத்துக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

வேலை ஒன்றுமில்னலயே, இந்த லேலையைச் செய்கிறேனே என்று சில இளைஞர்கள் வேகமாகக் கூனர வேய்ந்து கொண்டிருந்தார்கள்.

அந்த வீரர்கள் அனைவரும் கங்க தேசத்தைச் சேர்ந்தவர்கள். நல்வ சைவர்கள். சிவனைத் தவிர வேறு எவரையும் நமஸ்கரிக்காதவர்கள். சிவனுக்கு என்று சொன்னால் எந்த வேலையையும் செய்பலர்கள். அவர்களுக்கு மொழியைவிட, தேசத்தைவிட சிவன் முக்கியம்.

கங்க நாட்டில் பனடயெடுக்கும் பொழுது ஆரம்பத்தில் எதிர்ப்பு இருந்தாலும், அங்கங்கே கலவரங்கள் நிகழ்ந்தாலும் மறைந்திருந்து சோழப் படைவீரர்களை இரவு நேரம் கங்கர்கள் தாக்கினாலும், பிற்பாடு இராஜராஜன் தீவிர னசவன் என்று கேள்விப்பட்டு அந்தணர்கள் பூர்ண கலசத்தோடு வந்ததும், க்ஷத்திரியர்கள் கைகூப்பி லரவேற்றதும் நிகழ்ந்துவிட்டன.

தென்னாடுடைய சிவனே போற்றி என்று இராஜராஜன் சொல்ல, "உங்கள் தேசத்துக்கு மட்டும்தான் சிவனா? எங்களுக்கு இல்லை என்று நினைத்துக் கொண்டீரா" என்று கங்கர்கள் உரத்துப் பேச, "தென்னாடு என்று நான் சொன்னது பரத கண்டத்தை இரண்டாகப் பிரித்துச் சொல்கிறேன். நீங்களும்

தென்னாட்டில்தான் இருக்கிறீர்கள். நாம் எதிரிகளல்ல. நண்பர்கள்" என்று இராஜராஜன் விளக்க, அவர்கள் இராஜராஜனைத் தழுவிக் கொண்டார்கள்.

அங்கும் கோயில் திருப்பணிகள் நடந்தன. திருத்தொண்டர் புராணம் பற்றி அங்கும் கதைகள் சொல்லப்பட்டன.

இராஜராஜன் தலைமையை வெகு எளிதாக கங்கதேசம் ஏற்றுக் கொண்டது.

தஞ்சைக்கு அருகே இருக்கின்ற பழுவூர் சிற்றரசர்கள் நண்பர்களாக மாறியது போல, கடம்பூர் அரசர்கள் மாறியதைப் போல, திருமுனைப் பாடி நடுநாட்டு வீரர்கள் மாறியது போல, தொண்டை நாட்டுச் சிற்றரசர்கள் எல்லாம் ஒன்றாகி சோழ தேசத்தை வரவேற்றது போல கங்கநாடும் வரவேற்றது.

சோழர்கள் குடமலை நாட்டிற்குப் போன போது அந்த வீரர்கள் திகைத்துப் போனார்கள். என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல் காடுகளில் ஓடி மறைந்து கொண்டார்கள். அந்தத் தேசத்தை வெறும் பெண்கள் மட்டுமே நிர்வாகம் செய்து கொண்டிருக்க, இராஜராஜன் அலர்களை மிக மரியாதையாக நடத்தியதைக் கேள்விப்பட்டு நெகிழ்ந்து போனார்கள்.

மேற்குக் கரையோரமாகவே ராஷ்டிர கூடர்களைச் சந்திக்க தஞ்சைப் பெரும்படை நடந்தது. அங்கு கடும் எதிர்ப்புகள் இருந்தன. இராஜராஜன் தன் முழு வலிமையையும் காட்ட ராஷ்டிரகூடர்கள் அடிபணிந்தார்கள். இன்னும் சோழர்களுக்கு அங்கே எதிர்ப்பு இருக்கிறது. ஆனால் திறமையான நிர்வாகமும், வலிமையான படையையும் கண்டு அடங்கியிருக்கிறார்கள்.

மேலைச் சாளுக்கியத்தில் சற்று எதிர்ப்பு இருந்தாலும், கிழக்குப் பக்கமுள்ள கீழைச் சாளுக்கியத்திலிருந்து நல்ல நட்புகள் லந்துவிட்டன. உறவுகள் ஏற்பட்டுவிட்டன. மனமுலந்து அவர்கள் இராஜராஜனை கவீகரித்துக் கொண்டார்கள்.

சேரர்கள் அமைதியாகிவிட்டார்கள்.

இலங்கை நடுங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், இராஜராஜனுக்கு உண்மையான எதிரிகள் பாண்டியர்கள். ஒரு பொழுதும் இந்தப் பாண்டியர்கள் சோழர்களை ஏற்றுக் கொள்ளவில்லை. இராஜராஜனை அங்கீகரிக்கவில்லை. அவர்களுக்கு இராஜராஜனின் தமையனான ஆதித்த கரிகாலன்,

அவர்களது அரசனான வீரபாண்டியனின் தலையை வெட்டி எறிந்தது இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது.

தோற்றுப் போய் காட்டுக்குள் ஒளிந்து உடல் நலமில்லாமல் படுத்துக் கொண்டிருப்பவனை எழுப்பி, தள்ளாடி எழுந்தவன் மீது பாய்ந்து ஒரே வீச்சில் அவன் சிரத்தை அறுத்து எறிந்துவிட்டு ஆதித்த கரிகாலன் கொக்கரித்ததாகவும், பாண்டியன் தலையை மட்டும் கொத்தாக எடுத்துக் கொண்டு தஞ்சைக்குப் போனதாகவும், அங்கு ஈட்டியில் சொருகி வைக்கப் பட்டதாகவும் ஆபத்துதவிகள் மூலம் பாண்டிய மக்களுக்குத் தெரிய, பல வாரங்கள் அழுது புலம்பினார்கள். 'பழிக்குப் பழி தீர்ப்பேன். சோழர் குலத்தை அழிப்பேன்' என்று சபதம் செய்திருக்கிறார்கள்.

என்றேனும் ஒருநாள் சோழ தேசம் முழுவதும் இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டு, கோவேறு கழுதைகளைப் போட்டு உழுது, பேய்க் கடுகு விதைத்து அந்த பேய்க் கடுகு முளைத்த காட்டில் மீன் கொடியைப் பறக்கவிடுவோம். சோழ தேசம் செந்நெல் விளைகின்ற பூமி அல்ல. வெறும் கடுகு விளையும் சுடுகாடு என்று உரத்துச் சொல்லுவோம் என்று ஆவேசப் பட்டிருக்கிறார்கள்.

"இங்கு வந்த இந்தப் பத்தாயிரம் வீரர்களில் ஒருவன்கூட பாண்டியன் இல்லை. ஒரே ஒரு பாண்டிய் தேசத்தவன் மட்டும் சுற்றிச் சுற்றி லருவதாகப் பேசிக்கொண்டார்கள். பாண்டியனாக இருப்பவன் சோழ பூமியில் இருக்க முடியாது. அலனுக்கு உடம்பு எரியும். மனம் எரியும். 'என்னை அழித்த உனக்கு வந்த வாழ்வைப் பார்' என்று சோழதேசத்தின் ஒவ்வொரு வளர்ச்சியும் அவனுக்கு வேதனை தரக்கூடியதாக இருக்கும். அந்த வளர்ச் சியை நாசம் செய்ய வேண்டும் என்ற எண்ணம்தான் எழும்.

பாண்டியர்களைத் தவிர பரத கண்டத்தின் தென் பகுதி முழுவதும் சோழ தேசத்திற்குக் கட்டுப்பட்டு, அதன் அன்புக்கு லசப்பட்டிருக்கிறது. பாண்டிய தேசத்தையும் லசப்படுத்த வேண்டும். ஆனால், நாய்வாலை நிமிர்த்த முடியுமோ.

கருவூர்த்தேவர் கவலைப்பட்டார். கூரைக் கொட்டகைக் குள் நுழைந்தார்.

"பம்பம் மஹாதேவ்" – ஒரு ராஷ்டிரக்கூட வீரன் உரக்கக் கத்தினான்.

வட இந்திய பைராகிகள் அப்படிக் கத்துவதுதான் வழக்கம். அவருடைய நீண்ட தாடியையும், சடையையும்

பார்த்துவிட்டு பைராகி என்று அவரை நினைத்துக் கொண்டிருக்கிறான். அவனைப் பார்த்து கருவூர்த்தேவர் மெல்ல சிரித்தார்.

அவன் முகத்தை மனதில் குறித்துக் கொண்டார்.

கங்க வீரர்கள் எழுந்து நின்றார்கள். சிலருக்கு அவர் யாரென்று தெரிந்திருந்தது. சிலருக்குத் தெரியாது போனாலும், அவருடைய தோற்றம் ஒரு மரியானதயை ஏற்படுத்தியது.

கங்க வீரர்களுடைய இனிமையான குணம் கருவூர்த் தேவரைக் கவர்ந்தது.

ரர்ஷ்டிரகூடர்கள் சற்று விலகிப்போனார்கள்.

யாரோ வருகிறார்கள். யாரிடமோ பேசுகிறார்கள். நமக்கென்ன என்று நகர்ந்து கொண்டார்கள்.

சாளுக்கியர்கள் இடுப்பில் கைவைத்து என்ன வேண்டும் என்பது போல் ஆத்திரமாகப் பார்த்தார்கள்.

கூரை கிழக்கு மேற்காக இருந்தது. கருவூர்த்தேவர் மெல்ல நடந்து கூரையின் மேற்குப் பக்கம் போனார். அதன் விளிம்பில் நின்றார்.

ஒரு மூங்கில் கழியை எடுத்து ஒரு சதுரம் வரைந்தார். சதுரத்திற்கு நடுலே வட்டம் லரைந்தார். அங்கிருந்த மரப் பலகையைச் சீடனுக்குச் சுட்டிக் காட்டினார். அவன் கொண்டு வந்துபோட, அதில் அமர்ந்து கொண்டார். முகம் துடைத்துக் கொண்டார் னகக்கூப்பினார்.

'ஓம் நமச்சிவாய... என்று நிதானமாகச் சொல்லத் துவங்கினார்.

சீடர்கள் அவர் எதிரே அமர்ந்து கொண்டார்கள்.

அவர்களும் 'ஓம் நமசிவாய' என்று சொன்னார்கள்.

கங்க வீரர்களும், ராஷ்டிரகூடர்களும் நெருங்கி லந்தார்கள். அவர்களும் அமர்ந்து கொண்டார்கள். குடமலை வீரர்களும், தடிகைப்பாடி வீரர்களும் அதற்குப் பின் அமர்ந்து கொள்ள, சாளுக்கியர்கள் தொலைவிலே கைகட்டி நின்று கொண்டார்கள்.

கிட்டத்தட்ட ஐயாயிரம் பேர் கொண்ட கூட்டம் அனமதி யாக உட்கார்ந்து 'ஓம் நமசிவாய... மந்திரத்தைக் கருவூர்த்தேவர் சொல்ல, பதிலுக்கு வாங்கி எதிரொலித்தது.

வெகு சீக்கிரத்தில் அந்தக் கூரைக்குக் கீழுள்ள சூழ்நிலை வேறுவிதமாய் மாறிப் போயிற்று.

அரைநாழிகை இடைவிடாது நமசிவாய மந்திரத்தைச் சொல்லிவிட்டு, மெல்ல கருவூர்த்தேவர் கண்களைத் திறந்தார். எழுந்து நின்றார். வீரர்கள் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"உங்களுக்கென்று ஒரு வீடு கட்டிக் கொண்டுவிட்டீர்கள். வீடு என்றால் அங்கு கடவுள் இருக்க வேண்டுமல்லவா. கடவுளுக்கென்று ஒரு இடம் இருக்க வேண்டுமல்லவா. நமசிவாய மந்திரம் சொன்ன இந்த இடத்தில் ஒரு சிவலிங்கம் ஸ்தாபனம் செய்யப்படும். நீங்கள் தினசரி பூஜை செய்து வரலாம்." என்று சொன்னார்.

வீரர்கள் னகக்கூப்பினார்கள். கால்தொட்டு வணங்கினார்கள்.

எவ்லோருக்கும் திருநீறு தரப்பட்டது.

"ஐயா, அடிக்கடி வந்து போவீர்களா." என்று ஒரு வீரன் கேட்டான்.

"ஆஹா... வரலாம். எதற்கு?" கருவூர்த்தேவர் பதிலுக்குக் கேட்டார்.

"ஆன்மீகமான சில சந்தேகங்கள் இருக்கின்றன. நீங்கள் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் குரு என்று கேள்விப்பட்டோம். உங்களிடம் தெரிந்து கொள்ளலாமே என்பதற்காக உங்களை வரச்சொல்லுகிறோம்."

"இப்பொழுதே கேட்கலாமே..."

அந்த வீரன் அவருடைய பதிலை எதிர்பார்க்கவில்லை.

"இல்லை ஐயா... பிற்பாடு ஒரு சமயம்... அதிகம் கூட்டமில்லாதபோது..."

"ஏன். கூட்டத்திற்கு நடுவே கேட்க முடியாத கேள்வியா? ஏதேனும் கணவன் – மனைவி உறவு பற்றி கேட்கப் போகிறீர்களா."

கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது.

அந்த வீரன் வெட்கமடைந்தான்.

"இல்லை ஐயா." என்று அவசரமாக மறுத்தான்.

"என்ன கேள்வி, கேளுங்கள்."

– வீரன் மறுபடியும் தயங்கினான்.

"பரவாயில்லை தம்பி... கேள்."

"கடவுளை வழிபட கோவில் அவசியமா. ஏழு பனை உயரத்திற்கு ஒரு கோவில் தேவைதானா? கோவில் என்ற ஒரு விஷயம் இல்லாமலேயே வேதங்கள் கடவுளை வழிபட்டிருக்கின்றன. வேத காவ வழிபாட்டை ஒதுக்கிவிட்டு வேறு ஒரு வழிபாட்டை நாம் ஆரம்பித்திருக்கிறோம். இது சரிதானா? வேதத்திற்கு எதிராக இந்தச் செய்கை இல்லையா என்பதே என் கேள்வி?"

"உன் பெயர் என்ன தம்பி"

"சங்க சூடன்."

"எந்த தேசம்?"

"கங்கதேசம்..."

"கங்க தேசத்தில் என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"நான் நெசவு செய்பவன். சேணியர் குலத்தைச் சேர்ந்தவன். குறிப்பாய் புடவைகளுக்குச் சரிகைக் கரை சேர்ப்பவன்."

"அடேயப்பா... லாட்டசாட்டமாக இருக்கிறாயே..."

"ஆமாம். வணிகர்களான நாங்கள் போர்ப் பயிற்சியும் பெற்றிருக்கிறோம்."

"நல்லது. மிக நல்ல கேள்வி. நாளை வரும்போது இதற்கு விரிவான பதில் சொல்கிறேன். இந்தப் பதில் தனக்குத் தேவை என்று நினைப்பவர்கள் மட்டும் அப்போது இருப்பார் களல்லவா. எல்லோருக்கும் இந்தக் கேள்வியும், இந்தப் பதிலும் தேவையில்லையே. சரிதானா." என்று கருவூர்த்தேவர் கேட்க, பல பேர் ஆம் என்று தலையசைத்தார்கள்.

"நல்லபடி உணவு கிடைக்கிறதா?"

"கிடைக்கிறது."

"இன்னும் என்னவிதமான வசதிகள் வேண்டுமென்று கேளுங்கள்."

"தரை ஈரமாக இருக்கிறது. களிமண் பூசி மெழுகினாலும் பக்கவாட்டிலிருந்து சாரல் அடித்து தரையை ஈரமாக்கிவிடுவ தால் வேறு ஏதேனும் வழி இருக்குமா என்று பார்க்கவேண்டும்."

"இது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. கருங்கல் பாறைகள் அதிகம் வரப் போகின்றன. பாறைகள் செதுக்கப்படப் போகின்றன. இந்த இடங்களில் மெவ்லிய கற்பலகையைப் பரப்பிவிட்டு விடலாம்."

"ஐயா... பாறைகள்கூட சூடானது. இங்கு ஏதேனும் செங்கல் சூளை இருக்கிறதா. கங்கதேசத்தில் மலைகள் அதிகம். தரை மண்ணாக இருந்தால் தாங்காது. எனவே தட்டை செங்கல் செய்து, அதைத் தரையில் பரப்பி அதன்மீது கண்ணாம்புப் பூச்சு கொடுத்துவிடுவோம். தரை கெட்டியாக இருக்கும்."

"ஆமாம், நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். மேலே செங்கல் பாவிவிடலாம். அதிலொன்றும் சிரமமில்லை. இப்பொழுதே நான் செங்கல்லுக்குச் சொல்லிவிடுகிறேன்."

"ஐயா, நீங்கள் அனுமதி கொடுத்தால் அப்படிப்பட்ட செங்கல் பற்றி நாங்கள் சொல்கிறோம்." வேறு ஒரு வீரன் முன்வந்தான்.

"உனக்கு அதுதான் தொழிலோ."

"ஆமாம். சூளை போடுவதுதான் எங்கள் வேலை. சுவருக்குண்டான செங்கல் வேறு. தரைக்குண்டான செங்கல் வேறு. கூரைக்குண்டான செங்கல் வேறு. அதைத் தவிர ஓடு களும், பானைகளும் செய்வது எங்கள் லழக்கம். அதற்குண்டான செங்கல்லை நான் வடிவமைத்துக் கொடுக்கிறேன். அச்க தயாரிக்க மரத்தச்சர்களின் உதவி வேண்டும்." என்று அந்தப் போர்வீரன் சொல்ல, கருவூர்த்தேலர் அலனைத் தன்னோடு வரச்சொன்னார்.

மற்ற வீரர்களிடம் குசலம் கேட்டார். சாளுக்கிய வீரர்கள் மட்டும் தள்ளியே இருந்தார்கள். அவர்களைப் பார்த்து புன்னகை செய்தார்.

"சாளுக்கியர்களா... முகம் பார்த்தாலே தெரிகிறது. நலமா." என்று விசாரிக்க, அலர்கள் நிதானமாகத் தலையசைத்தார்கள்.

அவர்களிடம் கோபம் இல்லை. ஆனாவ் நெருங்கிப் பழகுவதற்கு ஒரு தயக்கம் இருந்தது.

கருவூர்த்தேவர் கூரையை விட்டு வெளியே வந்தார். "ஒரு பத்து பேர் என்னோடு வாருங்கள்." என்று சொன்னார்.

அலர்களை அழைத்துக் கொண்டு மறுபடியும் இராஜராஜப் பெருந்தச்சரின் மாளிக்கைக்குப் போனார். பெருந்தச்சர் வேறெங்கோ போயிருந்ததால் இரண்டாம் கட்ட கதவு சார்ந்தியிருந்தது.

பெருந்தச்சரின் இளைய சிற்பிகளைக் கதவு திறக்கச் சொன்னார். அவர்கள் தயங்க, மெல்லிய அதட்டலில் அவர்களை விலகச் சொன்னார். தானே கதவு திறந்தார். உள்ளே

புகுந்தார். பத்து வீரர்களையும் அருகே அழைத்தார். பட்டுத் துணியை விலக்கி தஞ்சை பிரகதீஸ்லரர் கோவிலின் மாதிரியைக் காட்டினார்.

அந்தக் கங்க வீரர்களும், தடிகைபாடி வீரர்களும், குடமலை வீரர்களும், ராஷ்டிரகூட வீரர்களும் திகைத்துப் போனார்கள்.

"இதே போல் எனக்கு ஒரு கனவு வந்தது. இதேபோல் கனவு வந்தது..." - ஒரு வீரன் கூறினான்.

மற்றவர்கள் மாதிரியைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். உட்கார்ந்து பார்த்தார்கள். நின்று பார்த்தார்கள். கன்னத்தில் கைவைத்து வியந்து பார்த்தார்கள். னக கூப்பினார்கள். தலைக்கு மேல் கரம் உயர்த்தினார்கள். மெவ்ல கண்கள் பனிக்கத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்கள்.

கருவூர்த்தேவர் மறுபடியும் அழைக்க, வெளியே லந்தார்கள்.

"உங்களைச் சார்ந்த வீரர்களிடம் எல்வளவு பெரிய வேலையில் ஈடுபட்டிருக்கிறோம் என்று தயவு செய்து சொல்லுங்கள். இது சாதாரண வேலை இல்லை என்று சாளுக்கிய வீரர்களிடம் விவரியுங்கள். உங்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் போய்விடக் கூடாது. உறுதியான, அமைதியான, தெளிவான ஒரு ஒற்றுனம உங்களிடம் இருந்தால்தான் இந்த சிவாலயம் எழுப்பப்படமுடியும். நீங்கள் இதற்கு உதவி செய்ய வேண்டுமென்று ஒரு சைவன் என்கிற முறையில் உங்களைக் கரம்கூப்பிக் கேட்டுக் கொள்கிறேன்." என்று கருவூர்த்தேவர் சொல்ல, அந்த வீரர்கள் காலில் விழுந்து வணங்கினார்கள். நிச்சயம் உதவி செய்வோம் என்று சொன்னார்கள்.

அவரிடமிருந்து விடைபெற்று தங்களுடைய கூரை நோக்கி வேகமாகப் போனார்கள். மற்றவர்களிடம் பரிமாறிக் கொள்ளு கின்ற ஆலேசம் அந்த நடையில் இருந்தது.

கருவூர்த்தேவர் தேவரடியார்கள் இல்லம் நோக்கித் திரும்பினார்.

ஒரு இளைய சிற்பி, அரண்மனை வாசலில் உபசேனாதி பதிகளோடு பேசிக் கொண்டிருந்த இராஜராஜப் பெருந்தச்சரிடம் -கோயில் மாதிரி வடிவம் அடினம வீரர்களுக்குக் கருவூர்த் தேவரால் காட்டப்பட்டதை விவரித்துச் சொன்னான்.

இராஜராஜப் பெருந்தச்சர் கோபமானார்.

"அந்தக் கிழவன் கருவூரானை இனி மாளிகைக்குள் எந்தக் காரணம் கொண்டும் அனுமதிக்கக் கூடாது என்று நமது மாளிகை தொண்ட மண்டல வீரர்களுக்குக் கட்டளையிடு. என் பெயர் சொல்." என்று கர்ஜித்தார்.

106

பகக்கள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு அந்தச் சிறிய குதிரைப் படை காவிரி ஆற்றில் இறங்கியது. தட்டையான ஒரு பெரிய பரிசலை, படகோட்டியிடம் சோழ வீரர்கள் இறுக்கப் பிடித்திருக்க, குதிரைகளோடு அந்த அறுவர் படை பரிசலில் இறங்கியது. குதிரைகள் கால்மாற்றி மிரண்டதால் பரிசல் வேகமாக ஆடியது. ஒரே ஒருவரைத் தவிர மற்ற வீரர்கள் குதிரையிலிருந்து பரிசலில் குதித்து குதிரைகளை இறுக்கப் பிடித்து சமாதானம் செய்தார்கள்.

ஒரேயொரு வீரன் மட்டும் குதிரையிலிருந்து இறங்காமல் எதிர்க்கரையிலுள்ள பகமையை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். அவன் குதிரை மற்ற குதிரைகளைப் போல அதிக ஆட்டம் போடாமல் மௌனமாக இருந்தது. பயமின்றி கால்களை அகற்றி வைத்து உறுதியாய் நின்றிருந்தது. மற்ற வீரர்கள் கட்டளையிட பரிசலைக் கோல்போட்டு தள்ளினார்கள். எதிர்க்கரை நோக்கி பரிசல் போயிற்று.

அந்த வீரனுக்கு முப்பது வயதுக்கு மேல் இருக்கும். நல்ல உயரம். அழுத்தமான உடம்பு. உறுதியான முகவாய். விடைப்பான மூக்கு. புருவத்தில் முடி அதிகமிருந்தது. உதட்டில் மெல்லிய அலட்சியமும், பிடிவாதமும் இறுகிக் கிடந்தன. கண்கள் மிகக் கூர்மையாக இருந்தன. இடைவிடாது அந்த வீரன் வலக்கை விரல்களை அசைத்துக் கொண்டிருந்தான். தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறான் என்று அந்த அசைவுகள் காட்டின. சற்றுத் திரும்பி காவிரி நதியின் வலப்புறம் பார்த்தான். அங்கே பகமை சற்றுக் குறைவாக இருந்தது.

ஒரு தேசத்தின் பகமைக்கு நீர்வளம் மட்டும் காரணமல்ல. மண்வளம் மிக முக்கியம். பிறகு மனிதர்களின் உழைப்பு அவசியம். ஏரியிலிருந்து இதோ இந்தக் காவிரி நதிவரை பல இடங்களில் தரிக நிலம் இருப்பதைக் காணமுடிந்தது.

"சமன் செய்து வயல் வெளிகளாக மாற்றலாமே?" என்று கிராமத்து மக்களைக் கேட்டபோது, "இருக்கிற வயல்களையே பராமரிக்க முடியவில்வை. நெல் விதைத்தால் அறுக்க முடியவில்லை. நாங்கள் அறுக்க முடியாதபோது எங்கள் பசுக்களை வயல்களில் மேயவிட்டு விடுவோம்... என்று அந்தக் கிராமத்து மக்கள் சொன்னார்கள்.

பசுக்களை வயல்களில் மேய வைக்கும் அளவுக்குத் நன்செய் நிவங்கள் இருக்கின்றன. நிலம் இருக்கிறது. நேரம் இருக்கிறது. ஆனால், மக்கள் இல்லை. உரமான வாலிபர்கள் இல்லை. முதுகு வளைத்து வேவை செய்கிற பெண்கள் இல்லை.

எல்லா கிராமத்திலும் மக்கள் தொகை மிகக் குறைவாக இருக்கிறது. பெண்கள்தான் அதிகம் இருக்கிறார்கள். ஏர் ஓட்டக் கூடிய ஆட்கள் வெகு சிலரே இருக்கிறார்கள். அவர்களால் இவ்வளவுதான் பாடுபட முடியும். இதிவ் வருகின்ற வருமானம் போதும் என்று மௌனமாக இருந்து விடுகிறார்கள்.

கிராமங்களில் மக்கள் காணோமே... அதற்கு நாம் காரணமோ?

திடீரென்று ஒரு பயம் அந்த வீரனுக்கு வந்தது. இன்னும் அதிகமாக விசாரிக்க, போருக்குப் போய் இறந்தவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவென்றும், ஆனால் போரிவ் போய் ஜெயித்து வீட்டுக்கு வந்தவர்களை இப்பொழுது தஞ்சைக்கு அழைத்துப் போயிருக்கிறார்கள் என்றும், தஞ்சை மாநகரில் மிகப் பெரிய கோயில் கட்டுவதால் அங்கு ஆட்கள் அதிகம் தேவைப்படுகிறதென்றும், எனவே இங்குள்ள விவசாய விஷயங்களும், வேறு சில விஷயங்களும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள்.

"உழும் கருவியின் இரும்புக் கூர்முனை வளைந்து கிடக்கிறது. பாறையில் மோதி நெளிந்து விட்டது. இதை அடித்துச் சரிசெய்தால்தான் சீராக உழ முடியும். என்னிடம் இருப்பது இந்த ஒரே உழும் கருவி. இந்த ஏர் முனையை நானே உட்கார்ந்து சரிசெய்து பார்த்தேன். முடியவில்லை. சரிசெய்யும் ஆளுக்கு எங்கு போக வேண்டும் என்று தெரியவில்லை?" என்று ஒரு கிழவர் சொல்வ, அந்த வீரன் கோபமானான்.

"ஏன்? உங்கள் கிராமத்து கருமார் எங்கு போனார்?" என்று கோபமாக விசாரித்தான்.

"அவர் போய் மூன்று வருடமாகிவிட்டது. ஆள் அனுப்பி தஞ்சைக்குக் கூட்டிக் கொண்டு போய் விட்டார்கள். அவரை மட்டுமல்ல; மரத்தச்சர்களும் கிராமத்தில் இல்லை. குயவர்கள் இல்லை. நாங்களே சில கிழவர்களை வைத்துத்தான் இந்த வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.'' என்று அலுப்பாகச் சொன்னார்கள்.

"வேறு என்ன குறை உங்களுக்கு?" – வேறொரு சோழவீரன் அந்தக் கிராமத்து மக்களைக் கேட்டான்.

இந்த அழகான வாலிபன் மௌனமாக கிராமத்து மக்களையே பார்த்துக் கொண்டிருந்தான். தான் யார் என்று வெளிப்படுத்தாமல் அடக்கமாக இருந்தான்.

அந்த ஊரில் அவனுக்குச் சில வாலிபர்களைத் தெரியும். ஆனால் அவர்களெல்லாம் ஊரைவிட்டு தஞ்சைக்குப் போய் ஒரு வருடத்திற்கும் மேலாகிவிட்டதாம். எங்கிருக்கிறார்கள். என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லையாம். அதிகம் வயதானவர்களுக்கு இவனைப் பற்றித் தெரியவில்லை.

"ஸ்ரீ இராஜராஜ சோழர் நலமா? அவர் இந்த இடத்தில் உட்கார்ந்து எங்கள் வீட்டு உணவை உண்டிருக்கிறார். செண்பகப் பூக்களால் மாலை செய்து அவருக்கு அணிவித்தோம். ஊரைவிட்டு கிளம்பும்வரை மாமன்னர் ஸ்ரீ இராஜராஜர் அதைக் கழற்றவே இல்லை... என்று பெருமையுடன் நினைவு கூர்ந்தார். மற்ற கிழவர்களும் ஆமோதித்தார்கள். இளம்பெண்கள் வியப்போடு வீட்டுக்குள்ளிருந்து அந்த வீரர்களைப் பார்த்தார்கள்.

"இவரை எங்கோ பார்த்ததுபோல் இருக்கிறதே?" என்று அவனைச் கட்டிக் காட்டி கேட்டார்கள்.

"நான் ஒரு சேனாதிபதி..." என்று அவன் அவசரமாகப் பதில் சொன்னான்.

"அப்படியா..." என்று அவர்கள் சமாதானமானார்கள்.

"எங்களுடைய முதல் பிரச்சினை நல்ல துணிகள். துணிகள் இந்தப் பக்கம் வந்து வெகுநாட்களாகி விட்டன. வழக்கமாக வருடத்திற்கு இரண்டுமுறை நெசவாளர்கள் துணி கொண்டு வந்து விற்பார்கள். நிறைய நெல் வாங்கிக் கொண்டு போவார்கள். ஆனால், இந்த முறை அவர்கள் வரவேயில்லை. துணிகள் கிழிந்திருக்கின்றன. நல்லது, கெட்டதுக்குக்கூட வெளியே போகச் சிரமமாக இருக்கிறது" என்று சொல்ல, அந்த

இளைஞன் பனை ஓலை நறுக்கை எடுத்து அதில் நான்கு வரி எழுதி அந்த ஊர் பெரியவரிடம் கொடுத்தான்.

"பின்னால் மிகப் பெரிய பொதிகளுடன் மாட்டு வண்டிகள் வருகின்றன. சோழ தேசம் நோக்கிப் போகின்ற வண்டிகள் அவை. இந்த ஓலையை மூன்றாவது வண்டியில் கொடுத்து பத்துகோல் நீளத்திற்குப் புடவை வாங்கிக் கொள்ளுங்கள். அழுத்தமான சாயத் துணிகளும் கிடைக்கும். இந்த ஓலையைக் கொடுத்தால் வெகு நிச்சயம் அவர்கள் கொடுப்பார்கள்."

"பதிலுக்கு நாங்கள் என்ன தரவேண்டும்?" அந்தக் கிழவர் பரபரப்பாகக் கேட்டார்.

"எதுவுமில்லை. என் அன்பளிப்பாக இருக்கட்டும்."

"நீங்கள் யார் என்று தெரியவில்லையே?"

அந்தக் கிராமத்துப் பெரியவர் எழுந்து நின்று கைகூப்பினார்.

"நான் சேனாதிபதி என்று சொன்னேனே..."

அந்த வீரர்களோடு அவன் குதிரையில் தாவி ஏறினான்.

கிராமத்து தெருக்களில் குதிரையைச் செலுத்தினான். ஒரு நடுவயதுப் பெண்மணி ஓடிவந்து அந்தக் கிழவன் கையிலிருந்து ஓலையை வெடுக்கென்று பிடுங்கினாள். வெளிச்சத்தில் பார்த்து தடுமாறிப் பார்த்தாள்.

"அடேய்... இது இராஜேந்திரர், இளவரசர் இராஜேந்திரர்." என்று உரக்கக் கத்தினாள்.

அதற்குள் குதிரைகள் பல கஜ தூரம் முன்னே போய் விட்டன. கிராம மக்கள் பின்னே ஓடி வந்ததும் அவன் குதிரையை வேகமாகச் செலுத்தினான். கிராமத்தை விட்டு வெளியே வந்தான்.

கிராமத்து மக்கள் பின்னே நின்றபடி அவன் பெயரைச் சொல்லி வாழ்த்துச் சொன்னார்கள். மேல் துண்டுகளை வானத்தில் வீசியெறிந்து சந்தோஷத்தைத் தெரிவித்தார்கள்.

அந்தப் பெண் மட்டும் விடாது குதிரையைத் துரத்திக் கொண்டு ஓடிவந்தாள். அவளுக்காக குதிரைகள் நின்றன. மூச்சிரைக்க வந்தவளைப் பார்த்து இளவரசர் ராஜேந்திரர் மெல்ல புன்முறுவல் செய்தார்.

"என்ன வேண்டும் தாயே?" என்று கேட்டார்.

"நீங்கள் நீடூழி வாழ வேண்டும். எனக்கு உடன்பிறந்த அண்ணனாய் நினைத்து உங்களைச் சொல்கிறேன். நீங்கள் மனைவி மக்களோடு மிக நலமாய் இருக்க வேண்டுமென்று எங்கள் ஊர் நடராஜப் பெருமானை வேண்டிக் கொள்கிறேன். அவருக்கு நெய் விளக்கும் போடுவேன். நாங்கள் கேட்காமலேயே இவ்வளவு துணி கொடுத்திருக்கிறீர்களே... உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை. இன்னொரு விண்ணப்பம். தயவுசெய்து ஒரு மாதம் வேலைக்காக ஒரு கருமாரை, ஒரு மரத்தச்சரை எங்கள் கிராமத்திற்கு அனுப்பி வையுங்கள். இங்கு பல விஷயங்கள் இருக்கின்றன. எங்களால் முடிந்த அளவு செப்பனிட்டுக் கொள்கிறோம். ஆனால், சில நறுவிசான வேலைகளை எங்களால் செய்ய முடியவில்லை. உதாரணத்திற்கு மாவரைக்கும் எந்திரத்திற்குச் சரியான கைப்பிடி மாட்ட முடியவில்லை. இதோ பாருங்கள். கை புண்ணாகி விட்டது."

அவள் உள்ளங்கையை விரித்துக் காட்ட கருப்பு கருப்பாய் காய்ந்துபோன கொப்பளங்கள் இருந்தன.

"நிச்சயமாகச் செய்கிறேன்."

அவர் ஒரு வீரனிடம் முணு முணுப்பாய் ஏதோ சொல்ல, அவன் சரியென்று தலையசைத்தான்.

"காவிரி நதியைக் கடந்தவுடன் எதிர்ப்புறம் கருமாரையும், மரத்தச்சரையும் இந்த வீரர் அழைத்து லந்து உங்களிடம் ஒப்படைத்து விட்டுப் போவார். ஒரு மாதமல்ல. இரண்டு மாதமல்ல. அவர்களை உங்களோடு தங்க வைத்து வேவை வாங்கி பிறகு அனுப்புங்கள். இவரை அடையாளம் பார்த்துக் கொள்ளுங்கள், பயந்துவிடாதீர்கள்..." என்று சொல்ல, அவள் உரத்த குரலில், "இளவரசர் இராஜேந்திரர் வாழ்க" என்று சொன்னாள்.

இளவரசர் இராஜேந்திரர் கை உயர்த்தி ஆசீர்வதித்தார். குதிரையைத் திருப்பினார்.

அந்தப் பரிசல் எதிர்க்கரையை முட்டி நின்றதும், அந்தக் குதிரை மண் சரிவில் அழுத்தமாய் கால் வைத்து விரைவாய் ஏறி சமதளத்தை அடைந்தது. மற்ற வீரர்களும் பின் தொடர்ந்தனர். பச்சை நறுமணம் வேகமாய் மூக்கைத் தாக்கிற்று. வைக்கோல் நெடி ககமாய் நுரையீரல் முழுவதும் பரவியது.

பரிசல்காரருக்குப் பணம் வழங்கப்பட்டது.

குதிரைகள் லெகுசீராய் நல்ல அகலமான மண் தரையில் தஞ்சையை நோக்கி ஓடத்துலங்கின. சில நாழிகைகளில் குடந்தையின் எல்லையை வந்தடைந்தன. அங்கு ஓடுகின்ற காவிரியை அந்த வீரர்கள் குதிரையில் இருந்தபடியே தாண்டினார்கள். காவிரியில் மார்பளவு ஆழமிருந்தது. குதிரைகள் எளிதாகக் கடந்தன.

இளவரசர் இராஜேந்திரருக்குப் புதிய துணியைக் கொடுக்க ஒரு வீரன் முற்பட்டபோது, 'வேண்டாம்' என்று சொன்னார்.

தலைப்பாகையை உதறி இடுப்பில் சுற்றிக் கொண்டு இடுப்பு வேட்டியை வேறொரு வீரனிடம் கொடுக்க, அவன் விரைவாகப் பிழிந்து கொடுத்தான். உதறி இரண்டு வீரர்கள் அதைக் காய்வதற்காகப் பிடித்துக் கொண்டார்கள்.

அலர் ஆழ்ந்த சிந்தனையோடு கரையிலிருந்து காவிரியைப் பார்த்தார்.

"ஆடி முடிந்து விட்டது. இன்னும் வெள்ளப்பெருக்கு நிற்கவில்லை அல்லலா?"

"ஆமாம். குடகுமலைப்பக்கம் தொடர்ந்து மழை பெய்லதாகச் சொல்கிறார்கள். மிகப் பெரிய நிலச்சரிவும் ஏற்பட்டுவிட்டதாகச் சொல்கிறார்கள். தண்ணீரைப் பாருங்கள். மஞ்சளாக இருக்கிறது. நிறைய மண்கலப்பு இருக்கிறது. நல்ல வேட்டி பழுப்பாகி விட்டது." என்று கூட்டமாய்ச் சொன்னார்கள்.

"வேட்டி பழுப்பானால் என்ன. வண்டல் மண் நிலங்களை வளப்படுத்தும், குளங்களும், ஏரிகளும் நிரம்பிவிடும். பிறகு மூன்று போகம் எளிதாக நடக்கும். இல்லையா?" என்று கேட்க வீரர்கள் ஆமோதித்தார்கள்.

அதோ அங்கு புகை தெரிகிறது. ஒரு வீரன் குடந்தையின் இடப்பக்கமுள்ள ஒரு தென்னந்தோப்பைக் காட்டினான்.

"என்ன அது? யாக சாலையா?" இளவரசர் ராஜேந்திரன் ஆவலோடு கேட்டார்.

"இல்லை. அது கருமார் கூடமாக இருக்கும். முன்பொரு கருமார் கூடம் அங்கிருந்ததை நான் பார்த்திருக்கிறேன். விறகு வாசனையாக இருக்கிறதே தவிர, யாகசாலை லாசனையாக இல்லை." ஒரு வீரன் சொல்ல அரர் மறுத்தார்.

"வேட்டியைக் கொடு. உடுத்திக் கொண்டு பார்த்துவிட்டு வருவோம். அங்குள்ளவர்களை ஓலை கொடுத்து நாம் கடந்து

லந்த கிராமத்திற்கு அனுப்புலோம். நீங்கள் எதற்கு வருகிறீர்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் போய் பழையாறையில் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்." உடுத்திக்கொண்டு குதிரையேறினார். அவரைப் பின் தொடர்ந்து மற்ற வீரர்கள் போனார்கள்.

இராஜேந்திர சோழர் பிடிவாதத்திற்குப் பெயர் போனவர். அவருக்கு ஒன்று தோன்றிவிட்டால் அதை நிறைவேற்றாது விலகாதவர் என்று பலபேர் சொல்லார்கள்.

அன்றும் அவர் மனதில் அந்தக் கிராமத்திற்குக் குயவரையும், கருமாரையும் அனுப்புகின்ற ஒரு எண்ணமே மேலோங்கி நின்றது. அந்தப் பெண்பிள்ளைக்கு உதவியாய் இன்னும் ஏதாலது செய்ய வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது.

ஒரு கிராமம். அதில் இருப்பது நூறு நூற்றியிருபது பேர். அதில் ஒரே பெண் பிள்ளைக்கு மட்டும் படிக்கத் தெரியும். அவளும் ஓடிலந்து வெறுமே குறை சொல்லிவிட்டு திரும்பிப் போயிருக்கிறாள்.

இதை நான் கவனிக்கவில்வையென்றால் வேறு யாரும் கலனிக்கமாட்டார்கள். எந்தக் கவலையும் படமாட்டார்கள். கருமார் இவ்லாமல், தச்சன் இல்வாமல் வருஷக்கணக்காய் ஒரு ஊர் எப்படி வளர முடியும். நல்வவேளை துணி கொடுத்தோம். அதுபோல் வேறு ஏதேனும் கொடுத்துவிட்டு வந்திருக்கவாம் என்று யோசித்தபடி இந்த மாதிரி இன்னும் எத்தனை கிராமங்கள் இருக்கிறதோ என்று சிந்தித்தபடி புகை வரும் இடம் நோக்கி குதிரையை வேகமாகச் செலுத்தினார்.

தென்னந்தோப்பு வேலிபோட்டு அடைக்கப்பட்டிருந்தது. மூங்கில் படலை ஒரு வீரன் ஈட்டியால் குத்தி நகர்த்தினான். வழி ஏற்படுத்தினான்.

குதிரைகள் உள்ளே நுழைந்தன.

"யாரது?" அதட்டலாகக் குரல் கேட்டது.

நாய்கள் சீறி வந்தன.

குதிரைகளைப் பார்த்து, விடாது குரைத்தன. வீரர்கள் நாய்மீது கண் வைத்தபடியே அவைகளுக்கு முன்னால் ஈட்டியின் பிடியைக் காட்டி பயமுறுத்தியபடியே உள்ளுக்குள் நுழைந்தார்கள்.

அந்த வீரன் சொன்னது சரி. அது ஒரு கருமார் பட்டறை. அச்சிலே ஊற்றப்பட்டவை குளிர்ந்து அடங்க, அவைகளை உடைத்து அதன்மீது நீர் ஊற்றிக் கொண்டிருந்தார்கள்.

உலைக்களத்தை மெல்ல இழுத்து அணைத்துக் கொண்டிருந்தார்கள். மண் அச்சிலிருந்து உடைக்கப்பட்ட இரும்புகளை எடுத்து வெளியே வைத்தார்கள். அத்தனையும் ராட்டினங்கள். விதம்விதமான அளவுகளில் ராட்டினங்கள். சுற்றிப் பார்த்தபோது குவியலாய் இன்னும் பல ராட்டினங்கள் இருப்பது தெரிந்தது.

குதிரை வீரனை நோக்கி அந்த ராட்டினத்தைச் சுட்டிக் காட்ட, அவன் இறங்கிப்போய் ஒரு இரும்புத் துண்டை எடுத்து வந்தான்.

அந்த ராட்டினத்தை முன்னும், பின்னும் பிரட்டி இளவரசர் இராஜேந்திரர் உற்றுப் பார்த்தார். நடுவிலுள்ள ஓட்டையில் விரல்விட்டு கழற்றிப் பார்த்தார். ராட்டினம் வேகமாகச் கழன்றது. திரும்பி அந்த வீரனிடம் கொடுத்துவிட்டு மெல்ல குதிரையிலேயே பட்டறையைச் சுற்றி வந்தார்.

"யார் நீங்கள்? எதற்காக வந்திருக்கிறீர்கள்? என்ன வேண்டும் உங்களுக்கு? பார்த்தால் சோழ வீரர்கள் போல் இருக்கிறீர்கள். உள்ளே வருவதற்கு அனுமதி கேட்க வில்லையே என்ன வேண்டுமென்று சொல்லுங்கள்?" கருமான் உரத்த குரலில் அதட்டினான். வீரர்கள் ராஜேந்திரனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"நாங்கள் சோழ வீரர்கள்தான். நான் ஒரு சேனாதிபதி. வடக்கே போர் முனையிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கிறோம். போரில் பழுதுபட்ட எங்கள் ஆயுதங்களைச் சரிசெய்து கொள்ள வந்தோம். புதிய ஆயுதங்கள் வாங்க வந்திருக்கிறோம். ஏதேனும் ஆயுதங்கள் வைத்திருக்கிறாயா?"

"எங்கிருக்கின்றன ஆயுதங்கள்? ஆயுதங்கள் செய்லது நிறுத்தி வெகு நாளாயிற்றே."

"வெகுநாள் என்றால்?"

"ஒரு வருடம் ஆயிற்று."

"ஏன் ஆயுதங்கள் செய்லதில்லை?"

"போர் இல்லையே."

"போர் இல்லையென்று யார் சொன்னது?"

"உங்களைப் போன்ற வீரர்கள்தான் சொல்கிறார்கள்."

"இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

"ராட்டினங்கள், இரும்புக் கம்பிகள், கடப்பாறைகள் செய்து கொண்டிருக்கிறோம்."

"எதற்காக இவ்வளவு ராட்டினங்கள். சோழ தேசத்தி லுள்ள அத்தனை ராட்டினங்களும் தேய்ந்து விட்டனவா?"

"இவ்லை. வீட்டிலுள்ள ராட்டினங்கள் தேயவில்லை. இவை கட்டிடம் கட்டுவதற்காக, கோவில் கட்டுவதற்காக உத்தரவு கொடுக்கப்பட்டு செய்யப்படுகின்றன."

"கோவிவ் கட்ட இந்த ராட்டினங்கள் எப்படி பயன்படும்?" ஒரு படைவீரன் கேட்டான்.

அந்தக் கருமான் ராட்டினங்களை எடுத்துத் தரையில் விதவிதமான கோணங்களில் வைத்தான்.

இளவரசர் இராஜேந்திரர் கீழிறங்கி அந்தக் கருமானை உன்னிப்பாகப் பார்த்தபடி அருகே வந்தார்.

எங்கும் இளவரசர் தன்னை வெளிப்படுத்திக் கொள் வதில்லை. இவர்களாகக் கண்டுபிடித்தால்தான் உண்டு என்று வீரர்கள் மனதுக்குள் நினைத்துக் கொண்டார்கள்.

107

சோழ தேசத்து ஆண்கள் படையெடுப்பிற்காக வெகு தூரம் போய்விட்டதால், கறுசுறுப்பான சோழ தேசத்துப் பெண்கள் வீட்டில் என்ன செய்வது என்று தெரியாமல் உட்கார்ந்திருந்தார்கள். ஆண்களுக்குப் பதிலாக வயல் வேவை களைத் தாங்களே நின்று மேற்பார்வை பார்த்தார்கள். இறங்கி ஏர் பூட்டி உழுவதைத் தவிர மற்ற எவ்வா வயவ் வேலைகளையும் செய்தார்கள்.

உளுந்தும், துவரையும் போட்டு காப்பாற்றி நன்கு வளர்த்து அறுவடை செய்து வீட்டிற்கு அறுத்துக் கொண்டு வந்து, பயிரிலிருந்து தானியத்தைப் பிரித்து, சேமித்து வைத்துக் கொண்டார்கள். வேர்க்கடவையும், திலதம் என்கிற எள்ளையும் கொண்டு போய் வணிகர்களிடம் கொடுத்து, அவர்கள் ஆட்டிக் கொடுக்கும் எண்ணெயை வீட்டிற்குக் கொண்டு வந்தார்கள்.

'என் தகப்பனும், என் புருஷனும், என் தம்பியும் போருக்குப் போயிருக்கிறார்கள். எந்த தேசத்தில், எங்கு போய், என்ன சாப்பிடுகிறார்களோ எந்த மரத்தடியில் துவண்டு கிடக்கிறார்களோ தெரியவில்லை.

இங்கு நல்ல விளைச்சல், வீடு முழுவதும் தானியம். விதம் விதமான தின்பண்டங்கள் செய்யலாம். ஆனால், செய்து தின்ன மனம் வரவில்லை. என்ன செய்வது. இப்படியே தானியத்தை விட்டாலும் நல்வதிவ்லை. பூச்சி அரித்துப் போகும்' என்று சொல்லி தானியங்களை மாவாக அரைத்து, மாவாக அரைத்ததைத் தின்பண்டமாக மாற்றினார்கள்.

அரிசிப் புட்டும், அதிரசமும், தேன் குழலும், வடையும், எள் உருண்டையும் செய்தார்கள். பெரிய தட்டிலே எடுத்துக் கொண்டு போய் கடைத் தெருக்களிலே கூவி விற்றார்கள். அப்படிச் செய்த பண்டங்களை ஊர் தாண்டி எடுத்துக் கொண்டு போய் கருமார் புலத்திலேயும், பொற்கொல்லர் புலத்திலேயும், நெசவாளர்களுக்கு நடுவேயும் கொண்டு போய் விற்றார்கள்.

தானியம் பயிர் செய்து, அறுத்து வீட்டுக்குக் கொண்டு வர வசதியில்லை. நேரமும் இல்லை. எனவே தானியங்களை வாங்கிக் கொள்ளவும், தின்பண்டங்களை ருசித்துப் பார்க்கவும் கருமார் கூட்டத்தினர் அதிகம் விரும்பினார்கள்.

பதிலுக்குக் காசாகவும், பொருளாகவும் கொடுத்தார்கள். இரும்புச் சட்டியும், இரும்பு அடுப்பும் வாங்கினார்கள். நீண்ட கரண்டியைக் கருமார்கள் செய்து கொடுத்தார்கள். துணியும், பொன் நகையும் எளிதில் கிடைத்தன. பெண்கள் சந்தோஷ மானார்கள்.

அந்த மாதிரி ஒரு பெண் கருமார் குலத்தில் சிகப்பு அரிசியும், தேங்காய் துருவலும் கலந்த இனிப்புப் புட்டை விற்றாள். ஒரு பாத்திரம் நிறைய தேன் குழல் கொண்டு வந்து வைத்திருந்தாள். கருமார் குலத்துக் குழந்தைகள் அவள் வருகையைப் பார்த்ததும், வீட்டிலுள்ளோரை போய் அழைத்து வந்து, தின்பண்டங்கள் வாங்கச் சொல்லி வற்புறுத்தினர்.

உழைத்துக் களைத்த கருமார்களும் இடைவேளையில் ஏதேனும் ருசித்துத் தின்பதற்காக, அடுப்பினுடைய வேகத்தைக் கவனித்தபடியே நொறுக்கித் தின்பதற்காக இவளிடம் தேன்குழல் வாங்கினார்கள்.

அந்தப் பெண்மணி மகளோடு வந்து உட்கார்ந்து கொள்வாள். சில சமயம் மகளை மட்டுமே இருக்க வைத்துவிட்டு எங்கேயாவது போய் விடுவாள். அரண்மனைக் கருகே வசிப்பதாகவும், அவளுடைய புருஷன் ஸ்ரீ இராஜராஜரின் மெய்க்காவல் படையில் இருப்பதாகவும் கருமாரிடம் சொன்னாள். கருமார்கள் அவளைக் கனிவோடு பார்த்தார்கள்.

ஸ்ரீ இராஜராஜர் தஞ்சையை விட்டுப் போய் மூன்று வருடமாகிறது. அவரும் திரும்பவில்லை. அவரைச் சுற்றியுள்ள வீரர்களும் திரும்பவில்லை. மூன்று வருடமாக புருஷன் எங்கிருக்கிறான்? எப்படி இருக்கிறான் என்று தெரியாமல், புட்டும், தேன்குழலும் விற்றுக் கொண்டிருக்கிறாளே பாவம் என்று ஒரு எண்ணம் தோன்றியது. அவளுக்கு உட்கார்ந்து விற்பதற்குச் சரியான இடம் காட்டினார்கள். குடிக்க நீரும் உணவும் கொடுத்தார்கள்.

அவள் அதிகம் பேசாமல் கருமாருடைய வேலைகளைக் கவனித்துக் கொண்டிருப்பாள்.. அவர்கள் ஏதேனும் உரக்கக் கத்தினால் போய் நின்று என்ன என்று கேட்பாள். அவர்கள் சண்டையிடுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பாள். மறுபடி தன்னுடைய இடத்திற்கு வந்து வியாபாரத்தைக் கவனிப்பாள்.

"நாங்கள் ஏதோ பேசிக் கொள்கிறோம்... நீ ஏன் வந்திருக் கிறாய்..." என்று கேட்க, "எனக்குப் பொழுது போகவில்லை. அதனால் வந்தேன்..." என்று பதில் சொன்னாள்.

"அவள் நடவடிக்கை சந்தேகத்திற்கு உரியதாக இருக் கிறதா..." என்று ஒரு வாலிபன் கேட்க, மற்ற பெண்கள் அவளுக்கு ஆதரவாக வந்தார்கள்.

"அவளுக்குப் பொழுது போகவில்லை. வந்து உங்கள் சண்டையைக் கவனிக்கிறாள். இதற்குப் போய் சந்தேகப்படு வானேன்..." என்று அலட்டிக் கொண்டார்கள். அதனால் அவள் இருப்பு அங்கே சௌகரியமாயிற்று. கதந்திரமாயிற்று.

காலையில் கொண்டு வந்த தின்பண்டங்கள் அத்தனையும் விற்றுவிட, போதும் என்று பாத்திரத்தை தூக்கிக் கொண்டு திரும்பப் போக எழுந்தபோது, குதிரை வீரர்கள் உள்ளே வருவதும், கருமார் புலத்தைச் கற்றி வருவதும் அவளுக்குத் தெரிந்தது.

சட்டென்று அவள் கூர்மையானாள். பத்து நாட்களுக்கு முன்பு அதிகாரிச்சிகள் அவளைத் தனியே கூட்டிக்கொண்டு போய் என்ன விற்கிறாய்? எங்கே விற்கிறாய் என்றெல்லாம் கேட்டு, அவன் புருஷனைப் பற்றிய விவரங்களை லாங்கிக் கொண்டு, அவனைப் பற்றிய தகவல்களை நிச்சயம் விசாரித்துச் சொல்கிறோம் என்று உறுதி கூறி அவளிடம் ஒரு உதவி கோரினார்கள்.

"யார் கருமார் புலத்தில் நுழைந்தாலும், என்ன வித்தியாசமாக நடந்தாலும், அதை உடனடியாக அரண்மனையிலுள்ள அதிகாரிச்சிகளுக்கு அறிவிக்க வேண்டும்" என்று கட்டளையிட்டிருந்தார்கள். நல்ல தகவலாக இருந்தால் சன்மானம் நிச்சயம் உண்டு என்று ஆசை காட்டியிருந்தார்கள்.

அவள் காலியான பாத்திரத்தைப் பார்த்தாள். திரும்பிப் பெண்ணைப் பார்த்தாள்.

"ஓடு... ஓடிப்போய் தேன் குழலும், அதிரசமும் இதிவ் நிரப்பி எடுத்துக் கொண்டு வா. இன்னொரு பாத்திரத்தில் புட்டு வைத்திருக்கிறேன். அதையும் எடுத்துக்கொண்டு வா..." என்று கட்டளையிட்டாள்.

"உன்னால் தூக்க முடியவில்லையென்றால் உன் அண்ணனை வரச்சொல்..." என்று காதோரம் ரகசியமாகக் கூறினாள்.

குழந்தை அந்த இடத்தை விட்டு வேகமாக ஓடிற்று. அந்த பலகாரக்காரி இன்னும் அருகே போய் அந்தக் குதிரைகளையும், வீரர்களையும், இதுவரை பார்த்தேயில்லாத விஷயங்களைப் போல பார்க்கத் துவங்கினாள்.

முகத்தில் ஒரு அப்பாவித் தனத்தை வளர்த்துக் கொண்டாள்.

ஒரு தலைவனைப் போலிருந்த அந்தக் குதிரை வீரன் நிதானமாக கருமார் சொன்ன ராட்டினங்களைப் பார்த்துக் கொண்டிருக்க, அவர்கள் அடுக்கி வைத்த அமைப்பைப் பற்றிக் கேள்விக் கேட்டுக் கொண்டிருக்க, மற்ற வீரர்கள் கருமார் புலத்தின் நாவாபுறமும் பார்த்துக் கொண்டும், சிரித்துக் கொண்டும், கருமார் பெண்களின் நடை உடை பாவனைகளை உற்றுக் கவனித்துக் கொண்டும் இருந்தார்கள்.

வெகுநாள் பெண்களோடு தொடர்பு இல்வாதபடியால் உள்ளுக்குள் சாதாரண பெண்களைப் பார்த்ததும் காமமும், குதூகலமும் கிளற சில வார்த்தைகளை அதிகமாகவே உதிர்த்தார்கள்.

அந்தத் தலைவனைப் பின் தொடருவதைவிட, இந்த வீரர்களுக்கு அருகே போய் நின்று கொண்டால் ஏதேனும் பேசுவது கேட்கும் என்று திசைமாறினாள். இடம் மாறினாள். வீரர்களுக்கு அருகே போய் நின்றாள்.

"இன்று இரவே தஞ்சையில் நுழைந்து விடுவார் என்று நினைக்கிறாயா."

"ஆமாம். இன்று இரவே நுழைந்துவிடுவார்."

"கருமார் குலத்தில் எதற்காக இப்படிச் சுற்றிக் கொண்டிருக்கிறார்?"

"இந்த இடமும், தஞ்சைக்கு அருகே இருக்கின்ற கருந்தட்டாங்குடியும் வெகு சீக்கிரம் பிரபல்யம் அடையப் போகின்றன என்று திருவொற்றியூரில் இருந்தபோது அவர் சொன்னதாக ஞாபகம். கோயிலுக்கான வேலைகளை அவர்கள் செய்து முடித்ததும், இன்னொரு மிகப்பெரிய படையெடுப்புக்கான ஆயத்தங்களை அவர்கள் செய்வதற்குண்டான உதவிகளை நாம் செய்ய லேண்டுமென்று பேசியதாக ஞாபகம்.

கருத்தாட்டங்குடி கருமார்களைவிட, குடந்தையின் இந்தக் காவிரிக் கரையோரக் கருமார்கள் மிகுந்த கெட்டிக்காரர்கள். கூர்மையான முனையுள்ள மெல்லிய அம்புகளைச் செய்வதில் கை தேர்ந்தவர்கள். காவிரிக்கரை பிரம்பு, வைரம் பாய்ந்த மூங்கில் என்று பல்வேறு விஷயங்கள் இவர்களுக்குத் துணையிருக்கின்றன.

வட்சக் கணக்கில் அம்புகள் செய்து பார வண்டிகளில் ஏற்றி திருவொற்றியூர் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அருகே போய் கத்தியும், ஈட்டியும் வைத்து சண்டையிடுவதை விட தொலைவில் நின்று இடையறாது அம்பை எய்து தீப்பந்தம் எறிந்து எதிரியை நிலைகுலைய வைக்க வேண்டும் என்பது அவர் விருப்பம். மேலும் கடற்பயணம் செய்ய வேண்டும் என்பது இவருடைய ஆசை.

அப்படிக் கடற்பயணம் செய்ய வேண்டுமென்றால் வில்லும், அம்பும்தான் எதிரியை அழிப்பதற்கு எளிதான வழி.

குடந்தைக் கருமார் புவம் நம்முடைய இராஜேந்திரருக்கு மிகப் பெரிய விஷயம்."

"ச்க... பெயர் சொல்லாதே. எத்தனை முறை சொல்வது உனக்கு. யாரேனும் கேட்டுத் தொலைக்கப்போகிறார்கள்." ஒருவன் அதட்டினான்.

"யாரப்பா கேட்பார்கள். கேட்பதற்கு அருகே யார் இருக்கிறார்கள். இந்தப் பெண்ணைத் தவிர."

அலள் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்தாள். மிகுந்த அப்பாவித்தனத்தைக் கண்களில் காட்டினாள்.

"இராஜேந்திரரா... இவர்தான் ராஜேந்திரரா..."

கணநேரம் அவள் கண்கள் ஒளி பெற்றன. மறுபடியும் சாதாரணமாயின.

அவளுடைய பெண் பிள்ளை தூக்கமுடியாமல் தூக்கிக் கொண்டு பலகாரப் பாத்திரத்துடன் ஓடிவந்தது. பையனும் புட்டுப் பானையுடன் அருகே வந்தான்.

அவள்... பையனை மெல்ல நகர்த்திக் கொண்டு போனாள். "போய் அதிகாரிச்சியிடம் கடற்புலி வந்திருக்கிறது. குடந்தை கருமார் புலத்தைச் சுற்றிக் கொண்டிருக்கிறது என்று தெரிவி." என்று சொன்னாள்.

"எங்கிருப்பாள் என்று தெரியுமா. திருச்சத்தி முற்றத்திற்கு. அருகேயிருக்கிறது அவளுடைய வீடு. எனவே இங்கிருந்து நீ ஓடிப்போய் சொன்னால்தான் முடியும். எந்த இடத்திலும் நிற்காமல், வேறு எவரிடமும் சொல்லாமல் விரைலாய் நீ ஓடிப்போய் சொல்லிவிட்டு வா."

அந்தப் பையன் சட்டிகளைக் கொடுத்துவிட்டு மெல்ல கருமார் புலத்தைவிட்டு நடந்து போனான். பிறகு திபுதிபுவென்று ஓடத் துவங்கினான். யாரோ அடித்துத் துரத்தியதுபோல் ஓடுவனதப் பலர் வேடிக்கை பார்த்தார்கள்.

அலள் பாத்திரத்துடன் இளவரசர் ராஜேந்திரருக்கு அருகே போனாள். திறந்தாள்.

"தேன் குழல் வாங்கிக் கொள்கிறீர்களா? அதிரசம், வெல்லப்புட்டு இருக்கிறது வேண்டுமா. ஒரு கை புட்டு ஒரு காசு. மூன்று காசுக்கு மூன்று அதிரசம், ஐந்து தேன்குழல்..."

"வேண்டாம்... என்று இளவரசர் சொல்லிவிட்டு, ராட்டினங்களை உற்றுப்பார்க்க, அங்குள்ள குழந்தைகள் ஆவவோடு பாத்திரத்தைப் பார்ப்பதைப் பார்த்துவிட்டார்.

"உன் பாத்திரத்தில் இருக்கின்ற பலகாரங்களுக்கு என்ன விலை."

"பத்து காக இருக்கும். ஏன் மொத்தமும் வாங்கிக் கொள்கிறீர்களா?" – ஆவவோடு கேட்டாள்.

"சரி. கொடு" – அவர் அந்த வீரனுக்குக் கண்காட்ட, அந்த வீரன் பத்து காககள் எடுத்து அலளிடம் நீட்டினான்.

அவள் பாத்திரத்தை இளவரசர் முன்பு வைத்தாள். இளவரசர் குனிந்து தேன் குழலைப் பார்த்தார். மெல்ல எடுத்தார்.

சிவந்த நிறத்திலிருந்த தேன் குழலைப் பார்த்ததும் கடித்துச் கவைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஒன்றை எடுத்துக் கடித்துச் கவைத்தார்.

மற்ற வீரர்களும் அருகே வந்தார்கள். "எடுத்துக் கொள்ளட்டுமா..." என்று அவரைக் கேட்டார்கள்.

"ம்ம்.. அனுபவியுங்கள்." என்று சொவ்ல, அவர்களும் கை வைத்தார்கள்.

வீரர்கள் எடுத்துக் கொண்டதும் பாத்திரத்தை எடுத்து அங்குள்ள குழந்தைகளிடம் நீட்டினார். குழந்தைகள் ஆளுக்கொன்று எடுத்துக் கொண்டார்கள். வயதான கிழவர்கள் கைநீட்டி குழந்தைகளிடமிருந்து வாங்கிக் கொண்டார்கள்.

சிறிது நேரத்தில் பாத்திரம் காலியாகியது.

"ரொம்ப ருசி... ரொம்ப ருசி. இன்னமும் குழல் இருக்கிறதா?" இளலரசர் ஆவலாகக் கேட்டார்.

"இல்லையே... கட்டதெல்வாம் கொண்டுவந்து விட்டேனே. நாளைக்குக் கொண்டு வரட்டுமா..." பலகாரக்காரி ஆவலுடன் கேட்டாள்.

"லேண்டாம். ருசியாக இருந்தது. அதனால் கேட்டேன். மறுபடியும் இந்தப் பக்கம் வருகிறபோது உன்னைத் தேடி உன்னிடம் வாங்கிக் கொள்கிறேன்."

அடுத்ததாக இளவரசருடைய கவனம் அம்புகள் மீது சென்றது.

108

"ஏன் அம்புகள் தயாரிப்பதில்லை?"

"கேட்பதில்லை."

"அறவே நிறுத்தி விட்டீர்களா...

"வேடுவர்களுக்கு மட்டும் நூறு, நூற்றி ஐம்பது அம்புகள் தருகின்றோம்."

"படை வீரர்கள் எவரும் வாங்குவதே இல்லையா?"

"படையெடுப்பேயில்லை... எங்கிருந்து படைவீரர்கள் வாங்குவார்கள்...?"

"தஞ்சைக்கு அத்தனை மறவர்களும் திரும்பி விட்டார்களா...?"

"இல்லையே."

"வெளியூரிலிருக்கின்ற மறவர்களுக்கு ஆயுதம் போக வேண்டாமா?"

"அங்கங்கே கருமார்களை வைத்து தயார் செய்து கொள்கிறார்கள் என்று கேள்விப்பட்டோம். அம்புகளுக்கு இங்கு வந்துதான் ஆகவேண்டும். ஆனால், அம்புகள் வைத்து செய்கின்ற யுத்தம் எதுவும் இல்லையென்றும் எங்களுக்குத் தெரிய வந்தது."

"ஆமாம். இப்போதைக்கு அவ்விதம் எதுவும் இல்லை. ஆனால், இனிமே இருக்கும். அம்புகள் செய்வதை மறந்து விடாதீர்கள்."

"இல்லை. அதிகம் அம்புகள் செய்து சேர்த்து வைத்தால் ஈரம் பட்டு உளுத்துப் போய்விடக் கூடும். அம்புகளின் வலிமை குறைந்துவிடும். அதனால் பிரம்புகளைக் காய வைத்து, குடிசையில் அடுக்கி வைத்து விடுகிறோம். அம்புகளாகச் செய்வதில் சிரமம் இருக்கிறது. அம்புகளாகச் செய்துவிட்டால் நாங்கள் வைத்துக் கொள்ளக் கூடாது. உடனடியாக வெளியே அனுப்புவதுதான் நல்லது."

"ஏன் அப்படிச் செய்கிறீர்கள்?"

"இல்லையெனில், இங்குள்ள இளைஞர்கள் அதை எடுத்து வில் தொடுத்து ஒருவர்மீது ஒருவர் எய்து கொள்ள, சில சமயம் விபரீதங்கள் ஏற்பட்டு விடுகின்றன. சிரங்கு பிடித்தவன் கையும், இரும்பு பிடித்தவன் கையும் சும்மாயிருக்குமா. அம்ப மிக

மோசமான ஆயுதம். அதை நாங்கள் அடுக்கி வைத்துக் கொள்வதேயில்லை.

"எனக்குப் புரிகிறது. ஆயினும், வடக்கே திருவொற்றியூரி லிருந்து உங்களுக்கு அம்பு செய்வதற்கு உத்தரவு வரும்."

"யார்... இளவரசர் இராஜேந்திரரா... திருவொற்றியூரில் இராஜேந்திரர் இருக்கிறார் என்று எங்களுக்குச் சொல்லப் பட்டதே."

"இராஜேந்திரடமிருந்து உத்தரவு வராது. அவருடைய சேனாதிபதிகளிடமிருந்து வரும். எனவே, சில ஆயிரம் அம்புகளை நீங்கள் இந்த மாதம் இறுதிக்குள் தயாரித்து வைக்கலாம். நல்வ நாள் பார்த்து வேலையை ஆரம்பித்து விடுங்கள். உங்களிடமிருக்கும் சிறந்த அம்புகளை எக்குக் கொடுங்கள்... என்று சொல்லி, வில் எடுத்து லரச் செய்து, அம்புகளை சோதித்துப் பார்த்து, வில்லில் தொடுத்து உயிரே எறிந்தும், மரங்களைத் துளைத்தும் நுனிக்கிளைகளைத் தறித்தும் வித்தை செய்து காட்டினார். வில் நன்கு வளையவில்லை. இல்லையென்றாவ் அம்புகள் வெகு தூரம் சீறிப்பாயும். இலக்கு தவறாமல் லேகமாகப் போகிறது. காற்றுக்கு எதிராகப் போகவும் அம்புக்கு வலுவிருக்கிறது.

அம்பின் பின்பகுதியில் ஒரு சாண் நீளத்திற்கு இறகு வைப்பது நல்லது. ஒரு சில அம்புகளிவ் நான்கு விரற்கடைகள் இறகு வைப்பது நல்வது. ஒரு சாண் அம்பு வைத்தால் அருகிவ் இருக்கிற இலக்குகளை இந்த அம்பு கடுமையாகத் தாக்கும். தொலைதூரமுள்ள இலக்குகளை நாலுவிரற்கடை இறகு இருக்கின்ற அம்புகள் தாக்கும். பிரம்பிலிருந்து எஃகு விவகி இல்லாமல் பிரம்பின் நுனிக்குள் வெகு சின்னதாய் கூம்பாய் வைக்க முடியுமா என்று பாருங்கள்.

அந்த மாதிரி அம்பைக் குடமலை நாட்டின் லேடுலர் களிடம் பார்த்தேன். அம்புகளின் நுனியில் அணிந்து கொள்ளக் கூடிய சிறிய கூம்புத் தொப்பிப் போல ஒரு இரும்பு லடிவத்தை மிக அழுத்தமாக பிரம்பிலே சொருகி விடுகிறார்கள். காற்றை எதிர்த்துக் கிழித்துப் போகின்ற அவசியம் அம்புக்கு இல்லாமல், வெகுதூரம் அந்த அம்பு போகிறது... என்று அவர் மண்ணில் படம் வரைந்து காட்ட, கருமார்கள் கற்றி நின்று புரிந்து கொண்டார்கள்.

ஒரு தாமிரத் தகட்டை அப்படி வளைத்து ஒருலன் பிரம்புக்குள் அழுத்திக் காட்ட, அந்த அம்பு அவரிடம் கொடுக்கப்பட்டது. அதை அலர் லளைத்து இழுக்க, அம்பு வெகுதூரம் போய் காவிரி நீரில் விழுந்தது.

"மிகுந்த அருமையான வேலையைச் செய்கிறீர்கள். சொன்னவுடன் புரிந்து கொள்கிறீர்கள். குடந்தைக் கருமார்கள் பற்றிய பெருமை லெகுதூரம் பரவியிருக்கிறது. கீழைச் சாளுக்கிய தேசத்தில் உங்கள் ஆயுதங்களை லாங்கிப் பார்க்காத வீரர்களேயில்லல. எப்படித் தயாரிக்கிறீர்கள்... எப்படித் தயாரிக்கிறீர்கள் என்று பல்லேறு விதமாக கேள்விகள் கேட்கிறார்கள். எல்லாப் புகழும் குடந்தைக் கருமார்களுக்குச் சேர்ந்தது."

இளவரசர் இராஜேந்திரர் வாயாரச் சொல்ல, அவர்கள் எல்லோரும் முகம் மலர்ந்தார்கள்.

"இளவரசருக்கு எங்கள் அன்பைச் சொல்லுங்கள். நீங்கள் எப்பொழுதும் திருலொற்றியூர் போவீர்கள்?" என்று கேட்டார்கள்.

"இப்பொழுதுதான் பழையாறையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேன். பிறகு தஞ்சையை நோக்கிப் பயணம். தஞ்சையில் சிறிது நாள் தங்கி பிற்பாடு திருவொற்றியூர் செல்லேன். போகும் பொழுதும் உங்களைப் பார்க்கிறேன். அதற்குள் ஆயிரம் அம்புகள் நான் சொன்னவிதமாக தயாரித்து விட முடியுமா?" என்று கேட்க, "நிச்சயம் முடியும்." என்று அவர்கள் வாக்குக் கொடுத்தார்கள்.

"நீங்கள் யார் என்று சொல்லவில்லையே?" ஒரு இளைஞன் அவரைப் பார்த்துக் கேள்வி கேட்டான்.

"நான் ஒரு சேனாதிபதி."

"உங்கள் பெயரென்ன...?"

"அது ஒன்றும் முக்கியமில்லை. நான் பெரிய ஆள் இல்லை. ஆயுதங்களை உற்றுப் பார்த்து வாங்குலதற்கு எனக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. ஆயுதங்கள் வாங்க வேண்டும் என்றுதான் என்னை இளவரசர் இந்தப் பக்கம் அனுப்பி யிருக்கிறார். இலர்களுக்கு ஏதாவது முன் பணம் கொடுங்கள்..." என்று வீரர்களைப் பார்த்துச் சொல்ல, ஒரு பை நிறைய பொற்கழஞ்ககள் கொடுக்கப்பட்டன.

"அடேடே... இவ்வளவு காசு எதற்கு? ஆயிரம் அம்பு களுக்கு மேல் காசு கொடுத்திருக்கிறீர்களே."

"ஆயிரம் அம்புகளோடு நின்றுவிடாது. அதற்கு மேலும் தேவைப்படும். எனவே பொற்காசுகளைக் கணக்கில் வைத்துக் கொள்ளுங்கள். பிற்பாடு அழகாக தீர்த்துக் கொள்ளலாம்."

அவர் கட்டளையிட்டு குதிரையேறினார்.

"உங்கள் பெயரைச் சொல்லாமலேயே போகிறீர்களே. அப்படியென்ன ரகசியமான பெயரா...?"

"அவர் பெயர் உங்களுக்குத் தெரிந்தாக வேண்டுமா." சேரியின் விளிம்பிலிருந்து ஒரு குரல் கேட்டது. அதிகாரிச்சி வனமுடையாள் குதிரை மீது உட்கார்ந்திருந்தாள்.

அவள் ராஜேந்திரரைப் பார்த்து மெல்லச் சிரித்தாள். ராஜேந்திரருக்கு அவள் யாரென்று புரிந்து விட்டது.

"நீங்கள் பேசிக் கொண்டிருப்பது எவரும் இல்லை. சோழ தேசத்தின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம், விடிவிளக்கு, உதயசூரியன், சோழப்பேரரசை கங்கை வரை பரப்பப் போகின்ற மாமன்னர், நாளைய சோழ தேசத்தின் சக்ரவர்த்தி. இன்றைய சோழ தேசத்தின் இளவரசர் இராஜேந்திரர்..." என்று உரக்கச் சொல்ல, வீரர்கள் எழுந்து நின்றார்கள்.

கருமார்கள் நிலம்படிய விழுந்து வணங்கி எழுந்தார்கள். இளவரசர் காலைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண் டார்கள். கைகளைப் பற்றி சிரசில் வைத்துக் கொண்டார்கள்.

"என்னய்யா இது... என்னய்யா இது... இப்படி வந்துவிட்டுப் போகிறீர்களே. இது நியாயமா..." ஒரு கிழவன் புலம்பத் துவங்கினான். ஓடிப்போய் இளவரசருடைய கைகளைப் பற்றிக் கொண்டான்.

"உங்களை எந்த வரவேற்புமில்லாமல் மிகச் சாதாரணமாக நடத்தினோமே. சோழ மக்கள் பொறுத்துக் கொள்வார்களா. தண்டித்து விடுவார்களே ஐயா. நன்றாக இருக்கிறது. ஒரு கருமார் புலத்தில் வந்து எந்த உணவும் எடுத்துக் கொள்ளாமல், எந்த உபசாரமும் பெறாமல், எந்த வாழ்த்தும் பெறாமல் நீங்கள் வெளி யேறலாமா. நல்லவேளை... வனமுடையாள் காப்பாற்றினாள். வாருங்கள்... வாருங்கள்..." என்று சொல்ல, கொம்புகள் ஊதப் பட்டன. முரசு அறையப்பட்டது கருமார்ச்சேரியின் தொலை வில் இருந்தவர்களெல்லாம் ஓடி வந்தார்கள். இளவரசருக்கு

இடுப்புயர மிக நீளமான பட்டாக் கத்தியை அவர்கள் பரிசளித்தார்கள்.

"இது இடுப்பில் அணிந்து கொள்கின்ற லாளல்ல; முதுகில் அணிந்து கொள்கின்ற வாள்..." என்று எப்படி அணிந்து கொள்ள வேண்டுமென்று காட்டினார்கள்.

"நான் வருவது உனக்கு எப்படித் தெரிந்தது வனமுடையாள்...?" இளவரசர் கேட்டார்.

"இங்கு ஆள் வைத்திருக்கிறேன். உங்கள் வருகை இங்குள்ள ஆளால் எங்களுக்குச் சொல்லப்பட்டது..."

கருமார்ப் புலம் சட்டென்று கூர்மையாகியது. யார் அந்த ஆள் என்று ஒருவரையொருவர் கண்களால் வினவிக் கொண்டது. பலகீரக்காரி என்பது புரிந்து போயிற்று.

கருமார்கள் லேசாகக் கோபமானார்கள். வனமுடையாளை எரிச்சலோடு பார்த்தார்கள்.

வனமுடையாள் செய்த உதவி மறந்து போய், வனமுடையாள் போன்ற அதிகாரிகள் தங்களை வேவு பார்க்க ஆட்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கோபம் அவர்களைத் தொந்தரவு செய்தது.

எல்லோரும் அமைதியாக நின்றிருந்தார்கள். கண் கொட்டாமல் சோழ தேசத்தின் இளவரசர் இராஜேந்திரரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கருமார்களில் வயதானவர்கள் கைகள் கூப்பி, கண்களில் நீர் பனிக்க, உதடு துடிக்க 'இளவரசர்... இளவரசர்' என்று பிதற்றிக் கொண்டிருந்தார்கள். பெண்கள் வேகமாகக் குவவையிட்டார்கள். அடங்கினார்கள். அருகே வந்து நின்று புடவையால் தோளைப் போர்த்திக் கொண்டு கைகூப்பியபடி அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அரச மரத்து சிறு மேடையில் ஏறி நின்று சகலரையும் கனிவோடு ராஜேந்திரர் பார்த்துக் கொண்டிருந்தார்.

இதுவரை எந்தச் சோழ அரசரும் செய்யாத ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று அவர் மனம் துடித்தது. அருகே நின்ற தன்னுடைய அந்தரங்கப் படை வீரனின் தோளைப் பிடித்து இழுத்தார். காதோரம் கிசுகிசுத்தார். அவன் திரும்ப விழிவிரித்து அவரைப் பார்த்தான். சரியென்று தலையசைத்தான். இன்னொரு வீரனிடம் தனக்குச் சொல்லப்பட்டதைச் சொன்னான். இரண்டு வீரர்களும் வேகமாக எதிரேயிருந்த

கூட்டத்தை மெல்ல நகர்த்தி, "லரிசையாகுங்கள் வரிசையாகுங்கள்..." என்று உத்தரவிட்டார்கள். பெரியவர்களை முன்னே கொண்டு வந்து வரிசையாக நிற்க வைத்தார்கள். வாலிபர்களை அதற்குப் பிறகு நிற்கச் சொன்னார்கள். அதற்குப் பிறகு பெண்களையும், குழந்தைகளையும் நிற்க வைத்தார்கள்.

ஊருக்குப் பெரியவர் யார் என்று விசாரித்து எதிரே கொண்டு வந்தார்கள்.

கருமார் கிராமத்திலுள்ள காளி கோயிலிருந்து பூசாரி ஓடி வந்தார். அவர் கையில் மிகப் பெரிய மல்லி மாலை இருந்தது. செண்பக மொட்டுக்களால் செய்த வட்டம் இருந்தது.

காளியினுடைய நெற்றியிலே சார்த்திய மஞ்சளும், குங்குமமும் இருந்தன. அதனை எடுத்துக் கொண்டு ஓடிவர, பூசாரியின் கையிலிருந்த பிரசாதங்கள் பெரியவரிடம் மாறின. பெரியவர் மாலையை இராஜேந்திரரின் கழுத்தில் போட்டார். செண்பக வட்டத்தை இராஜேந்திரரின் வலது கையில் வளையல் போல் மாட்டினார். மஞ்சளை எடுத்து நெற்றிப் பொட்டாக இட்டு மார்பில் தடவினார். குங்குமமிட்டார். பூசாரி உடுக்கையை வேகமாக முழக்கினான். கையிலிருந்த விபூதியைப் பிடியெடுத்து இடமும், வலமுமாக கற்றி 'பூ' என்று முழு பலத்தோடு இராஜேந்திரரின் தலைக்கு மேல் ஊதினான். கையிலிருந்த விபூதியை நாலாபுறமும் வீசினான்.

இராஜேந்திரரைச் கற்றியுள்ள பேய்களெல்லாம் ஓடிவிட வேண்டுமென்று மீண்டும் வேகமாக உடுக்கு அடித்தான். அவர் மீது பட்ட திருஷ்டியெல்லாம் போக வேண்டுமென்று சொல்லிச் சொல்லி உடுக்கு அடித்தான். மறுபடியும் பெண்கள் குலவையிட்டார்கள். மெல்ல பூசாரியை வீரர்கள் விலக்க, இராஜேந்திரர் மேடையை விட்டு கீழிறங்கினார். எதிரே நின்ற பெரியவரைக் கைகள் விரித்து ஆரத் தழுவிக் கொண்டார். இறுக்கி அணைத்துக் கொண்டார்.

ஜனங்கள் ஒரு சின்ன பயத்திலும், கலவரத்திலும் கத்தினார்கள்.

எந்த அரசனும் கருமாரை இப்படி இறுக்கி அணைத்துக் கொள்வதில்லை.

கருமார்கள் நான்காவது லர்ணம். அவர்களிடம் நெருங்கி நின்று பேகவதில்லை. ஒரு கோல் தூரத்தில் நிற்க வைத்துதான் பேச வேண்டுமென்று சட்டம் இருக்கிறது.

அந்தணர்கள் அப்படித்தான் பேசுவார்கள். அந்தணர்கள் அப்படிப் பேசுவதால் க்ஷத்திரியர்களும், லைசியர்களும் அப்படியேதான் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் இப்பொழுதுதான் ஒரு அரச குடும்பத்தைச் சேர்ந்த பெரிய மனிதர் எந்து நின்று ஆர கருமாரைத் தழுவிக் கொள்கிறார். இறுக்க அணைக்கப்பட்ட பெரியவர் திகைத்துப் போய், பயந்துபோய் கூப்பிய கை பிரிக்காமல் இளவரசரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

இளவரசர் அடுத்த ஆள் நோக்கி நகர்ந்தார். அவரையும் தழுவிக் கொண்டார். இன்னும் நகர்ந்தார். மூன்றாவது ஆளையும் தழுவிக் கொண்டார். ஒவ்வொரு ஆளாக தொட்டுத் தடவி... தழுவிக்கொண்டு அலர்கள் சிவரின் கைகளை கண்களில் ஒற்றிக்கொண்டு, சிலர் கன்னத்தை வருடி, சிவர் தலையைக் கலைத்து சந்தோஷமாக எல்லாருடனும் சின்னச் சின்ன உரையாடல்களை நிகழ்த்தியபடியே போனார். பெண்களின் விரல்களைப் பிடித்து கண்ணில் ஒற்றிக் கொண்டார். இளம் பெண்களின் மூக்கை நிமிண்டினார். காது திருகினார். பருவத்திற்கு வராத சிறிய பெண் குழந்தைகளை அணைத்துக் கொண்டார். உன் பெயரென்ன என்று கேட்டார். எப்பொழுது கல்யாணம் என்று விசாரித்தார். அவர்கள் வெட்கப்பட, கேலி செய்தார். கூட்டம் பெரிதாய் சிரிக்க, அவர்கள் தலையைத் தடவி ஆசீர்வாதம் செய்தார்.

கிழவிகளுக்கும், சிறுவர்களுக்கும் இதே விதமான மரியாதை நடந்தது. கிட்டத்தட்ட நூறு பேருக்கு மேல் கொண்ட அந்தக் கிராமத்தினுடைய மக்கள் அனைவரோடும் அலர் நெருங்கி நின்றார். எல்லோரும் வட்டமாய் வளைத்துக் கொள்ள அந்தக் கிராமத்தைச் சுற்றி மெல்ல நடந்தார்.

"ஏன் கிராமம் இவ்வளவு நசநசப்பாய் இருக்கிறது?"

"இல்லை. இது இரும்பு காய்ச்சி அணைத்த தண்ணீர்."

"இந்த நீர் ஓடுவதற்குச் சரியான வழியில்லையா..?"

"இருக்கிறது. அந்த வழியைத் தூர் எடுத்து சரி செய்ய வேண்டும்."

"ஏன் சரி செய்யவில்லை."

"இந்த வேலையே சரியாக இருக்கிறது. கிராமத்தைச் கலனிக்கபொழுது எங்களுக்கு இல்லை."

"உங்களூரில் மூன்று பேர் வருடா வருடம் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராமத்தின் மேன்மையைக் கவனிக்கும்படியாக விட்டு விடக் கூடாதா. எல்லோரும் இரும்பு வேலைதான் செய்தாக வேண்டுமா?"

"ஐயா, பெண்கள் உட்பட இரும்பு வேலை செய்தாலொழிய, குழந்தைகள் உட்பட உலையில் உட்கார்ந்தாலொழிய நீங்கள் கேட்கிற அம்புகளும், வாட்களும் செய்யவே முடியாது. இங்குள்ள ஆட்கள் தொகையை வைத்துக் கொண்டு ஆயிரக் கணக்கில், லட்சக்கணக்கில் நாங்கள் ஆயுதங்கள் செய்திருக்கிறோம். ஒரு நாள் கூட ஓய்வில்லாமல் உழைத்திருக்கிறோம்.

நீங்கள் ஜெயித்த போர்க்களத்திலிருந்து எதிரியுடைய வாள்களும், கேடயங்களும், இரும்பு இலச்சினைப் பொருந்திய பட்டயங்களையும் இதோ இங்கு கொண்டு லந்து குவித்திருக்கிறோம். இலைகள் துருப்பிடிப்பதற்கு முன்பு உருக்கி, மறுபடியும் நம் தேசத்து வாட்களாக, நம் தேசத்து முத்திரைப் பட்டயங்களாக செய்யப்பட லேண்டும். பழைய இரும்பினை மட்டும் உருக்கினால் கலலை கெட்டியாக இருக்கும். எங்களில் இருபது பேர் புதிய உருக்கு தேடிப் போயிருக்கிறார்கள். வண்டி வண்டியாய் புதிய உருக்கு சலித்துக் கொண்டு வருவார்கள்.

அந்த உருக்கும் போட்டால்தான் நல்ல ஆயுதங்கள் செய்ய முடியும். அவர்கள் படுகிற கஷ்டம் சாதாரணமானதல்வ. அந்தத் தாது உலோகம் வராது போனால் புதிய உருக்கு செய்யலே முடியாது. உடம்பெல்லாம் கரியாக, மண்ணாக விரலெல்லாம் அழுக்காக பிசாக போல வந்து நிற்கிறவர்கள் பாடு மிகவும் வேதனையானது. அவர்களுக்கு எந்தச் சலுகையும் நாங்கள் கொடுப்பதில்லை. அரசாங்கமும் செய்வதில்லை. யாரிடம் இதைச் சொல்லது என்றும் தெரியவில்லை. நீங்கள் வந்து கட்டித் தழுவிக் கொண்டதால் எங்களை மீறி உங்களிடம் பேசுகிறோம்."

சில வாலிபர்கள் மாறி மாறிப் பேசினார்கள்.

"இப்படியிருக்கையில் எங்களுடைய வீட்டை பராமரிப்பதும், கவனித்துக் கொள்வதும் எப்படி நடக்கும். ஒரு பத்து நாள் பதினைந்து நாள் மழை பெய்யும். பிறகெல்லாம் வெய்யில் நாள் தான் என்பதால் இந்த வீடுகள் தாக்குப் பிடிக்கின்றன. மழை நாளில் காளி கோயிலில் போய் ஒண்டிக் கொள்கிறாமே தவிர, இங்கு உட்காரவே முடியாது..." என்று சொன்னார்கள்.

மறுபடியும் இதுவரை எந்த அரசனும் செய்யாத ஒரு காரியத்தை இளவரசர் செய்தார். சட்டென்று ஒரு குடிசைக்குள் போய் நின்றார். கூட்டம் திகைத்தது. "ஆ... ஆ...' என்று கத்தியது.

109

"இதுதான் வீடா... இதுதான் வீடா...?'' –இளவரசர் இராஜேந்திரர் திரும்பத் திரும்பக் கேட்டார்.

"இவ்வளவு பெரிய தோல் பையை ஏன் இங்கு மாட்டி வைத்திருக்கிறாய்?" என்று கட்டிக் காட்டி வினவினார்.

"தோல் பை ஈரமாகிவிடக்கூடாது. நான் நனையலாம். என் மனைவி நனையலாம். அவள் பெற்றெடுத்த ஆறு மாதக் குழந்தைகூட நனையலாம். இந்தத் தோல்பை நனைந்து விட்டால் மறுபடியும் அதைத் துருத்தியாக உபயோகப்படுத்த முடியாது. ஓட்டை விழுந்து விட்டால் என்ன தைத்தாலும் காற்று வெளியே போய்விடும். எனவே நல்ல துருத்தியை ஜாக்கிரதையாக வைத்துக் கொள்வது மிக முக்கியம். எனவேதான் இந்தத்தோல் துருத்தியைக் கவனமாக லைத்துக் கொண்டிருக்கிறேன்..." என்று அவன் பதில் சொன்னான்.

"ஏன் ஜன்னல் வைத்துக் கொள்ளவில்லை?" – இளவவசர் கேட்டார்.

"ஜன்னல் வைத்துக் கொள்ளக்கூடாது என்று சட்ட மிருக்கிறது."

"அப்படியா. யார் இட்ட சட்டம்?"

"தெரியாது. எங்கள் வீடுகளுக்குத் திண்ணைகள்கூட இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். திண்ணையில் அமர்ந்து பேசினாவ் கர்வம் வந்து விடுமாம்."

"யாரைய்யா இதைச் சொன்னது?"

"அந்தணர்கள் சொல்வதுதானே சோழ தேசத்தில் சட்டம்."

"இல்லையே, இங்கு ஆட்சி செய்வது அந்தணர்கள் இல்லையே. உடையார் ஸ்ரீ இராஜராஜரல்லலா ஆட்சி செய்கிறார்."

"பேரரசர் இராஜராஜர்தான் ஆட்சி செய்கிறார். ஆனால், இராஜராஜரை ஆட்சி செய்வது அந்தணர்கள் என்பது எங்கள் அபிப்பிராயம்."

"நிறுத்துங்கள். அளவுக்கு மீறிப் பேககிறீர்கள்."

ஊரில் தலைவனாக இருந்த கிழவன் உரத்துக் கத்தினான். வாலிபர்கள் மௌனமானார்கள்.

"இவ்வை அவர்களைப் பேசவிடுங்கள். அவர்கள் மனத்தில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள நான் ஆசைப் படுகிறேன். புதிது புதிதாய் சில விஷயங்கள் என் எதிரே வந்து நிற்கின்றன. நீங்கள் அதிகம் வேதனைப்படுகிறீர்கள். மனது மருகி இருக்கிறீர்கள் என்பது என்னுடைய அபிப்ராயம். சோழ தேசத்துப் படைகள் பல போர்களில் வெற்றிபெறக் காரணமாக இருந்த நீங்கள் பின்புலமாக இருந்த நீங்கள் அதிகம் வேதனைப் படுகிறீர்கள் என்று நான் கேள்விப்பட்டேன். அதனாலேயே இங்கு வந்து இறங்கியிருக்கிறேன். உங்கள் லேதனை என்ன? குறிப்பாய் சொல்லுங்கள். தெளிவாய் சொல்லுங்கள். உண்மையைச் சொல்லுங்கள். எந்தப் பயமுமின்றிச் சொல்லுங்கள்."

"சொன்னால் என்ன செய்வதாக உத்தேசம்?"

– ஒரு இளைஞன் முன் வந்து கேட்டான்.

பெண்கள் பயத்தில் வாய் பொத்திக் கொண்டார்கள். ஆண்கள் தலையிலடித்துக் கொண்டார்கள். லேகமாய் திரும்பி இராஜேந்திரர் அவனை முறைத்துப் பார்த்தார்.

"என்ன கேள்வி கேட்கிறாய்?" என்று அடிக்குரலில் உறுமினார்.

"எங்கள் குறைகளை உங்களிடம் சொன்னால் நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம் என்று கேட்கிறேன்."

அந்தக் கருமார்ச்சேரியின் தலைவன் ஒரு அடி முன் வந்தான். பளீரென்று அந்த இளைஞன் முகத்தில் அடித்தான்.

"மரியாதையாகப் பேக. ஒட்டு மொத்தமாக உன் குலத்திற்கு இழுக்கும், அசிங்கமும் தேடித் தந்துவிடாதே. அவர் இளவரசர், நானளய அரசர். அவர் பக்கத்தில் வந்து உன் குறைகளைக் கேட்கிறார் என்ற ஒரே காரணத்திற்காக அவரை நோக்கி கேள்வி கேட்கின்ற தகுதி உனக்கு வந்து விடவில்லை. உன்னை அண்மையில் வரவழைத்ததற்காகவே அர்த்தமற்ற கேள்விகளை அவரிடம் கேட்டுவிடாதே..." என்று கர்ஜித்தான்.

"என் கேள்விகளில் அர்த்தம் இருக்கிறது." அடியை வாங்கிக் கொண்ட அந்த இளைஞன் மௌனமாகப் பதில் சொன்னான்.

சட்டென்று இளவரசர் அவனை நெருங்கினார்.

"இவனைத் தொந்தரவு செய்ய வேண்டாம். உன் கேள்வியில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று கேட்டால் நான் பதில் சொல்வதற்கு உதவியாக இருக்கும். நான் கேட்கும் பொழுதே உங்கள் குறைகளை நீக்குவதற்காகத்தான் கேட்கிறேன் என்கிற எண்ணம் உனக்கு ஏன் வரவில்லை. நான் விளையாட்டுக்குக் கேட்டு விளையாட்டாகப் போய்விடுவேன் என்று ஏன் நினைத்துக் கொண்டிருக்கிறாய். அப்படி ஏதேனும் ஒரு விஷயம் இங்கு நடந்ததா. உன் குறைகளை எந்த அதிகாரியிடமாவது சொல்லிவிட்டு, அந்த அதிகாரிகள் சிரித்து விட்டுப் போயிருக்கிறார்களா சொல். யாரென்று பெயர் சொல்." – மெல்ல இளவரசர் குரலில் சூடேறியது.

"இதுவரை எந்த அதிகாரியும் இம்மாதிரியான கேள்வி களைக் கேட்டதில்லை. உங்களுக்கு என்ன வசதிகள் வேண்டுமென்று எவரும் வினவியதேயில்லை. மாறாய் உங்கள் வசதிகளைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. எனக்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்யுங்கள் என்று கர்ஜித்துவிட்டு கட்டளையிட்டு விட்டுத்தான் போயிருக்கிறார்கள்."

"பிறகு இந்தச் சந்தேகம் ஏன் உனக்கு லந்தது?"

"எங்களுக்குச் செய்ய வேண்டிய வசதிகளை நாங்கள் கேட்டால் அதை முடிவு செய்ய லேண்டியது சோழ அரச குடும்பம் அல்ல. இளவரசர் இராஜேந்திரர் அல்ல என்பதால் இதைக் கேட்கிறேன்."

"இளவரசர் இராஜேந்திரர் செய்யாமல் லேறு யார் செய்வார் என்று நீ நினைக்கிறாய்."

லேசான பதட்டத்தோடு இராஜேந்திரர் கேட்டார்.

"மன்னர்தான் செய்ய வேண்டும் என்று நினைக்கிறாயா?" வேறு யாரோ வினவினார்கள்.

"இல்லை சோழ மன்னர் ஸ்ரீ இராஜராஜராலும் நாம் கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது. நமக்கு உதவி செய்ய முடியாது. அதனால்தான் சோழ மன்னர் ஸ்ரீ இராஜராஜர் இந்தப் பக்கம் வந்தாலும் நம்மைக் கண்டு

கொள்வதில்லை. எந்தக் கேள்வியும் கேட்பதில்லை... என்று சொல்லிவிட்டுச் சிரித்தான்.

ராஜேந்திரர் முன்னேறினார். பளீரென்று வில்லால் அடித்தார். அந்த இளைஞன் அடி தாங்காமல் கருண்டு தரையில் விழுந்தான்.

"சோழ மன்னரை இழிவாகப் பேசுகின்ற விஷயத்தை இத்தோடு விட்டுவிடு. எல்லாம் தெரிந்தவனாய் பேசுகின்ற திமிரை உடனே கைவிடு. நீ புத்திசாலியாக இருக்கலாம். உன்க்குள் ஆயிரம் குறைகள் இருக்கலாம். ஆனால், சோழ மன்னருக்கு எதுவும் தெரியாது. எதுவும் செய்ய வாயக்கற்றவர் என்கிற மாதிரி பேசுகிறாயே, இதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. நான் உள்ளத்தில் இருந்து பதில் சொல் என்று கேள்வி கேட்க, நீ சொல்கிறாய் என்பதால் நான் உன்னை மன்னித்தேன். மற்றபடி நீ ஏதேனும் ஒரு இடத்தில் வேறு ஏதேனும் ஒரு விதமாய் இதைப் பேசியிருந்தால் உனக்கு மரண தண்டனை நிச்சயம். ஏன் என்னால் உன் குறைகளைத் தீர்க்க முடியாது என்று நினைக்கிறாய்."

"நான் கேட்கிற கேள்விகள் உங்களோடு சம்பந்தப் பட்டவை அல்ல. என்னுடைய லேண்டுதல்கள் சோழ அரசால் கொடுக்கப்படுபலை அல்ல. நான் காசு கேட்டால் நீங்கள் கூடை கூடையாய் கொண்டுவந்து இறக்கிவிடுவீர்கள். நான் செந்நெல் அரிசி கேட்டால் நீங்கள் வண்டி வண்டியாகக் கொண்டு வந்து சாய்த்து விடுவீர்கள். நான் உடுத்துவதற்குத் துணிகள் கேட்டால் அவைகளையும் கொண்டுலந்து இறக்கி விடுவீர்கள். இவையெல்லாம் உங்களுக்குப் பயன்படுமே தவிர, எனக்குப் பயன்படாது. நான் கூடுதலாக வேலை செய்ய வேண்டியிருக்குமே தவிர என் குடும்பம் செழித்து வளருவதற்கு உதவாது."

"உன் பெயரென்ன...?"

"கந்தன்."

"ஏன் கந்தா, ஏன் பூடகமாகவே பேகுகிறாய். ஏன் முடியாது என்ற விஷயத்தை மட்டுமே சொல்லிக் கொண்டிருக்கிறாய். எதனால் முடியாது என்பதை விரைவாகச் சொன்னால் என்ன..."

"நான் சூட்கமமாகச் சொல்லிவிட்டேன் இளவசரே, ஸ்ரீ இராஜராஜர் இந்த சோழ தேசத்தை ஆளுகிறார். ஆனால் ஸ்ரீ

இராராஜரை ஆட்சி செய்வது அந்தணர்கள். வைதீக ஆகம விதிகளை நிர்ணயிக்கின்ற குருமார்கள். வைதீக வேவைகளைச் செய்து கொண்டிருக்கின்ற சோழ தேசத்து முன் குடுமிச் சோழியர்கள். இவர்கள்தான் மனு தர்மத்தை படித்துவிட்டு அதன்படி நடக்க வேண்டுமென்று பல்வேறு விதிமுறைகளை உருவாக்கியிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டுத்தான் அரசர்கள் இங்கு அரசாட்சி செய்கிறார்கள். நான் கேட்கின்ற பல உதவிகள் எங்கள் குடும்பம் வளமாகவும், திடமாகவும் வாழ வழி செய்யும். அதற்கு அவர்கள்தான் குறுக்கே நிற்கிறார்கள். எங்களுக்கு அந்தவித உதவிகளும், அந்தவித சௌகர்யங்களும் வந்துவிடக் கூடாது என்பதில் மிக மும்முரமாக இருக்கிறார்கள்."

"உனக்கு என்ன வேண்டும் கந்தா?"

– இளவரசர் உரக்கக் கத்திக் கேட்டார்.

கூட்டம் மௌனமாக இருந்தது.

அதிகாரிச்சி கூட்டத்தோடு கூட்டமாய் கலந்தபடி அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மேலும் சிலரை உள்ளுக்குள் புகுந்து அருகே நிற்கும்படி பணித்தாள்.

இன்னும் இரண்டு ஆட்களை உடனடியாக தஞ்சைக்குப் போய் இளவரசர் குடந்தையிலிருந்து அனுப்பி விட்டார். இரவுக்குள் தஞ்சைக்கு வந்து விடுவார் என்று செய்தி சொல்லி அனுப்பினாள்.

முணுமுணுப்பாய் அவள் கட்டளைகள் இட்டுக் கொண்டிருப்பதை ராஜேந்திர சோழரின் வீரர்கள் இரண்டு பேர் கவனித்துக் கொண்டிருந்தார்கள். மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"இந்த விஷயம் ஒன்றும் புதியதல்ல. இளவரசே. இது மூன்று ஆண்டுகளுக்கு முன்பே மெல்ல பேசப்பட்டது. அடக்கப் பட்டது. மறுபடியும் அடுத்த ஆண்டு பேசப்பட்டது. அடக்கப் பட்டது.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் மூன்றாம் முறையாக இது பற்றிக் கேட்டு எங்களுக்கு உதவி செய்யலாம் என்று வந்த போது வெகு தீர்மானமாக அந்தணர்கள் அதை எதிர்த்தார்கள். கூடாது என்று சொன்னார்கள். மூன்றாம் முறையும் இது அமலுக்கு வந்து எந்த உதவியும் செய்வதற்கில்லை என்று நிராகரிக்கப் பட்டது.

தஞ்சையிலுள்ள கருமார்கள் குறிப்பாக கருந்தட்டாங்குடி கருமார்கள், இதை அரசர் முன்பு வைத்து அவமானப்பட்டிருக்கிறார்கள். நொந்துபோய் ஊருக்குத் திரும்பியிருக்கிறார்கள். ஊரைச் சுற்றியுள்ள மற்ற ஜாதி ஜனங்கள் இவர்கள் கேட்டதையும், இவர்கள் நிராகரிக்கப்பட்டதையும் வைத்து உரக்கக் கேலி செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அந்த தேசத்துக் கருமார்கள் வெளியே வர, ஜனங்களோடு பழகவே வெட்கப்படுகிறார்கள். மருகிப்போய் நிற்கிறார்கள்.

நீங்கள் உதவ வேண்டுமா என்று கேட்பானேன். நாங்கள் வாயைத் திறந்து சொல்வானேன். நீங்கள் முடியாது என்று மறுப்பானேன். ஊர் கற்றி நின்று கேலி செய்வானேன். தேவை தானா எங்களுக்கு. நீங்கள் கேட்காமலேயே போயிருக்கலாம். நாங்களும் மௌனமாக புழுங்கி உள்ளுக்குள்ளே செத்துக் கொண்டிருக்கலாம்."

"என்ன உதவி என்று சொல்?"

"சொல்ல முடியாது."

"ஏன்?"

"உங்களால் செய்ய முடியாது. உதவி செய்ய முடியாதவர், உதவி என்ன வேண்டுமென்று கேட்பது அபத்தம்."

இளவரசர் வேகமாக வாளை உருவினார். மற்ற வீரர்களும் வாளை உருவினார்கள். கூட்டம் சரசரவென்று ஒதுங்கிக் கொண்டது. அந்த இளைஞன் மட்டும் தனியாக நின்றான். தலைகுனிந்து 'வெட்டுங்கள்' என்பதுபோல் கைகட்டி நின்றான்.

வாளால் அந்த வீரனுடைய முகத்தை இளவரசர் ஸ்ரீ இராஜேந்திரர் நிமிர்த்தினார்.

ஒரு பெண் ஓடிவந்து இளவரசர் காலைப் பற்றிக் கொண்டாள்.

"இவர் என் கணவர். இவருக்குத் தயவு செய்து உயிர்ப் பிச்சை கொடுங்கள். இவர் ஏதேனும் தவறு செய்திருந்தால் நாடு கடத்தி விடுங்கள். நாங்கள் இந்த இடத்தைவிட்டுப் போய் விடுகிறோம். தயவு செய்து இவரைக் கொன்று என்னை விதவையாக்கி விடாதீர்கள். மீறி இவரை நீங்கள் வெட்டிக் கொன்றீர்கள் என்றால் நானும் இந்த இடத்தில் தீயில் பாய்ந்து இறந்து போவேன். இது சத்தியம்." என்று மண்ணில் அறைந்தாள். வெறிக்க மண்டியிட்டபடி இளவரசரைப் பார்த்தாள்.

இளவரசர் வாளை உறையில் போட்டுக் கொண்டார். திரும்பி மேடை மீது ஏறி அரச மரத்தின் மீது சாய்ந்து கொண்டார். அங்கிருந்தபடி அந்தக் கூட்டத்தை வெறிக்கப் பார்த்தார்.

"இன்று இரவு எனக்கு இங்கு உணவு தயாராகட்டும். உங்களோடு அமர்ந்து உணவு உண்ணப் போகிறேன். வெகு விரைவில் உணவு வேண்டும். எனக்குப் பசிக்கிறது. கட்டிலுக்கும் ஏற்பாடு செய்யுங்கள்." என்று சொல்ல, மிகப் பெரிய மரக்கட்டில் கொண்டு வந்து அங்கு போடப்பட்டது.

அதன்மீது துணிகள் விரிக்கப்பட்டன. தலையணை வைக்கப்பட்டது. பெரிய பனை விசிறிகளோடு பெண்கள் அருகே வந்து நின்று கொண்டார்கள். இளவரசர் கருண்டு அதில் படுத்துக்கொண்டார். மெல்லிய போர்வை அவர் மீது போர்த்தப்பட்டது.

வெயில் தாழும் நேரத்திற்கு அவர் கண்கள் மூடி கருண்டு படுத்துக் கொண்டார். ஆழ்ந்து உறங்கினார்.

ஊர் சந்தடி செய்யாமல் அவர்கள் வேலையைக் கவனித்துக் கொண்டார்கள். கருமார் புலத்திலிருந்து சம்மட்டிச் சத்தமோ, புகையோ எழவில்லை என்பது தொலைதூரத்தி லிருந்து அந்தணர் குடியிருப்பில் தெரிந்தது. என்ன என்று பார்த்து வர இரண்டு பேர் கிளம்பினார்கள்.

110

சோழ தேசத்து அந்தணர்கள் இயல்பிலேயே மிகவும் கெட்டிக்காரர்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையைக் குறித்து மிகுந்த கவனத்தோடு இருந்தார்கள். எவரையும் நம்பாமல், எதற்கும் தயாராக இருக்கின்ற ஒரு மனோநிலையில் வாழ்ந்து வந்தார்கள். மற்றவர்களோடு கலக்காமலும், அதே சமயம் தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை மிகத் தெள்ளத் தெளிவாக உணர்ந்தும் இருந்தார்கள். உதவி என்று எவர் கேட்டு வந்தாலும் சற்றும் தயங்காமல் அவர்கள் கேட்டதைவிட அதிகமாகக் கொடுத்து உதவி செய்தார்கள். அப்படி உதவி செய்தேன் என்பதை நாலு பேருக்குத் தெரியும்படியாகவே நடந்து கொண்டார்கள்.

"பாம்பு கடித்துவிட்டதய்யா... என்னுடைய மகளைப் பாம்பு கடித்துவிட்டது." –சேரியிலிருந்து ஒரு மத்திய தரத்து மனிதன் அந்தணக் குடியிருப்பின் விளிம்பிலிருந்து கதறினான்.

"யாரது?" – அந்தணர் தலைவர் கேட்டார்.

"உங்களுடைய வயலில் வேலை செய்கிறவன்தான்."

"உழவன்தானே?"

"ஆமாம், மிக நல்லவன். நமக்குப் பிரியமாய் இருக்கிறவன்."

"அப்படியா, என் கைக்கோலை எடு. மூலிகைகளை எடுத்துக் கொள். அரிசியும், பருப்பும் கூடையில் போடு. பாகற்காய் இருக்கிறதா, அதையும் போட்டுக்கொள். எள்ளிலிருந்து எடுத்த நல்லெண்ணெய் வேண்டும். மிளகு வேண்டும். அதையும் ஒரு பானையிவ் வைத்துக் கொள். நான் முன்னே போகிறேன். பின்னே வா."

ஒரு இளைஞனுக்குக் கட்டளையிட்டுவிட்டு அந்தணத் தலைவர் கீழிறங்கினார். அவரைப் பின் தொடர்ந்து பல அந்தணர்கள் போனார்கள்.

அதிவ் ஒருவரிடம் மருந்துப் பெட்டி இருந்தது. இன்னொருவர் கீரைக்கட்டு வைத்திருந்தார். இன்னொருவர் எல்வோரையும் விட முன்னதாக ஓடி, சிறு கத்தியினாவ் மரப்பட்டைகளைச் செதுக்கி, நீரில் நனைத்து கசக்கியபடியே வந்தார்.

அவர்கள் சேரியின் விளிம்புக்குப் போனார்கள்.

சேரிக்குள்ளிருந்து அந்தப் பெண்ணைக் கொண்டு வந்து ஒரு மரத்தடியின் கீழே போட்டார்கள். அந்தணர்கள் அந்தப் பெண்ணைச் சூழ்ந்து கொண்டார்கள்.

அவள் கணுக்காலில் பல் பதிந்திருந்தது. அந்தணர் குத்திட்டு உட்கார்ந்து அதை நன்கு சோதித்தார்.

"நல்ல நாகம் தீண்டிய இடம் முழுவதும் கருகிவிட்டது. விஷம் கண்வரை ஏறியிருக்கிறது. உச்சியில் இந்நேரம் தாக்கியிருக்கும் என்று தோன்றுகிறது."

"உயிர் இருக்கிறதா?" – அந்த அந்தணத் தலைவர் கேட்க, அந்த இளைஞன் பட்டுத் துணியை அவள் கையில் கற்றி துணி வழியே நாடி பார்த்தான்.

"கடைசித் துடிப்பு. இன்னும் சில வினாடிகளில் நாடி அடங்கிவிடும்." – ஒரு அந்தணன் உரத்துச் சொன்னான்.

அந்தச் சேரியின் ஜனங்கள் மார்பில் அடித்துக் கொண்டு அலறினார்கள்.

அந்தணர் திரும்பிப் பார்த்து அவர்களை அதட்டினார். அவள் கால் மாட்டில் போய் உட்கார்ந்து கொண்டார். அந்தப் பெண்ணின் காலைத் தூக்கி மடியில் லைத்துக் கொண்டார்.

எல்லோரும் அவரை வியப்போடு பார்த்தார்கள்.

"என்ன செய்ய... ஆபத்திற்குப் பாவமில்லை. அவன் நல்லவன். அவன் மகள் நிச்சயம் பிழைக்க வேண்டும். கத்தியைக் கொடு."

கூர்மையான கத்தியை விளக்கு ஒளியில் காய்ச்சி கடிபட்ட இடத்தில் பளிச்சென்று அறுத்தார்.

பற்கள் சொத்தையில்லாத இளம் வயதினனான ஒரு பதினாறு வயது பையனை அருகே அழைத்து அந்த ரத்தத்தை உறிஞ்சி துப்பச் சொன்னார். விழுங்கிவிடாதே என்று எச்சரித்தார்.

அவன் வாய் வைப்பதற்கு முன், அவனுக்கு மருந்து கசக்கக் கொடுக்கப்பட்டது. ஒரு பட்டையைச் சிறிது மென்று விழுங்கச் சொன்னார்கள். அவன் விழுங்கி தொண்டையைச் செருமிக் கொண்டு ரத்தத்தை வாய் வைத்து உறிஞ்சித் துப்பினான்.

பலமுறை அவ்விதம் செய்யச் சொன்னார்கள்.

ஒருவர் அந்தப் பெண்ணின் உச்சந்தலையில் மூலிகையைத் தேய்த்தார். இன்னொருவர் எண்ணெயை நெற்றிப் பொட்டில் தேய்த்தார். இன்னொருவர் குளிர்ந்த நீரை அந்தப் பெண்ணின் மார்பிலும், வயிற்றிலும், தொடையிலும் ஊற்றினார்.

அந்த இடம் சதசதவென்று சேறாகியது. எல்லோர் மீதும் சேறு தெரித்தது. ஆனால், அவர்கள் யாரும் எது பற்றியும் கவலைப்படவில்லை. அந்தப் பெண்ணைப் பிழைக்க வைப்பதிலேயே மிகுந்த கவனமாக இருந்தார்கள். சேரி ஜனங்கள் சிறிய சத்தம் போட்டாலும் பெரியதாக அதட்டி வெளியே போகச் சொன்னார்கள். தொலைதூரம் அவர்களை விலக்கி வைத்தார்கள். பெண்ணின் தகப்பனை மட்டும் அருகே வைத்துக் கொண்டார்கள்.

"இவள் பருவமடைந்த பெண். யாரும் தவறாகப் பேசி விடக்கூடாது என்பதற்காக உன்னை அருகே நிற்க வைத்துக் கொள்கிறோம். அவளைக் குப்புறப் பிரட்டிப் போடு..." என்று சொன்னார்கள்.

அவள் பாலாடையைத் தளர்த்தி, அவள் முதுகில் கால் வைத்து அழுத்தினார்கள். முதுகில் மிதிக்க வயிறு அழுத்தி அவள் வாயிலிருந்து விஷத்தை வாந்தியெடுத்தாள். கண்ணிலிருந் தும் சுறுப்பாக திரவம் இறங்கியது.

அலளை எழுப்பிச் சாய்மானம் கொடுத்து உட்கார வைத்தார்கள். ஒருவர் அவளின் தோளைச் சுற்றி கை போட்டு தாங்கிக் கொண்டார். கால்களை லேகமாக நீவிவிட்டார்.

"இந்த ரத்தம் வெளியேறியது போதாது. உடம்பு முழுவதும் விஷம் பரவிவிட்டது. கணுக்கணுவாக வலிக்கும். எனவே வேறு எங்கேனும் காயம் ஏற்படுத்தி ரத்தத்தை சிந்த வைப்பது நல்லது. – எங்கே அறுக்கலாம் என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

பெண்ணின் கண்டு விரல் நுனியை நறுக்கினார்கள். முதுகுக்குப் பக்கவாட்டில் ஒரு சிறிய ஓட்டை போட்டார்கள். கத்தியைத் திறந்து ஈறுகளைக் கிழித்து கத்தியால் ரத்தம் வெளியே வரும்படிச் செய்தார்கள். நல்ல ரத்தம் அதிகம் போகவிடாமல் ஈரத்துணியோடும், பச்சிலையோடும் காத்திருத்தார்கள். ரத்தம் ஓரளவு வெளியே வந்ததும் சட்டென்று எல்லா இடத்திலும் கட்டுப் போட்டு ரத்தத்தை நிறுத்தினார்கள். ரத்தம் நின்று போவதற்காக பானைத் தண்ணீரால் அவள் உடம்பு முழுலதும் குளிப்பாட்டிக் கொண்டே இருந்தார்கள். தலையில் மூலிகை தேய்த்துக் கொண்டே இருந்தார்கள்.

அந்தணத் தலைவர் அழுத்தி அழுத்தி அவளுடைய காலிலிருந்து ரத்தத்தைப் பிதுக்கி லெளியே எடுத்தார்.

அலள் மெல்ல முனகினாள். கண் திறந்து பார்த்தாள். இமைகள் படபடக்க தந்தையைப் பார்த்து கை நீட்டினாள். அவர்கள் சந்தோஷமானார்கள். மெல்லத் தூக்கி மரத்தடியில் சாய வைத்தார்கள்.

அந்தணத் தலைவர் கோல் எடுத்துக் கொண்டார். நேரே ஆற்றங்கரைக்குப் போய் குளித்தார். மற்றலர்கள் காத்திருந் தார்கள்.

அலர் யார் மீதும் படாது பெண்ணுக்கு எதிரே வந்து நின்று கொண்டார்.

விஷம் முறிக்கின்ற மந்திரத்தை வேகமாகச் சொன்னார். கைக் கோலால் உச்சியிலிருந்து உடம்பு முழுவதும் வருடிவிட் டார். முதுகு முழுவதும் அந்தக் கம்பு நகர்ந்து நகர்ந்து விஷத்தை

கீழே இறக்கியது. அவள் உள்ளங்காலில் சுள்சுள்ளென்று அடிக்க, அந்தக் காயம்பட்ட இடத்திலிருந்து மறுபடியும் ரத்தம் கசிந்தது.

அவளுக்கு உண்ண மிளகு கொடுத்தார்கள். கடித்துத் தின்னச் சொன்னார்கள். அவளால் கடித்துத் தின்ன முடிந்தது. அவள் கசக்கிறது என்று சொல்ல, மறுபடியும் மூலிகையைத் தலையில் தேய்த்தார்கள். திரும்பவும் மிளகு கொடுத்தார்கள்.

மிளகு காரமாக இருக்கிறது என்று சொல்ல, அவளைத் தூக்கி நிறுத்தினார்கள். நட... நட... என்றார்கள். தூங்காதே, நட என்று சொன்னார்கள். கண் சொருகும்... ஆனாலும், நட என்று உலுக்கினார்கள்.

ஒரு அந்தண இளைஞன் அவளோடு கைகோர்த்துக் கொண்டு தட்டாமாலை கற்றினான். இன்னும் நட... ஓடு என்று சொன்னார்கள். அலள் ஓட... ஓட... அவளுடைய காலிலிருந்து ரத்தம் பெருகியது. மறுபடியும் அந்த ரத்தத்தைத் துடைத்து மீண்டும் மூலிகையைத் தலையில் தேய்த்தார்கள். உண்ண மருந்து கொடுத்தார்கள்.

"இவளை இன்று முழுவதும் தூங்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். நாளை காலை இவள் வேலைக்குப் போகலாம்..." என்று அந்தணத் தலைவர் சொன்னார்.

அந்தச் சேரி ஆள் மண்ணில் அறைந்து கொண்டு அவரைப் பார்த்து கை கூப்பி அழுதான்.

உரத்த குரலில் நெஞ்சில் அடித்துக் கொண்டு அலறினான்.

சேரி ஜனம் மறுபடியும் ஓடி வந்து அருகே நின்றது. அவர்கள் எல்லோரையும் பார்த்து வணங்கியது.

"என் மகளுக்கு உயிர் கொடுத்தீர்கள். நான் பதிலுக்கு என்ன தருவேன்?" என்று அவன் கேட்டான்.

"நன்றியோடு இரு. அது போதும்." – அவர் ஒரே லார்த்தை சொல்லிவிட்டு ஆற்றங்கரைக்கு மறுபடியும் போனார்.

அந்தணர்கள் எல்லோரும் அவரைப் பின்தொடர்ந்து போனார்கள். நீரில் முழ்கிக் குளித்தார்கள்.

"என்ன நடந்தது தெரியுமா? அவள் உடம்பில் ஏற்பட்ட மாறுதல் எப்படித் தெரியுமா? அந்த மாறுதவை எப்படி நீக்கினோம் தெரியுமா?"

அந்தண இளைஞர்களுக்கு வயதானலர்கள் சொல்லிக் கொடுத்தார்கள். பிரச்சினையின் விபரம் சொன்னார்கள். மரப்

பட்டையினுடைய நோக்கம் சொன்னார்கள். முதுகு அறுத்ததின் விளைவு சொன்னார்கள்.

"நான்காவது வர்ணப் பெண்ணின் காலைத் தொட்டு நாம் சிகிச்சை செய்தோமே... இது தீட்டா இல்லையா?" – ஒரு கேள்வி வந்தது.

"தீண்டுதல் கூடாது என்று... மனுவில் சொல்லியிருக்கிறதே. இது சரியா? தவறா?" – அவர்கள் குளித்துக் கொண்டே விவாதித்தார்கள்.

"கலத்தல் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே தீண்டுதல் கூடாது என்று சொல்லப்பட்டது. சிகிச்சை கொடுக்கின்ற சாக்கில் மதிமயங்கிப் போய், அவள் கட்டழகில் மயங்கி பெண்ணின் கையைப் பிடித்துப் பார்க்கின்ற ஆசை ஒரு அந்தணனுக்கு வந்துவிடக்கூடாது. அந்தணனுடைய மிருதுவான தொடவ் ஒரு நான்காவது வர்ணப்பெண்ணின் மனதில் கிளர்ச்சி ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத்தான் தொட வேண்டாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், ஆபத்துக் காலத்தில் பாவமேயில்லை. நாம் குளித்துவிட்டு காயத்ரி ஜபம் சொல்லப் போகிறோம். நமக்காக அவ்ல, அவளுக்காக, அவள் பிழைக்க வேண்டுமென்பதற்காக."

"நீங்கள் விரைவாக அந்த நாலாவது வர்ணத்திற்கு உதவி செய்ய வந்தீர்களே... இதற்கும் ஏதேனும் காரணம் இருக்குமா?"

"இருக்கிறது. அவர்கள் நமக்கு உதவியாக இருக்கிறார்கள். அந்தச் சேரியிலிருந்த பல வீரர்கள் அரசரிடம் வேலையாட்களாக இருக்கிறார்கள். படையில் நல்ல பதவி வகிக்கிறார்கள். இப்படியொரு வசதியான நான்காவது வர்ணக் கூட்டம் நல்ல விஷயம். நம்மைப் பற்றிய நல்ல அபிராயத்தை அரசருக்கு இவர்கள் சொல்லியே ஆக வேண்டும்."

"நம்மைப் பற்றிய நல்ல அபிப்ராயம் அரசருக்கு ஏன் ஏற்பட வேண்டும்?"

"மறந்து விட்டதா... சகலமும் மறந்து விட்டதா?"

– அந்தணத் தலைவர் கோபமாகப் பார்த்துக் கேட்க, அந்த அந்தணக் கூட்டம் மௌனமாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தது.

"உடையாளூரில் முன்னூற்று எண்பது பிராமணர்களை குழந்தைகள், பெண்கள், கிழவர்கள் உட்பட தேசத்தைவிட்டு

லெளியே போ... என்று உடையார் ஸ்ரீ இராஜராஜதேவர் லெளியேற்றினாரே... ஞாபகம் இருக்கிறதா?"

"யாருக்குத் தெரியும்... என்ன சாட்சி இருக்கிறது. உத்தம சோழருக்கு உறுதுணையாக இருந்ததாலேயே அந்த அந்தணர்கள் விரட்டப்பட்டார்கள். ஆதித்த கரிகாலனைப் பரமேஸ்லரன் கொன்றான் என்பதற்கு யார் சாட்சி? யார் பார்த்தார்கள்? யூகத்திலேயே நடந்த தீர்ப்பு அது. யூகத்தினாலேயே கொடுக்கப்பட்ட தண்டனை அது."

"அவர்கள் செய்த ராஜத்துரோகம். ஆதித்த கரிகாலனைக் கொன்ற பாபம்..."

"யாருக்குத் தெரியும்... என்ன சாட்சி இருக்கிறது. உத்தம சோழருக்கு உறுதுணையாக இருந்ததாலேயே அந்த அந்தணர்கள் விரட்டப்பட்டார்கள். ஆதித்த கரிகாலனை பரமேஸ்லரன் கொன்றான் என்பதற்கு யார் சாட்சி? யார் பார்த்தார்கள்? யூகத்தினாலேயே நடந்த தீர்ப்பு அது. யூகத்தினாலேயே கொடுக்கப்பட்ட தண்டனை அது."

"அடிக்காமல், கொல்லாமல், தூக்குத் தண்டனைத் தராமல், வாளால் வெட்டிப் போடாமல் ஊரைவிட்டுப் போகச் சொன்னார்களே... அது உயர்த்தி அல்லவா...? இன்னும் அவர்கள் உயிரோடு இருக்கிறார்களே... அது உத்தமமல்லவா?"

"இல்லை. இதற்குக் கொன்று போட்டிருக்கலாம். தூக்கி எறிந்திருக்கலாம். அனைவரையும் தீயிட்டுக் கொளுத்தி யிருக்கலாம். எல்லா உடைமைகளையும், பச்சை வயல்களையும் விட்டுவிட்டு, ஊரை விட்டு லேறு ஊருக்குக் கையில் ஒரு செப்புக் காக கூட இல்லாமல், வழி நடைக்குத் தாகம் தீர்க்க ஒரு பானைகூட இல்லாமல், மாற்று உடைகூட இல்லாமல் சேர தேசம் லரை நடந்து... நடந்து போனார்களே... லழியில் மூன்று பேரை இழந்தார்களே மறந்துவிட்டதா. அந்தணர்களுக்கு எந்த அரசம், எந்த நாளும், எந்தக் கெடுதலும் செய்யமாட்டார்கள் என்பது உடைந்து போய்விட்டதல்லலா. உங்களையும் தண்டிக்க ஆட்கள் உண்டு என்று தெரிந்துவிட்டதல்லலா. இனிமேல் அரசன் தண்டித்தால் மக்கள் காப்பாற்றுகின்ற ஒரு நிலைமையை நாம் உருவாக்கிக் கொள்ள லேண்டும். மக்கள் நம்மோடு நெருக்கமாக இருப்பின் அரசர்கள் எதுவும் செய்ய முடியாது..."

"வேறு என்ன சொல்கிறீர்கள். நான்காவது வர்ணத்துப் பெண்களைத் தொடலாம் என்று சொல்கிறீர்களா...?" ஒரு இளைஞன் கேட்க, இரண்டு மூன்று பேர் பாய்ந்து அவனைப் பலமாக அடித்தார்கள்.

"தோளில் கைபோட்டுத் தூக்கி நிறுத்தியபோதே நினைத்தேன். தவறாகத் தொடுகிறானே என்று. அதனால்தான் இவன் தொட்டதும் தவறு. பேசுவதும் தவறு. போடுங்கள் இன்னும்..."

இன்னும் நாலைந்து பலமான அறைகள் அவன் முதுகில் விழுந்தன.

"பார்த்துப் பார்த்து மிகக் கவனமாய் வாழ வேண்டிய ஒரு காலகட்டத்தில் இருக்கிறோம். நமக்குள்ளேயே துரோகிகள் இருக்கிறார்கள். இந்த அழகில் நான்காவது வர்ணப் பெண்மீது கைவைத்தால் நமது வாழ்க்கை சீரழிந்து போகும். அந்த நிலைக்கு ஒருபொழுதும் நாம் போகக் கூடாது. உன்னை எச்சரிக்கிறேன். இதுதான் நீ தவறாகப் பேசுவது கடைசிமுறை. இன்னொரு முறை பேசினாய் என்றால் நாங்கள் உன்னை நாடு கடத்துவோம். அதை நாடு கடத்துவதாக வெளியே சொல்ல மாட்டோம். காசி தேச யாத்திரை போகிறார் என்று ஒரு கைக்கோலும், சோற்று மூட்டையும் கொடுத்து ஊரைவிட்டு அனுப்பிவிடுவோம். உனக்கு மட்டுமல்ல, இங்குள்ள அத்தனை அந்தண இளைஞர்களுக்கும் இதுவே கடைசி எச்சரிக்கை."

அந்தணத் தலைவர் உரத்துக்கூற, மற்ற அந்தணர்கள் தலைகுனிந்தார்கள். சரி என்பதுபோல் முணு முணுத்தார்கள்.

"இன்னும் நாம் வேறு ஏதேனும் செய்ய வேண்டியது இருக்கிறதா?"

"இருக்கிறது... அந்தப் பெண்ணை குசலம் விசாரியுங்கள். அந்த மக்களிடம் போய் இன்னும் ஏதேனும் உதவிகள் வேண்டுமா என்பதுபோல் பேசுங்கள். அரசருக்கு இந்தச் செய்தி தெரிவிக்கப்பட வேண்டும் என்று மெல்ல கவனமாக அவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். பாம்பு விஷம் கீழே இறக்கத் தெரிந்த அந்தணர்களில் இவர்தான் கடைசி. இவர் அந்த வித்தையை வேறு எவருக்கும் சொல்லித் தரவில்லை. வேறு எவரும் கற்றுக்கொள்ள முன்வரவில்லை. உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் எத்தனையோ விஷயங்களுக்கு மானியம்

கொடுப்பதுபோல பாம்புக்கடி மந்திரம் கற்றுக்கொடுப்பதற்கும் மானியம் தரவேண்டுமென்று சொல்லச் சொல்லுங்கள்."

"பாம்பு விஷம் இறக்க நான் கற்றுக் கொள்கிறேனே. அந்த மந்திரத்தை எனக்குச் சொல்லிக் கொடுங்களேன். மானியம் வேண்டாம். ஆசைப்பட்டே கற்றுக் கொள்கிறேன்." ஒரு அந்தணன் சொன்னான்.

மற்றவர்கள் சிரித்தார்கள்...

111

"பாம்பு விஷம் மந்திரத்தாலேயா கீழே இறங்கியது. முட்டாள். அறுவை சிகிச்சையும், தைவத் தேய்ப்பும், அசுத்த ரத்தத்தை வெளியேற்றியபோது அதைக் குளிரச் செய்து உறைய லைத்ததும் போன்ற கெட்டிக்காரத்தனங்கள், ரண சிகிச்சையில் நடந்தது." –அந்தணத் தலைவர் உரத்துச் சொன்னார்.

"அப்பொழுது மந்திரம் சொன்னது..."

"அது வெறும் பிராத்தனை. ஆனால், மந்திரம் சொல்லித் தான் இறக்கி விட்டார் என்று ஊரில் பேசுவார்கள். அப்படிப் பேசினால்தான் நமக்கு மரியாதை."

"ப்பா... எவ்வளவு அழகான திட்டமிடுதல்." மிகச் சிறியவனான ஒரு பையன் உரத்துக் கூறினான்.

எல்லோரும் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள்.

அந்தணத் தலைவர் அவனை அழைத்துத் தவையில் கை வைத்தார்.

"ஆமாம். இது திட்டமிடுதவ்தான். ஒவ்வொரு அடியும் மிகக் கவனமாக வைத்திருக்கிறோம் என்று உனக்குப் புரிகிறதல்லவா. இப்படித்தான் நாம் காலம் காலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்."

"இது தவறில்லையா?"

"எந்தத் தவறும் இல்லை. மற்றவருக்கு மனமார உதவி செய்கிறோம். நமக்கும் உதவிகள் கேட்டுப் பெற்றுக் கொள் கிறோம். நாம் முக்கியம் என்பதை வெளிப்படையாகச் சொல்லா மல் மிகக் கவனமாக மற்றவர் மனதில் பதியும்படி நடந்து கொள்கிறோம்."

"ஏன் இப்படி நடந்து கொள்ள வேண்டும்?"

"படை வீரர்கள், மறவர்கள் வெளியே போய் போரிட்டு ஜெயித்து பொன்னும் பொருளுமாக ஊருக்குள் கொண்டு வந்து, வீடுகளில் கொடியேற்றி, வெற்றி முழக்கத்தோடு வாழ்கிறார்கள். அவர்கள் வீரத்தை நிலைநாட்டிய பெரிய மனிதராய் தங்களை மாற்றிக் கொள்கிறார்கள்.

வணிகர்களிடமும் நல்ல காசு இருக்கிறது. நல்ல மரக்கலங்களைக் கட்டி வெளிதேசம் போய் காற்றோடும், கடலோடும் போராடி, மீண்டும் நல்ல பொருட்களோடு வந்து, அவர்களும் அரசன் முன்பு சிறப்பாக வாழ்கிறார்கள்.

வேளாளர்களுக்கு உணவுக்குக் கவலையே இல்லை. பழ மரங்களும், தானியங்கள் விளையும் வயல்களும் அவர்களைக் காப்பாற்றுகின்றன. வேலை செய்தால் கூலி என்று நான்காவது வர்ணத்தாருக்கு உதவி செய்ய இந்த அத்தனை ஜாதிக்காரர்களும் காத்திருக்கிறார்கள். அவர்கள் படைக்கும் போகிறார்கள். லணிகர்களோடும் இருக்கிறார்கள். வேளாளர்களுக்கும் உதவி செய்கிறார்கள்.

ஆனால், நாம் யாரோடு சேருவது? நமக்கு யார் துணை, நாம் யாரோடும் சேர முடியாது. நமக்கு நாமே துணை. எனவேதான் இந்தத் தந்திரம். இந்தத் திட்டமிடல் தேவையாக இருக்கிறது. இது ஒரு வகை வாழ்க்கை."

"நாமும் யுத்தத்திற்குப் போனால் என்ன. நாமும் வணிகம் செய்தால் என்ன. நாமும் வேளாளர்கள் போல் நிலம் உழுதால் என்ன?"

"ஆஹா... செய்யலாமே. ஆனால் செய்யக் கூடாதென்றும் மனுவில் போட்டிருக்கிறது. ஏன்...?" – அந்தணத் தலைவர் கேள்வி கேட்டார். அவரே பதிலும் சொன்னார்.

"ஆயிரம் பேர் கொண்ட ஒரு ஊரில் நடுநிலையாய் கோபமின்றி சிந்திக்க ஒரு பத்து பேர் தேவையாக இருக்கிறது. ஆரவாரமில்லாமல் யோசிக்க, எதிரியின் பலம் அறிந்து சிந்தனை செய்ய, என்ன விவசாயம் செய்யலாம் என்பதை எல்லாப் பக்கமும் பார்த்து நிறைவேற்ற ஒரு தனித்த புத்தி தேவையாக இருக்கிறது. அந்தப் புத்தி அமைதியோடு இருக்க வேண்டும்.

அந்த அமைதிக்குத்தான் நாம் சில பயிற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம். ஜபதபங்கள் செய்கிறோம். வழிகாட்டியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

வழிகாட்டியாக வாழ்வது சாதாரண விஷயமல்வ. அது மிகவும் பொறுப்பான செயல். எல்லாம் தெரிந்திருக்க வேண்டும். எல்லா வித்தைகள் பற்றியும், ஞானம் வேண்டும். உழுவது பற்றியும், போர் பற்றியும் மண் பாண்டம் செய்வது பற்றியும், சிற்பம் பற்றியும், கருமார் வேலை பற்றியும், காற்று பற்றியும், நீர் பற்றியும், நிலம் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். அரசியல் சூழ்ச்சிகள் என்னென்ன என்று புரிந்திருக்க வேண்டும்.

நாம் வழிகாட்டிகள். ஒரு மாதிரியான விதூஷகர்கள். கூத்தில் விதூஷகன் வந்து பாட்டுப் பாடுவான். ஆட்டம் ஆடுவான். சிரிக்க வைப்பான். ஆனால், எல்லா கதாப் பாத்திரத்தோடும் அவனும் கூடவே வருவான். அலர்கள் பாடும் அத்தனை பாடலையும் அவன் பாடுவான். மொத்த நாடகமும் அந்த விதூஷகனுக்கு மனப்பாடம். அதுதான் நம்முடைய இடம். நம்மிடம் வீரம் இல்னல. ஆனால், விவேகம் உண்டு. வாழ்க்கையில் எல்லாப் பகுதிகளைப் பற்றியும் பாடமுண்டு."

"இந்தப் பாம்புக் கடிச் செய்தி, காப்பாற்றிய விஷயம் அரசருக்குப் போவதால் நமக்கு ஏதேனும் லாபம் உண்டா?"

– சற்று தொலைவிலிருந்து ஒரு இளைஞன் கேட்டான்.

எல்லாரும் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள்.

"உண்டு."

"என்ன அது?"

"அரசர் மிகப்பெரிய கோயில் கட்ட ஆரம்பித்திருக்கிறார். அந்த வேலையில் நமக்கும் பங்கு வேண்டும். நாமும் அதை முன்னிறுத்தி நம்முடைய கௌரவத்னதக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். நமக்கு அந்த இடத்தில் முதல் இடம் லேண்டும்."

அந்தணத் தலைவர் அடித்துக் கூற, அவர்கள் அமைதியானார்கள்.

"நம்மை மீறி நாம் இல்லாமல் இந்தத் தேசத்தில் ஒரு கல்கூட அசையக்கூடாது. ஒவ்வொரு கல்லும் நம்மைக் கேட்டுக் கொண்டுதான் புரள வேண்டும். வாழ்வில் அப்படிப்பட்ட கவனம் வேண்டும்." அவர் சீற, அந்தண இளைஞர்கள் வாயடைத்து நின்றார்கள்.

அந்தணத் தலைவர் மெல்ல நடந்து அவர் குடியிருப்புக்குத் திரும்பினார். அப்பேர்ப்பட்ட குடியிருப்பிலிருந்துதான் மிகக் கவனமாக இரண்டு இளைஞர்கள் எழுந்து, ஏன் கருமார் புலத்திலிருந்து சப்தமே வரவில்லை என்று யோசித்தார்கள். மெல்ல

தோளில் துண்டு போட்டு கருமார்புலம் நோக்கி பேசிக் கொண்டே நடந்து போனார்கள்.

அந்தணர்கள் அங்கு போவதற்குள் குடந்தையின் தெற்குப் பக்கமுள்ள பழையாறையிலிருந்தும், உடையாளூரிலிருந்தும் குதிரை வீரர்கள் குடந்தையின் வடக்குப் பக்கமான காவிரிக் கரைப் பக்கம் வந்து சேர்ந்தார்கள்.

யானைகள் கொண்டு வரப்பட்டன. சிறுதேர் வந்து நின்றது.

அந்தணர்கள் என்ன என்று தெரியாமல் கம்மாளர் புலத்தின் வாசலில் திகைத்து நின்றார்கள். அருகே வந்த அந்தணச் சிறுவனைக் கைதட்டி அழைத்து, உடனே ஊருக்குப் போய் சகலரையும் கம்மாளர் புலத்திற்கு வரும்படி சொன்னார்கள். கம்மாளர் புலம் நோக்கி மெல்ல நடந்தார்கள்.

இடுப்பிலிருந்த மூன்றாம் துண்டை அவிழ்த்து தலைக்குக் கட்டிக் கொண்டு மேல் துண்டை உதறித் தோளில் போர்த்திக் கொண்டார்கள். அவர்கள் அந்தணர்கள் என்று உற்றுப் பார்த்தாலொழிய யாருக்கும் தெரியாது.

அந்தப் பரபரப்பான கூட்டத்தில் அவர்கள் யார், எதற்காக இங்கு வந்திருக்கிறார்கள் என்று கவனிக்கும்படி எவரும் இல்லை. யாருக்கும் அவர்கள் மீது அக்கறை செலுத்த வேண்டிய நிர்பந்தமும் இல்லாமல் போயிற்று.

அடையாளம் காணாதபடி ஒதுங்கியிருந்த அந்த இரண்டு அந்தணர்களும் என்ன நடக்கிறது என்று பார்க்க மெல்ல மெல்வ புலத்திற்குள் நுழைந்தார்கள்.

அலர்கள் யாரிடமும் எதுவும் விசாரிக்கவில்லை. விசாரித்தால் தானே யார் விசாரிப்பது என்று பார்ப்பார்கள். விசாரிக்காமவ் மௌனமாக நிற்கும்பொழுதே ஒருவரை யொருவர் விசாரித்துக் கொண்டிருக்கிற விஷயம் காதில் விழுந்தது. அது போதுமானதாக இருந்தது.

இளவரசருக்குக் குடந்தை சேனாதிபதிகளின் வருகையும், படைகளின் வருகையும் தெரிவிக்கப்பட்டது. இளவரசர் அந்தக் கட்டிலைவிட்டு எழுந்து உட்கார்ந்தார். அவர் எழுந்ததும் அதிகாரிச்சி வனமுடையாள் கைகூப்ப, அவர் திரும்பி லேசான முறைப்புடன் அவளைப் பார்த்தார்.

"என்ன வனமுடையாள். ஏன் இப்படிச் செய்தாய்?" என்று மெல்லிய குரலில் அதட்டினார்.

"இப்படிச் செய்யாவிட்டால் தஞ்சையிலுள்ளவர்கள் என்னை மாறுகாவ் மாறுகை வாங்கியிருப்பார்கள். இளவரசர் வந்ததுகூடத் தெரியாது அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று வாய்க்கு வந்தபடி ஏசுவார்கள். உங்களை நான் கண்டுபிடித்தது தழுவக் குழைந்த நாதரின் அருள். சக்தி முற்றத்து நாதரின் ஆசீர்வாதம்."

"அப்படியா... உன் ஊர் சக்தி முற்றமா. எப்படி இருக்கிறது கோயில்?"

"நன்றாக இருக்கிறது. ஆறுகால பூஜை நடக்கிறது. பெண்கள் திருமணத்திற்கு வந்து நேர்ந்து கொள்வதாவ், திருமாங்கல்யம் பலப்பட்டு இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்வதால் அந்தக் கோயிலுக்குத் தனிச் சிறப்பே இருக்கிறது."

"இருக்கட்டும். யார் யார் வந்திருக்கிறார்கள்?"

"குடந்தையிலுள்ள அத்தனை உபசேனாதிபதிகளும் வந்து விட்டார்கள்."

"தஞ்சைக்குச் செய்தி அனுப்பி விட்டாயா?"

"அனுப்பி மூன்று நாழிகை ஆயிற்று. இந்நேரம் போய்ச் சேர்ந்திருப்பார்கள். அங்கிருந்தும் படைகள் இங்கு உங்களை நோக்கி வரக்கூடும்.

"அதற்கு முன்பு நாம் கிளம்பி விடலாம்."

அவருக்குக் கருமார் புலத்திலிருந்து கறி சோறும், மீன் குழம்பும், தலைக் கறியும் தட்டில் கொண்டு வந்து தரப்பட்டன.

"எனக்கு மட்டும் கொடுத்தால் எப்படி?" அன்று அவர் கேட்க, "வீரர்கள் தனியே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் சரி என்றதும் அவர்களும் சாப்பிடுவார்கள்." என்றாள் வனமுடையாள்.

"சாப்பிடச் சொல். நாம் தஞ்சையை நோக்கிப் போகிறோம்."

கிட்டத்தட்ட சுற்றி நின்று நூறு பேர் பார்க்க, நிதானமாக இளவரசர் இராஜேந்திரர் சாப்பிடத் துவங்கினார். அப்படிச் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர் போலவே ருசித்துச் சாப்பிட்டார். இன்னும் குழம்பு கேட்டார். கறித்துண்டுகள் கேட்டார். உண்ட பிறகு வாய் கொப்புளித்தார். ஆலங்குச்சியால் பல் தேய்த்தார். மறுபடியும் கொப்புளித்தார். முகம் கழுவிக் கொண்டார். திருநீறு

இட்டுக் கொண்டார். உடைகளை உதறி சரி செய்து கொண்டார்.

குடந்தையின் காவலுக்குப் பொறுப்பான ஒரு உபசேனாதிபதி பெரிய சால்வையை அவர் மீது போர்த்தினான். அதை வணக்கத்துடன் ஏற்றுக் கொண்டார்.

"குதிரைகளை என்ன செய்தீர்கள்?" என்று வீரர்களைக் கேட்க, "இவர்கள் துடைத்து, பராமரித்து புல்லிட்டு விட்டார்கள். குதிரைகள் தயாராக இருக்கின்றன..." என்று கருமார் இளைஞர்களை நோக்கி னக காட்டினார்கள்.

அந்தக் கருமார் இளைஞர்களை நோக்கி அவர் கை உயர்த்தி ஆசிர்வாதம் செய்தார். அந்த இளைஞர்கள் விழுந்து நமஸ்கரித்தார்கள். 'இளவரசர் வாழ்க' என்று மெல்லிய குரலில் கூவினார்கள்.

இளவரசருக்கு முன்பு சட்டென்று ஒரு கிழவன் துணி விரித்து அதன் மீது ஆறேழு அம்புகள் வைத்தான்.

"நீங்கள் சொன்னவிதமாக அம்புகள் தயாரித்திருக்கிறோம். இது கனத்த இரும்பு. இன்னொன்று மெல்லிய இரும்பு. இன்னொன்று தாமிரத் தகடு. இன்னொன்று காரீயம் சேர்த்தது. பிரம்பின் நுனியை கூர்மையாக்கி இன்னும் மிகச் சிறிய இரும்பு வளையம் அடித்தது. வெகு தூரம் போவதற்கு இந்தப் பிரம்பைச் சீவிய அம்புகள் மிகவும் உதவுகின்றன. யானைகளின் மண்டையைத் துளைப்பதற்கு இந்த இரும்பு அம்புகள் உதவுகின்றன..." என்று அந்தக் கிழவன் எடுத்துச் சொல்ல, மறுபடியும் அவைகளைப் பார்த்துவிட்டு ஒவ்வொன்றிலும் விதவிதமான எண்ணிக்கை சொல்லி ஓலையில் எழுதி கையெழுத்து இட்டுக்கொடுத்தார். இன்னும் நகர்ந்து புலத்தின் வெளிப்பக்கம் வந்தார்.

அவரை எதிர்த்துப் பேசிய கருமார் இளைஞன் கை கூப்பினான். சட்டென்று அவனைப் பார்த்ததும் அவன் பேசியது மொத்தமும் ஞாபகம் வந்தது. மறுபடியும் திரும்பினார்.

அருகேயிருந்த வீட்டிற்குப் போய் அந்த வீட்டின் படியில் ஏறி நின்று கொண்டார். ஜனங்கள் அவரைச் சுற்றி நின்று கொண்டார்கள். சுற்றி எல்லா ஜனங்களையும் பார்த்தார்.

"இங்கு வந்ததும், உங்களோடு தங்கியதும், உங்கள் உணவை உண்டதும் எனக்கு ஒருகாலும் மறக்காது. குடந்தையின் கருமார்கள் நான் நன்கு அறிவேன். உங்களுடைய உழைப்புதான்

என் வெற்றிக்கு அடித்தளம். இதை நான் ஒரு போதும் மறந்ததில்லை.

உங்களுக்கு இன்னும் அதிகமாக சீர்கள் செய்ய வேண்டும் என்பது என் விருப்பம். வெகு நிச்சயமாய் இப்பொழுது செய்ய முடியாவிட்டாலும், என்னுடைய ஆட்சிக் காவத்திவே உங்களுக்குப் பல்வேறு விதமான உதவிகள் செய்வேன். வெகு குறிப்பாய், இந்த இளைஞன் கேட்ட, நீங்களெல்லாம் மனதில் தேக்க வைத்துக் கொண்டிருக்கின்ற அந்தக் கோரிக்கைகளை நான் நிறைவேற்றுவன்.

என்ன கோரிக்கைகள் என்பதை உங்களுக்கு இந்த நேரம் வாய் திறந்து சொவ்ல முடியாமல் இருக்கவாம். எனக்கு ஞாபகம் இருக்கிறதா என்று சந்தேகம் வரலாம். இப்பொழுது சொல் கிறேன். உங்கள் வீட்டிற்கு முன்னும் பின்னும் வாசல் வைத்துக் கொள்ளவும், வீட்டிற்குச் கண்ணம் அடித்துக் கொள்ளவும், திண்ணை கட்டிக் கொள்ளவும், நவ்லது கெட்டதுக்கு சங்கு ஊதிக் கொள்ளவும், தேரில் லரவும், செருப்பணிந்து கொள்ள வும், அதைவிட முக்கியமாய் நீங்கள் முப்புரி நூவ் அணிந்து கொள்ளவும் நான் உத்தரவிடுவேன்.

அந்த உரிமைகளை உங்களுக்குத் தருலேன். இது பற்றி தஞ்சைக்குப் போனவுடனேயே பேரரசர் உடையார் ஸ்ரீ இராஜராஜசோழருடன் பேகவேன். ஒருவேளை ஏதேனும் காரணம் காட்டி அவர் மறுப்பின், லேண்டாம் என்று வாய் திறந்து சொல்வாராயின் இந்த விஷயங்கள் மொத்தமும் என்னுடைய ஆட்சிக் காலத்தில் கருமார்களுக்கு நிறைவேற்றப்படும் என்று இந்தப் பூமியில் அடித்து சத்தியம் செய்து உறுதி கூறுகிறேன்."

அவர் தரையில் இறங்கினார். ஓங்கி பூமியில் அடித்தார். அடித்த, தூக ஒட்டிய மண் ஏற்றிய உள்ளங்கையை உயர்த்திக் காண்பித்தார்.

பெண்கள் கூட்டம் வெறியோடு குலவையிட்டது. ஆண்கள் உயரே துணி எறிந்தார்கள். அந்தணர்கள் திகைத் தார்கள்.

"முப்புரி நூலா... பூணூலா... கம்மாளர்களுக்கா, என்ன அநியாயம் இது." ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். வெகு வேகமாய் அவர்களுடைய மங்கலம் நோக்கி நடக்கத் துவங்கினார்கள்.

லனமுடையாள் திகைத்தாள்.

'இதென்ன தேவையில்லாத செயல். இவர்கள் கேட்டால் கொடுத்து விடுவதா. இது மிகப்பெரிய ஜாதிச்சண்டைக்கு வழி லகுக்குமே. பேரரசர் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் பலமுறை மறுத்த விஷயத்தைத் தான் செய்வேன் என்று சொன்னால் தேசத்திற்குள் கலகம் மூளுமே. மக்கள் இரண்டாகப் பிரிவார் களே. அந்தணர்களுடைய செல்வாக்கு அதிகம் இருக்கின்ற இந்தக் காலத்தில், அவர்கள் பேச்சுக்கு மதிப்பு அதிகம் தருகின்ற அரசியல்வாதிகள் இருக்கின்ற இந்தக் காலத்தில் இவ்விஷயம் குழப்பம் விளைவிக்குமே. இளவரசர் இராஜேந்திரர் இதைத் தெரிந்து செய்கிறாரா, தெரியாது செய்கிறாரா?'

இளவரசருடைய குதிரைகள் குடந்தையின் வழியாக பழையாறை நோக்கிப் போயின. உடையாளூர் குளத்தைச் சுற்றி வந்தன.

அங்குள்ள மக்கள் எழுந்து நின்று அவரை வரவேற்றார் கள். துண்டு விசிறி அவர் பெயரைச் சொல்லி வாழ்க என்று சொன்னார்கள்.

கூட வந்தவன் இளவரசருக்கு அருகே வந்து, "உடை யாளூர் அந்தணக் குடியிருப்பில் உங்களுக்கு வரவேற்பு தர அந்தணர்கள் காத்திருக்கிறார்களாம்." என்றான்.

"இங்கு வரச் சொல். இவ்வலையெனில் வரவேற்பை வேறு எப்போதேனும் தரச் சொல்."

அவர் அந்தணக் குடியிருப்புப் பக்கம் போகாமல் குதிரையைத் தஞ்சையை நோக்கித் திருப்பினார்.

வெகு சீக்கிரம் ஜாதிச் சண்டை வரும் என்று பின்னால் குதிரையில் தொடர்ந்த வனமுடையாளுக்குத் தெரிந்து விட்டது.

112

செய்தி கேட்டதும் தஞ்சை மிரண்டது. இளவரசரா... குடந்தையிலா... படைகள் இல்லாமல் வந்திருக்கிறாரா. தஞ்சை நோக்கி கிளம்பிவிட்டாரா என்றெல்லாம் வேகமாக விசாரித்தார்கள்.

உபசேனாதிபதிகள் அதிகம் மிரண்டார்கள். அவர்கள் படைகளுக்கு உத்தரவிட்டு எதற்கும் ஆயத்தமாக இருக்கச்

சொன்னார்கள். வீட்டு வாசல்களை அலங்கரிக்கும்படி பறை முழக்கம் செய்து உத்தரவிடப்பட்டது. கோட்டைக் காவலர்கள் மாற்றப்பட்டனர். எல்லாப் பக்கத்து கோட்டை வாசல்களும் பலப்படுத்தப்பட்டன.

"இளவரசர் வடக்கு வாசல் வழியாகத்தான் வருவார் என்று ஒரு பொழுதும் கற்பனை செய்யாதே. மேற்கிலிருந்தோ, தெற்கிலிருந்தோ, கிழக்கிலிருந்தோ, ஏன்... வானத்திலிருந்துகூட குதிக்கலாம். பூமியைப் பிளந்து கொண்டுகூட மேலே வரலாம். எனவே, எந்த நேரமும் விழிப்பாகவும், துடிப்பாகவும் இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள்..." என்று உபசேனாதிபதிகள் உரக்கத் கத்தினார்கள். கைப்பிரம்புகளைத் தரையில் அடித்து உத்தரவிட்டார்கள்.

எல்லோர் வீட்டு வாசலிலும் நீர் தெளிக்கப்பட்டது. பெரும் கோலங்கள் போடப்பட்டன. கோலத்தின் நடுவே பூக்கள் வைக்கப்பட்டன. வீதிக்கு குறுக்கே மாவிலைத் தோரணமும், தென்னை ஓலைத் தோரணமும் கட்டப்பட்டன. கோட்டை வாசலில் வாழைமரங்களும், தென்னை ஓலையால் பின்னப் பட்ட அழகிய பந்தலும் நிறுவப்பட்டன.

அந்தணர்கள் நீர்க் குடத்துடனும் பூத்தட்டுகளுடனும் வாசலுக்கு விரைந்தார்கள். அவர்களுக்கென்று அமைக்கப்பட்டி ருந்த பந்தலில் உட்கார்ந்து கொண்டு வேத மந்திரங்களை உரக்கச் சொல்லத் துவங்கினார்கள்.

எக்காளமும், மேளமும் கோட்டைக்கு வெளியே வெகு தூரம் போய் நின்று கொண்டன. எக்காளம் நின்ற இடத்திலிருந்து கோட்டை வரை குதிரைகள் வரிசையாக நிறுத்தப்பட்டன. அதன் கடிவாளம் பிடித்தபடி வீரர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

இளவரசர் வந்ததும் குதிரையில் ஏறி முன்னும் பின்னுமாக அணிவகுத்து அவரைக் கோட்டைக்கு அழைத்துப் போகக் காத்திருந்தார்கள். தெற்குப் பகுதி கோட்டைவாசல் அடைக்கப்பட்டது. அவசியமானாலொழிய திட்டிவாசல் திறந்து எவரையும் அனுமதிக்க வேண்டாம் என்று சொல்லப்பட்டது.

இளலரசர் வருவதைக் கேட்டு பாண்டிய தேசத்திலிருந்து எவரேனும் உள்ளே லரக்கூடும் என்பதால் அங்கு கட்டுக்காவல் அதிகம் இருந்தது. ஒருவேளை இளவரசர் உள்ளே நுழைந்ததும், கிழக்குப் பக்கமாகவே போய் நிகம்பசூதனியைத் தரிசித்து விட்டு

பிறகு கோட்டைக்கு வரவாம் என்பதால் அந்தப் பாதையும் செப்பனிடப்பட்டது. அங்கும் குதிரை வீரர்கள் நிறுத்தி வைக்கப் பட்டார்கள். பூ மாலைகளோடு அர்ச்சகர்கள் அங்கு காத்திருந்தார்கள்.

"கோயில் பணிக்கு என்று அழைத்து வந்த தேவரடியார் களை வாசலில் வந்து நிற்கச் சொல்லட்டுமா?" – ஒரு உபசேனாதிபதி கேட்க, கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர் சிறிது நேரம் யோசித்தார்.

"இல்லை, கோயில் பணியைப் பார்ப்பதற்காகத்தான் இளவரசர் இங்கு வருகிறார். கோயில் பணிக்கு உண்டான வரை கோயில் பணியைச் செய்யச் சொல். தேவரடியார்களையும், இங்கு கல்தூக்கக் கொண்டு வந்த மாற்று தேசத்து வீரர்களையும் நாம் வரவேற்பதில், கலப்பதில் அர்த்தமில்லை. அவர்கள் விரும்பினாலும் வரவேண்டாம் என்று சொல். அவர்களை நோக்கி இளவரசர் வருவார் என்று தெரிவி. முன்னையும் விட மும்முரமாக வேலை செய்யச் சொல். இளவரசரின் வருகை மாமன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவருக்குத் தெரிந்து விட்டதா. என்ன செய்து கொண்டிருக்கிறார்?'' என்று விசாரித்தார்.

"அரண்மனைக்கு அதிகாரிச்சிகள் மூலமாகத் தகவல் போய்விட்டது. ஆனால், உள்ளிருந்து தகவல் வரவில்லை. பஞ்சவன் மாதேவியிடம் தகவல் சொல்வ, நல்லது என்று பதில் சொல்லி அனுப்பினாராம்."

"அரசர் வெளியே லந்து வரவேற்பாரா அல்லது இளவரசர் அரண்மனைக்குப் போக வேண்டுமா?"

"எதுவும் தெரியவில்லை. அது குறித்து நீங்கள் விசாரித்து தகவல் தெரிவித்தால் நன்றாக இருக்கும். ஒருவேளை வாசலில் நின்று எங்கே அரசர் என்று கேட்டால் பதில் சொல்வ எங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமல்வவா. அரசரைப் பற்றி எதுவும் தெரியவில்வை என்று சொன்னால் இளவரசர் வேகமாகக் கோபித்துக் கொள்வார். கடுமையான வார்த்தைகள் சொல்வார். எனவே, தயவுசெய்து அரசருடைய நிலமையை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகின்றேன்."

– ஒரு உபசேனாதிபதி பதட்டத்துடன் பேசினான்.

"உனக்கு அந்தக் கவலை வேண்டாம். இளவரசரை வாசலில் நான் நின்று வரவேற்பேன்."

"எங்களுக்கு சந்தோஷம். ஆனால், இளவரசர் உங்களை நோக்கி வந்து உங்களிடம்தான் பேசுவார் என்று சொல்ல முடியாது. யார் பேசுவதற்காகத் தயாராக நிற்கிறாரோ அவரை ஒதுக்கிவிட்டு, யார் ஒதுங்கி நிற்கிறாரோ அவர்களை முன்னே அழைத்து விவரம் கேட்பது இளவரசர் இயல்பு. படைகள் வரிசையாக நிற்கும்போது அதைப் பார்வையிட்டுக் கொண்டே வருகின்ற இளவரசர், சட்டென்று நின்று படையின் கடைசியில் நிற்கின்ற ஒருவனைக் கூப்பிட்டு அவனைக் சுத்தி சுழற்றச் சொல்வார். ஈட்டி எறியச் சொல்வார். வில் வளைத்து நாணேற்றச் சொல்வார். அவனால் முடியாவிட்டால் இது தான் படை நடத்துகிற லட்சணமா என்று உபசேனாதிபதியைக் கன்னத்தில் அறைவார். எந்த நேரத்தில் எதை இளவரசர் செய்வார், யாரை விசாரிப்பார் என்று சொல்லதற்கே இல்லை. எனவே, உபசேனாதிபதி என்று பட்டயம் மாட்டிக் கொண்டிருக்கிற நான், அவர் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகின்ற ஒரு நிலையில் இருக்க வேண்டும் என்பதால்தான் உங்களிடம் வற்புறுத்திக் கேட்கிறேன். மன்னர் எப்போது வருவார்?"

"அந்தக் கேள்வி என்னிடமும் கேள்வியாகத்தான் இருக்கிறது. பதில் இல்லை. எதனால் அரண்மனை மௌனமாக இருக்கிறது என்று புரியவில்லை. இளவரசர் வருவது அரசருக்குப் பிடிக்கவில்லையா அல்வது வேறு யாருக்கேனும் பிடிக்கவில்லையா என்று சந்தேகம் எனக்கும் இருக்கிறது. இதற்கு மேலே உன்னிடம் பேச விருப்பமில்லை. நீயும் இதுபற்றிப் பேச வேண்டாம்.

எனக்குத் தகவல் தெரிந்த சில நொடிகளில் உனக்கும் தகவல் தெரியும். என் மாளிகைக்கு எதிர்புறமிருந்து எவரும் அறியாத வண்ணம் காவல் காத்து வா. எதிர்ப்பக்க மாளிகையில் நீ மறைந்திருப்பினும் எனக்கு ஆட்சேபணை இல்லை. எவரேனும் தடுத்தால் என் பெயர் சொல்..."

கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர் அந்த உபசேனாதிபதியை அனுப்பி விட்டு மாளிகையின் வெளிப்புற நடையில் முன்னும் பின்னும் அலைந்தார்.

ஏன் அரசருடைய இருப்பிடத்திலிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. இளவரசர் வருகிறார் என்றதும் ஒரு குதூகலம், ஒரு சந்தோஷம் நிரம்பியிருக்கும் என்று நினைத்தேனே. ஏதேனும் பிணக்கா. தந்தைக்கும் – மகனுக்கும் ஆகாது போய்விட்டதா.

அவ்லது தந்தையைக் கண்டிப்பதற்காக மகன் வருகிறான் என்று மாளிகையில் உள்ளவர்கள் நினைத்துவிட்டார்களா. தென்னாடுடைய சிவனுக்கு அற்புதமாக கோயில் எழுப்புகின்ற காரியத்தை யார் தடுக்க முடியும். எவருக்குத் தடுக்க மனம் லரும். இளவரசர் சிவனருட் செல்வராயிற்றே. அத்தை குந்தலையின் மடியில் அமர்ந்து அடியார்களின் கதைகளைக் கேட்டவராயிற்றே. சிவன் கோயில்களுக்குச் சிலைகள் வழங்க பலபேர் முன்வருவார்கள். நான் வாத்தியங்கள் வழங்க ஆசைப்படுகிறேன்.

குறிப்பாய், காண்டாமணியும், பெரிய முரகம், எக்காளமும், எப்பொழுதும் எவ்வா கோயிலிலும் என்னுடைய கொடையாக இருக்க வேண்டுமென்று வாய்விட்டு சொன்னவராயிற்றே. அதை நிறைவேற்றியவராயிற்றே.

எவரும் கேட்காமவேயே, இருக்கிறதா என்று விசாரிக்காமலேயே எல்லா கோயில்களுக்கும் பித்தளையால் எக்காளமும், தோலில் இழுத்துக் கட்டிய பலாமரத்து முரகம், முழங்கை அகலமுள்ள வெங்கலமணியும் அவர் பெயர் பொறித்து போயிருக்கிறதே. இதே ஆரவாரத்தோடுதான் இளவரசரும் இருக்கிறார் என்பது ஒரு மறுக்கப்பட முடியாத உண்மை.

உரத்த குரலில் பேச்க. பெரிதான சிரிப்பு. கூடுதலான அதட்டல். சற்று மிகையான கோபம். பேச்சில் சற்று எதிர்ப்பு காட்டினாலும், ஏன், எதற்கு, எவ்விதம் என்று நூற்றுக்கணக்கான கேள்விகளால் துளைத்தெடுத்து தன்னுடைய பக்கம் சரியென்று நிரூபிக்கத் துடிக்கின்ற வேகம். லயதின் காரணமாக உண்டான துடிப்பு என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்டாலும், முப்பது அகவை நெருங்கிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலும்கூட இளவரசர் இராஜேந்திரரால் அமைதியாக இருக்க முடியவில்லை. கோபம் இல்லாமல் பேச முடியவில்லை.

விசாரித்து வந்த ஒற்றர்கள் வேறு விதமாகச் சொல்கிறார்கள். இளவரசருக்கு அருகே உள்ளலர்கள் தூண்டிவிடுகிறார்கள். இன்னும் எத்தனை காலத்திற்கு நீங்கள் இளவரசர். மீசை நரைத்து ஆசை நரைத்து போன பின்னர்தான் அரசராக வருவீர்களா. அதற்கு முன்பு உங்களுக்கு அந்தப் பதவி கிடைக்காதா என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்களாம்.

சேனாதிபதிகளோடு உற்சாகமாக மது அருந்துகிற பொழுது அரசரே என்று கூப்பிடுகிறார்களாம். நீங்கள் ஏன்

இன்னும் அரசராகவில்லை என்று மனைவியர்களும், குழந்தைகளும் கேட்கிறபொழுது இராஜேந்திர சோழர் மௌனமாக இருந்து விடுகிறாராம்.

எப்பொழுதும் சோழ தேசத்திற்கு உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர்தான் மன்னர் என்று சொல்கிறாராம்.

போன மாதம் ஒரு குழந்தையின் பிறந்த நாள் விழாவில் இவ்விதமே கேள்வி எழுந்தபோது, "நான் சீக்கிரம் இறந்து விடுவேனடா. போரில் வீரமரணம் அடைந்து விடுவேன். அதற்காகத் தான் என்னை அரசராக மாற்றாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். என்னைவிட நல்ல அரசரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்ல, அரண்மனை மொத்தமும் அலறிவிட்டதாம்.

சேனாதிபதிகள் சிலர் வாள் உருவி சுயமாய் சிரச்சேதம் செய்து கொள்ள துணிந்து விட்டார்களாம். சகலரையும், இராஜேந்திர சோழரின் மனைவியர்கள் தடுத்து அமைதியாக இருக்கும்படி சொல்லி புருஷனின் மனது மாற தேவாரதிருவாசகங்களைப் பாடினார்களாம். நம்பியாண்டார் நம்பிக்கு ஓலை அனுப்பி அவரை வரச்செய்து அரசரோடு பேச வைத்தார்களாம்.

சிவனருட் செல்வர் நம்பியாண்டார் நம்பியின் உதவியாள் சோழர் தேசத்தின் ஒற்றன். பிரம்மராயருக்கு மிக நெருக்கமானவன்.

இளவரசர் இராஜேந்திரரின் மனோநிலை கவலைக்கிடமாய் இருக்கிறதென்றும், அடிக்கடி தனிமையில் இருக்கிறார் என்றும் அவனால் சொல்லப்பட்டது.

மாமன்னர் உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவரும் ஆள் வைத்து இதை அறிந்திருப்பார்போல. 'இளவரசர் இராஜேந்திரனைப் பற்றி செய்திகள் வந்து கொண்டிருக்கின்றனவா' என்று போன மாதம் விசாரித்துவிட்டு கூர்மையாக பிரம்மராயரை, உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் பார்த்தார். பிரம்மராயர் பதில் சொல்லாமல் போகவே, மெல்ல சிரித்துவிட்டு எனக்கு வந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லிவிட்டுப் போனார்.

உனக்கும் செய்திகள் வந்து கொண்டிருப்பது எனக்குத் தெரியும் என்று அந்தப் புன்னகை சொல்லாமல் சொல்லியது.

ஒருவேளை தனக்குத் தெரியாத செய்திகள் ஏதேனும் மௌனமாக கோபத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்று சொல்லிவிட்டுப் போனார்.

அவர் வீட்டு மாளிகையிலிருந்து பார்த்தால் மன்னரின் வாசல் தெரியும். மேல் மாடம் தெரியும். மேல் மாடத்திற்கும் மேலே இருக்கின்ற காவல் தளத்திலுள்ள கொம்பூதுபவன் நிற்பது தெரியும். வலப்பக்கக் காவல் மண்டபத்திலும், இடப்பக்கக் காவல் மண்டபத்திலும் இருக்கும் காவலர்கள் அரண்மனை யையே பார்த்துக் கொண்டிருப்பது தெரியும். அவர்கள் பரபரப்படைந்தால் அரசர் அல்லது பஞ்சவன் மாதேவி வெளியே வந்துவிட்டார் என்று அர்த்தம். அந்தப் பரபரப்பின் வேகத்தை வைத்துக் கொண்டு வந்தது அரசரா, பஞ்சவன்மாதேவியா என்பதுகூட அறிந்து கொள்ள முடியும்.

இதோ ஒரு வீரன் வேகமாக அசைகிறான். எக்காளம் எடுக்கிறான். உயர்த்திப் பிடிக்கிறான்; வாயில் வைக்கிறான். முழு பலத்தோடு ஊதுகிறான். அரசர் கிளம்பிவிட்டார். உள்ளே இருக்கின்ற குதிரைகளும், வீரர்களும் உரத்த குரலிவ் பேசி அலைவது உணர முடிகிறது.

கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர் பரபரத்தார். அவருடைய மெய்க்காவல் வீரர்கள் துரிதமாகச் செயல் பட்டார்கள். அவருடைய கறுப்பு நிற குதிரைகள் பூட்டிய சிறுதேரை வாசல் பக்கம் வைத்தார்கள். பல்லக்குத் தூக்கிகள் பல்லக்கு அருகே தயாராக நின்றார்கள். இன்னும் இரண்டு மெய்க்காப்பாளர்கள் குதிரையில் ஏறிக் கொண்டார்கள். உத்தரவிற்குக் காத்திருந்தார்கள். அலரிடம் அதிகாரிச்சிகளாக பணிபுரிகின்ற மூன்று பெண்களும் வீட்டின் பின்புறத்திலிருந்து வாசலுக்கு வந்தார்கள். என்ன உத்தரவு என்பது போல் பார்த்தார்கள்.

"மன்னர் வாசலைத் தாண்டும் பொழுது என்னைப் பார்த்துவிட்டு நிற்பார். பார்க்காமவ் போக மாட்டார். அப்பொழுது எனக்கு என்ன உத்தரவிடப்படுகிறதோ. அதற்கேற்ப உங்களுக்கும் உத்தரவுகள் வரும். எல்லாவற்றிற்கும் தயாராக இருங்கள்." என்று குரல் கொடுத்தார்.

இறங்கி தோட்டத்து மண்ணில் கால் வைத்து நடந்து வாசல் பக்கம் போய் நின்றார். அவர் வீட்டு வாசலும் நன்கு தெளிக்கப்பட்டிருந்தது. கோலங்கள் போடப்பட்டிருந்தன.

மாவிலைகளாலும், தென்னந்தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன. வர்ணக் கொடிகள் வீட்டின் இரண்டு புறமும் கம்பு நட்டு பறக்கவிட சற்று தூக்கலாகவே அவர் வீட்டு அலங்காரம் இருந்தது.

கோட்டைக் கதவுகள் பளீரென்று திறந்தன. கறுப்புத் தலைப்பாகை அணிந்த உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவரின் ஆபத்துதவிகள் முன்னே கிளம்பினார்கள். உரத்த குரலில் சவுக்காலும், பிரம்பாலும் சப்தங்கள் ஏற்படுத்தி வாசலில் நின்ற ஜனங்களை வெளியே நிற்கச் சொன்னார்கள்.

ஆபத்துதவிகள் வந்த பிறகு ஆறு கொடிகள் அணிவகுத்து வந்தன. பேரிகைகளும், டமாரங்களும், எக்காளங்களும், ஊது குழல்களும் ஏந்தி வீரர்கள் குதிரைகளில் வந்தார்கள். பட்டத்து யானை வந்தது. அந்த யானையின் மீது வெறும் குடை மட்டுமே இருந்தது. யானை கடந்த பிறகு மறுபடியும் ஆபத்துதவிகள் படை வந்தது. அவர்கள் மிகக் கவனமாக சாலையோரம் நின்ற மக்களைப் பார்த்தார்கள். உப்பரிகையைப் பார்த்தார்கள்.

ஒரு குதிரை வீரன் கிருஷ்ணன் ராமனான பிரம்ம ராயருக்கு வணக்கம் சொல்லி, அவர் மாளிகைக்குள் வேகமாக நுழைந்தான். அங்குள்ளவர்களை உற்றுப் பார்த்தான். தலை யசைத்து மறுபடியும் அதே வேகத்தில் வெளியே போனான்.

ஆபத்துதவிகளுக்கு எங்கு வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும், எவரை வேண்டுமானாலும் சோதனை போடுகின்ற உரிமை இருந்தது. சிலசமயம் வேண்டு மென்றே அவர்கள் அரண்மனையைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டு சோதனை செய்வது உண்டு.

ஆதித்த கரிகாலனின் இறப்புக்குப் பிறகு அரச குடும்பத்தினரின் பாதுகாப்பு மிக பலமாக்கப்பட்டுவிட்டது. ஆபத்துதவிகளுக்கு மிகப் பெரிய அதிகாரம் கொடுக்கப்பட்டு விட்டது. சிவசமயம் இந்த அதிகாரத்தை அவர்கள் அத்துமீறியும் செயல்படுத்தினார்கள். மக்களுடைய கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டார்கள்.

அப்படி மக்களுக்குக் கோபம் ஏற்படும் போதெல்லாம் உடையார் ஸ்ரீஇராஜராஜத் தேவர் முன்னிருந்து சமாதானப்படுத் தினார். எனக்காகச் செய்கிறார்கள். மன்னித்துவிடுங்கள் என்று சொன்னார். பாண்டியர்களுடைய ஆபத்து நீங்கவில்லையே

என்று அடிக்குரலில் முணுமுணுத்தார். மக்கள் புரிந்து கொண்டு சரியென்று தலையசைத்தார்கள்.

ஆபத்துதவிகள் போனபிறகு கட்டியக்காரர்கள் வந்தார்கள். அரசருக்கு உதவியாக இருக்கின்ற, ஆலோசனை சொல்லுகின்ற அதிகாரிகளும், உபசேனாதிபதிகளும் ஆரவாரமாய் உடையணிந்து மிகச் சிறப்பான குதிரைகளிவ் வலம் வந்தார்கள்.

அரசர் ஒரு சிறுதேரில் பஞ்சலன்மாதேவியை அருகே அமர்த்திக்கொண்டு அவரே தேரை ஓட்டிக் கொண்டு வந்தார். அவருக்குப் பக்கலாட்டிலும், பின்னும் ஆபத்துதவிப் படைகள் மீண்டும் தொடர்ந்தது. மீண்டும் குறுக்கீடுகள் வந்தன. அவரைத் தாண்டி அரண்மனை அதிகாரிச்சிகள் குதிரைகளில் மிடுக்காக பயணம் செய்து அரசரையே பார்த்தபடி வந்தார்கள். அதற்குப் பிறகு அரச குடும்பத்தினரும், அவர்களுக்குப் பாதுகாப்பான மெய்க்காவல் வீரர்களும் வந்தார்கள்.

அரசர் குதிரையைப் பிடித்து இழுத்து பிரம்மராயரின் வீட்டு லாசலில் நின்றார். அரசருடைய தேருக்கு வெகு அருகாமையிவ் அரசருடைய பட்டத்துக் குதிரையில் இன்னொரு ஆள் குதிரையின் மீது அமர்ந்து இறுக்கிப் பிடித்துக் கொள்ள கோணலாய் நடை போட்டு வந்தது.

தேரோடு குதிரையும் வருவதைப் பார்த்து பிரம்மராயர் தன்னுடைய ஆளுக்கு சமிஞ்சை செய்தார். குதிரை கொண்டு வா என்றார்.

அவருடைய குதிரை இன்னும் சிறிது தூரம் நகர்ந்து வாசல் விளிம்பில் நின்றது.

"நான் ஒரு தந்திரம் செய்யப்போகிறேன்." – அரசர் தேரிலிருந்து கீழே இறங்கினார்.

"தெற்கு நோக்கி கோயில் கட்டும் இடம் நோக்கி இந்த ஊர்வலத்தை நடத்தப் போகிறேன். பிறகு சட்டென்று ஊர்வலத்திலிருந்து பிரிந்து குதிரை ஏறி இராஜேந்திரனை வரவேற்க நேரே போகப் போகிறேன்."

"தனியாகப் பேசப் பிரியப்படுகிறீர்களா?" என்று பிரம்மராயர் கேட்க, "ஆமாம்" என்று உடையார் ஸ்ரீஇராஜராஜத்தேவர் தலையசைத்தார்.

113

"நீங்கள் இளவரசர் இராஜேந்திரருடன் தனியாகப் பேசப் பிரியப்படுலதினால் ஊர்வலத்தை நிகம்பசூதனி கோயிலுக்குப் போக கட்டளையிடுங்கள். அந்தத் தெரு குறுகலானது. அந்தத் தெருவின் லழியே போகும்போது காககளை இனறக்கச் சொல்லிவிடுங்கள். காகுகள் இறைக்கும்போது ஜனங்கள் தடுமாறுவார்கள். சில சமயம் வீரர்களும் காககள் பொறுக்கக் குனிவார்கள். அப்போது நாம் நகர்ந்து விடலாம்..." பிரம்மராயர் சொன்னார்.

"நீங்களும் லருவதாய் முடிவு செய்துவிட்டீர்களா... உடையார் ஸ்ரீ இராஜராஜர் கேட்டார்.

"உங்களை மட்டும் தனியாக அனுப்ப ஒரு நாளும் என் மனம் ஒப்பாது. ஆனால் ஒரு கேள்வி? எதற்காக அடிக்கடி இப்படித் தனியே போகிறீர்கள் என்று மக்களிடையே பேச்சு எழும். சோழ அரசியல் சூழ்ச்சிகள் மிகுந்ததாக இருக்கிறதே. காரணமென்ன? இன்னும் போர் லருமா என்ற கேள்வி எழும். இது தேலைதானா என்று விரைவில் முடிவு செய்து கொள்ளுங்கள்."

"இராஜேந்திரன் கோபமாக இருப்பதாகக் கேள்விப் பட்டேன். சமாதானம் செய்ய வேண்டியது என் கடமை யல்லலா?"

"இளவரசர் உங்கள் மீது கோபமாக இருக்கிறாரா?"

"ஆமாம்."

"எதனைக் குறித்த கோபம்?"

"இன்னும் நான் அரச பதவியில் ஒட்டிக்கொண்டிருக் கிறேனே என்பதால் கூட இருக்கலாம்."

"நாராயணா... என்ன சொல் இது. உங்களை உயிருக்குயி ராக நேசிக்கின்ற இளவரசரா இப்படி நினைப்பார். எந்தத் துரோகி இப்படிச் சொன்னது?" குரல் உயர்த்தாமல் கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர் கோபப்பட்டார்.

"சற்று முன் வந்த தகவல்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. திருவொற்றியூரிலிருந்து பல்வேறு விதமான செய்திகள் என்னன எட்டியிருக்கின்றன."

"அப்படியானால், அவரை சமாதானப்படுத்த உங்களை விட பஞ்சவன் மாதேவியல்லவா பொருத்தமானவர். நீங்களும் வேகப்பட்டு, இளவரசரும் வேகப்பட்டால் பிரச்சினை பெரிதாகிவிடுமல்லவா. என்ன கோபம் என்று தெரிந்து கொள்வதற்கு, இளவரசர் வாயிலிருந்தே வெளிப்படுத்துவதற்கு பஞ்சவன்மாதேவிதான் உதவி செய்ய முடியும். அவர்களை அனுப்புங்கள்."

"அவர்களோடு நீங்களும் போகிறீர்களா. அது எனக்கு உதவியாக இருக்கும்."

"நிச்சயமாகச் செய்கிறேன்."

"என்னுடைய வெள்ளைக் குதிரை என்னைத் தவிர பஞ்சவன் மாதேவிக்குத்தான் கட்டுப்படும். எனவே, மெய்க் காவல் வீரர்கள் மூன்று பேருடனும் பஞ்சவன் மாதேவியை அழைத்துக் கொண்டு நிசும்ப சூதனியின் கோயில் தாண்டி வடக்கே திரும்பி, இளவரசரை வழியிலேயே மடக்கி மனம் திறந்து பேசிவிட்டு வாருங்கள்."

"உத்தரவு." – பிரம்மராயர் கைகூட்டினார்.

"பிரம்மராயரே... மிகப்பெரிய காரியத்னத இனறவன் அருளால் ஆரம்பித்திருக்கிறேன். இதைச் சீராக முடிக்க வேண்டு மென்றால் இளவரசன் இராஜேந்திர சோழன் இல்லாமல் முடியாது. இதை நீங்களும் புரிந்து கொண்டு அவனுக்கும் புரிய வையுங்கள்."

–ஒரு கட்டளைபோல் லேசான கசப்போடு அவர் பேச, பிரம்மராயர் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரை உற்றுப் பார்த்தார்.

'என் வேலையின் பளு. என் வேலையின் முக்கியத்துவம் உனக்கு புரியவில்லை' என்பதுபோல ஒரு பார்வை மன்னரிட மிருந்து பிரம்மராயரை நோக்கிக் குத்தியது.

கையில் பிடித்திருந்த சேணக் கயிற்றைச் சொடுக்க, குதினர தேரை இழுத்துக் கொண்டு முன்னேறியது.

பிரம்மராயர் சடேரென்று தன் குதிரைக்குத் தாவிக் கொண்டார். அடுத்த கால் நாழிகைக்கும் குறைவான நேரத்தில் அவருடைய கறுப்புப் புரவியும், அரசரது வெள்ளைப் புரவியும் பஞ்சவன் மாதேவியோடு வடக்கு நோக்கி வயல்களூடே பாய்ந்து போய்க் கொண்டிருந்தன. பின்னால், மூன்று

மெய்க்காலல் வீரர்கள் அவர்களுக்கு நல்ல இடைலெளிவிட்டுத் தொடர்ந்தார்கள்.

இந்த நேரத்தில் தஞ்சைக்கு இளவரசர் வருகை பல பிரச்சனைகளை உண்டு பண்ணக்கூடும் என்ற ஒரு உணர்வு பிரம்மராயருக்குத் தோன்றியது. அதில் முதல் பிரச்சினை கோயில் கட்ட இனி என்னால் எந்த உதவியும் செய்ய முடியாது என்று இளவரசர் சொல்வதாகவும் இருக்கலாம் என்ற எண்ணம் வந்தது.

அந்த ஆறு வீரர்களும் மேலைச் சாளுக்கியத்தைச் சேர்ந்தவர்கள். காவிரி பரந்து மிக வேகமாகப் பாறைகளுக்கு நடுவே சுழன்று ஓடும் ஊர்களைச் சேர்ந்தவர்கள். அந்தக் காவிரிக்கரை ஓரமாக வளமான நன்செய் நிலங்களையும், புன்செய் நிலங்களையும் உடையவர்கள். மிகப் பெரிய கிராமத்தின் முக்கியமான விவசாயிகள்.

சோழ தேசத்திலிருந்து வீரர்கள் படையெடுத்து மேலைச் சாளுக்கியம் நோக்கி வரிசை வரிசையாக மலையேறி, இறங்குவதைப் பார்த்து பிரமித்துப் போனவர்கள். மூன்று லட்சம் சோழ வீரர்கள் உள்ளே நுழைய எந்த எதிர்ப்பும் காட்டாமல், வாளை உருவி தரையில் போட்டுத் தலைப்பாகையைக் காலின் கீழ் போட்டு கைகட்டிக் கொண்டு நின்றவர்கள். என்னால் தலைப்பாகையை அழுத்திவிட்டு கைகட்டிக் கொண்டு நிற்க முடியாது என்று ஒரு மேலைச் சாளுக்கிய வீரன், கிராமத்து எல்லையைச் சோழ வீரர்கள் நெருங்கும்போது வெறியோடு வாள் உயர்த்திப்போக, இருபது அம்புகள் அவனைத் துளைத்துக் கீழே போட்டன.

முதலில் நுழைந்த சோழ இளவரசர் இராஜேந்திரர் உடனடியாக அம்புகளை எடுத்து அவனுக்கு முதலுதவி செய்யச் சொன்னார்.

சோழ தேசத்து வைத்தியர்களால் அந்த அம்புகள் வேகமாக எடுக்கப்பட்டன. ரத்தப் போக்கு நிறுத்தப்பட்டது.

இராஜேந்திரன் அருகே வந்து 'எப்படி இருக்கிறது உடல் நிலை' என்று விசாரித்தபோது, அவன் முழுபலமும் சேர்த்து 'தூ... என்று துப்பினான். இராஜேந்திரன் நெஞ்சில் எச்சில் தெரித்தது. அருகிலுள்ள சோழ வீரன் வாளை உருவி வேகமாய் அலன் நெஞ்சில் சொருகினான்.

இராஜேந்திரர் அவனைக் கடிந்து கொண்டார்.

ஆனாலும் அவன் மரணம் மேலைச் சாளுக்கியர்களிடம் மிக லேதனையாகப் பேசப்பட்டது. பாட்டாகப் பாடப்பட்டது.

"தோவ்வியை மரியாதையாக ஏற்றுக் கொள்வீர்கள் என்று நினைத்தேன். உங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வரவில்லை. நீங்கள் தோல்வியை ஏற்றுக் கொள்ளவில்லையெனில் ஏற்றுக் கொள்ளும்படி சோழ வீரர்கள் உங்களை நிர்பந்திப்பார்கள்."

-இராஜேந்திரர் சொல்லி விட்டுப் போனார்.

அவர் பேசியது எல்வோருக்கும் புரிந்தது.

இளவரசர் இராஜேந்திரர் அகன்றதும் சோழ வீரர்கள் வெறியாட்டம் ஆட ஆரம்பித்தார்கள்.

எல்லோரையும் பிரம்பால் அடித்தார்கள். பெண்களை வரிசையாக நிற்கச் சொன்னார்கள். பெண்களிடமிருந்த குழந்தைகளைப் பிடுங்கி எறிந்தார்கள். எங்கும் கூக்குரல்களும், அழுகுரலும் கேட்டன. அதட்டி அடக்கினார்கள். பெண்களிட மிருந்து எல்லா நகைகளையும் கழற்றி எடுக்கச் சொன்னார்கள். வீட்டுக்குள் வைத்திருக்கின்ற விலையுயர்ந்த பொருள்களை எல்லாம் எடுத்துக் கொண்டு போனார்கள். குறிப்பாக, கலப்பைகள் மீது சோழ வீரர்களுக்கு மிகுந்த காதல் இருந்தது. ஆடுகளும், மாடுகளும் சோழ தேசம் நோக்கித் திருப்பப்பட்டன.

பத்து நாட்கள் அங்கு தங்கியிருந்த சோழ வீரர்கள் மறுபடியும் வடக்கு நோக்கி, குடகுமலை நோக்கிப் போகத் துவங்கினார்கள்.

கிராமம் வெறிச்சோடிப் போயிற்று. அங்கு ஒரு துள்ளலும் இல்லாமல் போயிற்று.

சோழ வீரர்கள் வடகிழக்கு நோக்கி கங்க நாட்டின் வழியாக நுளம்பபாடி நோக்கிப் போனார்கள்.

பாதிக்கப்பட்ட பெண்கள் சிலர் தலைக்குத் தீ வைத்துப் பற்றி எரிய இறந்து போனார்கள். ஏன் என்று யாரும் விசாரிக்கவில்லை. எல்லோருக்கும் தெரிந்தே இருந்தது.

எடுபிடி வேலைக்கு நான்காவது வருணத்தினரைச் சோழ வீரர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த நான்காவது வருணத்தினர் கேட்டுக் கொண்டதற்கிணங்கி சாளுக்கிய வீரர்களை நான்காவது வருணத்தாருக்கு எடுபிடிகளாக நியமித்தார்கள்.

குதிரையைக் கழுவவும், புல்வைப் பிடுங்கிப் போடவும், காடு வெட்டி பாதை சமைக்கவும், சேற்றில் மாட்டிக் கொண்ட வண்டியைத் தள்ளவும், சாமான்களை இறக்கவும் ஏற்றவும், கூடாரம் அமைக்கவும் சாளுக்கிய வீரர்களை உபயோகப் படுத்திக் கொண்டார்கள். காலில் விலங்கு மாட்டியே நடமாட வைத்தார்கள். உரத்துப் பேசுகிற சாளுக்கிய வீரர்களைச் சோழ வீரர்கள் மூன்று பேர் சூழ்ந்து கொண்டு சவுக்கால் விளாசினார்கள். சிவரை அடித்தே கொன்றார்கள்.

தடிகைப்பாடி வரையிலும் ஜெயித்துவிட்டு திருவொற்றி யூர் காஞ்சிபுரம் வழியாய் பனடகள் சோழதேசம் வந்துவிட்டன. திருவொற்றியூரில் ராஜேந்திரர் உட்கார்ந்து விட்டார். ஏன் என்று விசாரித்தபோது அப்பாவுக்கும், பிள்ளைக்கும் அவ்வளவாக ஆகாது என்று தெரிய வந்தது.

திருவொற்றியூரில் நகரத்திவ் கடற்கரை ஓரம் மிகப்பெரிய திறந்த வெளிச்சாலை அமைத்து, அதிவ் ஆடுமாடுகளை அடைப்பதுபோவ சாளுக்கிய வீரர்களை வைத்திருந்தார்கள். அதே நேரம் கதவைப் பூட்டாதது போல போய்விடுவார்கள். தப்பித்துப் போகிறவர்கள் போகட்டும் என்று விட்டு விடுவார் கள். நீயும் தப்பித்துப் போவதுதானே என்று போகாதவர்களை உலுக்கிக் கேட்பார்கள்.

"தப்பித்து எங்கே போவது?" என்று சாளுக்கிய வீரன் சோழ வீரனைக் கேட்டான்.

"ஏன், உன்னுடைய கிராமத்திற்குப் போகலாமே..." என்று சோழ வீரன் பதில் சொன்னான்.

"அங்கு என் மனைவியையும், மகளையும் சந்திக்க வேண்டி யிருக்கும். என் மகளையும், மனைவியையும் என்னால் காப்பாற்ற முடியவில்லை. காப்பாற்ற முடியவில்லை என்பதை அவர்கள் மனதுக்குள் பேசிக் கொண்டிருப்பார்கள். படியேறியதும் முதலிவ் அதைத்தான் சொல்வார்கள். நீ ஒரு ஆண்பிள்ளையா. நீ ஒரு வீரன்தானா என்று கேட்பார்கள். மூன்று லட்சம் வீரர்கள் கிராமத்திற்குள் நுழைந்து குறையாடுகிறபோது அந்த ஆண்பிள்ளை என்ன செய்துவிட முடியும்?"

– சாளுக்கிய வீரன் கேட்டுத் தலை குனிந்து கொண்டான்.

"எங்களோடு சோழ தேசம் வந்து விடுகிறாயா?" என்று கேட்க, சாளுக்கிய வீரன் சரியென்று தலையசைத்தான். பிறகு திறந்த வெளிச்சாலையின் கதவுகள் பூட்டப்படவில்லை.

அதற்குப் பிறகுதான் ராஜேந்திரர் வந்து, "ஒரு லேளை நீங்கள் என்றேனும் ஊருக்குப் போக விரும்பினாவ் சிறிது பணமும், தானியங்களும் தரப்படும்..." என்று அறிவித்தார்.

அப்போது சிலர் மேலைச் சாளுக்கியம் நோக்கி நகர்ந்து போனார்கள். போகாதவர்களுக்கு ஒரு முக்கியமான பணி இருக்கிறது என்று இராஜேந்திரர் சொல்வ, என்ன என்று எல்லா வீரர்களும் கேட்டார்கள்.

கோயில் பற்றி விவரிக்கப் பலபேர் சோழ தேசத்தைப் பார்க்கவும், கோயில் பார்க்கவும் ஆசைப்பட்டார்கள்.

"லழியிலுள்ள சிவ தலங்களை எல்லாம் தரிசித்துக் கொண்டே போகலாமா?" என்று ஒரு வீரன் கேட்க, "அதைவிட அற்புதமான வேலை வேறு என்ன இருக்கிறது? நீங்கள் கைதிகள் அல்ல. எல்லோர் கால்களிவ் இருக்கும் விலங்குகளையும் எடுத்து விடுங்கள். நீங்கள் மூர்க்கமாய்ப் பேசினாவொழிய உங்களைச் சோழ வீரர்கள் எந்தத் தொந்தரவும் செய்ய மாட்டார்கள். நீங்கள் பத்தாயிரம் பேர் கொண்ட குழுவாகக் கோயிலுக்குப் போகலாம். அப்படியே சோழதேசம் நோக்கியும் பயணப் படலாம்... என்று இராஜேந்திரர் தெரிவித்தார்.

சோழ தேசத்தின் செழிப்பு பிரமிப்பாக இருந்தது. சோழ தேசத்தின் நாகரிகம் வியக்கத்தக்கதாக இருந்தது.

பெரிய வயலில் பதினாறு ஜோடி காளைகள் ஒன்றன்பின் ஒன்றாக உழுதன. அதே இடத்தையே மூன்று நாட்கள் உழுதார்கள். நீர் தேங்க வைத்தார்கள். அவர்கள் உழும் கலப்பை வேறாக இருந்தது. மிகக் கவனமாக ஓட்ட வேண்டியிருந்தது. வெறும் மண் கிளறுகிற கவப்பைகள் இல்லை. ஆழ்ந்து மண்ணைப் பிரட்டிப் போடுகிற கருவிகள்.

இன்னும் மிகப்பெரிய அதிசயம் அதிகாரிச்சிகள். பெண்களுக்கு சோழ தேசம் கொடுத்திருக்கிற அதிகாரங்கள். அதை அவர்கள் நிர்வகிக்கும் முறை. அதையும்விட அதிசயம் தேவரடியார்கள். அவர்களுக்கு சோழ தேசம் கொடுக்கின்ற மதிப்பு, அலர்கள் ஆடுகின்ற ஆட்டம், பாடுகின்ற பாட்டு, பேகுகின்ற பேச்க, சிரிக்கின்ற சிரிப்பு என்று எல்லாமுமே ஆச்சரியமாக இருந்தன.

மேலைச் சாளுக்கியத்தில் பெண்கள் இத்தனை உற்சாகமாக சிரித்ததேயில்லை.

ஒரு வகையில் சோழ தேசம் வந்தது நல்லதாகப் போயிற்று. நூற்றுக்கணக்கான விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. ஒரு பெரிய நாகரிகத்தோடு பழக்கம் ஏற்பட்டது. ஆனாலும், அவ்வப்போது ஊர் ஞாபகம் வாட்டியது. அவர்கள் கிராமத்தின் செழுமை கண்முன் வந்து நின்றது. பெண்களும், பிள்ளைகளும் மனக்கண்ணில் தோன்றினார்கள்.

தேவரடியார்களுக்குத் தனியாக குடியிருப்புகள் கட்டியிருப்பதும் ஆச்சரியமாக இருந்தது. தொடர்ந்து பல குடியிருப்புகள் கட்டப்பட வேண்டும் என்றும், பல தேவரடியார்கள் வந்து குடியிருப்பார்கள் என்றும் சொல்லப்பட்டன.

அந்த வீரர்கள் பிரிக்கப்பட்டார்கள். அந்த ஆறு வீரர்களும், தேவரடியார்களின் இல்லங்களைக் கட்டுவதற்காக நியமிக்கப் பட்டார்கள். அவர்களை ஒரு சிற்பியிடம் ஒப்படைத்தார்கள். சிற்பி அவர்களோடு தேவரடியார்கள் இருக்கும் இடத்தை நோக்கிப் போனான்.

தொலைவே, வடக்கே நகரத்தின் எதிர்புறத்தில் எக்காள சத்தம் கேட்டது. முரசுகள் முழங்கின. சிற்பிகள் உற்று கவனித்துவிட்டு இளவரசர் வருகிறார் என்று கூறினார்கள்.

மறுபடியும் எக்காளம் முழங்கியது.

அரசரும் வருகிறார் என்று சொன்னார்கள்.

சாளுக்கிய வீரர்களும் பரபரப்பானார்கள்.

"ஏன் இரண்டு பேரும் இந்த இடம் நோக்கி வருகிறார்கள்?" என்று கேட்டுக் கொண்டார்கள்.

அந்த எக்காளச் சத்தம் கேட்டு தேவரடியார்ப் பெண்கள் வெளியே வந்தார்கள்.

அவர்களையே மேலைச் சசாளுக்கிய வீரர்கள் விழிகள் உயர்த்திப் பார்த்தார்கள்.

அந்தப் பெண்கள் ஒருவரையொருவர் கட்டிக் கொள்வதும், கொஞ்சிக் கொள்வதும், கைகோர்த்துப் பேசிகொள்வதும், நூறு ஆண்கள் கற்றிப் பார்க்கிறார்கள் என்று தெரிந்தே கைகோர்த்து தட்டாமாலை கற்றுவதுமாய் செய்து கொண்டிருந்தார்கள்.

"அடக்கம் வேண்டும்... அடக்கம் வேண்டும்... என்று ஒரு உபசேனாதிபதி கத்திக் கொண்டிருந்தான்.

அவனை யாரும் வட்சியம் செய்யவேயில்லை.

சிற்பிகளை வரவேற்று சிற்பிகளோடு சந்தோஷமாய் தேவரடியார்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வீடுகள் சரிசெய்யப்பட வேண்டும். இன்னும் வீடுகள் கட்டும் பொழுது பவ குறைகளை நீக்கச் செய்ய வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

சிற்பிகள் தலையாட்டிக் கொண்டிருந்தார்கள்.

அரசர் வருகை பற்றியும், இளவரசர் வருகை பற்றியும் அங்குள்ளவர்களுக்கு அந்த நேரம் மறந்து போயிற்று.

114

பிரம்மராயரும், பஞ்சவன் மாதேவியும் குதிரையில் தஞ்சை மாநகரத்திலிருந்து வடக்கு நோக்கிப் போனபோது எதிரே ஒரு கறுப்பு குதிரையை தர்ப்பைக் கயிறு சேணத்துடன் ஒரு ஆள் ஓட்டி வருவது தெரிந்தது.

அவன் தலையில் சிகப்புப் பட்டுத்துணி கற்றியிருந்தான்.

குதிரைகள் இரண்டும் ஒன்றையொன்று தாண்டின. சட்டென்று நின்றன. தாண்டிப் போனது வைஷ்ணவதாசன் என்பதை பிரம்மராயர் புரிந்து கொண்டார். வைஷ்ணவதாசன் குதிரை ஓடிப்போய் வட்டமடித்து பிரம்மராயரை நோக்கி வந்தது. பஞ்சவன் மாதேவி சற்றுத் தொலைவே போய் குதிரையை நிறுத்தினாள். அவளும் திருப்பிக் கொண்டு பிரம்மராயரை நோக்கி வந்தாள்.

"ஏன் நின்று விட்டீர்கள்?" என்று பிரம்மராயரை நோக்கிக் கேட்டாள்.

"என்னுடைய ஒற்றன் வைஷ்ணவதாசன். என்னைத் தேடி வந்து கொண்டிருக்கிறான். ஏதோ முக்கியமான செய்தி இருந்தாக வேண்டும்."

"எப்படித் தெரிந்தது?"

"தலையில் சிகப்புத் துணியை கட்டியிருக்கிறான். 'மிக அவசரம்' என்று அதற்கு அர்த்தம்."

"அப்படியா... என்ன செய்தி?"

வைஷ்ணலதாசன் அருகே வந்தான். அவனுக்கு மெல்லியதாய் மூச்சு இரைத்துக் கொண்டிருந்தது.

"நலமா?" விசாரித்தான்.

"நலம். என்ன விசேஷம்?"

"குடந்தையிலுள்ள கம்மாளர்களிடம் ராஜேந்திர சோழர் பேசி விட்டு இப்பொழுது கருந்தட்டாங்குடிக்குள் நுழைந்து விட்டார்."

"ஏன்? எதற்காக?"

"அங்குள்ள கம்மாளர்களிடம் பேசுவதற்காக."

பிரம்மராயர் புருவத்தை நெறித்தார்.

"மறுபடியும் பிரச்சினை வருமா?"

"வந்துவிட்டது. ராஜேந்திர சோழர் எல்லா வாக்குறுதி களையும் நான் பதவியேற்றதும் நிறைவேற்றுவேன் என்று உரத்த குரலில் மண்ணில் அறைந்து சத்தியம் செய்திருக்கிறார். கம்மாளர்கள் குதூகலத்தில் இருக்கிறார்கள்."

"இங்குள்ளவர்களுக்குத் தெரிந்து விட்டதா?"

"ஆமாம். இங்குள்ளவர்களுக்கும் தெரிந்துவிட்டது."

"உன் அபிப்ராயம் என்ன?"

"பஞ்சவன் மாதேவி கம்மாளர்களுக்கு நடுவே பேச வேண்டாம். நீங்களும் போக வேண்டாம். அவர்கள் கோரிக்கைக்கு எதிராகப் பேச நாம் வந்துவிட்டோம் என்று அவர்கள் நினைக்கக் கூடும். பேச்சு அதிகரிக்கக் கூடும். ஏன், ராஜேந்திர சோழரே தேவையற்றுப் பேசக்கூடும்."

"புரிகிறது. அரசியே... எனக்கு ஒரு உதவி செய்யுங்கள். தயவு செய்து மறுபடி அரசரோடு சேர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான தகவலை நான் அனுப்புகிறேன்."

"மீண்டும் கம்மாளர் அந்தணர் பிரச்சினை வருமா பிரம்மராயரே?"

"வருவதற்கான எல்லா சாத்தியக் கூறுகளும் இருக்கின்றன. கம்மாளர்களுக்கு இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக இளவரசர் சத்தியம் செய்தது, அந்தணர்களுக்குத் தெரிந்தால் பிரச்சினை பெரிதாகத் தான் போகும். அலர்கள் வேண்டு மென்று கேட்பார்கள். அந்தணர்கள் கூடாது என்று சொல் வார்கள். சோழ தேசத்தில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்படும்."

"நீங்கள் ஏன் கருந்தட்டாங்குடி போக வேண்டாம் என்று சொல்கிறீர்கள்?"

"அது நல்லதல்ல. காரணம் பிற்பாடு சொல்கிறேன் இப்போது அரசரை நோக்கிப் போங்கள்."

"நான் என்ன செய்ய...?" – வைஷ்ணவதாசன் கேட்டான்.

"இளவரசருடைய ஒவ்வொரு அணுகுமுறையையும் கவனித்து எனக்குத் தகவல் சொல்லிக் கொண்டிரு..."

"நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் பிரம்மராயரே...?" – பஞ்சவன் மாதேவி கவலையோடு கேட்டாள்.

"இளவரசருக்குப் பிடித்த ஒரு தலைக்கோலி இருக்கிறாள். தெற்கே ராமேஸ்வரம் வரை தீர்த்தயாத்திரை போய்விட்டு நிசும்பசூதனி கோயில் அருகே தங்கியிருக்கிறாள். அவளுடன் சற்றுப் பேசி விட்டு வரலாமென்று நினைக்கிறேன்."

"என்ன பேசுவீர்கள்...?"

"இளவரசரைச் சற்று அமைதியாக இருக்கும்படி நாம் சொல்ல முடியாது, நீங்கள் சொல்ல முடியாது, அவள் சொல்ல முடியும். அவள் சொன்னால் இளவரசர் கேட்பார்."

"யார் அவள்? அவள் பெயரென்ன?" – பஞ்சவன் மாதேவி ஆவலுடன் வினவினான்.

"அவள் பெயர் பரவை. பரவை நாச்சியார்." – பிரம்மராயர் பதில் சொன்னார்.

குதிரையைத் திருப்பினார். நிகம்பசூதனி கோயில் நோக்கி அவர் குதிரை போயிற்று.

பஞ்சவன் மாதேவி தன் குதிரையை அரசரை நோக்கிச் செலுத்தினாள்.

அவள் முகம் மிகக் கவலையாக இருந்தது. வைஷ்ணவ தாசன் மறுபடியும் வடக்கு நோக்கிப் போனான்.

இளவரசர் தஞ்சை நகரில் இருக்கும்வரை இரவு-பகல் பாராது வேலை இருக்குமென்று அந்த ஒற்றனுக்குத் தெரிந்து விட்டது.

"அடியே, சீருடையாள்... திருவாரூர் பெண்களெல்லாம் எங்கிருக்கிறார்கள்?"

– நக்கன் மானாபரணி தளிச்சேரி பெண்களுடே... புகுந்து கேட்டாள்.

"திருவாரூர் பெண்களா... எதிர்ப்பக்கம் கடைசி வீடு. இராஜராஜி என்று ஒருத்தி இருக்கிறாள். அவளுடன் கரிய மாணிக்கம் எச்சு மண்டை, என்பவர்கள் துணையிருக்கிறார்கள்.

அவர்களிடம் ஆறேழு திருவாரூர் பெண்கள் வந்து அமர்ந் திருக்கிறார்கள். ஒரே பேச்சும், பாட்டும் அங்கு அமர்க்களப் படுகிறது...

சீருடையாள் மானாபரணிக்குப் பதில் சொன்னாள்.

"அதுசரி... எதற்கு திருவாரூர் பெண்களைத் தேடுகிறீர்கள். எங்களை யெல்லாம் பார்த்தால் தலைக்கோலிகளாக, ஆட்டக் காரிகளாகத் தெரியவில்லையா? காஞ்சி மாநகரத்து மானாபரணிக்குத் தாளம் சொல்லத் தெரியுமல்லவா...? ஒரு ஜதி சொல்லுங்கள். ஒரு ஆட்டம் ஆடிக் காண்பிக்கிறேன்."

சீருடையாள் இடுப்பில் கைவைத்து நடித்துக் காண்பித் தாள். சுற்றியுள்ள பெண்கள் சிரித்தார்கள்.

"அது இல்லையடி. திருவாரூர்காரிகளுக்கு இளவரசர் இராஜேந்திர சோழர் என்றால் உயிர். அவர் வருகிறார் என்று சற்று முன்பு கேள்விப்பட்டேன். அவர்களுக்குத் தெரிவிக்க லாமே என்று நினைத்தேன்..."

"அப்படியா... இளவரசர் வருகிறாரா...? ஏன் எங்களுக்கு இளவரசர் உயிரில்லையா. நாங்களெல்லாம் இளவரசரைப் பகைவர்களாகவா நினைக்கிறோம்? யார் சொன்னது? எங்கு லருகிறார் இளவரசர்? நேரே இங்குதானே வருகிறார். தளிச் சேரியின் வடக்குப் பார்த்த தெருவில் மேடையமைத்து கற்றிப் பந்தம் நட்டு விட்டார்களே... அங்குதானே சகல ஆட்டமும் நடைபெறப் போகிறது. இளவரசரை வரவேற்க நாங்கள் இப்பொழுதும் தயார்."

"சீருடையாள் நீ அதிகமாக அலட்டுகிறாய். நாம் சாதாரணமாக நடந்தாலே அலட்டிக் கொண்டு நடப்பதாக இங்குள்ள அரசிகளும், அரச குடும்பத்துப் பெண்களும் நினைக் கிறார்கள். இளவரசர் இங்குதானே வருகிறார். வரட்டும் பார்த்துக் கொள்கிறேன் என்பதுபோல் தயவு செய்து பேசாதே."

"நான் இப்பொழுது என்ன அவதூறாகப் பேசிவிட்டேன் என்று என்மீது குற்றம் கண்டுபிடிக்கிறீர்கள்?" – சீருடையாள் சீறலாக பதில் சொன்னாள்.

"தேவையில்லாமல் ஒருவரையொருவர் கடிந்து கொள்ள வேண்டாம். திருவாரூர் பெண்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அவ்வளவுதானே. வழிவிடுங்கள் அம்மா. நீங்கள் போங்கள். இதைத் திருவாரூர் பெண்களிடம் தெரிவியுங்கள். உங்களுக்கு இன்னொரு செய்தி தெரியுமா?"

"என்ன?"

"இந்த இடத்திற்கு அரசர் வருகிறார். அரசர் வருவதற்குண்டான ஆயத்தங்கள். எக்காளங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு சிறு முரக ஒலித்தது. பிறகு எக்காளம் ஒலித்தது. குதிரை வீரர்கள் நம்முடைய வாசலுக்கு வந்து நின்று கொண்டிருக்கிறார்கள். தயார்படுத்துகிறார்கள். சிற்பிகள் தங்கள் குடிசை வாசல்களை சரிசெய்து வரிசையாக நிற்க ஆரம்பித்து விட்டார்கள். நாம் இன்னும் ஆடிக்கொண்டிருக்கிறோம். சிற்பிகளிடம் இருக்கின்ற ஒழுக்கம், கட்டுப்பாடு நம்மிடம் இல்லை. எப்பொழுது பார்த்தாலும் சிரிப்பு. எப்பொழுது பார்த்தாலும் ஆட்டம். அதுவும் கிள்ளிக்குடி சீருடையாள் இருந்தால் வெறும் கூச்சல்தான்." – அங்கிருந்த பெண்ணொருத்தி பேச, கிள்ளிக்குடி சீருடையாள் அவளை வேகமாக முறைத்தாள்.

என்ன பேகிறார்கள் என்று அக்கம் பக்கத்தில் கேட்டுக் கொண்டிருந்தவர்களால் இளவரசரின் வருகை, மெல்லப் பரவிற்று.

"இளவரசர் இங்கேயே வந்து விடுகிறாராம்."

"இங்கா. அரண்மனைக்கா. வேறு எங்கேனுமா. நமக்குத் தெரியவில்லை. தெரியவும் தெரியாது. ஆனால், திருவாரூர் பெண்களுக்குத் தெரிந்திருக்கும்..." என்று வேறு ஒருத்தி பதில் சொன்னாள்.

"இளவரசர் வருவதே இவர்களுக்குத் தெரியவில்லையே. இங்கு வருவார் என்பது மட்டுமே அலர்களுக்கு எப்படித் தெரிந்திருக்கும்?"

"தேடிக்கொண்டு வந்தாளே ஒரு காஞ்சிபுரத்துப் பெண்மணி, அலள்தான் இளவரசர் எங்கு வருவார் என்பதையும் சொல்லப் போகிறாள்."

"அதை ரகசியமாக சொல்ல வேண்டும். எல்லோருக்கும் நடுவே இளவரசர் வருகிறார் என்று பேசிக் கொண்டு போகிறாளே."

"இப்படிச் சொல்லிக் கொண்டு திரியும்படி அவளுக்குக் கட்டளை இருந்திருக்கும்"

"அப்படியா..."

"எத்தனை பேர் இளவரசரை நோக்கி ஓடுகிறீர்கள் என்று சிலருக்குத் தெரிந்து கொள்ள ஆசை. அதனால் இப்படி மெல்ல

செய்தியைப் பரப்பி விடுவார்கள். இளவரசரை நோக்கி யார் யார் போகிறீர்கள் என்று பார்ப்பார்கள்..."

"யார் பார்ப்பார்கள்?"

"அரசருடைய ஆட்கள்தான்."

"எதற்கு இந்தத் திரிசமன், எதற்கு இந்தச் சதி?"

"இந்த திரிசமன் இரண்டு மூன்று வருடங்களாக நடக்கிறதே சோழ தேசத்தில்... உனக்குத் தெரியாதா. இளவரசருக்கும், மன்னருக்கும் நடுவே சிண்டு முடிக்க பலபேர் தவிக்கிறார்களே. உனக்குப் புரியாதா?"

"எனக்கு அத்தனை அரசியல் வாசனை இல்லையடியம்மா." ஒரு பெண் மற்றவளிடம் சொல்ல, அவர்கள் அவளைப் பார்த்து கேலியாகச் சிரித்தார்கள்.

அரசியல் லாசனை இவ்வலையென்று சொன்ன பெண் மெல்ல எழுந்து கொவ்லைப்புறம் போனாள். அடுக்கி லைத்த செங்கற்களின் மீது கால் வைத்து சுவர் மீது ஏறினாள். மறு பக்கம் குதித்தாள்.

ஒற்றையடிப் பாதையோரம் ஓடிப்போய் தொலைவில் நின்று கொண்டிருந்த ஒரு வீரனிடம் "இளவரசரின் வருகை இங்கு வேகமாக பரப்பட்டு வருகிறது. பலபேர் இளவரசரைப் பார்ப்பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். யார் யார் என்ற விஷயத்தை நாளை உமக்குச் சொல்கிறேன்..." என்று சொன்னாள்.

அவன் சரியென்று தலையசைத்தான்.

"எனக்கு ஏதேனும் செய்தி உண்டா?"

"அரசர் வருகிறார் உங்கள் இடத்திற்கு, அனேகமாக உன் வீட்டிற்கு வருவார். வீட்டை வழக்கம்போலவே வைத்திரு. தனி உபசரணை எதுவும் வேண்டாம். அரசரின் வருகை உனக்கு ஆச்சரியமூட்டுவதாகவே இருக்கட்டும்."

"சரி. புரிகிறது..." அவள் விடைபெற்றுக் கொண்டு மறுபடியும் கவர் பக்கம் வந்தாள். எகிறி குதித்து உள்ளே நுழைந்தாள்.

கைகால்கள் அவம்பிக் கொண்டாள். மறுபடியும் வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டாள்.

அதற்குள் அங்கே இளவரசரின் வருகை பெரிதாகப் பேசப்பட்டு தேவரடியார்கள் கூட்டம் வேகமாக சிங்காரித்துக் கொண்டது.

மாட்டு வண்டிகள் பூட்டப்பட்டன. திறந்த வண்டிகளில் ஏறி நின்று கொண்டார்கள். உயர்ந்த கொம்புகளை பிடித்துக் கொண்டார்கள். மாட்டு வண்டிகள் கிளம்பின. நிகும்பசூதனி கோயில் நோக்கி வேகமாக விரட்டப்பட்டன.

ஒவ்வொரு மாட்டு வண்டியிலும் பதினைந்து இருபது இளம் பெண்கள் கொத்துக் கொத்தாக புடவை பறக்க நின்று கொண்டு போவதைப் பார்த்து அடிமை வீரர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள்.

இந்தத் தஞ்சை வராமல், இந்த விஷயங்களையெல்லாம் வேடிக்கை பார்க்காமல் சொந்த ஊருக்குப் போனவர்கள் அத்தனை பேரும் மடையர்கள். அங்கு வெறும் அவமானப் பட்டுக் கொண்டு கூனிக்குறுகி உட்கார்ந்து கொண்டிருப் பார்கள். இங்கு நடக்கின்ற இந்த விசித்திரங்களை நாம் என்றேனும் ஒருநாள் ஊருக்குப் போய் நிச்சயம் சொல்வோம் என்று பரபரப்பாக பார்க்கத் துவங்கினார்கள்.

தேவரடியார்களில் பாதி கும்பல் நிகம்பசூதனி கோயில் நோக்கிப் போயிற்று. சிற்பிகளுக்கு இந்தத் தகவல்கள் சொல்லப் பட்டன.

"இளவரசர் வந்தால் எங்களுக்கு என்னய்யா. நாங்கள் மன்னரால் அழைத்து வரப்பட்டிருக்கிறோம். மன்னர் கொடுக் கும் உணவை உண்டு கொண்டிருக்கிறோம். மன்னருக்காக கோயில் எழுப்ப எந்த நேரமும் தயாராக இருக்கிறோம். வேறு எவர் பற்றியும், எது பற்றியும் எங்களுக்கு அக்கறையில்லை. உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரை தவிர வேறு எவர் கட்டளைக்கும் நாங்கள் அடிபணியமாட்டோம்."

சிற்பிகளின் தலைவர் உரத்துப் பேசினபோது, ஒரு சேனாதிபதி அவர் தோளில் கைவைத்து, "போதும்... பேசியது போதும்..." என்று வேகமாக நிறுத்தினார்.

சிற்பிகளின் தலைவனும், மற்றவர்களும் அவரை உறுத்துப் பார்த்தார்கள்.

"முன்னுக்கு வரத் துடிக்கின்ற ஒவ்வொரு மனிதனும் அன்றைய அரசியல் நிலவரம் பற்றி மிகத் தெளிவாகப் புரிந்து கொள்வது நல்லது. உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரைத் தவிர

வேறு எவனரயும் வணங்க மாட்டேன் என்று நீங்களெல்லாம் பேசக்கூடாது. எல்லோருக்கும் வணக்கம். எல்லோருக்கும் நாங்கள் உழைக்கத் தயாராக இருக்கிறோம் என்றுதான் நீங்கள் பேச வேண்டும். நீங்கள் இப்படிப் பேகவது இளவரசர் ராஜேந்திரருக்கு எதிராகப் பேகலது போல் உள்ளது. மன்னர் மீது உள்ள அன்பால் தவறாகப் பேசிவிட்டீர்கள். இனி ஒருபொழுதும் இப்படிப் பேசாதீர்கள்."

"எதற்காக நீங்கள் இப்படி எச்சரிக்கிறீர்கள். இளவரசர் அரசர் ஆகிவிடுவார் என்று சொல்கிறீர்களா?"

– சிற்பிகளில் ஒருவன் கேட்க, சேனாதிபதி பதிலளித்தார்.

"ஆகலாம். இன்றோ அல்லது நானளயோ அல்லது நாலுவருடம் கழித்தோ இளவரர் அரசர் ஆகிவிடலாம். இளவரசர் ஆட்சிக்கு வந்துதானே ஆகவேண்டும்."

"என்ன சொல்கிறீர்கள் சேனாதிபதி? இளவரசர் ஆட்சிக்கு வந்தால் சிற்பிகள் லேண்டாமென்று தூக்கிப் போட்டு விடுவாரா. கோயில்களே கட்டத் தேவையில்லை என்று உத்தரவிட்டு விடுவாரா?"

"இது முட்டாள்தனமான பேச்க, உங்களைப் போன்ற வருக்கு எதற்கு அரசியல். யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களை அனுசரித்துப் போக வேண்டிய நினலயில்தான் நீங்கள் இருக்கிறீர்கள். எனவே, மிருதுவாகப் பேகவது நல்வது என்று சொல்கிறேன்."

சேனாதிபதி சொல்ல அங்கு மௌனம் நிலவியது. சேனாதிபதி மறுபடி பேசத் துவங்கினார்.

"உங்களுக்கொன்று தெரியுமா? இளவரசர் கம்மாளர்கள் மீது மிகுந்த கரிசனத்தோடு இருக்கிறார். அவர்கள் இடையறாது உழைத்துக் கொடுக்கின்ற ஆயுதங்களால்தான் வெற்றி பெற்றோம் என்று நினைக்கிறார். கம்மாளர்களுக்குச் சலுகைகள் கொடுக்கத் தயாராக இருக்கிறார். என்ன சலுனக என்று தெரியுமா?"

"கேள்விப்பட்டிருக்கிறேன். கம்மாளர்கள் பூணூல் அணிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டார்களாமே... எதற்கு?" பெருந்தச்சர் குரலில் வியப்பு இருந்தது.

"ஏன் கேட்கக் கூடாது. எதற்கு என்று ஏன் நீங்களே கேட்கிறீர்கள். இந்தச் சோழ தேசத்து அரசாங்கம் நடப்பதே கருமார்களின் உதவியால் தான் என்கிறபோது, கம்மாளர்

குலத்திற்கு என்கிறபோது, கம்மாளர் குலத்திற்கு உண்டான மரியாதையைக் கொடு என்று கேட்பதில் என்ன தவறு?"

"அந்தணர்கள் ஏற்க மாட்டார்களே."

"அந்தணர்கள் யார் ஏற்பதற்கு?"

"உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேலர் என்ன சொல்கிறார்?"

"அந்தணர்கள் என்ன சொல்கிறார்களோ– அதைத்தான் உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் சொல்வார். அந்தணர்கள் மறுக்க அவரும் மறுத்துவிடுவார்."

"தேவையில்லாத பிரச்சினை தானே இது. எல்லோர் முன்பும் இந்தப் புறக்கணிப்பு நடந்ததா?" – பெருந்தச்சர் கவலையுடன் கேட்டார்.

"எல்வோர் முன்பும் இந்தப் புறக்கணிப்பு நடந்தது. அதுவே நல்லதாகவும் போயிற்று." – சேனாதிபதியிடம் கவலையிருந்தது.

"என்ன சொல்கிறீர்கள். புரியவில்லை?"

– பெருந்தச்சர் கேட்டார். அங்கே ஒரு அமைதி நிலவியது.

115

சேனாதிபதியின் கேள்வியால் அங்கு ஏற்பட்ட அந்த அமைதியை இராஜராஜ பெருந்தச்சர் மிகச் சாதாரணமாக உடைத்தார்.

"இளவரசர் இராஜேந்திரர் இந்தப் புறக்கணிப்பை மனதுக்குள் குறித்துக் கொண்டார். கம்மாளர்களின் வருத்தத்தை அறிந்து கொண்டார். நேரடியாகப் போய் சமாதானம் செய்தார்."

"என்னவென்று."

"நமக்கு நல்ல காலம் வரும். அதுவரை பொறுத்துக் கொள்ளுங்கள்..." என்று சொன்னார்.

"நமக்கு என்று சொன்னாரா..."

"ஆமாம். அவரைக் கம்மாளர்களுடன் சேர்த்துக் கொண்டார்."

"இதற்கு உண்மையிவ் என்ன அர்த்தம்?" இன்னொரு சிற்பி கேட்டார்.

"என்னுடைய பதவிக்காலம் வரும்போது நான் உங்களுக்கு நீங்கள் கேட்ட உதவினயச் செய்வேன் என்று அர்த்தம்."

"சரி. ஏதோ செய்து விட்டுப் போகட்டும். அதனால் எங்களுக்கு என்ன?"

"முட்டாள்தானமாகப் பேசுகிறீர்கள். நீங்கள் யார். உங்கள் தொழிலென்ன?"

"நாங்கள் கற்சிற்பிகள்."

"உங்களுக்கும் கம்மாளர்களுக்கும் என்ன உறவு?"

"நாங்கள் எல்லோரும் ஒரே இனம். கல்வேலை செய்பவர்கள். பொன்வேலை செய்பலர்கள், உவோக சிற்பங்கள் செய்பவர்கள், வீடு கட்டுபவர்கள், மரலேலை செய்பவர்கள். துணி நெய்பவர்கள் எல்லோரும் ஒரே இனம் என்று சொல்லப்படுவதுண்டு. தேல சிற்பியான விஸ்வகர்மாவிட மிருந்து பிறந்தவர்கள் நாங்கள் என்று கூறப்படுவதுண்டு."

"ஆக... கருமார்களுக்கு என்ன உயர்வு கிடைக்கிறதோ அத்தனை உயர்வும் உங்களுக்கும் கிடைக்குமல்வவா." சேனாதிபதி கேட்டுவிட்டு கண் சிமிட்டினார்.

"இப்பொழுது என்ன கெட்டு விட்டது." ஒரு கல்தச்சர் கடுகடுத்தார்.

"பூணூல் அணிந்து கொள்ளலாமே." மறுபடியும் சேனாதிபதி உரக்கக் கூவினார்.

"அது எங்கள் வேலைக்கு இடைஞ்சல். பூணூல் அணிந்து கொள்ளுவது எதற்காக. அணிந்து என்ன செய்யப்போகிறோம். தேனவயில்லாத கோரிக்கை. அந்தணர்களுக்கு ஒரு பயம் ஏற் படுத்துகின்ற முயற்சி. அவர்களைப் போட்டிக்கு அழைக்கின்ற ஒரு மனப்பான்மை. அந்தணர்களுக்கு எதிராக இவ்வித மெல்லாம் செய்துவிட்டு இங்கு நிம்மதியாக வாழ முடியுமா."

"ஏன், அந்தணர்கள் என்ன செய்து விடுவார்கள்?"

"உங்களுக்குத் தெரியாதய்யா சேனாதிபதி. நீங்கள் சும்மா யிருங்கள். அந்தணர்கள் மிக மிக ஆபத்தானவர்கள். எப்பொழுது எங்கே நம்மை குழிதோண்டிப் புதைப்பார்கள் என்று சொல்லவே முடியாது. உண்மையிலேயே அவசியமான ஒரு கோரிக்கையாக இருந்தால் நாமும் கம்மாளர்களோடு சேர்ந்து கொள்ளலாம்."

"மாடமாளிகைகள் கட்டிக்கொடுக்கிறீர்கள். மிகப் பெரிய கோயில்களை நிர்மாணிக்கிறீர்கள். ஆனால் உங்களுக்கு வாழ்வு ஓலைக் குடிசைதான் என்று எழுதி வைக்கப்பட்டிருக்கிறது."

"அதுதான் எங்களுக்கு நல்லது. சூடான பாறாங்கல்லில் உட்கார்ந்து வேலை செய்கிறவர்கள், கட்டடத்தில் இருக்கும் போது அந்தச் சூடு உடம்பு விட்டுக் குறையாமல் போகும். லெட்ட வெளியில் படுப்பதும், கூரைக் குடிசைக்குள் கூடுவதும்தான் சிற்பிக்கு நல்லது. நல்ல கட்டடத்திற்குள் வாழும்போது காற்று வீசுவது தடைபடுகிறது. நான் புழுக்கத்தில் இருக்கவே கூடாது.

மற்றபடி இந்தக் கம்மாளர்கள் கேட்ட காலுக்குச் செருப்பு, தோளுக்குத் துணி, உட்கார்ந்து போகப் பல்லக்கு என்ப தெல்லாம் முட்டாள்தனம். செருப்பணிந்து கொண்டு நான் எந்த மலைமீது ஏற? உருண்டு கீழே விழுந்து சாலேன். எங்கள் திருமணத்தின் போது கூட தோளில் துண்டு போடுவதில்லை. தலையில் இறுக்கமாக கட்டுவதுதான் எங்கள் லழக்கம் கருமார்கள் கேட்ட எல்லாக் கோரிக்கைகளும் அபத்தமானவை. யாருக்கும் உபயோகமில்லாதவை. ஏன்... கருமார்கள்கூட எந்தப் பெரிய சௌகரியமும் அனுபவித்துவிட முடியாது.

பாறைச் சூடாவது பரவாயில்லை. உருக்கிய இரும்புக் குழம்புச் சூடு இன்னும் அதிகம். அவர்கள் எதற்காக ஓட்டு வீட்டி லும், கல்வீட்டிலும் இருக்க வேண்டும். கற்றிலும் மண் எழுப்பி மேலே ஓலைக் கூரையை இறுக்கப் போட்டு ஒரு துளி மழைநீர் உள்ளே இறங்கா லண்ணம் வைத்து அந்த வீட்டிலே இருக்கின்ற சுகம் எதிலாவது வருமா.

உருக்கு தேடிப் போகின்ற கருமான் பல்லக்கிலே போக முடியுமா. எல்லளவு தூரம் போக முடியும். யார் தூக்கிக் கொண்டு போவார்கள். கருமாரைக் கருமாரே கமப்பாரா என்ன லேதனை இது. வீட்டில் வெள்ளை அடித்துக் கொள்ளவும், நல்லது கெட்டதற்கு சங்கு ஊதிக் கொல்ளவும் என்று கேட்டிருக் கிறார்கள்.

எங்கள் வீட்டிற்கு நாங்கள் வெள்ளை அடிப்பதில்லை. மாறாகப் பசுஞ் சாணியைக் குழைத்து சுவர் முழுலதும் இண்டு இடுக்கு விடாமல் பூசி விடுகிறோம். அது கண்ணைப் பிடுங்கா மல் கண்ணிற்குக் குளுமையாக இருக்கிறது. எங்கள் கருவிகள் வைப்பதற்கு வசதியாக இருக்கிறது. வெள்ளையடித்த வீட்டில் கருவிகளை எங்கே வைப்பது. கலர் அழுக்காகி விடக்கூடாது

என்று கை வைக்க பயம் வரும். எங்கள் கைகள் அழுக்காக இல்லாமவ் வேறு எப்படி இருக்கும். அவர்கள் கரியிலும், மண்ணிலும் வேலை செய்கிறவர்கள். எதற்கு வெள்ளையடிக்க வேண்டும். சங்கு ஊதினால்தான் நல்லது நடக்குமா. செத்தவர் சொர்க்கத்திற்குப் போவாரா. இதுவரை நமது குடும்பத்தில் இறந்த பெரியோர்களெல்லாம் சங்கு ஊதிக் கொண்டா போனார்கள்.

இளவரசர் கொண்டாடுகிறார் என்பதாலேயே ஏதேனும் கேட்க வேண்டும் என்று கேட்கிறார்கள். யாரையோ பார்த்து தங்களுக்கும் அந்தச் சலுகைகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்டதுபோவ ஆகிறது.

எதற்கு அந்தணர்களோடும், உயர்குலத்து மனிதர் களோடும் போட்டி போட வேண்டும். நம் குலம் தாழ்ச்சி என்று எவர் சொன்னது. நாம் இல்வாமவ் இந்தச் சமுதாயம் எப்படி நடக்கும்?"

"உங்களிடம், கோரிக்கை ஏது வேண்டுமென்று இளவரசர் கேட்டாவ் என்ன செய்வீர்கள்?" சேனாதிபதி ஆவலோடு கேட்டார்.

"இன்னும் அதிகமாகக் கோயில்கள் கட்டுங்கள். அரச குடும்பத்தார் அனைவரும் ஏதேனும் ஒரு காலகட்டத்தில் கோயில்கள் கட்டியே ஆகவேண்டும். மாடமாளிகைகள் எழுப்பியே ஆக வேண்டும் என்று உத்தரவிடுங்கள் என்று சொல்வேன். பரம்பரை பரம்பரையாக லேலை இருக்குமல்வவா. ஏதாவது ஒரு கலாச்சாரம் இந்தப் பூமியில் நிற்குமல்வவா. அது முக்கியமல்லவா. எல்லா செங்கல் தளிசளையும், கற்றளிகளாக மாற்ற வேண்டுமென்று கைகூப்பிக் கேட்டுக் கொள்வேன். உடையார் ஸ்ரீ இராஜராஜதேவருக்கு அப்படியொரு எண்ணம் இருக்கிறது. அவருக்கு அப்படியொரு எண்ணம் உருவாகக் காரணமே நாங்கள்தான்.

இதனால் எங்களுக்கு மட்டுமா வேலை கிடைக்கும். கருமாருக்கும், மரத்தச்சருக்கும், நகை செய்பவருக்கும், உலோகச் சிற்ப வேலை செய்பவருக்கும, துணி நெய்பவர்களுக்கும், தேவரடியார்களுக்கும், காவல்காரர்களுக்கும், அந்தணர் களுக்கும், சமைப்பவர்களுக்கும், பாடுபவர்களுக்கும், மத்தளம்

வாசிப்பவர்களுக்கும், ஆடு மேய்ப்பவர்களுக்கும் கூட வேலை கிடைக்கும்.

கோயில் என்பது மிகப்பெரிய சமூகக் கூடம். ஒவ்வொரு ஊரிலும் மிகப் பெரிய சமூகக்கூடம் இருப்பின் அந்த ஊருக்கு மரியாதை. அந்த மக்களுக்கு அந்த ஊர் மீது, அந்த ஊர்ச் சபை மீது ஒரு பிடிப்பு ஏற்படும். உட்கார்ந்து பேச இடமிருந்தால் நிச்சயம் பேசுவார்கள். பேசினால் பிரச்சினைகள் தீரும். அப்படி உட்கார்ந்து பேசக்கூடிய கோயில்களை அதாவது சமூகக் கூடங்களை நிர்மாணிப்பது நம்முடைய பணி. அரசருடைய துணை அதற்குத் தேவை. இதுவல்லாமல் வேறு எந்தக் கோரிக்கைகள் வைத்தாலும் அது முட்டாள்தனம். நிர்மூடம்."

சிற்பிகள் தலைவர் உரத்துச் சீற, மற்ற சிற்பிகள் 'ஆஹா... ஆஹா...' என்று வாய்விட்டுப் பாராட்டினார்கள்.

அந்த வயதான சேனாதிபதி எழுந்து நின்று அந்தச் சிற்பியைப் பார்த்துக் கைகூப்பினார்.

"மிகப்பெரிய தொலைநோக்கு. மிகத்தெளிவான சிந்தனை. நீங்கள் சாதாரண சிற்பி இல்லையென்பதை மறுபடியும் நிரூபித்து விட்டீர்கள். இராஜராஜப் பெருந்தச்சர் என்பதை மறுபடியும் உங்கள் மக்களுக்கு நடுவே நிலை நாட்டிவிட்டீர்கள். நீங்கள் செயற்கரிய செயலைச் செய்ய இறங்கியிருக்கிறீர்கள். அதனால்தான் உங்கள் சிந்தனை விரிவுபட்டதாக இருக்கிறது. நான் ஏதேனும் தவறாகப் பேசியிருந்தால் மன்னித்து விடுங்கள்..." –சேனாதிபதி மறுபடியும் கை கூப்பியபோது வெளிப்பக்கத்தி லிருந்து ஒரு சிறுவன் ஓடி வந்தான்.

"ஐயா, தேவரடியார்கள் எல்லோரும் நிசும்பசூதனி கோயிலை நோக்கிப் போகிறார்கள். இளவரசர் அங்கு வருகிறாராம். அவரை வரவேற்பதற்காக அவர்கள் போகிறார் களாம். அவர்கள் பின்னே தஞ்சாவூர் மக்களும் போகிறார்கள். உங்களுக்குத் தகவல் சொல்லச் சொன்னார்கள்."

"யார் சொன்னது?"

"எச்கமண்டை என்கிற தேவரடியார் இந்தத் தகவலை உங்களிடம் சொல்லச் சொன்னார்."

"வேறு வேலையில்லை. நாம் இங்கேயே அமர்ந்திருப்போம். அரசர் இங்கு வருவதாகச் செய்தி வந்திருக்கிறது. அவரை வரவேற்பதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அவரை வேலையைக் கலனிப்போம்."

இராஜராஜப் பெருந்தச்சர் எழுந்து போய் பாறைகளைப் பார்வையிடத் துவங்கினார். சிற்பிகள் கவைந்தார்கள்.

தேவரடியார்கள் இருப்பிடத்தில் ஆறேழு நடனமாதர்களே இருந்தார்கள். மற்ற எல்லாரும் விரைவாகவும், வேகத்தோடும் நிகம்பசூதனி கோயிலை நோக்கிப் போனார்கள்.

அவர்கள் போவதைப் பார்த்துவிட்டு அடிமை வீரர்களான சாளுக்கிய தேசத்து வீரர்களும் மெல்ல அவர்கள் பின்னே நடந்து போனார்கள். அவர்கள் தஞ்சை நகரை இரண்டு புறமும் பார்த்துக்கொண்டு போனார்கள்.

நிகும்பசூதனி என்றால் என்ன என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டார்கள்.

அது மிக உக்கிரமான தெய்வம். தஞ்சையின் எல்லைக் காளி. இராஜேந்திரர் விரும்பி வணங்குகின்ற கொற்றவை என்று தஞ்சை வாசி ஒருவர் சொல்ல, உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் வருகின்ற எக்காளம் மிக அருகே கேட்டது.

அடிமை வீரர்கள் தேவரடியார்களோடு போவதா அல்லது அங்கே நிற்பதா என்று திகைத்தார்கள். தவித்தார்கள். வேகமாக தேவரடியார்களின் கூட்டத்திற்குப் பின்னே போய் நின்று கொண்டார்கள்.

கோயிலுக்காக நிர்மாணிக்கப்பட்ட அந்த அடினம வீரர்களின் கூரைக் கொட்டகையும் வெறிச்சோடிக் கிடந்தது.

மன்னரின் மெய்க்காப்பாளர்கள் உள்ளே வந்தார்கள். சட்டென்று திகைத்துப் போனார்கள்.

எங்கே எவ்வோரும் என்றார்கள். குதிரைகளை விரட்டி நாலாபுறமும் தேடினார்கள். சிற்பிகளை நோக்கி வந்தார்கள்.

இராஜராஜப் பெருந்தச்சர் எழுந்து நிற்கவே குதிரையிலிருந்து வீரன் கீழே குதித்தான். கைகூப்பி லணங்கினான்.

"அடிமை வீரர்கள் எவரையும் காணோமே. எங்கே போய் விட்டார்கள்."

"எங்கே போயிருப்பார்கள் என்று நினைக்கிறாய். தேவரடியார்கள் எல்வாம் நிகும்பசூதனி கோயிலுக்குப் போக, அவர்களும் தேவரடியார்களைப் பின்தொடர்ந்து போனார்கள்."

"யார் போகச் சொன்னது?"

"யார் இருக்கச் சொன்னார்கள். அவர்கள் இங்கேயே இருக்கும்படி யாராவது கட்டளையிட்டிருக்கிறீர்களா.

இல்லையே. எங்கு வேண்டுமானாலும் போகலாம். எப்பொழுது வேண்டுமானாலும் போகலாம் என்றுதானே அலர்களுக்கு இடம் அமைத்துக் கொடுத்திருக்கிறீர்கள். தேவரடியார்கள் எல்லாம் மாட்டு வண்டியில் ஏறி, நீண்ட கொம்பைக் கையில் பிடித்துக் கொண்டு உல்லாசமாகப் போக, அவர்களை வேடிக்கைப் பார்க்க இவர்களும் போய் விட்டார்கள். பாலம், குடும்பத்தைவிட்டு லெகுதூரம் இருக்கிறவர்கள். தேவரடியார்கள் பின்னால் வீரர்கள் போனதில் எந்தத் தவறும் இல்லையென்று நினைக்கிறேன்."

இராஜராஜப் பெருந்தச்சர் பேச, மற்ற சிற்பிகள் தலையாட்டினார்கள். சிவர் மெல்லியதாகச் சிரித்தார்கள்.

"அப்படியானால்... தேவரடியார்களும் இவ்லையா?" இன்னொரு வீரன் கேட்டான்.

"இங்கு நின்று கேட்பதில் என்ன பயன். போய் அங்கே தேடிப்பார்." என்று தேவரடியார்கள் இருக்கும் குடியிருப்பைக் காட்டினார்கள்.

ஒரு படை வேகமாக குதிரையேறி அங்கு போயிற்று. எக்காளம் மிக அருகில் கேட்டது. கொடிகள் உள்ளே நுழைந்தன. யானை அசைந்து வந்தது. கட்டியக்காரர்கள் மிகப் பெரிய விருதை உரத்துச் சொல்லிக் கொண்டு உள்ளே வந்தார்கள். எல்லார் முகத்திலும் திகைப்பு இருந்தது. எங்கே ஒரு அடிமை வீரனைக்கூட காணோம் என்ற பரபரப்பு இருந்தது. அங்கு நின்று அரசரைப் பார்த்தார்கள். அரசர் சிறு தேரில் வந்து அந்தப் பெரும் ஓலைக் குடிசை எதிரே நின்றார். திரும்பிப் பார்த்தார். ஓலைக் கொட்டகை காலியாக இருந்தது.

"எங்கே?" என்று கேட்டார்.

அவர் படையிலிருந்து ஒருவன்ஓடி வந்தான். அவர் காதோரம் சொன்னான்.

அரசருடைய முகம் மெல்ல கறுத்தது. பஞ்சவன் மாதேவி அரசரையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அரசருடைய தேர் சட்டென்று வேகமாகத் திரும்பியது. திரும்பிய வேகத்தில் ஒரு கோபம் இருந்தது. மெல்ல அந்தக் குதிரைகள் சிற்பிகள் இருக்கும் இடம் நோக்கி ஓடிவந்தன.

பஞ்சவன் மாதேவி அரசர் காதில் ஏதோ சொன்னார். அரசர் தலையாட்டிக் கேட்டுக் கொண்டார். பிறகு சட்டென்று முகத்தை மலர்ச்சியாக வைத்துக் கொண்டார். ஓடுகின்ற

தேரிலிருந்து தாவி இறங்கினார். பஞ்சவன் மாதேவி குதிரைகளைக் கடிவாளம் இழுத்து நிறுத்தினார். நடந்து சிற்பிகளுடைய கொட்டகைக்குள் அரசர் நுழைந்தார்.

"எங்கே இராஜராஜப் பெருந்தச்சர்?" என்று கேட்டார்.

இராஜராஜப் பெருந்தச்சர் முன்னேவர, இரண்டு கைகளையும் விரித்து அவரை நோக்கி அரசர் வந்தார். இராஜ ராஜப்பெருந்தச்சர் சில அடிகள் ஓடிப்போய் அரசருடைய காலில் பணிய, அவரைத் தூக்கி நிறுத்தி இறுக்கத் தழுவிக் கொண்டார்.

"மாமன்னர் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வாழ்க. உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் வாழ்க..." என்று கோஷங்கள் கூரைக் கொட்டகையைப் பிளந்தன.

குழந்தைகள் கூத்தாடினார்கள். எக்காளமும், சிறுபறையும் உரத்து முழங்க அதற்கு இளைஞர்களும், சிறுவர்களும் நடன மாடினார்கள். பெண்கள் குலவையிட்டார்கள். காப்புக் கட்டிக் கொண்ட இளைஞர்கள் பூர்ண கலசத்தைக் கொண்டு வந்து அரசரிடம் கொடுத்தார்கள்.

அரசர் அந்தப் பூர்ண கலசத்தின் மீது பொற்காசுகளைச் சொரிந்தார். அவைகளை முதிய பெண்கள் பொறுக்கி எடுத்துக் கொண்டு ஒரு முடிச்சாக்கி இராஜராஜப் பெருந்தச்சரிடம் ஒப்படைத்தார்கள்.

"இளவரசர் இங்கே வரப்போகிறார். அவருக்கு எவ்வித மாக கோயில் நாம் கட்டப் போகிறோம் என்பதை நீங்கள் விளக்கியாக வேண்டும். எத்தனை ஏற்பாடெல்லாம் செய்திருக்கிறோம் என்பதைச் சொல்லியாக வேண்டும். இங்கு நன்கு பேசக்கூடிய வாலிபர்களை முன்னால் நிற்க வைத்து இளவரசருடைய எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லும் படி பணித்து விடுங்கள்."

"ஏன், நானே சொல்கிறேனே..." இராஜராஜப் பெருந்தச்சர் சொல்ல, அரசர் கை தூக்கினார்.

சட்டென்று பெருந்தச்சர் முகம் மாறியது. "ஏன், நான் சொன்னாவ் தவறா மன்னரே?" – காதோரம் மிருதுவாக ஸ்ரீ இராஜராஜத்தேவரிடம் கேட்டார்.

"நீ பெருந்தச்சன். இராஜராஜ பெருந்தச்சன். மிகப்பெரிய கோயில் கட்டுவதற்கு உன்னைத் தயார் செய்துகொள். நீ யார் கேட்டாலும் பதில் சொல்ல வேண்டிய அவசியத்தில் இல்லை.

உனக்காக உன்னுடைய மக்கள் பதில் சொல்வார்கள். எங்கும், எதிலும், எப்போதும் தாழ்ந்து போகவேண்டிய அவசியமில்லை. ஏன் என்னைக்கூட நீ மண்டியிட்டு வணங்க வேண்டிய அவசியமில்லை. என் கால் தொட்டு இனி ஒருபோதும் வணங்காதே. நீ எம்பெருமான் சிவன் வேலை செய்பவன். சிவனுக்காக விமானம் கட்டுபவன். நீ என்னிலும் உயர்ந்தவன். எனலே, நாம் பார்க்கும்பொழுது தழுவிக் கொண்டால் போதும்."

அரசருடைய அந்தப் பேச்சில் கோபம் இருந்தது. இளவரசரை நீ வணங்க வேண்டாம் என்ற கட்டளை மறைமுகமாக இருந்தது.

இராஜராஜப் பெருந்தச்சர் கவனலயோடு கற்றியுள்ள சிற்பிகளைப் பார்த்தார். சிற்பிகள் தங்களுக்குள் பார்த்துக் கொண்டார்கள்.

116

"எந்த மரியாதையும் கேட்டு வரக்கூடாது. தானாக வரவேண்டும். நீங்கள் என்னை மிகப் பெரிதாக மதிக்கிறீர்கள் என்பதற்கு இதுவே சாட்சி. இந்த மரியாதை எனக்குப் போதும். எவரையும் இராஜராஜப் பெருந்தச்சன் வணங்க வேண்டாம். அவன் படைப்பு பிரம்மா என்று சொன்ன வார்த்தை போதும். நானும் காப்பு கட்டிக் கொண்ட இந்தச் சிற்பிகளும் இனி இறைவனைத் தவிர வேறு எந்த மனிதர்களையும் எக்காலத்திலும் லணங்க மாட்டோம். நீங்கள் கொடுத்து வந்த மரியாதையை மிகப் பணிவாகக் காப்பாற்றுவோம்..." என்று இராஜராஜப் பெருந்தச்சர் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரை நோக்கிக் கைகூப்பினார்.

கூட்டம் மறுபடியும் குலவையிட்டது.

உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேலர் சமிக்ஞை செய்ய எக்காளமும், சிறுபறையும் மறுபடியும் முழங்கின. ஒரு சந்தோஷம் சிற்பிகளின் கூட்டத்துக்குள் அலை அலையாய் பரவியது. தொலைவே தளிச்சேரியில் இருந்த ஆறு தேவரடியார்களும் மிரண்டு போய் என்ன நடக்கிறது அங்கே? எதற்காக இத்தனை குதூகலம் என்றுபார்த்தார்கள். பூர்ண கலசம் வைத்துக்

கொண்டு அரசர் அங்கு வந்தால் வரவேற்கத் தயாராக இருந்தார்கள்.

அரசர் மறுபடியும் சிறு தேர் ஏறினார். இன்னொரு தேரில் இராஜராஜப் பெருந்தச்சரை ஏறச் சொன்னார். மற்ற சிற்பிகளைக் குதிரையில் வரச்சொன்னார்.

அந்தப் படை மெல்ல நடந்து சிற்பிகளின் குடும்பத்தாரை உற்றுப் பார்த்தபடி தேவரடியார்கள் இருக்கின்ற இவ்லம் நோக்கிப் போயிற்று. தேவரடியார்கள் ஆறு பேரும் நடனமாடி அரசரை வரவேற்றார்கள். ஒருவர் பூரண கும்பம் கொடுக்க, அரசர் அதைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

"தேவரடியார்கள் வந்துவிட்டதாக தகவல் வந்ததே... எங்கிருக்கிறார்கள் எல்லாரும்... வீட்டிற்குள் உறங்கிக் கொண்டிருக்கிறார்களா, மிகுந்தா களைப்பா?" - அரசர் கேட்டார்.

அந்தக் கேள்வியில் கேலி இருந்தது. அந்தக் கேலியைப் புரிந்த ஒரு தலைக்கோலி மிரண்டாள்.

"இல்லை மன்னர் மன்னா. இளவரசர் இராஜேந்திர சோழர் நிசும்பசூதனி கோயிலுக்கு வருவதாகத் தகவவ் தெரிந்து எல்லோரும் அங்கு போயிருக்கிறார்கள்."

"இளவரசர் தேவரடியார்களை அங்கு வரச் சொன்னாரா?"

"இவ்வை அரசே. இவர்களாகத்தான் போயிருக்கிறார்கள்."

"அழகும் இளமையும் நிரம்பிய இருநூற்றுச் சொச்சம் தேவரடியார்கள் ஒரு இடம் நோக்கிப் போவதென்றால் பாதுகாப்பு வேண்டாமா. பாதுகாப்புக்கு யார் போயிருக்கிறார்கள்?"

"பாதுகாப்பிற்கு அடிமையாக வந்த வீரர்கள் போயிருக்கிறார்கள்."

"அப்படியா... அடிமை வீரர்களா தேவரடியார்களுக்குப் பாதுகாப்பு. நாம் அப்படி நியமிக்கவில்லையே?" கேள்வி கேட்டபடி பஞ்சவன் மாதேவியை நோக்கி அரசர் கவலையோடு பார்த்தார்.

"இல்லை. அடிமை வீரர்கள் தாங்களாக தேவரடியார்களைப் பின் தொடர்ந்திருக்கிறார்கள்."

"இது ஆபத்தல்லவா. எவரேனும் ஏதேனும் செய்துவிட்டால் அது அவமானம் அல்லவா. காவல் இல்லாமல் தேவரடி

யார்கள் போகலாமா. ஏன் அவர்களுக்கு இதையெல்லாம் சொல்லித் தரவில்லை. யார் இங்கு தலைமை ஏற்பது. சாவூர் பரஞ்சோதிதானே. பரஞ்சோதியைக் கூப்பிடு."

"பரஞ்சோதி இன்னும் பதவியேற்கவில்லை. பரஞ்சோதி ஊருக்குப் போயிருக்கிறார். எங்களிடம் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்."

"அதுதானே பார்த்தேன். சாவூர் பரஞ்சோதி இங்கு இருந்தால் இப்படித் தொந்தரவு நடக்காதே. பரஞ்சோதி வரும்வரை இங்கு யாரேனும் காவல் இருக்க வேண்டும். ஒரு உபசேனாதிபதியை இங்கு காவலுக்கு வை. உபசேனாதிபதியிடம் சொல்லி விட்டுத்தான் தேவரடியார்கள் முன்னோ பின்னோ நடக்க வேண்டுமென்று கட்டளையிட்டு விடு."

பஞ்சவன் மாதேவியை நோக்கி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் கட்டளையிட, பஞ்சவன் மாதேவி சரியென்று சொல்லி வேதனையில் உதடு கடித்தாள்.

பிரம்மராயர் குதிரையில் வேகமாகப் பின் தொடர்ந்து வருவது தெரிந்தது. அவர் குதிரையில் இருந்தபடியே கற்றும் முற்றும் பார்த்தார்.

அரசருக்கருகே வந்தார்.

"இளவரசர் தஞ்சைக்கு அருகேயுள்ள கருந்தட்டாங்குடிக்கு வந்துவிட்டார். அதற்குள் நுழையாது அந்த வாசலில் நின்று பேசிக் கொண்டிருக்கிறார்..." என்று காதோரம் பதில் சொன்னார்.

"சரி, நீங்களும் பஞ்சவன் மாதேவியும் போய் அவரை அழைத்து வாருங்கள். என்னோடு பேசிக் கொண்டே பஞ்சவன் மாதேவி இவ்வளவு தொலைவு வந்துவிட்டார். அதுவும் நல்லதாய்ப் போயிற்று. இங்கு என்ன நடக்கிறது என்பதை பஞ்சவன் மாதேவியும் தெரிந்து கொண்டது எனக்குச் சந்தோஷம்."

"ஏன். என்ன நடந்தது?"

"போகும்போது பஞ்சவன் மாதேவி உங்களுக்குச் சொல்வார். இளவரசர் எங்கு போக விருப்பப்பட்டாலும் அங்கு போய்விட்டுப் பிறகு கடைசியாக இந்த இடத்திற்கு அழைத்து வாருங்கள். நான் சிற்பிகளுக்கு நடுவே அமர்ந்திருப்பேன்..." என்று மன்னர் சொல்ல, பஞ்சவன் மாதேவி தேரிலிருந்து இறங்கி குதிரையில் ஏறினார். அவர் குதிரையும், பிரம்மராயர்

குதிரையும் கோட்டை வாசல் நோக்கி ஓடின. அவர்களைச் சுற்றி மூன்று குதினர வீரர்கள் பின் தொடர்ந்தார்கள். மன்னர் சிற்பிகள் இருப்பிடம் வந்தமர்ந்தார்.

"உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவருக்கு ஒரு விண்ணப்பம்."

"என்ன அது?"

நன்கு வெய்யிலில் காய்ந்த களிப்பாக்கை ஒருலன் சிறு துண்டுகளாக நறுக்கிக் கொடுக்க, அதை உள்ளங்கையில் வைத்துச் சிறிது நேரம் பார்த்துவிட்டு, வாயில் போட்டு மாமன்னர் மெல்ல கவைக்கத் துவங்கினார். வெற்றிலைகள் வெள்ளைத் துணியில் வேகமாகத் துடைக்கப்பட்டன.

அதன் முதுகில் சுண்ணம் தடவப்பட்டது. காம்புகள் கிள்ளி நரம்புகள் எடுக்கப்பட்டன. அடியிலை நறுக்கப்பட்டது. அழகாய், அழுத்தமாய் கருட்டப்பட்டது. அதிமதுரப்பொடியும், ஒரு கிராம்பும், சிறிது வெல்லமும் அந்த வெற்றிலைக்கு நடுவே வைக்கப்பட்டன. மன்னர் அதை வாங்கி விருப்பத்துடன் போட்டு கொண்டார்.

அலர் வெற்றிலை போடுவதை சிற்பிகள் சூழ இருந்து பார்த்தார்கள்.

"அட... எனக்கு மட்டும் வெற்றிலை கொடுத்தால் எப்படி. சிற்பிகளுக்கும் கொடு." - மாமன்னர் அடைப்பைக்காரனிடம் கட்டளையிட்டார்.

"தவறு... தவறு... மிகத் தவறு..." - சிற்பிகள் பதறினார்கள். சற்று விலகி பின்னடைந்தார்கள். பெண்கள் லாய்பொத்திக் கொண்டார்கள். குழந்தைகள் சிரித்தன.

"அட... ஒரு தவறுமில்லை ஐயா. உட்காருங்கள்..." - நீள நீளமான மரப்பலகைகள் கொண்டு வரப்பட்டன. மழை பெய்து ஈரமான அந்தத் தரையில் வரிசையாகப் போடப்பட்டன. பெருந்தச்சருக்குச் சற்று உயரமான ஒரு ஆசனம் கொண்டு வரப்பட்டது. மன்னருக்கு அருகில் பெருந்தச்சர் உட்கார்ந்து கொள்ள, மற்ற சிற்பிகள் மரப்பலகையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

பெருந்தச்சர் தன் மகளையும், அவளது குழந்தையையும் அறிமுகப்படுத்த, பெருந்தச்சரின் பேரக் குழந்தையை மாமன்னர் வாங்கிக் கொண்டார். மடியில் வைத்துக் கொண்டார். குழந்தை ஈரம் செய்துவிடாமல் இருக்க கனமான ஒரு துணி மாமன்னரின் மடியில் போடப்பட்டது. மாமன்னரின் கையில் பனங்கற்கண்டு

கொடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட பனங்கற்கண்டை குழந்தையின் உதட்டில் மாமன்னர் மெல்லத் தடவினார். குழந்தை நாக்கு பிரித்து உதடு தடவி சப்புக் கொட்டியது. எல்லோரும் சிரித்தார்கள்.

"குழந்தைக்கு என்ன பெயர் வைத்திருக்கிறாய்?"

–இராஜராஜப் பெருந்தச்சரை நோக்கி உடையார் ஸ்ரீ இராஜ ராஜத்தேவர் வினவ, இராஜராஜப் பெருந்தச்சர் சில விநாடிகள் தயங்கினர்.

"ராஜேந்திரன் என்று பெயர் வைத்திருக்கிறேன்..." என்றார்.

மாமன்னர் மெல்ல குழந்தையை இறுக அணைத்துக் கொண்டார். நெற்றியில் முத்தமிட்டார். கன்னத்தோடு வைத்துக் கொண்டார்.

"ராஜேந்திரா... ராஜேந்திரா..." என்று கொண்டாடினார்.

சட்டென்று மாமன்னரின் கண்ணிவ் நீர் கோர்த்தது.

"குழந்தைப் பருவத்தில் ராஜேந்திரன் இன்னும் கனமாக இருப்பான். நிறைய முடி. பெரிய விழிகள். கொஞ்சம் அவனது தாய்வம்சம் போல தடித்த உதடுகள். முழங்கால்களில் சக்கரம் இருந்து பார்த்திருக்கிறாயா. ஆச்சரியமாக இருக்கும். இரண்டு முழங்கால்களிலும் விநோதமான வரி வடிவங்கள் இருக்கும். உறுதியான முகலாய். சிரித்தால் கன்னத்தில் குழி விழும். உன் பேரக் குழந்தையும் சகல லட்சணங்களும் பொருந்தியவனாய் இருக்கிறான். இன்னும் கொஞ்சம் ஊட்டமாக இருந்தால் நல்லது என்று தோன்றுகிறது. ஏனம்மா; சரிவர பால் கொடுப்பதிவ்லையா. நீயும் உண்ணுவதில்லையா."

–பிரியத்தோடு பெருந்தச்சர் மகளைக் கடிந்து கொண்டார்.

"எங்கே சாப்பிடுவது... அடுத்த குழந்தை சூலுற்றிருக் கிறாளே."

"அடடா... என்ன இது. எதற்கு அலசரம்?"

"அவளுக்கு ஒரு அவசரமும் இல்லை. மருமகனுக்கு அவசரம்."

"யார் அந்த அவசரக்காரர்?" – அதட்டலாய் மாமன்னர் கேட்க, பெருந்தச்சரின் மருமகனை முன்னே கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

"எந்த வேலையில் இருக்கிறீர்?" –உடையார் ஸ்ரீ இராஜ ராஜத்தேவர் ஆவலோடு பெருந்தச்சரின் மருமகனைக் கேட்டார்.

"துவார பாலகர்கள். கொடிப் பெண்கள். நுணுக்கமான கொடுங்கை வேலையைச் செய்வதில் மிக வல்லவர்."

இராஜராஜப் பெருந்தச்சரின் மருமகன் வாய்திறக்கும் முன்பு கூட்டத்திலிருந்து யாரோ பதில் சொன்னார்கள்.

அரசர் குழந்தையைத் தோளில் வைத்துக்கொண்டு சிற்பிகள் செய்த வேலைகளை மேற்பார்வையிட நகர்ந்தார். குழந்தையை வாங்கிக் கொள்ள ஏதோ ஒரு பெண்மணி கை நீட்டினாள். குழந்தை அரசரிடமிருந்து வர மறுத்துவிட்டது.

"என்னை விட்டு ராஜேந்திரன் எப்படிப் பிரிவான். யார் அழைத்தால் பிரிவான். ராஜேந்திரனால் என்னை விட்டுப் பிரிய முடியுமா அல்லது என்னால் ராஜேந்திரனைப் பிரிந்துவிட முடியுமா?" என்று உரத்த குரலில் ஸ்ரீ இராஜராஜர் பேசினார்.

அதன் உள் அர்த்தம் எல்லோருக்கும் புரிந்தது. அவர் குழந்தையைச் சொல்லவில்லை. தன் மகனைச் சொல்கிறார் என்பது அங்குள்ள சிற்பிகள் அனைவருக்கும் தெரிந்தது.

"ஆனால், பிரிக்கப் பார்க்கிறார்கள். நீ எப்படி இந்தக் குழந்தையை லா... வா... என்று கூப்பிட்டு உன்னிடம் இழுக்கப் பார்க்கிறாயோ, அதேபோல ராஜேந்திரனையும் என்னிட மிருந்து இழுக்கப் பார்க்கிறார்கள்."

– மறுபடியும் மன்னர் சொல்ல, கூட்டம் சில்லிட்டு நின்றது.

கண நேரத்தில் மாமன்னர் அதை மறந்தார்.

"இதை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று ஒரு கருங்கல்லின் மீது ஏறி நின்றார்.

சிற்பிகள் விவரித்தார்கள்.

மாமன்னர் பாறைக்கற்களின் மீது குழந்தையோடு தாவித் தாவிப் போக எழுத்தாணியும், ஓலையுமாய் பலகையில் பஞ்சலன் மாதேவி அமர்ந்தாள்.

'அன்பினிய இராஜேந்திரா... மாமன்னர் உன்னிடம் அதிகம் எதிர்பார்க்கிறார். இங்கு வராமல் இருந்து விடாதே. மன்னருக்கு எதிராய் எதுவும் செய்து விடாதே.

அன்னை பஞ்சவன் மாதேவி' என்று எழுதி கையெழுத்திட்டாள்.

குழலில் சொருகி அரக்கு முத்திரையிட்டு அதில் தன் மோதிரத்தை ஒற்றி எடுத்து அடையாளமிட்டு நம்பிக்கையான வீரன் கையிவ் கொடுத்தாள். வீரன் குதிரையில் விரைந்தான்.

கருந்தட்டாங்குடி மிகப்பெரிய குதூகலத்திவ் மூழ்கி யிருந்தது.

குடந்தைக் கம்மாளர் குடியிலிருந்து அவர்களுக்குச் சலுகைகள் தர இராஜேந்திரர் ஒப்புக் கொண்டு விட்டாரென்று செய்திகள் வந்து கொண்டிருந்தன. இராஜேந்திரர் உணவு எடுத்துக் கொண்டதும், கட்டிலில் தூங்கியதும், பூமியில் அறைந்து சத்தியம் செய்ததும் விவரமாகச் சொல்லப்பட்டன.

"இளவரசர் ராஜேந்திரர் மிகப்பெரிய படையெடுப்புக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார். எனலே அதற்கான வேலை களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறார். இன்னும் மிகப்பெரிய கூட்டமாக ஒற்றுமையோடு நீங்கள் இருக்கவேண்டுமென்று நினைக்கிறார். நாங்கள் எங்கள் வேலைகள் முழுவதையும் இளவரசர் இராஜேந்திரருக்கென்றே ஒப்புக் கொடுத்து விட்டோம். நீங்கள் தஞ்சைக்கு அருகிலே இருக்கிறீர்கள். உங்களால் அவ்விதம் செய்ய முடியாது. மாமன்னர் ஸ்ரீ இராஜராஜர் என்ன சொல்கிறாரோ அதையும் நீங்கள் கேட்டுத்தான் ஆக வேண்டும். அதே சமயம் இளவரசர் என்ன சொல்கிறாரோ அதற்கும் செவி கொடுத்தாக வேண்டும். எனவே மிக மிகக் கவனமாகப் பேச வேண்டியதும், பழக வேண்டியதும், காரியங்கள் செய்ய வேண்டியதுமான நிவையில் நீங்கள் இருக்கிறீர்கள். எவர் தூண்டுதலுக்கும் ஆளாகாமல், எந்தக் கோபமும் படாமல் கம்பீரமாக வேலைகளை ஏற்கவும், கம்பீரமாகவே லேலைகளை மறுக்கவும் கற்றுக் கொள்ளுங்கள்."

குடந்தைக் கம்மாளர்கள் கருந்தட்டாங்குடி கம்மாளர் களுக்கு உபதேசித்தார்கள்.

இதைத் தஞ்சாவூர் கருந்தட்டாங்குடி கம்மாளர்கள் புரிந்து கொண்டார்கள்.

"இந்தச் சலுகை நமக்கு மட்டுமல்ல. வெகு நிச்சயமாய் சிற்பிகளுக்கும், மரத்தச்சர்களுக்கும், உவோக வேலை செய்பவர்களுக்கும் வரும். மிகப் பெரிய பரப்பிற்கு இந்தச்

சலுகைகள் வழங்கப்படும். இது நல்ல சந்தர்ப்பம்..." என்று விளக்கிச் சொன்னார்கள்.

"ஆனால், ஒரேயொரு சந்தேகம்?" கருந்தட்டாங்குடி கம்மாளர்களிடமிருந்து மத்திம வயது உடையவன் ஒருவன் கேட்டான்.

"என்ன சந்தேகம்?"

"இது போர்க்காலமா, இவ்லையா."

"ஏன் கேட்கிறாய்?"

"இளவரசர் இராஜேந்திரர் போர்க்கருவிகள் பற்றிப் பேசுகிறார். மாமன்னர் உடையார் கோயில் கட்டுவதைப் பற்றிப் பேசுகிறார்? கோயில் கட்டுவதென்பது வேறு பணி. அது வேறு விதமான அணுகுமுறை. போருக்கு ஆயுதங்கள் தயார் செய்வ தென்பது வேறு விதமான அணுகுமுறை. நாம் என்ன செய்வது?"

"நல்ல கேள்வி. உங்களை இரண்டாகப் பிரித்துக் கொள்ளுங்கள். இரண்டு வேலைக்குமே எப்பொழுதும் தயாராக இருங்கள். இது முதலில், அடுத்தது பிறகு என்று ஒருபோதும் சொல்லிவிடாதீர்கள். அச்க உடைந்து விட்டது. உலைகொதி வரவில்லை என்றெல்லாம் சாக்குப் போக்குகள் சொல்லுங்கள். ஆனால், மாமன்னர் வேலை முதலில், இளவரசர் வேலை பிறகு என்றோ, இளவரசர் முதலில், மாமன்னர் வேலை பிறகு என்றோ சொல்லிவிட வேண்டாம். அது இரு பக்கமுமே வெறுப்பை வளர்க்கும் விஷயமாகப் போய்விடும்."

"அந்தணர்கள் இந்தப் பேச்சுக்கு என்னவிதமாக எதிரொலிப்பார்கள் என்று தெரியவில்லையே."

"தெரிய வேண்டாம். தெரிந்து கொள்ள முயற்சியும் செய்ய வேண்டாம். இந்த உலகம் அந்தணர்களைக் கேட்டுக் கொண்டு இயங்கவில்லை. காற்றடிப்பதும், பூமி கழல்வதும், சூரியன் உதிப் பதும் அந்தணரால் ஏற்படவில்லை. எனவே அந்தணர்களைப் பற்றிய கவலையை மறந்துவிடுங்கள்."

குடந்தை தேசத்துக் கம்மாளர் சொல்ல, மற்றவர்கள் வாய்விட்டு சிரித்தார்கள்.

இளவரசருக்காகக் காத்திருந்தார்கள்.

117

இளவரசர் உள்ளே நுழைந்ததும் பெண்கள் குலவையிட்டார்கள். ஆண்கள் மேல் துணிகளை விசிறி வாழ்த்தொலி எழுப்பினார்கள்.

அங்கும் ஆயுதங்கள் அவர் பார்வைக்கு வைக்கப்பட்டன.

ஒரு சொம்பு நிறைய பழச்சாறு தரப்பட்டது. வெல்லம் கலந்த பானகம் வீரர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

இளவரசருடைய உடைவாளை வாங்கி அதைக் கூர் பார்த்தார்கள். நுனிப்பக்கம் கூர் தீட்டிக் கொடுத்தார்கள். மற்ற வீரர்களின் ஆயுதங்களும் அவ்விதமே சரி செய்து தரப்பட்டன.

"என்ன வேலை செய்து கொண்டிருக்கிறீர்கள்?" – இளவரசர் அவர்களைக் கேட்டார்.

அவர்கள் கோவில் வேலையை விவரமாக எடுத்துரைத்தார்கள்.

சாரம் கட்டுவதற்கான கம்பிகள். விதம் விதமான உளிகள். நேர்த்தியான கத்தியல்கள். கவ்லை பிளக்க வைக்கும் கருவிகள். வண்டிகளுக்கு உண்டான அச்சாணிகள். இரும்புப் பட்டைகள். சக்கரம் கோர்த்த நீண்ட இரும்பு அச்சுகள். இரும்புச் சக்கரங்கள் என்று பல்வேறு விஷயங்களைக் காண்பித்தார்கள்.

"எனக்குக் குடந்தைக் கம்மாளர்கள் ராட்டினங்கள் காட்டினார்களே. அதுபோல் உங்களுக்குச் செய்யச் சொல்லி உத்தரவு வரவில்லையா."

"இல்லை. ராட்டினங்கள் குடந்தைக் கம்மாளர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மிக நுணுக்கமான வேலை அது. ராட்டினத்தின் அச்சாணியும், இரும்புக் கொக்கியும் கிட்டத்தட்ட ஒரு யானை எடையுள்ள பாறாங் கல்லைத் தூக்க வேண்டும். மிகப்பெரிய வலுவு அந்த இரும்புக் கொக்கிகளுக்கு இருக்க வேண்டும். அவர்கள் இரும்பைச் சூடேற்றி எண்ணெயில் தோய்த்து இரும்புக்கு உரமேற்றுகின்றார்கள். இது சற்றுக் கடினமான வேலை. ராட்டினங்களில் சிறிய தவறு இருந்தாலும், காற்றுக் குமிழிகள் இருந்தாலும் தூக்கிப் போட்டு விடுகிறார்கள். நூறு ராட்டினங்கள் செய்தாவ் இருபத்தைந்து, முப்பதுதான் நல்லபடிக்குத் தேறுகிறது. மறுபடியும் செய்தவற்றை உருக்க வேண்டியிருக்கிறது.

இதில் இன்னொரு விஷயம் இருக்கிறதய்யா. ஒரு ராட்டினங்களை வைத்து எதிர்பக்கம் எடை குறைலாகவும், இன்னொரு பக்கம் எடை அதிகமாகவும் தூக்க முடியும் என்று சொல்கிறார்கள். இது இன்னும் பரீட்சார்த்தமாகவே இருக்கிறது. ஏழு ராட்டினங்களை எதில் மாட்டுவது. சவுக்குக் கட்டையிலா. சவுக்குக் கட்டைகள் உடைந்து போய் பாதி வழியில் பாறாங்கல் தரை நோக்கி வந்தால் யாரால் தாங்க முடியும். விழுந்த பாறாங்கல் சிதறி உடைந்தால் எத்தனை பேருக்கு அடிபடும். ஆகலே... என்று சொல்லி நிறுத்தினான்.

"ஆகவே..." இளவரசர் ராஜேந்திரர் அவனை மேலும் பேசும்படித் தூண்டினார்.

"ஆகலே, இந்த வேலை இன்னும் உறுதியாக்கப்பட வில்லை. இது இன்னும் பரலலாக்கப்படவில்லை. ஒருவேளை குடந்தைக் கம்மாளர்கள் ராட்டினம் செய்வதில் ஜெயித்தால் மேற்கொண்டு எப்படிச் செய்வது என்பதை நாங்களும் சிந்தித்துச் செயலாற்றுவதாக இருக்கிறோம்."

கருந்தட்டாங்குடிக்கு அருகேயுள்ள சிவன் கோயிலுக்கு இளவரசரை அழைத்துப் போனார்கள். ஜனங்களை வாசலில் தடுத்து நிறுத்தினார்கள். வெகு சிலரை மட்டுமே உள்ளே அனுமதித்தார்கள்.

உள்ளே அவருக்கு ஓலைக் குழல் கொடுக்கப்பட்டது. குழல் பிரித்து அவரால் படிக்கப்பட்டது. குழலைத் திருப்பிக் கொடுத்து விட்டு ஓலையை இளவரசர் இடுப்பில் சொருகிக் கொண்டார். சிந்தனை வயப்பட்டவராய் இறைவனை வணங்கினார்.

"சரி, நிகும்பசூதனி கோயிலுக்குப் போவோம்..." என்று திசை திரும்பினார்.

தஞ்சைக்குள் நுழைந்தால் நிகும்பசூதனியை வணங்காமல் வேறு எதுவும் செய்வதில்லை என்பது அவருடைய பிரதிக்ஞை.

அவருடைய சிறுபடை நிகும்பசூதனி நோக்கிப் போக, தஞ்சை மக்கள் ஆரவாரமாக அவரை வரவேற்றார்கள்.

கோட்டையின் வாசலில் மிகப்பெரிய எக்காளமும் பறைகளும் முழங்கின. மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. பூர்ண கும்பம் தரப்பட்டது. இளவரசர் உள்ளே நுழைந்த நேரம் கணக்கெடுக்கப்பட்டது. இளவரசர் குதிரையைச் சற்றுத்

துரிதமாகச் செலுத்திக் கொண்டு தஞ்சையின் வடபகுதியிலுள்ள நிகும்பசூதனியின் கோயிலுக்குப் போனார்.

கோயிலில் பெரிய கூட்டம் இருந்தது.

தாசிகள் சட்டென்று வரிசையானார்கள். இளவரசர் வரும் வழியை மறித்துக் கொண்டார்கள். துரிதமாக நடனமாடினார்கள். மத்தளங்கள் முழங்கின. தாளங்கள் போடப்பட்டன. குழல் ஊதப்பட்டது. அவர் வரும் வழியை மறித்து சட்டென்று பின்னடைந்து அவருக்கு வழி விட்டார்கள். அவர்கள் நடனமாடிக் கொண்டே கோயில் நோக்கிப் போக, இளவரசர் அவர்கள் நடனத்தைப் பார்த்தபடி நிதானமாய் கோயிலுக்குள் நடந்தார்.

அவர் முகம் இறுகிக் கிடந்தது.

ஒரு வயதான பெண்மணியைப் பார்த்து, "பரவை வந்திருக்கிறாளா?" என்று ராஜேந்திரர் மிருதுவாகக் கேட்டார்.

அவள் வந்திருப்பதாக அவருக்குத் தகவல் சொல்லப்பட்டது. முகத்தில் மெல்லிய மலர்ச்சி இருந்தது. அவர் கருவறைக்குள் நுழைந்தார். கைகூப்பினார். கண் மூடினார். அவருக்குப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

"நல்லது. அரசர் காத்திருப்பார். எவ்வோரும் அரசர் எங்கிருக்கிறாரோ அங்கு போய் விடுவோம்... என்று உரத்துச் சொன்னார். அவர் சொன்னது பலருக்கும் சொல்லப்பட்டது.

அவர் குதிரையேறினார். வெகுவேகமாய் கோயில் கட்டப்படும் இடத்திற்குத் தன் குதிரையைச் செலுத்தினார்.

ராஜேந்திரர் நகர்ந்து கோயில் கட்டும் இடம் நோக்கி வருகிறார் என்று மெய்க்காவல் படை அறிவித்தது. தொலைவிலுள்ள எக்காளங்களும் விதம் விதமாக ஒலித்து ராஜேந்திரருடைய அசைவுகளைத் தெரியப்படுத்தின. எல்லளவு துரிதமாக ராஜேந்திரர் வருகிறார் என்பது எக்காளத்தினுடைய ஒலிக் குறிப்பிலிருந்து வீரர்கள் புரிந்து கொண்டார்கள்.

சிற்பிகள் கோயில் கட்டும் இடம் நோக்கி நகர, மாமன்னர் ஸ்ரீ இராஜராஜர் சிறு தேரில் பஞ்சவன் மாதேவியோடு ஏறிக்கொள்ள, ஓவை, படிக்கப்பட்டு விட்டது என்று ரகசியமாக பஞ்சவன் மாதேவிக்குச் சொல்லப்பட்டது.

பஞ்சவன்மாதேவி அரசர் காதோரம், "ராஜேந்திரனைப் போல ஒரு நல்ல பிள்ளை கிடைப்பது அரிது. நான் ராஜேந்திரனைப் பெற்ற தாய் இல்லை. ஆனால், அவன்

லருகிறான் என்றதுமே என் வயிறு குழைகிறது. என் மகன்... என் மகன்... என்கின்ற இறுமாப்பு எழுகிறது. இராஜேந்திரன் என்ற பெயர் உடைய குழந்தையைக் கூட உங்களால் கீழே இறக்க முடியவில்லை. தோளில் சுமந்தே அத்தனை கற்களையும் பார்த்தீர்கள். எவ்வளவு பாசம் இராஜேந்திரன் மீது வைத்திருக்கிறீர்கள் என்பது புரிகிறது. அவனை உங்களிடமிருந்து யார் பிரிப்பார்கள்.

பிரிப்பதற்கு யாருக்கு வலுவுண்டு. அப்படிப் பிரித்தால் இந்தப் பஞ்சவன் மாதேவி சும்மா விடுவாளா. இன்னொருமுறை பொதுமக்களுக்கு நடுவே இப்படிப்பட்ட வார்த்தைகளைத் தயவு செய்து பேச வேண்டாம். ராஜேந்திரன் ஒரு முரட்டுக் குழந்தை. கோபித்துக் கொள்வதிலாகட்டும். கொஞ்சி பேசுவதிலாகட்டும். அவனுடைய வேகம் அபரிமிதமானது. அவனை மன்னர் என்று நீங்கள் வரவேற்காமல் தகப்பன் என்ற முறையில் வரவேற்க வேண்டும். பெருந்தச்சரை ஆரத் தழுவிக் கொள்கிற உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் பெற்ற பிள்ளையை இறுக்கி தழுவிக் கொள்ளக்கூடாதா. மக்கள் எல்லோரும் காண மகனே... என்று இறுக்கிக் கொள்ளக் கூடாதா."

பஞ்சவன் மாதேவி பேசிக் கொண்டே குதிரையைச் செலுத்த மன்னர் சிரித்தபடி தலையசைத்தார்.

அவர் முகத்தில் ராஜேந்திரனைப் பார்க்கின்ற ஆவல் அதிகமாக இருந்தது.

"நாட்டியமாடுவதற்குண்டான மேடையில் நீங்கள் ஏறி நில்லுங்கள். ராஜேந்திரனை நான் அங்கு அழைத்துவருகிறேன்... – பஞ்சவன்மாதேவி சொன்னாள்.

ராஜேந்திரனின் குதிரைகள் வருலது மேடையில் ஏறியபோது தெரிந்தது.

கோயில் திடலுக்குள் நுழைந்ததும் இளவரசர் இராஜேந்திரர் குதிரையை விட்டுக் கீழிறங்கினார். நெடுஞ்சாண்கிடையாக தரையில் விழுந்து நமஸ்கரித்தார். கோயில் கட்டுகின்ற நிலத்திலிருந்து மண் எடுத்து நெற்றியில் பூசிக் கொண்டார். சிவாய நமஹ என்று கை கூப்பினார். எங்கே அரசர் என்று கேட்டார்.

அரசர் மேடையில் இருக்கிறார் என்று கட்டிக் காட்டியதும் தன் கைகளை விரித்து அரசரை நோக்கி ஆட்டினார். முஷ்டியை மடக்கி 'சோழம், சோழம்' என்று கத்தினார். மற்ற வீரர்களும்

எதிரொலித்தார்கள். உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் என்று உரக்கக் கத்த, 'வாழ்க... வாழ்க..' என்று மக்கள் கோஷமிட்டார்கள்.

அரசரை நோக்கி நடக்கும் போது கோடுகள் போடப்பட்டிருந்த இடத்தைக் கூர்ந்து கவனித்தார்.

"ஏன் இன்னும் அஸ்திவாரம் தோண்டப்படவில்லை?"

"ஆட்கள் இப்பொழுது தான் வந்திருக்கிறார்கள்."

"ஆட்கள் வந்து இரண்டு நாட்கள் ஆகியிருக்குமே."

"ஆமாம். ஆனாலும் அவர்களை ஏனோ வேலை வாங்கவில்லை."

"எங்கே... எங்கே அந்த ஆட்கள். நான் அனுப்பிய ஆட்கள் எங்கே?" என்று உரத்துக் கத்த, அந்த அடினம வீரர்கள் மடமடவென்று வரிசையானார்கள்.

ஒருவரிடமிருந்து மண் வெண்டியை வாங்கி, "பூஜையெல்வாம் போட்டாகி விட்டதவ்வவா. இப்பொழுது மண் எடுக்கலாமல்வவா..." என்று கங்கணம் கட்டியிருந்த சிற்பியை நோக்கிச் செல்ல... சிற்பி, "எவ்வா பூஜையும் முடிந்தாகி விட்டது. எப்போது வேண்டுமானாலும் மண் எடுக்கலாம்." என்று சொல்ல, வேகமாக மண் வெட்டியால் அஸ்திவாரம் போடப்பட்ட இடத்தை இராஜேந்திரர் கொத்தத் துவங்கினார்.

"எடுங்கள். அத்தனை பேரும் மண்வெட்டி எடுங்கள். எடுத்து இந்த இடத்திவ் அவர்கள் எவ்வளவு ஆழம் தோண்ட வேண்டுமென்று இருக்கிறார்களோ அவ்வளவு தோண்டுங்கள்."

சிகப்பான சரளைக் கற்களிவ் மண்வெட்டி பட்டுத் தூசி எழுந்தது. விறுவிறு என்று மண்வெட்டிகள் பலபேரால் போடப்பட்டன. கூடைகள் கொண்டு வந்து தரப்பட்டன.

மாமன்னர் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே கால் நாழிகையில் இடுப்பளவு பள்ளம் பல ஆட்கள் வெட்ட ஏற்பட்டு விட்டது.

உடம்பெல்லாம் செம்மண் புழுதியும், வியர்வையும், முகத்தில் களைப்புமாக இராஜேந்திரர் மேடையேறினார். கைகளைத் தேய்த்து உதறிக் கொண்டார். யாரோ சொம்பில் நீர் வார்க்க கைகளைக் கழுவிக் கொண்டார் யாரோ துணி கொடுக்க முகத்தைத் துணியால் துடைத்துக் கொண்டார். துணி முழுவதும் செம்மையாயிற்று.

எல்லோரும் பார்க்க மேடையேறினார். அரசருக்கு அருகே போனார். நீண்ட நெடிய மரம்போல அரசர் கால்களில் விழுந்து அந்தக் கால்களில் நெற்றியைப் பதிய வைத்துக் கொண்டார். மண்டியிட்டு அரசரை நோக்கிக் கைகூப்பினார்.

அரசருக்கு அடிவயிற்றிலிருந்து ஒரு சந்தோஷமும், பெருமிதமும் பொங்கி நெஞ்சைத் தாக்கின. கண்களிவ் நீர் கட்டியது.

மகனைத் தூக்கி நிறுத்தி வாரி இரண்டு கைகளையும் விரித்து இறுக்கித் தழுவிக் கொண்டார்.

சோழ் தேசத்தின் மகோன்னதமான இரண்டு மனிதர்கள் ஒருவரையொருவர் இறுக்கித் தழுவிக் கொண்டார்கள்.

அப்பாவின் கன்னத்தில் இளவரசர் இராஜேந்திரர் மாறி மாறி முத்தமிட, மன்னர் மெல்லியதாக வெட்கப்பட்டார்.

கூட்டம் ஆரவாரம் செய்தது.

இரண்டு பேரும் கைகோர்த்துக் கொண்டு கூட்டத்தினரை நோக்கிக் கையசைத்தார்கள்.

பிரம்மராயர் மெவ்ல குனிந்து அவருக்கருகே இருந்த ஒற்றனிடம் முணுமுணுத்தார்.

"இது தேவையில்லை. இது வெறும் திருஷ்டி. இப்படி பலர் பார்க்க ஆனந்தப்படக் கூடாது என்று நான் சொல்லியிருந்தும் இவர்கள் கேட்க மாட்டேன் என்கிறார்கள்."

அவர் சொவ்வதில் அர்த்தமிருந்தது.

"ஆஹா... இலர்கள் இரண்டு பேரும் சேர்ந்துதாய்யா எங்கள் ஊருக்குள் படையெடுத்து வந்தார்கள். எங்கள் விளை நிலங்களைப் பாழ் செய்தார்கள். எங்கள் வீடுகளை எரியூட்டினார்கள். எங்கள் பெண்களைத் துரத்திக் கொண்டு போனார்கள். இவர்கள் உத்தரவின் பேரில்தான் என் தந்தையைச் சிரச்சேதம் செய்தார்கள். என் தம்பியைத் துரத்திக் கொன்றார்கள்..." என்று அடிமை வீரர்கள் சிலர் பொரும ஆரம்பித்தார்கள். முகம் திருப்பிக் கொண்டார்கள். பல் கடித்துக் குத்திட்டு உட்கார்ந்து மண்ணைக் குத்த ஆரம்பித்தார்கள். கூட்டத்திலிருந்து விவகி தென்னந்தோப்புக்குள் போய் கைகட்டி நின்று கொண்டார்கள்.

ஆபத்துதவி படைகள் சிதறி நின்றிருந்தன. ஏழு பேர் விதம் விதமான உடையணிந்து விதம் விதமான வேலைகளை

மேற்கொண்டு அங்கு அரசரைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்கள்.

'எங்களைச் சரித்து மண்ணோடு மண்ணாக்கி விட்டல்லவா நீ கோயில் கட்டுகிறாய். எங்களை ஆழ குழிதோண்டி புதைத்து விட்டல்லவா நீ விமானம் கட்டுகிறாய். எங்கள் அரசரைக் கண்டந்துண்டமாக வெட்டி விட்டல்லலா நீ சிவலிங்கம் ஸ்தாபிக்கிறாய். மறக்குமா... எங்கள் வீரபாண்டியரை உங்கள் ஆதித்தன் கொன்றது எங்களுக்கு மறக்குமா. எத்தனை ஒப்பாரிப் பாடல்கள், காடுகளுக்குள் மறைந்து ஜுரமாகி நோயுற்றுக் கிடந்தவனைத் தட்டி எழுப்பி அலன் முன்பு கொக்கரித்து வசனம் பேசி, அலனை நிற்கச் செய்து வேகமாய் வாள் வீசி தலை கொய்து, அந்தக் கொய்து லந்த தலையைத் தஞ்சையின் கோட்டையில் மாட்டி உங்களை விளம்பரப்படுத்திக் கொண்டீர்களே... அது மறக்குமா. எங்கள் குலத்தை நாசமடைய முயற்சித்தீர்களே. நாங்கள் விடுவோமா. பாண்டிய குலத்தை உங்களால் ஒருக்காலும் நாசம் செய்ய முடியாது.

அதில் ஒரு வித்து இருந்தாலும் போதும். மறுபடியும் ஒரு ஆலமரம் வளரும். பல கிளைகள் விட்டு, பல விழுதுகள் விட்டு உங்களைக் கபளீகரம் செய்யும். எப்படி பாண்டிய தேசத்தை நீங்கள் மண்ணோடு மண்ணாக்கினீர்களோ, அதேபோல தஞ்சையை ஒரு நாள் பாண்டியர்கள் மண்ணோடு மண்ணாக்கு லார்கள். மண்ணாக்கும்படியான வெறியை நாங்கள் ஊட்டி விட்டுத்தான் மரணமடைவோம். எங்கள் பிள்ளைகளுக்கும், எங்கள் பேரர்களுக்கும் இதைச் சொல்லிவிட்டுதான் நாங்கள் சாவோம். இராஜந்திரா, இராஜராஜா வெகுநாள் இந்த ஆட்டம் நீடிக்காது.

உள்ளுக்குள் பல வீரர்கள் – உருமினார்கள்.

பஞ்சவன் மாதேவிக்கும் இந்தக் காட்சியைப் பார்க்க சந்தோஷமாக இருந்தது. ஆனால், போதுமென்றும் தோன்றியது.

இப்படியொரு அணைப்பு, இப்படியொரு சந்தோஷம் கோட்டைக்குள், அரண்மனைக்குள் உப்பரிகையில் நடந்திருக்க லாம். மேல்மாடத்தில் அரச குடும்பத்திற்கு நடுவே நடந்திருக்கலாம். இதையெல்லாம் விட்டு விட்டு இப்படி வெட்ட வெளியில் ஊர்க்கண் முன்பு இப்படி நிற்பது நல்லதல்ல தான். ஆனால் இனி போய் சொல்ல முடியாது. தடுத்தால் நன்றாக இருக்காது. தழுவிக் கொள்ளட்டும். இவர்கள் பிணக்கு

இங்கேயே இன்றோடு தீரட்டும். இதற்குமேல் பிணக்கேயில்லை என்ற நிவைக்கு இவர்கள் வரட்டும்.

'அப்பனே... எம்பெருமானே உன்னுடைய கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கின்ற இவர்களள ஒற்றுமையாகவும், அன்பாகவும், உறுதியாகவும் இருக்க னவ. இதனால் மற்றவருக்கும், இவர்கள் இருவரால் ஊருக்கும் எந்த இடையூறும் ஏற்படாத வண்ணம் தயவு செய்து காப்பாற்று.' உள்ளுக்குள் கரம் கூப்பினாள்.

கனிவோடு பார்த்துக் கொண்டிருக்கின்ற சிற்றன்னை பஞ்சவன் மாதேவியை இராஜேந்திரன் உற்றுப் பார்த்தான்.

"அம்மா... நலமாக இருக்கிறீர்களா..." என்று அருகே போய் உரிமையோடு கேட்டான்.

ராஜேந்திரனைவிட பஞ்சவன் மாதேவி மூன்று வயதே பெரியவள். ஆனாலும், எப்பொழுது ராஜேந்திரன் அம்மா என்று அழைத்தாலும் வயிறு குழைந்து விடும். கண்ணில் நீர் கட்டிவிடும்.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நான்காவது மனைவி என்கிற தகுதிதான் பஞ்சவன் மாதேவிக்கு. ஆனால், அரண்மனையும், அரண்மனைப் பெண்டிரும், அரசரும் ஏன் இராஜேந்திரரும் பஞ்சவன் மாதேவியைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறார்கள். ஒவ்வொன்றுக்கும் அவரையே ஆலோசனை கேட்கிறார்கள்.

இங்கு யாருடைய ஆணை செயல்படுத்தப்படுகிறது. அரசருடைய ஆணையா, பஞ்சவன் மாதேவியின் ஆணையா என்றுகூட சில சமயம் சீறல்கள் எழுந்ததுண்டு.

வல்வவராயர் வந்தியத்தேவரும், குந்தவையும் கோபித்துக் கொண்டு திருவல்வத்திற்குப் போனதுண்டு.

வந்தியத் தேவருக்குக் கட்டுப்பட்ட மேல் பாடி வீரர்கள் பஞ்சவன் மாதேவியை எதிர்த்துக் குரல் கொடுத்ததுண்டு. ஆனால், எல்லாவற்றையும் மன்னர் ஒரே உத்தரவில் அடக்கி விட்டார். என் உத்தரவும், பஞ்சவன்மாதேவியின் உத்தரவும் ஒரே மாதிரியான மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும் என்று கட்டளையிட்டுவிட்டார்.

சட்டென்று சகல எதிர்ப்பும் அடங்கிவிட்டது. ஆனால், மனதின் ஒரு கோடியில் ஒரு எதிர்ப்புணர்வு பலபேருக்கு

இருப்பதைப் பஞ்சவன் மாதேவி உணர்ந்திருக்கிறாள். இராஜேந்திரனுக்கு இருக்குமோ என்று சந்தேகப்பட்டிருக்கிறாள்.

ஆனால், இராஜேந்திரன் நெல்முனையளவும் அப்படிப் பட்ட எதிர்ப்பைக் காண்பித்ததில்லை.

அரசரைக் கட்டி முத்தமிட்ட கையோடு இளவரசர் இராஜேந்திரர் யாரும் எதிர்பார்க்காத ஒரு செயலைச் செய்தார்.

முக்கியமான பங்கு வகிப்பவளும், சேனாதிபதி பிரம்மராயரின் மரியாதைக்குரியவளுமான தனது சிற்றன்னை பஞ்சவன் மாதேவியின் கால்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினார்.

கூட்டத்துப் பெண்கள் குலவையிட்டார்கள்.

தேவரடியார்கள் தளிச்சேரிப் பெண்கள் கூடுதலாக குலவையிட்டார்கள்.

அதற்குக் காரணம் இருந்தது.

தங்கள் குலத்தில் பிறந்தவளும், நாட்டியத்தில் சிறந்து விளங்கி தலைக்கோலி பட்டம் வாங்கியவளும், மிகுந்த அறிவாளியுமான பஞ்சவன் மாதேவியின் கால்களில் சோழ தேசத்தின் எதிர்கால அரசன் பணிகிறான் என்றால் இதைவிட கர்வம் தேவரடியார்களுக்கு என்ன வேண்டும்.

118

"இராஜேந்திரா... உன் தந்தையோடு பேசுவதற்காக அரண்மனையில் தனியாக ஒரு இடம் நான் ஏற்பாடு செய்திருக்கிறேன். உணவருந்தி முடித்த பின் நீயும், உன் தந்தையும் மட்டுமே அந்த அரண்மனைக் கூடத்தில் இருப்பீர்கள். உங்களுக்குள் என்ன பிணக்கு என்றாலும் அதைத் தயவு செய்து பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள். உன் அப்பாவின் மீது குறை கண்டாலும் அந்தக் குறையை மனம் திறந்து மன்னரிடம் பேசு." – அரண்மனைக் கூட்டத்தில், உச்சி நேரம் பஞ்சவன் மாதேவி பேசினாள்.

"அம்மா... என்ன சொல்கிறீர்கள். மன்னரிடம் குறைபடும் அளவுக்கு நான் ஒன்றும் பெரிதாக வளர்ந்து விடவில்லை. எனக்கென்று சில கொள்கைகள் இருக்கின்றன. நானும்

வாழ்க்கையை உற்றுப் பார்க்கிறேன். என்னைச் கற்றிலும் சில மக்கள்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய நான் முயற்சி செய்கிறேன்."

"நீ என்ன வேண்டுமானாலும் செய். ஒரு தர்ம நியாயம் இருக்கிறதல்லவா. இங்கு ஒரு நாகரிகக் கோடு இருக்கிறதல்லவா. அந்தக் கோடு தாண்டிப் போகக்கூடாது."

"யார் போட்டது அந்தக் கோடு தாயே? எதனால் விதிக்கப்பட்டது. ஏன் விதிக்கப்பட்டது என்று எனக்குப் பதில் சொன்னால் அந்தக் கோடு மதிக்கப்படும். அர்த்தம் புரியாமல் கோடு கிழித்து இதற்குள்ளே நடனமாடிக் கொண்டிரு என்றால் இந்த ராஜேந்திரனால் முடியாது."

"மறுபடியும் வேகமாகவே பேகுகிறாய் இராஜேந்திரா."

"தெளிவாகப் பேசுகிறேன் தாயே. தமிழகத்தில் சில விஷயங்களை மாற்றியே ஆக வேண்டும் என்று நான் உறுதியாக இருக்கிறேன். சோழ சாம்ராஜ்ஜியத்தை நிறுவுவதற்கு யார் உதவி செய்திருக்கிறார்களோ, என்ன விதமாய் உதவி செய்திருக்கிறார்களோ அந்த உதவிக்குப் பதில் உதவி நான் செய்தாக வேண்டும்."

"கற்றி வளைத்துப் பேகுகிறாய் இராஜேந்திரா. நேரடியாய்ப் பேக. யாரிடம் உதவிகள் கேட்டாய். யார் உதவி செய்தார்கள். என்ன பதில் உதவி செய்ய லேண்டும்?" கொஞ்சம் சீறலாய் பஞ்சவன் மாதேவி பேகினாள்.

இளவரசர் இராஜேந்திரன் அவரை உறுத்துப் பார்த்தார். பிறகு முகம் திருப்பிக் கொண்டார்.

"தாயே... மன்னர் உங்களை என்னிடம் பேகம்படி நியமித்திருக்கிறார். என்னைக் கூப்பிட்டு இனி என்னுடைய உத்தரவுகள் பஞ்சவன் மாதேவி மூலமும் வரும் என்று எனக்கு நேரடியாய் சொல்லியிருக்கிறார்கள். அப்படி நீங்கள் சொல்ல வைத்திருக்கிறீர்கள். அதே மாதிரி மன்னருடைய உத்தரவைத் தாங்கி மன்னருக்கு அருகேயிருக்கின்ற வேறு அரசியர் எவரும் சொன்னதுமில்லை. சொல்வச் சொல்லி மன்னரிடம் கேட்டது மில்லை. நீங்கள் அரண்மனைக்குள் நுழைந்ததும் அரசியல் மீது ஆர்லம் கொண்டு அங்கேயும் கை வைத்திருக்கிறீர்கள். உங்களால் அரசியல் செய்ய முடியும் என்று நினைக்கிறீர்கள். பெண்கள் அரசியல் தாராளமாகச் செய்யலாம். அரசியலுக்கு அலர்கள் வரக்கூடாது என்ற பிற்போக்கான எண்ணம் எகை கில்லை. ஆனால், யார் ஒருவர் அரசியலுக்கு வருகிறாரோ அவர்

போருக்கும் வரவேண்டும். போர் முனைக்கும் வரவேண்டும்... நிழலில் உட்கார்ந்து கொண்டு லெய்யிலின் கொடுமைக்கு என்னென்ன சாப்பிடலாம் என்று பட்டியல் போட்டு நீட்டுவது அபத்தம்.

பாலைவனத்தில் நடந்து கொண்டிருக்கிறேன். சூடு தாங்கவில்லை... நாக்கு லரளுகிறது. கண் இருட்டுகிறது என்றால் மோர் குடியேன் என்று தஞ்சை காவிரிக் கரையில் உட்கார்ந்து கொண்டு சொல்லலாம். அங்கு மோர் கிடைக்குமா என்று ஆராயாது பேசலாம். அங்கே ஒரு வேளை ராஜேந்திரனுக்கு ஒரு குவளை மோர் கிடைத்தாலும் கிடைத்து விடலாம். பின் பக்கம் நான்கு லட்சம் வீரர்களை வைத்துக் கொண்டு நான் மட்டும் ஒரு குலளை மோர் அருந்துவது மிகக் கேவலமான விஷயம். நான்கு லட்சம் வீரருக்கும் வெய்யில் நேரத்துப் பாலைவனத்தில் மோர் கிடைக்குமானால் நான் குடிப்பேன்; இல்லையெனில் மறுப்பேன். போர் முனையில் குத்துப்பட்டு செத்துப் போனவர்கள் மட்டுமல்ல, நாக்கு வறண்டு சூடு தாங்காமல் மூக்கிலிருந்து ரத்தம் வடிந்து செத்துப் போனவர்களை நான் பார்த்திருக்கிறேன். குடிக்க நீரில்லாமல் தவித்துப்போய் உயிர் விட்டவர்களை நான் கவனித்திருக்கிறேன்."

"அப்படிப்பட்ட பாலைவனங்கள் உண்டா?"

"உண்டு என்பதே உங்களுக்குத் தெரியாது. கடுங்குளிருள்ள மலைப் பிரதேசங்களைப் பற்றி நீங்கள் அறியமாட்டீர்கள். தாயே... நான் என்ன பேசுகிறேன் என்பது உங்களுக்குப் புரிய வேண்டுமெனில் என்னோடு கூடவே பயணப்பட்டு என் வாழ்க்கையை நீங்களும் வாழ்ந்தாக வேண்டும். என் படை வீரர்களில், உபசேனாதிபதிகளில் ஒருவராக நீங்கள் இருத்தல் வேண்டும். மன்னர் போரை நிறுத்திய பிறகு மணந்து கொண்ட பெண் நீங்கள். தென்திசை முழுவதும் ஜெயித்து வடக்கே ராஷ்டிரகூடம் வரையில் போய், கீழைச் சாளுக்கியத்தையும் மிரட்டி வைத்து பரத கண்டத்தின் பாதி பகுதியில் நம்முடைய புலிக்கொடியைப் பறக்க விட்ட பிறகு, நீங்கள் அவருக்கு ஸ்நேகமானீர்கள். உங்கள் நாட்டியத்தால், பேச்சால், கவிதைத் திறனால், ஓவியத்தால், நிர்வாகத் திறனால் அவரை அசர வைத்தீர்கள்.

நீங்கள் வந்த பிறகு மன்னர் மாறியிருக்கிறார். அரண்மனை மாறியிருக்கிறது. நிர்லாகம் மாறியிருக்கிறது. நல்லபடி

வளர்ந்திருக்கிறது என்பதையும் நான் மறுக்கவேயில்லை. ஆனால் உங்களுக்குப் போர் தெரியாது தாயே. வயிற்றில் கத்தியிறங்கி முதுகுப் பக்கம் எட்டிப் பார்த்தால் எப்படி வலிக்கும் என்று தெரியாது.

புஜத்தில் அம்பு பாய்ந்து மறுபக்கம் எட்டிப் பார்த்து குத்தப்பட்ட உடனேயே பிடுங்கி வெளியே எறியும் போது எப்படி வலிக்கும் என்பதை உங்களால் உணர்ந்து பார்க்கக்கூட முடியாது. யானை மிதித்துச் சாவதும், குதிரை உதைத்துச் சாவதும், தேர் இடித்துச் சாவதும் நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள்.

அதோ இருக்கிறான் இராஜேந்திரன் என்று யானை மேல் இருக்கிற என்னைக் கைகாட்ட, ஒரே நேரத்தில் இருநூற்று சொச்சம் அம்புகள் என் மீது பாய்ந்தன. அத்தனையும் விஷம் தோய்த்த அம்புகள் தாயே. யானையைப் பின்னோக்கி நகரச் செய்ய முடியாது. முழு லேகத்தில் முன்னோக்கி நகரச் செய்து முன்னால் இருக்கிற யானைப்பாகனும், பின்னால் இருக்கிற இன்னொரு வீரனும் ஒரு மெல்லிய வலைக்கவசத்தை வைத்து என்னைக் காப்பாற்றினார்கள். அம்பு எறியும்போது அம்பால் தாக்கப்படக் கூடாது என்று பின்னப்பட்ட வலைக்கலசம் யானையின் முகத்திற்கும், நெஞ்சுக்கும் ஏன் உடம்புக்கும் கூட அந்தக் கவசம் போடப்பட்டது.

கவசத்தை மீறி ஒரேயொரு அம்பு பட யானைப்பாகன் இறந்து போனான். யானை தறிகெட்டு ஓடியது. அந்த யானைக்கும் அம்பு தைத்திருக்க வேண்டும். விஷவேகம் தாங்காமல் யானை கோபமுற்று பிளிறி எதிரிகளைத் துவம்சம் செய்தது. முடிந்தவரை பல பேரைக் கொன்றது. நான் முன்னேறுவது கண்டு நம் வீரர்கள் இன்னும் வெறியானார்கள். கடுமையாகத் தாக்கினார்கள்.

அந்தப் போரில் நாம் வெற்றி பெற்றோம். இழப்புகள் அதிகமிருப்பினும் அந்தப் போரில் கோட்டைகளை நாம் கைப்பற்றினோம். பல மன்னர்களைச் சிறை பிடித்தோம். பல வீரர்களை அடிமையாக்கினோம். எனக்கு அந்த வலைக்கவசம் கொண்டு வந்து காண்பிக்கப்பட்டது. வலையின் ஒரு கண்கூட விட்டு வைக்கப்படாமல் அத்தனை கண்ணிலும் அம்புகள் தைக்கப்பட்டிருந்தன. அதில் ஒரு அம்பு என் மீது பட்டிருந்தாலும் நான் உங்கள் முன்பு நின்று பேசிக் கொண்டிருக்க மாட்டேன். அந்த வலைக் கவசத்தைத் தயாரித்துக் கொடுத்தவர்கள்

தஞ்சாவூர் கருந்தட்டாங்குடி கம்மாளர்கள். பிறகு எதுவும் செய்ய லேண்டாம் என்று எப்படி சொல்கிறீர்கள் தாயே."

"எனக்குப் புரியவில்லை. உதவி செய்யக்கூடாது என்று யார் தடுத்தது. ஒரு லரைமுறைக்குள் வைத்துக் கொள் என்றுதானே சொல்கிறேன்."

"உதவி செய்வது என்பது நான் விரும்பிச் செய்வது மட்டு மல்ல. அவர்கள் என்ன விரும்புகிறார்களோ அதைச் செய்லதும் என்னுடைய கடமை. நான் விரும்பினேன். யானையின் மீது உட்கார்ந்து போர் செய்கிறபொழுது எந்தவிதமான பாதுகாப்பு எனக்கு நல்லது என்று சொன்னேன். வடக்கே வெகுதொவை வில் மரத்தினால் செய்யப்பட்ட கூடுக்குள் அமர்ந்து கொண்டு மன்னர் அம்பு விடுவாராம். இது பெட்டைத்தனமாக இருக்கிறது. என்று சொன்னேன். அரசர் உள்ளே இருக்கிறாரா இல்வையா என்றுகூடத் தெரியாமல் ஒரு யானன நகர வேண்டிய அவசியமில்லை என்று சொன்னேன். யானை மீது ஏறி நின்றபடி நான் வாள் உயர்த்த லட்சம் வீரர்கள் என்னைத் தாண்டி பாய்ந்து செல்கின்ற காட்சியை நீங்கள் பார்த்திருக்க வேண்டும். அப்பொழுது கம்மாளர்களைப் பற்றி இப்படிப் பேசமாட்டீர்கள்."

"நாம் உதவி செய்வது மற்றவருக்குக் கெடுதலாகி விடக்கூடாது."

"இங்கே பாருங்கள் தாயே. எல்லா விஷயத்தையும் தடை போட்டுக் கொண்டிருந்தால் எதுவுமே செய்ய முடியாது. மானிற்குப் பசிக்கிறதென்றால் புல் தின்றுதான் ஆகவேண்டும். புலிக்குப் பசிக்கிறதென்றால் மானன அடித்துத்தான் ஆக வேண்டும். வேடனுக்குப் பசிக்கிறதென்றால் புலியைக் கொன்று தான் ஆக வேண்டும். புலிக்குப் பசிக்கிறதென்றால் லேடன் மரணத்திற்காக காத்திருக்கத்தான் லேண்டும். இது கழற்சி. ஒரு இடத்தில் நன்மையும், இன்னொரு இடத்தில் தீமையும் சம நேரத்தில் ஏற்படும்.

நீங்கள் அந்தணர்களைக் கண்டு அதிகம் பயப்படுகிறீர்கள். நான் கம்மாளர்களுக்கு உதவி செய்லேன் என்று லாக்கு கொடுத்து விட்டேன். எனக்கு அந்தணர்களைப் பற்றி அக்கறை யில்லை. போர் முனைக்கு வராமல் இங்கு உட்கார்ந்து கொண்டு வேதம் சொல்கிறேன், மந்திரம் சொல்கிறேன், நீ லெற்றி பெறுலதற்கு பூஜை செய்கிறேன் என்கிற பேச்சிலே எனக்கு

நம்பிக்கையில்லை. எனக்கும் கடவுளுக்கும் இடையே வேறு எவரும் வரலாகாது. வரவிடமாட்டேன்."

"காவாகாலமாக இருந்த ஒரு கட்டுக்கோப்பை நீ உடைக்கப் போகிறாயா."

"ஆஹா... எனது தந்தையார் மாமன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் இந்தக் கட்டுக்கோப்பை எட்டி உதைத்து கக்கு நூறாக்கவில்லையா. அந்தணர்களை எவரும் தண்டிக்க லாகாது என்று மனு தர்ம சாஸ்திரம் சொல்லியிருக்கிறதே... அதை மீறி இருநூற்று நாற்பத்தியாறு அந்தணர்களை நாடு கடத்தினாரே அது எனக்கு மறந்து விட்டதா. என் பெரிய தந்தை ஆதித்த கரிகாலனைக் கொன்றதற்காக அலர்களுடைய நிலம் நீக்க, வீடு எல்லாம் பிடுங்கிக் கொண்டு துரத்தி அனுப்பினாரே மறந்து விட்டதா."

"அவர்களுக்கு காக கொடுக்கப்பட்டது."

"தெரியும். அந்தக் காசைக் கள்வர்போல் வழியிலே மடக்கிக் கொண்டு சோழ வீரர்களே பிடுங்கிக் கொண்டு போனார்கள். அதை உற்சாகப்படுத்தினலரும் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் என்பதும் எனக்குத் தெரியும். அதில் ஆதித்த கரிகாலனைக் கொன்ற மூன்று அந்தணர்களைக் குடுமியைச் சிரைத்து, கரும்புள்ளி செம்புள்ளியிட்டு கழுதை மீது ஒரு இடத்தில் ஊர்லலமும் நடத்தினார்கள் என்பதையும் நான் அறிலேன். இதைச் செய்ததும் மன்னருடைய ஆட்கள்தான் என்பதும் எனக்குத் தெரியும்.

மன்னருக்கு எத்தனை கோபமிருந்தால் அந்தணர்களை அப்படிப் பழிலாங்கியிருப்பார். உயிருக்கு உயிராக நேசித்த ஆதித்த கரிகாலனைக் கொன்றுவிட்டாயே என்று எத்தனை குமுறல் இருந்தால் அப்படி அந்தணர்களை வேதனை செய்திருப்பார். இங்கு அந்தணரா, வைசியரா, க்ஷத்திரியரா என்பது முக்கியமில்லை. நல்லவரா- கெட்டவரா, துரோகியா - நண்பரா இதுலே முக்கியம். அவர்களைத் துரோகி என்று நாம் தீர்மானித்தோம். பழி வாங்கினோம். எதிரியை மன்னிக்கலாம். துரோகியை மன்னிக்க முடியாது. துரோகி என்றுதானே தண்டனை தரப்பட்டது. அவர்கள் அந்தணர்கள் ஆனாலும் தண்டனைக்கு உரியவர்கள் என்றுதானே தண்டனை தரப்பட்டது. அங்கு மரபு மீறப்படவில்லையா. நான் மீறினால் தவறா. நான் எங்கு மீறினேன் தாயே?"

"கம்மாளர்களுக்கு பூணூல்போட உத்தரவு கொடுத்திருக்கிறாயாமே?"

"இல்லை. வாக்கு கொடுத்திருக்கிறேன். என்னுடைய ஆட்சிக் காலத்தில் நிச்சயம் கம்மாளர்களை உயர்த்துவேன் என்று வாக்கு கொடுத்திருக்கிறேன்."

"எப்படி உயர்த்த முடியும். அந்தணர்களைவிட அதிகம் தகுதி எப்படித் தர முடியும்?"

"அது என்னுடைய விருப்பம். இந்தத் தேசத்திற்கு அந்தணர்கள் அவசியம் என்று நான் நினைக்கவில்லை."

"முட்டாள்தனமாகப் பேசுகிறாய் ராஜேந்திரா. நல்ல மழை பொழியவும், அரசன் நன்கு ஆட்சி செய்யவும் அந்தணர்களுடைய உதவி அவசியம் என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறாய்."

"தாயே... எனக்கு நம்பிக்கையில்லாத விஷயத்தை என் மீது திணிக்காதீர்கள். அந்தணருடைய பூஜையோ, யாகமோ, மந்திர உச்சாடனமோ எனக்குத் தேவையில்லை. அவர்களில் எவரேனும் கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர் போல் வாளெடுத்து படையெடுப்புக்கு வந்தால் முழு மனதோடு வரவேற்கிறேன். லேல் எடுத்து எனக்குத் துணையாக வந்தால் எங்கு வேண்டுமானாலும் கூட்டிப்போய் உயர் பதவிகள் கொடுக்கிறேன்.

மாறாய், காவிரிக்கரையில் உட்கார்ந்து கொண்டு உழவர்கள் உழுது தர, கருமார்கள் ஏர்க்கருவி செய்ய, யாதவர்கள் மாடு மேய்க்க இலர்கள் நெய்யும் பாலும், நெற்சோறும் தின்று கொண்டு உடம்பு வளர்ப்பனத என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது."

"இது மன்னருக்குப் பிடிக்காத விஷயம்?"

"எனக்குத் தெரியும். அதனால் தான் அவருடைய ஆட்சிகாலத்தில் அந்தணர்கள் ஆடும் லரை ஆடட்டும் என்றிருக்கிறேன். மன்னர் ஒருவேளை உனக்கு இளவரசர் பட்டமும் இல்லையென்று சொல்லி விட்டால் மிக நல்லதாய்ப் போயிற்று. என்னுடைய இடத்தை நானே ஸ்தாபித்துக் கொள்ளுவேன்."

"என்ன பேசுகிறாய் இராஜேந்திரா. மன்னருக்கு எதிராக நிற்பாயா?"

"அல்ல. மன்னரிடமிருந்து விலகி நிற்பேன்."

"எப்படி உன் தந்தையை விட்டு விலக முடியும்?"

"ஏன் விலக முடியாது. அவர் விலகவில்லையா, நான் இந்தத் தேசத்து இளவரசன். எனக்கு இவர் கோவில் கட்டு வதைப் பற்றி ஏதேனும் சொல்லி அனுப்பினாரா. ஏதேனும் தகவல் தெரியுமா. இங்கிருந்து யாத்ரீகர்களாக லருபவர்களிடம் நான் விவரம் கேட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது. எல்லையில் பாதுக்காக்கின்ற இளவரசனிடம் ஒரு செய்தி சொல்ல வேண்டுமென்ற அடிப்படை அக்கறை... மன்னித்துக் கொள்ளுங்கள் தாயே... நாகரிகம் கூட இல்வாதவர் உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர்..."

"இராஜேந்திரா... பல் கடித்து வேகமாக ராஜேந்திரனுக்கு அருகே வந்தாள்.

"தாயே கோபமிருப்பின் என்னை அடிக்கலாம். உங்களுக்கு கை வலிக்கும். நான் சவுக்குக் கொண்டு லந்து தரச் சொல்கிறேன். நல்ல உயர்ந்த குதிரைச் சவுக்காவ் என்னை விளாகங்கள். ஆனால், நான் சொன்னதைப் பிழையென்று மட்டும் சொல்லி விடாதீர்கள். இது தேவையற்ற குமுறவ் என்று மட்டும் சொல்லி விடாதீர்கள். அவர் கோயில் கட்டுகிறார் என்று தெரிந்ததும் நான் அடினம வீரர்களை அனுப்பினேன். அவர்களை இங்கு பாதுகாப்பில் வைக்கக்கூட துப்பில்லாமல் இருக்கிறது. அவர்களை எப்படி நடத்துவது என்பதுகூட உங்களுக்குத் தெரியாமல் இருக்கிறது.

அவர்கள் உண்டார்களா, உறங்கினார்களா என்ற கேள்விகூட இங்கு இல்லாமல் இருக்கிறது. உங்களுடைய பார்வைக்குப் பயந்து உங்களுடைய பேச்சுக்குப் பயந்து, தேவரடியார்களுக்கு உடனடியாக வீடு கட்டிக் கொடுத்து விட்டார்கள். வீரர்கள் முக்கியமிவ்வை. தேலரடியார்கள்தான் முக்கியம் என்பதாய் ஒரு எண்ணம் அனைவருக்கும் வந்திருக்கிறது.

அது மட்டுமில்லை தாயே. சிற்பிகள் கொம்பு முளைத்து ஆடப்போகிறார்கள். ஏனென்றால் அவர்கள் வீட்டுக் குழந்தையைத் தோளிவ் கமந்து கொண்டு அரசர் முன்னும் பின்னும் அலைகிறாரல்லவா. பாறை பாறையாய் தாண்டிப் போகிறாரல்லவா. முத்த மழை பொழிந்து கொஞ்ககிறாரல்வவா. ஆக, சிற்பிகளுக்கெல்லாம் தான்தான் சோழ தேசத்தின் முக்கியமான நபர் என்ற திமிர் இருக்கப் போகிறது.

இங்கு இருக்கிற கற்கோயிலும், செல்லமும், இன்ன பிற பொருளும் அந்த வீரனால் லந்தலை. ஆயிரக் கணக்கான பேர் தன் உயிரைத் தியாகம் செய்து உங்களுக்குக் கொடுக்கப் பட்டவை. கையிழந்தும், கால் இழந்தும், நெஞ்சு லெட்டுப் பட்டும், ரணத்தில் துடித்தும் உங்களுக்குக் கொண்டு லந்த செல்வங்கள் அவை. வெட்டுப்பட்டு தொலைதூரம் நடந்து... நடந்து... வெய்யில் மழை பாராமல் படையெடுத்துப் போன வீரர்கள் போட்ட பிச்சை இந்தக் கோயிலும், இன்னும் பிற செல்வங்களும். எனவே, அலர்களுக்கு மறுத்துவிட்டு இவர்களைக் கொண்டாட லேண்டும் என்று நினைத்தால் அது இராஜேந்திரனால் முடியாது.

தாயே மறுபடியும் சொல்லிக் கொள்கிறேன்... இளவரகப் பட்டம் எனக்கு மன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் கொடுத்தது. இனிமேவ் நீ சோழதேசத்தின் இளவரசன் இல்லை என்று சொன்ன கணம் நான் திருவொற்றியூருக்கு அரசனாகி விடுலேன். தொண்டை மண்டலத்தின் அதிபதியாகி விடுலேன். எனலே என்னைக் கீழே இறக்கி மேலே உயர்த்திவிடாதீர்கள். பிறகு தொண்டை நாடு உங்களோடு கமுகமாக இருக்குமா இருக்காதா என்பது பற்றி என்னால் சொல்ல இயலாது."

"ஆக... போர் அளவிற்கு நீ தயாராக இருக்கிறாயா. மன்னரை எதிர்த்து நிற்கும் அளவுக்கு உனக்கு வீரம் வந்து விட்டதா. இது யார் கொடுத்த வீரம். எலரால் விளைந்த வீரம்?"

பஞ்சவன் மாதேவி கிட்டத்தட்ட அலறினாள். அரண் மனைக்கூடம் அவள் குரலை எதிரொலித்தது.

"சகலமும் என் தந்தை கொடுத்தது. அதில் நெல் முனையளவும் சந்தேகமில்லை. ஆனால், என் ஆட்சியில், என் சட்ட திட்டங்களில் மன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவருடைய சட்ட திட்டங்கள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்கிறேன்."

–இராஜேந்திரன் கர்ஜிப்பாய் லேகமாய்ப் பேசினான்.

மன்னரிடம் ரகசியமாகப் பேச வேண்டும் என்று சொன்ன பஞ்சவன் மாதேவி நடுக்கூடத்தில் அவனைப் பார்த்துக் கத்த, பதிலுக்கு ராஜேந்திர சோழன் இறைய, அரண்மனையிலுள்ள அத்தனை பேரும் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

எண்ணெய்ப் பானை உடைந்து தரை முழுவதும் லழிந்தது போவ் அங்கு அவர்கள் உள்ளுக்குள் பொதித்து வைத்துக்

கொண்டிருந்த பல அந்தரங்கமான விஷயங்கள், கோபதாபங்கள் வெளியே சிதறின.

அரண்மனை திகைத்தது.

படியில் ஏறி மாடத்திற்குப் போகத் தயாராக இருந்த மன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் மாடிப்படியின் பலகணி வழியாக கூடத்தைப் பார்க்க, கூடத்தில் இராஜேந்திரனும், பஞ்சவன் மாதேவியும் இறைந்து பேசுவதைக் கண்டு நின்று என்ன பேசுகிறார்கள் என்று கவனிக்க சகலமும் அவர் காதிலும் விழுந்தது.

மன்னர் மேலே போவதை விட்டுவிட்டு கீழிறங்கினார். தன்னுடைய அந்தப்புரத்திற்குப் போனார். பஞ்சவன் மாதேவியை உடனே வரச்சொல்லி ஆள் அனுப்பினார்கள்.

119

"உலகத்தில் எந்தக் கொலையும் அநியாயமாக நடத்தப் படுவதில்லை. கொவையுண்டவனின் உறவுகள் அதை அநியாயம் என்று சொன்னாலும் கொலை செய்தவனுக்கு ஒரு நியாயம்.

ஆதித்த கரிகாலன் கொவையை அநியாயம் என்று சோழ தேசம் முழுவதும் சொல்கிறது. ஆனாவ், பாண்டிய தேசத்தில் போய் நின்று கேள் – ஆதித்த கரிகாலன் அநியாயத்தை. நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுகிறார்கள். ஒப்பாரியாய் பாடுகிறார்கள். ஓடி ஓடி வந்தானய்யா... ஒளிந்து ஒளிந்து வந்தானய்யா... காட்டுக்குள்ளே ரத்தவாசம் தேடிவரும் நரியைப் போல நாடி நாடி வந்தானய்யா... நாலு திக்கும் அலைந்தானய்யா என்று இழிவாக ஆதித்த கரிகாலன் பற்றிப் பாடுகிறார்கள்.

கலங்கிக் கிடந்தாரு எங்க ஊரு மன்னவரு... தூங்கிக் கிடந்தாரு களங்கண்ட... பாண்டியரு, விடியவ் நேரம் கட்டில் சுத்தி வேட்டை... நாய்போல் நின்றுவிட்டு... நாலு பக்கமும் சுத்திவச்சு நம்மவரை எழுப்பினா... சோழதேச காட்டுப்புலி கட்டில் உருட்டிக் சுத்தினா..." என்று பாடுகிறார்கள்.

அந்தப் பாட்டைக் கேட்டால், அழுகையோடு அவர்கள் குரலைக் கேட்டால் நம்முடைய ஆதித்த கரிகாலர் செய்தது தவறோ என்றுதான் தோன்றுகிறது.

நான் ஆதித்த கரிகாலரை எதிர்த்தும் பேசவில்லை. ஆதரித்தும் பேசவில்லை. ஆதித்த கரிகாலருக்கு வீரபாண்டியரைக் கொன்றது ஒரு நியாயம் என்றால், வீரபாண்டியனின் ஆபத்துதவிப் படைகள் ஆதித்த கரிகாலனைக் கொன்றதும் ஒரு விதத்தில் நியாயம்.

அதுபோல இராஜேந்திர சோழருக்குக் கம்மாளர்களுக்கு உதவி செய்ய ஏதோ ஒரு நியாயம் கிடைத்திருக்கிறது. அதை மறுக்க எங்களுக்கும் ஒரு நியாயம் இருக்கிறது. எங்கள் நியாயத்தை நாங்கள் எப்படிச் சொல்வோம் என்று தெரியாது. இராஜேந்திர சோழன் உங்களுக்கு எது கொடுப்பதையும் நாங்கள் தடுக்கவில்லை. ஒரேயொரு விஷயத்தை... நீங்கள் கேட்கவும் கூடாது. கேட்டுக் கிடைத்தால் ஏற்றுக் கொள்ளவும் கூடாது என்று சொல்லத்தான் விரும்புகின்றோம்."

சோழ தேசத்தின் வெவ்வேறு கிராமத்திலிருந்து வேதம் படித்த அந்தணர்கள், சிலாகமம் தெரிந்த சிலாச்சார்யர்கள் ஒன்றுகூடி குடந்தை கம்மாளத் தலைவர்களிடம் பேசினார்கள்.

கம்மாளர்கள் கைகட்டி அந்தணர்களுக்கு எதிரே அமைதியாய் நின்று கொண்டிருந்தார்கள்.

"யார் இதை ஆரம்பித்தது என்று எங்களுக்குத் தெரியவில்லை. இந்த ஆசை உங்களுக்குள் ஏன் இருக்கிறது என்று புரியவில்லை. முப்புரி நூல் நீங்கள் அணிய வேண்டிய அவசியமென்ன. யார் உங்களுக்கு முப்புரி நூல் அணிய வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. நீங்கள் வீடு எப்படி வேண்டுமானாலும் கட்டிக் கொள்ளுங்கள். எங்கு வேண்டுமானாலும் செருப்பு போட்டுக் கொள்ளுங்கள். தலைப்பாகையோ, தோல் கவசமோ, உடைவாளோ, கேயூரமோ எது வேண்டுமானாலும் அணிந்து கொள்ளுங்கள். முத்து மாலையும், வைரக்கடுக்கணுமாய் வளைய வாருங்கள். எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால், முப்புரி நூல் என்பது அந்தணர்களுக்கே உண்டான ஒரு அணிகலன். அதை நீங்கள் அணிவதை நாங்கள் விரும்பவில்லை..." என்று உரத்த குரலில் சொல்ல, அங்கிருந்த இளைஞன் முன்வந்தான்.

"உங்கள் விருப்பம் பற்றி எங்களுக்கு எந்த அக்கறையும் இல்லை. நாங்கள் தேவாங்கர் குலம். தெய்வீக பிராமணாள் என்பது எங்களுடைய மூதாதையர் எங்களுக்கு சொல்லிக் கொடுத்த வசனம். வேதசாஸ்திரம் எத்தனை உயர்ந்ததோ அத்தனை உயர்வு சிற்ப சாஸ்திரம். அத்தனை உயர்வு உலோகத்தில் செய்கின்ற கருமார் வித்தை. இதையெல்லாம் விட உயர்வு- மானத்தை மறைக்கின்ற உடைகளை நாங்கள் செய்லது. இல்லையெனில் அந்த விலங்குகளுக்கும், நமக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. விவங்கிலிருந்து மாறுபாடாகக் காட்சியளிப்பது எப்படியெனில் நாங்கள் நெய்கிற துணியால். இந்த நெசவுத் தொழில் எங்களுக்குக் கடவுள் அருளால் கொடுக்கப்பட்டது. மனிதர்களின் மானத்தைக் காக்க நாங்கள் தொழில் செய்கிறோம். எனலே எங்கள் தொழில் தேல தொழில். நாங்கள் தெய்வீக பிராமணர்கள்... என்று உரக்கச் சொல்ல, கம்மாளர் கூட்டம் கை தட்டியது.

அந்தணர்கள் மௌனமாக இருந்தார்கள்.

"கடைசியாக என்ன சொல்கிறீர்கள்."

– அந்தணத் தலைவர்கள் உரக்கக் கேட்டார்கள்.

"எங்கள் கோரிக்கைகளில் முதன்மையானது முப்புரி நூல் அணிலது. பிறகுதான் மற்றதெல்லாம்." அந்த இளைஞன் உரக்கச் சொன்னான்.

"வயதில் நீ இளைஞனாக இருக்கிறாய். அதனால்தான் துடுக்குத்தனமாகப் பேககிறாய். உன்னைச் சார்ந்த பெரியோர்கள் மௌனமாக இருக்க நீ முன்வந்து பேகவது தகாது. எங்களில் இளைஞர்கள் இருக்கிறார்கள். யாரேனும் வாய் திறக்கிறார்களா?"

– ஒரு அந்தணர் அதட்டினார்.

"உங்கள் குல ஒழுக்கம் பற்றி எனக்கு எந்த அக்கறையும் இல்லை. ஆனால் எங்களில் உள்ள பெரியவர்கள் உங்களிடம் பேச அச்சப்படுகிறார்கள். உங்களைப் பெரிதாகக் கொண்டாடுகிறார்கள். இளைஞர்களான நாங்கள் அந்தணர்களாகிய உங்களை ஒரு பொழுதும் பெரியவர்களாக, முக்கியமானவர்களாக நினைக்கவில்லை. நீங்கள் இல்லாமலும் எங்களால் வாழ முடியும். நீங்கள் காலங்காலமாய் எங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்பது எங்கள் கருத்து. எனவே, எதுவும்

பேசாமல் லழக்கம்போல அண்டிப் பிழைக்கிற உங்கள் வேலையைப் பாருங்கள்..."

– அலன் சீறலாய்ப் பேச, பல இளைஞர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

அந்தணர்கள் கூட்டத்திலிருந்து வேகமாய் ஒரு இளைஞன் வந்து அந்தக் கருமார் இளைஞனை 'ப்ளார்' என்று அறைந்தான். கருமார் இளைஞன் துள்ளியெழுந்து அந்தண இளைஞனை முஷ்டியாவ் தாக்கினான். வெகு வேமாய் ஒரு துவந்த யுத்தம் அங்கு நடந்தது.

இரண்டு பக்கமுள்ள பெரியவர்களும் அவர்களைப் பாய்ந்து வேகமாகப் பிரித்து விட்டார்கள். "எங்கள் பெரியவர் களுக்கு முன்னால் கை ஆட்டிப் பேசுகிறாயா. உன்னை, உன் குலத்தை நான் அழிப்பேன். அழிக்கும்லரை நான் சிகை முடியேன்." ஒரு அந்தணன் உரக்க கை உயர்த்தி சப்த மிட்டான்.

"பேசிக் கொண்டேயிருக்கும் பொழுது கை நீட்டுகிறாயே. அதிகாரத் திமிர்தானே. ஆணவம்தானே. இங்கு ஒருவருக்குத் தீங்கு நேர்ந்தாலும் உன்னுடைய நெஞ்சிலே என்னுடைய கத்தி பாயும். அந்தணன் என்று இனி ஒருகாலும் நான் தள்ளி நிற்க மாட்டேன். நாயும், நீயும் ஒன்றுதான்... என்று கம்மாள இளைஞன் ஒருவன் பேசினான்.

மறுபடியும் அவர்கள் சண்டைக்குத் தயாராக, அந்தணர் கள் அலனைத் தள்ளிக் கொண்டு வெளியே போனார்கள்.

கம்மாளக் கிழவர்கள் அந்த இளைஞனை கடுமையாகக் கடிந்து கொண்டார்கள்.

"நீ கை நீட்டி அந்தக் கம்மாளனை அடித்தது சந்தோஷம். நம்முடைய உணர்ச்சிப் பிரதிபலிப்பை சரியாகக் காட்டி விட்டாய். ஆனால், இத்தோடு முடிந்து போய்விடவில்லை. சண்டை துவங்கிவிட்டது. இனி இவர்களை அடித்து ஜெயிப்பது என்கிற விஷயத்திற்கு நாம் தொடர்ந்து போகக்கூடாது. அடிப்போம் என்று காட்டிவிட்டோம். ஆனால், அடிப்பதல்ல நம் வேலை." ஒரு கிழவர் சொல்ல,

"வேறென்ன?" – அந்த இளைஞன் அவரைப் பார்த்து வியப்போடு கேட்டான்.

"பிரிப்பது."

"யாரிடமிருந்து யாரைப் பிரிப்பது?"

"க்ஷத்திரியர்களிடமிருந்து சிற்பிகளைப் பிரிக்க வேண்டும் சிற்பிகளுக்கு எதிராக போர் வீரர்களை ஏவி விடவேண்டும்."

"அதெப்படி முடியும்?"

"உற்றுப்பார். உனக்கே தெரியும்."

"நீங்கள் விளக்கமாக சொல்லிவிடுங்களேன்."

இளைஞன் பயபக்தியோடு கேட்டான்.

"சிற்பிகளுக்கு முக்கியத்துவம் வந்து போர்வீரர்கள் பின்னுக்குத் தள்ளப்படுகிறார்கள். இதை சுட்டிக் காட்டினால் போதும். போர் வீரர்கள் வேகமாகி விடுவார்கள். சரியானபடி ஊதிவிட்டால்போதும். அடிதடி ரகளை நன்கு நடக்கும். நீயும் கம்மாளனும் சுட்டிப்புரண்டு சண்டை போட்டீர்கள். வெகு சுலபமாக கம்மாளன் ஜெயிப்பான் என்பது எனக்குத் தெரிந்து விட்டது. ஆகவே, நீ அவனோடு மோதுவதை இத்தோடு விட்டுவிடு. அவனோடு மோத நாம் ஆட்களைத் தயார் செய்வோம்.

க்ஷத்திரியர்களை ஏற்பாடு செய்வோம். மறவர்களை ஊக்குவிப்போம். அவர்களை மெல்லப் பேசித் தூண்டுவோம். அவர்களை விட்டு கம்மாளர்களின் முதுகெலும்பை முறிக்கச் செய்வோம். பூணூலையா கேட்கிறாய். குடவை உருவி மார்பில் போடுகிறேன். போட்டுக்கொள்..." என்று காவிப் பவ் தெரிய அந்தணர் சிரித்தார். மற்றவர்களும் சிரித்தார்கள்.

அவர்கள் சிரிப்பில் குரூரம் இருந்தது.

அப்பாவிபோல் இருந்த ஒரேயொரு அந்தணன் மட்டும் கேட்டான்.

"அரசர் கோயில் வேலையை ஆரம்பித்திருக்கிறாரே. இந்த நேரத்தில் இது தேவைதானா. கோயில் வேலை முக்கிய மில்லையா?"

சட்டென்று அத்தனை அந்தணர்களும் நின்றார்கள். பின்னால் நடந்து வந்தவனைத் திரும்பிப் பார்த்தார்கள்.

"இல்லை. கோயில் முக்கியமில்லை. குலம் முக்கியம். அந்தணர் குலம் முக்கியம். அந்தணர் குலம் இருந்தால்தான் கோவில் இருக்கிறது. கோயில் மட்டும் இருந்து என்ன புண்ணியம்..." என்று பதிலுக்குக் கேட்டார்கள்.

அந்த நாற்பது வயது அந்தணன் மெல்ல வாயடைத்துப் போனான். நிமிர்ந்து அவர்களைப் பார்த்து சரியென்று சொன்னான்.

அந்த அந்தணன் மூலம் பிரம்மராயரின் ஒற்றரான வைஷ்ணவதாசனுக்கு இந்த விஷயம் போய், வைஷ்ணவதாசன் மூலமாக பிரம்மராயரையும் அன்று மாவையே சென்றடைந்து விட்டது.

கம்மாளர்களில் ஒரு கிழவனாரை பிரம்மராயர் பெரும் காசு கொடுத்து விவைக்கு வாங்கினார். என்ன நடந்தது என்று கேட்டார். அந்தக் கிழவன் விவரித்தான்.

"அந்தணரோடு கட்டிப் புரண்டு சண்டை போடுகிறாயே, அவரைக் கொல்ல வாள் உருவுகிறாயே அத்தனை திமிராகி விட்டதா. அந்தணரைக் கொன்று விடுவாயா. அந்தப் பழி பாவங்கள் வேறு நம் குலத்திற்கு வரவேண்டுமா. அவன் நம்மை நாசம் செய்துவிட்டுப் போவேன் என்று சத்தியம் செய்திருக் கிறானே. எனக்கு வயிறு கவங்கி விட்டதடா பாவி. ஏன் இப்படி வம்புக்குப் போகிறாய்." அந்தக் கிழவர் உரக்கக் கத்த, அந்தக் கருமார் இவைஞன் பாய்ந்து அந்தக் கிழவரைத் தாக்கினான்.

மறுபடியும் அங்கு கலவரம் மூண்டது.

"உன்னைப் போன்ற அடிமைகளால்தான் நம்முடைய குவம் நசிந்து கொண்டிருக்கிறது. இன்னொரு முறை அந்தண ருக்கு ஆதரவாக எவரேனும் இங்கு பேசினால் இந்தக் கம்மாளப் பூமியில் நீங்கள் ரத்தம் சிந்த வேண்டியிருக்கும். கூசாமல் உங்களை உலைக்களத்தில் இழுத்து அடித்துப் போடுவேன்" என்று அவன் உரக்கச் சொன்னான்.

"அந்த அந்தண இளைஞன் சொல்வதற்குப் பயப்படுகிறீர் களா. அவனைப் பெரிய சத்தியசந்தன் என்று கருதுகிறீர்களா. தேவரடியார்கவ் பின்னால் ஓடுகின்ற நாய் அவன். அவன் யாரென்று எனக்குத் தெரியும். இதோ உங்கள் முன்பு நான் சபதம் செய்கிறேன்.

இந்தக் கம்மாளப் பூமியில் ஒரு உயிர் அநியாயமாகப் பறிக்கப்பட்டால் நான் மூன்று அந்தணர்களைப் பழிவாங்குவேன். ஒரு உயிருக்கு மூன்று உயிர்களை பலி கொள்வேன். இது நான் தினமும் வேலை செய்யும் நெருப்பின் மீது ஆணை" என்று ஓங்கி

பூமியில் உலைகளத்திலுள்ள கரியை வழித்து எடுத்து தன் நெற்றியில் பூசிக் கொண்டான்.

"பூணூல் அணியும் உரிமை கிடைக்கும் லரை நான் திருமணம் செய்ய மாட்டேன். இல்லறத்தில் ஈடுபட மாட்டேன். தட்டில் சோறு தின்னமாட்டேன். குவளையில் நீர் குடிக்க மாட்டேன்." என்று வானம் பார்த்து உரக்கச் சொன்னான்.

"பிறகு எப்படி எப்படி உண்ணுவாய்?" அலனுடைய தகப்பன் வியப்போடு கேட்டான்.

"கையில்தான் நீர் மொண்டு குடிப்பேன். எந்தவகைப் பெண்ணோடும் சிறிதளவு மன உறவுகூட லைத்துக் கொள்ள மாட்டேன்." என்று சொன்னான்.

அலனைக் காதலித்த பெண் கதறிக் கொண்டு வீட்டிற்குள் ஓடினாள். நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதாள்.

அந்த ஊரை ஒரு சோகம் பற்றிக் கொண்டது.

கிழலன் விவரம் சொல்ல பிரம்மராயருக்கு கோபம் வந்தது. பிரம்மராயர் கவலையானார்.

அருண்மொழிப் பட்டனுக்கு ஆள் அனுப்பினார்.

நடுநிசி தாண்டி தன்னைச் சந்திக்கும்படி அரசர் அழைத்ததாக ஒருவர் சொல்ல, பிரம்மராயர் சரியென்று சொன்னார்.

அருண்மொழிப் பட்டன் சிறுதேர் ஓட்ட, பின்னால் நின்றபடி பெருந்தச்சன் வீடு நோக்கிப் போனார். வாயிற்காப்போனை கதவு தட்டி எழுப்பச் சொன்னார். பெருந்தச்சர் தூக்கக் கலக்கத்தில் எழுந்துவர உடம்பைச் சுற்றி துணி போர்த்தியபடியே தோட்டத்துக்கு நடுவே மூவரும் உட்கார்ந்து கொண்டார்கள்.

அந்தணர்கள் போர் வீரர்களைச் சிற்பிகளுக்கு எதிராக தூண்டிவிடப் போகிறார்கள் என்று ஒரு தகவல் பெருந்தச்சருக்குச் சொல்லப்பட்டது.

"அரசர் கட்டுகின்ற கோவில் வேலைக்கு இடைஞ்சலாக ஏகப்பட்ட விஷயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, சிற்பிகள் எவரோடும் கலக்காமல், எது பற்றியும் பேசாமல் மிக மௌனமாக தங்கள் லேலையைச் செய்து கொண்டிருக்க வேண்டும். இது மிகத் தெளிலாக எல்லாச் சிற்பிகளுக்கும் சொல்லப்பட வேண்டும்.

கல்தூக்க அடிமை வீரர்களை மட்டுமே உபயோகப் படுத்துவார்கள். சோழ வீரர்களைச் சிற்பிகளுக்கு அருகேகூட பிரம்மராயர் அனுப்ப மாட்டார். எனவே, அடிமை வீரர்களை உற்சாகப்படுத்தி அவர்களுக்கு நல்ல உணவு கொடுத்து அவர்களோடு இதமாகப் பேசி சிற்பிகள் பழக வேண்டும். அவ்விதமான உத்தரவுகள் பெருந்தச்சர் பிறப்பிக்க வேண்டும். பெருந்தச்சரும் மிகக் கவனமாக இருக்க லேண்டும். எப்பொழுதும் காவலாட்களுடன் இருக்க லேண்டும்.

அரசருக்குண்டான ஆபத்துதவிகள் ஆறுபேர் பெருந்தச்சர் காவலுக்காக அனுப்பப்படுவார்கள். பகல் இரவு என்று அலர்களே வேலையைப் பகிர்ந்து கொள்வார்கள். ஆபத்துதவிகளைத் தவிர வேறு எந்த சோழ வீரர்களோடும் எதுவும், எந்தவித சம்பாஷணையும் வைத்துக் கொள்ள வேண்டாம்..." என்று அவருக்குச் சொல்லப்பட்டது. சரி என்று பெருந்தச்சர் கவலையோடு சொன்னார்.

"எப்பேர்ப்பட்ட வேலை நடக்கிறது. யாருக்காவது தெரிகிறதா. உலகமே வியக்கின்ற ஒரு மகத்தான வேலையில் அரசர் ஈடுபட்டிருக்கிறாரே. இது யாருக்காவது தெரிகிறதா. எத்தனை விதமான தொந்தரவுகள் கொடுக்கிறீர்களய்யா. இது அடுக்குமா. இந்தச் சோழதேசம் உருப்படுமா. என்ன லெற்றி பெற்றுவிட்டோம். யாரிடமிருந்து வெற்றி பெற்றுவிட்டோம் சாளுக்கியர்களையும் ஜெயித்தால் போதுமா, நம்மிடமிருந்து நம்மை யார் காப்பாற்றுவது, நமக்குள்ளேயே ஏற்பட்டிருக்கிற பிரிவினையை எவர் போக்குவது. இது எங்கு போய் முடியும் என்று தெரியவில்லையே.

இராஜேந்திர சோழர் சற்று மௌனமாக இருந்திருக்கலாம். எல்லாவற்றிற்கும் காரணம் இராஜேந்திர சோழர்தான். இன்னும் விளையாட்டுப் பிள்ளையாக, விவரமறியாத இளைஞனாக இருக்கிறார். அவர்தான் எல்லா சண்டைக்கும் காரணம்."

உரத்த குரலில் பெருந்தச்சர் பேச, "சற்று மௌனமாக இருக்கிறீர்களா?" – அதட்டலாய் பிரம்மராயர் பெருந்தச்சரை அடக்கினார்.

இராஜேந்திரனைக் குறித்து இழிவாகப் பேசியது அருண் மொழிப்பட்டனுக்கு லலித்தது.

பெருந்தச்சரை முறைத்துப் பார்த்தான்.

120

இராஜராஜ பெருந்தச்சர் தன் எதிரே உட்கார்ந்திருந்தது அருண்மொழிப் பட்டன் என்பதை மறந்து போய் பிறகு சட்டென்று நினைவு கூர்த்தார். ஆனாலும் ராஜேந்திரனைப் பற்றிய தன் கூச்சலை நியாயப்படுத்த விரும்பினார்.

"நீ இராஜேந்திரருடைய வலது கை என்பது எனக்குத் தெரியும். இளவரசர் இராஜேந்திரர் நம்முடைய மன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவருக்கு நெருக்கமாக இல்லை என்பதும் தெரியும். நீ போய் இராஜேந்திரரிடம் என்னுடைய கவலையை, என்னுடைய குறையை நான் இப்படிச் சொன்னதாக அவரிடம் போய்ச் சொல்; எல்லா சண்டைக்கும் இளவரசர் இராஜேந்திரர்தான் காரணம். இராஜேந்திரரை மௌனமாக இருக்கச் சொல்லும்படி நான் சொன்னதாகச் சொல்... என்று மறுபடியும் சொல்ல, பிரம்மராயர் தலையில் கை வைத்துக் கொண்டார். மேல் துண்டை உதறிக் கிளம்பினார் தேர் ஏறினார்.

அருண்மொழிப்பட்டன் குதிரை ஓட்டினான்.

"அருண்மொழி..." பிரம்மராயர் மெல்ல அழைத்தார்.

அருண்மொழி தேர் நிறுத்தினான்.

அவன் முகம் கறுத்துக் கிடந்தது. கண்கள் சிவந்திருந்தன.

"இதை இத்தோடு விட்டுவிடு. இராஜேந்திரனிடம் இதைச் சொல்லாதே. சோழநாடு பல்வேறு வேதனைகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. இந்தக் கோயில் பெருங்கோயிலாக வரவேண்டுமென்றால் தயவு செய்து உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இத்தோடு விட்டுவிடு."

பிரம்மராயர் அருண்மொழியைப் பார்த்து, தன் சொந்த மகனைப் பார்த்துக் கைகூப்பினார்.

அருண்மொழி குதிரை சேணத்தை விட்டுவிட்டு திரும்பி சட்டென்று தந்தையைத் தழுவிக் கொண்டான்.

"உங்கள் கவலை புரிகிறதய்யன். எத்தனை வேதனையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்று புரிகிறது. அரசனைவிட அரசியை விட அரசரின் நெருக்கமான பஞ்சவன்மாதேவியை விட ஏன், இளவரசரை விடவும் உங்களுக்குத்தான் பொறுப்புகள் அதிகம். பொறுப்பில்லாமல் பெருந்தச்சர் இத்தனை வயது கடந்தும் வாய்க்கு வந்தபடி பேசுகிறார். அவரை மன்னர் கொண்டாடு

கிறார் என்பதால் இளவரசர் இராஜேந்திரரை வெகு கலபமாக இழிவுபடுத்துகிறார். இளவரசரை இழிவுபடுத்த யாருக்கு அதிகாரம் உண்டு. இவருக்கு யார் அந்த அதிகாரத்தைக் கொடுத்தது. அரசர் அங்கு இருந்திருந்தாலும் முகம் களித்திருப்பார்.

ஐயன்... நீங்கள் என்னைக் கெஞ்சிக் கேட்க வேண்டாம். உங்கள் கவலை எனக்குப் புரிகிறது. ஒருக்காலும் இந்த அருண்மொழிப் பட்டன் இது குறித்து இளவரசர் இராஜேந்திரரிடம் லாய் திறந்து பேசமாட்டான். இது சத்தியம் ஐயன். உங்கள் மீது சத்தியம், ஆனால் தயவு செய்து அந்தக் கிழவர் பெருந்தச்சரை அடக்கி லையுங்கள்.

உலகத்தில் இதுவே முதல் கோவிலல்ல; இதுபோல பல கற்றளிகள், பல தலைமுறைகளில் கட்டியிருக்கிறார்கள் என்று சொல்லுங்கள். கந்தரசோழர் கட்டாத கோவிலா இவர் கட்டி விடப் போகிறார். இந்த லேவை உன்னதமான வேவைதான் அரசர் செய்வது மிகப்பெரிய முயற்சிதான். ஆனால், அது இவரால் ஆகிறதென்று சொன்னால் அது அபத்தம். இத்தனை ஆட்கள் இங்கு வருவதற்கும், வேலை செய்வதற்கும் உண்டான பொருளாதார அடிப்படையையே சோழதேசத்து வீரர்கள் செய்தார்கள். இளவரசர் இராஜேந்திரருடைய வீரம்தான் இத்தனை செல்வத்தை இங்கு கொண்டு வந்து கொட்டியிருக்கிறது. உயிர்விடத் துணிந்து, பல கானகங்களைக் கடந்து, ஆறுகளும், மவைகளையும் தாண்டி நமது வீரர்கள், நமது இளவரசர் இராஜேந்திரர் காட்டிய வேகம்... நம்மை உயர்த்தியிருக்கிறது. இது இராஜராஜப் பெருந்தச்சரால் ஆகவில்லை என்று தயவு செய்து அவருக்கு உணர்த்துங்கள் ஐயன்.

நீங்கள் பல்வேறு இடங்களில் மௌனமாக இருக்கிறீர்கள் ஐயன். வெறுமே ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வெளியே போகிறீர்கள். நீங்கள் இன்னும் காணும்படியாகவும், உரத்த குரலில் பேச வேண்டிய நேரமும் வந்துவிட்டது. ஐயன், நீங்கள் இளவரசர் இராஜேந்திரரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

–அருண்மொழி அப்பாவுக்கு ஆதரவாகப் பேசிவிட்டு அப்பாவினுடைய எண்ணம் என்னவென்று தெரிந்து கொள்வதற்காகக் கடைசியாய் கேள்வியும் கேட்டான்.

உடனடியாய் பதில் சொல்வதற்கு பிரம்மராயருக்குப் பிடிக்கவில்லை. தன் மனதைத் திறந்து பதில் சொல்ல

வேண்டியிருக்குமோ என்று வருத்தப்பட்டார். ஆனாலும், பதில் சொல்லித் தான் ஆகவேண்டும் என்கிற நிலைமைக்குத் தள்ளப்பட்டார்.

"சோழ தேசத்தின் எதிர்காலம் இராஜேந்திரன். இப்பொழுது இருப்பதைவிட மிக உன்னதமான நிலைக்கு இந்தச் சோழதேசம் வரப்போகிறது அருண்மொழி. பரத கண்டத்திலுள்ள எந்த அரசனும் செய்யாத ஒரு மகத்தான காரியத்தை இராஜேந்திர சோழன் செய்யப் போகிறான். இளவரசர் இராஜேந்திரன் கடல் கடந்து பல தேசங்களை வென்று வாகை சூடி இன்று இருப்பதைப் போல பத்து மடங்கு செல்வத்தோடு ஊர் திரும்பப் போகிறான். சோழ தேசத்தை வளமாக்கப் போகிறான். காவிரியின் பல கிளைகள், பல கால்வாய்கள் வெட்டப்பட்டு வறண்ட எல்லா பிரதேசங்களும் செழுமையாக நெல் வயல்களாக மாற்றப்படும். இன்னும் அற்புதமான கோயில்கள் கட்டப்படும். இது நான் சொல்லவில்லை. குடந்தை ஜோசியர் சொல்லியிருக்கிறார். குடந்தை ஜோசியர் சொல்லி ஒரு விஷயமும் இதுவரை தோற்றதில்லை. இராஜேந்திரன் உன்னத மானவன் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை."

"ஐயன், இன்னுமொரு கேள்வி கேட்கிறேன், இளவரசர் இராஜேந்திரரிடம் உங்களுக்கு ஏதேனும் பிணக்கு உண்டா. இராஜேந்திரர் கம்மாளர்களுக்கு ஆதரவாகப் பேசுவது தவறு என்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

"இராஜேந்திரன் கம்மாளர்களுக்கு ஆதரவாகப் பேசுவது தவறேயில்லை. அவருடைய நன்றி விசுவாசம், கம்மாளர் களுடைய முக்கியத்துவம் எனக்கும் புரிகிறது. ஆனால், அதை இப்போது சொல்லியிருக்க வேண்டாம். ஆட்சிக்குப் பின் தானாக செய்திருக்க வேண்டிய விஷயத்தைத் தமுக்கடித்துச் சொல்ல வேண்டிய அவசியமென்ன. இராஜேந்திரன் மௌனமாக இருப்பது நல்லது என்பது என் அபிப்ராயம்.

அரசர் என்பவர் செயலில் ஈடுபடுவதே உத்தமம் என்பது என் எண்ணம். இராஜேந்திரனை மௌனமாக இருக்கச் சொல்ல எனக்கு அதிகாரம் இல்லை. நண்பன் என்கிற முறையில் இராஜேந்திரனுக்கு நீ அறிவுறுத்தலாம். எல்லா விஷயத்தையும் உள்ளுக்குள் தேக்கி வைத்துக்கொண்டு அரசராகப் பதவியேற்ற மறுநாளிலிருந்து செயல்படுத்தத் துவங்கலாம். இது உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரின் சோழ பூமி. இங்கு அவருக்குக் கீழ்தான்

சகலரும் இருக்க வேண்டும். ஒரே உறையில் இரண்டு கத்திகள் இருக்கக் கூடாது இராஜேந்திரன் கத்தியாகப் பளபளக்கிறார். அது கவலையாக இருக்கிறது. யாரையும் அவர் தண்டித்து விடாமல் இருக்க வேண்டுமே என்று யோசனையாக இருக்கிறது. மறுபடியும் அந்தணர்களைப் பகைத்துக் கொள்ள நேருமோ இந்தச் சோழ பூமி என்று பயமாக இருக்கிறது."

"மறுபடியும் என்றால்..."

"அந்தணர்களைப் பகைத்துக் கொண்டதன் விளைவுதான் ஆதித்த கரிகாலனின் மரணம். இராஜேந்திர சோழனைக் கவனமாகப் பார்த்துக் கொள்..."

"ஏன் ஐயன். ஏன் அப்படிச் சொல்கிறார்கள்?"

"குடந்தை அந்தணர்களும், தஞ்சை அந்தணர்களும் எதற்கும் துணிந்தவர்கள். எது செய்யவும் தயங்காதவர்கள். இத்தோடு இந்த விலாதத்தை நிறுத்திக் கொள்வோம்."

– அவர் சொல்ல, அரண்மனைக் கதவு விரியத் திறந்தது. அகழிமீது பாலம் போடப்பட்டது. பிரம்மராயரின் சிறு தேர் உருண்டு அரண்மனைக்குள் நுழைந்தது.

பிரம்மராயர் நுழைந்த அடுத்த கணமே சில தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டன. அரசர் படியிறங்கி நடுமுற்றத்திற்கு வந்தார்.

பிரம்மரயாரும், அருண்மொழியும் கை கூப்பினார்கள்.

அருண்மொழி அரசருடைய காலைத்தொட்டு கண்ணில், ஒற்றிக் கொண்டான். அருண்மொழியை அரசர் உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் மெல்ல அணைத்துக் கொண்டார்.

"என்னைச் சுற்றி என்னவெல்லாம் நடக்கிறது பிரம்ம ராயரே. எனக்குத் தெரியாமல் என்னவெல்லாம் நிகழ்கின்றன. எனக்கு விளக்கமாகச் சொல்லுங்கள்... என்று அரசர் நிதானமாகக் கட்டளையிட்டார்.

அவர்கள் மூவரும் அந்தப் பெரிய முற்றத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தார்கள். நடந்து கொண்டே பேசினார்கள்.

"என்னுடைய வயதின் காரணமாக எனக்கு மிகப்பெரிய மரியாதையைக் கொடுத்து, எனக்கு சரிநிகர் சமானமாக ஆசனம் கொடுத்து, சில சமயம் என் கால்கள் தொட்டு நெற்றியில் ஒற்றிக் கொண்டு என்னைக் கௌரவப்படுத்தி வருகிறீர்கள். அதனா லேயே பேரரசர் உடையார் ஸ்ரீ ராஜராஜத் தேவரைவிட நான் சோழ தேசத்து அரசியலும், நாட்டு நடப்பும் தெரிந்தவன் என்ற

கர்வம் எனக்கு ஏற்பட்டால் என்னைக் காட்டிலும் நிர்மூடன் வேறு எவனுமில்லை. நீங்கள் அறியாமல் உங்களுக்குத் தெரியாமல் இங்கு ஒரு துரும்புகூட அசையாது. என்னிடம் இருப்பது போலவே மிகத் தெளிவான ஒரு ஒற்றர்படை உங்களிடம் இருக்கிறது என்பதை நானறிவேன். உள்நாட்டு விஷயங்களில் அதிகம் கவனம் செலுத்தாது, எல்லைப் புறங்களில் உங்கள் ஒற்றர்படை மிகத் தீவிரமாக வேலைகளில் ஈடுபட்டிருக்கிறது.

பாண்டிய தேசத்தின் தலைநகரான மதுரையிலும், தடிகைப் பாடியிலும், கங்க நாட்டிலும், நுளம்பபாடியிலும், ராஷ்டிரகூடர்கள் ஆட்சி செய்யும் இடத்திலும், கீழைச் சாளுக்கியர்களுடைய தேசத்திலும் ஏன், தொண்டை மண்டலத்து பாடிக் காவலர்கள் படைகளிலும் உங்கள் ஒற்றர்கள் பரவிக் கிடப்பதை நான் அறிவேன்.

சோழ எல்லையைக் கலனமாகப் பாதுகாப்பதிலும், சோழருக்கு எதிராக அண்னியர்களிடம் என்னவிதமான மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று கண்காணிப்பதிலும் உங்கள் ஒற்றர்கள் திறமையாகச் செயல்பட்டு வருகிறார்கள். உள்நாட்டு விஷயங்களை நான் கவனித்துக் கொள்கிறேன் என்பதாலேயும், இளவரசர் இராஜேந்திரர் எடுத்த காரியத்தைச் சீராக செய்து முடிப்பார் என்று நன்கு தெரிந்ததாலேயும் வலிமை மிக்க இராஜேந்திரரைத் தாண்டிச் சோழ தேசத்திற்குள் எவரும், எந்தக் காரணம் கொண்டும் தலையெடுக்க முடியாது என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள்.

நீங்கள் உள்நாட்டு விவகாரங்களில் அதிகம் கலனம் செலுத்தவில்லை. செலுத்தும்படியாக உங்கள் ஒற்றர் படைக்கு உத்தரவிடவுமில்லை."

பிரம்மராயர் வெகுநிதானமாய் நடந்து கொண்டே மன்னனிடம் பேசினார்.

மன்னர் பிரம்மராயரின் பேச்சை ஆமோதிக்கவுமில்லை; தவறு என்று எடுத்துக் காட்டவும் இல்லை. மாறாய், மெல்லிய சிரிப்போடு பிரம்மராயரை கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தார். பிரம்மராயர் தொடர்ந்து பேசினார்.

"உங்கள் கணக்கு சரி. யாராவது அரசை எதிர்த்து உள்ளே எவரும் குரல் கொடுக்க முடியாது. மாறுதலாகப் பேசி எவரும் தலையெடுத்து விடமுடியாது. பாண்டியர்களாலோ,

சாளுக்கியர்களாலோ, ராஷ்டிரகூடர்களாவோ உள்நாட்டில் எந்தவித வேதனையும் இல்லை. எல்லைப்புறத்தில் அடங்கிக் கிடக்கின்ற அவர்கள் தங்களைக் சுதாரித்துக் கொள்ள குறைந்த பட்சம் இன்னும் பதினைந்து ஆண்டுகளாவது ஆகும். ஆகவேதான் மிகுந்த தைரியத்தோடு கோயில் கட்ட சாளுக்கியர் களையும், ராஷ்டிரகூடர்களையும், கங்கர்களையும் இங்கு கொண்டு வந்திருக்கிறீர்கள். அழகாகப் பாண்டியர்களை விலக்கி விட்டீர்கள். பாண்டியர்கள் திருவொற்றியூரிலிருந்து சோழ தேசம் நுழையாமல், அவர்கள் கொங்கு தேசத்தின் வழியாக பாண்டிய நாட்டுக்குப் பயணப்பட்டு விட்டார்கள். அலர்கள் வந்து சேர்ந்த செய்தியும், அங்கு போய் அமைதியாக அவரவர் ஊர் விவசாயப் பணியில் ஈடுபட்ட செய்தியும் நமக்கு வந்துவிட்டன. எனவே அவர்களாலும் எந்தக் கலலரமும் இல்லை. ஆனால், சோழ தேசம் அமைதியாக இருக்கிறது என்றும் என்னால் சொல்ல முடியாது."

என்றும் என்னால் சொல்ல முடியாது."

பிரம்மராயர் பேசிவிட்டு மூச்கலாங்கி நிறுத்த, அவரை விவகி நின்று பின்கை கட்டியபடியே மாமன்னர் உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் பார்த்துக் கொண்டிருந்தார். அருண்மொழி அலர்களிருலரையும் அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"யாரால் இடைஞ்சல் வரும் என்று நினைக்கிறீர்கள்?"

"போருக்குப் போய்த் திரும்பிய சோழ வீரர்களாலும், வீரர்களுக்கு உற்சாகமாய் ஆயுதங்கள் செய்து கொடுத்த கம்மாளர்களாலும் முதலில் பிரச்சினை வரும். ஒரு அமைதியின்மை ஏற்படும்."

"புரிகிறது. நானும் கவனித்துக் கொண்டிருக்கிறேன். இது எப்படிப் பிரச்சினை ஆகும். அவர்கள் ஒரு வேண்டுகோள் தானே லைக்கிறார்கள். என்ன வேண்டுமென்று நான் கேட்டதால்தானே பதிலுக்கு இது வேண்டுமென்று சொல்கிறார்கள். அதில் தவறென்ன. கொடுக்கப்போவதும் மறுப்பதும் நாம்தானே."

"நாம் என்றால் யார் மன்னரே? நானும் நீங்களுமா. நீங்களும் இளலரசர் இராஜேந்திரருமா. நீங்கள் மாட்டேன் என்று சொன்ன கோரிக்னககளை நேற்று மாலை நிச்சயம் செய்து தருகிறேன் என்று பூமியில் ஓங்கி அடித்து இளவரசர் இராஜேந்திரர் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறார். கம்மாளர் களுக்குச் சலுகைகள் அதிகம் லழங்கினால் பிரச்சினை வரும்."

"யார் மூலமாகப் பிரச்சினை வரும்?"

"அந்தணர்கள் மூலமாகப் பிரச்சினை வரும்."

"அந்தணர்கள் கலகம் செய்வார்கள் என்றா சொல்கிறாய்."

"அந்தணர்கள் ஒருபோதும் நேரடியாய் கலகம் செய்ய மாட்டார்கள்."

"மறைமுகமாக கலகம் என்று உண்டா?"

"உண்டு."

"எப்படி?"

"அவர்கள் போர்வீரர்களைத் தூண்டிவிடுவார்கள்."

"போர் வீரர்கள்தான் கம்மாளர்களிடம் பிரியமாக இருக்கிறார்களே! கம்மாளர்கள் உதவியால்தான் ஜெயித்தோம் என்று அவர்கள்தானே சொன்னார்கள்."

"இல்லை. இனி கம்மாளர்களுக்கும், சிற்பிகளுக்கும் அதிகம் உபகாரங்கள், பாராட்டுகள் கிடைக்கப் போகின்றன."

"அதனால் என்ன?"

"இனத க்ஷத்திரியர்கள் வெகுநாள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்."

"என்ன செய்வார்கள்?"

"என்னையும் பாராட்டுங்கள் என்று சொல்வார்கள். ஆனால், சமாதான காலத்தில் எங்கேயும் போர் வீரர்கள் பாராட்டப்படுவதில்லை. எனலே விலகி இருக்கச் சொல்லப் படுவார்கள். அப்படி விலகி இருக்கப்படுவதை அந்தணர்கள் எடுத்துக் காட்டினால் க்ஷத்திரியர்களுக்குக் கோபம் வரலாம். தஞ்சை மறவர்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுபவர்கள். அங்கிருந்து சண்டை துவங்கலாம்."

"இதனால் என்ன ஆகும்?"

"ஒரு கலகம் ஏற்படும் என்று நான் அஞ்சுகிறேன்."

மன்னர் சட்டென்று திரும்பி பிரம்மராயரான கிருஷ்ணன் ராமனை உறுத்துப் பார்த்தார். பிரம்மராயர் அரசருடைய வேகம் பார்த்துக் கைகூப்பினார்.

"என் பேச்சு தவறாக இருந்தால் மன்னித்து விடுங்கள். என் அனுமானம் என்றுமே பிழையாகப் போனதில்லை. நானும் இந்த அனுமானம் பிழையாகப் போகவேண்டுமென்றுதான் விரும்புகின்றேன். வேண்டுகின்றேன். நீங்கள் என்னைக்

கேட்காது போயினும் இது குறித்து நான் உங்களிடம் தனியே பேசி எச்சரித்திருப்பேன்."

"ஒரு கலகம் நடக்கும் என்றா சொல்கிறீர்கள்?"

மன்னர் மறுபடியும் கேட்க, ஆமாம் என்று தலையசைத்தார்.

மன்னர் மெல்ல அருகேயுள்ள கருங்கல் பலகையில் உட்கார்ந்தார். தொலைவில் அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த பஞ்சவன் மாதேவி வெற்றிவைப் பெட்டியுடன் நடந்து வந்து மன்னருக்கருகே வெற்றிலையைப் பிரித்து வைத்தாள். மெல்ல அருகில் இடைவெளியிட்டு உட்கார்ந்து கொண்டாள். பிரம்மராயருக்கு ஒரு மர ஆசனம் எதிரே ஒரு சேடியால் போடப்பட்டது.

"இன்னும் விழித்துக் கொண்டிருக்கிறீர்களா அம்மணி." பிரம்மராயர் பஞ்சவன்மாதேவியைப் பார்த்து சிரிப்போடு கேட்க, "அரண்மனையில் பல பேர் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். இளவரசர்கூட விழித்துக் கொண்டுதான் இருக்கிறார் என்று நினைக்கிறேன்." என்று சொல்வ, மன்னர் திரும்பி பஞ்சவன்மாதேவியைப் பார்த்தார்.

"என்ன பேசுகிறோம் என்பதை இராஜேந்திரன் கேட்டுக் கொண்டிருக்கிறானா... என்று பஞ்சலன்மாதேவியின் காதோரம் கேட்க, ஆம் என்று பஞ்சவன் மாதேவி தலையசைத்தாள்.

"சரி. ரகசியமாகக் கேட்பானேன். நாளை காலை சபையில் இது பற்றி நாம் பேசலோம். மனம் திறந்து பேசவோம். சேனாதிபதிகளையும், மந்திரிமார்களையும், சிவாகம ஆச்சார்யர்களையும், அரச குடும்பத்துப் பெரியோர்களையும் எல்லோருடைய ஆலோசனைகளையும் கேட்போம். என் தமக்கை குந்தவைக்கும், அவரது கணவர் வந்தியத் தேவருக்கும் அரச சபையில் தனியாக ஆசனங்கள் போட்டு அவர்களையும் மிகுந்த மரியாதையோடு அழைத்து வா. இப்படி ஒளிந்து பேசுவதைவிட, மனம் திறந்து பேசுவது நல்லது. எதனாலும், எதன் பொருட்டும் என் கோயில் காரியம் கெடுவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். எவர் குறுக்கீடு செய்தாலும் நான் தாங்க மாட்டேன்." – மன்னர் குரல் உயர்த்தி பேசத் துவங்கினார்.

இந்தக் கோயில் இராஜராஜனின் கனவு மட்டுமல்ல; சோழ தேசத்தின் கனவு. சோழ தேசத்தின் பெயரைச் சொல்லப்

போகின்ற சரித்திரம். எனவே, ஏதாவது சொல்லி இந்தக் கோயில் வேலைக்குப் பங்கம் நேர்ந்தால் நான் வெறிபிடித்த வனாக மாறி விடுவேன் என்பதை மட்டும் எல்லோருக்கும் சொல்லிவிடு."

மன்னர் தடேரென்று எழுந்து வேகமாய் அரண்மனை நோக்கி நடந்தார். பஞ்சவன் மாதேவி அவருக்குப் பின்னால் ஓடினாள்.

மெல்ல பிரம்மராயர் எழுந்தார். சுற்றும் முற்றும் பார்த்தார். முற்றம் விட்டு நகர, வெற்றிலைப் பெட்டியை எடுக்க சேடி ஒருத்தி கீழிறங்கினாள். நெஞ்சில் கை வைத்து குனிந்து பிரம்மராயரை வணங்கினாள்.

வணங்கியது ஒரு சைகை. ஒரு சங்கேத மொழி. தொடர்ந்து அரண்மனைக்குள் என்ன நடக்கிறது என்பதை நான் கேட்டு உங்களுக்குச் சொல்வேன் என்பதுதான் அந்த வணக்கத்தின் அர்த்தம்.

"நல்லது செய்."

– பிரம்மராயர் அடிக்குரலில் முணுமுணுத்துவிட்டு அரண் மனை விட்டு வெளியேறினார். அருண்மொழிப் பட்டன் அவரைப் பின் தொடர்ந்தான்.

சோழதேசம் இன்னொரு மிகப்பெரிய பிரச்சினையை எதிர்நோக்கியிருக்கிறது என்பது பிரம்மராயருக்கும், அருண் மொழிக்கும் தெள்ளத் தெளிவாய்த் தெரிந்தது.

உடையார் இரண்டாம் பாகம் முற்றிற்று